

கலைஞர் நூற்றாண்டு
நிறைவு மலர்
2024


100

தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம்
ஆவணி - புரட்டாசி

செப்டம்பர் 2024

கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் 2024

ஆசிரியர் - வெளியிடுபவர்	:	மரு. **இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,** இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்
நிருவாக ஆசிரியர்	:	**இரா. அண்ணா** இணை இயக்குநர் (வெளியீடுகள்)
முதன்மைப் பொறுப்பாசிரியர்	:	**க.அ. முகம்மது ரசூல்** உதவி இயக்குநர்
பொறுப்பாசிரியர்கள்	:	**எஸ். உதயா கதிரவன்** **ப. கருணாகரன்** **ச. மஞ்சுளா** செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
உதவி ஆசிரியர்கள்	:	**மு. மணிமேகலை** **சி. சுஜிதா** **இரா. பாலாஜி** **கு. சுபாஷ்**
நிருபர்கள்	:	**எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்** **ஜெ.ஜெயசிம்ஹன்**
ஓவியர்	:	**இரா. உமாமகேஸ்வரி**
இதழ் உதவியாளர்	:	**நி. வீலா**
இதழ் வடிவமைப்பு	:	**தி. ஜெய்சங்கர்** **க.இரா. உமாமகேஸ்வரி**
முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்	:	**கோ. சந்திரசேகர்**
இளநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்	:	**த. பிரியா**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்

எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 044 – 2254 2221 / 22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in,
இணையதளம் : www.tndipr.gov.in



"முடியுமா நம்மால்" என்பது
தோல்விக்கு முன்பு வரும் தயக்கம்.

"முடித்தே தீருவோம்" என்பது
வெற்றிக்கான தொடக்கம்.

- முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்கள்

பொருளடக்கம்

கலைஞர் நாணயம்

- தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீடு 11
- கலைஞர் திரு. கருணாநிதி அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த அரசியல் ஆளுமை, பண்பாடு போற்றியத் தலைவர் 13
- நா– நயம் மிக்க தலைவர் கலைஞருக்கு நாணயம் வெளியிடப்படுவது மிக மிகப் பொருத்தமானது 23

இதழாளர் கலைஞர்

- கலைஞர் அவர்களின் கட்டுரைகளை படித்தால் புழுவும் புலியாகும் 33
- இதழாளராக கலைஞர் என்றும் வாழ்வார் 37
- திரையாண்ட கலைஞர் 45

- கலைஞரும் நானும்..... 57
- கலைஞர் மக்களை எளிதில் சென்றடைய ஒன் லைனர்கள் பயன்படுத்துவதில் வல்லவர் ஆனார்..... 65
- நான் கண்ட கலைஞர்..... 75
- கலைஞரின் காலம் ஒரு பொற்காலம்..... 79
- தமிழ்நாட்டின் சிக்கலான சாதி சமன்பாடுகளுக்கு மத்தியில் கலைஞர் கருணாநிதி ஒரு மதச்சார்பற்ற ஜனநாயகவாதி..... 87
- முத்துவேல் கருணாநிதி மற்றும் ஊடகவியலாளர்..... 91
- முழுநேரப் பத்திரிகையாளர்..... 95
- கல்கியின் படைப்புகளை கடைசி தமிழன் உயிரோடு இருக்கின்றவரையிலே மறக்கமுடியாது..... 101
- பத்திரிகைப் பெண்ணே..... 111
- என்னை இதழாளனாக்கியது என்னுள் எழுந்த ஆர்வமே..... 115
- எழுத்தாளர்களின் பிதாமகன்..... 117
- என்றும் தொடரும் எழுத்துப் பணி..... 121
- ஒரு தாயின் தாலாட்டு..... 125
- பகுத்தறிவுவாதிகள்..... 129
- கலைஞரின் இயல்பு..... 139

- கலைஞரின் கவிதை தூரிகை படைத்திட்ட சொல்லோவியங்கள் 143
- பிறவிப் பத்திரிகையாளன் 151
- கலைஞர் கேள்விகளை நேசித்த ஜனநாயகவாதி 155
- கட்சி, ஆட்சி இரண்டையும் கச்சிதமாக வைத்திருந்தவர்தான் கலைஞர் 161
- ஒரு பத்திரிகையாளனின் பார்வையில் கலைஞர் 165
- பத்திரிகையாளர்களின் புதிய முயற்சிகளுக்குத் துணையாக செய்தி மக்கள் தொடர்புத்துறை 171
- சிறந்த நூல் எழுதியவருக்கு ரூ.20,000மும், பதிப்பகத்திற்கு ரூ.5,000மும் உயர்த்தி வழங்கிட ஆணை 173
- மறைந்த பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்கு நிதியுதவி 183
- பத்திரிகையாளர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞரின் நலத்திட்டங்கள் 187
- இன்டெர்நெட்டில் கலைஞரின் இலக்கியப் பக்கம் 207
- வல்லுநர்கள் மற்றும் பத்திரிகைகள் பாராட்டு 209
- பத்திரிகையின் பார்வையில் கலைஞர் 212
- காலத்தை வெல்லும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகைப்படத் தொகுப்பு 219

பண்பாட்டுப் பாசறை - கலைஞர்

- திராவிடம் பேணும் தீப்பிழம்பு, மானுடம் பேசும் மயிலிறகு 233
- அலைகடல் நடுவே அய்யனுக்கோர் சிலை 239
- கலைஞர் செய்த சாதனைகள் 243
- மாண்புக்கெல்லாம் மாண்பான மாண்பமைந்த முதல்வா 251

பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்

- இளமைப் பலி – கலைஞர் எழுதிய முதல் கட்டுரை 255
- சுயாட்சியின் சுடரொளி 257
- சமரசமில்லாப் பகுத்தறிவாளர் கலைஞர் 261
- பகுத்தறிவு இமயம் கலைஞர் 263
- பிரம்ம ரிஷி 269
- மாற்றுத்திறனாளிகள் நலனில் டாக்டர் கலைஞர் 273
- தீப்பிடிக்கும் சொற்கள் 277
- தமிழ்ச் சமூகத்தைச் சீர்திருத்திய கலைஞரின் பகுத்தறிவு 283
- இப்போதும் இருக்கிறார் கலைஞர் 287
- கலைஞரைக் கவர்ந்த ஓவியம் 293

- கலைஞர் ஆட்சியின் நிருவாகச் சீர்திருத்தங்கள் 301
- எங்கும் கலைஞர், எதிலும் கலைஞர்.....305
- மகளிர் நலனில் கலைஞர் 309
- கலைஞர் ஆட்சியில் சீர்திருத்தங்கள் ஒரு பார்வை..... 313

நவீன தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர்

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆளுமைப் பண்புகள்..... 335
- கலைஞர் கால அரசுக் கட்டடங்கள்..... 342
- கலைஞர் எழுப்பிய நினைவகங்கள் 355
- கலைஞர் வடித்த சிலைகள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள்..... 364
- கலைஞர் உருவாக்கிய நெடுஞ்சாலைகள் மற்றும் மேம்பாலங்கள்..... 375
- கலைஞர் காலத் தொழிற் புரட்சி..... 391
- கலைஞர் கால முக்கிய நிகழ்வுகள்.....403

நிறுவனங்களின் நாயகர் - கலைஞர்

- முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட முன்னோடி நிறுவனங்கள்..... 411

❖ ❖ ❖

सत्यमेव जयते

प्रधान मंत्री
Prime Minister

MESSAGE

It is heartening to learn about the organisation of Muthamizh Arignar Kalaignar Centenary Commemorative Coin release ceremony. This is an important occasion to commemorate the centenary of one of India's most illustrious sons, Thiru Kalaignar Karunanidhi Ji.

Thiru Kalaignar Karunanidhi Ji was a towering figure in Indian politics, literature, and society. He was always passionate about the development of Tamil Nadu, as well as national progress.

As a political leader, Thiru Kalaignar Karunanidhi Ji left an indelible mark on our country's history as a Chief Minister who was elected by the people multiple times over the span of decades, underlining his deep understanding of society, policy and politics.

A multi-talented personality with a prolific pen, Thiru Kalaignar Karunanidhi Ji's efforts to promote the Tamil language and culture are still remembered by the people. His literary prowess shone through his works and earned him the affectionate title of 'Kalaignar'.

As this commemorative coin is released, it honours the memory of Thiru Kalaignar Karunanidhi Ji, as well as the ideals he stood for. This coin will serve as a reminder of his legacy and the enduring impact of his work.

On this significant occasion, I extend my heartfelt tribute to Thiru Kalaignar Karunanidhi Ji.

As we march ahead confidently towards building a developed India by 2047, the vision and thoughts of leaders like Thiru Kalaignar Karunanidhi Ji will continue to shape the nation's journey.

May the Muthamizh Arignar Kalaignar Centenary Commemorative Coin release ceremony be a huge success.

(Narendra Modi)

New Delhi
श्रावण 25, शक संवत् 1946
16th August, 2024

முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு நினைவு
100 ரூபாய் நாணயம் வெளியீட்டு விழாவையொட்டி,
மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களின்
வாழ்த்துச் செய்தி... (16.08.2024)

RAHUL GANDHI
LEADER OF OPPOSITION
LOK SABHA

MESSAGE

On the birth centenary of Kalaignar Karunanidhi, I would like to extend my warm wishes to the people of Tamil Nadu. I am happy to know that a commemorative coin is being released to honour his extraordinary life and legacy.

Kalaignar Karunanidhi's socially progressive vision and unwavering dedication to empower people paved way for millions to live a life of dignity. Under his decisive leadership, Tamil Nadu embarked on a bold and ambitious path of transformation. His ideological clarity and commitment to change has helped Tamil Nadu firmly establish itself as a pioneer in various fields and inspired many other States to dream big.

On this occasion, I would also like to commend the Chief Minister Thiru M.K. Stalin on his unwavering commitment to protecting the inclusive idea of India.

Rahul Gandhi

17th Aug, 2024

10 JANPATH, NEW DELHI – 110001

முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு நினைவு
100 ரூபாய் நாணயம் வெளியீட்டு விழாவையொட்டி,
மாண்புமிகு மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. **ராகுல் காந்தி** அவர்களின்
வாழ்த்துச் செய்தி... (17.08.2024)

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியீடு



தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியிடுவதற்கு ஒன்றிய நிதியமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 5 முறை முதலமைச்சராகவும், 13 முறை சட்டப்பேரவை மற்றும் மேலவை உறுப்பினராகவும் இருந்த தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழாவை கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் தேதி முதல் ஓராண்டுக்கு கொண்டாட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசால் முடிவு செய்யப்பட்டது.

இதை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள், தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'நினைவு நாணயம்' வெளியிட ஒன்றிய அரசுக்கு கடந்தாண்டு ஜூலை மாதம் கடிதம் எழுதினார். கடந்த மாதம் நாணயம் வெளியிடுவதற்கான அனுமதி கடிதத்தில்



முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** நூற்றாண்டு நினைவு நாணயத்தை மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத்சிங்** அவர்கள் வெளியிடல்... (18.08.2024)

மாண்புமிகு ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம், அதன் அமைப்பு, உள்ளடக்கம் விலை ஆகியவை முடிவு செய்யப்பட்டது. இதன்படி, இந்த நாணயத்தை அச்சிடுவதற்கு கடந்த ஜூலை 12ஆம் தேதி மத்திய அரசிதழிலும் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாணயத்திற்கான மாதிரி வரைபடம் தமிழ்நாடு அரசிடம் இருந்து பெறப்பட்டது. இதை வடிவமைக்கும் பணியை ஒன்றிய நிதியமைச்சகம் செய்துவந்தது. நாணயத்தை, ஒன்றிய நிதி அமைச்சகத்தின் உத்தரவின்படி இந்திய ரிசர்வ் வங்கி அச்சடித்து வெளியிடுகிறது. இந்தி மற்றும் ஆங்கிலத்தில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பெயருடன், 'தமிழ் வெல்லும்' என்ற தமிழ் வாசகம் அவரது நினைவு நாணயத்தில் இடம் பெற்றுள்ளது.

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியிடுவதற்கான நிகழ்ச்சி 18.08.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் வெகு விமர்சியாக நடைபெற்றது. மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை வெளியிட அதனை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

கலைஞர் திரு. கருணாநிதி அவர்கள் இந்தியாவின் தலைசிறந்த அரசியல் ஆளுமை, பண்பாடு போற்றியத் தலைவர்

– மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர்
திரு. ராஜ்நாத் சிங் அவர்கள்



முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில், மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத்சிங்** அவர்கள் உரையாற்றுதல்... (18.08.2024)

நமது நாட்டில் மிகவும் போற்றப்படும் தலைவர்களில் ஒருவர் கலைஞர் கருணாநிதி. அவரது பிறந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு, பெருமையுடனும், மரியாதையுடனும் உங்கள் முன் நிற்கிறேன். இந்தச் சிறப்புமிகு விழாவில் கலைஞருக்கு எனது நெஞ்சார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன். தமிழ்நாட்டைக் கடந்து நாடு முழுவதும் தனது செல்வாக்கைச் செலுத்திய ஒரு மாமனிதர், திரு. கருணாநிதி அவர்கள், இந்தியாவின் தலைசிறந்த அரசியல் ஆளுமை, பண்பாடு போற்றிய தலைவர், சமூக நீதிக்காக இடை விடாது குரல் கொடுத்தவர் அவர்.

நண்பர்களே, அவரது வாழ்க்கையையும், பெருமையையும் போற்றும் வகையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். இந்த வேளையில், அவரது பொது நலத் தொண்டு தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த நாட்டிற்கும் நன்மையை அளித்துள்ளது என்பதை நினைவு கூற வேண்டியுள்ளது. பன்மைத்துவத்தைப் பேணும் வகையில் அனைத்தையும் உள்ளடக்கிய விதத்தில் ஜனநாயகத்தை முன்னோக்கிச் செலுத்துவதற்கான அர்ப்பணிப்பு உணர்வுடன், ஒரு இந்தியன் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதன் எடுத்துக்காட்டாக அவரது தொலைநோக்குப்பார்வையும் செயல்பாடுகளும் இருந்தன.

திரு. கருணாநிதி அவர்களின் அரசியல் பயணமானது நெகிழ்ச்சியும், உறுதிப்பாடும், மக்களுடன் நெருக்கமான தொடர்பும் கொண்ட ஒரு வரலாறு எனலாம். தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஐந்து முறை பொறுப்புவகித்த அவரது பதவிக் காலத்தில் சவால்கள் இருந்தபோதும் இந்திய அரசியலின் மைய நீரோட்டத்தில் பயணித்து, ஏழை, எளிய மக்களின் தேவைகளைத் தீர்த்துவைத்தவர் அவர். அவர் ஒரு மாநிலத் தலைவர் மட்டுமல்ல, நாடு முழுவதும் செல்வாக்கு செலுத்திய ஒரு தேசிய ஆளுமையாக திகழ்ந்தார்.

தமிழ் அடையாளத்தில் ஆழமாக வேரூன்றியிருந்த போது, இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குழிபறிக்க, பிராந்தியவாதம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. இந்திய ஜனநாயகத்தின் பலம் பல்வேறு குரல்கள் மற்றும் அடையாளங்களுக்கு இடமளிக்கும் திறனில் உள்ளது என்பதை அவர் புரிந்து கொண்டார். தேசிய அரசியலில் அவரது பங்கேற்பு, கூட்டணி அரசாங்கங்களில் அவரது பங்கு, மற்றும் அரசியல் ஸ்பெக்ட்ரம் முழுவதும் இந்திய பன்முகத்தன்மை என்ற கருத்துக்கு அர்ப்பணிப்புள்ள தலைவர்களுடனான அவரது தொடர்பு ஆகியவை கொண்டாடப்படுகின்றன.

நண்பர்களே, நான் விவரித்த 'இந்தியா என்பது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது' என்ற புரிதலில் தான் திரு கருணாநிதி அவர்களின் கூட்டாட்சிக்கான ஆதரவு முழக்கம் வேரூன்றியிருந்தது. பல்வேறு குரல்களுக்கும், பண்பாடுகளுக்கும் அடையாளங்களுக்கும் இடமளிப்பதே இந்திய ஜனநாயகத்தின் பலம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். மாநில சுயாட்சியை அவர் வலியுறுத்தியபோதும், சமமான அதிகாரப்பரவலை அவர் ஒன்றியம் என்னும் குடைக்குக்கீழேயே கோரினார்.

கூட்டாட்சிக்கான அவரது கடப்பாடு இந்தியத் தன்மையின் முதன்மைக்கூறாகும். இந்தியாவின் பன்முகத்தன்மை அதன் பலம், கூட்டாட்சி அமைப்பு இந்தப் பன்முகத்தன்மையை ஓர் ஒருங்கிணைந்த கட்டமைப்பிற்குள் மலரவைக்கிறது. கூட்டாட்சியைப் பொறுத்தவரை திரு. கருணாநிதி அவர்களின் பணியானது, தமிழ்நாட்டின் குரலைத் தேசிய அளவில் ஒலிக்கச்செய்தது, அதே நேரத்தில் இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதற்கும் பங்களித்தது. மதியூகமிக்க அவரது செயல்பாடானது, பொது நலனுக்காக அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடும் அதே வேளையில் நமது வேறுபாடுகளை மதித்து கொண்டாடுவதே இந்தியத் தன்மை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.



முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில், மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத்சிங்** அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நினைவுப் பரிசு வழங்குதல்...
(18.08.2024)

நண்பர்களே, திரு. மு.கருணாநிதி இந்திய அரசியலில் ஒரு பேராளுமை. நாடு விடுதலையடைந்த பிறகு பேரளவில் மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருந்த 1960களில் அவர் ஒரு தலைவராக உருவெடுத்தார். பல மாநிலக் கட்சிகள் உருவான, ஆட்சி அமைத்த காலம் அது. பஞ்சாப் முதல் தமிழ்நாடு வரை இந்தப் போக்கு தெள்ளியநீராய்த் தெரிந்தது. பல வட இந்திய மாநிலங்களில் சம்யுக்த விதாயக் தள அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்தக்காலகட்டத்தில் உருவான பல மாநிலக் கட்சிகள் முகமிழந்து போய்விட்ட நிலையில், 1960 முதல் இன்று வரை அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு கட்சியாக திமுகவை திரு. கருணாநிதி அவர்கள் வளர்த்தெடுத்துள்ளார். இன்றும் அக்கட்சியின் ஆட்சி தொடர்கிறது.

நண்பர்களே, இந்தியா தனது 78ஆவது விடுதலை நாளை இந்த வாரம் கொண்டாடியது. 1973க்கு முன்புவரை ஒவ்வொரு மாநிலத்திலும் விடுதலை நாளிலும் ஆளுநரே தேசியக் கொடியை ஏற்றிவைத்தார் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்காது.

மாநிலத்தில் விடுதலை நாளில் முதலமைச்சரே கொடியேற்றி வைக்க வேண்டும் என்பதற்காக முழங்கிய திரு.கருணாநிதி, சிறப்புமிகு தேசிய சிறப்புகளில் மூவர்ணக் கொடியை ஏற்றிவைக்கும் உரிமை முதலமைச்சர்களுக்கு வேண்டும் என்று கோரினார். அவரது குரலுக்குச் செவி சாய்க்கப்பட்டது; நாட்டின் விடுதலை நாளில் மாநிலத்தில் முதலமைச்சர் கொடி ஏற்றிவைக்க அனுமதிக்கப்பட்டது. அந்த வகையில், 1974 ஆகஸ்ட் 15 அன்று தேசியக்கொடியை ஏற்றிவைத்த, தமிழ்நாட்டின் முதல் முதலமைச்சராகவும் கருணாநிதி ஆனார்.

நண்பர்களே, ஜனநாயகச் செயல்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த தலைவர்அவர். தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் அரசியல் வரைபடத்தை வடிவமைப்பதில் அவர் குறிப்பிடத்தக்க அளவில் பங்களித்தார். ஒன்றிய அரசாங்கங்களில் அவரது பங்கும், ஜனநாயகக் கொள்கைகளுக்கான அவரது ஆதரவுக்குரலும் இந்திய ஜனநாயகத்தில் தனி முத்திரையைப் பதித்துள்ளன.

நண்பர்களே, பல்வேறு அரசியல் கொள்கைகளைக் கொண்ட அரசியல் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளதில் வெளிப்பட்ட அவரது திறமை இந்திய ஜனநாயகத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பின் குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்து நிலையான அரசாங்கங்களை ஏற்படுத்தியதில், இந்திய ஜனநாயகத்தின் பன்முகத் தன்மை பிரதிபலிக்குமாறு திறமையாகச் செயல்பட்டார்.

வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மத்தியில் ஆட்சியில் இருந்தபோது, பா.ஜ.க. கூட்டணியில் தி.மு.க. இருந்தது என்பதை இங்கே நான் நினைவு கூர்கிறேன். அந்த அமைச்சரவையில் சாலைப் போக்குவரத்துக்கான கேபினட் அமைச்சராக நான் இருந்தேன் என்பதையும் சொல்லிக்கொள்வதில் மகிழ்கிறேன்.

‘கருத்தியல் ரீதியான வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும், வாஜ்பாய் அரசை ஆதரிப்பதில் திரு.கருணாநிதி அவர்கள் ஆக்கபூர்வமாகவும் நேர்மறையாகவும் செயல்பட்டார் என்பதை பெருமிதத்துடன் நினைவு கூர்கிறேன். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளின் போதும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் போது அவர் வழங்கிய ஆதரவு உறவுக்குக் கைகொடுக்கும் அவரது பண்பை வெளிப்படுத்தும் வகையிலானது.

1999ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அப்போது, உலக வாணிபக் கழகத்தின் மாநாடு சியாட்டிலில் நடைபெற்றது. இந்தியாவின் நலன்கள்

எவ்வகையிலும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்று பிரதமர் வாஜ்பாய் விரும்பினார். இது குறித்து திரு.கருணாநிதி அவர்களுடன் வாஜ்பாய் பேசினார். இந்தியாவின் நிலைப்பாடு வலுவாக பிரதிநிதித்துவப்படுத்தப்படும் என்று திரு. கருணாநிதி அவர்கள் பிரதமரிடம் உறுதியளித்தார்.அப்போது,திமுகவின் திரு. முரசொலி மாறன் வர்த்தக அமைச்சராக இருந்தார். சியாட்டில் மாநாடு இந்தியாவுக்கு வெற்றிதந்த மாநாடாக அமைந்தது என்பதையும் இங்கே மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

தனது வாழ்க்கை முழுவதும், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தேசியத் தலைவர்களுடனும் திரு. கருணாநிதி அவர்கள் வலுவான அரசியல் உறவைப் பேணி வந்தார். தமது கொள்கைகளிலிருந்து சிறிதும் வழுவாமல் அதற்கு உண்மையாக இருந்தபடியே, அரசியல் ரீதியில் வேறுபட்ட கொள்கைகொண்ட தலைவர்களுடன் பணியாற்றிய அவரது திறன் அவரது அரசியல் ஆளுமைத் தன்மைக்குச் சான்றாக உள்ளது. இந்த உறவுகளை வெறுமனே அரசியல் கூட்டணிக்காக மட்டும் அவர் அமைத்துக் கொள்ளவில்லை; நாட்டுக்கான பங்களிப்பில் ஒருவருக்கொருவர் மரியாதைதரும் வகையில் உறவுகளைப் பேணினார்.



சென்னை மெரினா கடற்கரையில்
முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** நினைவிடத்தில்
'கலைஞர் உலகம்' எனும் அருங்காட்சியகத்தை
மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர்
திரு. **ராஜ்நாத்சிங்** அவர்கள் பார்வையிட்டு
புகைப்படம் எடுத்துக்கொண்டார்...
(18.08.2024)

நண்பர்களே, அனைத்தையும் உள்ளடக்கிய இந்திய அடையாளம் திரு. கருணாநிதி அவர்களின் கொள்கைகளில் பிரதிபலிக்கிறது. கல்வியை எடுத்துக்கொண்டால், விளிம்புநிலை மக்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்கு அவர் அயராது உழைத்தார், அதே போல் மகளிர் குழந்தைகள் வாழ்வு மேம்படவும் அவர்பாடுபட்டார். எப்போதுமே எல்லாருக்கும் எல்லாம் என்பதே திரு. கருணாநிதி அவர்களின் தொலைநோக்குப் பார்வையாக இருந்தது.

பெண்கள், விளிம்பு நிலையிலுள்ள சமூகங்களின் உரிமைகளுக்காக அவர் கடுமையாக வாதாடினார். பாலின சமத்துவத்தை மேம்படுத்தும், பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் முன்னோடி சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். இப்படியாக, தமிழ்நாட்டின் சமூகக் கட்டமைப்பில் ஒரு அழியாத முத்திரையைப் பதித்தார். அவரது ஆட்சிக் காலத்தில், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை இயற்றினார். மேலும், பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன், 1989இல் அவருடைய ஆட்சியின்போது தருமபுரியில் முதன்முதலில் மகளிர் சுயஉதவி குழுக்களை உருவாக்குவதில் முக்கியப் பங்குவகித்தார். அமைப்புசாராத் துறையில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், திருநங்கைகள் போன்றவர்களுக்காக நல வாரியங்களை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றினார். மிகவும் பாதிக்கப்பட்ட குடிமக்களை ஒரு நாடு எப்படி நடத்துகிறது என்பதில்தான் அந்நாட்டுக்கான முன்னேற்றத்தின் உண்மையான அளவுகோல் உள்ளது என்பதை அவருடைய பணி நினைவூட்டுகிறது.

நண்பர்களே, அவர் திறமையான நிர்வாகியாக இருந்தார். 'மனுநீதிநாள் திட்டம்' என்ற திட்டத்தைத் தொடங்கினார். இம்முயற்சியின் கீழ், மக்களின் பிரச்சினைகளைக் கேட்க மட்டும் வாரந்தோறும் ஒரு நாள் ஒதுக்குமாறு மாவட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். மக்களுடன் நேரடியான, ஆழமான தொடர்பை ஏற்படுத்துவது என்பது ஒவ்வொரு அரசியல்வாதியும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.

திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தின் மிக முக்கியமான அம்சங்களுள் ஒன்று, கல்வி வளர்ச்சியிலும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிலும் அவர் கவனம் செலுத்தியது. தமிழ்நாட்டின் - உண்மையில், இந்தியாவின் - எதிர்காலத்தைக் கட்டியமைக்கும் தூண்கள் இவை என்று அவர் நம்பினார்.

ஆனால், திரு. கருணாநிதி அவர்களின் தொலைநோக்குப் பார்வை தமிழ்நாட்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. எந்த ஒரு மாநிலத்தின் வளர்ச்சியும் ஒட்டுமொத்த தேசத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களிக்கிறது என்பதை அவர் உணர்ந்திருந்தார். உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் - சாலைகள்,

பாலங்கள் அல்லது பொது வசதிகள் போன்ற வடிவங்களில் - இந்தியாவின் வளர்ச்சியை நோக்கிய பயணத்தை உயர்த்தக்கூடிய ஒரு தமிழ்நாட்டை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்தத் தளத்தில் திரு. கருணாநிதி அவர்கள் ஆற்றியிருக்கும் பணியானது தற்சார்பு மற்றும் வளர்ச்சிக்கான இந்திய ஆன்மாவுக்கான சான்றாகும். கல்வியும் உள்கட்டமைப்பும் ஒருவருடைய வாழ்க்கையை மாற்றியமைக்கும் என்பதில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையானது வலுவான, தன்னிறைவு கொண்ட, தற்சார்புள்ள இந்தியாவைக் தட்டியெழுப்புவதற்கான தேசியப் பார்வையுடன் ஒத்துப்போகிறது. பிராந்திய வளர்ச்சியானது தேசிய வளர்ச்சியின் ஒருங்கிணைந்த பகுதி என்பதையும், ஒவ்வொரு மாநிலத்தின் செழுமையும் தேசத்தின் ஒட்டுமொத்த செழிப்புக்கும் பங்களிக்கிறது என்பதையும் அவருடைய மரபு நினைவூட்டுகிறது. இது கூட்டாட்சித் தத்துவத்தைச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகிறது.

கலைஞரின் செல்வாக்கு அரசியலுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியர். அவருடைய படைப்புகள் தமிழ் இலக்கியத்தையும் திரைத்துறையையும் வளப்படுத்தின. தமிழ் இலக்கியம், திரைத் துறைக்கான அவருடைய பங்களிப்புகள், தமிழ்நாடு மற்றும் ஒட்டுமொத்த இந்தியாவின் பண்பாட்டுத் தளத்தில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளன.

தமிழ் மொழியையும் பண்பாட்டையும் மேம்படுத்துவதற்கான அவருடைய முயற்சிகள் எல்லாம், ஒருவரின் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாப்பதும் கொண்டாடுவதும் பரந்துபட்ட இந்திய அடையாளத்துக்கு இன்றியமையாதது என்ற அவருடைய நம்பிக்கையில் வேரூன்றி இருந்தன. இந்தியா ஒரு தேசமாக, பல்வேறு மொழிகள், பண்பாடுகள் மற்றும் மரபுகளால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பன்முகத் தன்மையின் ஒவ்வொரு அம்சமும் இந்த மாபெரும் தேசத்தின் செழுமைக்குப் பங்களிக்கிறது என்பதை திரு. கருணாநிதி அவர்கள் அங்கீகரித்தார்.

நண்பர்களே, திரு. கருணாநிதி அவர்கள் ஜனநாயகத்துக்காகப் போராடினார். மேலும், நல்ல மாற்றங்களைக் கொண்டுவருவதற்காகத் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசும் ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சியின் சக்தியை நம்புகிறது. இந்தியா தன்னுடைய 140 கோடி மக்களின் விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது. அதோடு மட்டுமல்லாமல், ஜனநாயகமானது மக்களுக்கு வளர்ச்சியை வழங்குகிறது, மக்களுக்கு அதிகாரமளிக்கிறது என்ற நம்பிக்கையையும் அளித்து வருகிறது.



சென்னை மெரினா கடற்கரையில் முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** நினைவிடத்தில், மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத்சிங்** அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துதல்... (18.08.2024)

இத்தருணத்தில், வளர்ச்சிக்கான நம்முடைய அர்ப்பணிப்பானது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களிலும் பாதுகாப்புத் தொழில்துறை வழித்தடங்களை நிறுவுவதற்கு இந்திய அரசு எடுத்திருக்கும் முடிவு இதற்கான எடுத்துக்காட்டாகும். இந்த வழித்தடங்கள் உள்நாட்டுப் பாதுகாப்பு உற்பத்தித் துறையை உயர்த்துவதையும், இறக்குமதியை நம்பியிருப்பதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த வழித்தடங்கள் முதலீட்டை ஈர்க்கவும், புதுமைகளை ஊக்குவிக்கவும், இந்தியாவில் பாதுகாப்பு உற்பத்திக்கான வலுவான சூழலை உருவாக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பழமையான நகரமான காசி, இன்றைய வாரணாசி அல்லது பனாரஸைச் சேர்ந்தவன் நான்என்பதால், காசி தமிழ்ச் சங்கமத்தின் முயற்சியையும் எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்தியாவின் பண்பாட்டு ஒருங்கிணைப்பை நோக்கி, தமிழ்

மக்களுக்கும் காசிக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நீடித்துவரும் தொடர்பை மீண்டும் கண்டறிந்து, மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியான காசி தமிழ்ச் சங்கமத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். காசி தமிழ்ச் சங்கமத்தின் வெற்றியைத் தொடர்ந்து, சௌராஷ்டிரா-தமிழ்ச் சங்கமம் என்ற அமைப்பைத் தொடங்குவதன் மூலம் பண்பாட்டு ஒருங்கிணைப்புக்கான தன்னுடைய உறுதிப்பாட்டை விரிவுபடுத்தியுள்ளது. இந்த முயற்சி மேற்கு இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான பண்பாட்டு ஒருங்கிணைப்பைக் கொண்டாட முயல்கிறது.

மு.கருணாநிதி அவர்களின் வாழ்க்கை குறித்தும் பாரம்பரியம் குறித்தும் நாம் நினைவு கூர்கிறோம்; இவ்வேளையில், வருங்கால சந்ததியினர் அவருடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்களைக் கருத்தில் கொள்வது அவசியம். திரு. கருணாநிதி அவர்களின் வாழ்க்கையிலிருந்து இளம் இந்தியர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய முக்கியமான பாடங்களுள் ஒன்று, சொந்த மதிப்பீடுகளுக்கு உண்மையாக இருப்பதாகும். அனைத்துக் குடிமக்களும், அவர்களின் பின்னணி என்னவாக இருந்தாலும், கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்குத் தகுதியானவர் என்ற நம்பிக்கையிலிருந்து அவர் ஒருபோதும் விலகவில்லை. இது இந்தியப் பண்பாட்டையும் மரபையும் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுவதாக நினைத்தார். அவருடைய மதிப்புகள் மீதான இந்த அசைக்க முடியாத அர்ப்பணிப்பு அவருடைய தலைமையின் தனிச்சிறப்பாகும். மேலும், இது அவருடைய காலத்தில் இருந்ததைப் போலவே இன்றும் பொருத்தமான பாடமாக உள்ளது.

கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நாணயத்தை வெளியிடுவதானது வளர்ச்சிக்காகவும், நீதிக்காகவும் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட அவருடைய வாழ்க்கைக்கான அஞ்சலியாகும். இது நம்முடைய கூட்டு நன்றியுணர்வின் அடையாளமாகவும், அவர் முன்வைத்த மதிப்பீடுகளுக்கான நினைவூட்டலாகவும் இருக்கும்.

இந்த வார்த்தைகளுடன், எனது உரையை முடிக்க விரும்புகிறேன். இந்நிகழ்ச்சிக்கு என்னை அழைத்த தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது வாழ்க்கையும், பொதுவாழ்வில் அவர் ஆற்றிய பங்களிப்பும் என்றென்றும் நினைவு கூரப்படும்.

நன்றி!



முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்களின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை,
மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத்சிங்** அவர்கள் வெளியிட,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பெற்றுக் கொண்டார்... (18.08.2024)

‘நா-நயம்’ மிக்க தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நாணயம் வெளியிடப்படுவது மிகமிகப் பொருத்தமானது

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய உணர்வுகளை எப்படி விவரிப்பது என்று சொல்ல முடியாத மகிழ்ச்சியில் நான் இப்போது இருக்கிறேன்.

நம்மை எல்லாம் ஆளாக்கிய தலைவரைச் சிறப்புச் செய்யும் வகையில் நாணயம் வெளியிடப்படுகிறது.

‘நா-நயம்’ மிக்க தலைவரான கலைஞருக்கு, நாணயம் வெளியிடப்படுவது மிக மிகப் பொருத்தமானது.

நூற்றாண்டு விழா நாயகருக்கு 100 ரூபாய் நாணயம் வெளியிடப்படுகிறது. இதுவரை நாம் கொண்டாடினோம், இதோ இந்தியாவே கொண்டாடுகிறது என்பதன் அடையாளம் தான் இந்த விழா.

இதுபோன்ற எத்தனையோ சிறப்புகளுக்குத் தகுதியானவர் தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! உலகம் இன்று ஒப்புக் கொண்ட உண்மை!



முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உரையாற்றுதல்... (18.08.2024)

தமிழ்நாடு சட்டமன்றத்தில், தலைவர் கலைஞர் அவர்களது திருவுருவப் படத்தை, அன்றைய குடியரசுத் தலைவர் மாண்புமிகு ராம்நாத் கோவிந்த் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ஓமந்தூரார் வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலையை, அன்றைய குடியரசுத் துணைத் தலைவர் திரு.வெங்கய்ய நாயுடு அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்ட திருவுருவச் சிலையை அன்னை சோனியா காந்தி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

முரசொலி அலுவலகத்தில் அமைக்கப்பட்ட திருவுருவச் சிலையை, மேற்கு வங்க முதலமைச்சர் மாண்புமிகு மம்தா பானர்ஜி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இன்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நாணயத்தை, நமது நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் வெளியிட வருகை தந்துள்ளார்கள்.



இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவல் அரணாக இருந்த தலைவர் கலைஞர் அவர்களின் உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட, இந்திய நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் வந்திருப்பது மிகமிகப் பொருத்தமானதுதான்.

எண்பது ஆண்டு காலம் பொதுவாழ்க்கையில் இயங்கி, அதில் அரைநூற்றாண்டு காலம், தமிழ்நாட்டின் திசையைத் தீர்மானித்த தலைவர் கலைஞருக்கு, இந்தியாவே வருகை தந்து சிறப்பித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

தலைவர் கலைஞர் நிறைவடைந்த நாள்முதல், நாள்தோறும் அவர் புகழைத்தான் போற்றிக் கொண்டிருக்கிறோம். கடந்த ஓராண்டு காலமாக அவரது நூற்றாண்டை முன்னிட்டு, அவரது சாதனைகளைச் சொல்லும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம்.

தலைவர் கலைஞரைப் போற்றும் விதமாகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினோம். அவற்றில் முத்தாய்ப்பான சிலவற்றை மட்டும் சொல்ல வேண்டுமென்றால்,

- கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை,
- மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்,
- 1 கோடியே 15 இலட்சம் மகளிர், மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை பெறும் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்',
- கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்

இந்தப் பெருமைக்கெல்லாம் மகுடமாக, இன்று கலைஞர் உருவம் தாங்கிய நாணயம் வெளியிடப்படுகிறது.

I thank the Union Government for approving the release of the 100-rupee coin in honour of Thalaivar Kalaignar. I also thank Hon'ble Prime Minister Thiru. Narendra Modi for his support and Hon'ble Defence Minister Rajnath Singh for gracing this occasion.

Though he started his career as a professor of physics, due to his interest in politics and by his hardwork, he grew step by step, from MLA to State Minister to CM of Uttar Pradesh and now as the Defence Minister of India.

Hon'ble Rajnath Singh was my first choice to invite for this event.

Although we have different political views, Rajnath Singh has always been someone who maintains positive relationships with people from different political backgrounds.

இன்றைக்கு நாம் பார்க்கும் நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, தலைவர் கலைஞர் அவர்கள்தான். அவர் உருவாக்கிய கட்டமைப்புகளைப் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு நாள் போதாது.

அவரது சாதனைகளைச் சொல்ல, இதோ நாம் இந்த விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோமே, இந்த கலைவாணர் அரங்கத்தில் இருந்தே தொடங்கலாம்,

- பாலர் அரங்கமாக இருந்த இதனை, மிகப்பெரியதாகக் கட்டி எழுப்பி, 'கலைவாணர் அரங்கம்' என்று மாற்றினார்,
- தாய்மொழியாம் தமிழ்மொழிக்குச் 'செம்மொழி' தகுதியைப் பெற்றுத் தந்தார், மெட்ராசை 'சென்னை' ஆக்கினார்,
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் போன்ற எண்ணற்ற திட்டங்களை உருவாக்கினார்,

- 44 அணைக்கட்டுகள்,
- ஏராளமான கல்லூரிகள்,
- பல்கலைக் கழகங்கள்.

சென்னையைச் சுற்றி மட்டும்,

- அண்ணா சாலை,
- அண்ணா மேம்பாலம்,
- வள்ளுவர் கோட்டம்,
- கத்திபாரா பாலம்,
- கோயம்பேடு பாலம்,
- செம்மொழிப்பூங்கா,
- டைடல் பார்க்,
- தலைமைச் செயலகமாக கட்டப்பட்டு, இன்று பெரிய அரசு மருத்துவமனையாக இருக்கும் ஓமந்தூரார் மருத்துவமனை,
- மெட்ரோ ரயில்,
- அடையாறு ஐ.டி. காரிடார்,
- நாமக்கல் கவிஞர் மாளிகை

என அனைத்தும் கலைஞரால் உருவாக்கப்பட்டவை! இதனை யாராலும் மறைக்க முடியாது.

கடந்த 15ஆம் நாளன்று இந்திய நாட்டின் 78ஆவது விடுதலை நாளைக் நாம் கொண்டாடினோம்.

அன்று நான் மட்டுமல்ல, நாட்டிலுள்ள அத்தனை மாநில முதலமைச்சர்களும் கொடியேற்றினார்களே, அதற்கான உரிமையைப் பெற்றுத்தந்தவரும் முதலமைச்சர் கலைஞர்தான்!

- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் சொன்னாரே.....

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறை என்று வைக்கப்படும்" – என்று,

அப்படி ஆட்சி நடத்தியவர் கலைஞர் அவர்கள்!

அதனால்தான் இன்று அகில இந்தியாவும் போற்றும் தலைவராக கலைஞர் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.

"செயல்படுவதும், செயல்பட வைப்பதும்தான் அரசியல்" என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக இருந்தவர் கலைஞர்.

ஒரு கட்சியின் தலைவராக; ஒரு மாநிலத்தின், நாட்டின் தலைவராக; எப்போதும் சிந்தித்தார்! செயல்பட்டார்!

- 1971ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்பு கண்டனத் தீர்மானம்,
- 1972ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின்போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறு கோடி ரூபாய் நிதி,
- போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நிதி மற்றும் நிலம்,
- 1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது இந்தியாவிலேயே அதிகத் தொகையை, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கியவர் தலைவர் கலைஞர்!

மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்த அதேவேளையில் – நாட்டின் பாதுகாப்பு என்று வருகிறபோது கை கொடுத்தவர்தான் கலைஞர் அவர்கள்.

நாணயம் என்பதற்கு இன்னொரு பொருளும் இருக்கிறது. கொடுத்த வாக்கை காப்பாற்றுவதற்குப் பெயரும் நாணயம்தான்!

"சொன்னதைச் செய்வோம் – செய்வதைத்தான் சொல்வோம்" என்று சொல்லி, சொன்னதையெல்லாம் செய்து காட்டியது, தலைவர் கலைஞர் அவர்களது நாணயத்துக்கு அடையாளம்!

அவரது வழியில் இன்றைய திராவிட மாடல் அரசு – கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி கலைஞர் அரசாகச் செயல்பட்டு வருகிறது.

"சட்டசபையை அதிகார அமைப்பாக இல்லாமல் சமூகத்திற்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருதவேண்டும்" என்றார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள்.



முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள வருகைதந்த மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **ராஜ்நாத்சிங்** அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பூங்கொத்து வழங்கி வரவேற்றல்... (18.08.2024)

அப்படித்தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இது, எனது அரசல்ல; நமது அரசு! ஒரு கட்சியின் அரசல்ல; ஒரு இனத்தின் அரசு! திராவிடக் கருத்தியல் கொண்ட அரசு!

இதனை என்னுள் ஏற்படுத்தியவர் தலைவர் கலைஞர். அந்த வகையில் கலைஞரே இயக்கிக் கொண்டிருக்கிறார்.

"ஒரு மனிதனின் வாழ்க்கை அவனது மரணத்திற்கு பிறகு கணக்கிடப்பட வேண்டும்" என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இன்றைக்கு அவரது முகம் தாங்கிய நாணயத்தில் 'தமிழ் வெல்லும்' என்ற சொல்லும் இடம் பெற்றுவிட்டது என்றால், இதுவும் கலைஞரின் சாதனைதான்!

தனது சாதனைப் பெருவாழ்வால் தமிழினத்தின் நெஞ்சத்தில் நிறைந்துவிட்ட தலைவர் கலைஞர் புகழ் வாழ்க!

தலைவர் கலைஞர் புகழ் வாழ்க!

தலைவர் கலைஞர் புகழ் வாழ்க!

On behalf of the people of Tamil Nadu, Once again, I sincerely thank Hon'ble Rajnath Singh for being here today to honour Thalaivar Kalaignar.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
18.08.2024 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை



இதழாளர் கலைஞர்



கலைஞர் அவர்களின் கட்டுரைகளை படித்தால் புழுவும் புலியாகும்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்


முரசொலியைத்தான் தனது மூத்தபிள்ளை என்று தலைவர் கலைஞர் அவர்கள் அழைப்பார்கள். நாங்கள் அவரது மடியில் தவழ்ந்ததை விட 'முரசொலி' தவழ்ந்ததுதான் அதிகம். அந்த மூத்த பிள்ளையை வளர்க்க மொத்தப் பிள்ளைகளும் உழைத்தோம்.

எனது பள்ளி, கல்லூரிக் காலங்களில் பல நேரங்கள் 'முரசொலி' அலுவலகத்தில்தான் கழிந்துள்ளது. தலைவர் அவர்கள் ஆசிரியராக இருக்கும்போது துணை ஆசிரியராக அண்ணன் மாறன் அவர்கள் இருந்தார்கள்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அண்ணன் செல்வம், பகுதி நேரமாக இங்கு பணியாற்றினார். கட்டுரைகளும் எழுதி வந்தார். அண்ணன் அமிர்தம் அவர்கள் புகைப்படக் கலைஞராக இருந்தார். பல்வேறு நிகழ்ச்சிகளுக்குச் சென்று புகைப்படங்களை எடுத்து வந்து தருவார்.

அண்ணன் அழகிரி, நான், தமிழரசு ஆகியோர் பள்ளி, கல்லூரி நேரம் போக மீதி நேரம் இங்கு வந்து 'முரசொலி'யை பார்சல் செய்வது, வெளியூருக்கு அனுப்ப ஆட்டோவில் எடுத்துச் செல்வது என்று இருப்போம்.

"கலைஞரின் குடும்ப இளைஞர்கள் அனைவரும் கலைஞர் ஊட்டிய இலட்சிய வேட்கையில் தங்கள் இளமையைப் பலி கொடுத்து வந்தனர். பெரியார், அண்ணா, வழியில் தான் ஏற்றுக் கொண்ட இலட்சியம் நிறைவேற தன்னை மட்டுமல்ல, தன் குடும்ப உறுப்பினர்கள் பலரையும் அந்த வழியில் பயணிக்க வைத்தார் கலைஞர்" என்று அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் 'முரசொலி - சில நினைவுகள்' என்ற புத்தகத்தில் எழுதி இருப்பது முற்றிலும் உண்மை!



முரசொலிதான் எனது பயிற்சிக் களமாக இருந்தது. தினமும் காலையில் ஒரு நாளிதழை நாம் வாசிக்கிறோம். அது அச்சடித்து நம்முடைய கைக்கு வருவதற்கு முன்னதாக எத்தனை ஆயிரம் ஊழியர்களின் உழைப்பு அதில் இருக்கிறது. அத்தகைய ஊழியர்களில் ஒருவனாக நான் இருந்தேன்.

அன்றையகாலத்தில்தான் பார்த்த காட்சியை தமிழகத்தின் மிக மூத்த பத்திரிகையாளரும், அரசியல் சிந்தனையாளருமான மரியாதைக்குரிய சோலை அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

1960களின் ஆரம்பத்தில் ஜனசக்தி நாளிதழிலும், பின்னர் நவமணி நாளிதழிலும் நான் பணியாற்றினேன். அப்போது அடியாரும், சகோதரர் கயல் தினகரனும் முரசொலியில் பணி செய்து கொண்டிருந்தனர். அரசியல் எல்லைகளுக்கு அப்பால் நாங்கள் நண்பர்கள்.

நிருபர் என்ற முறையில் அண்ணா, கலைஞர் பங்குகொள்ளும் நிகழ்ச்சிகளுக்குச் செல்வோம். மேடையில் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் உரையாற்றிக் கொண்டிருப்பர். அரும்பு மீசை கூட அரும்பாத ஓர் இளைஞர் மேடையின் விளிம்பில் அமர்ந்திருப்பார். கால்களைத் தொங்க விட்டுக் கொண்டு தலைவர்களின் உரையை டேப்பில் அவர் பதிவு செய்து கொண்டிருப்பார்.

பல கூட்டங்களில் அவரைப் பார்த்துள்ளேன். அவர் யார் என்று கேட்டபோது, 'ஸ்டாலின் - கலைஞரின் பிள்ளை' என்றனர். அவர் ஒலிப்பதிவு செய்த தலைவர்களின் உரைகள் மறுநாள் முரசொலியில் முழுமையாக வெளிவரும். பள்ளிப் படிப்போடு அவர் இந்த அரசியல் பணியையும் செய்து வந்தார்"- என்று எழுதி இருக்கிறார் சோலை அவர்கள்.

பள்ளியில் படிக்கும்போதும், கல்லூரியில் படிக்கும்போதும் மாலை நேரத்தில் முரசொலி அலுவலகத்துக்கு வந்துவிடுவேன். அச்சடித்து வைத்திருக்கும் நாளிதழை வெளியூருக்கு அனுப்புவது மாலை நேரமாக இருக்கும்.

அச்சடித்த நாளிதழை வெளியூருக்கு அனுப்புவதற்காக வாகனங்களில் நான் எடுத்துச் செல்வேன். உரிய நேரத்துக்குள் பேருந்தோ, புகைவண்டியோ புறப்படுவதற்கு முன்னதாகப் போய் நாளிதழ் கட்டுகளை அனுப்புவது ஒரு பதற்றமானதாகவே இருக்கும்.

சில நேரங்களில் கட்டுகளை அதிகமாக ஏற்றிச் சென்றால் வழியில் காவல் துறையினர் நிறுத்தி விடுவார்கள். அவர்களுக்கு உரிய பதிலைச் சொல்லிவிட்டு எடுத்துச் செல்ல வேண்டும்.

அதற்குள் புகைவண்டி போய்விட கூடாது. எத்தனையோ முறை காவல்துறையில் நான் மாட்டி இருக்கிறேன். பதில் சொல்லிவிட்டோ, அபராதம் செலுத்திவிட்டோ சென்று இருக்கிறேன்.

அதன்பிறகு, 'செய்திகளை சேகரிப்பவனாக' நான் மாறினேன். வெளியூரில் இருந்து கழக நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள் ஏராளமாக வரும்.

அவை நடந்த நிகழ்ச்சிகளாக இருக்கும், அல்லது நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளாக இருக்கும். இந்த கடிதங்களை பிரித்து வரிசைப்படுத்தி எவை வெளியிட வேண்டுமோ அவற்றை மட்டும் தனியாக எழுதி ஆசிரியர் குழுவுக்குக் கொடுப்பேன்.

நான் எழுதிக் கொடுக்கும் செய்திகள் 'தின பலன்' என்ற தலைப்பில் அந்தக் காலத்தில் முரசொலியில் வெளியாகும். தின பலன் என்றால் அது ஏதோ ராசிபலன் மாதிரியான தலைப்பு மாதிரி தோன்றலாம். தினந்தோறும் கழகத்துக்கு நடக்கும் பிரச்சாரக் கூட்டங்களால் கிடைக்கும் பலன் அது என்கிற பொருளில் அந்த தலைப்பு தலைவரால் வைக்கப்பட்டது.

அதன்பிறகு பக்க வடிவமைப்பு குறித்து நான் தெரிந்து கொள்ளத் தொடங்கினேன். பக்க வடிவமைப்பை எனக்கு முழுமையாகக் கற்றுக் கொடுத்தவர் அண்ணன் செல்வம் அவர்கள்தான்.

தலைப்புச் செய்தி, தலையங்கம், துணைத் தலைப்புகள், சிறு தலைப்புகள், கருத்துப்படங்கள், படங்களை எந்தளவுக்கு வெளியிட வேண்டும், முதல் பக்கத்துக்கு உள்ள முக்கியத்துவம், கடைசி பக்கத்தில் இடம் பெற வேண்டிய முக்கியச் செய்திகள், பெட்டிச் செய்திகள், கட்டுரைகள், கட்டுரைக்கான துணைத் தலைப்புகள், ஒவ்வொருவர் பெயரையும் எப்படி வெளியிட வேண்டும் இப்படி ஏராளமான தகவல்களைச் சொல்லித்தந்து ஒரு பக்கத்தை எப்படி வடிவமைக்க வேண்டும் என்பதைச் சொல்லித்தந்தார் அண்ணன் செல்வம் அவர்கள்.

இவை அனைத்தையும் செய்வதற்கு ஆசிரியர் குழு இருந்தாலும், அவர்களோடு சேர்ந்தும் அவர்கள் செய்வதைக் கவனித்தும் வருபவனாக நான் இருந்தேன்.

இவை அனைத்துக்கும் மேலாக 'முரசொலி'யை அது அச்சிட்ட மை காய்வதற்கு முன்பே படிப்பதுதான் மிகப்பெரிய வாய்ப்பாக இருந்தது.

தலைவரின் உரைகள், அவர் எழுதிய கடிதங்கள், முன்னணியினரின் உரைகள், கழகத்தின் செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றை முன்கூட்டியே படிப்பதை வழக்கமாக வைத்திருந்தேன். பல கட்டுரைகள், உரைகளை அச்சுக்கு போவதற்கு முன்பே கூட படித்துவிடுவேன்.

தினந்தோறும் வெளியாகும் கட்டுரைகள் உணர்ச்சிப்பூர்வமாகவும் எழுச்சி கொள்வதாகவும் இருக்கும். கருத்துக்காக படிப்பதா? எழுத்து நடைக்காகப் படிப்பதா? என்று முடிவுக்கு வர முடியாத அளவுக்கு அந்தக் கட்டுரைகள் இருக்கும். முரசொலியில் பணியாற்றிய அடியார் எழுதும் கட்டுரைகள் எனக்கு அதிகம் பிடிக்கும்.

செப்டம்பர் மாதம் என்பது திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனுக்கு மிக முக்கியமான மாதம் ஆகும். செப்டம்பர் மாதத்தை தி.மு.க. மாதம் என்று நானே ஒரு முறை குறிப்பிட்டேன். அத்தகைய செப்டம்பர் மாதத்தை அடியார் எப்படிச் சொல்வார் என்றால்...'

"கார்காலம் அணிமயில் தனது கலாபம் விரிக்கும் காலம்.

கோடை காலமே மாங்கனியில் சுவையேறும் காலம்

வசந்தமே காதலர் நெருங்கும் காலம்..

இந்த செப்டம்பர் மாதமே எங்கள் நெஞ்சில் மகிழ்வு கொஞ்சும் மாதம்..." என்று எழுதுவார் அடியார்.

அண்ணாவை வர்ணிக்கும்போது, "காக்கையின் கூட்டில் கிடந்த குயில் முட்டையாக இருந்தார். புலிகள் துயிலுமிடத்தில் முளைத்தெடுத்த மல்லிகைக் கொடியாக இருந்தார். பாலையின் மணலிடையே தோன்றிய ஊற்றாக இருந்தார்" என்று எழுதுவார் அடியார். அதேபோல், 'சோசலிசவாதி' என்ற புனைப்பெயரில் மணிமொழி எழுதுவார். மா.பாண்டியன் எழுதுவார்.

தினந்தோறும் வெளியாகும் தலைவரின் உரைகள் இது போன்ற கட்டுரைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து படித்தாலே புழுவும் புலியாகும்.

மெல்ல மெல்ல பாடப் புத்தகங்களில் இருந்து 'முரசொலி'யின் பக்கமாக நான் நகர்ந்து கொண்டு இருந்தேன். தனது பிள்ளைகள் 'முரசொலி'யில் ஓய்வு நேரத்தில் பணியாற்றி வருவதை தலைவர் மகிழ்ச்சியாகவே நினைத்தார்.

ஆனால், படிப்பு நேரம் போக மற்ற நேரமாக அது அமைய வேண்டுமே தவிர முழுவேலையாக மாறிவிடக் கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தார். ஆனால் நான் முழு நேரம் அரசியல் பக்கம் போவதையே இலக்காகக் கொண்டவனாக மாறினேன்.

அதற்குக் காரணம், அந்தக் காலக்கட்டத்தில் தலைவர் அவர்கள் அனைத்துக் கல்லூரிகளிலும் பேசிய உரைகள்தான்.

- நன்றி: உங்களில் ஒருவன் பாகம்-1
என்னும் நூலிலிருந்து....

இதழாளராக கலைஞர் என்றும் வாழ்வார்



கி. வீரமணி
தலைவர், திராவிடர் கழகம்

திராவிடர் இயக்கம் எழுத்தாலும், பேச்சாலும் வளர்ந்தது. 'திராவிட இயக்க இதழ்கள்' என்ற 24 பக்கங்கள் கொண்ட நூலினை மணிவாசகர் பதிப்பகம் 1903இல் வெளியிட்டது. இதில் 84 இதழ்களின் பெயர்கள் வெளிவந்தன. திராவிட இயக்க ஆய்வாளர் மானமிகு க. திருநாவுக்கரசு 1998இல் "திராவிட இயக்க இதழ்கள் - ஒரு பார்வை" என்னும் நூலில் 257 இதழ்களைப் பதிவிட்டார்.

'ராணி' ஆசிரியர் அ.மா. சாமி அவர்களோ 1,250 திராவிட இயக்க இதழ்களை அகர வரிசையில் வெளியிட்டார்.

நீதிக்கட்சியின் 'திராவிடன்' தொடங்கி திராவிட இயக்க ஏடுகள் மக்கள் மத்தியில் புரட்சித் தீயை ஊட்டின.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் - மாணவர் கருணாநிதியை திராவிட இயக்கத்தின்பால் ஈர்த்தது.

பள்ளியில் படிக்கும்போதே 'மாணவநேசன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கினார். 8 பக்கங்களில் இதழைத் தயாரித்து 50 படிகள் எடுத்து மாணவர்கள் மத்தியில் பரப்பினார். அப்போது சேரன் என்ற புனைப்பெயரில்தான் எழுதி வந்தார்.

"இளமைப்பலி" என்ற கட்டுரையை எழுதி அண்ணா நடத்திய 'திராவிட நாடு' இதழுக்கு அனுப்பி வைத்தார். 'திராவிட நாட்டிலும்' வெளிவந்தது (1942), திருவாரூருக்கு வந்த அண்ணா, அந்தக் கட்டுரையாளரை நேரில்

அழைத்தார். பொடிப்பையனாக இருந்த கருணாநிதியைப் பார்த்து 'படிக்கிற வேலையைப் பார்!' என்று அறிவுரை கூறினார்.



தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ ஏடாக மிளிர்கிற 'முரசொலி'யைத் தனது 18ஆம் வயதில் துண்டறிக்கையாகத்தான் தொடங்கினார் இளைஞர் மு. கருணாநிதி (10.01.1942)

1944வரை துண்டறிக்கையாகவே வெளிவந்தது. இடையில் நின்றது. 1948 ஜனவரி 14 முதல் வார இதழாக 'முரசொலி' மலர்ந்தது. அதில் பெரியாராண்டு 69 என்று குறிக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது. 25 வார இதழ்கள் வெளிவந்தன. 1954 முதல் சென்னையில் வெளிவந்தது; நாளேடாக அடியெடுத்து வைத்தது 17.09.1960 அன்று!

கலைஞர் பெருமையுடன் கூறுவதுண்டு- எனது முதல் பிள்ளை 'முரசொலி' என்று! ஆம், தன் கண் மூடும் வரை எவ்வளவோ இடர்ப்பாடுகளுக்கு இடையில் கண்ணும் கருத்துமாக அதனை வளர்த்தெடுத்தார்.

அவரைக் காணச் செல்பவர்கள் கைகளில் 'முரசொலி' தவழ்கிறதா என்று உன்னிப்பாகக் கவனிப்பார்.

திராவிட இயக்கம் என்று சொல்லும்போது அதன் கொள்கை முரசான 'திராவிடன்' அரும்பியது (1917) முதன் முதலாக,

ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ்' என்ற ஏடு டாக்டர் டி.எம். நாயரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது (1917).

தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் என்ற இயக்கம் (SILF) அந்தப் பத்திரிகையின் பெயராலேயே 'ஜஸ்டிஸ் பார்ட்டி' 'நீதிக்கட்சி' என்ற மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது.

"ஆந்திரப்பிரகாசிகா' என்ற பெயரில் தெலுங்கு மொழியிலும் நீதிக்கட்சி இதழ் வெளிவந்தது.

காங்கிரசில் இருந்தபோதே தந்தை பெரியார் 'குடிஅரசு' வார இதழைத் தொடங்கினார் (02.05.1925).

கலைஞர் அவர்களைப் பொறுத்தவரை ஈரோட்டிலிருந்து தந்தை பெரியார் நடத்தி வந்த 'குடிஅரசு' இதழில் 11 மாதங்கள் பணியாற்றினார்.



'குடிஅரசு' இதழில் கலைஞர் தீட்டிய 'ஏகாதசி' (குடிஅரசு 15.12.1945) 'அண்ணாமலைக்கு அரோகரா' (குடிஅரசு 17.11.1945) 'மானங்காக்க' (குடிஅரசு 23.12.1944) ஆகிய கட்டுரைகள் புகழ் பெற்றவை.

பகுத்தறிவு புரட்சி, Revolt சமதர்மம் இதழ்களை நடத்தினார் தந்தை பெரியார். 'விடுதலை' நாளேடாக (89 ஆண்டுகளாக நடந்து வருகிறது) 'உண்மை', 'பெரியார்பிஞ்சு', 'மாடர்ன் ரேஷனலிஸ்ட்' (ஆங்கில மாத இதழ்) ஆகிய இதழ்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அண்ணா அவர்கள் திராவிட நாடு, காஞ்சி, 'ஹோம் லேண்ட்' இதழ்களை நடத்தி வந்தார். 'நம் நாடு' தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ ஏடாக நடந்து வந்தது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முதல் பிள்ளையாகிய 'முரசொலி' 1960 முதல் நாளேடாக - போர் வாளாக நடைபோட்டு வருகிறது.

திராவிட இயக்கத்தின் போர்வாள்களாக 'விடுதலை'யும் 'முரசொலி'யும் ஏறுநடைபோட்டு வருகின்றன.

பல எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி வளர்த்தெடுத்த பெருமை கலைஞர் அவர்களின் 'முரசொலி'க்கு உண்டு.

இதழியல் உலகில் பல புதிய அம்சங்களை 'முரசொலி' மூலம் கொண்டுவந்த பெருமை கலைஞர் அவர்களையே சாரும்.

எழுத்தாணி பதில்கள், பொன்முடிக்குக் கடிதம், சுழல் விளக்கு போன்ற பகுதிகள் அணிவகுத்தன.

வாசகர் கடிதம்- 'உங்கள் பார்வை' என்ற தலைப்பில் வெளிவரத் தொடங்கியது (22.04.1955), இயல், இசை, கூத்து (18.04.1955) 'நில் நண்பா எங்கே போகிறாய்?' (22.6.1955), பொங்கல்மலர், அண்ணா மலர் இவையெல்லாம்... கலைஞரின் முத்திரைகள் முரசொலியில்!

சிறுகதைகளையும் புதுக்கவிதைகளையும் இடம்பெறச் செய்தார்.

முதன்முதலில் கலைஞர் அவர்கள், 'குறளோவியம்' தொடங்கியதும் முரசொலி'யில் தான்.

'கல்கி' இதழில் ராஜாஜி 'சக்ரவர்த்தி திருமகள்' தொடர் எழுதிய நேரத்தில், கலைஞர் அவர்களோ 'முரசொலியில்' 'மூக்காஜி' என்ற புனைப்பெயரில் 'சக்ரவர்த்தியின் திருமகள்' தொடரைப் பதிலடியாக எழுதியதுண்டு. அது பிறகு நூலாகவும் வெளிவந்தது.

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட வேண்டும் என்றும் 'முரசொலி'யில் எழுதிய பெருமை கலைஞருக்கு உண்டு (06.04.1956).

கிரேக்க புராணம் (இதிகாசங்கள் பற்றி), கலைக்கோட்டம் (உலக சிந்தனையாளர்கள்) என்ற பகுதிகளைப் பரிணமிக்கச் செய்த எழுத்தாளர் கலைஞரே!

கலைஞர் கடிதம் (30.07.1954) முதல் தொடர்ந்தது நீட்டோலையும் எழுதினார். 54 தொகுதிகள் வருமளவுக்கு 4,041 கடிதங்கள் எழுதிக் குவித்த சாதனையாளர் கலைஞர்!

'ஆரிய ஜனப்ரியன்', 'ஆரிய ஜன ரட்சணி, ஆரிய தர்மம் இவற்றை எல்லாம் எதிர்கொண்டு அணுகுண்டுகளாகப் பாய்ந்தன திராவிட இயக்க இதழ்கள்.

அந்தப் படை வரிசையில் கலைஞரின் 'முரசொலிக்கு' தனி முத்திரை உண்டு.

முரசொலி மட்டுமல்ல; 'மறவன் மடல்', 'முத்தாரம்' ஆகிய இதழ்களையும் கலைஞர் நடத்தினார். 'நம் நாடு' 'மாலைமணி' இதழ்களில் ஆசிரியராகவும் கலைஞர் இருந்தார்.

1976 ஜூன் மூன்றாம் நாள் கலைஞரின் பிறந்த நாளையொட்டிய நிகழ்ச்சியொன்றை நினைவுபடுத்தியாக வேண்டும். இதோ கலைஞரே எழுதுகிறார்: "பிறந்தநாள் செய்தி" என்ற நிலையில் முரசொலியில் ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் தணிக்கைக்கு அனுப்பப்பட்டது. "என் அன்னையைவிட அதிக அன்பை அண்ணா என்மீது பொழிந்தார்" என்று அந்தக் கட்டுரையில் இருந்த வாசகத்தை வெட்டிவிட வேண்டுமென தணிக்கை அதிகாரி உத்தரவு பிறப்பித்தார். அதிகாரியிடம் தொலைப்பேசியில் தொடர்புகொண்டு காரணம் கேட்டேன். அவர் காரணம் கூற மறுத்துவிட்டார். கடிதம், தணிக்கைக்கு அனுப்பப்பட்டது- ஜூன் முதல் நாள் இரவு அன்றிரவுதான் அதிகாரியிடம் பேசினேன். காட்டுத் தர்பார் நடப்பதை நிரூபிக்கிற வகையில் அவர் பதில் அளித்ததும் அதனை எதிர்த்தே தீருவது என்ற முடிவுக்கு வந்தேன்.

ஜூன் 2ஆம் தேதி காலையில் சென்னை அண்ணா சாலையிலிருந்து கிளம்பி, தணிக்கை அதிகாரி அலுவலகம் சென்று அங்கே உண்ணா நோன்பு மேற்கொள்ளப்படுமென்றும் - எழுத்து சுதந்திரம் பெற நடைபெறும் ஜனநாயகப் போர் இது என்றும் - என் கைப்படவே எழுதினேன். அப்படி எழுதப்பட்டதை ரகசியமாக 'பிளாக்' செய்து கொண்டுவரச் சொன்னேன்.

அதனை முரசொலியில் அச்சியேற்றினால்கூட மறுநாள் போராட்ட ரகசியம் வெளிப்பட்டுவிடக் கூடுமென்பதால்- இரவோடு இரவாக நானும் என்னுடைய மகன்கள் அழகிரி, தமிழரசன் ஆகியோரும் அந்த பிளாக்கை ஒவ்வொரு தாளாக ஒற்றி ஒற்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களாக ஆக்கினோம்,

ஜூன் 2ஆம் நாள்! அதற்கு மறுநாள்தான் எனது பிறந்த நாள்! காலை 10 மணி அளவில் என் வீட்டிலிருத்து காரில் புறப்பட்டேன். அப்போது கழகத்தில் உறுதி மாறாத பற்றுக்கொண்ட இளமுருகு பொற்செல்வி அவர்கள் வந்தார். அவர் செய்தி அறிந்து கொண்டு "உங்களைத் தனியாக அனுப்ப மாட்டேன்! எங்கு சென்றாலும் நானும் வருவேன்" என்றுரைத்து என்னுடன் காரில் ஏறிக்கொண்டார். எனது காரைத் தொடர்ந்து செல்வமும், அழகிரி, தமிழரசு ஆகியோரும் வேறொரு காரில் வந்தனர். எனது காரை அண்ணா சாலையின் பக்கம் போகச் சொன்னேன். ஆயிரம் விளக்குப் பகுதியைத் தாண்டியதும் காரிலிருந்து இறங்கிவிட்டோம். நானே என் கையில் அறப்போர் விளக்கத் துண்டுப் பிரசுரங்களை எடுத்துக்கொண்டு அதனை அண்ணா சாலையில் செல்வோர்

அவனைவரிடமும் விநியோகிக்கத் தொடங்கினேன். மக்கள் ஆவலுடன், வியப்புடன் என்னைப் பின்தொடர்ந்தனர். போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய்விட்டது. அப்படியே நடந்துகொண்டே, அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலையின் அடி பீடத்துக்கு வந்து சேர்ந்தேன். கழகக் காளை ஜெகதீசன் உட்பட நூற்றுக்கணக்கான தொண்டர்கள் எங்கிருந்தோ வந்து சேர்ந்துவிட்டனர்.

"சர்வாதிகாரம்" என்று முழங்கினேன்! இளமுருகு அவர்களும் மற்றவர்களும் "வீழ்க!" என்று விண்முட்ட முழங்கினார்கள்! "ஜனநாயகம்" என்று ஒலித்தேன்! "வாழ்க" என இடியொலி எழுப்பினார்கள்! ஜனநாயகக் காவலர் அண்ணாவின் சிலை முன்னால் ஜனநாயகம் காத்திடும் போராட்டம்! என் கையில் கழகக் கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் போலீஸ் பட்டாளம் வந்தது. அதிகாரிகள் என்னை அங்கிருந்து அகன்றிடுமாறு வேண்டினர்! பிறகு கட்டளையிட்டனர் "முடியாது! இங்கிருந்து ஊர்வலமாக தணிக்கை அதிகாரியின் அலுவலகம் சென்று உண்ணாநோன்பு மேற்கொள்ளப் போகிறேன்" என்று அறிவித்தேன். அதன் பிறகு நானும், இளமுருகு பொற்செல்வியும், கழகக் கண்மணிகள் பத்து பேரும் கைது செய்யப்பட்டு திருவல்லிக்கேணி காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டோம். சில நிமிடங்களில் செல்வம், அழகிரி, தமிழரசன் ஆகியோரையும் கைது செய்து கொண்டு வந்தனர். காவல் நிலையத்தைச் சுற்றி பெரும் கூட்டம் கூடிவிடவே அந்தக் கூட்டத்தை போலீசார் துரத்தும் பணியில் ஈடுபட்டனர்.

பெரிய போலீஸ் அதிகாரியொருவர் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் என்னை வந்து சந்தித்தார். நீங்கள் விடுதலை செய்யப்படுகிறீர்கள் என்றார். ஆம். என்னை மட்டும் விடுதலை செய்வதாகச் சொன்னார். வேண்டுமானால் செல்வம், அழகிரி, தமிழரசன் ஆகியோரையும் விடுவிக்கிறோம் என்றார். எங்களை விடுவித்துவிட்டு இளமுருகு பொற்செல்வி மற்றும் கழகக் கண்மணிகளை சிறையிலே பூட்டுவார்களாம். அதற்கு நான் ஒப்புக்கொள்ள வேண்டுமாம். "முடியாது! என்னையும் என் மருமகன் செல்வம், மகன்களை மட்டும் விடுவித்தால் நாங்கள் அண்ணாசாலையில் தொடர்ந்து போராட்டம் நடத்துவோம்" என்று உறுதியுடன் தெரிவித்தேன். அந்தப் பெரிய அதிகாரி யாருடனோ தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். பிறகு அவசரமாக புறப்பட்டுப் போனார். கவர்னரைச் சந்திக்கப் போனார். போயிருக்கிறார் என்று காவல் நிலையத்திலே இருந்த ஒரு காவலர் என்னிடம் சொன்னார்.

மறுநாள் ஜூன் மூன்றாம் நாள்! எனது பிறந்த நாள் - சிறையிலேயே கொண்டாடலாம் என்று மகிழ்ச்சியோடு இருந்தேன் என்று குறிப்பிடுகிறார்.

ஓர் ஏடு நடத்துவதில் எவ்வளவு சிரமங்கள் என்பதை கலைஞரின் முழு வாழ்விலும் காணலாம்.

ஒரு பேட்டியில், "குடும்பப் பத்திரிகை என்று 'முரசொலி'யைச் சொல்லலாமா?" என்ற கேள்விக்கு முரசொலி செல்வம் அவர்கள் அளித்த பதிலானது 'முரசொலி'



கடந்து வந்த பாதையோடு, ஒரு பத்திரிகை தொடர்ந்து வெளிவர இந்தச் சமூகத்தில் எப்படிக் குடும்பங்களும் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. "குடும்பமே உழைத்த பத்திரிகை என்று இதைச் சொல்லலாம். தி.மு.க. தொடங்கப்படுவதற்கு முன்பு, கலைஞர் ஓர் அரசியல் தலைவராக உருவெடுப்பதற்கு முன்பு, அவருடைய 19ஆம் வயதில் தொடங்கிய பத்திரிகை இது. பெரிய நிறுவனம் எல்லாம் அல்ல - ஒரு சாமானிய இளைஞனின் கனவு. இப்படிப்பட்ட சூழலில் அவருக்கு யார் உதவியாக இருக்க முடியும்? குடும்பமே ஓடினோம் என்றால், ஒரு பெரிய கட்டமைப்பில் நடந்த பத்திரிகை அல்ல இது என்பதால் எல்லோருடைய உதவியும் தேவைப்பட்டது. அதனால் ஓடினோம், வீட்டில் யாராவது சும்மா உட்கார்ந்திருந்தாலே, 'அங்கே போய்க் கொஞ்சம் வேலை பார்க்கலாமே!' என்பார்கள். இப்படித்தான் மாறன், அமிர்தம், நான், அழகிரி, ஸ்டாலின், தமிழரசு என்று எல்லோருமே இதற்காக ஓடினோம். சந்தாதாரர் முகவரிப் பட்டியலைச் சரிபார்ப்பது, பார்சல் போடுவது இப்படிச் சின்னச் சின்ன வேலைகளாகத்தான் இருக்கும். எல்லோரும் பார்ப்போம்!" என்று சொல்கிறார் செல்வம்.

நெருக்கடி நிலைக் காலகட்டத்தில் தன் வாழ்வில் மிகப்பெரும் நெருக்கடிகளை கலைஞரும் 'முரசொலி'யும் எதிர்கொண்டனர். தணிக்கை என்ற பெயரில் உள்ளடக்கத்தைக் கண்டபடி சிதைத்திருக்கின்றனர் அதிகாரிகள். கலைஞர் தன்னுடைய இலக்கிய அறிவை, பூடகமொழி ஒன்றை உருவாக்க இந்தக் காலகட்டத்தில் பயன்படுத்திக்கொண்டார்.

அரசால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களின் பட்டியலை நேரடியாகப் பத்திரிகையில் வெளியிட முடியாத சூழல் ஏற்பட்டபோது, 'அண்ணா சதுக்கத்துக்கு மலர் வளையம் வைக்க வர இயலாதவர்களின் பட்டியல்' என்று அவர் வெளியிட்ட பட்டியல் மாவட்டவாரியாக தி.மு.க.வினர் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தமிழ்நாட்டுக்குத் தெரிவித்தது.

தன்னுடைய பெயரில் எழுதினால், தடை விதிக்கிறார்கள் என்று 'கரிகாலன்' என்பது உள்பட பல்வேறு புனைப்பெயர்களில் எழுதினார் கலைஞர். அப்படியும் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது, 'வெண்டைக்காய் உடம்புக்கு நல்லது', 'விளக்கெண்ணெய் கூட்டைத் தணிக்கும்' என்று தலைப்புச் செய்தி போட்டு ஆட்சியாளர்களிடம் தன் காட்டத்தை வெளிப்படுத்தினார். அதேபோல, படைப்புகளாக

வெளியிலிருந்து கிடைக்கும் பங்களிப்புகள் தொடர்வதிலும் நெருக்கடிகள் இருந்திருக்கின்றன. சில காலகட்டங்களில் 12 பக்கங்களில் 8 பக்கங்களுக்குப் பங்களிப்பவராக அவரே இருந்திருக்கிறார். நிதியும் ஒரு சவாலாக இருந்திருக்கிறது. அதனாலேயே சின்ன அலுவலகம், சின்னக் கட்டமைப்பு என்கிற மாதிரியிலேயே இயங்கினார் கலைஞர். நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் விதமாகத்தான் 'முரசொலி'யை ஓர் அறக்கட்டளைக்குக் கீழே கொண்டுவந்தார்.

இடர்களைக்கடந்து திரைப்பட உலகிலும், நாடகத்துறையிலும் கம்பீரமாகக் கால்பதித்தவர் கலைஞர்.

ராஜகுமாரி திரைப்படத்தில்தான் அவர் எழுதிய முதல் திரைக்கதை, வசனம் - எம்.ஜி.ஆர். நடித்த முதல் திரைப்படமும் அதுவே!

அபிமன்யு, மருதநாட்டு இளவரசி, மந்திரிகுமாரி என்று வரிசையாக நீளும்.


கலைஞர் கைவண்ணம் காட்டிய திரைப்படமான 'பராசக்தி' திரைப்பட உலகில் ஒரு திருப்புமுனை!

அண்ணா மறைந்த நிலையில் கலைஞர் வடித்த 'இரங்கற்பா' அப்பப்பா.! இன்று படித்தாலும் கண்ணீர் வரும். தந்தை பெரியார் மறைந்தபோது, "பெரியார் தனது சுற்றுப் பயணத்தை நிறுத்திக்கொண்டார்" என்ற கலைஞரின் எழுத்துக்களைப் படிக்கும்போது, காரல் மார்க்ஸ் இறந்தபோது 'மார்க்ஸின் மூளை சிந்திப்பதை நிறுத்திக் கொண்டது' என்று ஏங்கெல்ஸ் எழுதியதுதான் நினைவிற்கு வருகிறது.

நாவையும், பேனா முனையையும் மக்கள் சிந்தனைக்கான எருவாகப் படைத்துச் சென்றதால்தான் - சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரையில் காலமெல்லாம் பேசும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை நிறுவினார். 23 இலட்சம் சதுர அடியில் 3.3 இலட்சம் நூல்களை அலங்கரிக்கும் இந்நூலகம் ரூ.114 கோடியில் நிறுவப்பட்டுள்ளது. (15.07.2023)

ஆம் கலைஞர் என்றும் வாழ்வார்! இதழாளராக, எழுத்தாளராக, ஏடு நடத்துபவராக, ஆற்றல்மிகு கட்சி செயல்பாட்டாளராக வியக்க வைக்கும் சாதனைகளின் ஆட்சித் தலைவராக, பகுத்தறிவாளராக வரலாற்றில் என்றும் நிலைத்து வீசுபவருக்குப் பெயர்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்!

வாழ்க பெரியார்!
வாழ்க கலைஞர்!
வெல்க திராவிடம்!!



திரையாண்ட கலைஞர்



கவிஞர்
வைரமுத்து

1830 இல் 'எட்வர்டு மைபிரிட்ஸ்' என்பார் அறிவியலை வளர்த்தெடுத்து அசைவுகளைப் படமாக்கினார். அதன் தொடர்ச்சியாக 'ஈஸ்ட்மென்' என்பார் படச்சுருளை உருவாக்கினார். 'தாமஸ் ஆல்வா எடிசன்' படக்கருவியை உண்டாக்கினார். இப்படி மூவர் கூடிப்பெற்ற குழந்தையாய் சினிமா பிறந்தபோது உலகம் அறிந்திருக்காது அத்தனை கலைகளையும் உள்ளிழுக்கப்போகும் ஆக்டோபஸ் கலை அதுவென்று.

1897இல் சென்னை விக்டோரியா ஹாலில் 'எட்வர்ட்ஸ்' என்ற வெள்ளைக்காரர் தமிழர்கள் அதுவரை காணாத ஒரு கருவியினால் 'அரைவல் ஆஃப் தி டிரெயின்' (Arrival of the Train) என்ற படத்தை அறிமுகப்படுத்தியபோது, திகைப்பில் ஆழ்ந்த தமிழர்கள் அறிந்திருக்கமாட்டார்கள் அந்தக் கருவிக்குள் கருவாகித்தான் ஐந்து முதலமைச்சர்கள் தமிழகத்தை ஆளப்போகிறார்கள் என்று.

மௌனயுகம் முடிந்து பேசும் படம் பிறந்தபோது தமிழ் சினிமா பாடும் படமாகவே இருந்தது. தமிழின் முதல் பேசும் படமான 'காளிதாஸ்' 1931இல் வெளிவந்தது. அதன் பாடல்களின் எண்ணிக்கை 50. 1934இல் வெளிவந்த 'பவளக்கொடி'யில் 50 பாடல்கள். 'சீதா கல்யாணத்தில்' 22. 1936இல் வெளிவந்த 'நவீன சாரங்கதாரா'வில் 41. 1944இல் வெளிவந்த ஹரிதாஸில் 20 பாடல்கள்.

நடிகர்களே பாடகர்களாகவும், பாடகர்களே நடிகர்களாகவும் இயங்கி வந்த மேடை நாடகங்கள் திரைப்படத் தேரேறியபோதும் பாடல்கள் என்ற பண்ட மூட்டைகளைக் விட்டெறியவோ குறைத்துக்கொள்ளவோ முடியவில்லை.

பாடல்கள் பெரும்பாலும் சமஸ்கிருதம் கொண்டே சமைக்கப்பட்டன. வெண்பொங்கலில் காணக்கிடைக்கும் மிளகுபோல சமஸ்கிருதத்திற்கு மத்தியில் தமிழ்ச் சொற்களும் ஆங்காங்கே தட்டுப்பட்டன. 'வதனமே சந்த்ர பிம்பமோ – வசந்தருது மனமோஹனமே – என் ஜீவப்ரியே ஷியாமளே – சாரசம் வசீகர கண்கள்' என்றெல்லாம் இசைத்தன.

வசனங்களிலோ பிராமண மொழியும் மணிப்பிரவாளமும் பின்னிப் பின்னிக் கொஞ்சிக் குலாவின. 1940இல் வெளிவந்தது எல்லிஸ் ஆர்.டங்கன் இயக்கிய சகுந்தலை. அதில் அரசன் துஷ்யந்தனும் தோழனும் பேசிக்கொள்கிறார்கள்:

துஷ்யந்தன்: ஒருபக்கம் ரிஷிகள் ஆக்ஞை; இன்னொரு பக்கம் தாயாரின் ஆக்ஞை. இரண்டும் முக்கியமான விஷயம். நேக்கு என்ன பண்றதுன்னு தெரியல...

தோழன் : நேக்கு ஒண்ணு தோன்றது.ஆஸ்ரமத்துக்கும் அரண்மனைக்கும் நடுவுல உக்காந்திருங்கோ...

இப்படி சத்திரிய மொழியும் பிராமண மொழியாகவே பேசப்பட்டது.

உள்ளடக்கமெல்லாம் இதிகாசம் - புராணம். பேசும் மொழியெல்லாம் பெரும்பாலும் மணிப்பிரவாளம். இந்த நடையை உடைத்து ஒரு மாற்றுமொழிக்குத் தோற்றுவாய் செய்தவர் 'இளங்கோவன்' என்ற செங்கல்பட்டு தணிகாசலம். 1937இல் வெளிவந்த 'அம்பிகாபதி'யும், 1942இல் வெளிவந்த 'கண்ணகி'யும் திரைத்தமிழை இளங்கோவன் நடைமாற்றம் செய்ததற்குச் சாகாத சான்றுகளாகும். ஆனால், இளங்கோவனைவிட, டி.வி.சாரியைவிட, 'கவியின் கனவு' எழுதிய எஸ்.டி.சுந்தரத்தைவிட, 1945இல் வசனம் எழுதவந்த பாவேந்தர் பாரதிதாசனைவிட, அமரகவிக்கு வசனம் எழுதிய சுரதாவைவிட, வால்மீகிக்கு வசனம் எழுதிய ஏ.எஸ்.ஏ.சாமியைவிட அறிஞர் அண்ணாவும் கலைஞரும் திரைத்தமிழில் எட்டாத உயரத்தை எட்டினார்களே! ஏது காரணம்?

நடைமாற்றம் செய்தவர் மட்டும்தான் இளங்கோவன். சமூகத்தையே மடைமாற்றம் செய்தவர்கள் அண்ணாவும் கலைஞரும். திரைத்துறையில் பழைய உள்ளடக்கங்களோடு பயணப்படுவது என்பது பிணத்திற்கு ரத்ததானம் செய்வது என்று புரிந்துகொண்டவர்கள் நிகழ்காலத்தின்மீது நெருப்பிட்டார்கள்.

பகுத்தறிவு மாட்சிக்கு, மூடநம்பிக்கை வீழ்ச்சிக்கு, இனமொழி மீட்சிக்கு, சுயமரியாதையின் ஆட்சிக்கு அவர்கள் திரைக்கலையைப் பயன்படுத்தியபோது ஒரு கற்பூர மலையில் தீப்பந்தம் எறிந்தது போல் நாடே பற்றி எரிந்தது.



அண்ணா – கலைஞர் என்ற இருபெரும் ஆளுமைகளுள் அண்ணாவிடமிருந்து கலைஞரைப் பிரித்தறிய முற்படுகிறேன். ஒரு திடுக்கிடும் உண்மையோடு என் கண்டறிதலை முன்வைக்கிறேன்.

கலைஞர் அண்ணாவைவிடப் பதினைந்து வயது இளையவர் எனினும், திரைத்துறையில் அண்ணாவைவிடவும் கலைஞர் இரண்டு வயது மூத்தவர். அறிஞர் அண்ணாவின் முதல் படம் 'நல்லதம்பி' வெளிவந்தது 1949 பிப்ரவரி 4. முதற்படம் வெளிவந்த மூன்று வாரங்களில் பிப்ரவரி 25இல் 'வேலைக்காரி' வெளியாகிறது. ஆனால், எம்.ஜி.இராமச்சந்திரன் கதாநாயகன் என்றும், உதவி ஆசிரியர் மு.கருணாநிதி என்றும் எழுத்துக்கள் சுமந்த 'ராஜகுமாரி' வெளிவந்த ஆண்டு 1947. கலைஞரின் பெயர் இடம்பெறாமலே அபிமன்யு வெளிவந்ததும், அதில் இடம்பெற்ற "உடைந்த வாளேனும் ஒரு வாள் கொடுங்கள்" என்ற நட்சத்திர வாக்கியம் நாடெங்கும் பேசப்பட்டதும் யார் இந்தக் கருணாநிதி என்ற கேள்வி தமிழ்நாட்டில் தவழத் தொடங்கியதும் 1947 – 1948இல். அதாவது அண்ணாவின் முதல் படம் வெளிவருவதற்குப் பலமாதங்கள் முன்பே.

திராவிடர் கழகம் உருவான 1944க்கும் திராவிட முன்னேற்றக் கழகம் உருவான 1949க்கும் இடைப்பட்ட ஐந்து ஆண்டுகளில் திரைத்துறையில் தன் அழுத்தமான சுவடுகளைப் பதிக்கத் துவங்கிவிடுகிறார் கலைஞர். முதற்படத்திற்கு வசனம் தீட்டும்பொழுது அவரது வயது 23. பயமறியாத வயது; தமிழின் நயமறிந்த மனது. திராவிடர் கழகம் அவர் கைகளில் ஒரு தீப்பிடித்த பேனாவைத் திணிக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏறுமுகம் அந்தத் தீயின்மீது நெய்மழை பெய்கிறது.

எரிகிறது; பற்றி எரிகிறது. மடமை எரிகிறது; மூடநம்பிக்கை எரிகிறது; வருணாசிரமம் எரிகிறது; சூழ்ச்சி எரிகிறது; ஆட்சி எரிகிறது; யுகக் குப்பை எரிகிறது; ஒடுக்கப்பட்டவர் மீது ஆண்டாண்டு காலம் செலுத்தப்பட்ட ஆதிக்கம் எரிகிறது; இடதுசாரிச் சிந்தனைகளால் அநியாயத்தின் அடிப்படை எரிகிறது. வற்றிக் கிடந்த வாழைத்தண்டு மனங்களிலும் இலட்சியம் எரிகிறது. எரியாதவை எழுதிய காகிதமும் திரையிடப்பட்ட திரையும் மட்டும்தான்.

அவர் எழுதிய சரித்திரப் படங்களிலும் சமூகமே பேசப்பட்டது. 1950இல் அவர் வசனம் எழுதிய 'மருதநாட்டு இளவரசி'யில் பலிபீடத்தின் முன்னே கடைசி வசனம் பேசுகிறார் காண்டீபனாகிய எம்.ஜி.இராமச்சந்திரன்.

"கடைசி நேரத்திலாவது என் இதயத்துடிப்பு ஆவேசமாகத் துடித்து ஓயட்டும்! என் கண்களில் ஒருமுறை கனல்வீசி அணைந்து போகட்டும்! என் ரத்தம் சூடேறிக் கொதித்தும் பிறகு ஜில்லிட்டும் போகட்டும்! நீதியின் நிலைக்களமாய், நேர்மையின் உலைக்களமாய் வாழ்ந்த வண்டமிழ் வளநாடே! நீ, சூதர்களின் உறைவிடமாய், சூழ்ச்சியின் இருப்பிடமாய் ஆனது ஏன்? இந்த மண்ணிலேதான் பிறந்தேன்! இந்த மண்ணிலேதான் மழலைமொழி பேசித் தவழ்ந்து விளையாடினேன்! இந்த மண்ணிலேதான் சவமாகச் சாயப்போகிறேன். வந்தாரை வாழ வைக்கும் இந்த மண்ணில் சொந்த நாட்டுக்காரன் அநியாயமாகச் சாவதா? குற்றமற்றவன் சாவதா?"



இறந்தகாலத்தில் பேசப்பட்ட இந்த வசனம் நிகழ்காலத்தின் நெற்றி சுட்டது.

"சிங்கத் திருநாடே நீ சிலந்திக்கூடாக மாறியது எப்போது? வந்தாரை வாழ வைக்கும் வளமிகு தமிழகமே நீ சொந்த நாட்டானையே சுரண்டுவது எத்தனை நாட்களாக? வீரப் பெண்களின் ஏடுகளை எழுதி எழுதி ஏற்றம் பெற்ற என்னருமைப் பொன்னாடே! வானத்தை முட்டும் மாளிகைகள் மானத்தை இழந்த மனிதர்கள், உயர்ந்த கோபுரங்கள் தாழ்ந்த உள்ளங்கள். ஏ தமிழ்நாடே! இதுதானா உன் பெருமை? தகுதி? யோக்கியதை?" என்று பராசக்தியில் அறிமுகமான கணேசனின் காந்தக் குரலில் அக்கால அரசியல் நிலைப்பாட்டைத் தோலுரித்துக் காட்டப்பட்டது.

முன்னோடிகளின் உரையாடலுக்கும் கலைஞரின் உரையாடலுக்கும் என்ன வேறுபாடு என்று எண்ணிக்கிடந்தேன். ஏனையோர் எழுத்துக்களெல்லாம் பாத்திரங்களோடு உரையாடுகின்றன. கலைஞரின் எழுத்துக்களோ பாத்திரங்களைத் தாண்டி சமூகத்தோடு உரையாடுகின்றன. ஏனையோர் உரையாடலோ திரையோடு தேய்ந்தழிகின்றது. கலைஞரின் உரையாடலோ திரையைக் கிழித்தெறிந்து தெருவுக்கு வந்து விழுகிறது. பாடல்களையே இசைத்தட்டுக்களாய்க் கேட்ட தமிழர்கள், வசனத்தை இசைத் தட்டுக்களில் கேட்கும் புதிய கலாசாரத்தைக் கலைஞர் தொடங்கி வைக்கிறார்.

அவர் மேடையின் உரையாடலும் திரையின் கலையாடலும் ஒன்றுக்கொன்று உறவு கொண்டிருந்ததால் கலைவேறு கட்சிவேறு என்றாகாதபடி இரண்டையும் ஒன்றென்று கொண்டான் கழகத்தின் இளந்தொண்டன்.

கலைஞர் எழுத்துக்கான சந்தை மதிப்பு மழைக்கால அணைமட்டம் போல் விறுவிறுவென்று ஏறியது. 'மருதநாட்டு இளவரசி' வசனப் புத்தகத்தின் விலை 3 அணா. 'மந்திரி குமாரி' 4 அணா. 'பராசக்தி' வசனப் புத்தகத்தின் விலை 1 ரூபாய் என்பதேஅவரது சந்தை மதிப்புக்கான சராசரி சாட்சியாகும்.

அதுவரை நம்பிக்கிடந்த பொய்ப் புனிதங்களையும் போலி நம்பிக்கைகளையும் திராவிட இயக்கத்தின் கலைத்தமிழ் குத்திக் கிழித்துக் கூறுபோட்ட பொழுது கபாலத்தில் இடி



விழுந்ததுபோல் கலங்கியது பழமை லோகம்.

"அந்த ஆசிரமத்திலே காதினிலே குண்டலம் ஆட, கனத்த சாரீரம் பாட, காய்ச்சிய பால் தொண்டையிலே ஓட, கண்கள் கதியற்றுக் கன்னியரை நாட, கடவுள் அருளுக்கு வழிகாட்டப் பட்டதாம்" என்று 'வேலைக்காரி'யில் போலிகளை அண்ணா அம்பலப்படுத்தியது அழகு தமிழில்.

கலைஞர் எழுதியதோ ஆவேசத் தமிழில். மந்திரித்து மண்டை வலி தீராதென்று நரம்பிலே ஊசி செலுத்தும் நவீன மருத்துவனைப்போல வெட்டொன்று துண்டு ரெண்டென்று பட்டுத் தெறித்தது கலைஞர் வசனம்.

"கோவிலிலே குழப்பம் விளைவித்தேன் கோவில் கூடாது என்பதற்காக அல்ல; கோவில் கொடியவரின் கூடாரமாய் இருக்கக்கூடாது என்பதற்காக', "பூசாரியைத் தாக்கினேன்; அவன் பக்தன் என்பதற்காக அல்ல. பக்தி பகல் வேஷமாகிவிட்டதைக் கண்டிப்பதற்காக" என்று தீப்பிடித்த வார்த்தைகளும்... கொப்பளிக்கும் சொல்லாடல்களும் நீதிமொழிகள் பேசப்பட்ட தமிழ்நாட்டில் வீதி மொழிகளாய்ப் பேசப்பட்டன.

படத்துக்கு எழுதிய வசனம் பழமொழியாயிற்று. பராசக்தி வசனத்திற்கு உங்களுக்கு வந்த உயர்ந்தபட்சப் பாராட்டு எதுவென்று கேட்டேன் கலைஞரிடம். "பக்கத்தில் உட்கார்ந்து படம் பார்த்த கண்ணதாசன் சொன்னது" என்றார். "என்னது?" என்றேன். "போய்யா! ஒம்மப் பாத்தா ரொம்பப் பொறாமையா இருக்கு".

அங்கே பொறாமைக்குப் பொருள் பொறாமையன்று.

கண்காணா இடத்தைத் தூய்மையாய் வைத்திருப்பதே சுத்தம். சாட்சி இல்லா இடத்தில் நேர்மையாய் இருப்பதே ஒழுக்கம். அதுபோல முரட்டுத்தனமான பாராட்டுக்குப் பெயர்தான் பொறாமை. கண்ணதாசன் என்ற சக கலைஞன் அதை வெளிப்படையாய்ச் சொன்னதும் கலைஞர் அந்த வெள்ளந்தியை ரசித்ததும் கலை ஆரோக்கியம் என்று கருதப்பட வேண்டும்.

1962இல் வெளிவந்த 'ஆலயமணி'யில் கவியரசு கண்ணதாசன் ஓர் அழகிய பாடல் வடித்திருப்பார்.

"தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே
அமைதி உன் நெஞ்சில் நிலவட்டுமே – அந்தத்
தூக்கமும் அமைதியும் நானானால் – உன்னைத்
தொடர்ந்திருப்பேன் என்றும் துணையிருப்பேன்"

ஆனால், இந்தப் பல்லவியின் உரிமையாளர் அவரல்லர் – இளங்கோவனின் அம்பிகாபதி வசனத்திலிருந்து எடுத்தாளப்பட்ட வரிகள் இவை.

இளங்கோவன் பெருங்கல்வி கற்றவர். ஆங்கிலம் அறிந்தவர். எம்.கே.தியாகராஜ பாகவதரும் – எம்.ஆர்.சந்தான லட்சுமியும் நடித்த அம்பிகாபதி 1937இல் வெளிவந்தது.

பொன்மாடத்தில் நிற்கிறாள் அமராவதி; பூங்காவில் அம்பிகாபதி. அமராவதி விடை பெறுகிறாள். அங்கே அம்பிகாபதியின் தனிமொழி நிகழ்கிறது:

"உன் கண்களைத் தூக்கம் தழுவட்டும். இருதயத்தில் சாந்தி இளைப்பாறட்டும். அந்தத் தூக்கமும் சாந்தியும் நானாக இருந்தால்..."

கவிதை கருத்தரித்த அந்தக் காதல் மொழியைத்தான் கண்ணதாசன் கையாண்டார். ஆனால் அது இளங்கோவனுக்கும் சொந்தமில்லை என்று அந்தப் படத்தை இயக்கிய எல்லீஸ் ஆர்.டங்கனுக்கு மட்டும்தான் தெரியும். 'ரோமியோ அண்ட் ஜூலியட்'டில் ஷேக்ஸ்பியரின் கவிதைத் துண்டு அது.

"Sleep dwell upon thine eyes,
Peace in thy breast.
Would I were sleep and peace,
so sweet to rest"

– என்ற ரோமியோ தான் அம்பிகாபதியில் தமிழ் பேசியிருக்கிறான்.

அண்ணா பேரறிஞர். ஆங்கிலத்திலும் கரைகண்டவர். ஆங்கிலத் திரைப்படங்களில் தீராக் காதலுடையவர். அவரது 'ஓர் இரவு'க்கு 'It Happand One Night' என்ற ஆங்கிலப் படம் உந்து சக்தியாயிருந்திருக்கலாம். 'வேலைக்காரி'க்கு 'The Count of Monte Cristo' என்ற ஆங்கிலப்படம் சாயல் தந்திருக்கலாம்.

ஆனால், முறைசார்ந்த பெருங்கல்வியோ ஆங்கிலப் பேரறிவோ இல்லாத கலைஞர் திரைத்தமிழை உலக மொழியின் உயரத்திற்கு அழைத்துச் சென்றது எப்படி என்பதே என் திகைப்புக்கு இன்னும் தீனி போடுகிறது.

1950இல் தமது 26ஆம் வயதில் 'மந்திரி குமாரியில்' அவர் எழுதிய ஒரு காதல் உரையாடலை மேற்கோள் காட்டுகிறேன்.

ஜீவரேகா : நேற்றிரவு நீங்கள் வராததால் என்னால் பௌர்ணமியின் அழகையே ரசிக்க முடியவில்லை...

வீரமோகன் : எதற்கெடுத்தாலும் நிலவுதான். ஏன்? அமாவாசை அழகாயில்லை?

ஜீவரேகா : நீங்கள் இருட்டைக்கூட ரசிப்பீர்களா?

(இங்கே விணைப்படுகிறது கலைஞரின் கவிதைக் குறும்பு)

வீரமோகன் : ஆம். சித்திரத்தை அழகுபடுத்தும் நிழல்கோடு போல, உன் கண்ணின் கடைக்கூட்டில், கனி இதழின் ஓரத்தில், கன்னத்துச் சரிவுகளில் ஒளிந்துகொண்டிருக்கும் இருளை நான் ரசிக்கிறேன் ஜீவா...

கவிதைகளைப் புறமுதுகிடச் செய்யும் வசனமிது.

கலைஞரின் திட்டமிடாத ஒரு தீர்க்க சிந்தனையை நான் பெரிதும் போற்றுகிறேன். 1950களில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 3.1 கோடிதான். அதில் கற்றவர்களின் விகிதாசாரம் 20.8 விழுக்காடுதான்.

பாரதி மொழியில் பாமரராய் விலங்குகளாய்க் கிடந்தவர்கள் - கலைஞர் மொழியில் பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் இருந்த காலம் அது. இந்தக் கூட்டத்திற்கு இலக்கணத்தின் அருந்தமிழும் இலக்கியத்தின் பெரும்பொருளும் புரியுமா என்று கருதாமல், புரிவார்கள் அல்லது புரிந்து கொள்ளட்டும் என்று கலைஞர் எடுத்த இலக்கிய முடிவு அற்புதமானது.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெரு நோக்கில் தாம் பெற்ற தமிழறிவை சமூகத்தோடு பகிர்ந்துகொண்டது அவரது புலமையின் பொதுவுடைமையாகும்.

"மிருக ஜாதியில் புலி மானைக் கொல்லுகிறது. மனித ஜாதியில் மான் புலியைக் கொல்லுகிறது" இது மருதநாட்டு இளவரசி

"வேலின் கூர்மையைச் சோதித்த விரல்கள் வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக்கொண்டிருக்கின்றன!" – இது மனோகரா

"மனச்சாட்சி உறங்கும்போது மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது" – இது பூம்புகார்

"அவள் அழகை வர்ணிக்க ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேசன்கூட கம்பனிடம் ஒன்றிரண்டு கடன் வாங்க வேண்டும்" – இது புதுமைப்பித்தன்

"முஸ்லிம் அக்பர் பாதுஷா ஒரு ராஜபுத்திர ஜோதிபாயை மணந்து கொள்ளலாமாம், அந்த ஜோதிபாயின் மகன் ஒரு நடன சுந்தரியைக் காதலிக்கக்கூடாதாம்" – இது இல்லற ஜோதியில் அனார்கலி

"கசாப்புக் கடைக்குப் பெயர் கருணை மகால் – இதற்குப்பெயர் அகதிமுகாம்" – இது பராசக்தி

இப்படிக் கொட்டகைக்குள் கலைஞர் கொட்டிய கோமேதகங்கள் பலப்பல.

என் பார்வையில் திரைத்துறையில் கலைஞரின் தீராத சாதனை இதுதான். தமிழர் இருந்த பள்ளத்துக்குத் தமிழைத் தாழ்த்தாமல், தமிழ் இருந்த உயரத்திற்குத் தமிழரை உயர்த்தியதுதான்.

ஒரு குறிப்பிட்ட கால எல்லைவரை கலைத்துறை என்பது கழகத்தை வளர்க்கும் விஞ்ஞான மேடையாகப் பயன்படுத்தப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் தீவிரமாக இருந்த பொழுது கவிஞர் கண்ணதாசன் தான் எழுதிய ஒரு பாடலில் கழகத்தின் முன்னணி ஏடுகளைப் பட்டியலிட்டார். திராவிட இயக்கத்திற்கென்று 375 ஏடுகள் தோன்றி வளர்ந்ததாக இதழியல் குறிப்பு பேசுகிறது.

அண்ணாவின் திராவிடநாடு, நாவலர் நெடுஞ்செழியனின் மன்றம், கலைஞரின் முரசொலி, பி.எஸ்.இளங்கோவின் நம்நாடு, கண்ணதாசனின் தென்றல் போன்றவை திராவிட இயக்கங்களின் இலட்சியம் பரப்பின. இந்த ஏடுகளையெல்லாம் தன் பாடலில் ஒரு சரணத்தில் நுழைத்தார் கண்ணதாசன்.

"மன்றம் மலரும் முரசொலி கேட்கும்
வளர்ந்திடும் நம்நாடு – இளம்
தென்றல் தவழும் தீந்தமிழ் கேட்கும்
திராவிடத் திருநாடு" - இது சிவகங்கைச் சீமை.

ஆனால் சேரன் செங்குட்டுவன் ஓரங்க நாடக வசனத்தில் கலைஞர் செய்த தொண்டு இயக்கத் தலைவர்களுக்கே கிரீடம் சூட்டியது.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், இளம் பெரியார் ஆசைத்தம்பி, நம்நாடு ஆசிரியர் பி.எஸ்.இளங்கோ, கவிஞர் கண்ணதாசன், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரை முதன்முதலில் அறிஞர் அண்ணா எழுதுவதற்குத் தன் தாளைத் தந்தவர் என்று கருதப்படுகிற அரங்கண்ணல் இத்தனை தலைவர்களையும் ஒரே பத்தி வசனத்தில் உள்ளடக்கிய சாகசத்தைக் கலைஞர் தமிழ் நிகழ்த்தியது.

தமிழர்களின் வீரத்தைக் கனகவிசயர் பழித்தனர் என்பதை அறிந்த சேரன் செங்குட்டுவன் களங்காணுமுன்னே வஞ்சினம் உரைக்கிறான். அதில் சாமர்த்தியமாகத் தலைவர்களின் தலைகளை நுழைக்கிறார் கலைஞர்:

"சிங்கத் திருவிடமே உன்னை இகழ்ந்தார்கள், ஈடற்ற புலவனே இளங்கோ! ஆசைத்தம்பி! உன்னை இகழ்ந்தார்கள், நீதிக்கு உயிர்தந்த பாண்டியனே ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனே உன்னை இகழ்ந்தார்கள், அரங்கின் அண்ணலே! உன்னை இகழ்ந்தார்கள், செந்தமிழ் வளங்குறையாச் சிங்க







ஏறுகளே! அறிஞரே! கவிஞரே! கலைவாணரே! உம்மையெல்லாம் இகழ்ந்தார்கள். புறப்படுங்கள்! களத்திலே உங்கள் தலைகள் பறிபோகலாம். ஆனால் கனல்கக்கும் கண்களோடு அவை கொய்யப்படட்டும்"

2ஆம் நூற்றாண்டுப் பாத்திரங்கள் மூலம் 20ஆம் நூற்றாண்டின் இயக்கத் தலைவர்களுக்குக் கரவொலி செய்தார்கள் அரங்கிலிருந்த ஆயிரமாயிரம் தமிழர்கள்.

கலைஞரின் கலையும் – அரசியலும் இருப்புப்பாதையின் இணைகோடுகளாய் இயங்கின. படங்களில் நீதிமன்றக் காட்சிகளை நிறையப் புகுத்தினார். அவை வெறும் நீதிமன்றங்கள் அல்ல. தயாரிப்பாளர் செலவில் கலைஞர் தனக்கு அமைத்துக்கொண்ட சொற்பொழிவு மேடைகள். அந்தப் பாத்திரங்களின் பின்புலத்தில், தோள்களில் துண்டை உரசிப் பேசும் கலைஞரையே தமிழ்ச் சமூகம் கண்டு மகிழ்ந்தது.

சுதந்திர இந்தியாவில் ஓர் ஊராட்சி ஒன்றியமாய் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு நிதியிலும் நீதியிலும் புறக்கணிக்கப்பட்டு வந்ததால் 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது' என்ற முழக்கத்தை அண்ணா முன்வைத்தார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு 15 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படுவதாய்ப் பேச்சு. ஆனால் சற்றொப்ப 2 இலட்சம் பேர்களுக்கு மட்டுமே வாய்ப்புக் கிட்டுமாறு வடிவமைக்கப்பட்டது. காரணம் விதி அல்ல; நிதி. அன்று தமிழ்நாடு கேட்டது 394 கோடி ரூபாய். கிட்டியதோ 200 கோடி ரூபாய். அதில் தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்டதோ வெறும் 42 கோடி ரூபாய். தெற்கு தேயுமா தேயாதா?



பராசக்தியில் தமிழ்நாட்டு எல்லைக்குள் குணசேகரன் கால் வைத்தவுடன் "ஐயா பிச்சை போடுங்கய்யா" என்பான் ஒரு பிச்சைக்காரன். "சரிதான் போ! தமிழ்நாட்டின் முதல் குரலே ரொம்ப நல்லாயிருக்கே" என்று வேதனையோடு குணசேகரன் அவனுக்குப் பிச்சையிடுவான்.

அந்த பேதங்கள் நீங்கள் ஆளும் உரிமையை நாமே பெறவேண்டும் என்றுதான் திராவிட நாடு என்ற கருத்துருவம் உயர்த்திப் பிடிக்கப்பட்டது. இதையெல்லாம் உள்வாங்கிக் கொண்டுதான் காஞ்சித் தலைவனில் கலைஞர் பாட்டெழுதுகிறார்:

"மகிமை கொண்ட மண்ணின் மீது
எதிரிகளின் கால்கள்
மலர் பறிப்பதில்லையடா
வீரர்களின் கைகள்"

பிச்சைக்காரர்களுக்குப் பரிந்தெழுதிய அதே பேனாவில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்துக்குக் கையொப்பமிட்ட பெருமை கலைஞர் என்ற படைப்பாளிக்கும் போராளிக்கும் கிடைத்த வரலாற்றுப் பெருமையாகும்.

கல்வியிலும் – பொருளாதாரத்திலும் தமிழர்கள் தலையெடுப்பதற்கு முன்பு மானமுள்ள சமுதாயமாய் வாழவேண்டும் என்பதுதான் திராவிட இயக்கங்களின் உயிர்த் துடிப்பாக இருந்தது. வீரம் விவேகத்தைத் துணைக்கு அழைத்துக்கொள்வதற்கு மானமே பிரதானம் என்ற இலட்சியத்தின் வல்லோசை கலைஞரின் எழுத்துக்கிடையே எப்போதும் ஊடாடி ஒலிப்பதை, செவி உள்ளவர்கள் கேட்கக் கடவர்.

பெண் கொடுக்க மறுத்ததற்காக மாற்றான் படையெடுத்து வருகிறான். அவனை மணந்து கொள்ளுமாறு மருதநாட்டு இளவரசியிடம் மன்னன் கெஞ்சுகிறான். "மகளே எனக்காக நீ இந்தத் தியாகம் கூடவா செய்யக்கூடாது?". உடனே இளவரசி எதிர்வினை புரிகிறாள். "தங்களுக்காக உயிரை தியாகம் செய்கிறேன். மானம் தியாகம் செய்யும் பொருளல்ல தந்தையே".

மொழியின் மானங்காக்க உடலுக்குத் தீமூட்டி உயிரைத் தியாகம் செய்த தமிழர்களை உருவாக்கியதில் இந்த வசனங்களுக்கும் கணிசமான பங்குண்டு என்றே கருதத் தோன்றுகிறது.

தந்தை பெரியாரைத் தமிழ்நாட்டின் சாக்ரடீஸ் என்று பாராமல், சாக்ரடீஸை கிரேக்கத்தின் பெரியார் என்று பார்த்தவர் கலைஞர். அதன் பின்னால் ஒரு நுண்ணரசியல் உண்டு.



மூதறிஞர் இராஜாஜி சாக்ரடீஸ் குறித்து 'சோக்ரதர்' என்ற நூலை எழுதியிருந்தார். அதற்கு எதிர்வினையாகத்தான் சாக்ரடீஸ் நாடகத்தைக் கலைஞர் படைத்தார்.

"மூதறிஞர் இராஜாஜி சோக்ரதர் என்னும் நூலில் சாக்ரடீஸை சங்கராசாரியார் போன்ற ஆஸ்திகப் பழமாக்கியிருக்கிறார். நானோ அறிவுலக ஜோதியாக இந்தச் சிறு நாடகம் மூலம் இங்கே சித்தரித்திருக்கிறேன்" இது கலைஞரின் வாக்குமூலம்.

நஞ்சருந்திச் சாகுமாறு தண்டிக்கப்பட்ட சாக்ரடீஸிடம் கடைசிக் கேள்வி கேட்கிறான் நண்பன் கிரிட்டோ. 'உன் சவத்தை எப்படி அடக்கம் செய்ய வேண்டும்?'.

சாக்ரடீஸின் உதடுகள் கடைசி வார்த்தைகளை முணுமுணுக்கின்றன:

"புதைப்பதாயிருந்தால் இந்த நாட்டில் உலவும் புளுகு மூட்டைகளையும் என்னோடு சேர்த்துப் புதைத்துவிடு. எரிப்பதாயிருந்தால் ஏமாற்றுக்காரர்களின் சுவடிகளையும் என்னோடு சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கித் தண்ணீரில் கரைத்துவிடு"

அறிவு ஜீவிகளின் எல்லாக் கல்லறைகளுக்கும் இந்த வார்த்தைகளே பொருந்தும்.

காலமெல்லாம் உயர்த்திப்பிடித்த பகுத்தறிவை தள்ளாடும் வயதிலும் தளரவிடாதவர் கலைஞர்.

ஊர் அறியாத ஓர் உண்மையைச் சொல்லி இந்தக் கட்டுரைக்குக் கண் திறக்கிறேன்.

முதுமையிலும் கலைஞரைப் பேணிவரும் அவரின் அணுக்கத் தொண்டர் நித்யானந்தம் என்னும் நித்யா ஓர் ஆத்திகர். கலைஞர் நலமுற வேண்டுமென்ற நல்லாசையிலும் அவருக்கிருந்த நம்பிக்கையிலும் அழுது தொழுது கலைஞர் நெற்றியில் திருநீறு பூசியிருக்கிறார். சற்று நேரத்தில் திரும்பிப் பார்த்தால் 'நெற்றி' இருக்கிறது; 'நீறு' இல்லை. துடைக்கப்பட்ட திருநீறு கலைஞரின் கரத்தில் இருக்கிறது.

பழுத்த முதுமையிலும் நினைவுகள் சற்றே நழுவும் கணங்களிலும் தான் பெரியார் வழிவந்த மானமிகு தொண்டன் என்பதை மறக்காத அந்தக் கலைஞரைத் தமிழ்நாடு மறக்காது; தலைமுறை மறக்காது.



கலைஞரும் நானும்...



டிராட்ஸ்கி மருது
ஓவியர்

அப்பா டிராட்ஸ்கியவாதியாக இருந்ததும் பின்னர் காங்கிரஸ் எதிர்ப்பாளராக மாறியதும் காலப்போக்கில் திராவிட இயக்க அரசியலில் ஈடுபாடு ஏற்பட்டதும் அதன் தொடர்ச்சியாய் முரசொலி பார்க்கிற வாய்ப்புக் கிடைத்ததும் அதில் வந்த செல்லத்தின் கருத்துப்படங்கள் ஏற்படுத்திய தாக்கமும் காமிக்ஸ் புத்தகங்கள் பார்க்கக் கிடைத்த வாய்ப்பும், ஆங்கில சினிமா பார்க்கக் கிடைத்த வாய்ப்பும், திரைப்படத்துறையில் இருந்த எங்களது தாத்தாக்கள் என எல்லாமும் எங்களுக்குத் தேடாமலே கிடைத்தது.

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில்தான் இந்தி எதிர்ப்பு எரியும் பிரச்சினையாக தமிழகத்தில் பரவியது. மதுரையில் குறிப்பாக பள்ளி கல்லூரிகளில் அதன் வீச்சு மிக வேகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே அந்தப் போராட்ட வடிவங்களோடு எங்களுக்குத் தொடர்பு வந்தது.

1967 தேர்தலில் மதுரையில் சுமார் 500 இடங்களில் தி.மு.க. ஆதரவு விளம்பரப் படங்களை நான் மட்டுமே வரைந்திருந்தேன். இந்த மாதிரியான சமயங்களில்

விளம்பரங்கள் வரைகிறப் பணிக்காக எனது மாமா உள்ளிட்ட உறவினர்கள் எல்லாம் என் கூடவே வருவார்கள். தேர்தல் முடிந்து தி.மு.க. ஆட்சியமைக்கிறது. அண்ணா முதல்வரான பிறகு முதல் முறையாக மதுரைக்கு வருகிறார். மதுரையில் கூட்டம். அமெரிக்கன் கல்லூரி அருகிலிருந்து மேடை வரை நான் வரைந்தளித்திருந்த செல்லத்தின் ஓவியங்களும் படங்களும்தான் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பதாகைகளின் கீழேதான் அண்ணா வருகிறார். அப்பொழுது மக்கள் தந்த வரவேற்பும் இளைஞர்களின் ஆரவாரமான எழுச்சியும் இன்னும் என் கண்முன்னால் நிற்கிறது.

அந்தக் காலக்கட்டத்தில் இருந்து எனது தந்தையார் வாழ்ந்த காலம் வரை கலைஞரின் உழைப்பையும் அவரது தலைமையின் பெருமையையும் எங்களுக்குச் சொல்லிக்கொண்டே இருப்பார். அண்ணா மறைந்தபிறகு அவர் வாசித்த புகழ்பெற்ற இரங்கலுரை;தலைமைக்கு வந்தபிறகு கட்சியைநடத்திக்கொண்டிருந்தவிதம்; எதிர்க்கட்சியான பிறகும் கட்சியில் பிளவு ஏற்பட்ட பிறகும் திராவிட இயக்க அரசியல் அடையாளம் சிதைந்து போகாமல் கலைஞர் முன்னெடுத்துக் கொண்டிருந்த அரசியல் போக்குகள், மாநில நலனை முன்னிறுத்தி ஒன்றிய அரசுக்கு எதிராக அவர் முன் வைத்த மாநில சுயாட்சி முழக்கம் உள்ளிட்ட எல்லாச் செயல்பாடுகளையுமே அப்பா வியந்து வியந்து எங்களுக்குச் சொல்லிக்கொண்டே இருப்பார்.

தொடக்க காலத்தில் கலைஞர் செய்த அரசியல் சாதுரியங்களை எல்லாம் எனது சகோதரர் எஸ்.எஸ்.ஆர் கதைகதையாய்ச் சொல்லுவார். மிக வன்மமான முறையில் காங்கிரசார் தி.மு.க.வை எதிர்த்தது; தாக்குதல் நடத்தியது; அரிவாளை எடுத்துக்கொண்டு தி.மு.க.வினரை வெட்டுவதற்காக காங்கிரசார் விரட்டியது என ஒவ்வொரு போராட்டத்தையும் எதிர்ப்பையும் எங்களுக்கு அவ்வப்போது சொல்லிக் கொண்டே இருப்பார். ஆரம்பகாலத்து கதைகள் எல்லாம் இப்படி எனக்குச் சொல்லப்பட்டுக் கொண்டே இருந்தன. எனது பெரியப்பா, மாமா உள்ளிட்ட என நெருங்கிய உறவுக்காரர்கள் எல்லாம் தி.மு.க. அரசியல்காரர்களாக இருந்ததும் மெதுமெதுவாய் என்னை அந்த அரசியலின் பக்கம் ஈர்த்துக் கொண்டுவிட்டது.

அப்படியே பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு கல்லூரிப் படிப்புக்காக சென்னைக்கு வந்தேன். அவசரநிலை ஆட்சிப் பிரகடனம் செய்யப்பட்டிருந்த நேரம் அது. அப்போது தீவுத்திடலில் கண்காட்சி நடக்கிறது. மாணவர்களாய் இருந்துகொண்டே கண்காட்சி அரங்குக்குத் தேவையான சித்திரங்களையும் பதாகைகளையும் நாங்கள் தயாரித்துக் கொடுக்கும் பணியில் மும்முரமாய் இருந்தோம். அதாவது ஆட்சிக் கலைப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக வந்து அந்தக் கண்காட்சியைக் கலைஞர் தொடங்கிவைக்கிறார். அந்த நிகழ்வுக்கு வந்துதான் 'இன்னும் இரண்டு நாளில் ஆட்சி இருக்குமோ, இல்லையோ' என்று பேசினார்.



அவசரநிலைப் பிரகடனப்படுத்தப்பட்ட அந்தக்காலத்தில் ஆட்சியும் கலைக்கப்பட்டுவிட்ட நிலையில் பொது மேடைகளில் எங்கும் பேசக்கூடாது என்கிற தடை இருந்தபோது ஒரு திருமண நிகழ்வில் வந்து பேசுகிறார். அங்கே அவருக்கான அரசியலைப் பேசியதெல்லாம் இப்பொழுது நினைத்தாலும் வியப்பூட்டுவதாகத்தான் இருக்கிறது. கல்லூரி விடுதியிலிருந்து நண்பர் பாண்டியனுடன் நடந்தே சென்றோம். அந்த நிகழ்விற்கு சென்னையில் சா. கந்தசாமி மூலம் பாவைச்சந்திரன் அறிமுகமாகி அந்தத் தொடர்பில் நானும் ஆதியும் சிறுபத்திரிகைகள் கடந்து வெகுசன பத்திரிகைகளுக்கு படங்கள் வரையத் தொடங்கி இருந்தோம். அப்போது குங்குமத்தில் நான் வரைந்திருந்த ஓவியத்தைப் பார்த்து கலைஞர் மிகவும் பாராட்டியதாக அவ்வப்போது பாவை சொல்லிக்கொண்டே இருப்பார். 'கலைஞரிடம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.' 'வாங்க போகலாம்' என்றெல்லாம் பாவை சொல்லுவார். ஆனால் நான் போனதில்லை. கூச்சப்பட்டுக்கொண்டு தவிர்த்து விடுவேன்.

பின்னர் 1992க்குப் பிறகு ஒருநாள் கலைஞரின் ஆலிவர் சாலையின் வீட்டுக்குப் போகிற இடத்தில் எனது காரை நிறுத்தி நான் பேசிக்கொண்டிருந்தபோது தொலைவிலிருந்து துரைமுருகன் அவர்கள், என்னைப் பார்த்துவிட்டார். 'ஓவியரே இங்க வாங்க' எனக் கைகாட்டி அழைத்துவிட்டார். அதைத் தவிர்க்க முடியாமல் உள்ளே போனால் அங்கே தலைவர்கள் எல்லாம் அவரது இல்லத்தின் முன்னே கூடி கூட்டமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அருகில் அழைத்த துரைமுருகன் அவர்கள்தான் முதன்முதலில் என்னைக் கலைஞருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஏற்கெனவே எனது படங்கள் மூலம் அவருக்கு நான் அறிமுகமாகியிருந்ததால் முதன்முறையாக நேரடியாக அறிமுகமானபோது அவர் மிகவும் நெகிழ்ச்சியாய் என்னைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். அந்த நாளன்று நான் கருப்புச்சட்டை போட்டிருந்தேன். என்னைக் கூர்ந்து கவனித்த அவர், எப்பொழுதுமே கருப்புச்சட்டைதான் போடுவீங்களா? என்று கேட்டுவிட்டு, திராவிட இயக்கத்தில் இருந்தபோது அவர் கருப்புச்சட்டை போட்டிருந்ததையும் அவரும் சம்பத்தும் ஒரே கருப்புச் சட்டையைப் பயன்படுத்தியபோது அது அளவில் பெரியதாக இருந்ததையும் சுட்டிக்காட்டி மகிழ்வான நினைவுகளை அப்பொழுது வெளிப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து கலைஞரிடம் நெருக்கமாகிற அளவுக்கு அவரோடு நெருக்கமாக்கிவிட்டவர் பேராசிரியர் நாகநாதன் அவர்கள்தான். நாகநாதன் அவர்கள் வெளியிட்ட ஜமதக்னியின் மூலதனம் நூல் தயாரிப்பின்போது நாகநாதன் அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பும் நூலின் வெளியீட்டு விழாவில் கலைஞர் அவர்கள் எனக்கு நினைவுப்பரிசு வழங்கியபோது தோளில் தொட்டு என்னை அருகில் வரவழைத்து நிறுத்தி புகைப்படம் எடுக்கச் சொன்னதுமாக படிப்படியாக கலைஞரின் அன்புக்கும் கவனிப்புக்கும் ஆட்பட்டிருந்தேன்.



பின்னர் அண்ணா நூற்றாண்டுவிழா சமயத்தில் அண்ணா நூற்றாண்டு விழாப் பணிகளையும் தொடர்ச்சியாக செம்மொழி மாநாட்டு நிகழ்வுப் பணிகளையும் புதிய சட்டமன்றக் கட்டட அலங்காரப் பணிகளையும் அவருடைய நேரடிப் பார்வையில் இருந்து செய்யும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. கலைஞருடன் அப்படியான தொடர்பு ஏற்பட்ட பிறகு அந்தந்தப் பணிக்காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது நான் கலைஞரைப் பார்த்து விடுவேன். அல்லது நாங்கள் பணி செய்து கொண்டிருக்கிற இடத்துக்கு கலைஞர் வந்துவிடுவார். நாடாளும் தலைவர் ஒருவரை அதிலும் எனது தந்தையார் வியந்து பாராட்டிய தலைவர் ஒருவரை நான் அன்றாடம் சந்தித்ததையும் சந்தித்த மகிழ்வான தருணங்களையும் பகிர்ந்துகொள்ள எனது தந்தையார் இல்லையே என்கிற ஏக்கம் எனக்கு அப்போது அதிகமாக வந்தது.

அவர் அளித்த பணிகள் முறையாக நடைபெறுகிறதா என்பதைப் பார்க்க ஒருமுறை முதலமைச்சரின் செயலாளர்கள் இருவரும் எனது வீட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்கள் வந்தபோது கணினித்திரையில் பெரியாருடன் எனது தந்தையார் இருக்கும் புகைப்படத்தைப் பார்த்து வியந்துபோய் கலைஞரிடம் சொல்லிவிட்டார்கள். அது கலைஞரிடம் மேலும் எனக்கான மதிப்பை உயர்த்தியிருந்தது.

நாங்கள் எடுத்துக்கொண்ட பணிகளை இரவும் பகலுமாக நாங்கள் ஈடுபட்டுச் செய்து கொண்டிருந்தபோது பகல் நேரத்தில் சந்திக்க இயலாத நிலை ஏற்பட்டிருந்தால் அதிகாலை 3 மணிக்கு எங்கள் பணித்தளத்துக்கு வந்து எங்கள் பணிகளைப் பார்ப்பார். அதிகாலை 3 மணிக்கு முதலமைச்சர் வருகிறார் என்றால் மொத்த அரசாங்க அதிகாரிகளும் அவர் பின்னாலேயே வருவார்கள். அவ்வளவு பேர் முன்னிலையில் அவர் என்னை மட்டும் அழைத்து கருத்துக்களைப் பகிர்ந்ததையும் எந்தக் கருத்தையும் சுதந்திரமாய் அவரிடம் சொல்ல எனக்கு அவர் அனுமதியளித்திருந்ததையும் வாழ்நாளில் என்னால் மறக்கவே முடியாது.

முதலமைச்சர் சொன்னால் அருகிலிருக்கிற அதிகாரிகள் எல்லாம் சரி என்றுதான் சொல்வார்கள். அவருடைய சொல்லுக்கு மாறாய் சொல்லத் துணியமாட்டார்கள். ஆனால் நான் மட்டும் அவரிடம் மனதில் பட்டதை அப்படியே சொல்லி விடுவேன். ஒருமுறை தஞ்சைப் பெரியகோயிலின் புகைப்படம் ஒன்றைக் காட்டி இதைப் பயன்படுத்தலாமா என்று கேட்டார். எனக்கு அந்தப்படம் பிடிக்கவில்லை. என் முகக்குறியை வைத்து 'ஏன் நல்லாயில்லையா?' என்று கேட்டார். இல்லங்கய்யா... ஒரு நல்ல புகைப்படக் கலைஞரை வைத்து ஒரு 50 படங்கள் எடுத்துவரச் சொல்லி அதில்ஒன்றைத் தெரிவு செய்து போட்டால் சிறப்பாய் இருக்கும்ங்கய்யா என்று சொன்னேன். உடனே அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்து அதிகாரிகளைச் செயல்படச் சொன்னார்.



எதையும் சமயோசிதமாகவும் எள்ளல் சுவையுடனும் சொல்லுவதில் கலைஞருக்கு நிகர் கலைஞர்தான். ஒருமுறை புதிய சட்டமன்றக் கட்டடத்துக்கு வரைந்திருந்த தலைவர்களின் படங்களைச் சுட்டிக்காட்டி, 'இந்தப் படங்களில் உங்களுக்குப் பிடித்த படம் எது என்று கேட்டார். நான் கொஞ்சம் தயங்கித் தயங்கி சொல்லிக் கொண்டிருந்தேன். 'ஏன்

தயங்குறீங்க. தயங்காமல் சொல்லுங்க. பெரியார் படம்தான் சிங்கம்மாதிரி இருக்கு' என்று பெருமிதப்பட்டார். 'நீங்கள் எல்லாம் சொல்லவில்லை என்றால் வேறு யார் சொல்வார்கள்' என்றும் என்னிடம் சொல்லி பெருமைப்பட்டார். அப்போது 'காந்தி படத்தின் கைகள் மீது கொஞ்சம் கறைபட்டிருச்சுங்கய்யா' என்று சொன்னதற்கு. 'ஓ! காந்தியிலேயே கறைப்படுத்திட்டாங்களா?' என்று உடனே மறுமொழி சொல்லி அவ்வளவு பேரையும் வியப்பில் ஆழ்த்திய தலைவர் அவர்.

நான் அவரிடம் பணிசெய்த காலங்களில் கண்டறிந்த மறக்கமுடியாத அனுபவம், மாபெரும் தலைவர்கள்மீது அதிலும் அவர் மதித்துப் போற்றுகிற தலைவர்கள் பற்றிய தகவல்கள், பேச்சுகள் விவாதங்கள் எதாவது வந்தால் அவ்வளவு பூரிப்பாய் முகத்தை வைத்துக்கொண்டு நாம் சொல்வதற்குக் காது கொடுப்பார். அதிலும் பெரியார், அண்ணா, கலைவாணர் ஆகிய தலைவர்களைப் பற்றிச் சொன்னால், அவர் முகமே ஒளிவெள்ளம் பாய்ச்சியதைப்போல அவ்வளவு பிரகாசமாய் இருப்பதை நான் பல நேர்வுகளில் நேரில் பார்த்திருக்கிறேன்.

அறிஞர் அண்ணா, கலைஞர் எம்.ஜி.ஆர். என எல்லாத் தலைவர்களிடமும் நிறைந்து கிடந்த அரிய பண்பு. இரு கை கூப்பி வணக்கம் தெரிவிப்பது. பொது இடங்களில் மதிப்புக்குரியவர்களை வாக்காளப் பெருமக்களை அவர்கள் இருகை கூப்பி வணங்கினால் அதைப் பார்த்துவிட்டு எவரும் இருகை எடுத்து தொழாமல் இருக்கவே முடியாது. அவ்வளவு அருமையாக அவர்கள் அந்தக் கைகளைக் குவித்து வணக்கம் தெரிவிப்பார்கள். பாவை திருமணம் சென்னையில் நடந்தது. மேடையில் கலைஞர் இருக்கிறார். பார்வையாளர் வரிசையில் க.நா.சு. அமர்ந்திருக்கிறார். அவரைப் பார்த்தவுடன் மேடையிலிருந்த கலைஞர் எழுந்து க.நா.சு.வைப் பார்த்து வணங்கியதை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன். மாற்றுக் கருத்துள்ளவர்களையும் மதிக்கிற பெரும் பண்பு அது. இருகை எடுத்துக் கும்பிட மனமில்லாத சங்கிகள்தான் மார்பில் கைவைத்து அரைவணக்கம் போடுவார்கள்.

தனது வாழ்நாளில் எத்தனை இலட்சக்கணக்கானவர்களை கலைஞர் நேரில் பார்த்திருப்பார்; பேசியிருப்பார்; பழகியிருப்பார். தன்னைப் பார்க்க வருகிற ஒருவன் தனக்கு முன்னால் ஐந்தாறு அடி தொலைவில் வரும்போதே அவன் முகத்தை, உடல்மொழியைப் பார்த்தவுடனேயே அவனை 'இன்னார்' எனக் கணித்துவிடுகிற அரியபண்பும் அவரிடமிருந்ததை நான் அவ்வப்போது கண்டிருக்கிறேன். பொதுவாக தலைவர்களுக்கு அதிலும் பெரும் செல்வாக்குப் பெற்ற தலைவர்களுக்கு இருக்கவேண்டிய அரிய பண்புகளில் அது ஒன்று.

அவரைச் சந்திக்கிற யாராவது ஒரு அழைப்பிதழோ, நூலோ, கையேடோ கொடுத்துவிட்டால் அதை விரித்துப் பார்க்கத் தொடங்கியவுடன் அவருக்குள் இருக்கிற மெய்ப்புத் திருத்துநர், பத்திரிகையாளர், எழுத்தாளர் எல்லாம் வந்து விடுவார்கள். எங்கே வியப்புக்குறி போட வேண்டும்? எங்கே வினாக்குறி போட வேண்டும்? என்பதையெல்லாம் சொல்லத் தொடங்கிவிடுவார். அந்த மொழியின் மீதும் அந்த மொழியின் சிறப்பின் மீதும் அவருக்கு இருக்கிற அக்கறையும் மதிப்பும் முன்னே வந்துநிற்கும்.

ஒருமுறை தென்னாட்டுப் புரட்சி குறித்த சித்திரங்களை வரையச் சொல்லி எனக்குப் பணிகளைத் தந்திருந்தார். மிகக்குறுகிய காலத்தில் அளிக்கப்பட்ட பணி என்பதால் சகநண்பர்களையெல்லாம் உடன் வைத்துக் கொண்டு செய்து முடித்தேன். அதைப் பார்த்துப் பரவசப்பட்டுப் போனவர், உடனே என்னை அழைத்துவரச் சொல்லி ஆள் அனுப்பிவிட்டார். போய் அவர் முன்னால் வணங்கி நின்றபோது, 'பிரெஞ்சுப் புரட்சி' ஓவியங்களை எல்லாம் என் நினைவிற்கு கொண்டுவந்து விட்டீர்கள் என்று பாராட்டினார்.

நான் அவரிடம் கண்ட இன்னொரு முக்கியமான குணம். புதிய புதிய தகவல்களையும் புதிய புதிய வருகையையும் தேடித்தேடி அறிந்துகொள்வதில் பேரார்வமாய் இருப்பார். நமக்குத் தெரியாத ஒன்றில் நாம் ஏன் சிரமப்பட வேண்டும் என்று ஒதுங்கிவிட மாட்டார். 90 வயதுக்கு மேலும் அவ்வளவு கூர்மையாகவும், தெளிவாகவும் அவர் செயல்பட்டதற்குக் காரணம் அவருடைய தேடுதல்தான். அதுதான் அவரை எப்பொழுதும் உற்சாகமாக வைத்திருந்தது என்று கூடச் சொல்வேன். அதெல்லாம் நம்முடைய தலைமுறையினர் ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு உழைக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர் விட்டுச் சென்ற பணிகளையெல்லாம் நாம் தொட்டுத்தொடர முடியும்.



கலைஞர் – மக்களை எளிதில் சென்றடைய ஒன்லைனர்கள் (ஒரு வரி செய்திகளை) பயன்படுத்துவதில் வல்லவர் ஆனார்



ஆர். ரங்கராஜ்
ஆசிரியர்
சென்னை கல்சர் இதழ்

ஒரு நாள் இரவு, கோவையில் பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு, சென்னையில் உள்ள முரசொலி (தி.மு.க. நாளேடு) அலுவலகத்துக்கு நள்ளிரவில் தொலைபேசியின் மூலமாக தொடர்பு கொண்டார் கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்கள். செய்தி ஆசிரியரிடம், தன் பேச்சு முழுவதும் கிடைத்துவிட்டதா என்றும், எட்டு காலம் (Column) தலைப்பு (Headline) தயாராகி விட்டதா? படியுங்கள் என்று கேட்டார். சென்னையிலுள்ள செய்தி ஆசிரியர் தடுமாற்றத்துடன், இல்லை, 8 காலம் (Column) தலைப்பு சரியாக அமையவில்லை, அதுதான் அச்சு வேலை தொடங்க தாமதத்திற்கான காரணம் என்று தயக்கத்துடன் கூறினார். அச்சு வேலை முடிந்து, வண்டிகளில் முரசொலி இதழ் ஏற்ற வேண்டிய நேரம் கடந்துவிட்டது, என்றும் வேதனையோடு செய்தி ஆசிரியர் கூறினார். தமிழ்நாடு முழுவதும் காலையில் 5 மணிக்கு பிரதிகள் கிடைக்க வேண்டும் என்றால் வண்டிகள் புறப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆனால் இந்த தலைப்புக்காக எல்லா வேலைகளும் தடைபட்டு நிற்கிறது என்று செய்தி ஆசிரியர் தெரிவித்தார்.

இதற்காக தாமதமா, என்று கேட்ட கலைஞர், தொலைபேசியில், "8 காலம் தலைப்புவரியை (Headline எழுதிக் கொள்ளுங்கள் -- கடல் காணாத கோவை மக்கள் கண்ட மக்கள் கடல் - போட்டு பாருங்கள், சரியாக பொருந்தும், என்று சொன்னார்.

என்ன ஆச்சரியம்! ஒரு மணி நேரமாக போராடியும் சிக்காத தலைப்பு வரியை ஒரு நொடியில் கலைஞர் தொலைபேசியின் மூலமாகத் தெரிவித்துவிட்டார்? அவர் ஆளுமைதான் என்ன, என்று அனைவரும் வியந்தார்கள். அச்சு வேலை உடனே முடிக்கப்பட்டு, விடியும்போது முரசொலி இதழ் கடைகளில் கிடைத்தது. கலைஞர் ஒரு சிறந்த பேச்சாற்றல் உள்ளவர் மட்டும் அல்ல, ஒரு பத்திரிகைத் துறைக்கு தேவையானதையும் முழுவதுமாக தெரிந்து வைத்திருந்தார்.

ஆனால், கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்கள் பொதுக்கூட்டத்திற்கு பிறகு பத்திரிகையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் முத்தாய்ப்பாக ஒரு முக்கிய செய்தியை, அறிவிப்பை, கடைசி இரண்டு வரிகளிலே தெரிவிப்பார். அதுதான் தலைப்புச்செய்தியாக அமையும். எதிர்க்கட்சியாக இருக்கும்போது, தி.மு.க.வின் அடுத்த கட்ட போராட்டம், ஆர்ப்பாட்டம், மறியலுக்கான இடம், தேதியாக இருக்கும்.

அடிக்கடி பத்திரிகையாளர்களை சந்திக்கும் வழக்கத்தை கலைஞர் அவர்கள் கடைப்பிடித்து வந்தார். பத்திரிகையாளர்களின் கூர்மையான கேள்விகளை ரசிப்பார், வரவேற்பார். எப்படி ஒரு பட்டிமன்றத்தில் எதிர்முகாமிலிருந்து வரும் கேள்விகளுக்கு உடனடியாக பதில் சொல்வது ஒரு சுவையான அனுபவமாக அவருக்கு இருந்ததோ, அதே போல் ஒரு உணர்வை பத்திரிகையாளர் சந்திப்பிலும் அவர் பெற்றார் என்றேத் தோன்றியது.

பல நேரங்களில் சிலேடை அணியை பின்பற்றி அவருடைய பதில் மிக சுவாரசியமாக அமையும். பத்திரிகை நிருபர்களுடன் அவரும் சேர்ந்து சிரிப்பார்.

ஒரு முறை திரு. திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் ஒரு பேட்டி எடுக்கும் நேரத்தில், முதல்வர் கலைஞர் மதுவிலக்கை மீண்டும் அமல்படுத்துவார் என்ற அறிவிப்பு வந்திருந்தது. அரசு இந்த முடிவில் உறுதியாக உள்ளதா அல்லது மாற்றம் வருமா, என்ற கேள்விக்கு, கலைஞர் அவர்கள் தந்த ரசிக்கும் படியான பதில், "இப்போதைக்கு இல்லை" போதை, சிரிப்பலை அடங்க நீண்ட நேரம் ஆனது. போதை என்ற சொல்லை வைத்து அவர் செய்த சிலேடை அபாரமானது.

போதை என்று சொல்லும்போது இன்னொரு சிலேடை செய்தியும் நினைவிற்கு வருகிறது. கவிஞர் கண்ணதாசன் தேர்தலில்


NDTV



தான் போட்டியிட விருப்பம் தெரிவித்து, புதுச்சேரியில் நிற்க முடிவெடுத்துள்ளேன், என்று கலைஞரிடம் தேர்தல் டிக்கெட்டை கேட்டார். கலைஞர் சொன்னார், "உன்னால் புதுச்சேரியில் நிற்க முடியுமா?" சிரிப்போடு அந்த கதை முடிந்தது.

நெருப்பால் சூழப்பட்ட கற்பூரம்

மதுவிலக்கை நீக்கும்போது, அண்டை மாநிலங்கள் அனைத்திலும் மது தாராளமாகப் புழங்கும்போது, அதைத் தடுப்பது தமிழகத்தால் எப்படி சாத்தியமாகும் என்று நியாயப்படுத்தினார். மதுபானம் உள்ள மாநிலங்களுக்கு மத்தியில் தமிழகம் ஒரு தீவு போல இருந்தது, மேலும் "தமிழகம் நான்கு புறமும் நெருப்பால் சூழப்பட்ட கற்பூரம் போல் இருந்தது" என்றும் கூறினார். இக்கட்டான சூழ்நிலைகளில் சக்தி வாய்ந்த தொடர்பு கருவிகளை பயன்படுத்தினார்.

பாலை வைத்து சிலேடை

மற்றொரு சந்தர்ப்பத்தில், திருச்செந்தூர் கோவில் வளாகத்தில் அறநிலையத்துறை அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையின் மரணம் தொடர்பான பால் கமிஷன் அறிக்கையை பேரவை விவாதித்தது, இது கொலை வழக்கு என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தியது பால் கமிஷன் அறிக்கை. சட்டசபை கூடி, வழக்கப்படி கமிஷன் அறிக்கையை

சட்டசபையில் தாக்கல் செய்ய வேண்டும் என, தி.மு.க. கோரியபோது, பால் கமிஷன் அறிக்கையுடன், போலீசின் நடவடிக்கை அறிக்கை (ஏடிஆர் என்ற Action Taken Report) தாக்கல் செய்யப்பட்டது. அது கொலை அல்ல தற்கொலைதான் என்று அரசு கூறியது.

விவாதத்தின்போது பேசிய கலைஞர், கொலையை மறைக்க காவல்துறை தயாரித்த ஆவணமே ஏடிஆர். அவர் ஏடிஆரை விஷம் என்று கூறினார். அதே சமயம் உண்மையுடன் வெளிவந்த பால் கமிஷன் அறிக்கை பால் போல் இருந்தது என்று கூறினார். கமிஷன் அறிக்கையுடன் ATR-ஐ தாக்கல் செய்ய வேண்டாம் என்று அவர் அ.தி.மு.க. அரசை கேட்டுக்கொண்டார். கமிஷன் அறிக்கையை இடது கையில் பிடித்தபடி, இது பால் என்று கூறிய கலைஞர், வலது கையில் அரசு அறிக்கையை பிடித்துக்கொண்டு, இது விஷம் என்று கூறி, பிறகு ஒரு கையில் அவற்றை ஒன்றாகப் பிடித்தார்.

"கமிஷன் அறிக்கை மற்றும் அரசு நடவடிக்கை அறிக்கையை கலக்க வேண்டாம். பாலையும் விஷத்தையும் கலக்காதீர்கள்", என்று தன் உரையை கச்சிதமாக முடித்து வைத்தார் கலைஞர்.

தள்ளாத வயது என்று

தள்ளாத வயது என்று தன்னைப் பற்றி ஒருவர் குறிப்பிட்டபோது, ஆம் தள்ளாதவன், எந்த கோரிக்கை வந்தாலும் தள்ளாதவன், என்று ஹாஸ்ய உணர்வோடு பதில் கொடுத்தார்.

மாறிய முத்தம்

எம்.ஜி.ஆர். நடிக்கும் 'எங்கள் தங்கம்' படத்திற்கான படப்பிடிப்பு சென்னையில் ஒரு அரங்கத்தில் நடந்துகொண்டிருந்தது. முரசொலி மாறன் தயாரிப்பில் அந்த படம் உருவாகிக்கொண்டிருந்தது. அப்பொழுது கலைஞர் அங்கே தற்செயலாக வந்தார். வாலி அவர்கள் ஏதோ யோசனையில் இருந்தார். என்ன வாலி, என்ன யோசனை என்றார் கலைஞர். பாடலுக்கான முதல் வரியை எழுதிட்டேன், பல்லவியை எப்படி முடிப்பது, அது தான் சிக்கவில்லை என்கிறார். முதல் வரியை சொல்லுங்கள், என்கிறார் கலைஞர். வாலி, 'நான் அளவோடு ரசிப்பவன்' என்பதை எழுதியிருக்கிறேன். உடனே கலைஞர் அடுத்த வரி, 'எதையும் அளவின்றி கொடுப்பவன்' என்று இருக்கலாமே என்றார். வாலி அற்புதம், அதையே வைத்துக்கொள்கிறேன் என்றார். கலைஞரும் விடைபெற்றார். சற்று நேரத்தில் எம்.ஜி.ஆர். அங்கே வந்தார். பாடலின் பல்லவியை கேட்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார். 'எதையும் அளவின்றி கொடுப்பவன்' என்று வரி அற்புதம், அற்புதம், என்று சொல்லி, வாலியை கட்டித்தழுவி, கன்னத்தில் முத்தமிட்டார்

எம்.ஜி.ஆர். உடனே வாலி "நீங்கள் முத்தமிட வேண்டும் என்றால் அதை கலைஞருக்கு தான் கொடுக்க வேண்டும். காரணம் அதை எழுதியது கலைஞர் தான்". அப்படியா, என்று கேட்ட எம்.ஜி.ஆர். சிரித்துவிட்டார்.

ஒரு முறை ஹண்டே அவர்கள் சட்டமன்றத்தில், 'உங்கள் ஆட்சி பாசிஸ்ட் ஆட்சி' என்று சொன்னபோது, கலைஞர், "பாசயிசம் என்று சொல்லுங்கள்", என்றார். அதேபோல, "இது மூன்றாம் தரமான ஆட்சி" என்று ஹண்டே கூறியபோது, "இல்லை, இது நான்காம் தரமான ஆட்சி, ஆமாம் சூத்திரர்கள் ஆட்சி", என்று பதில் கொடுத்தார் கலைஞர்.

முரசொலியில் தப்பு நடந்தால்.....

முரசொலியில் தப்பு நடந்தால், 'இப்படி தமிழை காயப்படுத்திப் பத்திரிகை நடத்தத் தேவையில்லை' என்று சொல்லி அலுவலகத்தைப் பூட்டி சாவியைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு போய்விடுவார்' என்று முரசொலி அலுவலகத்தில் பணியாற்றியவர்கள் கூறுவார்கள்.

'பிற்பட்டோர்' என்று சொன்னால் கோபித்துக் கொள்வார். 'பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர்' என்று தான் சொல்ல வேண்டும் என்பார். எவ்வளவு வித்தியாசம்?

அதேபோல் கட்சிக்காரர்களிடம் அ.இ.அ.தி.மு.க. என்று அந்த கட்சியை சொல்ல கூடாது. அ.தி.மு.க. என்று தான் சொல்ல வேண்டும். நாம் தி.மு.க., அவர்கள் அ.தி.மு.க, அதாவது தி.மு.க. அல்லாதவர்கள்.

ஒரு முறை எங்கள் சங்கத்திற்கு நேரம் ஒதுக்கிவிட்டார், ஆனால் கோரிக்கை மனுவை தயார் செய்வதில் தாமதம் ஏற்பட்டு, அவசர அவசரமாக எடுத்துக் கொண்டு செல்கிறோம். அதில் ஒரு பிழை இருந்தது. இருக்கும் வேலைகளில் கலைஞர் கவனிக்க மாட்டார் என்று பத்திரிகையாளர்கள் நினைத்தார்கள். ஆனால் அவர் உடனே கண்டுபிடித்து விட்டார். 'ஆவன' செய்ய வேண்டும் என்ற இடத்தில் பிழையாக 'ஆவணம்' அமர்ந்தது. சமாளித்துக் கொண்டு, நான், நீங்கள் ஆவன செய்தால் அது அரசாணையாக வெளிவந்து ஆவணம் ஆகிவிடும். அதைதான் குறிப்பிடுகின்றோம், என்றேன். அருகில் இருக்கும் திரு. துரை முருகனை பார்த்து சிரித்துக்கொண்டே, 'பரவாயில்லையே' என்று சொன்னார். இன்னும் சற்று நேரம் அங்கே இருந்தால் தலையில் குட்டு விழலாம். நாங்களும் தப்பித்தோம், என்று வேகமாக வெளியே வந்துவிட்டோம்.

ஒரே ஒரு கேள்வியில் .....

சட்டமன்றத்தில் ஒரே ஒரு கேள்வியில் ஒரு முதலமைச்சரைக் கூட திணறவைக்கும் ஆற்றலைப் பெற்றவர் கலைஞர்.



சட்டமன்றத்தில் காவல் துறைக்கான மானியம் மீதான விவாதத்தின் முடிவில் முதல்வர் எம்.ஜி.ஆர். பணியில் இருக்கும்போது வீர மரணம் அடைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000 வழங்கப்படும் என்று அறிவித்தார். உடனே கலைஞர் எழுந்து, பணியில் இருக்கும்போது இறந்தால் அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு ஏற்கெனவே 10,000 ரூபாய் வழங்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார். எம்.ஜி.ஆர். அறிவிப்பு கூடுதல் தொகையா அல்லது ஏற்கெனவே உள்ளதைப் போன்றதா என கேள்வி எழுப்பினார். அதாவது, குடும்பத்திற்கு தற்போதுள்ள ரூ.10,000 தானா அல்லது ரூ.20,000 கிடைக்குமா என்று கேட்டார் கலைஞர். எம்.ஜி.ஆர். கலைஞரைப் பார்த்து புன்னகைக்க சிறிது நேரம் எடுத்துக்கொண்டார். பிறகு, மரணம் என்பது ஒரு முறைதான் (ஒரு மனிதன் ஒரு முறைதான் இறக்கிறான்) என்றார். குடும்பத்திற்கு 20,000 ரூபாய் கிடைக்காமல், 10,000 ரூபாய் மட்டுமே கிடைக்கும் என்று அர்த்தம்.

சில நிமிடங்களுக்குப் பிறகு சட்டசபை ஒத்திவைக்கப்பட்டபோது, அதிகாரிகள் செய்தியாளர்களை நோக்கி விரைந்தனர். வீர மரணம் அடைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000 கூடுதலாக வழங்கப்படும் என்று தெளிவுபடுத்தினர்.

ஒரே ஒரு கேள்வியில் ஒரு முதலமைச்சருக்கு குழப்பம் ஏற்படுத்த முடியும் என்று கலைஞர் தன் திறமையை வெளிப்படுத்தினார்.



காமனும் இல்லை, ரதியும் இல்லை

கலைஞர் ஆங்கிலத்தில் சரளமாக பேசாவிட்டாலும், திறமையான தகவல் பரிமாற்றத்திற்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் வார்த்தைகளின் கலவையை விருப்பப்படி பயன்படுத்துவார். காங்கிரஸ் போன்ற கட்சிகள் மற்ற எதிர்க்கட்சிகளுடன் பேசி, பொது வேட்பாளரை நிறுத்தி அ.தி.மு.க.வை தோற்கடிக்க நினைத்தபோது, கலைஞர் அதில் ஆர்வம் காட்டவில்லை. தி.மு.க. எதிர்கட்சிகளுடன் ஒன்றிணைந்து பொது வேட்பாளர் மூலம் அ.தி.மு.க.வை எதிர்த்து போராடுமா என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, காமன் (பொதுவானவர்) என்ற சொல்லைக் கிண்டல் செய்து, பொது வேட்பாளர் யோசனையை நிராகரிக்க, "காமனும் இல்லை, ரதியும் இல்லை" என்று இலக்கிய நடையில் கலைஞர் பதிலளித்தார்.

'ஹிந்தி வந்து குந்திக்கும்'

கருணாநிதி, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற கட்சியின் கொள்கை என்று தெரிவித்தாலும், ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதையும் ஆதரித்தார். இது பலரை ஆச்சரியப்படுத்தும். ரைசிங் சன் (அவரது மருமகன் முரசொலி மாறன் ஆசிரியராக இருந்தார்) என்ற இதழை வெளியிடும்போது, ஆங்கில இதழை வெளியிட்டதற்காக ஒரு பிரிவினரின்

விமர்சனத்தை எதிர்நோக்கிய கலைஞர், காமராஜரின் அறிவுரையை சுட்டிக்காட்டினார்.சட்டமன்றத்தில் தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் தமிழை எல்லா இடங்களிலும் பயன்படுத்த வேண்டும், ஆங்கிலத்தை தூக்கி எறிய வேண்டும் என்று கூறியபோது, முதல்வர் காமராஜர் அண்ணாவிடம் ஒரு கருத்தைத் தெரிவித்தார் -- "தம்பி நீயும் கேளு" என்று கலைஞரை நோக்கி சொன்னார்-- "ஆங்கிலத்தை விரட்டி அடித்தால், அந்த இடத்தில் இந்தி வந்து குந்திக்கும்னே!" ஆங்கிலத்தின் பயன்பாடு ஏன் தேவை என்பதை எளிய முறையில் காமராஜர் அற்புதமாக விளக்கியதாகக் கூறிய கலைஞர், காமராஜரின் அறிவுரைகள் இனி வரும் காலத்துக்கும் பொருந்தும் என்றும் கூறினார்.

'எல்லா நீரும் மழை நீர்தான்'

சென்னைக்கு கிருஷ்ணா நீரைக் கொண்டு வந்ததில் தி.மு.க. அரசு வெற்றி பெற்றதாகக் கூறும்போது, வந்தது கால்வாய்களில் பெய்த மழைநீர் தான் என்று எதிர்க்கட்சிகள் கூறியபோது, கலைஞர் "எல்லா நீரும் மழை நீர்தான்" என்று பதிலளித்தார்! அந்த பதிலை அவரவர் பார்வையில் ஆராயலாம்!



இணையதளத்தின் சக்தியை எப்படி தமிழ்நாடு அரசு நல்ல முறையில், செய்திகளை உடனடியாகக் கொண்டுசெல்ல வழிவகுக்கும் என்று முதல்வர் கலைஞருக்கு நான் எடுத்துச் சொல்லி, ஒரு செய்தியை மாதிரியாக வைத்துக்கொண்டு இரண்டு மூன்று பத்திரிகை நிறுவனங்களுக்கு இணையதளத்தின் மூலமாக செய்திகளை அனுப்பி 10 நிமிடங்களில் அந்த செய்தியை, புகைப்படத்துடன், அவர்கள் வெளியிட முடிந்தது. இதை நேரில் கண்ட முதல்வர் கலைஞர் உடனடியாக அமல்செய்ய என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். ஒன்றும் செலவு இல்லை, பத்திரிகை துறையும், பத்திரிகைத் துறையில் உள்ள அனைவரும் ஒரு இணையதள முகவரியை பதிவு செய்து கொண்டால் போதும், அனைவருக்கும் ஒரே நேரத்தில் செய்தி, தமிழ்நாடு முழுவதும், ஏன் உலகமெங்கும் அனுப்பலாம் என்று தெரிவித்தேன். மூன்று நான்கு

நாட்களுக்குள் இது நடைமுறைக்கு வந்தது. அதிகாரிகளுக்கு இதன் பிறகு தான் இணையதள வசதி கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னால், ஒரு வண்டியில் நாளுக்கு ஒரு முறை செய்திக் குறிப்புகளோ, ஒன்று இரண்டு புகைப்படமோ, ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திற்கும் செய்தித்துறை அலுவலர்கள் சென்று, நான்கு மணி நேரத்தில் கொடுக்கப்படும். ஒரே நேரத்தில் எல்லோருக்கும் செய்திக்குறிப்பு கிடைக்காது. இந்த நிலையை மாற்றி, உடனுக்குடன் செய்திகளை அனுப்ப இணையதளத்தைப் பயன்படுத்தினார் முதல்வர் கலைஞர். இன்று எல்லா அரசுகளும், எல்லா கடிதப் போக்குவரத்துகளுக்கும், முடிவுகளுக்கும், இணையதளத்தைப் பயன்படுத்துகின்றன. இந்தப் புரட்சியை செய்தித்துறை முதலில் செய்ய கலைஞர் உத்தரவிட்டதை நாம் நினைவு கொள்வோம்.

மொழித்திறன், புத்திசாலித்தனம், நாவன்மை, உருவகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு நபர் இத்தகைய சக்தி வாய்ந்த தகவல் தொடர்பு வழிமுறைகளைப் பயன்படுத்தியதாக வரலாறு கிடையாது எனலாம். ஏராளமான நிகழ்வுகள் இருந்தும், ஒரு சிறு துளியைத்தான் இங்கே நினைவு கூர்ந்தேன்.

கலைஞரின் ஞாபக சக்தி அபாரமானது. இருந்தாலும் சில நேரங்களில்த னது உதவியாளர் சண்முகநாதனிடம் என்னை தொடர்புகொண்டு நிகழ்வுகளைப் பற்றிய செய்திகளை ஊர்ஜிதம் (ஆண்டு, மாதம், தேதி, வெளியான பத்திரிகை செய்யச் சொல்வார். அந்த செய்திகளை சேர்த்து அவரிடம் வழங்கியது எனக்கு சுமையாகத் தெரியவில்லை, அவர் எனக்கு அளித்த அங்கீகாரம் எனவே கருதினேன். அறிவாலயத்தைவிட்டு அவர் வண்டி காவல்துறையின் உதவியோடு வேகமாகச் சென்றாலும், பத்திரிகையாளர்களாகிய நாங்கள் அவர் கவனத்தை ஈர்த்து அவரிடம் எதையோ தெரிவிக்கக் காத்திருக்கிறோம் என்று புரிந்துகொண்டு, வண்டியை நிறுத்தச் சொல்லி, எங்களை அருகில் வரசொல்லி, என்ன செய்தி என்று கேட்காமல் செல்ல மாட்டார். தொலைக்காட்சி கேமராக்கள் அவரை சூழ்ந்து கொண்டாலும், நிருபர்கள் முன்னாடி உட்கார வழி விடுங்கள் என்று கறாராகக் கூறுவார், நிருபர்கள் தானே கேள்வி கேட்பார்கள் என்று சொல்வார். காலம் மாறினாலும், பேனா முனைக்கு அவர் என்றுமே செய்யும் மரியாதை அலாதியானது, போற்றக்கூடியது.

நான் கண்ட "கலைஞர்"





ஐ.சண்முகநாதன்
மூத்த பத்திரிகையாளர்

'தினத்தந்தி'யில் செய்தி ஆசிரியராக நான் பணியாற்றிவந்த காலக்கட்டம். தி.மு.கழகம் ஆட்சிக்கு வரவில்லை. தி.மு.கழகத்தின் ஐம்பெரும் தலைவர்களில் ஒருவராக கலைஞர் விளங்கினார். அநேகமாக தினமும் பொதுக் கூட்டத்தில் பேசுவார். இரவு பத்து மணி அளவில் கூட்டம் முடிந்ததும் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொள்வார்.

"இந்தித் திணிப்பைக் கைவிடாவிட்டால், சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்படும் என்று காரசாரமாகப் பேசினீர்களாம் . நிருபர் சொன்னார். செய்தியை எழுதிக் கொண்டிருக்கிறார். இந்த செய்திதான் இன்று 'பேனர்' (எட்டுக்காலம்) என்பது போல் என் பதில் இருக்கும். அப்போது 'தினத்தந்தி' எதிர்க்கட்சிப் பத்திரிகையாக இருந்தது.

வரலாறு படைத்த தேர்தல்

1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

தமிழ்நாட்டில் அதுவரை ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ், தோல்வியை சந்தித்தது. அதுவரை தோல்வியைக் கண்டறியாத பெருந்தலைவர் காமராஜரும் தோல்வி அடைந்தார்.

முதலமைச்சராகப் பதவியேற்றார், பேரறிஞர் அண்ணா. பொதுப்பணித்துறை அமைச்சராக கலைஞரை நியமித்தார்.

பதவி ஏற்பு விழா முடிந்ததுமே தன் பணியைத் தொடங்கிவிட்டார், கலைஞர். அவரைப் பேட்டி காணலாம் என்று கருதி, அவர் இல்லத்திற்குப் போன் செய்ததில், அவர் அடையாறுக்கு சென்றிருப்பதாகச் சொன்னார்கள். செல்போன் வராத காலமது.

படகு சவாரி

நானும், நிருபரும், போட்டோகிராபரும், அலுவலக ஜீப்பில் அடையாறு விரைந்தோம். கடலுடன் அடையாறு கலக்கும் பகுதியில் (முகத்துவாரம்) ஒரு படகில் கலைஞர் போய்க்கொண்டிருந்தார். நாங்களும் ஒரு படகைப் பிடித்து, அவர் இருக்கும் இடத்துக்கு விரைந்தோம்.



பக்கிங்ஹாம் கால்வாய்

கலைஞர் தன்னுடன் இருந்த அதிகாரிகளிடம் சொன்னார், "வண்டல் மண் அதிகமாகி, சேரும் சகதியுமாக இருக்கிறது.அருகில் உள்ள வீடுகளையெல்லாம் தண்ணீர் சூழ்ந்துள்ளது இதை எல்லாம் சரி செய்ய 3 நாள் எடுத்துக் கொள்ளுங்கள், 3 நாள் கழித்து மீண்டும் வந்து பார்ப்பேன். எல்லாம் சரியாக இருக்க வேண்டும்" என்றார். எந்தப் பொறுப்பாக இருந்தாலும், அதை சரியாகவும், விரைவாகவும் செய்துமுடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் கலைஞர்.

வள்ளுவர் கோட்டம்

இப்போது வள்ளுவர் கோட்டம் உள்ள இடத்தில் முன்பு ஒரு பெரிய குளம் இருந்தது. பாசி பிடித்து பாழைடைந்த குளம். அதை தூர்த்துவிட மாநகராட்சி முடிவு செய்தது. சென்னை நகரில் பல்வேறு இடங்களில் ஓடிக்கொண்டிருக்கும் குப்பை லாரிகள், காலை பத்து மணி அளவில் அங்கு வந்து சேரும். குப்பைகளை குளத்தில் கொட்டும் பணி நடைபெறும்.

சுமார் மூன்று மாத காலத்தில், குளம் முழுவதும் குப்பையால் நிரப்பப்பட்டு, சுமார் பத்து கிரவுண்ட் நிலம் கட்டாந்தரையாகக் கிடந்தது.

அந்த இடத்தை என்ன செய்யலாம் என்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார் கலைஞர். தற்செயலாக நான் அப்போது அங்கிருந்தேன்.



அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட அந்த இடத்தைப் பயன்படுத்தலாம் என்று பெரும்பாலானோர் தெரிவித்தனர்.

"வீடு கட்டுவதற்கு எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. இந்த இடம் நகரின் மையப் பகுதியில் முக்கியமான இடத்தில் இருக்கிறது. இதை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும்" என்று கூறிய கலைஞர் ஒரு வெள்ளைத் தாளை எடுத்தார். அவரே 'ஸ்கெட்ச்' போட்டார்.

"இதோ பாருங்கள். இது கல் தேர். இதில் திருவள்ளுவர் சிலை. விழாக்கள், கூட்டங்கள் நடத்துவதற்கு ஏற்றவகையில் சுமார் 500 பேர் உட்காரக்கூடிய மண்டபம். நுழைவாயிலில், வள்ளுவரின் மார்பளவுச் சிலை. இந்த இடத்திற்கு 'வள்ளுவர் கோட்டம்' என்று பெயர்" என்றார் கலைஞர். இப்படித்தான் உதயமாயிற்று 'வள்ளுவர்கோட்டம்'.

நான் பத்திரிகையாளன் என்பதால், அடிக்கடி கோபாலபுரத்திலுள்ள கலைஞர் வீட்டிற்குச் சென்று அவரை சந்திப்பது வழக்கம். அவரைப் பார்ப்பதற்காக கட்சிக்காரர்கள், பிரமுகர்கள் சுமார் 15 பேர் ஹாலில் அமர்ந்திருப்பார்கள். எல்லாம் நேரப்படி நடக்க வேண்டும் என்பதில் கலைஞர் கவனமாக இருப்பார். சரியாக காலை 8 மணிக்கு 'பஸ்ஸர்' ஒலி கேட்கும். பார்வையாளர்களை சந்திக்க கலைஞர் தயார் ஆகிவிட்டார் என்று அர்த்தம். ஒவ்வொருவராக மாடிக்கு அழைக்கப்படுவார்கள். அவரிடம் 'வழவழா கொழகொழா' பேச்சுக்கே இடம் இல்லை. நேரடியாக விஷயத்துக்கு வந்து விட வேண்டும். அவர்களில் சிலரை தலைமைச் செயலகத்துக்கும், சிலரை கட்சி அலுவலகத்துக்கும் வரச்சொல்லி விடுவார். சிலரை மனு எழுதித்தரச் சொல்வார்.

கலைஞர் அறைக்கு முன் "காலம் பொன் போன்றது; கடமை கண் போன்றது" என்ற சிறிய போர்டு காட்சியளிக்கும்.

வந்தவர்களை எல்லாம் பார்த்துவிட்டு, காலை ஒன்பது மணி அளவில் தலைமைச் செயலகத்துக்கு காரில் புறப்பட்டுவிடுவார் கலைஞர்.



கலைஞரின் காலம் ஒரு பொற்காலம்





பகவான் சிங்
(மூத்த பத்திரிகையாளர் / டெக்கான் க்ரானிக்கள்களின் முன்னாள் நிருவாக ஆசிரியர்)

அறிவியல், அரசியல், பத்திரிகைத்துறை போன்ற பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒருவரின் ஆயுளில், காலச்சக்கரம் ஒரு 6 தசாப்தங்கள் பின்னோக்கிச் செல்ல முடிந்தால் – சரித்திரம் படைத்த, சகாப்தமான சில ஆளுமைகளுடன், அதிர்ஷ்டம் இருந்தால் நேரடித் தொடர்போ அல்லது குறைந்தபட்சம் அந்தக் கால கட்டத்தின் செய்தித்தாள்கள் அல்லது பிற ஆவணங்கள், இலக்கியங்கள் வாயிலான தொடர்போ இருந்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம். தங்கள் குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும், அந்த ஆளுமைகள், அவர்களால் இந்த உலகத்துக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட தாக்கங்கள் குறித்துத் தாங்கள் நேரில் கண்ட, கேட்டவைகளைப் பகிர்ந்து கொள்வது ஒரு அருமையான அனுபவமாக இருக்கும். அந்த மாமனிதர்களின் காலத்தில் நடந்த நிகழ்வுகளுக்குச் சாட்சியாக அதில் பங்கெடுத்துள்ளேன் என்று கூறிக்கொள்ளும்போது ஏற்படும் கர்வம் மிகவும் திருப்தியளிக்கக்கூடியது. கடந்து செல்லும் ஒவ்வொரு சகாப்தமும், தத்தம் துறைகளின் நாயகர்களாக விளங்கி இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வுடன் ஒன்றி,

காலத்தால் அழிக்கமுடியாத தமது பாதச்சுவடுகளைப் பதித்துச் செல்லும் ஒரு சில சிறந்த தலைவர்களை நமக்கு விட்டுச் செல்கிறது.

தமிழகத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியிலும், தேசிய அரசியலிலும் மிகச் சிறந்த பங்களிப்பை ஆற்றியுள்ள முத்தமிழறிஞர் கலைஞர், பிரமிக்க வைக்கும் தனது வாழ்க்கை வரலாற்றின் வாயிலாக, காலத்தால் அழியாத காவியமாகத் திகழும், அத்தகைய ஓர் ஆளுமை என்பதில் மறுகருத்தில்லை. நமது வாழ்க்கை வரலாற்றில் இவர் இடம் பிடித்த அளவு பக்கங்களை வெகு சிலரே பிடித்திருக்கமுடியும். மிக ஏழ்மையான பின்புலத்தில், தமிழகத்தின் ஒரு கிராமத்தில் இவரின் வாழ்க்கை தொடங்கியது.

எனது இறுதி மூச்சு வரை, ஆஹா, அவரைச் சந்திக்கும், அவருடைய செய்தியாளர் கூட்டங்களில் பங்குபெறும், அனல் பறக்கும் அவரது மேடை முழக்கங்களைக் கேட்கும், அனேகமாக அன்றாடம் முரசொலியில் அவரது 'உடன்பிறப்பே...' கடிதங்களைப் படிக்கும், தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் ஆற்றிய மாபெரும் தொண்டுகளுக்கு ஒரு பத்திரிகையாளனாக நேரில் கண்ட சாட்சியாயிருக்கும் பேறு பெற்றவன்" என்று மார்தட்டிக் கொள்ளக்கூடிய வெகு சிலரில் நானும் ஒருவன். திராவிட சித்தாந்த ஜாம்பவானின் வியப்பூட்டும் காலகட்டத்தில் இப்படிப்பட்ட, மனதைத்தொடும், இன்னும் பல அனுபவங்களின் நினைவுகளைப் பொக்கிஷமாகப் போற்றி வாழ்வேன்.

கூரியநிருவாகத்திறன்,விரைவான முடிவுகள் எடுக்கும் சாதுர்யம்,உயரதிகாரிகளைக் கையாளும் பாணி, அமைச்சரவையில் இருக்கும் இளம் அமைச்சர்களைப் போஷித்து வளர்க்கும் பண்பு ஆகியவற்றுக்காகக் கலைஞரின் ஆட்சிக் காலம் காலாகாலத்துக்கும் நினைவு கூரப்படும். வறியோர், பட்டியலின, பழங்குடி சமூகத்தினர், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர், பெண்கள் போன்ற எளியோருக்கான இவரது தொலைநோக்கு கொண்ட மேம்பாட்டுத் திட்டங்களை வரலாறு என்றும் உரைக்கும்.

இவரது ஆட்சியின்கீழ் தமிழ்நாடு ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைந்துள்ளது. தொழில் துறை, சாலைகள் மற்றும் பாலங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, சுகாதாரம், ஏழைகளுக்கான நலத்திட்டங்கள், இன்னும் பல. மாநிலத்தின் பொருளாதாரத்தை விரிவுபடுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மக்களின், குறிப்பாக இளைய சமுதாயத்தினரின் வருவாயைப் பெருக்கவும், 1990களில் அறிமுகமான பொருளாதார தாராளமயமாக்கல் வாய்ப்பளித்தது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதற்கிணங்க, இதனால் ஏற்படக்கூடிய வளர்ச்சியை சரியாகக் கணித்த கலைஞர், தமிழ் நாட்டின் நலனுக்காக ஒரு கலவைப் பொருளாதாரத்தைக் கைக்கொண்டார். மென்பொருள் துறையில் தமிழகம் முன்னிலை வகிக்கும் வகையில் சென்னையில் 'டைடல் பார்க்' அமைக்க உதவினார்.


BAPASI
ற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம்,
rs' d Publishers' Asso tion, Ch n

பிறகு இதுபோன்று சென்னையில் பல இடங்களில் மென்பொருள் பூங்காக்கள் உருவாயின. உற்பத்தித்துறையில், குறிப்பாக ஜவுளி மற்றும் வாகனத் துறைகளில் மாநிலம் வளர்ச்சியடையவும் பல திட்டங்களைத் தொடங்கினார்.வாகனங்களின் விற்பனை அதிகரிப்பு, காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து, ஸ்ரீபெரும்புதூர் அருகே இருங்காட்டுக்கோட்டையில் ஹூண்டாய் நிறுவனம் மிகப்பெரிய தொழிற்சாலை அமைக்க உடனடியாக ஒப்புதல் அளித்தார். வாகனத்துறையில் தமிழ்நாடு மிகப்பெரிய வளர்ச்சியடைந்து, அதன் தலைநகரமான சென்னை, இந்தியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படக் காரணமானார்.

வெற்றியின் போதை தலைக்கேறாமல் பார்த்துக்கொண்டதைப் போலவே தேர்தல் தோல்விகளாலும் அரசியல் பின்னடைவுகளாலும் துவளாத உறுதி படைத்தவர் கலைஞர். தேர்தலில் தனது கட்சி தோல்வியைச் சந்தித்து விட்டால், அறிவாலயம் சென்று கட்சியின் மூத்த தலைவர்களுடன் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து, மாவட்டங்களிலிருந்து வரும் கட்சி நிருவாகிகள் மற்றும் தொண்டர்களின் மனக்குமுறலுக்குச் செவி சாய்த்து, அவர்களுக்கு ஆறுதல்கூறித் தேற்றி, அடுத்த தேர்தலில் வெற்றியை உறுதிசெய்ய ஊக்கமளித்த மகத்தான தலைவர் அவர்.

தோல்வியைத் தொடர்ந்த செய்தியாளர் சந்திப்பை எதிர்கொள்ளத் தன்னைத் தயார் செய்துகொண்டு, சங்கடமான வினாக்களை எழுப்பும் சில செய்தியாளர்களையும் சாதுர்யமாகக் கையாளும் திறன் படைத்தவர்.

தி.மு.க. தேர்தலில் வெற்றி பெற்றால், பெரியார் சிலைக்கும் அண்ணா சமாதியிலும் தமது மரியாதைகளைத் தெரிவித்துவிட்டுப் புனித ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் அலுவலகம் சென்று தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் திட்ட ஒப்புதல்களில் கையெழுத்திட்டுத் திறம்படப் பணியைத் துவக்கும் கடமையாளர் கலைஞர். கடலை நோக்கி அமைந்துள்ள முதலமைச்சரின் அறையில் முதல் பணியாக அந்தக் கோப்புகளில் கையெழுத்திட்டுவிட்டு, அதே அறையில் அவர் மேசையைச்சுற்றி நாங்கள் நின்ற படியோ அல்லது பக்கத்து அறையிலோதான் செய்தியாளர் சந்திப்பு நடைபெறும், தடபுடலாக. கலைஞர் ஆட்சியில் இருந்தபோதும் சரி இல்லாதபோதும் சரி, பத்திரிகையாளர்களுக்குக் கலைஞருடனான உறவு மிகவும் சிறப்பாகவும், நெருக்கமாகவும் இருந்தது. அந்த மாமனிதருடனான ஊடகவியலாளர்களின் தொடர்புகள் மிக அருமையான நட்புறவாகவே அமைந்திருந்தது. அதற்கு முதல் காரணம், அவர் தன்னை ஒரு அரசியல்வாதி என்பதைவிட, முதலில் தான் ஒரு பத்திரிகையாளன் என்று கூறிக்கொள்வதில்தான் பெருமை அடைந்தார். நான்காவது தூணான ஊடகங்களை முகஸ்துதி செய்வதற்காகக் கூறப்பட்ட ஒரு சம்பிரதாய வார்த்தையன்று அது. பொங்கிப்பெருகும் அவரது பழைய நினைவுகளிலிருந்து மனதார வெளிவந்த உணர்வு.



அப்போதைய தஞ்சாவூர் மாவட்டத்தின் திருக்குவளை என்ற தனது சொந்த கிராமத்துக்கு அருகில் உள்ள திருவாரூர் தெருக்களில் 13 வயதிலேயே இந்தி திணிப்பை எதிர்த்து துண்டு பிரசுரம் வெளியிட்டு விநியோகித்ததில் தொடங்கியது அவரது பத்திரிகைத் துறைப் பயணம். அவர் நிறுவிய 'முரசொலி' நாளிதழில் எழுதிவந்த கட்டுரைகளே, 1969இல் அண்ணாதுரை மறைவிற்குப் பிறகு, இறுதி மூச்சு வரை கட்சியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததற்கு மையப்புள்ளியாக இருந்தன.

முரசொலியின் 'கலைஞர் கடிதம்' பகுதியை 'உடன்பிறப்பே...' என்று அவர் தொடங்கிய விதம், தொண்டர்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதாக அமைந்தது.

மாநிலம் மற்றும் அதைத் தாண்டிய பலதரப்பட்ட சமூக அரசியல் விஷயங்கள் குறித்த விழிப்புணர்வைத் தொண்டர்களுக்கு ஏற்படுத்தி அவர்களுக்குப் புது இரத்தம் பாய்ச்சிய சேவையை அக்கடிதங்கள் செய்தன. தேர்தல் தோல்விகள் தன்னைப் போலவே தன் தொண்டர்களையும் நம்பிக்கையிழக்கச் செய்யாமல், மேலும் வெற்றியை நோக்கி வீறு நடைபோடச் செய்த பெருமை கலைஞரின் கடிதங்களுக்கு உண்டு. பெரியாரும், அண்ணாவும் கண்ட அனைவருக்கும் சம நீதி - சமூக நீதி என்ற திராவிட சித்தாந்த விதைகளைத் தமிழக இளைஞர்களின் மனதில் விதைத்த மாபெரும் புரட்சிக்கும் அவரது எழுத்துகளே அடிப்படைக் காரணமாக அமைந்தன.

முரசொலியின் கலைஞர் கடிதம் அவரது எண்ணங்கள் மற்றும் கட்சியின் நிலைப்பாடு ஆகியவற்றின் பிம்பமாக இருந்ததால், செய்திக் கட்டுரைகள் எழுத என் போன்ற பத்திரிகையாளர்களாலும் பொருத்தமான எதிர் உத்திகளை வகுக்க அரசியல் எதிரிகளாலும் கூர்ந்து அவதானிக்கப்பட்டது. தமிழ் நாடு மற்றும் நாட்டின் பிற பகுதிகள் பற்றிய விவகாரங்கள் மட்டுமல்லாமல், உலக அளவில் நடக்கும் நிகழ்வுகள் பற்றியும் தனது அறிவார்ந்த கண்ணோட்டத்தை முரசொலியில் வெளியிட்டு வந்தார்.

அப்படிப்பட்ட பல தருணங்களில் என் மனதைத் தொட்ட ஒரு விஷயத்தை நான் இங்கு நினைவுகூர விரும்புகிறேன் – 2006 நவம்பர் 5 அன்று சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை விதித்து ஈராக்கின் நீதிமன்றம் பிறப்பித்த ஒரு மோசமான உத்தரவுக்கு, தன் வாழ்நாள் முழுவதும் தீவிர ஜனநாயகவாதியாக இருந்த கலைஞர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். "மனித வாழ்வின் சில பக்கங்களைக் கிழிப்பது போன்றது" என்று கூறி மரண தண்டனையைக் கண்டனம் செய்தார்.

"புத்தகத்தின் தவறான பக்கங்களை மாற்றியமைக்கும் வாய்ப்பை மரண தண்டனை மறுக்கிறது. இது சாமான்யனுக்கு மட்டுமல்ல, சதாம் ஹுசைன் போன்ற சர்வாதிகாரிகளுக்கும் பொருந்தும்" என்று அவர் அப்போது கூறியிருந்தார்.

பழுத்த பத்திரிகையாளர் மற்றும் சாதுர்யமான அரசியல்வாதி என்ற கலவையாக இருந்த கலைஞர், வாக்களிக்கும் மக்களைச் சென்றடைய ஊடகங்களின் பங்களிப்பு எத்தனை மகத்தானது என்பதை நன்கறிந்திருந்தார். சில முக்கிய நிகழ்வுகளின்போது கூட்டப்படும் செய்தியாளர் சந்திப்பில் மட்டுமல்லாமல், ஆட்சியில் இருந்தாலும், இல்லாமல் போனாலும் அவரது அலுவலகத்தில் இருந்து செய்திக் குறிப்புகள் தொடர்ந்து வெளியாகிக்கொண்டே இருக்கும். கலைஞரின் ஆற்றல் மிக்க தளபதியாக இருந்த மு.க.ஸ்டாலின், ஒரு ஓரமாக நின்று, நிருபர்களின் கேள்விகளையும் அதற்குத் தந்தை அளிக்கும் சாமர்த்தியமான பதில்களையும் கூர்ந்து கவனித்து வந்ததை நாங்கள் கண்டு ரசித்திருக்கிறோம் பத்திரிகையாளர் ஒருவர் கலைஞரை சந்திக்க விரும்பினால், எளிதில் அவரை அணுகும் நிலை இருந்தது. அவரது நெடுங்காலத் தனிச் செயலர் சண்முகநாதன் அந்தச் சந்திப்பை உறுதி செய்வார். நான் முன்பே கூறியதைப்போல, அது பத்திரிகையாளர்களின் பொற்காலம். பத்திரிகையாளர்களின் தலைக்கு மேல் கூரை இருக்க வேண்டும் என்று விரும்பிய அவர், சென்னையில் திருவான்மியூர் கடற்கரைக்கு அருகில் அழகான பத்திரிகையாளர் குடியிருப்பு ஒன்று உருவாக உதவினார். மேலும், தமிழகம் முழுவதிலும் பல நகரங்களிலும், சிறு நகரங்களிலும் அத்தகைய பத்திரிகையாளர் குடியிருப்புகள் உருவாயின. அரசு மருத்துவமனைகளில் பத்திரிகையாளர்களின் சிறப்பு சிகிச்சைக்காக ஆணை வெளியிட்டார் கலைஞர். அவர் வகுத்த நல்வழியில் திறமையுடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் முதல்வர் ஸ்டாலின்

அண்மையில், பத்திரிகையாளர்களுக்கு உதவும் வகையில் ஒரு நல வாரியத்தை உருவாக்கியுள்ளார்.

முதலமைச்சராக இருந்த காலத்திலும் ஆட்சியில் இல்லாத காலத்திலும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை உரிமையாளர்களின் பல பிரச்சினைகளிலிருந்து அவர்கள் மீள உதவி செய்தவர் கலைஞர். உதாரணமாக, தென் மாவட்டங்களில் விகடன் நிறுவனம் தாக்குதலுக்கு உள்ளானபோது, உடனடியாக வன்முறை நிறுத்தப்படுவதை அவர் உறுதி செய்தார்.

அரசியலிலிருந்து அவரை அகற்றியிருக்கக்கூடிய அதிர்வுகளை அவர் ஒரு முறை அல்ல, இரு முறை எதிர்கொண்டுள்ளார் – அரசியல் பழிவாங்கலுக்காக அவரது அரசு மத்திய அரசால் இரண்டு முறை கலைக்கப்பட்டது. முதல் முறை, இந்திரா காந்தியின் கொடுங்கோல் அவசர காலப் பிரகடனத்தைத் தீவிரமாக எதிர்த்ததற்காக 1976 ஜனவரி 31 அன்று ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போது, கழகத்தின் இளைய தலைமுறையைச் செம்மையாக வழிநடத்தி வந்த அவரது மகன் திரு. ஸ்டாலினும், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுக் கொடுமைகளை அனுபவித்தார்.

இரண்டாவது இடி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு என்று குற்றம் சாட்டப்பட்டு, 'சட்டம் ஒழுங்கு சீர்குலைவு' என்ற காரணத்திற்காக, 1991 ஜனவரி 30 அன்று ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போது, காங்கிரஸ் ஆதரவில் பிரதமராக இருந்த சந்திரசேகருக்கு ராஜீவ் காந்தி மூலமாக அழுத்தம் கொடுக்கப்பட்டது. ராஜீவ் காந்திக்கு அழுத்தம் கொடுத்தது, தான் முதல்வராக வேண்டும் என்ற அவசர ஆர்வம் கொண்ட ஜெயலலிதா. அடுத்த இரண்டு மாதங்களில், ராஜீவ் காந்தி பிரதமராக வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் கட்சி வெளியிலிருந்து அளித்த வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதால், சந்திரசேகர் அரசும் வீழ்ந்தது வரலாறு. இந்திய அரசியலில் நீண்ட காலமாக இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதம் நிலவித் தான் வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கும் கலைஞர் பல நன்மைகளைச் செய்துள்ளார். தான் ஆட்சியில் இல்லாதபோதும், அவர்களுக்காக வலுவாகக் குரல் கொடுத்துள்ளார். மாநில அரசின் தலைமைப் பொறுப்பின் பாரம் சில சமயங்களில் ஈழ சகோதரர்களுக்கான போராட்டத்தின் தீவிரத்தைக் குறைத்திருக்கலாம். கலைஞரின் தலைமையிலான தி.மு.க., கொட்டும் மழையிலும் மனிதச் சங்கிலி உள்ளிட்ட பல போராட்டங்கள் நடத்தியுள்ளது. இந்தப் போராட்டங்களில் பங்கேற்றவர்கள் ஈழத்துக்கான உண்மையான அக்கறையுடன் செயல்பட்டவர்கள், வெறும் கட்சித் தலைமையைத் திருப்திப்படுத்த அல்ல. ஆனால், எதிரணியில் அம்மையாரின் அருள் பார்வையைப் பெறுவதற்காகவே இதுபோன்ற, அவர் நடத்திய போராட்டங்களில் கலந்து கொள்வது கட்சி நிருவாகிகளின் வழக்கமாக இருந்தது.

2009 மே மாதம், இரத்த வெள்ளம் தவிர வேறு எந்தப் பலனுமின்றி ஈழப்போர் முடிவுக்கு வந்தபிறகும், ஈழத் தமிழர்களுக்கு நீதி கோரிக் கலைஞர்

குரல் கொடுத்து வந்தார். இன வன்முறைக்கு அஞ்சி நாட்டைவிட்டு வெளியேறித் தமிழ்நாடு அரசு நடத்தும் எண்ணற்ற அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தவர்களுக்கும் சேர்த்துத்தான் அவர் குரல் ஒலித்துள்ளது. அந்த அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்கள் விரும்பினால், அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படவேண்டும் என்பதை வெகு முன்னதாகவே உணர்ந்தார் கலைஞர். ஈழப் போர் குறித்த ஒரு விவரக் குறிப்பை வெளியிட்டதுடன், அகதிகள், பல தலைமுறைகளுக்கு நாடற்றவர்களாகத் தவிக்கவிடப் படுவதைவிட, அவர்களுக்கு ஏன் இந்தியக் குரியுரிமை வழங்கப்படவேண்டும் என்று விளக்கும் அர்த்தமுள்ள அறிக்கையையும் அவர் முன்வைத்தார்.

கலைஞரின் அடியொற்றி, மக்கள் நலனை இலக்காகக் கொண்ட, பொறுப்புள்ள அரசியல் மற்றும் ஆற்றல் மிக்க நிருவாகம் ஆகியவற்றை வழங்கிவரும் நமது அன்புக்குரிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் தமிழ் நாடு அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்கள் உள்ளிட்ட ஈழத் தமிழர்கள் மேல் அதே ஆழ்ந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார். இலங்கைத் தமிழர்களை உள்ளடக்காத, 2019 குடியுரிமை திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுமாறு மத்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை 2021 செப்டம்பர் 8 அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றியது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு. மேலும் சென்ற ஆண்டு ஜூன் 20, உலக அகதிகள் தினமாக அனுசரிக்கப்பட்டபோது, அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் கைக்கொண்ட கருப்பொருள் – 'தாய்நாட்டிற்கு வெளியேயும் நம்பிக்கை'. இந்த அடிப்படையில், மாண்புமிகு முதல்வர், ஈழத் தமிழர்களுக்கான இந்தியக் குடியுரிமை என்ற பிரச்சினைக்குத் தீர்வு காணத் தனது அரசு ஆவன செய்யும் என்று அறிவித்தார். மாண்புமிகு தமிழ் நாடு முதல்வர் ஈழத் தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தருவார் என்று ஈழத் தலைவர்கள் என்னிடம் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

கலைஞரின் காலம் ஒரு பொற்காலம் - அவர் ஆட்சியில் இருந்தபோதும், ஆட்சி அதிகாரம் இல்லாதபோதும். ஏன்? சொல்லப்போனால், இதுவும் கலைஞரின் காலம்தான். அவரின் எண்ணங்கள், எழுத்துகள், உரைகள், முடிவுகள், செயல்பாடுகள், திட்டங்கள், கொள்கைகள், ஆகியவற்றின் அதிர்வலைகள் இன்றும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் உணரப்படுகின்றன. அவை தொடர்ந்து உலகத் தமிழர்களின் மனங்களிலும், செயல்களிலும், வாழ்விலும் பல நூற்றாண்டுகளுக்கு ஏதோ ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி.

தமிழ்நாட்டின் சிக்கலான சாதி சமன்பாடுகளுக்கு மத்தியில் கலைஞர் கருணாநிதி ஒரு மதச்சார்பற்ற ஜனநாயகவாதி



ஆர்.மோகன்
டெக்கான் க்ரானிக்கிள் நாளிதழின்
சென்னை மற்றும் தமிழ்நாடு
பதிப்புகளின் ரெசிடென்ட் ஆசிரியர்

மெரினா நினைவிடத்தில் நால்வர் அணியாக மாறிய திராவிடர்களின் இறுதிச் சின்னமாக விளங்கியவருக்கு சிறப்பான அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. முத்துவேல் கருணாநிதி அவர்களின் மறைவு, சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸின் ஆதிக்கத்திலிருந்து விலகிய தமிழ் நாட்டு அரசியலில் ஒரு சகாப்தத்தின் முடிவைப் பிரதிபலிக்கிறது. இந்தி திணிப்புக்கு எதிரான புரட்சிகர மாணவர் போராட்டம் திராவிட இயக்கமாக அரை நூற்றாண்டைக் கடந்த திராவிட இரட்டையாட்சியாக உருமாற்றம் பெற்றது. தனித்துவமான தமிழ் உணர்வால் ஆளப்பட்ட ஒரு சகாப்தம்.

தமிழ்நாட்டின் மிகவும் சிக்கலான சாதிச் சமன்பாடுகளுக்கு மத்தியில் உண்மையான, மதச்சார்பற்ற ஜனநாயகவாதியாக இருக்கும் கருணாநிதியின் திறமைதான் என்னை மிகவும் கவர்ந்தது. அவர் பெரியாரின் சீடராக இருந்தார். மேலும் அவர் எழுதிய ஆற்றல்மிக்க வசனங்கள் மற்றும் திரைக்கதைகளில் சிறப்பாக வெளிவந்த அவரது இலக்கியத் திறமையால் வெளிப்படையாக இருந்தார். ஆனால், தீவிர நாத்திகரான கலைஞர் கருணாநிதி, அவரது வழிகாட்டியைப்போல் பிராமணர் மற்றும் உயர்சாதியினரை த்வேஷிப்பவர் அல்ல என்பதை அவரது கதை உணர்த்தும். சாதி அரசியல் திராவிட இயக்கத்திற்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது. ஏனெனில், அது



நூற்றாண்டுகளுக்கு மேல் சாதி ஆதிக்கத்தைத் தகர்த்தது. சமூக வரலாற்றில் உயர்சாதியின் பிடியை உடைக்க இத்தகைய இயக்கத்தின் தேவைக்கு எதிராக யாரும் வாதிட முடியாது.

இருப்பினும், கலைஞர் கருணாநிதி, வரலாற்று ரீதியாக பின்தங்கிய மக்களுக்கு கைகொடுக்க உறுதியான நடவடிக்கையை ஊக்குவித்தாலும், பல உயர்சாதி நண்பர்களின் அறிவுரை தனக்குத் தேவை என்பதை உணர்ந்துகொள்ளும் அளவுக்கு விவேகம் உள்ளவராக இருந்தார். அவரது நெருங்கிய ஆரம்பகால ஆலோசகர்களில் சிலர் பிராமணர்கள். அவர்களுடனான அவரது நட்பு சாதி சமன்பாடுகளால் ஏற்பட்ட பிளவுகளையும் தாண்டி இருந்தது. அறிஞர் அண்ணாதுரையின் மறைவுக்குப்பிறகு, அவர் அமைச்சராக இருந்த முதல் நாட்களிலும், முதல்வராக இருந்தபோதும் அவரது மருத்துவர், வழக்கறிஞர் மற்றும் கணக்காளர்கள் அனைவரும் உயர் சாதியைச் சேர்ந்தவர்கள். உண்மையில், பிரபல வழக்கறிஞர் வி.பி.ராமன், தி.மு.க.வின் அரசியல் சாசனம் மற்றும் துணைச்சட்டங்கள் போன்றவற்றை வரைவதில் முக்கியப் பங்காற்றியவர்.

நட்புக்கும், அவரது பதவிக்கும் இடையே அவர் கொண்டிருந்த சமநிலை மிகவும் அதிசயமாக இருந்தது. அவரது நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரின் மகனுக்கு அவர் எங்களுடன் சேர்ந்து பள்ளியை விட்டு வெளியேறிய உடனேயே மருத்துவ சீட் கொடுப்பதில் அவர் விரும்பவில்லை என்பது எனக்கு தெரியும். ஆனாலும் கோபாலபுரம் ரம்மி விளையாடும் நாட்களில் தனது நெருங்கிய தோழர்களில்


அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம்

ஒருவராக இருந்ததால், சென்னையின் இளைய ஷெரீப்பாக ஆர். ராமகிருஷ்ணனை நியமித்ததுபோல, தன் நண்பர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்தார்.

அவரது தொழில்துறை நண்பர்களில் பலர் உயர் சாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அவருக்கு விசுவாசம் காட்டுவதில் குறைவில்லாமல் இருந்தார்கள். அது இந்தியாவில் உரிமம், அனுமதி மற்றும் ஒவ்வொரு சிறிய விஷயத்திற்கும் அனுமதி தேவைப்படும் காலங்களில் அரசாங்க உதவியை நாடுவதைத் தாண்டிய நிலைப்பாடு.

ஒரு சிறு வயது நினைவு மேலோங்குகிறது. 1957 சட்டமன்றத் தேர்தலில் இந்து மகாசபை வேட்பாளரான எனது தாத்தா, திராவிடக் கட்சியான தி.மு.க.வின் எழுச்சியைப் பலரை விட முன்னதாகவே கண்டார். 1962ஆம் ஆண்டு தஞ்சாவூரில் இருந்து எம்.எல்.ஏ. தேர்தலில் கலைஞர் கருணாநிதி நிற்பதால் அவருக்கு எனது தாத்தா 1960இல் அவரது தேர்தல் நிதிக்கு நன்கொடையாக 1,000 ரூபாய் கொடுத்தார். தனது இல்லத்தில் சாலையை நோக்கி நின்று கொண்டிருந்த தாத்தா எஸ்.ஸ்ரீநிவாச்சாரிக்கு நன்றி தெரிவிக்கும் வகையாக தனது பிரமாண்டமான தேர்தல் ஊர்வலத்தை தெற்கு பிரதான சாலையில் நிறுத்திவிட்டு, கைகூப்பினார்.

சமீபத்தில் ஃபார்வேர்ட் செய்யப்பட்ட வாட்ஸ்அப் செய்திகளில், கோவில் பூசாரிகள் நாத்திகவாதியின் வீட்டிற்குச்சென்று, இறைவனைப் புகழ்ந்து ஸ்லோகங்களை சொல்வதைப் பார்த்து சிலர் மனம் புண்பட்டது. மதச்சார்பற்ற நபராக, அர்ச்சகர்கள் வீட்டுக்கு வருவதை கலைஞர் கருணாநிதி தடுக்க மாட்டார். அனைத்து மதத்தினரும், தன்னிடம் வந்தால் அவர்களுடன் வெளிப்படையாக நடப்பார். இருப்பினும் அவர் தனது அரசியல் காரணங்களுக்காகக் கூட வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல முயன்றதில்லை. இங்கேயும் அவரால் தீவிரமாக இல்லாமல் சமநிலையை அடைய முடிந்தது. கடைசி வரை அவர் அப்படியே இருந்தார்.



முத்துவேல் கருணாநிதி மற்றும் ஊடகவியலாளர்



ஏ.எஸ்.பன்னீர்செல்வன்
மூத்த ஆய்வாளர்
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

பத்திரிகையாளர்கள் ஒரு தட்டைத் திருப்புவதுபோல் எளிதாக எழுதுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்பு, தி.மு.க. தலைவர்மு.கருணாநிதியின் வாழ்க்கை வரலாற்றை எழுத பென்குயின் வெளியீட்டாளர்கள் என்னை நியமித்தனர், அந்த நூல் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் வெளிவந்தது. நான் ஒரு நிருபராக, ஆசிரியர் மற்றும் இந்தியாவில் உள்ள ஒரே செய்தித்தாள் ஒம்புட்ஸ்மேன், காலக்கெடுவை தவறவிட்டதில்லை. ஆனால், இந்தப் புத்தகத்தில் நான் ஒரு தசாப்தம் தாமதமாகி விட்டேன். திரு. மு.கருணாநிதியின் வாழ்க்கையை ஆவணப்படுத்துவதில் உள்ள சவால்களே இதற்கு முக்கிய காரணம்.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு அரசியல், சமூக மற்றும் பொது வாழ்க்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நபரை ஒரு கால அளவில் மட்டும் மதிப்பிட முடியாது. இன்றைய திரையுலக வழக்கத்தைப் பயன்படுத்தி சினிமாவுக்கான அவரது பயணத்தை என்னால் படிக்க முடியவில்லை, தொழில்நுட்ப புரட்சியால் தற்போது சமூக ஊடகங்களின் வரம்பைப் பயன்படுத்தி அவரது பத்திரிகையைப் புரிந்துகொள்ள முடியவில்லை, பிரைம்டைம் தொலைக்காட்சியின் கிளாடியேட்டர்

விளையாட்டைப் பயன்படுத்தி, ஈரோட்டில் பெரியாரின் வெளியீட்டில் பணியாற்ற வேண்டும் என்ற அவரது விருப்பத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. முட்டாள்தனமான அ.தி.மு.க. கோஷ்டிப் பூசலைப் பயன்படுத்தி, டி.கே.வின் மடியில் இருந்து தி.மு.க. விலக நேரிடும்போது, அவரது மன அதிர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த ஒவ்வொரு பிரச்சினைக்கும், அவர் தனது முக்கிய முடிவுகளை எடுத்த வரலாற்று யதார்த்தத்தைப் பார்க்க வேண்டிய கடமை எனக்கு ஏற்பட்டது.

எனது வாழ்க்கை வரலாற்றைத் தாமதப்படுத்தும் காரணிகளே தமிழ் இந்து ஊடகத்துடனான கலைஞர் கருணாநிதியின் உறவைப் பற்றிய இந்த சிறுகட்டுரையைத் தாமதப்படுத்திய காரணிகளாகும். நான் அவற்றைச் சூழலாக்க வேண்டும் மற்றும் அவர் பணிபுரிந்த மற்றும் அவர் ஊடகங்களுடன் தொடர்புகொண்ட சரியான வரலாற்றுக் கட்டமைப்பை வழங்க வேண்டும். கலைஞர் கருணாநிதி அரசியலுக்கு வந்தபோது, சென்னை மாகாணத்தில் இருந்த முக்கிய ஊடகங்கள் சுயமரியாதை இயக்கத்தின் சக்தியை அங்கீகரிக்கவில்லை. இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்கள் தங்கள் சொந்த ஊடகங்களை உருவாக்கினர். கலைஞர் கருணாநிதிக்கு நான்காவது எஸ்டேட்டுடனான ஈடுபாட்டைப் புரிந்துகொள்ளும்போது நாம் நினைவில் கொள்ளவேண்டிய முதல் உண்மை இதுதான். எனவே, முரசொலியின் எழுபத்தைந்து ஆண்டுகள் ஆழமான உள்ளடக்கிய ஜனநாயகத்தின் உருவகம்.

சுதந்திர இந்தியாவின் ஆரம்பப் பத்தாண்டுகளிலும், சுதந்திர இந்தியாவின் தொடக்க காலத்திலும் பிரதான ஊடகங்கள் திராவிட இயக்கத்தையும், அதன் தலைவர்களையும் புறக்கணித்ததற்கான காரணங்களில் ஒன்று, பொது ஊடகத்துறையை வரையறுத்த இரண்டு மேலாதிக்க அரசியல் கதைகளுடன் தொடர்புடையது. காங்கிரஸ் தலைமையிலான தேசியவாதம் மொழியியல் உரிமைகள் மற்றும் அடையாள அடிப்படையிலான அரசியலின் பிற வடிவங்களை அதன் ஒருங்கிணைப்பு செயல்முறையிலிருந்து திசை திருப்புவதாகக் கருதியது. இந்தியப் பிரிவினை இந்த இடஒதுக்கீட்டை தி.க.வுக்கு எதிராகத் தீர்மானிப்பதில் பெரும்பங்காற்றியது. ஊடகத்துறையின் அறிவுசார் மூலதனம், வர்க்கம் என்ற பெரிய இந்திய இடதுசாரி இயக்கத்திலிருந்து பெறப்பட்ட வகை மற்றும் சாதி அல்ல. சாதிக்காரணியால் பெரும்பான்மையான மக்கள்மீது சுமத்தப்பட்ட அவமானத்தை அவர்கள் அங்கீகரிக்கத் தவறிவிட்டனர். இங்கு கலைஞர் கருணாநிதியின் பேனா சமூகநீதி, ஒருவரின் மொழி மற்றும் அதன் பாரம்பரியத்தின் உள்ளார்ந்த பெருமை மற்றும் பன்மைத்துவத்தை மதிக்கும் ஒரு அரசியலை நோக்கிய கருத்துக்களை தெளிவுபடுத்துவதற்கான ஒரு சுய – உந்துதல் கருவியாக மாறுகிறது.

ஒருவருடைய அரசியல் களம் ஆதிக்க அரசியல் பேச்சுக்களில் இருந்து பெரிதும் வேறுபட்டால், தனக்கென ஒரு ஊடகத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொண்ட நவீன இந்தியாவில் உள்ள ஒரு சிலரில் கலைஞர் கருணாநிதியும் ஒருவர். மேலும், உச்சரிப்பு ஒரு வடிவிலோ அல்லது ஒரே





மேடையிலோ இருக்க முடியாது என்பதை அவர் உணர்ந்தார். பொதுப்பேச்சு, நாடகம், சினிமா, புனைகதை மற்றும் இதழியல் ஆகிய ஐந்து வெவ்வேறு வகைகளில் அவரது உச்சரிப்பு பரவியது. இந்த பல-தள அணுகுமுறையில், அவர் தனது சொந்த அமைப்புகளை உருவாக்கினார். அதனால், அவரது அரசியல் விளம்பரதாரர்களின் வணிக நலன்களால் அல்லது அரசியல் கந்துவட்டிகளால் மறைக்கப்படவில்லை.

ஒரு தளத்தில் ஒரு குறிப்பிட்ட சிந்தனையின் இழையை மிகவும் சுவாரசியமான தடையற்ற நெசவு இருந்தது, அந்த யோசனையைப் பெருக்க அடுத்த தளத்திற்குச் சென்றது. உதாரணமாக, அவர் பொதுமேடைகளில் தமிழ் இதிகாசங்களின் விடுதலைத் தன்மையைப் பற்றி பேசத் தொடங்கினார், பின்னர், இந்த காவியங்களின் அடிப்படையில் திரைப்படங்களை உருவாக்கி அவை எவ்வளவு விடுதலை அளிக்கின்றன என்பதைக் காட்டினார். 1951இல் மந்திரிகுமாரி முதல் 1964இல் பூம்புகார் வரை, அவர் ஐந்து தமிழ் இதிகாசங்களையும் கடந்து வந்தார்.

இந்திய இடதுசாரிகளுக்கு IPTA நாடகமேடையை வழங்கியது என்றால், திராவிட இயக்க நாடகங்களுக்கு ஈர்ப்பு கொடுக்க சிறந்த நடிகர்களின் ஆதரவைப் பெறுவதில் கலைஞர் கருணாநிதி பெரும்பங்கு வகித்தார். தி.மு.க.வின் அரசியலையும், திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் அரசுடன் தனிச் சலுகை ஒழிப்பு, வங்கி தேசியமயமாக்கல் ஆகியவற்றைச் செயல்படுத்தியதையும் விமர்சிக்க சோ.எஸ்.ராமசாமி, முஹம்மது பின் துக்ளக் எழுதியபோது, கலைஞர் கருணாநிதி "நன்னே அறிவாளி" என்ற எதிர்நாடகத்தைக் கொண்டு வந்தார். காலப்போக்கில், நன்னே அறிவாளி இன்னும் அதன் நகைச்சுவை மற்றும் அரசியல் கூர்மையைத் தக்கவைத்துக் கொள்கிறது, மேலும் முஹம்மது பின் துக்ளக் மிகவும் சோர்வாக இருக்கிறது.

1960களின் முற்பகுதியில், கலைஞர் கருணாநிதி மற்றும் அவரது கட்சி மீதான பிரதான ஊடகங்களின் அணுகுமுறை மாறியது. மேலும், அவரது எழுத்துக்களை பிரபல பத்திரிகைகளில் தொடராக வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. உண்மையில், அவரது சுயசரிதை, நெஞ்சுக்கு நீதி முதலில் குமுதத்தில் தொடராக வெளிவந்தது, பின்னர் அவர் அதை தினமணி கதிருக்கு மாற்றினார், குமுதம் அவரது அரசாங்கத்தை விமர்சித்தபோது. இந்த அனுபவம், எமர்ஜென்சிக்கு பிந்தைய காலகட்டத்தில், குங்குமம் தொடங்கப்பட்டதன் மூலம் அவரது கட்சி தனது நண்பராக இருந்து எதிரியாக இருந்த டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரனிடம் தேர்தலில் தோல்வியடைந்தபோது, பிரதான பத்திரிகை சந்தையில் நுழைவதற்கு அவருக்கு தைரியத்தை அளிக்கிறது.

உள்ளிடவும் ஊ டகங்களில் ஏற்படும் ஒவ்வொரு தொழில்நுட்ப மாற்றத்திலும், அதில் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் என்று கலைஞர் கருணாநிதி ஒரு நனவான முடிவை எடுத்தார். அவர் தனது பேரன் கலாநிதி மாறனால் தொடங்கப்பட்ட "பூமாலை" என்ற காணொளி இதழின் தொடக்கக் கருத்துக்களை வெளியிட்டார். மேலும், அவர் சன் டிவியைத் தொடங்கும்போது கலாநிதிமாறனுக்கு ஆதரவாக நின்றார். வெகுகாலத்திற்குப் பிறகு, அவர் தனது சொந்த சேனலான கலைஞர் டிவியைத் தொடங்கினார். ஊடகத்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிய அவரது புரிதலைப் புரிந்துகொள்ள, அறிஞர் சி.என்.அண்ணாதுரையின் மரணத்தைத் தொடர்ந்து 1969ஆம் ஆண்டு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பியதைத் திரும்பிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டையும் சென்றடைந்த அவரது கவித்துவம், நாவலர் நெடுஞ்செழியனிடமிருந்து கட்சியின் தலைமைக்கு வந்த சவாலை உண்மையில் முறியடித்தது.

பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்தாமல், குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தாமல் தாங்கள் சொல்ல விரும்புவதை மட்டும் சொல்லும் தற்போதைய ஏகத்துவ அன்பான தலைவர்களைப் போலல்லாமல், கலைஞர் கருணாநிதி எப்பொழுதும் பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்தி, கேள்விகளை முன்வைத்தவர். கூர்மையான கேள்விகளை மழுங்கடிக்க நகைச்சுவையை சாமர்த்தியமாகப் பயன்படுத்தினார் மற்றும் பின்னணியை வழங்குவதற்காக நிகழ்வுகள், எந்த கேள்வியும் தடைசெய்யப்படவில்லை.

அவர் தனது பேனாவைப் பயன்படுத்தி அவருக்கு எதிரான வாதங்களையும், அவர்மீது தவறுகளைக் கண்டறிந்த வெளியீடுகளையும் எதிர்த்தார். முரசொலியில் காரசாரமான கருத்துக்கள் இருக்கலாம், அதைவிட கடிப்பான கார்ட்டூன்கள் இருக்கலாம். ஆனால், அது ஒரு யோசனையுடன் ஒரு யோசனையை எதிர்த்துப் போராடியது. பேனா வாளால் அமைதியாக்கப்படவில்லை.



முழுநேரப் பத்திரிகையாளர்!



ப. திருமாவேலன்
தலைமை செய்தியாசிரியர்
கலைஞர் செய்திகள்
தொலைக்காட்சி

எனது "செங்கோலை வேண்டுமானால் யாரும் பறித்துக்கொள்ள முடியும். ஆனால், எழுதுகோலை மட்டும் யாராலும் பறித்துக்கொள்ள முடியாது" என்று 'சாவி இதழின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார் தலைவர் கலைஞர். உண்மை தான். அவரிடம் இருக்கும் எழுதுகோலை யாராலும் பறிக்க முடியவில்லை. ஏனென்றால் அது அவர் உருவாக்கிய எழுதுகோல்; அவரை உருவாக்கிய எழுதுகோல். இறுதி வரையிலும் அவரது எழுத்தாட்சி தொடர்ந்தது.

1989ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது நிருபர்கள் சங்கத்துக்கு வந்து பேசும்போது கலைஞர் சொன்னார்...

"நிருபர்கள் இடத்திலே, என்றைக்கும் எனக்கு ஒரு தணியாத அன்பு உண்டு. நேசம் உண்டு, பாசம் உண்டு. சில நேரங்களில் நிருபர்கள் விரட்டப்பட்டார்கள், அனுமதிக்கப்படவில்லை, நிருபர்கள் ஆத்திரப்பட்டார்கள் என்றெல்லாம் செய்தி வரும்போது அப்படி விரட்டப்பட்டவர்களில் நானும் ஒருவனாக இருப்பது போல எண்ணிக்கொண்டு வேதனைப்படுவது உண்டு" என்றார். உண்மைதான். அவர் மிகத் தேர்ந்த நிருபர், பத்திரிகையாளர்!

அவரது தொடக்கமே பத்திரிகையாளர் வாழ்க்கை தான். 'மாணவநேசன்' என்ற இதழின் மூலமாகத்தான் அவரது பொதுவாழ்க்கை தொடங்கியது. அரசியல் நேசனாக, இலக்கிய நேசனாக ஆவதற்கு முன்னால், பத்திரிகை நேசன் கலைஞர். 'என் மூத்த பிள்ளையே முரசொலி' என்ற சொல்லுக்கு மேல் ஆதாரம் தேவையா?

2001ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் நடந்தபிறகு ஒரு நாள் 'ஜூனியர் விகட'னுக்காக நான் பேட்டிக்குச் சென்றிருக்கிறேன். 'எப்படி உங்களால் இவ்வளவு பணிகளுக்கு மத்தியிலும் இவ்வளவு எழுத முடிகிறது?' என்ற கேள்வியைக் கேட்டேன். "பேனாவை பிடுங்கிட்டா நான் செத்துருவேன்யா" என்று சிரித்தபடியே சொன்னார்.

அப்போதுதான்...

"குடிசை தான்! ஒரு புறத்தில்
கூரிய வேல்வாள்
வரிசையாய் அமைந்திருக்கும்
வையத்தைப் பிடிப்பதற்கும்
வெம்பகையை முடிப்பதற்கும்
வடித்து வைத்த படைக்கலம் போல் மின்னும் ; மிளிரும்..."

– என்ற கவிதையை அப்படியே ஒப்பித்தார்.

'அந்தக் கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி' என்ற வரியை இடையில் நான் சொன்னது அவருக்கு உற்சாகமாக இருந்தது.

**"...கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?
வாளிங்கே? அவன் நாக்கெங்கே?"**

என்று இறுதி வரி வரைக்கும் சொல்லி முடித்தார். 1945ஆம் ஆண்டு எழுதிய கவிதை இது. 2000ஆம் ஆண்டில் அப்படியே சொன்னார். 'எப்படி இவ்வளவு மனப்பாடமாக இருக்கிறது உங்களுக்கு?' என்று கேட்டேன். "நாம எழுதினதை நாமே மறந்தால் மற்றவர்கள் எப்படி நினைவில் வைத்திருப்பார்கள்?" என்றார் கலைஞர். அப்போதுதான், தனது வசனங்களை டாக்டர் எம்.ஜி.ஆர். பேசினால் எப்படி இருக்கும்; நடிகர் திலகம் சிவாஜி பேசினால் எப்படி இருக்கும்; நடிகர் எஸ்.எஸ்.ஆர். பேசினால் எப்படி இருக்கும் என்றும் சொன்னார்.

ஆண்ட்ராய்டு போன் இல்லாத காலம் அது. அப்படியே எடுத்திருந்தால் கலைஞரின் கலைமொழித் திறமைக்கு எடுத்துக்காட்டாக அந்தக் காட்சிகள் அமைந்திருக்கும்.

காபி வந்தது. அதை அருந்த முடியாத அளவுக்கு அவரது வசனத்தில் ரசித்து இருந்தேன். சில நிமிடங்கள் கழித்து கோப்பையை எடுக்கும்போது, 'ஆறியிருக்கும்யா.



அப்படியே வையுங்க' என்று வேறொரு காப்பிக்கு அழைப்பு மணியை அழுத்தினார் கலைஞர்.

இன்னொரு முறை பேட்டிக்காக காலை 9.30க்கு வரச்சொல்லி இருந்தார் தலைவர் கலைஞர். மடிப்பாக்கத்தில் இருந்து என்னுடைய இரு சக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது பஞ்சர் ஆகிவிட்டது. பஞ்சர் ஒட்டிவிட்டுக் கிளம்பினேன். மறுபடியும் காற்று இறங்கிக்கொண்டு இருந்தது. வாகனத்தை நிறுத்திவிட்டு, ஆட்டோ பிடித்து கோபாலபுரம் வரும்போது மணி 9.50.

'தலைவர் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறார் என்றார் 'நிழல்' சண்முகநாதன். மாடிக்கு ஓடுகிறேன். உள் அறையில் இருந்து திரையை விலக்கி வந்து ஆசனத்தில் அமர்கிறார் தலைவர். 'கேளுங்க' என்கிறார் இயல்பாக!

என்ன சொல்வாரோ... கோபம் காட்டுவாரோ... பேட்டியை விரைந்து முடித்துக் கொள்வாரோ... எல்லாப் பதட்டமும் கேளுங்க' என்பதில் முடிந்தது. தாமதம் பற்றி அவர் கவலை கொள்ளவில்லை.

1999ஆம் ஆண்டின் இறுதியில் புத்தாண்டு தொடங்குவதற்கு முன்பாக, நிருபர்கள் அனைவரும் கோட்டையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரைச் சந்தித்து, புத்தாண்டு வாழ்த்து சொல்லச் சென்றோம். ஓஷோ எழுதிய 'ஞானத்தை அடைய ஏழு படிகள்' என்ற நூலை 'ஹிக்கின்பாதம்ஸ் கடையில் நான் வாங்கச் சென்றிருந்தேன். மாண்புமிகு முதல்வர் கலைஞருக்கு அந்த நூலை அன்பளிப்பாகக் கொடுத்தேன். 'விகடன் பேப்பர்' மாலை நாளிதழ் நிருபர் நான். மதியம் 2 மணி வாக்கில் மாண்புமிகு முதலமைச்சரின் மக்கள் தொடர்பு அதிகாரி அண்ணன் மருதவிநாயகம் போன் செய்தார். 'இந்தப் புத்தகத்தை எதற்காகக் கொடுத்தீர்கள் என்று தலைவர் கேட்கச் சொன்னார் என்றார். 'எனக்கு ரஜினீஷ் பிடிக்கும். தலைவரும் யோகா கற்றுக்கொண்டு வருகிறார். அதனால் கொடுத்தேன்' என்றேன். 'அதில் 16 பக்கம் இல்லையாம், தலைவர் சொல்லச் சொன்னார்' என்றார்.

காலையில் புத்தகம் கொடுத்தேன். மதியத்துக்குள் அதனை திருப்பிப் பார்த்து விட்டார். அவருக்குள் ஒரு எழுத்தச்சன் வாழ்வதன் அடையாளம் இது.

'தென் திசைப் பதிப்பகம்' நடத்திவந்த காலம் (2007) அது. 'தடை செய்யப்பட்ட தமிழ் எழுத்தும், காலமும்' என்ற எனது நூலின் மூன்று தொகுதிகள் வெளியாகி இருந்தது. அன்றைய காலை நாளிதழில் அது குறித்த விமர்சனம் வெளியாகி இருந்தது. காலையில் பதிப்பக அலுவலகத்துக்கு 9 மணிக்குச் செல்கிறேன். ஒரு காவலர் நின்று கொண்டு இருந்தார். 'காலையில் 7 மணியில் இருந்து நிற்கிறேன் சார்... அந்த மூன்று புத்தகமும் வேண்டும். சி.எம். வாங்கிட்டு வரச் சொன்னாங்க' என்று சொன்னார் அந்தக் காவலர். கலைஞருக்கு இருந்த அறிவின் ஆர்வத்தின் வெளிப்பாடு இது.

அது ஒன்றிய பா.ஜ.க. அரசில் இருந்து வெளியேறிய நேரத்தில் எடுக்கப்பட்ட பேட்டி. அதனால், பேட்டி, அச்சுக்குப் போவதற்கு முன்னால் எடுத்துவந்து காண்பிக்கச் சொன்னார் தலைவர் கலைஞர். மதிய வேளை 1.45 மணிக்குத்தான் ஆலிவர் சாலை இல்லத்துக்கு வந்தார். முன் அறையில் அமர்ந்திருக்கிறேன். 'தயார் ஆகிவிட்டதா?' என்றவர் கையில் இருந்த காகிதத்தை வாங்கி, அப்படியே அந்த இடத்தில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தார். அவர் வழக்கமாக உட்காரும் இருக்கை அல்ல அது. காத்திருப்பவர்களுக்காக போடப்பட்ட இருக்கை அது. எந்தளவுக்கு ஆர்வமாக இருந்தார் என்பதற்கு உதாரணம் இந்தக் காட்சி.

படித்துக்கொண்டே வந்தவர், திடீரென தலையை உயர்த்தி என்னைப் பார்த்தார். நான் சிரித்தேன். எதுவும் என்னிடம் கேட்கவில்லை.

அதன்பிறகு திடீரென தலையை உயர்த்தி மீண்டும் என்னைப் பார்த்தார். எதுவும் கேட்கவில்லை.

"நல்லா கோர்வையா எழுதி இருக்கய்யா" என்று சொல்லிவிட்டு முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

இரண்டு இடத்தில் என்னைப் பார்த்ததற்குக் காரணம்... பேட்டியின்போது அவர் சொன்ன ஒரு வார்த்தையைத் தவிர்த்திருந்தேன். ஒரு இடத்தில் அவர் சொல்லாத ஒரு வாக்கியத்தை எழுதி அதற்கு அழுத்தம் கொடுத்திருந்தேன். இரண்டையும் அவர் ஏற்றுக்கொண்டார். அதற்கான அங்கீகாரம்தான் அந்தப் பார்வை.

தலைவர் கலைஞரையோ அவரது நிலைப்பாடுகளையோ விமர்சித்து எழுதிய காலக்கட்டத்தில் அழைத்து, 'ஏன் இப்படி எழுதுகிறீர்கள்?' என்று அவர் கேட்டது இல்லை. அவதூறு வழக்குகள் போடவில்லை. (டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சியில் தான் என் மீது 16க்கும் மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டன!) 'முரசொலி'யில் விமர்சித்து எழுதவில்லை. எனது ஆசான் சின்னக்குத்தூசி அவர்கள் எனக்கு பதில் எழுதி இருக்கிறார். கலைஞர் அவர்கள் எழுதியது இல்லை. 'உங்களுக்கு பூணூல் கல்யாணம் எப்ப சார்?' என்று கூட குத்தூசி கிண்டலடிப்பார் .

"உங்கள் தலைமையில்தான்" என்று நான் சொல்வேன், ஆனாலும் தலைவர் கலைஞர் விமர்சித்து எழுதியது இல்லை.

தலைவர் கலைஞரின் 90ஆவது பிறந்த நாளையொட்டி 'ஆனந்த விகடன்' இதழில் 'வரலாறும், தகராறும்' என்ற எனது கட்டுரை 2013ஆம் ஆண்டு வெளியானது. 'திருவாரூர் தியாகராசர் கோவில் தெப்பக்குளத்தின் அருகில் இரண்டு சிறுவர்கள்...' என்று அந்தக் கட்டுரை தொடங்கும். இறுதியாக...

"மத்தியில் ஆட்சிக் கூட்டணியில் இல்லை. மாநிலத்தில் ஆட்சியிலும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்திலும் இல்லை." வரப்போகும் மாநிலங்களவைத் தேர்தலில் ஒரே ஓர் இடம்பெறும் வலிமையில்கூட இல்லை. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கலைஞரோடு யார் கூட்டு சேருவார்கள் என்றும் தெரியவில்லை. ஆனாலும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த வாரம் தனது ஆட்சியின் இரண்டாம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகளுக்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள், தனது உரை முழுவதையுமே கலைஞருக்கு விளக்கம் சொல்வதற்கே செலவு செய்தார்.

"சட்டசபைக்கே செல்லாவிட்டாலும் அதன் இயக்கங்களைத் தீர்மானிப்பதில், தான் ஒரு தவிர்க்க முடியாத சக்தி என்பதை நிரூபிக்கும் அளவுக்கு கலைஞரின் நிழலாட்சி என்றும் நிலைத்திருக்கும்!" என்று அந்தக் கட்டுரை முடியும். தலைவர் கலைஞரை மிகமிக மகிழ்ச்சியில் ஆழ்த்திய கட்டுரை என்பதை அறிந்தேன், அதனை 'முரசொலி'யில் வெளியிட்டார். முன்னணியினர் கூடியிருந்த கூட்டத்தில் வாசிக்கச் சொன்னார். 'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சியில் அதனை வெளியிடச் செய்தார்.

'ஆனந்த விகடன்' நிறுவனத் தலைவராக அப்போது இருந்தார், பெரியவர் பாலசுப்பிரமணியம். கண்ணகி சிலையை டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் அகற்றியது தொடர்பான கட்டுரையை நான் எழுதி இருந்தேன். 'பத்திரிகை வெளியானதும் காலங்காத்தால முதல்போன் கலைஞரிடம் இருந்துவரும்.அஞ்சு மணிக்கெல்லாம் போன் பண்ணினார் ஒரு தடவை' என்றார் உள்துறைச் செயலாளர். அன்றைக்கு மாலை 4 மணிக்கு நான் செல்கிறேன். 'விகடன் பேப்பர்' மாலை நாளிதழை விரித்துவைத்து உன்னிப்பாகப் படித்துக்கொண்டு இருந்தார். என்னைப் பார்த்ததும் சொன்னார். 4.30க்கு சி.எம்.இடம் இருந்து போன் வருவதற்கு முன்னால் நான் படித்து முடித்துவிடுகிறேன். பத்து நிமிடம் வெயிட் பண்ணுங்க' என்றார்.

தலைவர் கலைஞராக இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் கலைஞராக இருந்தாலும் செய்தித்தாள்களை ஆளுக்கு முன்னால் படித்துவிடுவார். அனைவரையும் எழுப்புவது செய்தித்தாள் அல்ல. அவர்தான். ஏனென்றால் அவர்தான் தமிழ்நாட்டின் தலைப்புச் செய்தி!

சுடச்சுடச் செய்திகளை முந்தித் தருகிறோம் என்று விளம்பரம் செய்வார்கள். சுடச்சுடப் படித்துவிட வேண்டும் என்று நினைப்பவர் கலைஞர்.

செய்திக்கு எப்படி நேரங்காலம் கிடையாதோ, அதுபோலத்தான்... கலைஞரும் முழுநேரப் பத்திரிகையாளர்!







கல்கியின் படைப்புகளை கடைசித் தமிழன் உயிரோடு இருக்கின்ற வரையிலே மறக்க முடியாது



முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

அறிவூட்டுகின்ற அற்புதமான படைப்புகளை தமிழ் நிலத்திற்கு வழங்கியவர் மறைந்தும் மறையாத மாணிக்கம் பேராசிரியர் கல்கி என்பதை தமிழன் வாழ்கின்ற வரையிலே, கடைசித் தமிழன் உயிரோடு இருக்கின்ற வரையிலே மறக்க முடியாது.

அத்தகைய கல்கி அவர்களுடைய நூல் ஒன்று ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கப்பட்டு அதுவும் மிக அருமையாக மொழிபெயர்க்கப்பட்டு நம்முடைய அருமை நண்பர் கார்த்திக் நாராயண் அவர்களுடைய கைவண்ணம் பெற்ற அந்த நூல் வெளியிடுகின்ற நேரத்தில் அதை வெளியிடுகின்ற பேற்றினை எனக்கு கிட்டியமைக்காக இந்தப் பேறினை எனக்களித்த இந்தப் பதிப்பகத்தாருக்கு, குறிப்பாக பெருமாட்டி சிவகாமி ஆச்சியாருக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நானும் இளமைக் காலத்திலே இத்தொடர்கதையைப் படித்தவன்

பொன்னியின் செல்வன் தொடர் கதையை நானும் என்னுடைய இளமைப் பருவத்திலே தொடர்ந்து

படித்தவன், பிறகு அது நூல் வடிவிலே வந்தபோதும் அதைப் படித்து மகிழ்ந்தவன். இப்போது ஆங்கிலத்தில் அது மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையிலும் அதைப் படிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. உடல்நலக் குறைவு ஏற்பட்டதும் ஒரு வகையிலே நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் இந்த ஆங்கில ஆக்கம் பொன்னியின் செல்வனை நான் முழுமையாகப் படித்திருக்க இயலாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக குறிப்பெடுத்துக் கொண்டுவந்து எல்லாவற்றையும் படித்ததைப்போல இங்கே நடித்துவிட்டுப் போயிருக்க வேண்டும். ஆனால் Bed Rest என்பார்கள். அதைப்போல படுத்துக்கொண்டே இருக்க வேண்டும். எழக்கூடாது என்ற மருத்துவர்களுடைய கட்டளையையேற்று படுக்கையிலேயே ஐந்து நாட்கள் இருந்த காரணத்தினால் அந்த ஆங்கில நூலை முழுமையாகவும் படிக்க முடிந்தது. அதுமாத்திரமல்ல, ஆங்கில நூல் சரியாக வெளி வந்திருக்கிறதா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க பொன்னியின் செல்வன் தமிழ் நூலையும் படிக்கின்ற அந்த வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. அந்த ஓய்வு போதாமல் இன்று காலையிலிருந்து மாலையிலே சென்ட்ரல் இரயில்வே நிலையத்திற்கு செல்கின்ற வரையிலே அந்தத் தமிழ் நூலையும் படித்துவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறேன். அதனால்தான் ஒரு நூலை வெளியிட வேண்டுமென்று பதிப்பகத்தாரோ, ஆசிரியரோ என்னைக் கேட்கும்போது நான் தயக்கம் காட்டுவேன். காரணம், படித்து விட்டல்லவா பேச வேண்டும் என்பதற்காக! இல்லையேல் முதல் பக்கம், இடையிலே இரண்டு பக்கம், கடைசி பக்கம் இவைகளைப் படித்துவிட்டு முழுதும் படித்ததைப்போல பாவனை காட்டிவிட்டுப் போகின்ற பழக்கம் எனக்கு எப்போதும் இல்லை. இனியும் இருக்கக்கூடாது என்று நான் இயற்கையை வேண்டுகிறேன்.

இந்த நூல் பேராசிரியர் கல்கி அவர்களால் தொடர் ஓவியமாக 1950ஆம் ஆண்டு எழுதப்பட்டது. ஐந்து பாகங்களாக எழுதப்பட்டது. முதல் பாகம்தான் இங்கே வெளியிடப்பட்டிருக்கிறது. அடுத்தடுத்து வரும் பாகங்களும் விரைவிலே வெளிவரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளையும் வெளியிடும் வாய்ப்பு எனக்கே கிடைக்குமென்று நான் எண்ணுகின்றேன்.

பதிப்பகத்தார் இந்த நூலை வெளியிடும் வாய்ப்பை அளித்தது மாத்திரமல்லாமல், இந்திய நாட்டிலே ஒரிசா மாநிலத்தில் துன்பத் துயரத்தால் வாடி வேதனைக்கு ஆளாகியிருக்கின்ற ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள், பாட்டாளி மக்கள், பசித்த வயிற்றோடு அலைந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு உலகம் முழுதும் இருந்து வருகின்ற உதவிகளோடு தமிழகத்தின் சார்பாக நாம் அளிக்கின்ற உதவியும் இருக்கட்டும் என்று பெருமனதோடு ஒரு இலட்சம் ரூபாயை நிதியாக



வழங்கியமைக்கும் நான் தமிழ் நாடு அரசின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கதை நிகழ்ந்து 1,032 ஆண்டுகளாகிறது

ஐம்பதாம் ஆண்டு இந்த நூல் எழுதத் தொடங்கப்பட்டது என்ற குறிப்பைக் காணும்போது முதல் பக்கத்திலேயே பேராசிரியர் கல்கி குறிப்பிடுகிறார்: "இன்றைக்கு தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முந்திய காலத்துக்குச் செல்வோமாக" என்றுதான் அவர், பொன்னியின் செல்வனைத் தொடங்குகிறார். அதோடு இப்போது ஐம்பதாண்டுகளை நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். கதை நடந்த காலம் கல்கி அவர்களுடைய கூற்றுப்படி, அவர் எழுதியபோது உள்ள கூற்றுபடி 982 ஆண்டுகளுக்கு முந்திய காலம். இப்போது அதனுடைய ஆங்கிலப் பதிப்பு வெளியிடுகின்ற காலம் 982ஐயும், ஐம்பதையும் கூட்டினால் 1,032 ஆண்டுகளாகிறது. 1,032 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கதை நிகழ்ந்தது என்பதை நினைவிலே நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

முதல் பாகம் வீராணம் ஏரிக் கரையிலே தொடங்கி அது மாமல்லபுரம் கடற்கரையிலே முடிவடைகிறது. வீராணம் ஏரிக்கரையிலே முதல் பாகம் தொடங்குகிறபோது வந்தியத்தேவன் வருகிறான்; அவன் ஏறிச் செல்கிற வாட்ட சாட்டமான குதிரையைக் காண்கிறோம். ஆழ்வார்க்கடியானைக் காண்கிறோம். சைவப் பெரியாரைக் காண்கிறோம். தொடர்ந்து பல கதாபாத்திரங்களைக் காண்கிறோம். மாமல்லபுரம் கடற்கரையிலே முதல் பாகம் நிறைவுறுகிற நேரத்தில் சோழ சாம்ராஜ்யத்தை சாய்ப்பதற்காக நடைபெற்ற சதிகள் ஒரு கட்டத்திலே அம்பலமாகி, அந்தச் சதி வேலைகளை எப்படி சந்திப்பது என்ற முயற்சிகளை மேற்கொள்ளுகின்ற நிலையோடு முதல் பாகம் முடிவடைகிறது.

அன்றைக்கும் மதச் சண்டை இருந்தது

எக்காலத்திற்கும் பொருந்துவதாக பொன்னியின் செல்வன் நூல் அமைந்திருக்கின்றது. ஆனால் ஒன்று. இது எதிர்காலத்திற்குப் பொருந்துவதாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய விருப்பம். என்ன இப்படிப் பேசுகிறாரே என்று கருதாதீர்கள். இந்தக் கதை தொடங்குகிற காலம் இதைப் பேராசிரியர் கல்கி எழுதுகிற காலம் எப்படியிருந்ததோ அதே நிலைதான் இன்றைக்கும் தமிழ்நாட்டிலே இருக்கிறது. அன்றைக்கும் மதச்சண்டை இருந்தது. இன்றைக்கும் மதச் சண்டை, மதவாதப் பிரச்சினைகள் இருக்கின்றன. அன்றைக்கு அருள்மொழிவர்மன் இலங்கை சென்று போரிட்டான். இலங்கையிலே அன்றைக்கும் போர் நடந்தது. இன்றைக்கும்... நான் நிறைவு செய்ய விரும்பவில்லை. நீங்களே கோடிட்ட இடத்தை நிறைவு செய்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையால் பொன்னியின் செல்வன் எழுதத் தொடங்கிய காலம் அல்லது அந்தக் கதை ஆரம்பித்த காலத்தில்

எப்படி தமிழ் நாட்டின் சூழல் இருந்ததோ அதைப்போலவே இன்றைக்கும் அந்தச் சூழல் இருக்கிறது. நான் குறிப்பிட்ட ஆழ்வார்க்கடியானும், சைவப் பெரியவரும் எப்படி தங்களுக்குள் மோதிக் கொண்டார்கள் என்பதை மதமாச்சரியம் எப்படி வெளிப்பட்டது என்பதை பேராசிரியர் கல்கி அவர்கள், அவருக்கே உரிய நடையில் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்திலே 94ஆம் பக்கம் முதல் 97ஆம் பக்கம் வரை குறிப்பிடுகிறார்.

ஆழ்வார்க்கடியான் படகில் ஏறியதை ஆட்சேபித்து சைவப் பெரியார், படகு நகரத் தொடங்கியதும்: வந்தியத்தேவனைப் பார்த்து, "தம்பி! உனக்காகப் போனால் போகிறது என்று இவனை ஏற விட்டேன். ஆனால் ஓடத்தில் இருக்கும் வரையில் அவன் அந்த எட்டெழுத்துப் பெயரைச் சொல்லவே கூடாது. எட்டெழுத்தென்றால் (ஓம் நமோ நாராயணா) சொன்னால். இவனை இந்தக் கொள்ளிடத்தில் பிடித்துத் தள்ளிவிடச் சொல்லுவேன், ஓடக்காரர்கள் என்னுடைய ஆட்கள்!" என்றார்.

இதனை மொழிபெயர்த்த நம்முடைய நண்பர் அவர்கள்,

As soon as the boat began to move, the Veerasaivite Bhat who had objected to being in it with Azhwarkadiyan Nambi said to Vandiyathevan. Thambi! I allowed him to come with us for your sake. But, as long as he is in the boat he must not utter that eightsyllabled (Om Namo Narayana) word. If he does, I will see that he is pushed into the Kollidam. The boatmen are under my orders",

(உடனே வந்தியத்தேவன்).

"நம்பி அடிகளே! தங்களுடைய திருச்செவியில் விழுந்ததா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

Nambi! Did that fall on your sacred ears?" asked Vandiyathevan.

(உங்களுடைய புனிதமான காதுகளில் இந்த வார்த்தைகள் விழுந்ததா? என்று கேட்கிறான். புனிதமான காதாம், இப்போது யார் யாரோ புனிதம் என்று போட்டுக் கொள்கிறார்கள்.)

"இவர் ஐந்தெழுத்துப் பெயரைச் சொல்லாதிருந்தால் நானும் எட்டெழுத்துத் திருநாமத்தைச் சொல்லவில்லை!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"சாட்ஷாத் சிவபெருமானுடைய பஞ்சாட்சரத் திருமந்திரத்தைச் சொல்லக்கூடாது என்று இவன் யார் தடை செய்வதற்கு?

கற்றூணைப் பூட்டி கடலிற் பாய்ச்சினும்

நற்றுணையாவது நமச்சிவாயவே!"

- என்று சைவப் பெரியார் கம்பீர கர்ஜனை செய்தார்.

"நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்.

நாராயணா என்னும் நாமம்!"

– என்று ஆழ்வார்க்கடியான் உரத்த குரலில் பாடத் தொடங்கினான்.

"சிவ சிவ சிவா!" என்று சைவர் இரண்டு காதிலும் கை விரலை வைத்து அடைத்துக் கொண்டார்.

ஆழ்வார்க்கடியான் பாட்டை நிறுத்தியதும், சைவர் காதில் வைத்திருந்த விரல்களை எடுத்தார்.

படகிலே மோதிக்கொண்ட சைவரும், வைணவரும்

ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனைப் பார்த்து, "தம்பி! நீயே அந்த வீர சைவரைக் கொஞ்சம் கேள். இவர் திருமாலின் பெயரைக் கேட்பதற்கே இவ்வளவு கஷ்டப்படுகிறாரே? ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளின் பாத கமலங்களை அலம்பி விட்டுத்தான் இந்தக் கொள்ளிட நதி கீழே வருகிறது. பெருமாளின் பாதம்பட்ட தீர்த்தம் புண்ணிய தீர்த்தம் என்று சிவபெருமான் திருவானைக்காவலில் அந்தத் தண்ணீரிலேயே மூழ்கி தவம் செய்கிறார் அல்லவா?" என்று சொல்லுவதற்குள்ளே, சைவப் பெரியார் மிக வெகுண்டு ஆழ்வார்க்கடியான் மீது பாய்ந்தார். படகின் ஓரத்தில் இரண்டு பேரும் கைகலக்கவே, படகு கவிழ்ந்துவிடும் போலிருந்தது. ஓடக்காரர்களும், வந்தியத்தேவனும் குறுக்கிட்டு அவர்களை விலக்கினார்கள்.

"பக்த சிரோமணிகளே! நீங்கள் இருவரும் இந்தக் கொள்ளிட வெள்ளத்திலே விழுந்து நேரே மோட்சத்துக்குப் போக ஆசைப்படுவதாகத் தோன்றுகிறது. ஆனால் எனக்கு இன்னும் இந்த உலகத்தில் செய்யவேண்டிய காரியங்கள் மிச்சமிருக்கின்றன!" என்றான் வந்தியத்தேவன்.

ஓடக்காரர்களில் ஒருவன், "கொள்ளிடத்தில் விழுந்தால் மோட்சத்துக்குப் போவது நிச்சயமோ, என்னமோ தெரியாது! ஆனால் முதலையின் வயிற்றுக்குள் நிச்சயமாகப் போகலாம்! அதோ பாருங்கள்!" என்றான்.

(கல்கி அவர்கள் அப்போதே பகுத்தறிவு சிந்தனையோடு இதிலே எனக்கு வேண்டியதை நான் எடுத்துக் கொள்கிறேன். அவ்வளவுதான். எனக்கு வேண்டியதையும், நமக்கு வேண்டியதையும் கல்கி எழுதியிருக்கிறார் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன்)

அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் முதலை ஒன்று பயங்கரமாக வாயைத் திறந்து கொண்டு காணப்பட்டது.

"எனக்கு முதலையைப் பற்றி சிறிதும் அச்சம் இல்லை; கஜேந்திரனை ரட்சித்த ஆதிமூலமான நாராயண மூர்த்தி எங்கே போய் விட்டார்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"எங்கே போய் விட்டாரா? பிருந்தாவனத்து கோபிகா ஸ்திரீகளின் சேலைத் தலைப்பில் ஒரு வேளை ஒளிந்து கொண்டிருப்பார்" என்றார் சைவர்.

(நான் சொல்லவில்லை – கல்கி சொல்கிறார்)

"அல்லது பஸ்மாசுரனுக்கு வரங்கொடுத்துவிட்டு அலறிப் புடைத்துக்கொண்டு ஓடியது போல் சிவனுக்கு இன்னொரு சங்கடம் ஏற்பட்டிருக்கலாம்; அந்தச் சங்கடத்திலிருந்து சிவனைக் காப்பாற்றுவதற்காகத் திருமால் போயிருக்கலாம்" என்றான் நம்பி.

"திரிபுர சம்ஹாரத்தின் போது திருமால் அடைந்த கர்வபங்கம் இந்த வைஷ்ணவனுக்கு ஞாபகம் இல்லை போலிருக்கிறது!" என்றார் சைவப் பெரியார்.

"சுவாமிகளே! நீங்கள் எதற்காகத்தான் இப்படிச் சண்டை போடுகிறீர்களோ, தெரியவில்லை! யாருக்கு தெய்வத்தின் பேரில் பக்தியோ, அந்தத் தெய்வத்தை வழிபடுவதுதானே?" என்றான் வந்தியத்தேவன்.

மத நல்லிணக்கத்தை வலியுறுத்திய கல்கி

வந்தியத்தேவன் கூறும்போது ஒரு மதத்தை அல்லது ஒரு தெய்வத்தைக் குறை கூறி தகராறு வேண்டாம், மத மோதல் வேண்டாம், மதப் பிரச்சினை வேண்டாம், மத வாதங்கள் வேண்டாம், மத நல்லிணக்கம் வேண்டும் என்பதை வந்தியத்தேவன் வாயிலாக பேராசிரியர் கல்கி அவர்கள் இதிலே நிலைநாட்டுகிறார்.

கல்கியின் எழுத்திலே உள்ள அழகு, நயம், உவமை, நிகழ்ச்சிகளை படம் பிடித்துக்காட்டுகின்ற தன்மை ஆகியவற்றிற்கு ஒரு எடுத்துக்காட்டு 115வது பக்கத்தில் 14ஆம் அத்தியாயத்தில் உள்ளது.

"சில வீடுகளில் வாசல்களில் நெல் உலரப் போட்டிருந்தார்கள். அந்த நெல்லைக் கோழிகள் வந்து கொத்தித் தின்று விட்டு, "கொக்கரக்கோ!" என்று கத்திக்கொண்டு திரும்பிப் போயின. நெல்லைக் காவல் காத்துக்கொண்டிருந்த பெண் குழந்தைகள் அக்கோழிகளை விரட்டி அடிக்கவில்லை."

(இதென்ன நியாயம் என்று கேட்கலாம். காயப் போட்டிருந்த நெல்லை கோழிகள் தின்றுவிட்டுப் போகின்றன. அதற்கு காவல் நிற்கும் பெண் குழந்தைகள் அந்தக் கோழிகளை விரட்டியடிக்கவில்லையாம். காரணம் அவர்களே சொல்கிறார்கள்.)

"கோழி அப்படி எவ்வளவு நெல்லைத் தின்றுவிடப் போகிறது?" என்று அலட்சியத்துடன் அக்குழந்தைகள் சோழியும், பல்லாங்குழியும் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

கோழி கொத்துகின்ற நெல் ஒரு கலமா, இரண்டு கலமா, ஒரு மூட்டையா, இரண்டு மூட்டையா? கொஞ்சம் நெல்லைத்தான் அவைகள் கொத்திக்கொண்டு போகப் போகின்றன. அதனால் அவைகளை விரட்ட வேண்டிய அவசியமில்லை

என்று அந்த நெல்லின் அளவைப் பொறுத்து அவைகளை விரட்டாமலேயே அந்தக் குழந்தைகள் இருந்து விட்டார்கள் என்று அழகாகக் குறிப்பிடுகிறார்.

இது சோழ சாம்ராஜ்யத்திலே ஏற்பட்ட அரசு கிரீடம் யாருக்கு என்ற சிக்கலின் அடிப்படையிலே எழுந்த ஒரு போராட்டத்திலே காதல், கனிவு, போராட்டம், வாள், வேல் மோதுதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்ற ஒரு அருமையான கதையைத்தான் நமக்கு பேராசிரியர் கல்கி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

சுந்தரச் சோழனுடைய மக்கள் – ஆதித்தகரிகாலன், அருள்மொழிவர்மன். ஆதித்தகரிகாலன் காஞ்சிபுரத்திலே இருந்து காவல் அரணாக சோழ மண்டலத்தைக் காப்பாற்றி வந்தான். அருள்மொழிவர்மன் இலங்கையிலே உள்ள சிங்களவர்களால் சோழ நாட்டிற்கு வரவிருந்த ஆபத்தைத் தடுக்க அங்கேயே பாசறை அமைத்து போரிட்டுக் கொண்டிருந்தான். அதற்கிடையே தோன்றிய சில வஞ்சகர்கள், வஞ்சகிகள் சோழ சாம்ராஜ்யத்தைச் சீர்குலைக்க வேண்டும். தாங்கள் விரும்புகின்றவர்கள்தான் பட்டத்திற்கு வர வேண்டும் என்கிற முனைப்போடு ஆற்றிய கொடுஞ்செயல் ஆகியவற்றையெல்லாம் கொண்டதுதான் இந்தப் பெருஞ்சித்திரம்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் கல்கியின் முன்னுரை

இதிலே எந்தவொரு அத்தியாயத்திலும் கல்கி அவர்கள் ஒரு முன்னுரை எழுதாமல் இருப்பதில்லை. அந்த அத்தியாயத்தைப்பற்றி விவரிக்காமல் இருப்பதில்லை. வரப்போகிற நிகழ்ச்சியைக் கோடிட்டுக் காட்டாமல் இருப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால் இன்றைய எழுத்தாளர்கள் கைவிட்டுவிட்ட ஒரு பழக்கம். ஆனால் 50ஆம் ஆண்டு வாக்கில் பேராசிரியர் கல்கி கையாண்ட பழக்கம். "நேயர்களே என்னோடு கொஞ்சம் வாருங்கள்" என்று சில இடங்களிலே எழுதுவார்கள். "கடந்த அத்தியாயத்தில் சொன்னேனே, அது ஞாபகத்தில் இருக்கிறதா?" என்று கேட்பார். இப்படி நேயர்களோடு நேருக்கு நேர் பேசுவதைப்போல அவருடைய கதை அமைப்பு – ஒவ்வொரு அத்தியாயத்தின் அமைப்புகளும், இப்பொழுதும் இருக்கின்றன என்பதை எண்ணி, எண்ணி நான் ஆச்சரியப்படுகிறேன்.

அதிலே திருப்புறம்பியம் என்கிற ஒரு ஊரைப் பற்றி எழுதியிருக்கிறார். அது எதற்காக வருகிறதென்றால் சில சதிகாரர்கள் அந்தத் திருப்புறம்பியத்திற்கு அருகிலே உள்ள பள்ளிப்படைக் கோயில் அமைந்துள்ள இடத்திலே கூடி சதி செய்கிறார்கள். அதை ஆழ்வார்க்கடியான் சதிகாரர்களைத் தொடர்ந்து பின்னாலேயே சென்று ஒரு மரத்திலே ஏறி அமர்ந்து கவனிக்கிறான் என்று கதை போகிறது. பள்ளிப்படைக்கோயில் புதரில் செடி கொடிகளுக்கிடையில் மறைவில் நடைபெற்ற சதியை ஆழ்வார்க்கடியான் மரக்கிளையிலே அமர்ந்து பார்த்தான் என்று முடித்திருக்கலாம். ஆனால், அந்தப் பள்ளிப்படைக்கோயில் என்றால் என்ன என்று விவரிக்க ஆரம்பித்து அதற்கு ஒரு அத்தியாயமே எழுதுகிறார்.

பள்ளிப்படைக்கோயில் என்றால் பழங்காலத்தில் வீரர்கள் போரிலே மாண்டு விட்டால் அவர்களுக்காக எழுப்பப்படுகின்ற நினைவுச் சின்னங்கள்



அமைக்கப்படுகின்ற கோயில். அது பள்ளிப்படைக்கோயில் என்கின்ற பெயர் பெறும். அப்படிப்பட்ட பள்ளிப்படைக்கோயில் ஒன்று அங்கே இருந்தது என்று சொல்லிவிட்டுப் போகலாம். அந்தப் பள்ளிப்படைக்கோயில் இந்த கதை நடப்பதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பே உருவானது என்று கல்கி குறிப்பிடுகிறார். அதாவது இன்றிலிருந்து 1,100 ஆண்டுகளாகிறது. ஒரு உவமை சொல்கிறார். வாட்டர்லூ சண்டையைப்போல – பிளாசி யுத்தத்தைப் போல – பானிபட் போராட்டத்தைப்போல திருப்புறம்பியம் என்ற ஊரிலே ஒரு போர் நடைபெற்றது என்கிறார். அந்தப் போரில் பாண்டியர்கள், சோழர்களை அறவே அழித்து விட முனைப்போடு போரிட்டார்கள். அப்படி போரிட்டபோது சோர்ந்து போன படை வீரர்களை இனி வைத்துக் கொண்டு போரிட முடியாது என்று சோழ மன்னனும் பல்லவ மன்னனும் வேறு சில மன்னர்களும் நினைத்து திரும்பக் கொள்ளிடக்கரைக்கே போய்விடலாம் என்று முடிவு செய்கிற நேரத்தில் – இந்த நேரம் தவறினால் சோழ சாம்ராஜ்யமே இல்லாமல் புல் முளைத்துப் போய்விடுமே என்று அஞ்சி கலங்கிய ஒரு கிழவன் – இவர்கள் அமர்ந்து யோசித்துக் கொண்டிருக்கின்ற இடத்திற்கு வருகிறான். அவன் பெயர் விஜயாலய சோழன், அவனுக்கு கால்கள் நடக்க முடியாத அளவிற்கு முடமாகிப் போனவன். போர்க்களத்தில் தொடர்ந்து பல போர்களிலே அவன் பெற்ற வடுக்கள் மட்டும் 96. இதையெல்லாம் கல்கி எழுதியிருக்கிறார்.

சரித்திர சம்பவங்களை இளைய தலைமுறைக்கு நினைவூட்டிய கல்கி

அவன் சோழனையும் பல்லவனையும் சந்தித்துச் சொல்கிறான். "ஏன் சோர்ந்து விட்டீர்கள்? இம்முறை நீங்கள் தவறினால் நம்முடைய சோழ நாடு பாண்டியர்க்கும் அதைப் போலவே சிங்களவர்க்கும் அடிமையாகி விடும். எனவே, ஒரு யானை இருந்தால் எனக்குக் கொடுங்கள்" என்று கேட்கிறான். சோர்ந்து போன மன்னர்கள் ஒரு யானை கூட கிடையாது. அனைத்தும் போரிலே மாண்டு விட்டன

என்கிறார்கள். ஒரு குதிரையாவது கொடுங்கள் என்று விஜயாலயன் கேட்கிறான். அதுவும் இல்லை என்கிறார்கள். பரவாயில்லை – சோழநாட்டு சுத்த வீரர்கள் இருவரேனும் மிஞ்சியிருந்தால் வாருங்கள் என்கிறான். இரண்டு பேரென்ன, இருநூறு பேர் இருக்கிறோம். வருகிறோம் என்கிறார்கள். இரண்டு பேர் என்னைத் தூக்கிப்பிடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அந்த இரண்டு பேர் விஜயாலய சோழனைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள, விஜயாலயன் போர்க்களத்திலே புகுந்து வாள் சுழற்றி வேலேந்தி பகையை வீழ்த்தி பெரும் வெற்றியைப் பெறுகிறான். அந்த வெற்றி பெறுகிற நேரத்தில் பிரதிவீபதி என்கிற கங்க மன்னன், இவர்களுக்கு துணையாக இருந்தவன். வீர மரணம் அடைகிறான். அவனுடைய நினைவாகக் கட்டப்பட்டதுதான் அந்த பள்ளிப்படைக் கோயில், அந்தப் பள்ளிப்படைக் கோயிலுக்கு பக்கத்திலே உள்ள புதரிலேதான் இந்தச் சதியை அவர்கள் நூறாண்டுக்குப் பிறகு நடத்துகிறார்கள் என்று கல்கி எழுதுகிறார் என்றால் சரித்திரச் சம்பவங்களை இளைய தலைமுறைக்கு நினைவூட்டுவதிலே பேராசிரியர் கல்கிக்கு எவ்வளவு அக்கறை என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இப்படிப்பட்ட அருமையான சரித்திரங்களை – வரலாற்று நூல்களை இளம் மனதிலே பதியத்தக்க வகையிலே எழுதி அதற்கு கற்பனை முலாம் பூசி மெருகு கொடுத்து தமிழின்பால் தனக்குள்ள ஆர்வத்தைப் புலப்படுத்துகின்ற வகையிலே இங்கே நம்முடைய நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப் போல திருக்குறளிலிருந்து சிலப்பதிகாரத்திலிருந்து சங்க இலக்கியங்களிலிருந்து இன்னும் சொல்லப் போனால், தானே எழுதிய கவிதைகளையெல்லாம் இடையிடையே சேர்த்து தந்திருக்கின்றன இந்த நூல் – அதனை சிறு பிழையும் இல்லாமல் அற்புதமாக ஆங்கிலத்திலே மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறார் அருமை நண்பர் கார்த்திக் நாராயண் அவர்கள். அவருக்கும், இதை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கும் இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டுமென்று என்னை வருந்தி அழைத்தல்ல – வேண்டுமென்று கேட்டுக் கொண்டல்ல – அன்பாக ஆணையிட்டு இதிலே கலந்து கொள்கிற வாய்ப்பை நல்கிய அனைவருக்கும், குறிப்பாக டாக்டர் கமலா செல்வராஜ் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

பத்திரிகைப் பெண்ணே



முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

ஓர் ஏடு நடத்துவது என்பது எவ்வளவு சிக்கலானது – எவ்வளவு பிரச்சினைகளுக்குரியது - எத்தனை இடர்பாடுகளைக் கடக்க வேண்டியிருக்கிறது-என்பதைப் பற்றியெல்லாம் ஏடு நடத்தியவர்கள்தான் உண்மையிலேயே உணர முடியும். தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேகமான வளர்ச்சி, நம்முடைய நாவலர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல - நம்மை இருட்டடிப்புச் செய்ய வேண்டும் என்று எண்ணி நடத்தப்பட்ட ஏடுகளை எல்லாம் மீறிக் கொண்டு பெற்ற வளர்ச்சியாகும்.

பத்திரிகைகளைப் பற்றிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அழகாகப் பாடினார்.

"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! நல்ல
பேரறிவாளர் நெஞ்சில்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே!"

என்று நான்கூட அவருடைய கவிதைகளை அந்தக் காலத்திலே படித்தபோது, "காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்" என்று குறிப்பிட்டார். சரி! "பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே" என்று ஏன் பத்திரிகையைப் பெண்ணாகக் குறிப்பிட்டடார் என்று, எனக்கு நானே கேட்டுக் கொண்டதுண்டு.

இப்பொழுதுதான் அதற்கான விடை கிடைத்திருப்பதாக நான் உணருகிறேன்!. பத்திரிகைகளில் கொதிக்கும் எழுத்துக்கள் வருகின்றன. பத்திரிகைகளில் தாங்க முடியாத தாக்குதல்கள் வருகின்றன. எதிர்க்கட்சிகளின் கணைகள் பாய்கின்றன. பகைப்புலத்தைச் சுட்டெரிக்கும் சொல் மாரிகள் எல்லாம் கிளம்புகின்றன. ஆனாலும், புரட்சிக் கவிஞர் அவர்கள் பத்திரிகையைப் பெண்ணே என்று வர்ணித்திருப்பதற்குக் காரணம் உண்டு. வள்ளுவர் சொல்லும் பெண்ணுக்குரிய இலக்கணம் நான்கு.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்று வள்ளுவர் பாடினார்.

பத்திரிகையும் முதலில் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். ஒரு பெண் எப்படித் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமோ- தன் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டுமோ- அதைப் போலவே ஒரு பத்திரிகையும் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றால், அந்தப் பத்திரிகையை நடத்துவதற்கு நல்ல வியாபாரத் தந்திரங்கள் தெரிந்திருக்க வேண்டும்.

பத்திரிகையை எப்படி மக்களிடத்திலே பரப்புவது, மக்கள் எதையெதை விரும்புவார்கள், எந்தெந்த எண்ணங்கள் மக்களுக்குத் தருவது, எப்படி எழுத்துக்கள் எழுதுவது, எப்படி ஒரு விஷயத்தைச் சித்தரிப்பது என்பனவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். இவைகளுக்கெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். இவைகளையெல்லாம் மேலாக ஒரு பத்திரிகை தொடங்குவதற்கு முன்பு - இந்தக் காலத்தில் அதிக விளம்பரங்கள் தேவை. முதலில் பத்திரிகை நடத்துபவர்கள் தாமதம் எனும் குறைபாட்டிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். இந்தக் குறைபாடு களையப்பட்டால்தான் 'தற்காத்து' என்கின்ற அந்தப் பொருளுக்கு உண்மையானவர்களாகத் திகழ முடியும்.

அடுத்து வள்ளுவர் 'தற்கொண்டான் பேணி' என்றார். பெண்ணுக்குச் சொல்கிற நேரத்தில், கணவனைப் பாதுகாத்துக் – கணவனைப் பேணிக் கணவனுக்கு காவலாக இருந்து என்று பலவாறாகப் பொருள்படுகின்ற அளவுக்குச் சொன்னார். ஆனால் பத்திரிகை தான் சொல்கின்ற-சொல்லவிருக்கின்ற கொள்கைகளைப் பேணிட வேண்டும்.

எந்தக் கொள்கைகளுக்காக இருக்கின்றோமோ-அந்தக் கொள்கைகளை மறந்து விடாமல் பாதுகாக்க வேண்டும். அதுவே 'தகைசான்ற சொற்காத்தல்' இதுதான் பத்திரிகைகளுக்கு மிக முக்கியம். சொற்காத்து என்றால் எந்தச் சொல்லைச் சொன்னாலும் காக்க வேண்டும் என்று பொருள் வந்து விடுமோ என்று வள்ளுவர் பயந்து - "தகுதியான சொல்லைக் காப்பாற்றுவாள் பெண்" என்று குறிப்பிட்டார்.

தகைசான்ற சொற்காத்துப் பெண்கள் இன்று நடமாடுகிறார்களா என்றால்- இல்லை, மன்னிக்கவும், நான் குறிப்பிடுவது பத்திரிகைப் பெண்ணை.

ஓரிரு இடங்களில் காணப்படுகிறதே தவிர பத்திரிகை உலகத்தில் தகைசான்ற சொற்காத்து இருக்கின்ற (பத்திரிகை) பெண்கள் மிகமிகக் குறைவு.

பாரதிதாசன் பத்திரிகையைப் பெண்ணுக்கு ஒப்பிட்டதற்குக் காரணமே- ஒரு பெண்ணுக்குரிய அடக்கம் பத்திரிகைக்கு இருக்க வேண்டும்-ஒரு பெண்ணுக்குரிய அழகு பத்திரிகைக்கு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

அடக்கம் இருக்கிறது, ஆற்றல் இருக்கிறது, அறிவு இருக்கிறது என்று சொல்லிப் பத்திரிகைகளிலே நாலு பக்கத்திலும் கரியைப் பூசி, பார் என்று சொன்னால் இதற்கு



அழகில்லை என்று யாரும் மதிக்க மாட்டார்கள். ஆகவே தான் பெண்ணுக்குரிய அடக்கம், அழகு இவைகள் எல்லாம் இருக்க வேண்டும், அத்தோடு தகைசான்ற சொற்கள் இருக்க வேண்டும். காலையிலே பத்திரிகைகளைப் பார்த்தால்-எவ்வளவு இழிதகைமையான எழுத்து-எவ்வளவு அலங்கோலச் சொற்கள்-எவ்வளவு காது கொடுத்துக் கேட்கத் தகாத வார்த்தைகள்- இன்றைக்கும் பத்திரிகைகளிலே வெளியிடப்படுகின்றன என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் பாரதிதாசன் பத்திரிகையைப் பெண் என்று சொன்னார். அதற்கு முன்பே பெண்ணுக்குரிய இலக்கணத்தை வள்ளுவர் வகுத்தார்.


தகைசான்ற சொற்காத்து என்று சொன்னதற்குப் பிறகு சோர்விலாள் பெண் என்று சொன்னான். பத்திரிகை நடத்துவதில் சோர்வு இருக்கக்கூடாது. ஆரம்பத்தில் அதிகமாக விற்பனையாகவில்லையே என்று சோர்ந்தால்-அந்தச் சோர்வு-தொடரும். சென்ற வாரம் 10 ஆயிரம் விற்றதே, இந்த வாரம் குறைந்து விட்டதே என்று சோர்ந்தால் பத்திரிகை விற்காது. நாம் சோர்வடையாமல் இருக்க வேண்டும்!.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, பெரியார் அவர்கள் கிண்டலாக ஒன்று சொல்வார்கள். அவர்கள் குடிஅரசுப் பத்திரிகையை ஆரம்பித்த காலத்தில் பச்சை அட்டைப் பத்திரிகை என்று பெயர் இருந்தது. அப்போது அதைப் படிப்பவர்கள், மற்றவர்கள் பார்த்துவிடக்கூடாது என்பதற்காகப் படித்துமுடித்து விட்டு, அதை மற்றொரு பத்திரிகையில் சுருட்டி, அதைத் தங்களுடைய பக்கத்திலே வைத்துக் கொண்டு சென்ற நிலையெல்லாம் ஒரு காலத்தில் இருந்தது.

இவன் பச்சை அட்டைப் பத்திரிகையைப் படிப்பவன் என்றெல்லாம் குறை சொல்லப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அப்போது பெரியார் சொல்லுவார், நான் வெளியிடுகின்ற - நான் எழுதுகின்ற - குடிஅரசுப் பத்திரிகையை யாரும் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் கவலையில்லை, நான் ஒருவனே எழுதி, நான்ஒருவனே அச்சடித்து, நான் ஒருவனே படித்துக் கொள்கிறேன் என்று அப்படிச் சொன்ன காரணத்தினால்தான் குடிஅரசுப் பத்திரிகை-அந்தப் பச்சை அட்டைப் பத்திரிகை - பிறகு பல்லாயிரக்கணக்கான வாசகர்களைப் பெறுகின்ற அளவுக்கு வளர்ந்தது, சுயமரியாதைக் கொள்கைகளை வளர்த்து, பெரியார் அவர்களுடைய எண்ணங்களை, எழுத்துக்களை, நாட்டுக்குத் தருகின்ற அளவுக்குப் பெரிதாக வளர்ந்தது. அதன் காரணமாக இன்றைக்கு அறிவார்ந்த அரசு, பகுத்தறிவாளர்கள் நடத்துகின்ற அரசு அமைவதற்கு அது காரணமாக இருந்தது என்பதை நாம் யாரும் மறந்துவிட முடியாது.

ஆகவே, சோர்வு இருத்தலாகாது. சோர்வு இருந்தால்- நாம் எடுத்த முயற்சி- அதுவும் பத்திரிகைத் துறையில் வீர நடை போட முடியாது.

- முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்
14.09.1971 அன்று 'தி ரைசிங் சன்' ஆங்கில வார ஏடு
துவக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.....



என்னை இதழாளனாக்கியது என்னுள் எழுந்த ஆர்வமே

– முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

கேள்வி: நிறைய மேடுபள்ளங்கள் கொண்டது உங்கள் வாழ்க்கை. வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து எழுதிக்கொண்டு இருக்கிறீர்கள். முதல்வராக இருந்தபோதும், இல்லாதபோதும் உங்களுக்குள் ஒரு அழுத்தமான எழுத்தாளன் இருப்பது புரிகிறது. எழுத்தில் இந்த ஈடுபாடு, உங்களுக்கு ஏற்பட்டது எப்படி? உங்களை எழுத்தாளராக்கிய அம்சங்களை நினைவுகூருங்கள்?

பதில்: என் தந்தை முத்துவேலர் பாடல்கள் இயற்றும் திறனுடையவர். சிறு பிராயத்திலேயே நான் அவர் இயற்றிய பாடல்களைக் கேட்டிருக்கிறேன். புராணக் கதைகளில் வரும் பல நிகழ்ச்சிகளையும், வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ள வேண்டிய பல்வேறு பிரச்சினைகளுடன் பொருந்தக்கூடிய குட்டிக்கதைகளையும் அவர் சுவைபடக் கூறுவார். மாணவப் பருவத்தில் பாடபுத்தகங்கள் மட்டுமின்றி நூலகத்திலிருந்து வேறு புத்தகங்களும் பெற்றுப் படிக்கும் வழக்கம் எனக்கு உண்டு. என்

15ஆவது வயதில் "மாணவ நேசன்" எனும் மாதம் இருமுறை கையெழுத்துப் பிரதி நடத்தினேன்.

அப்போதே "பைண்டு" நோட்டுகளில் சிறுகதைகள், நாவல்கள் எழுதி என் நண்பர்களிடம் படிக்கக் கொடுப்பேன்.

இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் அந்தக் காலகட்டத்திலேயே பங்கு பெற்றிருந்ததின் காரணமாக தமிழில் உரையாற்றும் ஆர்வமும், எழுதும் ஆர்வமும் ஏற்பட்டது. 'முரசொலி' துண்டு அறிக்கைகளை "சேரன்" என்ற புனைப் பெயரில் அச்சிட்டுப் பரப்பியதும் ஏறத்தாழ அந்தக் காலகட்டத்தில்தான். தமிழ் இயக்கத்திலும், தன்மான இயக்கத்திலும் இளமையிலேயே ஏற்பட்ட ஈடுபாடு, அவற்றின் தொடர்பான கருத்துக்களை எழுதியும் காட்டவேண்டுமென்று என்னுள் எழுந்த ஆர்வமே என்னை எழுத்தாளனாக்கியது.

- முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்
பிரபஞ்சன் அவர்களின் கேள்விக்கு அளித்த பதில்

நன்றி: **நானும் இலக்கியமும்** எனும் நூலிலிருந்து....

உண்மையெனும் உதயக் கதிர்




'கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்' என்பார்கள். ஆனால் தற்போது பொய் சாட்சியின் மூலம் உண்மை மறைக்கப்படுகிறதே?

கரு மேகங்களால் கதிரவன் மறைக்கப்படலாம். அதற்காகக் கதிரவனே இல்லை என்று சொல்லிவிட முடியுமா முகில் கிழித்து முழு மதியே வெளிக் கிளம்பும் என்கிறபோது; உண்மையெனும் உதயக் கதிர் உலகில் ஒளி பரப்பாமலா போய்விடும்!

- முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்

எழுத்தாளர்களின் பிதாமகன்



முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

நம்முடைய ஆசிரியர் சாவி அவர்களுக்கும் எனக்கும் உள்ள நட்பைப் பற்றி இங்கே பாராட்டிப் பேசியவர்கள் அனைவரும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நகைச்சுவை எழுத்தாளர் மாத்திரமல்ல; நாட்டுப்பற்று மிகக் கொண்ட எழுத்தாளர். உத்தமர் காந்தியடிகளோடு பழகக் கூடிய அத்தகைய வாய்ப்பையும் பெற்றவர். காந்தியடிகள் வடபுலத்திலே தியாக யாத்திரை மேற்கொண்டபோது, பத்திரிகை ஆசிரியராக அவரை பார்க்கச் சென்ற சாவி அவர்கள், காந்தியடிகளோடு நடத்திய உரையாடல்களையெல்லாம் தொகுத்து, அந்தப் பயணத்தைப் பற்றி ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார். படிக்க படிக்க நம்முடைய இதயத்திலே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நூல் அந்த நூல். அவர் எழுதிய வாஷிங்டன் திருமணத்தைப் பற்றி தகுதிச் சான்றிதழிலே குறிப்பிட்டிருக்கின்றது.

அந்த நாடகம் எத்தனை தடவைகள் தமிழ்நாட்டிலே நடைபெற்றிருக்கின்றன? தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல, பம்பாய் போன்ற இடங்களில், வெளி மாநிலங்களிலே கூட எத்தனை நாடகங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை எண்ணிச் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு அந்த நாடகங்கள் நடத்தப்



பெற்றிருக்கின்றன. நானே ஒரு ஐந்தாறு முறை சாவி எழுதிய வாஷிங்டன் திருமணம் என்ற அந்த நாடகத்தைப் பார்த்து பரவசப்பட்டிருக்கின்றேன்.

'வேதவித்து' என்று ஒரு சிறிய நூல். ஒரு புதினம், ஒரு குறுநாவல். அதை ஒரு இரவிலே படித்து முடித்து மறுநாள் காலையிலே அதற்கு அணிந்துரை எழுதி அனுப்பினேன். அருமையான கதை.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே உள்ளவர்களைப் பாத்திரங்களாக அமைத்து, மேட்டுக் குடியிலே பிறந்த ஒரு கதாபாத்திரத்தையும் உருவகப்படுத்தி, அவர் அமைத்திருக்கின்ற அந்தப் பாங்கினைப் பார்த்தால் திரு. சாவி அவர்கள் எந்த அளவிற்கு முற்போக்கு எண்ணம் கொண்டவர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். அவர் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்காக



சிறைச்சாலையில் இருந்தவர். பலமாத காலம் சிறைச்சாலையில் இருந்தவர். பாலமாத காலம் சிறைச்சாலையிலேயே பல்வேறு தலைவர்களோடு வாடியவர். சுதந்திரம் பெற்ற பிறகும் கூட அவருக்கு ஒரு நாள் சிறைச்சாலை வரவேற்பளித்தது! கடந்த நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு!

கடந்த கால ஆட்சியில் திடீரென்று ஒரு செய்தி வந்தது எங்களுக்கு. சாவி கைது செய்யப்பட்டார் என்ற செய்தி வந்தது. ஏன், என்று வினவினோம். அவருடைய பத்திரிகையிலே ஒரு அட்டைப்படம். அது ஆபாசப் படமாம். அதற்காகக் கைது என்று சொன்னார்கள். உடனடியாக அவர் எங்கே இருக்கிறார் என்று தேடி நானும், நண்பர் வீராசாமியும் மற்றவர்களும் சென்றோம். அண்ணா நகரில் காவல் நிலையத்தில் அவரை வைத்திருந்தார்கள். அங்கே சென்று பார்த்த பொழுது, அவர் அப்பொழுதும் புன்னகையோடு தான் இருந்தார். நான் கூட கேட்டேன். "என்ன, பழைய காலத்திலே நாட்டு விடுதலைக்காகப் போராடி சிறைச்சாலைக்குச் சென்றதைப்போல சிரித்த முகத்தோடு அமர்ந்திருக்கின்றீர்களே?... என்று கேட்டேன். சொன்னார், "நீங்களெல்லாம் வந்திருக்கிறீர்களே, என்னைக் காண. அதனால், இந்தக் குறை எனக்குத் தெரியவில்லை" என்று சொன்னார். ஆனால், அவருடைய நெஞ்சுக் குமுறல் நன்றாக வெளிப்பட்டதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அப்பொழுது சொன்னார், "சாவி'' பத்திரிகையில் ஒரு அட்டைப்படம் போட்டதற்காக இந்த நிலை, இந்த தண்டனை எனக்கு" என்று சொன்னார். நாங்கள் அவரை ஜாமீனில் எடுத்து வெளியே கொண்டு வந்தோம். இது அவருடைய வாழ்க்கையிலே ஏன் ஏற்பட்டதென்றால் எனக்கும், அவருக்கும் இருந்த நட்பின் காரணமாகத்தான் இது அவருக்கு ஏற்பட்டது. நட்புக்காக இந்தத் துன்ப துயரங்களையெல்லாம் கூட அவர் தாங்கிக் கொள்ளக் கூடிய இயல்பு படைத்தவராக இருந்தார். இன்றைக்கும் இருக்கின்றார்.

எத்தனையோ சுற்றுப்பயணங்களில் என்னோடு நண்பர் சாவி அவர்கள் வந்திருக்கின்றார். ஏன் வருகிறார் என்றால் சுற்றுப்பயணத்தில் மக்களுடைய எழுச்சியை, மக்களுடைய ஆர்வத்தை நேரடியாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஆவல். எனவே எல்லா சுற்றுப்பயணங்களிலும் அந்தக் காலத்திலே என்னோடு திரு. சாவி அவர்கள் வருவது வாடிக்கை. எங்கள் இரண்டு குடும்பத்திலே உள்ள பெண்களும் கூட - அவருடைய வீட்டாரும் என்னுடைய வீட்டிலே உள்ளவர்களும் நல்ல முறையில் நெருங்கிப் பழகக்கூடிய அளவிற்கு இரண்டு குடும்பங்களும் ஒரே குடும்பம் என்ற அளவிற்குப் பழகக் கூடிய குடும்பங்கள்.

அவர் அமெரிக்கா சென்றாலும், உலகத்திலே எந்தப் பகுதிக்குச் சென்றாலும், அங்கிருந்து என்னோடு தொடர்பு கொள்ளத் தவற மாட்டார். இங்கேயும் சென்னையிலே இருக்கும்பொழுது நாள்தோறும் நானும், அவரும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டுதான் இருக்கின்றோம். அப்படிப்பட்ட இனிய நண்பர். எளிய நண்பர். என்றைக்கும் எந்த நிலையிலும் மாறாத நட்புணர்வு கொண்ட நண்பர், சாவி அவர்களுக்கு - நண்பர் என்ற முறையிலே அல்ல. அவர் நல்ல எழுத்தாளர். பல எழுத்தாளர்களை உருவாக்கிய, எழுத்தாளர்களெல்லாம் போற்றுவதைப் போல, "எழுத்தாளர்களின் பிதாமகன்" என்று பாராட்டப்படுகின்ற அவருக்கு இந்த விருதை அளித்து முரசொலி அறக்கட்டளை பெருமைப்படுகிறது. அந்த விருதை வழங்கியதன் மூலம் நான் பெருமைப்படுகிறேன் என்பதை இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

- முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்
13.01.1998 அன்று முரசொலி அறக்கட்டளை
விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

நன்றி: முத்துக் குளியல் பாகம்-2 என்னும் நூலிலிருந்து...

என்றும் தொடரும் எழுத்துப் பணி



கலைஞரின் முதல் எழுத்தோவியம்
'இளமைப் பலி'

அன்று, ஊர்மக்களே வாட்டமுற்றிருந்தனர்; கண்ணீர் நல்கா நயனங்களில்லை; வாட்டமுறாத அகங்கள் இல்லை, அவள் சிறுமி-பதினாறு வயது நிரம்பிய பைந்தொடி-எழில் ஒழுகும் பூந்தொடி; அழகான உருவம்- அன்பான நோக்கு. அன்னத்தை ஒத்த நடை; மின்னல் குலத்தில் விளைந்ததோ? வானவில்லின் குலத்தில் விளைந்ததோ? கவிஞரின் கற்பனையே உருவம் பெற்றதோ? பொன்னில் உருக்கிப் பொலிந்ததோ? மலர்க் கூட்டமோ? என்றய்யுறும் வண்ணம் அமைந்த உருவம்; எழிற்கருங்கண்கள்.

ஆம்; அவள் வாட்டமுறக் காரணம்; கணவன் இறந்தான்-நாயக்க கிழவன் போந்தான்; கிழவனா கணவன்; அந்தோ-அந்தோ-மிகக் கொடியது!

எழிற் கருங்கண்மலர்-அதற்கெதிரான குழிந்த கண்கள்; தாமரை வதனம்! ஐயோ! அதனழகைக் கெடுக்க வந்த அனுமந்த முகம்!

ஒரு சிறுமியிடை-அந்தோ! அதைப் பழிக்க வருத்த தொந்தி!

சுவை தரும் கனிவாய்-மூடவை தீகமே! அதற்கெதிரான எச்சில் வழியக் குறட்டை விடும்வாய்!

ததும்பிய இளமை-ஏ! தமிழ் உலகே! தங்கிய முதுமை எழுச்சியுற்ற காதல்! ஏ தமிழா! வழிந்தோடிய காமம்!

இவைகளே அம்மடந்தைக்கும்-அவளின் மணவாளக் கிழவனுக்கும் உள்ள பொருத்தங்கள்! அவள் அக்கிழவனுடன் ஓராண்டே வாழ்ந்தாள்; வாழ்ந்தவள் இன்புற்றிருந்தாளா?- இல்லை; அவள் அகத்தின்கண் அளவற்ற துன்பமே குடிகொண்டிருந்தது. மணம்முடித்த நாள் முதலாய் அவள் இன்பம் நுகர்ந்தாளில்லை! கண்ணீர்ப்பெருக்கால் கவின் உடை நனைந்தாள்! காதலுந்தானும் கனலும் புழுவுமாய் ஏங்கினாள். தார்தரித்த அந்த நங்கை தயங்கி அழுதாள்! தார்தரித்த அந்த நங்கை தயங்கி அழுதாள். நரைத்த தலை சோர்ந்த நாயகன் எண்ணிக் கண்ணீர் உகுத்தாள்! தொண்டு கிழவன்-தழுதழுத்த குரலில் 'கண்ணே' என்பான்; கண்ணென்ற சொல் காதில் விழுந்ததும் எண்ணாததெல்லாம் எண்ணுவாள்!

அவள் எண்ணக் கடலில் எழுந்த காதல் கப்பல், பணம் என்ற பெரும் புயல் காற்றினால் எதிர்க்கப்பட்டு-நொறுங்கி மூழ்கிற்று! அவள் தேர்ந்தெடுத்த அழகனால் அபலையாக்கப்பட்டாள். சாதிப் பேயின் தலைவிரி கோலத் தாண்டவத்தினால்! 'அவள் தலைவிதி' எனக் கழன்றனர்-கற்றோரும் மற்றோரும்.

'தலைவிதி எதற்குமுளதோ? விதியை மதியால் வெல்லலாம் என்பதை அறிந்திலரோ? ஆனாலும் என் செய்வது? பெற்றோரின் மடமையும், பார்ப்பனியத்தால் ஏற்பட்ட சாதிக் கட்டுப்பாடும் அவளது அழகோடு கூடிய வாழ்வைப் பாழாக்கியது.

கடவுளின் பேரால் மனிதனை ஏமாற்றி வாழும் கூட்டத்தினரின் வைதீக போதனையால், அவள், நல்லுடை அணியா வண்ணம் தடுத்து திலகமிடா வண்ணம் கெடுத்தது! விதவை என்ற பட்டம், விரும்பிக் கொடுத்தது! துயரக் கணையைத் தொடுத்தது!

என்னென்றியம்புவது பெற்றோரின் மடமையையா தென்றுரைப்பது கைம்மைக் கொடுமையை?

மறுமணந்தான் உண்டா மங்கை நல்லாள் இன்பமுற? – 'சீ' என்றிகழப்பட்டாளே, அச்சீரிள மங்கை!

அந்தோ நாட்டினரே! இன்னுமா உறங்குகிறீர்! பெண்களின் ஓலத்தைக் கேட்டிலரோ? கைம்மைக் கொடுமையைக் கண்டு கலங்கிலீரோ?

விதவைப்பட்டத்தை, விரும்பி அளிக்கின்றீரே! மனைவி இறந்தால் மறுதாரம் மணம்புரியும் நீங்கள் மங்கையரின் மறுமணத்தை வெறுப்பது நன்றா?

ஏ தமிழா! உனது பகுத்தறிவு எங்கு போய் தூங்கி விட்டது? பெண்ணுலகத்தின் கதியை, நீ ஏன் கவனிக்கவில்லை? எத்தனை நாளைக்குப் பிறருக்கு அடிமையாக வாழப் போகின்றாய்? எத்தனை நாளைக்கு சுயமரியாதை அற்று வாழப் போகின்றாய்?



எத்தனை நாளைக்கு மூட வைதீகத்தில் உழலப் போகின்றாய்? ஐவருக்கும் தேவி அழியாப் பத்தினி' என்றால் 'ஆம்' என்று தலை அசைக்கின்றாய்; அது எப்படி என்று கேட்கும் பகுத்தறிவுவாதியை 'நாஸ்திகன்' என்கிறாய்.

ஏ, வீரப்புதல்வா! தலை நிமிர்ந்து பார்- மேனாடுகளை! ஆங்கு தழைத்தோங்கி நிற்கின்றது பெண்களுரிமை! அதனால் அவை அடைகின்றன மேன்மை!

ஆகவே, செந்தமிழ்ச் செல்வர், 'மங்கையர்தான்' நம் நாட்டின் பொக்கிஷம் என்பதை மறவாதே! அவர்கள் வாழ்வைக் கெடுக்காதே! மறுமணத்தை மறுத்து அவர்கள் இளமையைப் பலியிடாதே!

'இளமைப்பலி' என்னும் இக்கட்டுரையே அச்சு, வாகனம் ஏறிய கலைஞரின் முதல் கட்டுரையாகும். 26.04.1942ஆம் ஆண்டு திராவிட நாடு இதழில் இக்கட்டுரை வெளியாகி இருந்தது.

இக்கட்டுரை முதன் முதலில் அச்சில் வெளிவந்தது குறித்து 03.08.1969ஆம் ஆண்டு 'மறவன் மடல்' ஏட்டில் வெளியான 'நெஞ்சுக்கு நீதி' பகுதியில் உணர்ச்சியுடன் விவரித்திருப்பதைக் காணுங்கள்.

பள்ளி மாணவன் நான், நானே எழுதி-நானே படித்து மகிழும் நிலைமாறி, பத்து நூறு பேர் படித்துப் பாராட்டும் நிலைக்கு வளர்ந்தேன்! 'நாடெங்கும் நமது கட்டுரையைப் படித்து மகிழ்வார்கள்' என்று எனக்கு நானே புகழ்ந்து கொண்டேன். எனக்கு உறுதுணையாக இருந்தவரும், இயக்கத்தில் நீங்காப் பற்றுக் கொண்டவருமான இராசகோபால் என்பவர், என் கட்டுரையைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்!

ஒரு பத்திரிகையை எடுத்துக் கொண்டு திருவாரூர் முழுவதும் ஒருவார காலம் சுற்றி வந்தேன். அந்த மகிழ்ச்சியை வர்ணிக்கவே முடியவில்லை. நாலுபேர் உட்கார்ந்து பேசும் இடத்திற்கு அந்தப் பத்திரிகையுடன் போவேன், பேசிக் கொண்டே கையிலிருக்கும் பத்திரிகையைக் கீழே வைப்பேன்; யாராவது எடுத்து நம் கட்டுரையைப் படிக்க மாட்டார்களா என்று ஆவலோடு அமர்ந்திருப்பேன். அவர்கள் அதைப் படித்து என்னைப் பாராட்டிய பிறகே அதைவிட்டு அகலுவேன், இப்படி என் வாழ்வில் பெருமகிழ்ச்சி அளித்த அந்த நாளை நினைத்தால் இப்போதும் இன்ப அலை மோதுகிறது.

நன்றி - **'கலைஞரின் 14 வயதில் தொடங்கிய பயணம்'**
என்னும் நூலிலிருந்து...



ஒரு தாயின் தாலாட்டு

சங்கத் தமிழ்



முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

பகைவெல்லச் சென்றிருக்கும் கணவனது
பனைவைர நெஞ்சத்தின் வீரத்தை நினைத்தவாறு

பகல் முழுதும் குடும்பத்துப் பணிமுடித்துச் சற்றுப்
படுத்துறக்கம் கொள்வதற்குச் செல்லும் முன்னர்

பாசமுடன் மகனைக் கூவியழைத்துக் "கண்ணா!
பாலமுதம் இதோ பருகிட வாடா," என்பேன்!

"வரமாட்டேன் போ" என்று நிலாவெள்ளி ஒளியினிலே
வட்டமிட்டு விளையாட ஓடிடுவான் எதிர்வீட்டுப்
பிள்ளையுடன்!
வந்துவிடும் எனக்குக் கோபம்-கோலொன்றை
எடுத்தோங்கி
"வரமாட்டேன் என்றா சொன்னாய்?
இதோ வந்துவிட்டேன்" எனத்

துரத்திடுவேன்; அடிக்கமாட்டேன்! ஆனாலும் என்
தூயமகன் அஞ்சி நடுங்கிப் பதுங்கிடுவான்!

"கோலுக்கே இந்தப் பயம் கொள்கின்ற பிள்ளாய்:
நீ -நாளை

வேலுக்குப் போர் முனையில் என்ன
பதில் சொல்வாய்?" என்பேன்!

இழுத்து வந்து செல்லமாய்க் கன்னம் கிள்ளிப்
பழுத்திருக்கும் கோவைக்கனியாம் அவன் இதழில்;

தேன்கலந்த பாலின் கிண்ணம் மெல்லக் கவிழ்த்து
தெம்பாக இருப்பதற்கு முழுவதையும் அருந்தென்பேன்!

அழகுதமிழ் மழலைச் செல்வன் அதனை மறுக்காமல்
அச்சத்தின் காரணமாய் அனைத்தும் பருகிடுவான்

பிறைபோல இருந்த பிள்ளை முழுநிலவாக உருவெடுத்து
குறையில்லாத் தோற்றமுடன் குன்றம் போல் வளர்ந்து விட்டான்!

தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக்களம் சென்ற என்னவரோ;

தமிழ் மண்ணின் பண்பாட்டுக் கேற்றவாறு
தட மார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நின்றுவிட்டார்

நானும் கல்லாக மனத்தை ஆக்கிக்கொண்டு
வானதிரப் புவி வாழ்த்துகின்ற மானத்தை

ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குடிமகனாய்ப் பிள்ளைதனை வளர்த்தேன்!

கட்டியணைத்துக் களித்த என் கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப்பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;

எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்கொடி யென்றும்,
எதிரிகளின் கோட்டையிலே நம் முரசு முழங்கட்டுமென்றும்,

உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, "சென்றுவா மகனே" என அனுப்பி வைத்தேன்

அவனோ;

கொடுவாளால் களிறுகளைக் கொன்றுபோட்டுக்கு
குன்றுகளைப் பந்தாடுதல் போல் அவற்றை உருட்டிவிட்டுப்

படுகளத்தில் விளையாடி வினை முடிக்கின்றான் என்றும்,
நெடுமரம் போல் பகைப்படை வீழ்கின்றதென்றும்,

அடுக்கடுக்காய்த் தித்திப்புச் செய்திகள் வந்திடவே
அடக்கவொண்ணா ஆவலுடன் அது காணக் களம் புகுந்தேன்!

ஐயந்திற் கிடமேயில்லை வெற்றி நமக்கேதான்.
ஆனால் ஒன்று; அங்கே என் மகனைத்தான் காணவில்லை!



குருதி மணம் கமழுகின்ற போர்க்களத்தில்
குமுத மலர் மொட்டுக்களாய் முளைக்கும் தலைகள்

வீழ்ந்துள்ள வீரர்தம் உடல்களோ கவிழ்ந்துவிட்ட படகுகளாம்!
வெட்டுண்ட கைகால்கள் வேலையின்றி மிதக்கின்ற துடுப்புகளாம்!

சூழ்ந்துள்ள பிணக்குவியல் நடுவில் சென்றேன்.
"ஆழ்ந்துள்ளேன் கவலையினால்; அருமை மகனே நீ

போர்க்களத்துப் பிணமாகி வாழ்கின்றாயா? அன்றி
புறமுதுகிட்டோடிச் செத்துத் தொலைந்தாயா?" எனக் கேட்டுத்
துடித்திட்டேன்!
"வாழ்கின்றேனம்மா வீரனாக! " என்றொரு குரல்
தாழ்கின்ற என் தலையை நிமிர்த்திற்றாங்கே!

குரல் வந்த திசைநோக்கிப் பறந்துபோனேன்- "உள்ள
உரம் வாய்ந்த மகனே! நீ எங்கே?" என்றேன்.

"இங்கே" என்றான்; கண்டு கொண்டேன்! "வலம்புரிச்
சங்கே!" என்றவாறு தழுவிக்கொண்டேன்! கையில்:

தாங்கிப் போரிட்ட கேடயம் தரையில் கிடக்க: அதில்
தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து கிடந்தான்!

"வெற்றியம்மா வெற்றி" என்றான் அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, "என் நித்திலமே!



போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!" என்றேன்!

"ஊடுருவியிருக்கின்றதே மார்பில் அம்பு-வலி
உனக்குத் தாங்காதே மகனே!" என்றேன்; அழுதுவிட்டேன்!

"உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு
நீ எனக்கு;
உரைக்கும் வரை
நான் உணரவில்லையம்மா!" என்றான்!

உயிர்விட்டான் மடி மீது! போய்விட்டான்;
உயிரோடு எனைமட்டும் விட்டுவிட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது-நான்

ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா: மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில்

தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரே! என் மகனே! நீ வாழ்க! என
வாழ்த்துகின்றேன்!"

பகுத்தறிவு வாதிகள்



திரு. சுந்தா அவர்கள்
ஆசிரியர்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

\- திருவள்ளுவர்

பொன்னி நாட்டுத் திருச்செங்காட்டாங்குடி என்னும் கிராமத்தில் கோயில் கொண்டுள்ளார் வாதாபி கணபதி. அவருடைய உருவச் சித்திரம் 1946 ஜூன் 23ஆம் தேதி கல்கி இதழின் அட்டையை அலங்கரித்தது. ஓவியர் சந்திரா நேரில் பார்த்து வரைந்தது அது. அந்தச் சித்திரம் வெளியான அதே இதழில்தான் "சிவகாமியின் சபதம்" தொடர் கதையின் "சிறுத் தொண்டர்" அத்தியாயம் வந்தது. இரண்டுக்கும் உள்ள பொருத்தம் இந்த வரலாற்று நாவலைப் படித்தவர்களுக்குத் தெரியும்.

திருச்செங்காட்டாங்குடியில் பிறந்த பரஞ்சோதி, கல்வியை நாடிக் காஞ்சிக்குப் போவது, "சிவகாமியின் சபதம்" நாவலின் தொடக்கத்தில் வரும் நிகழ்ச்சி; வாதாபியை வென்று, அந்நகரிலிருந்த கணபதி விக்கிரகத்தைத் தமது ஊரில் கோவில் கொள்ளச் செய்வதற்காக உடைமை கொண்டு, சிறுத்தொண்ட ராய் மாறிய பரஞ்சோதி பயணமாவது, இறுதிக் கட்டத்தில் வரும் நிகழ்ச்சி. இரண்டுக்கும் இடையே, வரலாற்று உண்மையைக் கொண்டு இழைத்த ஒரு வண்ணக் கோலம் வளைந்தும் நெளிந்தும் ஓடிக் கருத்தைச் சொக்க வைக்கிறது.

வாதாபி கணபதியைப் போல் எண்ணிலாக் கணபதிகள், எத்தனையோ வடிவ மாற்றங்களுடன், தமிழ்நாடு நெடுகிலும் சிறிதும் பெரிதுமான கோயில்களில் காட்சி

தருகிறார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் வரலாற்றுக் கதைகள், புராணக் கதைகள், நவீனக் கதைகள் என்று எத்தனையோ உண்டு. அவற்றுடன் இன்னும் ஒன்றாகப் "புதிய விநாயக புராணம்" எழுதியிருக்கிறார் கல்கி:

முன்னொரு காலத்தில் துர்வாச முனிவர் கைலாசத்துக்குச் சென்றபோது, முன் வாசலில் வீற்றிருந்த விநாயகப் பெருமானைக் கவனியாமல் விடுவிடு என்று உள்ளே போய் விட்டார். அதைக் கண்ட விநாயகர் ஒரு வேடிக்கை செய்ய எண்ணித் தம் தும்பிக்கையை நீட்டித் துர்வாச முனிவரின் முதுகின் பேரில் தீர்க்க சுவாசம் ஒன்று விட்டார். உடனே துர்வாச முனிவர் அலறிப் புடைத்துக் கொண்டு தலை குப்புற விழ, அதைக்கண்டு பூத கணங்கள் எல்லாம் சிரித்தன.

துர்வாச முனிவர் மீண்டும் எழுந்து தமக்கு என்ன நேர்ந்தது என்பதை ஞான திருஷ்டியினால் அறிந்து கொண்டதும், கோபம் அவருடைய ஜடா மகுடத்துக்கு மேலே போய்விட்டது. விநாயகரைப் பார்த்து, "நீர் பூலோகத்தில் நாற்சந்திகளிலும் குளத்தங்கரை மரத்தடியிலும் கேட்பாரற்று வெயிலில் காய்ந்து கொண்டும். மழையில் நனைந்து கொண்டும் இருப்பீராக! உமக்குத் தோப்புக் கரணம் போடுவோரும், வேண்டுதல் செய்து கொண்டு தேங்காய் உடைப்போரும், கொழுக்கட்டை நைவேத்தியம் செய்வோரும், நாளுக்கு நாள் குறைந்து போவார்களாக!" என்று சாபம் கொடுத்துவிட்டுப் பூத கணங்களை நோக்கித் திரும்பினார். "நான் விழுந்தபோது சிரித்தவர்கள் அத்தனை பேரும் பூலோகத்தில் நாத்திகர்களாகப் பிறக்கக் கடவீர்களாக!" என்று சபித்தார். பூதகணங்கள் நடுநடுங்கிப் போய் முனிவரின் அடிகளில் விழுந்து வணங்கி, "முனிபுங்கவரே! தாங்கள் மூக்குக்கு மேலே முன்கோபம் உடையவர் என்று தெரிந்திருந்தும், நாங்கள் சிரித்தது என்னவோ குற்றம்தான்! கருணை கூர்ந்து மன்னித்துச் சாப விமோசனத்துக்கு வழி கூற வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டனர்.

விநாயகரும், "துர்வாசரே! உமக்குப் பசி எடுத்துக் கோபம் பொங்கி வந்த போதெல்லாம் பல தடவை நானாகவே உம்மை அழைத்து, மோதகம், நாளீகீரம் ஆகியவற்றில் பங்கு கொடுத்திருந்தும், ஒரு சிறிய வேடிக்கை செய்ததற்காக இப்படிச் சாபம் கொடுத்துவிட்டீரே? எனக்கு ஒருவரும் பூஜை நைவேத்தியம் செய்யாமல் போனால் உம்முடைய கதி என்ன ஆவது?" என்று கேட்டார். அவ்வளவுதான்; துர்வாச முனிவரின் கோபம் பறந்து போய் விட்டது.

"ஆமாம்; சற்று அவசரப்பட்டுத்தான் சாபம் கொடுத்து விட்டேன். ஆயினும் பரவாயில்லை. உலகில் நாஸ்திகர்களாய்ப் பிறக்கப் போகும் இந்தப் பூத கணங்கள் ஒரு நாள் "மண் பிள்ளையார் செய்து உடைக்கப் போகிறோம்" என்று கிளம்பி, அவ்விதமே சில இடங்களில் செய்யவும் செய்வார்கள். உடனே ஆஸ்திக மகாஜனங்களும் பக்த கோடிகளும் விழித்துக் கொள்வார்கள். முன்னைக் காட்டிலும், விநாயகக் கடவுளாகிய தங்களிடம் அதிக பக்தி கொள்வார்கள். அர்ச்சனைகள், அபிஷேகங்கள், நைவேத்தியங்கள்,

ஆரத்திகள், வீதி வலங்கள், உற்சவங்கள் எல்லாம் பதின்மடங்கு அதிகமாகவும் அமோகமாகவும் நடத்துவார்கள். அந்தச் சமயத்தில் மட்டும் என்னை மறந்து விட வேண்டாம்!" என்று முனிவர் கூறினார்.

துர்வாச முனிவரின் வாக்கின்படியே பூலோகத்தில் பரதக் கண்டத்தின் தென் பகுதியில் கலியுகம் விஜய வருடம் வைகாசி மாதத்தில், எல்லாம் நடந்தது....

அதாவது கிறிஸ்து சகாப்தப்படி 1953 மே-ஜூன் மாதங்களில், பிந்தைய மாதம் 14ஆம் தேதியன்று வெளிவந்த கல்கி இதழின் தலையங்கத்தில் வந்ததுதான் இந்தப் புதிய புராணக் கதை.

என்ன நடந்தது என்றால்--

கடவுள் நம்பிக்கையைக் குலைப்பதற்கான ஒரு நேர் நடவடிக்கையாகப் பிள்ளையார் உடைப்புத் திட்டம் ஒன்றைத் திராவிடக் கழகத்தின் தலைவர் ராமசாமிப் பெரியார் அறிவித்தார். தமிழர்களில் மிகப் பெரும்பாலோர் வழிபடும் தெய்வம் என்பதே பிள்ளையாரை அவர் குறியாகக் கொண்டதற்குக் காரணம் எனலாம்.

அந்தத் திட்டத்தின்படியே சில ஊர்களில் சில நாத்திகர்கள், அவர் அதற்கெனக் குறிப்பிட்ட மே மாதம் 27ஆம் தேதியன்று பிள்ளையார் உருவங்கள் செய்து உடைத்தார்கள். பெரிதாக ஒன்றும் நடக்கவில்லைதான். ஆனால் அதன் மூலம் தோன்றிய எதிர்ப்பும் விளைவும் பெரிதாக இருந்தன. எவ்வளவு பெரிது, எப்படி என்பதை அதே தலையங்கத்தின் தொடர்ச்சியிலிருந்தும் காணலாம்:

பல்லவ சேனாதிபதி பரஞ்சோதியார் படையெடுத்துச் சென்று வாதாபி நகரை எரித்து அழித்த பிறகு, அங்கிருந்து வாதாபி கணபதியை வெற்றி முழக்கத்துடன் ஊர்வலமாக எடுத்து வந்து தமிழ்நாட்டில் நிலைநாட்டினார் அல்லவா? அந்தக் காலத்தில் தமிழ் மக்கள் விநாயகர் விஷயத்தில் காட்டிய பக்தி நெறியை இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகு இன்று மறுபடியும் தமிழ்நாட்டில் கண்டோம். மூலை முடுக்குகளிலும், சந்து பொந்துகளிலும், இடிந்த கோயில்களிலும், குளத்தங்கரை ஆற்றங்கரைகளிலும் வீற்றிருந்த விநாயகர்களுக்கெல்லாம் யோகம் பிறந்தது. அபிஷேக அர்ச்சனைகளும் உற்சவ ஊர்வலங்களும் அமோகமாக நடைபெற்றன. அறுவகைச் சமயங்களில் ஒன்றான காணாபத்தியம்" என்னும் சமயமே புத்துயிர் பெற்று விட்டதாகத் தோன்றுகிறது.

இத்துடன் கல்கி நிறுத்திக் கொள்ளாமல், ஓரமின்றி இன்னொன்றையும் சுட்டிக் காட்டினார்:



உண்மையான ஆத்திகர்கள் அவ்வளவாக மகிழ்ச்சி கொள்ள முடியாத, ஏன், வருத்தமே கொள்ளத்தக்க சில நிகழ்ச்சிகளும் நடைபெற்றதை இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. திராவிடர் கழகத் தலைவரின் உருவப் படங்களைக் கொளுத்துதல், அவரைப்போல் பொம்மை போன்ற செயல்கள் ஆஸ்திகத் தன்மைக்குச் சிறிதும் பொருந்தாத அநாகரிகமான காரியங்கள். "அன்பே சிவம் என்பது திருமூலரின் அருள்வாக்கு "அன்பே கடவுள்" என்னும் கருத்தை ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதத்தில் வலியுறுத்தி இருக்கிறது... ஆகையால் அன்பு நெறிக்கு மாறான செயல் எதுவும் ஆஸ்திகம் ஆக முடியாது. வாயினால் மட்டும் ஆஸ்திகம் பேசிக் கொண்டு உள்ளத்தில் நீசத்தனமாக துவேஷத்தை நிரப்பி வைத்துக் கொண்டிருப்பவர்கள்தான், நாஸ்திகர்கள் மீது பழிக்குப் பழி வாங்க நினைத்து மேற் கூறியவை போன்ற செயல்கள் புரிவார்கள்.

உண்மை ஆஸ்திகர்களுக்கு நாஸ்திகத்தின் மீது வெறுப்பு இருக்கலாம்; ஆனால் நாஸ்திகர்கள் மீது வெறுப்பு இருக்கக் கூடாது.

நாத்திகப் பிரச்சாரம் மிகுந்திருந்த காலம் அது. அந்தப் பிரச்சாரத்தை நடத்தியவர்கள் அப்போது நேர்முகமாய் அரசியலில் ஈடுபட்டிருக்கவில்லையாதலால், அது ஒன்றிலேயே தீவிரமாய் இருந்தார்கள். முதலில் அந்தப் பிரச்சாரம் பத்திரிகைகள் மூலமும் பேச்சு மேடைகளிலிருந்தும் நடந்தது; பின்னர் நாடக அரங்குகளிலிருந்தும் வெள்ளித் திரையிலிருந்தும் நடக்கலாயிற்று. நாளுக்கு நாள் அதிகமாய் அளாவலும் ஆற்றலும் கொண்டதாய்ப் பரவிய அந்தப் பிரச்சாரம் பற்றி, அடிக்கடி தமது கருத்தை வெளியிட்டார் கல்கி. எப்படி வெளியிட்டார் என்றால், எதிருக்குப் புதிராகவோ, ஏட்டிக்குப் போட்டியாகவோ அல்ல:

"கடவுளைக் குறித்து உம்முடைய கருத்தை இன்னும் கொஞ்சம் விஸ்தரிக்க முடியுமா?" என்று சில நேயர்கள் கேட்டிருக்கிறார்கள். "நாஸ்திகப் பிரச்சாரத்தைப் பற்றி உமக்குக் கவலை இல்லையா? ஹிந்து மதத்தைத் தூஷிப்பவர்களைக் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டாமா?" என்று வேறு சில நேயர்கள் கேட்டிருக்கிறார்கள்.

நல்லது, கடவுளைப் பற்றி என்னுடைய கருத்தை விஸ்தரிப்பதில் எனக்கு ஆட்சேபம் இல்லை; கடவுளுக்கும் ஆட்சேபம் இராது. கடவுள் ஒருவர் உண்டு என்பதை நான் நம்புகிறேன். ஆனால் கடவுள் இல்லை என்று வாதிப்பவர்களிடத்தில் எனக்குக் கோபம் கிடையாது. கடவுள் உண்டு என்று சொல்லவும் பிரச்சாரம் செய்யவும் எனக்கு எப்படி உரிமை கோருகிறேனோ, அப்படியே கடவுள் இல்லை என்று வாதிக்கவும் பிரச்சாரம் செய்யவும் பிறருக்கு உரிமை கொடுக்க விரும்புகிறேன்..

ஆனால், நாத்திகர்களோ திராவிடக் கழகத்தாரோ மற்றவர்களோ பிரச்சாரத்தோடு நில்லாமல், பலாத்காரத்தைக் கையாளத் தொடங்கும்போது அது நாட்டுக்கும் சமூகத்துக்கும் எதிரான குற்றமாகிறது. கோயிலுக்குப் போக வேண்டாம் என்று பிரச்சாரம் செய்யட்டும். அதற்குக் காரணங்களை எடுத்துச் சொல்லட்டும் எழுதட்டும். ஆனால் கோயிலுக்குப் போகிறவர்கள் மீது கல்லைப் போடும்படி சொன்னாலும், கோயிலுக்குள்ளே வந்து பக்தர்கள் மனம் புண்படும்படி நடந்து கொண்டாலும் அங்கே சர்க்கார் தலையிட்டே ஆக வேண்டும் பூணூலையும் உச்சிக் குடுமியையும் நாமத்தையும் திருநீற்றையும் சந்தனப் பொட்டையும் பற்றிப் பேச்சிலும் எழுத்திலும் சக்கைப் போடு போடட்டும். ஆனால் வைதிக நம்பிக்கையுள்ள ஓர் ஏழைப் பிராமணனின் பூணூலை அறுக்கவோ, ஒரு பக்தரின் நாமத்தையும் விபூதியையும் அழிக்கவோ யாரேனும் முற்பட்டால், அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கும் சர்க்கார் சர்க்காரே அல்ல. அத்தகைய சர்க்காரை நடத்தும் மந்திரிகள் கல்லைக் கட்டிக்கொண்டு கடலில் விழுந்து விடலாம்.

(கல்கி இதழ் 19.06.1949)

பின்னொரு சமயம் ஓர் ஊரில், குறிப்பிட்ட ஒரு சாதியாரின் வீடுகளில் கயவர்கள் புகுந்து கொடுமைகள் செய்தபோது "திருப்பித் தாக்குங்கள்!" என்ற தலைப்புடன் ஒரு தலையங்கம் எழுதினார் கல்கி. அதில் அவர் ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் துணிச்சலுடன் தற்காப்புச் செய்து கொள்ள வேண்டும் என்றார்:

புருஷர்கள் எப்போதும் வீட்டிலேயே இருக்க மாட்டார்கள். அவரவர்களும் காரிய நிமித்தமாக வெளியே போவார்கள். அத்தகைய சமயங்களில் காலிகளும் கயவர்களும் தாக்க வந்தார்கள் என்றால், நம் சகோதரிகள் நாணத்தையும் அச்சத்தையும் மற்றப் பெண்மைக் குணங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தாக்க வருகிறவர்களைத் திருப்பித் தாக்கத் தயாராக வேண்டும். கையிலே அகப்படும் அரிவாள்மணை, கடப்பாரை, உலக்கை, விளக்குமாறு முதலிய எல்லாவித ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு கயவர்களைத் திருப்பித் தாக்கித் தற்காப்புச் செய்து கொள்ள வேண்டும்.

(கல்கி இதழ் 02.08.1953)

வெறுப்பை வளர்த்து வன்முறையை விளைவிக்காதவரையில் யாரும் எவ்விதப் பிரச்சாரமும் செய்யலாந்தான் என்ற கருத்தை, இதற்கு முன்பு பார்த்த வாக்கியங்களில் கல்கி வெளியிட்டார் என்பதை மீண்டும் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த வாக்கியங்கள், "வேலைக்காரி" என்ற திரைப்படத்துக்கு அவர் எழுதிய விமர்சனத்தில் வந்தவை. சி.என்.அண்ணாதுரை கதை வசனம் எழுதிய படம் அது. "நாஸ்திகப் பிரச்சாரம் செய்கிற ஆட்சேபகரமான படம் என ஆஸ்திகர்கள் பலர் அதைக் கண்டனம் செய்து, அதைத் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கலாமா வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதற்காக மாகாண அமைச்சர்கள் இருவர், கல்கியை ஆலோசகராய்க் கொண்டு அந்தப் படத்தைப் பார்த்தார்கள்.

தடை செய்வதற்குரிய படம் அல்ல அது என்பதே கல்கி கூறிய ஆலோசனை. அது ஆட்சேபகரமான படமே அல்ல; தமிழ் நாட்டில் வெளிவந்துள்ள மிகச் சிறந்த படங்களுள் ஒன்று என்றார்.

பின்னர் அந்த மதிப்பீட்டைத் தமது விமர்சனத்தில் கல்கி விரிவுபடுத்தி வெளியிட்டு, படத்தில் அடங்கிய நல்ல கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார். அவற்றில் ஒன்று:

ஏழைகள் பணக்காரர்களிடம் படும் கொடுமையைப் பற்றி விவரிக்கும் கதை. கொடுமைக்கு ஆளான ஏழை மனிதன் பணக்காரனைப் பழிவாங்குகிறான். உண்மைக் காதலுக்கு சாதி வேற்றுமை இல்லை என்பது ஸ்தாபிக்கப்படுகிறது. பணக்காரனுடைய பிள்ளை ஏழை வேலைக்காரியைக் காதலித்து மணக்கிறான். முடிவில் பணக்காரர்களின் கர்வம் ஒடுங்கி ஏழைகளின் கை ஓங்குகிறது.

(கல்கி இதழ் 19.06.1949)

"விஷயத்தின் சிறப்பினாலும், நடிப்புத் திறமையினாலும், பேச்சு சாமர்த்தியத்தினாலும், டெக்னிக்கினாலும் படம் சிறந்து விளங்குகிறது" என்று பாராட்டிய பின்னர், ஆட்சேபகரமானது என்று சொல்லப்பட்ட பகுதியைக் கல்கி குறிப்பிட்டார்.

கதாநாயகன் காளி மாதாவிடம் பக்தி கொண்டிருந்தான். காளி கோயிலுக்குப் போய் வழிபட்டு வந்தான். அவனுடைய சிநேகிதன் மணி அதைக் குறித்து அவனைக் கேலி செய்து வந்தான்.

காளி பூஜையினால் கதாநாயகனின் கஷ்டம் தீரவில்லை. அவனுடைய தந்தையின் தற்கொலைக்குக் காரண புருஷரான பணக்கார வேதாசல முதலியாருக்கு ஒரு ஜமீன் கிராமம் கிடைக்கிறது. இதை அறிந்ததும் கதாநாயகனுடைய மனம் பதறுகிறது. காளி மாதாவிடம் வைத்த பக்தியும் நம்பிக்கையும் மறைந்து விடுகின்றன. "உன்னை வழிபட்டு என்ன பயன்!" என்று அலறிவிட்டு, பூஜை சாமான்களில் சிலவற்றை உடைத்துத் தள்ளிவிட்டுக் கோயிலிலிருந்து வெளியேறுகிறான்.

இதை நாஸ்திகப் பிரச்சாரம் என்றும், ஹிந்து மதத்துக்கு விரோதமான பிரச்சாரம் என்றும் சொல்லக் கூடும். ஆனா நாஸ்திகப் பிரச்சாரம் என்ற முறையில் இந்த முயற்சியை ஒருபெரும் தோல்வி என்றே நான் கருதுகிறேன்.

கதாநாயகன் காளியைப் பார்த்துக் கேட்பதற்கெல்லாம் ஹிந்து மதத்தை அறிந்தவர்கள் அனைவருக்கும் பதில் தெரியும்

"அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்"

தெய்வம் கருணை புரிவதும் அப்படியே.

காளி கோயிலிலிருந்து கதாநாயகன். காளியை வைது கொண்டே ஓடியபோது, காளி அவன் சிற்றறிவை எண்ணிச் சிரித்திருக்க வேண்டும்! ஏனெனில், அதே சமயத்தில் காளி அவனுடைய நன்மைக்காக என்ன அற்புதங்களெல்லாம் செய்து வைத்திருக்கிறாள் தெரியுமா?

கதையில் மேலே, எதிர்பாராத சம்பவங்களும், வியப்பான திருப்பங்களும் நம்ப முடியாத நிகழ்ச்சிகளும் வந்து, சுபமான முடிவுக்கு வழி செய்கின்றன. இவற்றை ஒன்றன் பின் ஒன்றாகக் கல்கி எடுத்துச்சொல்லி, காளியின் கருணையினால்தான் ஒவ்வொன்றும் நிகழ்வதாகத் தோன்றுகிறது என்றார். "காளி, பக்தனைப் பரிசோதிக்கும்போது பரிசோதிக்கிறாள். இனிமேல் சோதனையைத் தாங்க மாட்டான் என்று ஏற்பட்டதும் கருணை புரிந்து விடுகிறாள். உடனே நடவாத காரியமெல்லாம் நடந்து விடுகிறது!

"வேலைக்காரி" என்பது அந்தப் படத்தின் பெயராய் இருந்த போதிலும், அதற்கான தமது விமர்சனத்துக்குக் "காளியின் கருணை" என்றே தலைப்புக் கொடுத்தார் கல்கி.

இதே போலத்தான் வேறுபட்டதாய் "நல்ல தம்பி" என்ற ஒரு படத்துக்கான தமது விமர்சனத்துக்கும், "என் கடவுள்" என்று அவர் மகுடம் கொடுத்திருந்தார். என்.எஸ்.கிருஷ்ணன் எடுத்ததும் நடித்ததுமான அந்தப் படமும் ஆஸ்திகர்களின் கண்டனத்துக்கும், தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கும் இலக்காகி இருந்தது. "நல்ல தம்பி என்கிற கெட்ட தம்பி கடவுள் இல்லை என்று மறுப்பதாய் அமைந்த படம்" என்பது அதன்மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் முக்கியமானது. அதைக் கல்கி மறுதலித்து, உண்மையிலேயே அவன் நல்ல தம்பிதான் என்று சொன்னார். பெற்றோர் இருவரையும், உலகம் போற்றும் உத்தமர்கள் மூவரையும் அவன் போற்றியதைச் சுட்டிக் காட்டி, "அன்னை தந்தையரைக் கடவுள் என்று சொல்வதில் நமக்கு என்ன ஆட்சேபம் இருக்க முடியும்?" என்று கேட்டார்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. "மாதுரு தேவோபவா! பிதுரு தேவோ பவா" என்று உபநிஷதம் முறையிடுகிறது.



எல்லா மதங்களிலும் எல்லா நாடுகளிலும் பெற்றோர்களைத் தெய்வம் என்று போற்றுவது வழக்கமாய் இருந்து வருகிறது.

புத்தர், ஏசு, மகாத்மா காந்தி மூவரும் மாநிலம் வாழ்வதற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர்கள். தீனர்களின் துயரம் தீர்ப்பதற்காகத் தாங்கள் எல்லையில்லா இன்னல்களை அனுபவித்தவர்கள் அவர்களைக் கடவுளர்கள் என்று சொல்வது சாலவும் பொருந்தும்.

ஒரு மனிதன் கோயிலுக்குப் போக வேண்டாம்; மற்ற வெளிப்படையான மதாசாரங்களை அனுஷ்டிக்க வேண்டாம். புத்தர், ஏசு, மகாத்மா இவர்களைப் போற்றி, இவர்கள் காட்டிய வழியில் தன் வாழ்க்கையை ஒருவன் நடத்தினான் என்றால் அவனே உண்மையான ஆஸ்திகன்.

(கல்கி இதழ் 05.06.1949)

இந்த விமர்சனத்தை அச்சமயம் கவர்னர் - ஜெனரலாய் இருந்த இராஜாஜி படித்துவிட்டு, ரசிகமணிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தமது பாராட்டை வெளியிட்டார்:

(புதுடெல்லி 07.06.1949)

கல்கி இந்த இதழில், 'கருநாடகம், என்.எஸ். கிருஷ்ணனுடைய "நல்ல தம்பி படத்தைப் பற்றி எழுதியிருக்கும் விமர்சனம் மிகவும் நன்றாயிருந்தது என்று கிருஷ்ணமூர்த்திக்குச் சொல்ல வேண்டும். டெக்னிக்கை விரும்புகிறவர்கள் வேறு படங்களைப் பார்க்கப் போங்கள்; நல்ல லக்ஷியம், நல்ல நடிப்பு, நல்ல சிரிப்பு - இவற்றை விரும்புகிறவர்கள் நல்ல தம்பி படத்தைப் பாருங்கள்" என்று வெகு அழகாக முடிந்திருக்கிறது. இந்த நடை கிருஷ்ணமூர்த்திக்குப் பிறகு யார் எழுதப் போகிறார்கள்!

கழகக் கலைஞர்கள் சம்பந்தப்பட்ட திரைப்படங்களில் கடைசியாகக் கல்கி விமர்சனம் செய்தது "மனோகரா" அந்த விமர்சனம் அவர் வாழ்நாளில் வெளியான கடைசிப் புத்தாண்டு மலரில் இடம்பெற்றது. அந்தப் புத்தாண்டின் பெயர் ஜய வருஷம். "மனோகராவின் வெற்றி" என்பது அந்த விமர்சனத்தின் தலைப்பு.

ஒவ்வொரு அம்சத்திலும் எப்படி அந்தப் படம் வெற்றியாய் இருந்தது என்பதை, வெற்றிக்கு மேல் வெற்றியாக அடுக்கிச் சொல்லிப் புகழுரைகளைப் பொழிந்தார் கல்கி. அவற்றில் ஒன்று அதன் "ஜீவசக்தியுள்ள" வசனத்தின் வெற்றி:

இந்தத் திரைப்படத்தில் வரும் மனோகரன் இராஜ சபையில் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்துகிறான். அதைச் 'சொற்பொழிவு' என்று சொன்னால் போதாது. ஏனெனில், சாதாரணப் பேச்சுக்களைக்கூட இந்தக் காலத்தில் 'சொற்பொழிவு' என்று குறிப்பிடுகிறார்.

மனோகரன் இராஜ சபையில் பேசும் பேச்சைச் 'சொற் பிரவாகம், 'சொல் வெள்ளம்,' 'சொற் பிரளயம்' 'சொல் சண்டமாருதம்' என்றெல்லாம் சொன்னாலும் திருப்தி உண்டாகவில்லை. 'சொல் அம்பு மழை', 'சொல் குண்டு மழை', 'அணு குண்டு சொல்மாரி', எரிமலைச் சொற்பொழிவு' என்றெல்லாம் சொல்லக் கூடிய விதமாக, மனோகரன் தீப்பொறி பறக்கும் காரசாரமான சொற்களைக் கொட்டித் தீர்க்கிறான்.

தமிழ் மொழியை எவ்வளவு வன்மையாய்க் கையாள முடியும் என்பதற்கு மனோகரனின் இராஜ சபைப் பேச்சு நல்ல எடுத்துக்காட்டு. (கல்கி இதழ் 11.04.1954)

இந்த வாக்கியங்களில் பொதிந்த புகழ்ச்சிக்கு உரியவர் மு. கருணாநிதி. அவரேதான், பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகத்தைத் தக்கபடி மாற்றி அமைத்தும், உரையாடல்களைத் தமதாகவே வரைந்தும், மனோகரா திரைக் கதையை எழுதியவர்.

முன்பு கல்கி பாராட்டி விமர்சனம் எழுதியதும்- ஏற்கெனவே முன்னொரு அத்தியாயத்தில்நாம்கவனித்ததுமான-சி.என்.அண்ணாதுரையின் "ஓரிரவு"நாடகம்,பின்னர்

திரைப்படமாக வந்தது. அதைக் கல்கி பார்க்கவில்லையோ, பார்த்தும் விமர்சனம் வேண்டியதில்லை என நினைத்தாரோ தெரியவில்லை. அது எப்படியாயினும், முந்தியநாடக விமர்சனத்திலிருந்து பகுத்தறிவு வாதிகளின் எழுத்துத் திறமை, பேச்சுத் திறமை பற்றிய பொதுவான பகுதி ஒன்றை இங்கே பார்ப்பது பொருத்தமாய் இருக்கும்.

திருச்சி "நகர தூதன்" பத்திரிகையின் முதற் பக்கத்தில், "பேனா நர்த்தனம்" என்னும் தலைப்பில் ஒருவர் எழுதுகிறாரே, அவர் மிகப் பொல்லாத எழுத்தாளர். அவருடைய பேனா நர்த்தனத்தில், பரத நாட்டியத்திலேயுள்ள சகல ஜதி வகைகளையும் காணலாம். அப்படித் துள்ளிக் குதிக்கும் வேகமுள்ள தமிழ் நடையில் எதிர்க்கட்சிக்காரர்களையும் எதிர்க்கட்சிக் கொள்கைகளையும் அவர் தாக்குவார். நானும் பார்த்து வருகிறேன். சென்ற இருபது வருஷத்துக்கு மேலாக இவருடைய கொள்கையும் ஒரே மாதிரியாக இருந்து வருகிறது: இவருடைய தமிழ்நடையும் ஒரேவித வேகமுள்ளதாய் இருந்து வருகிறது இவரால் தாக்கப்படுகிற மனிதர் நல்ல ரசிகரா மட்டுமிருந்தால், "தாக்கப்பட்டாலும் இப்படிப்பட்ட பேனாவினால் அல்லவா தாக்கப்பட வேண்டும்" என்று தான் எண்ணத் தோன்றும்.

("பேனா நர்த்தனம்" புரிந்தவரின் பெயர் மணவை திருமலைசாமி என்று தெரிகிறது.)


திராவிடக் கட்சி- சுயமரியாதைக் கட்சி- ஜஸ்டிஸ் கட்சிச் சொற்பொழிவாளர்களிலே தற்சமயம் தலைசிறந்து விளங்குகிறவர் திரு. சி.என்.அண்ணாதுரை அவர்கள் திரு. ஈ.வெ.ரா. வுக்கு அடுத்தபடியாகத்தான் சொல்லுகிறேன்.

திரு.சி.என்.அண்ணாதுரையின் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். "சொற்பொழிவு என்றால் இதுவல்லவா பொழிவு? தட்டுத் தடுமாறிச் சொற்களுக்காகத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே!" என்று எண்ணத் தோன்றும்,

(கல்கி இதழ் 07.12.1974)

எந்தப் பொருளை யார் மூலம் கேட்டாலும் அதிலே மெய்பொருளைக் காண்பான் அறிவாளி: அந்த அறிவாளி ரசிகனாகவும் இருந்தால், அந்த மெய்ப் பொருளிலே அழகையும் காண்பான்.

நன்றி : பொன்னியின் புதல்வர் என்னும் நூலிலிருந்து.....



கலைஞரின் இயல்பு

– கே.சி.லட்சுமி நாராயணன்
ஆசிரியர்

உயிர்ப்பலி கூடாது என்று வலியுறுத்திப் பல கூட்டங்களிலும், மாநாடுகளிலும் நான் பேசினேன். தமிழ்நாடு காவல்துறை தலைவராக இருந்த எஸ். ஸ்ரீபால் அவர்களுடன் சேர்ந்து தீவிரமாக அகிம்சை பிரச்சாரம் செய்தேன்.

1976ஆம் வருடம் ஜனவரி மாதம் 11ஆம் தேதியன்று 'வர்த்தமானர், வள்ளுவர், வள்ளலார் காட்டிய வழி' என்ற தலைப்பில் ஒரு தின அகிம்சை பிரச்சார மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அதைத் தொடங்கி வைத்தார்.

அன்பு நெறியே மனித குலத்துக்கு உரியது என்று அந்த மாநாடு வலியுறுத்தியது.

1978ஆம் ஆண்டில் சென்னையில் தமிழ்நாடு முதலாவது அகிம்சை நெறி மாநாடு நடத்தப்பட்டது. ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அதைத் தொடங்கி வைத்தார்.

1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சென்னையில் தமிழ்நாடு இரண்டாவது அகிம்சை நெறி மாநாடு ஏற்பாடு நடத்தப்பட்டது. ஆளுநர் சாதிக் அலி, அமைச்சர் இரா.நெடுஞ்செழியன், மத்திய அமைச்சர் ஆர். வி.சுவாமிநாதன் முதலியவர்கள் கலந்து கொண்டார்கள்.

1987ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னையில் தமிழ்நாடு மூன்றாவது அகிம்சை நெறி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. அமைச்சர் க.ராஜாராம் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

இந்த மாநாடுகள் அனைத்தையும் சென்னை பகவான் மகாவீரர் பிரச்சார சங்கம் என்ற அமைப்பின் ஆலோசகர் என்ற வகையில் இரவு பகலாக உழைத்து ஏற்பாடு செய்தேன்.

இந்த மூன்று மாநில அளவிலான அகிம்சை நெறி மாநாடுகள் ஓர் எழுச்சியை உருவாக்க உறுதுணையாக இருந்தன என்று எஸ். ஸ்ரீபால் ஐ.பி.எஸ். (ஓய்வு) ஒரு பேட்டியில் கருத்துத் தெரிவித்தார்.

பொதுவாக, அக்காலத்திய கம்யூனிஸ்ட் தோழர்களும், தோழியர்களும் தங்களது கொள்கையிலிருந்து இம்மிளவு கூடப் பிறழாதவர்களாக - சர்வ பரித் தியாகங்களைச் செய்வதற்குத் தயாரானவர்களாக- பொதுமக்களது காயங்களைத் தங்களது காயங்களைப் போல உணர்ந்தவர்களாக- எளிமையாக வாழ்ந்தவர்களாக-விளங்கினார்கள்.

என்னைப்போல, அவர்களது கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் முழுமையாக ஒப்புக் கொள்ளாதவர்கள் கூட, அவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் அளித்தார்கள்.

ஆனால், இன்றைய கம்யூனிஸ்ட் தோழர்களை என்னால் அவ்வாறு பார்க்க முடியவில்லை.

இன்றைய கம்யூனிஸ்ட் தோழர்களும், தோழியர்களும் நாட்டைத் துண்டாட விரும்பும் பிரிவினை சக்திகளுடன் உறவு கொள்கிறார்கள். சாதி வழிச்சக்திகளுடன் குலாவுகிறார்கள். இந்து மதத்தை மட்டும் ஏசுகின்ற போலி நாத்திகர்களுடன் கைகுலுக்குகிறார்கள். ஊழல் புரிவோரை வெட்கமின்றி ஆதரிக்கிறார்கள்.

இதைக் கண்டு நான் வருந்துகிறேன்; நான் வேறு என்ன செய்ய முடியும்?

எனது பயணம், தேசியப் பயணம்; எனது பார்வை, தேசியப்பார்வை. இவற்றுக்கு ஊறு விளையாத வகையில் நான் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில், கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமின்றி, இதர பல கட்சிகளைச் சார்ந்த தலைவர்களுடனும் பல நேரங்களில் தொடர்பு கொண்டு பணியாற்றி உள்ளேன்; பொதுப் பிரச்சினைகளில் சேர்ந்து செயல்பட்டிருக்கிறேன். தனிப்பட்ட நிகழ்ச்சிகளிலும் சந்திப்புகள் அமைந்துள்ளன.

தி.மு.க. தலைவர்களில் கலைஞர், பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் ஆற்காடு வீராசாமி, முன்னாள் அமைச்சர் சற்குண பாண்டியன் முதலியவர்களைக் குறிப்பிடலாம்.

கலைஞரிடம் ஓர் இயல்பு உண்டு, ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்துவிட்டால், அதைத் திட்டமிட்டுக் கட்டாயம் செய்து முடித்து விடுவார்.

1976ஆம் வருடம் ஜனவரி மாதம் 11ஆம் தேதியன்று அகிம்சை நெறி சார்ந்த ஒரு கருத்தரங்கை நடத்தியதையும், அதில் முதலமைச்சர் கலைஞர் கலந்து கொண்டதையும் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

அந்தக் கருத்தரங்கில் முதலமைச்சரிடம் சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்தோம்.

அந்த மாநாடு முடிந்து இருபது நாட்களில் தமிழ்நாட்டில் கலைஞரது ஆட்சி கலைக்கப்பட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சி 31.01.1976 அன்று அமல் செய்யப்பட்டது.

எனினும், மாநாடு முடிந்து நான்கே நாட்களில் எங்களது கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டு விட்டது.





மகாவீரர் தினம், திருவள்ளுவர் திருநாள், வடலூர் வள்ளலார் இராமலிங்கர் நினைவு நாள் ஆகிய மூன்று தினங்களிலும் தமிழ்நாடு முழுவதும் ஆடு, மாடுகளை வெட்டும் இடங்களையும், கசாப்புக்கடைகளையும் மூட வேண்டும் என்ற எங்களது கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, ஜி.ஓ.எம்.எஸ். 45 என்ற தமிழ்நாடு அரசின் ஆணை 16.01.1976 அன்று வெளியிடப்பட்டது.

ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்று துணிந்துவிட்டால், கலைஞர் எவ்வளவு வேகமாகச் செயல்படுவார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

நன்றி: **'ஒரு பத்திரிகையாளனின் பயணமும், பார்வையும்' என்னும் நூலிலிருந்து...**



கலைஞரின் கவிதைத் தூரிகை படைத்திட்ட சொல்லோவியங்கள்!

கோவி. லெனின்
மூத்த பத்திரிகையாளர்

எதிர்காலத் தலைமுறையினரின் நெஞ்சில் முத்தமிழறிஞர் கலைஞரின் பேராற்றலைப் பதிவு செய்திடும் வகையில், அவருடைய நூற்றாண்டில் கலைஞர் பெயரால் மருத்துவமனை, கோட்டம், நூலகம் எனப் பயன் தரும் கட்டமைப்புக்களை தொடர்ச்சியாக உருவாக்கித் தருகிறார் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15ஆம் நாள் ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் எனச் சட்டமியற்றி செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு அந்த நாளில், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் எனும் நவீனத் தொழில்நுட்பத்திலான அறிவுக் கோயிலைத் திறந்து வைத்தார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு விழாவில் வரவேற்புரையாற்றிய மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், 1971ஆம் ஆண்டு மதுரையை மாநகராட்சியாகத் தரம் உயர்த்திய விழாவில் கலைஞர் படைத்தளித்த கவிதையினை உணர்ச்சியோடும், உரிய ஏற்ற இறக்கங்களோடும் அழகாக எடுத்துரைத்தார்.

மாங்குடி மருதனும் மற்றைய புலவரும்
பாங்குடை மதுரையை பாடிய பின்னரும்
'நீங்களும் வரைக' என்றொரு
வேண்டுகோள் தாங்கிய
முடங்கல் வந்தது.
தூங்கிடா மதுரை எதற்கும்
ஏங்கிடா மதுரை –இன்பம்
நீங்கிடா மதுரை – தலை
வீங்கிடா மதுரை – தீமை
தாங்கிடா மதுரை – தொல்லை
வாங்கிடா மதுரை
அம்மதுரை செம்மதுரை
செம்மலர்கள் வாழ் மதுரை

என்று கலைஞரின் அடுக்குமொழிக் கவிதையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தபோது, விழாவில் திரண்டிருந்த மாணவ-மாணவியர் அலைகடல் ஆர்ப்பரிப்பதுபோல கைதட்டி வரவேற்று மகிழ்ந்தனர்.

ஏறத்தாழ 52 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட கவிதையின் சுவையை இன்றைய தலைமுறையினராலும் உணர முடிகிறது. தன் தாத்தா அன்பிலாரின் நண்பரான கலைஞரின் கவிதையை அதே உணர்வுடன் பேரனால் எடுத்துரைக்க முடிகிறது. அரை நூற்றாண்டு கடந்த கலைஞரின் இத்தகைய கவிதைகள், இன்னும் பல நூற்றாண்டுகள் கழித்து வரும் தலைமுறையினரையும் ஈர்க்கும். அவருடைய தமிழின்சுவை அப்படிப்பட்டது.

கலைஞரின் படைப்பாற்றல் பல்வேறு வடிவங்களில் வெற்றிகரமாக வெளிப்பட்டுள்ளது. அதில், கவிதை அவருக்கு கைவாள்.

கவி வளத்தைப் பெற்றேனில்லை.
கவிதை பாடக் கற்றேனில்லை
யாப்பின்றிப் போனாலும் போகட்டும் – நம்நாடு
மொழி, மானம் உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கையொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் – கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் – நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கி–கொள்கை
மாறுகின்ற கோடரிகள் உணர்வதற்கு ஒன்று சொல்வேன்.

என்று தனக்குக் கவிதைமேல் உள்ள ஆர்வத்தையும் காதலையும் விளக்கியிருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். நாடு, மொழி, இனம் காக்கும் படைப்புகளாக அவருடைய கவிதைகள் வெளிப்பட்டன. அக்காலத்திய வித்வான் பட்டமோ, புலவர் பட்டமோ பெற்றவரில்லை கலைஞர். என்றாலும், எந்தப் புலவருக்கும் எத்தகைய கவிஞருக்கும் சற்றும் குறையாத வகையில், காலம் கடந்து நிற்கும் கவிதைகளைப் படைத்தளித்தவர்.



கவியரங்குகளில் கலைஞரின் குரலில் அந்தக் கவிதைகளைக் கேட்கும்போது, அவருடைய வரிகள் ஓவியமாய் மனத்திரையில் தோன்றும். பாமரர் நெஞ்சினிலும் தமிழ்க் கவிதைத் தேன் ஊறும்.

தந்தைப் பெரியாரைக் கவிதைத் தூரிகையால் இப்படி வரைகிறார் கலைஞர்.

வங்கத்து தாகூர் போல தாடி உண்டு.
பொங்குற்ற வேங்கை போல
நிமிர்கின்ற பார்வை உண்டு.
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு.
வெண்சங்கு ஒத்த கண்களிலே
விழியிரண்டும் கருவண்டு.
அதில் சாகும் வரை ஒளியுண்டு.

பெரியார் என்றால் எளியோருக்கும் முதலில் நினைவுக்கு வருவது அவரது வெண்தாடி. அதனை வங்காளத்து மகாகவி தாகூரின் தாடியுடன் ஒப்பிட்டுத் தொடங்கி, செங்குன்றம் போன்ற சிவந்த மேனியைக் கொண்ட பெரியாரை மனத்திரையில் வரைந்து காட்டுகிறார் கலைஞர்.

ஓவியக் கலை அறிந்தவர்களுக்குத் தெரியும். கண்களைக் கடைசியாக வரைவார்கள். அதனால் பெரியாரின் உடல்தோற்றம். தாடி இவற்றை வரைந்து சொற்சித்திரமாக காட்டியபிறகு. கண்களுக்கு வருகிறார். ஓவியத்தில் உள்ள கண்கள் ஒளியுடையதாக இருந்தால்தான் பார்க்கின்றவர்களை ஈர்க்கும். கலைஞரின் கவிதை வரிகளும் அப்படியே அமைந்திருக்கின்றன.

'தென்னவன் காதை' என்ற கவிதையில் திராவிட மாமன்னன் இராவணனின் பெருமைகளைச் சொல்கின்ற கலைஞர், அவன் ஆட்சி செய்த இலங்கைத் தீவு பற்றியும் கவிதைத் தூரிகையால் வரைந்து காட்டியிருக்கிறார்.



"கண்ணுக்குள் பாவை போல இலங்கைத் தீவு.
கருவிழிதான் ஆழ்கடல்கள்."


கருப்பான விழியைக் கடல் என்றும், அந்த விழி நடுவே இருக்கின்ற பாவை போல, கடல் நடுவே இருக்கிறது இலங்கைத் தீவு என்றும் அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

கியூபா அதிபராக இருந்த புரட்சியாளர் ஃபிடல் காஸ்ட்ரோ, முத்தமிழறிஞர் கலைஞரை மிகவும் ஈர்த்தவர். தான் சந்திக்க விரும்பிய தலைவர் என்று காஸ்ட்ரோவைக் குறிப்பிட்டிருக்கிறார் கலைஞர். காஸ்ட்ரோ மறைந்தபோது கலைஞர் எழுதிய கவிதை, கியூபா ஆட்சியாளர் ரவுல் காஸ்ட்ரோவின் மேசையில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கவிதையில் கியூபா நாட்டையும் காஸ்ட்ரோவின் ஆற்றலையும் அழகாக வரைந்திருப்பார்.

கியூபா சின்னஞ்சிறிய நாடு
ஆயிரக்கணக்கான தீவுகள் கொண்ட
அழகிய தேன்கூடு.
தேன்கூடென்று ஏன்
சொல்கிறேன் தெரியுமா?

கலைஞர் நூற்றாண்டு
நிறைவு மலர்

கலைஞர் 100
1924 - 2024



தெரியாமல் அமெரிக்கா
கைவைக்கும் போதெல்லாம்
கொட்டி விடும் தேனீக்கள்
கியூபாவின் மக்கள் – அந்தக்
கூடு காக்கும் காவல்காரர்தான்
பிடல் காஸ்ட்ரோ!

இலங்கைத் தீவாக இருந்தாலும், கியூபா தீவுக் கூட்டங்களாக இருந்தாலும் அவற்றை உவமைகளுடன் எடுத்துரைத்து நெஞ்சில் அழியாத ஓவியமாக ஆக்கிவிடுவார் கலைஞர்.

கல்லக்குடிப் போராட்டத்தின்போது தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்துப் போராட்டம் நடத்தி, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், கூண்டுக்கிளியின் நிலை பற்றி கலைஞர் எழுதிய கவிதை அழகியலும் கருத்தாழமும் சொல்வளமும் கொண்டது. அந்தக் கவிதையில் கிளியின் தோற்றத்தை அவர் வர்ணிக்கும் அழகு, உவமைகளின் தொகுப்போவியம்.

சுரைக்காய்ப் பிஞ்சின் தலையில்
மிளகாயப் பழத்தை செருகி – இடையில்
மல்லிகை இலைகள் சிறகாய் – பின்புறம்
தாழை மடலை வைத்தால்
பச்சைக் கிளியே.. உன் போல் படைப்பு!

என்று கிளியின் தோற்றத்தை காய், கனி, இலைகளால் உருவாக்கிக் காட்டிவிட்டு, அதன் பின்னரும் வர்ணிக்கிறார்.

வட்டத் தலையே! சிவப்பு மூக்கே!
சின்ன இறகே! நீண்ட வாலே!
கன்னற் கிளியே! சொன்னது பிசகா?

எனக் கிளியிடமே கேட்கிறது கலைஞரின் கவிதை. எந்தக் கிளிதான் தன்னை இப்படி வர்ணிப்பதை பிசகு என்று சொல்லும்?

எளிமையாகத் தொடங்கி,
அழுத்தமான கருத்துக்களால் கவிதையை நிறைவு செய்யும்
ஆற்றல் கலைஞரின் சிறப்பு.

அவருடைய 'கணக்கு' கவியரங்கம் மிகவும் புகழ் பெற்றது.

கணக்குகள் பலவிதம்
கணக்கு பார்ப்பவரும் பலவிதம்
பாட்டாளியின் வியர்வையிலே
முதலாளி பார்ப்பதுதான் பணக்கணக்கு.
கூட்டாளி தன் அன்புக்கு
கூலி ஒன்று கேட்பதுதான் பதவிக் கணக்கு,
பாவையவள் பாக்கி விழும் கடனுக்கு–
அடுக்களையில்
கரிக்கோட்டாற் கிழிப்பதுதான்
பால் கணக்கு, தயிர் கணக்கு.
கணக்குப் பிள்ளை செய்வதும் கணக்கு–ஒரு பெண்ணை
மணக்கப் பிள்ளை செய்வதும் கணக்கு – இந்தக் கணக்கில்
இருபதும் பதினெட்டும் கூட்டிச் சொல்லல் மனக்கணக்கு.
இருபது பதினெட்டைக் கூட்டிச் செல்லல் காதல் கணக்கு

என்று கலைஞர் தன் குரலில் கவிதையைப் படிக்கும்போது அரங்கம் அதிரும்.

அதன்பின் கலைஞர் தொடர்வார்:

தான் போட்ட கணக்கு தவறியதால்
தற்கொலையை முத்தமிட்டான் ஹிட்லர் என்போன்
மான் போட்ட கணக்குகளை வேங்கை அழித்துவிடும்
ஏன் போட்டாய் தப்புக் கணக்கென்று
வேங்கையினை வேடன் வீழ்த்திடுவான்
இதுதான் உலகு!

என்ற வரிகள் survival of the fittest எனும் கோட்பாட்டை எளிமையான உவமைகளுடன் எடுத்துரைப்பவையாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அரசியலில் பங்கேற்றிருக்கின்ற சமுதாய மறுமலர்ச்சி இயக்கம். அரசியல் களமும் சமுதாயப் பணிகளும் பிரிக்க முடியாதவை. ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பினை இன்றுகூட சிலர் அறியாமல்

இருப்பதுண்டு. அவர்களுக்கு அழகான உவமையுடன் விளக்கம் தருகின்றன கலைஞரின் கவிதை வரிகள்.

அறுவடைக்குப் பின்
வீட்டுக்கு வந்த நெல்லை
அரிசியாக்கி உலையிலிட்டுச்
சோறு படைத்தல்
அரசியல் என்றால்
அந்நெல் விளையும் கழனிக்கு
நீர் பாய்ச்சிப் பண்படுத்தி உரமிட்டு
அருகில் வளர் களைகளையும்
அகற்றுவதே சமுதாயப் பணி
என்கிறார் கலைஞர்.

கவிதையைத் தூரிகையாய், ஆயுதமாய் அரசியல் - சமுதாயக் களத்தில் பயன்படுத்தியவர் முத்தமிழறிஞர். அவருடைய கருத்து விதைகளை தன் நெஞ்சத்தில் விளைவித்துள்ள கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அரசியல் தந்துள்ள பதவிப் பொறுப்பு எனும் வாய்ப்பினை தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், திராவிட இனத்தின் உரிமை மீட்புக்கும் மிகச் சரியாகப் பயன்படுத்தி, நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞருக்கு நாளும் பொழுதும் பெருமை சேர்த்து வருகிறார்.

கோவி.லெனின்
மூத்த பத்திரிகையாளர்

பிறவிப் பத்திரிகையாளன்!

– பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்
ஆசிரியர்
'தி ரைசிங் சன்' ஆங்கில இதழ்

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 1787இல் வலிமையான ஜனநாயகம் குறித்த விவாதத்தின்போது, எட்மண்ட் பர்க் (Edmond Burke) என்ற பாராளுமன்ற உறுப்பினர். சட்டம் இயற்றும் சபை, அரசு நிருவாக சக்கரம், நீதித்துறை என்ற மூன்றும்தான் முப்பரிமாணங்களாக இருந்தாலும், இந்த மூன்றையும் கண்காணித்து, இவற்றின் குற்றம் குறைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லி தவறுகளைச் சுட்டிக்காட்ட பத்திரிக்கை துறையால் மட்டுமே சாத்தியம் என்பதை எடுத்தியம்பி பத்திரிகைத் துறை, 'ஜனநாயகத்தின் நாலாவது தூண்' என்று வரையறுத்ததாக தாமஸ் கார்லிலே (Thomas Carlyle) கூறுகிறார். இந்த அறம் சார்ந்த நெறிமுறைகளின் அடிப்படையில்தான் இன்றளவும் அது இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த மேன்மைமிகு பத்திரிகைத் துறையில், தலைவர் கலைஞரின் நெடும் பயணமும் இதையேதான் கட்டியம் கூறுகிறது.

'இன்றைய செய்தி நாளைய வரலாறு' என்ற முரசொலியின் இலட்சினை நிரலாக்க மொழியில் புதைந்து கிடைக்கும் சிறப்பியல்புகளை சிந்தித்து தெளிந்தால். எவரொருவரும் வெற்றிகரமான பத்திரிகையாளராகத் திகழ்ந்திட இயலும். ஏனென்றால், வரலாறு என்பது ஆணித்தரமான உண்மை. அந்த உண்மையை உள்ளது உள்ளபடி எழுதுவதும், சுவாரசியமாய் படிக்கும்படி அதற்கு எழுத்து அணி சேர்ப்பதும், எந்த திரிபும் இல்லாமல் எதிர்காலத்தில் எவர் ஒருவரும், 'இது உண்மைக்குப் புறம்பானது' என்று நிரூபித்திட இயலாத வகையில், உண்மைகளை, தேவையான அணிகலன்களோடு எழுதுவதே ஆகும். எனவே, இன்றைய செய்தியை பதிவு செய்கிறபோதே. ஆராய்ந்தறிந்து அணுவளவும் நீட்டலும், குறைத்தலும் இன்றி பொறுப் புணர்வோடு பதிவு செய்ய வேண்டும்' என்ற இந்த வரையறையைத்தான்

நாலு வார்த்தைகளில் நறுக்கு தெறித்தாற்போல், குறள் போல குறுக சொல்லியுள்ளார் தலைவர் கலைஞர்.

தலைவர் கலைஞர் மறைவிற்குப் பின் கல்வி, மருத்துவம், ஆட்சி நிருவாகம். இலக்கியம், சினிமா என்று துறைதோறும் புகழஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன. அதுபோலவே ஊடகவியலாளர்கள் புகழஞ்சலிக் கூட்டமும் நடத்தப்பட்டது.

கலைஞரின் அரசியல், 'தமிழகத்தில் மையம் கொண்டாலும் அதன் அதிர்வலைகள் இந்தியாவெங்கும் எதிரொலித்தது' என்று அமெரிக்காவின் 'தி நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் மரிய அபி ஹபிப் துவங்கி, கலைஞர். 'தான் எழுதிய எழுத்துகளுக்கு இறுதிவரை உண்மையாகவே இருந்தார்' என்று 'தி இந்து' பத்திரிகை முன்னாள் ஆசிரியர் என். ராம் அவர்களும், இந்தியாவின் நெருக்கடி நிலையை பிரகடனம் செய்த இந்திரா காந்தியை, 'ஹிட்லர்' போன்று முரசொலியில் கலைஞர் வடிவமைத்ததுதான், பின்னாளில் நக்கீரனில் ஜெயலலிதாவை ஹிட்லராக வரைந்திட வழிகாட்டியது என்று சொன்ன நக்கீரன் கோபாலும்; 'இனிமேல் படிப்பதற்கு சலிப்பற்ற நேர்காணல்களும், சளைக்காத கேள்வி பதில்களும், அறிவுக்கு விருந்தாகும் விருந்தினர் பக்கங்களும் கிடைக்கவே கிடைக்காது' என்று மூத்த நிருபர் லட்சுமி சுப்பிரமணியனும்; 'பத்திரிகையின் வாயிலாக தினந்தோறும் கழக உடன்பிறப்புகளுக்கு ஏதேனும் ஒரு செய்தியை கொண்டு சேர்க்கும் செயலில் முழு மூச்சாக ஈடுபட்டவர் கலைஞர்' என்று பத்திரிகையாளர் சமஸ் புகழாரம் சூட்டியதும், இன்னும் பல இளைய தலைமுறை ஊடகவியலாளர்களும் அவரவர் வாழ்வில், தலைவர் கலைஞரின் நேர்மறைத் தாக்கத்தை விவரித்தபோது, தாத்தன், அப்பன், மகன் என்ற மூன்று தலைமுறையினருக்கும். அமெரிக்கா துவங்கி அன்னை தமிழகத்தின் தயாளன் அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் ஏதோ ஒரு வகையில் கலைஞர் எனும் மாபெரும் பத்திரிகையாளர் படிப்பினையைத் தந்திருக்கிறார், தந்து கொண்டிருக்கிறார். தந்து கொண்டும் இருப்பார்.

ஏனெனில், 94 வயது வரை வாழ்ந்து, அதில் 80 ஆண்டுகால பத்திரிகையாளர் அனுபவம் என்பது அரிதிலும் அரிதானது, அந்த தனிச் சிறப்பு தலைவர் கலைஞருக்கு மட்டுமே உரித்தானது. இதில் கூட சில பேருக்கு எங்கிருந்து 80 ஆண்டுகால அனுபவம்? என்ற கேள்வி பிறக்கலாம், சிலர் கேலியும் பேசலாம், ஆனால் 1938இல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது மாணவர் மத்தியில் மொழி உணர்வை வளர்க்க எண்ணி "மாணவர் நேசன்" என்ற பத்திரிகையைத் துவங்கி கையெழுத்துப் பிரதியாக நடத்த ஆரம்பித்தார். அதன் தொடர்ச்சிதான் 10.08.1942இல் வார இதழாக வெளிவந்து, 17.09.1960லிருந்து நாளிதழாக, திராவிட இயக்க கருத்தியல் போர்வாளாக வெளிவந்து கொண்டிருக்கும் முரசொலி பத்திரிகையாகும்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான பத்திரிகையாளர்கள் தலைவர் கலைஞருடனான பத்திரிகையாளர் சந்திப்பை நெகிழ்ந்து, மகிழ்ந்து



சிலாகித்துக் கொண்டே இருக்கிறார்கள். தான் கேட்ட கேள்விக்கு கலைஞர் பதில் சொல்லிவிட்டால். தனக்கு 'புலிட்சர் விருது (Pulitzer Award) கிடைத்ததாகவே எண்ணி, துள்ளிக் குதிக்கும் அளவிற்கு மேன்மைமிகு மாட்சிமை பொருந்திய தலைவர் கலைஞர். கலைஞரின் பத்திரிகையாளர் சந்திப்பு சிறப்பாக அமையக் காரணம், அடிப்படையில் அவர் ஒரு பத்திரிகையாளர் என்பதுதான். ஒவ்வொரு கேள்வியையும் பத்திரிகையாளர் கேட்கும்போது, அவர் எந்த பதிலை எதிர்பார்த்து கேட்டிருப்பார் என்று யூகித்து, அந்த பதிலை தனக்கே உரிய தனிப்பாணியில் சமயோஜிதமாக பதில் சொல்லி இருப்பார்.

அப்படித்தான் ஒருமுறை, நிருபர் ஒருவர் 'நாடகத்தில் நடித்த தங்களுக்கு சினிமாவில் நடிக்க ஆசை இல்லையா?' என்று கேட்க. 'என்னை சினிமாவில் நடிக்க வைக்கும் ஆசை யாருக்கும் வரவில்லை', என்று சொன்னார். இந்த மாதிரியான பதில்கள், நகைச்சுவை நயத்தோடு, எதார்த்த உண்மைகளோடு. சுற்றி இருக்கும் சூழ்நிலை காரணிகளையும். ரத்தினச் சுருக்கமாக சொல்லிவிடுவதன் மூலம் அந்த இடத்தை உயிரோட்டத்துடன் மனோரம்மியமாக்கி விடுகிறது.

இதே போன்று தான் இன்னொரு முறை, 'உங்களை வாய்விட்டுச் சிரிக்கச் செய்த ஜோக் எது?' என்று நிருபர் கேட்க. 'தன்னை திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி என்று ஜெயலலிதா அம்மையார் கூறியதுதான்', என்று பதில் சொல்ல அதில் தொக்கி நிற்கும் நக்கலும், நையாண்டியும், திராவிட இயக்கக் கொள்கை கோட்பாடுகளுக்கு நேரெதிரான, 'பிறப்பால் ஏற்றத்தாழ்வை, கற்பிக்கும் சனாதனத்தையும் யாகத்தால் யாவும் நிகழும்', என்ற மூடநம்பிக்கையையும் ஏற்றுக்கொண்ட



ஜெயலலிதா சொன்ன 'பரிணாம வளர்ச்சி' என்ற வார்த்தை இந்த இடத்தில் பரிதாபத்திற்குரியதாய் பரிதவித்து நிற்பதையும் சொல்லாமல் சொல்லிவிடும் சொல்லழகும்தான் தலைவர் கலைஞரின் தனிநடையாகும்.

இப்படி பத்திரிகையாளராகவும், பத்திரிகையாளர்களின் கருத்துக் கருவூலமாகவும் தலைவர் கலைஞர் அவர்கள் பரிமளித்ததற்கு காரணம், ஏறத்தாழ ஓராண்டு காலம் ஐயா பெரியார் அவர்கள் நடத்திய, 'குடிஅரசு' பத்திரிகையின் துணை ஆசிரியராக பணியாற்றும்போது. வாசகர்களிடமிருந்து வந்த கேள்விகளுக்கெல்லாம் அன்றாடம் பதில் எழுத, ஐயா பெரியார் கொடுத்த பயிற்சியும், ஒவ்வொரு நாளும் இரவு நேரத்தில் பெரியாரோடு அமர்ந்து, உலகளாவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரம் குறித்து விவாதிக்கும் போது ஐயா தந்த அரசியல் அறிவும் தான் காரணம் என்று, தான் எழுதிய 'நெஞ்சுக்கு நீதியில்' கோடிட்டுக் காட்டி இருக்கிறார்.

குடிஅரசு பத்திரிகையின் துணை ஆசிரியராக ஐயா அழைப்பதற்குக் காரணமாக அமைந்தது கலைஞரின் எழுத்துதான் என்றாலும், அதற்கான முதல் அங்கீகாரம் என்பது பேரறிஞர் அண்ணா நடத்திய, 'திராவிட நாடு' பத்திரிகையில் கலைஞர் எழுதிய, 'இளமைப் பலி' என்ற கட்டுரை பிரசுரமானதும், அதைத் தொடர்ந்து நபிகள் நாயகம் விழாவிற்கு திருவாரூருக்கு வருகை தந்த அண்ணா, கலைஞரை அழைத்துவரச் சொல்லி பாராட்டியதும்தான் காரணம்.

தலைவர் கலைஞரின் எழுத்துக்களும், பேச்சுக்களும் பெறுவதற்கு அடிப்படையான காரணம் அவரின் இடைவிடாத முயற்சியும், ஓய்வறியாத உழைப்பும்தான். 'சேரன்' என்ற புனைப்பெயரில் எழுதத் துவங்கிய 'சோழத் தலைவனின்' வரலாறு, ஐவகை நிலம் கொண்டு ஆட்சி செய்த, மூவேந்தரின் வரலாறு போல் இந்நிலமிசை நீண்டு நிலைக்கும். நிலைத்து நின்று நீடு வாழும்....



கலைஞர் கேள்விகளை நேசித்த ஜனநாயகவாதி!

ஷபீர் அஹமத்
முதன்மை ஆசிரியர், நியூஸ் மினிட்

2012 மே 1, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் 30 வருடங்களுக்கு முன் தி.மு.க. தலைவர் கலைஞரால் தொடங்கப்பட்ட டெசோ (TESO) அமைப்பு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு அண்ணா அறிவாலயத்தில் உள்ள செய்தியாளர்கள் கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து கலைஞர் விளக்கினார். இலங்கைப் பிரச்சினை தொடர்பாக எழுப்பப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

செய்தியாளர் சந்திப்பு முடியும் தருவாயில், அப்போதைய ஜெயா டிவி நிருபர் தேவராஜ் கலைஞரிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். அந்தக் கூட்ட அரங்கில் இருந்த அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் ஒரு மிகப்பெரிய அதிர்ச்சி மற்றும் ஆச்சரியம். இதுவரை கலைஞர் இந்தக் கேள்வியை எதிர்கொண்டதில்லை. தற்போது இந்தக் கேள்வி நேரடியாக அவரிடம் கேட்கப்பட்டதால். இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் என்று அனைவரும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் போது, அந்த கூட்ட அரங்கில் ஒரு மயான அமைதி நிலவியது.

இந்தக் கேள்வியை சற்றும் எதிர்பார்க்காத கலைஞர், அவர் அருகில் அமர்ந்திருந்த பேராசிரியர் அன்பழகன். திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி மற்றும் சுப.வீ. ஆகியோரைப் பார்த்தார். கலைஞரிடம் இருந்து இந்தக் கேள்விக்கு என்ன பதில் வரும் என்று பத்திரிகையாளர்களைப் போலவே அவர்களும் ஆர்வமாக இருந்தனர்.

கலைஞரிடம் கேட்கப்பட்ட கேள்வி: "ஐயா விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா இல்லையா?"

ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது வழக்கமாக எடுத்துக் கொள்ளும் நேரத்தை விட கூடுதலான நேரத்தை கலைஞர் எடுத்துக் கொண்டதால் அந்த அரங்கம் முழுவதும் ஒரு மிகப்பெரிய டென்ஷன் நிலவியது.

2009 தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணத்தை தமிழ்நாட்டில் இருக்கும் ஈழ ஆதரவுத் தலைவர்கள் யாராலும் உறுதிப்படுத்தப்படாத நிலை என்பது இருந்தது. அதனால் கலைஞர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்பது ஒரு கூடுதல் எதிர்பார்ப்பை உண்டாக்கியது, எந்தப் பதிலாக இருந்தாலும், அது நிச்சயமாக தலைப்புச் செய்தியாகும் என்பதில் சிறிதளவும் சந்தேகம் யாருக்கும் இருக்க முடியாது. பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் அல்லது இல்லை என்று பதிலளித்தால் இரண்டுமே தேசிய மற்றும் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகக் கருதப்படும்.

அவர் பதில்: "மாவீரனுக்கு மரணம் இல்லை".

இந்த பதிலைச் சொன்னவுடன் அரங்கம் முழுவதும் கை தட்டல் மற்றும் சிரிப்பு அலை. கலைஞரிடம் இருந்து இப்படி ஒரு பதில் வரும் என்று அந்த அரங்கத்தில் இருந்த ஒருவர் கூட எதிர்பார்த்து இருக்க மாட்டார்கள். அந்தக் காட்சியை நேரடியாகப் பார்த்த பத்திரிகையாளன் என்ற முறையில் அவருடைய சிந்தனை எந்த அளவுக்கு கூர்மையாக இருக்கிறது என்பதைக் கண்டு நான் வியப்படைந்தேன். அதனால்தான் இன்னும் அந்தக் காட்சியை என்னால் துல்லியமாக விவரிக்க முடிகிறது.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் சென்று இருக்கலாம் அல்லது வேறொரு நாள் இதற்கு பதில் சொல்கிறேன் என்று கூறியிருக்கலாம். ஆனால் இந்தக் கேள்வியைக் கடந்து செல்ல அவருக்கு மனமில்லை காரணம் இந்தக் கேள்வியில் ஒரு அரசியல் சவாலும் இருக்கிறது என்பதை அவர் ஒரு நொடியில் புரிந்து கொண்டதால் அந்தக் கேள்வியை அவர் எதிர்கொண்டார்.


Sun TV
WIN TV
MEGA TV



பலருக்கு இந்தக் கேள்வி-பதில் ஒரு சாதாரண நிகழ்வாக இருக்கலாம். ஆனால் இதில் இருக்கக்கூடிய விஷயங்கள் ஏராளம். காரணம், இந்தக் கேள்வியைக் கேட்ட நபர் தி.மு.க.வுக்கு நேர் எதிராக செய்திகளை வெளியிடும் 'ஜெயா டி.வி.' நிருபர் கேள்வியை எதிர்கொள்ளக்கூடியவர் தி.மு.க. தலைவர். கேள்வி கேட்கப்பட்ட நிகழ்வு; ஈழத் தமிழர்களுக்கான ஆதரவு அமைப்பை மீண்டும் தொடங்கி இருக்கக்கூடிய நாள். இந்தக் கேள்வி: உலகம் முழுவதும் வாழக்கூடிய ஈழத் தமிழர்கள் தங்களுடைய தலைவராக நினைக்கக்கூடிய பிரபாகரன் தொடர்பான கேள்வி. ஆகவே இத்தனை விஷயங்களை உள்ளடக்கிய இந்தக் கேள்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு அடுத்த வினாடியில் ஒரு கட்சியின் தலைவர் பதில் சொல்ல வேண்டும் என்றால் அது எளிதான காரியம் கிடையாது. ஆனால் அதில் இருக்கும் அரசியலைப் புரிந்து கொண்டு, அவருடைய பதில் உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடம் என்னவிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நன்கு அறிந்து கொண்டு. கலைஞர் அந்தக் கேள்வியை எதிர்கொண்ட விதம் அவரின் அசாத்திய திறமையை வெளிப்படுத்தியது.

பொதுவாக அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள். பத்திரிகையாளர்கள் கேட்கக்கூடிய கடினமான, தர்ம சங்கடமான கேள்விகளை விரும்ப மாட்டார்கள். ஆனால் கலைஞர் அப்படி அல்ல, அவரை நோக்கி வீசக்கூடிய எந்தக் கேள்விக்கணையாக இருந்தாலும் அதை தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளக்கூடிய ஒரு மிகப்பெரிய அரசியல் தந்திரத்தை அவர் தனது மூளையில் வைத்திருந்தார்.

எதிர்க்கட்சிகளின் கேள்விகள், சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகள், பத்திரிகையாளர்களின் கேள்விகள் என்று, அனைத்து விதமான கேள்விகளையும் அஞ்சாமல், அசராமல் எதிர்கொண்ட இந்தப் பண்புதான் அவரை கடந்த அரை நூற்றாண்டு காலத்துக்கு மேல் தமிழ்நாடு அரசியலை தன்னைச் சுற்றியே சுழல வைத்தது.

2004ஆம் ஆண்டு "தீக்கதிர்" நாளிதழில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது கலைஞருடைய செய்தியாளர் சந்திப்புகள் குறித்து அவ்வப்போது அலுவலகத்தில் பல விவாதங்கள் வரும். மூத்த, பத்திரிகையாளர்கள் மயிலை பாலு, அ. குமரேசன். நீதி ராஜன், விஜயகுமார் ஆகியோரிடம் கேட்டறிந்த கதைகள் ஏராளம்.

பொதுவாக, பத்திரிகைத் துறையில் கட்சித் தலைவர்களுடைய செய்தியாளர் சந்திப்புகளுக்கு அனுபவம் வாய்ந்த நிருபர்களை அனுப்புவதே வழக்கம். குறிப்பாக கலைஞருடைய செய்தியாளர் சந்திப்பு என்றால் கூடுதல் அனுபவம் தேவை. காரணம், கலைஞரிடம் கேள்வி கேட்க வேண்டுமென்றால் கூடுதல் தயாரிப்பு தேவை. இளம் பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாட்டின் மூத்த முன்னணி அரசியல் கட்சித் தலைவரிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பு அவ்வளவு எளிதாகக் கிடைத்துவிடாது.

ஆனால் எனக்கு ஒரு வகையில், அந்த வாய்ப்பு பத்திரிகைத்துறையில் சேர்ந்த ஒரு சில வருடங்களிலேயே கிடைத்தது.

அப்படிதான் முதல்முறையாக கலைஞருடைய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. முதல் வரிசை மூத்த பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருப்பது என்பது எழுதப்படாத விதி, ஆனால் எனக்குள் இருந்த ஆர்வத்தின் காரணமாக அண்ணா அறிவாலயத்தில் இருக்கும் செய்தியாளர் அரங்கில் நான் முதல் வரிசையில் அமர்ந்து செய்தியைச் சேகரித்தேன். அப்பொழுது 'மாலை முரசு' பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்த மூத்த பத்திரிகையாளர் அண்ணன் லோகநாதன் கலைஞரிடம் கேட்ட கேள்விகள், மற்ற பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகள் அனைத்தையும் துல்லியமாகக் கவனித்தேன். பின்வரும் காலங்களில் கலைஞரிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பை நழுவ விட்டதே இல்லை. காரணம், கேள்வி கேட்டால் நிச்சயமாக அதற்குப் பதில் கிடைக்கும், அந்த பதில், தலைப்புச் செய்தியாக இருக்கும் என்பது உறுதி.

அதுமட்டுமல்லாமல் ஒரு செய்தியாளர் சந்திப்புக்குப் பிறகு அண்ணா அறிவாலயத்தில் இருந்து வரும் அறிக்கை, அது வெறும் கலைஞருடைய பதில்களை மட்டுமே கொண்டதாக இருக்காது. அந்த அறிக்கையில் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விகளும் இருக்கும். அந்தக் கேள்விகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதை நான் கவனித்து இருக்கிறேன்.

குறிப்பாக, இளம் பத்திரிகையாளர்கள் கேட்கக்கூடிய கேள்விகளும் அதில் இடம்பெற்றிருக்கும் எனும்போது அது பல இளம் பத்திரிகையாளர்களுக்கு ஒரு மிகப்பெரிய மோட்டிவேஷனாக (motivation) அமைந்தது. கலைஞரிடம் கேள்வி கேட்டதால் பல அரசியல் கட்சித் தலைவர்கள், அரசு அதிகாரிகளின் கவனத்தையும் பெறமுடிந்தது.

நான் பல தருணங்களில் கலைஞரிடம் பல முக்கியமான பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பி இருக்கிறேன். சில சமயங்களில் அவரை சங்கடத்தில் ஆழ்த்தக்கூடிய கடினமான கேள்விகளையும் கேட்டிருக்கிறேன். நான் எழுப்பிய அத்தனை கேள்விகளுக்கும் அவரிடம் இருந்து பதில் கிடைத்திருக்கிறது. இன்றைய தினம்

செய்தியாளர்களை என்ன கேள்விகளை எழுப்புவார்கள் என்று அவர் முன்கூட்டியே யூகித்து அதற்கானப் பதிலையும் தயாராக வைத்திருப்பார். இது பல சமயங்களில் நடந்திருக்கிறது, அதற்குக் காரணம். அவர் ஒரு அரசியல் கட்சித் தலைவர் மட்டுமல்ல. மனதளவில் அவரும் ஒரு பத்திரிகையாளர் என்பதால், பத்திரிகையாளர்களின் மன ஓட்டத்தை அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார்.

அதில் மிகவும் சிறப்பான விஷயம் என்னவென்றால். யார் கேள்வி கேட்கிறார்கள், அது மூத்த பத்திரிகையாளர்களா அல்லது இளம் செய்தியாளர்களா என்பது குறித்து எல்லாம் கலைஞர் என்றுமே கவலைப்பட்டதில்லை. அவருடைய கவனம் எல்லாம் கேட்கப்படும் கேள்வியில்தான் இருக்கும். பல சந்தர்ப்பங்களில், தி.மு.க.வின் இரண்டாம் கட்டத் தலைவர்கள் பத்திரிகையாளர்களிடம் "இன்றைக்கு பிரஸ் மீட் கிடையாது. தலைவர் பேசமாட்டார்" என்று கூறியதுண்டு. ஆனால் விடாப்பிடியாக அங்கேயே இருந்து கலைஞர் அறிவாலயத்தில் இருந்து கிளம்பும்போது, "ஐயா, இரண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியுமா...?" என்று பலமுறை அவரை நிறுத்தி கேள்வி கேட்டிருக்கிறேன். பதிலும் கிடைத்திருக்கிறது. அந்த பதில் தலைப்புச் செய்தியாகவும் மாறி இருக்கிறது.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அவர் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபோதும் சரி, பத்திரிகையாளர்களைச் சந்திக்காமல் இருந்ததே இல்லை. கலைஞருக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இருந்த அந்த உறவு ஒருபோதும் மாறவில்லை.

பத்திரிகையாளர்களிடம் எந்தவித ஒட்டும் உறவும் வைத்துக் கொள்ளாமல் இருந்த தலைவர்களையும் இந்த நாடு பார்த்திருக்கிறது. ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு கூட நடத்தாமல் எந்தவிதக் கேள்விகளுக்கும் பதில் அளிக்காமல் அரியணையில் அமர்ந்து இருக்கக்கூடிய அரசியல்வாதிகளுக்கு, கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் செய்தியாளர்கள் மீது குற்றம் சுமத்தி, "உங்கள் கேள்வியில் உள்நோக்கம் இருக்கிறது" என்று தப்பிக்க முயற்சி செய்யும் அரசியல்வாதிகளுக்கு கலைஞர் ஒரு பாடம்.

'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் கவிஞர் வாலி எழுதிய பாடல் வரிகளில் எனக்கு மிகவும் பிடித்த ஒரு வரி "பகுத்தறிவு பிறந்ததெல்லாம் கேள்விகள் கேட்டதனாலே". இந்தப் பாடல் வரியை கலைஞருக்கு நான் பொருத்திப் பார்க்கிறேன், ஒரு பகுத்தறிவாதியாக தன் வாழ்நாள் முழுவதும் இருந்த அவருக்கு, கேள்விகளின் அருமை என்ன என்பது தெரியும், அது ஜனநாயகத்தில் எவ்வளவு முக்கியமான அம்சம் என்பதையும் அவர் நன்றாகவே உணர்ந்து இருந்தார். அதனால்தானோ என்னவோ, அவர் கேள்விகளை நேசித்த ஒரு ஜனநாயகவாதியாகவே வாழ்ந்து மறைந்திருக்கிறார்.



கட்சி ஆட்சி இரண்டையும் கச்சிதமாக வைத்திருந்தவர்தான் கலைஞர்

க. குபேந்திரன்
மூத்த பத்திரிகையாளர்

தலைநகரில் ஆகச்சிறந்த கவிஞர் ஒருவர் கலைஞருக்கு பாராட்டுக் கவிதை வடித்த செய்தி நாளிதழில் வரும்.

அதே நாளிதழில், கடைக்கோடி கிராமத்தைச் சேர்ந்த ஊரே தெரியாத, பேரே பரிட்சயம் ஆகாத கவிஞர் ஒருவர், கலைஞரை விமர்சித்து அல்லது கலைஞருக்கு எதிராக ஒரு கவிதை வடித்து இருந்தால்...!

விமர்சித்து வந்த கவிதையைத்தான் முதலில் வாசிப்பார் கலைஞர். அவருக்கு தான் ஏன் எதிரியானோம் என்று சிந்தித்துவிட்டு தான், தனக்கு கிடைத்த பாராட்டுக் கவிதையை சிலாகிப்பார் என்பது அவரை அறிந்தவர்களுக்குத் தெரிந்ததுதான்.

தன்னை எல்லோரும் பாராட்ட வேண்டும் என்று ஆசைப்படாதவர்கள் உண்டா? ஆனால், வெறும் பாராட்டு மட்டுமே தன்னை வந்து அடைய வேண்டும் என்று

ஆசைப்பட்ட தலைவர்கள். ஆசைப்பட்டுக்கொண்டே இருக்கும் தலைவர்களிடையே கலைஞரை வளர்த்தது அவரது எதிர்மறை விமர்சனம்தான். அதற்குப் பக்குவப்பட்டதால்தான், கட்சியையும் ஆட்சியையும் கச்சிதமாக வழி நடத்த முடிந்தது.

அதற்கு சில சம்பவங்களை நினைவுக்கூர விரும்புகிறேன்.

1996இன் மத்தியில் ஜனதா தள தலைவர் தேவகவுடா, பிரதமர். அவரது அமைச்சரவையில் தொழில்துறை அமைச்சராக முரசொலி மாறனும் பெட்ரோலிய மற்றும் எரிவாயுத்துறை இணை அமைச்சராக டி.ஆர். பாலுவும் பணியாற்றினார்கள். ஆட்சிக்கு வந்ததுமே, காவிரி நீர் பிரச்சினை வெடிக்கிறது. தமிழ் நாட்டில் பெரும் விவாதம். காவிரி நீர் விவகாரத்தில் மத்திய அரசுக்கு ஆதரவாக இருக்கும் தி.மு.க. மௌனம் காக்கிறது என்ற விமர்சனம் எழுந்ததுமே. பிரதமர் தேவகவுடாவை சந்திக்க, இணை அமைச்சர் டி.ஆர்.பாலு செல்கிறார். பிரதமரிடம் கலைஞர் எழுதிய கடிதம் கொடுக்கப்படுகிறது.

அதில், 'காவிரி நீர் தமிழ்நாட்டிற்கு விட கருநாடகாவுக்கு உத்தரவிடுங்கள். இல்லை எனில் ஆதரவை விலக்கிக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு விவசாயிக்குதான் இன்னொரு விவசாயியின் கவலை புரியும். உங்களுக்குப் புரியும் என்று கருதுகிறேன்' என்ற செய்திதான் அது.

ஆடிப்போய்விட்டார் பிரதமர். 'என்ன இது..? கலைஞர்தானே என்னை பிரதமராக முன் மொழிந்தார். அவரே இப்படிச் செய்தால் எப்படி?' என்றார்.

"வேறு வழியில்லை. மத்தியில் ஆதரவு கொடுத்து, மாநிலத்தில் அவப்பெயரை சுமக்க கலைஞர் விரும்பவில்லை" என்றார் டி.ஆர்.பாலு.

அடுத்த ஓரிரு நாட்களில் காவிரி தண்ணீர் தமிழ்நாட்டுக்குத் தவழ்ந்து வந்தது, இந்த அரசியல் கலந்த பொது விவகாரத்தைப் பரபரப்பாக அறிக்கை விடாமல். அமைதியாக நடத்தி முடித்தவர் கலைஞர்.

1996–2001 காலக் கட்டம். முதல்வர் கலைஞரின் பத்திரிகையாளர் சந்திப்பு. ஒரு விவகாரத்தை யு.என்.ஐ. செய்தியாளர் (ரமேஷன் என்பது அவர் பெயர்) கேள்வியாக கேட்கிறார். அவருக்குத் தாய்மொழி மலையாளம் என்பதால், கேள்வியை தமிழில் கேட்பதில், அவருக்கு சில சிக்கல் உண்டு. அவரது கேள்வியை கேட்டதும், கலைஞர் அருகில் இருந்த அமைச்சர்கள் சிரிக்கத் தொடங்கினர்.

அவரது கேள்வியை உள்வாங்கி, கலைஞரால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. சிரித்த அமைச்சர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அந்தக் கேள்வியை மீண்டும் கேட்கச் சொன்னார். அதன்பிறகும் தான் கொடுத்த பதில் கலைஞருக்கே திருப்தி இல்லை.

பத்திரிகையாளர் சந்திப்பு முடிந்ததும் அமைச்சர்களைக் கடிந்து கொண்டார்.

'அந்த நிருபர் யு.என்.ஐ. நிறுவனத்தைச் சேர்ந்தவர். ஏதாவது விவகாரம் இல்லாமல், அந்தக் கேள்வியை கேட்கமாட்டார். அந்தக் கேள்விக்கு என் பதில், இந்தியா முழுவதும் செல்ல வேண்டும். அதை சரியாகச் சொல்லாவிட்டால், தவறாக போய்விடும்' என்றார்.

அதேபோல், அந்த கேள்வி என்ன, அதில் இருக்கும் விவரம் என்ன என்று அதிகாரிகளிடம் கேட்டு பதிலை வாங்கிக்கொண்ட கலைஞர், மறுநாள் அந்த நிருபருக்கு போன் செய்து, 'நீங்கள் கேட்ட கேள்வி சரியானது, அதற்கான விவரத்தை பிறகுதான் தெரிந்துகொண்டேன்' என்று தெரிவித்தார்.

காரணம், அந்த கேள்வி தேசிய விவகாரம் என்பதால், அதை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறை மட்டுமல்ல. ஏதோ ஒரு பத்திரிகையாளர், ஏதோ கேள்வி கேட்டார் என்று கடந்துபோகிறவர் அல்ல கலைஞர் என்பதற்காகவே, இதை இங்கே பதிவிடுகிறேன்.

2006ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடக்கும் சில நாட்களுக்கு முன்பாக கலைஞரை பத்திரிகையாளர் ரங்கராஜன் சந்திக்கிறார். அவர் அப்போது சென்னை ஆன்லைனில் வெளியிட்ட செய்தியின் அடிப்படையில், ஒரு சில குறிப்புக்களை கொடுத்துவிட்டுச் செல்கிறார்.

அதில், 30, 40 தொகுதிகளில் தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் கடும் போட்டி இருக்கிறது. அதில் தி.மு.க. வெற்றி பெறுவது கடினம் என்று இருக்கிறது.

அதை வாங்கிய கலைஞர், அன்று இரவு அந்த 30-40 தொகுதிகள் இருந்த மாவட்டச் செயலாளர்களை தூங்கவே விடவில்லை.

'என்ன இவர்... ஊர் பேர் தெரியாத பத்திரிகை அது. அதை வச்சிக்கிட்டு இப்படி கணக்கு போடுறாரே. எல்லாம் ஜெயித்துவிடுவோம்' என்று மா.செ.க்கள் பேசினார்கள்.

காரணம், 2004இல் தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி மக்களவைத் தேர்தலில் 39,39 வெற்றி பெற்ற சூழல். ஆனாலும், கூட்டணியில் திடீரென வைகோ வெளியேறிய காலக்கட்டம் மா.செ.க்கள் சொன்ன எதையும் கலைஞர் காதில் ஏற்கவில்லை.

விரட்டு விரட்டு என்று விரட்டினார். அவர் விரட்டியதால்தான், அந்த நேரத்தில் தி.மு.க. 96 இடங்களையாவது பெற முடிந்தது.

அதேபோல, 2009ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலிலும் தி.மு.க.வுக்கு கடும் நெருக்கடி. அந்த நேரத்திலும் பத்திரிகையாளர் ரங்கராஜன், கலைஞரிடம் 25, 28 இடங்களில் வெற்றி பெறும் என்றார். ஆனால், எல்லா பத்திரிகைகளிலும் அ.தி.மு.க. கூட்டணி 30 இடங்களில் வெற்றி பெறும் என்று எழுதிக்கொண்டிருந்தார்கள்.

காரணம், இலங்கைத் தமிழர் பிரச்சினை, 2ஜி விவகாரம் என்று களம் மாறி இருந்தது. அத்தேர்தலில் தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி 27 இடங்களைப் பெற்றது.

தேர்தல் முடிவு வந்த பிறகு, பத்திரிகையாளர் ரங்கராஜனை அழைத்து, 'நீங்க ஒருத்தர்தான்யா கரெக்டா கணிச்சீங்க' என்று பாராட்டினார். பத்திரிகையாளர்களை அவர்

எப்படி கையாண்டார். அவருக்குப் பத்திரிகையாளர்கள் எப்படி நெருக்கமாக இருக்க முடிந்தது என்பதற்குதான் மேற்கண்ட சம்பவங்கள்.

இங்கே கட்சிக்காக கலைஞர் செய்த ஒரு சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறேன். காரணம், தனது தொண்டரையோ அல்லது ஒரு நிருவாகியையோ பிற கட்சியினர் குறை சொன்னால் எப்படி நடந்து கொள்வார் என்பதற்கு இச்சம்பவம் தரமான சம்பவமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

2007 காலக்கட்டம். முதலமைச்சர் கலைஞரை பா.ம.க. சட்டமன்றத் தலைவர் ஜி.கே. மணி சந்திக்க வருகிறார். வந்ததுமே, 'அய்யா, இந்த வீரபாண்டி ஆறுமுகம் எங்க கட்சியை அழிக்கிறாரு' என்ற வேகத்தில் புகார் வாசிக்கத் தொடங்கினார்.

பொறுமையாக கேட்கத்தொடங்கியதும். ஜி.கே.மணி அவர்கள் பேசும்போது, அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் செயல்பாடுகளை கடுமையாக தாக்கிப் பேசியதும், கலைஞர் 'நிறுத்துங்கய்யா' என்கிறார்.

"உங்க கட்சிக்காரங்க என்ன பேசுனாங்க. என்ன செய்யறாங்கன்னு எனக்குத் தெரியும். இந்தக் கட்சிக்காக அவரும், அவரது குடும்பமும் பட்ட கஷ்டமும் எனக்குத் தெரியும். அவர் கதைய முடிப்போம்னு உங்க கட்சிக்காரங்க பேசினதும் எனக்குத் தெரியும். என்னோட சிங்கத்தை (வீரபாண்டி ஆறுமுகம்) சேலத்துல தனியா வரச்சொல்றேன். மோதிப்பாருங்க" என்கிறார்.

ஆடிப்போய்விட்டார் ஜி.கே.மணி. 'இல்ல அய்யா... எங்க மருத்துவர் சொன்னதை அப்படியே சொல்லிட்டு...' என்று இழுத்தார்.

"உங்க கட்சிக்காரங்க, அவரை அவமரியாதை செஞ்சா, அவரு அடங்கிப் போவாருன்னு நினைக்க வேண்டாம்ன்னு உங்க அய்யாக்கிட்ட சொல்லுங்க" என்றார் கலைஞர்.

ஜி.கே.மணி போனதும், "என் கட்சிக்காரனை இன்னொரு கட்சிக்காரன் அவமானப்படுத்துறதை எப்படி பார்த்துக்கிட்டு இருக்க முடியும். நம்ம கட்சிக்காரன் புகார் சொன்னா கூட, மாவட்டச் செயலாளரை பொது இடத்துல அவமதிக்க மாட்டேன். நாலு சுவத்துக்குள்ள வைச்சிதான் கண்டிக்க முடியும். நம்ம கட்சிக்காரனை நாமளே அவமானப்படுத்தினா, அவரை கட்சிக்காரன் எவன் மதிப்பான். நாளைக்கு அந்த மாவட்டத்துல கட்சி நடத்த நானா போய் நிக்க முடியும்" என்று அமைச்சர்களுக்கு பாடம் எடுத்தவர் கலைஞர்.

கட்சி நிருவாகத்திற்கும் சரி.... ஆட்சி நிருவாகத்திற்கும் சரி; அவரது செயல்பாடுகளை பத்திரிகைகாரன் என்ற முறையில் கலைஞரின் ஆழமான அணுகுமுறைகளை இன்னும் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.



ஒரு பத்திரிகையாளனின் பார்வையில் கலைஞர்

ப. கோலப்பன்
முதுநிலை துணை ஆசிரியர்
'தி இந்து' ஆங்கில நாளிதழ்

செய்திப் பத்திரிகைகளுக்கு தலைவர் கலைஞர் கடைசியாக அளித்த விரிவான நேர்காணல் ஆங்கில ஹிந்து பத்திரிகைக்குத்தான். 2016ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் தேதி அந்த நேர்காணல் வெளியானது.

சட்டப்பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது முறையாகவும் வெற்றி பெற முடியவில்லை. அத்தகைய நிலையில் அவரிடம் ஓர் நேர்காணல் நடத்தலாம் என்று முடிவு செய்து, கலைஞரின் உதவியாளர் சண்முகநாதனைத் தொடர்பு கொண்டேன்.

"தலைவர் திருவாரூருக்கு கிளம்பிக்கிட்டிருக்காரு. நான் கேட்டுப் பார்க்கிறேன்," என்றார்.

சற்று நேரத்தில் அவரே என்னை அழைத்தார். "தலைவர் வினாக்களை அனுப்பச் சொல்கிறார். நீங்கள் எனக்கு அனுப்புங்கள்" என்றார். நான் அப்படியே செய்தேன்.

திருவாரூருக்குச் சென்ற அன்று காலை 10 மணிக்கெல்லாம் எனக்கு விடைகளை அனுப்பி விட்டார். நான் உடனேயே உட்கார்ந்து மொழிபெயர்த்து அடுத்த நாள் ஹிந்துவில் அவருடைய நேர்காணல் வெளியானது.

அன்று நிருபர்கள் அறைக்கு வந்த, ஹிந்துப் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் என்.இராம் என்னிடம், "கலைஞர் இண்டர்வியூ நன்றாக வந்திருக்கிறது. யார் டிரான்ஸ்லேட் செய்தார்கள்" என்றார்.

"நான்தான்" என்று சொன்னதும் "குட் இட் ஹேஸ் கம் அவுட் வெல்" என்று பாராட்டினார். அந்த நேர்காணலில் கலைஞர் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார்.

"தி.மு.க.வைப் பொருத்தவரை அது எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளும். ஆளும் கட்சியான அ.தி.மு.க.வுக்குத்தான் இப்போது அதிகமான சவால்கள் உள்ளன. மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், அ.தி.மு.க. 131 இடங்களை மட்டுமே வென்றிருக்கிறது. ஒரு சட்டப்பேரவை உறுப்பினரின் மறைவுக்குப் பிறகு அந்த எண்ணிக்கை 130ஆகக் குறைந்துள்ளது. அவர்களை ஒன்றாக தக்கவைத்துக் கொள்வதும், சபலங்களுக்கு ஆளாகாமல் அவர்களைத் தடுப்பதும் பெரிய சவால். இது கம்பிமேல் நடக்கும் சாகசம் போன்றது," என்று அவர் தெரிவித்திருந்தார்.

அவர் ஏன் அப்படிக் கூறியது எனக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் ஜெயலலிதா தலைமையில் இயங்கும் அ.தி.மு.க.வின், அரசின் கட்டுப்பாட்டில் இருந்து யாராவது வெளியேற முயற்சி செய்வார்களா என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஆனால் அது ஒரு நாள் நடந்தது. ஜெயலலிதா மறைவுக்குப் பின்னரே அது நடந்தது. இரண்டு அணிகளாக அ.தி.மு.க. பிளவுபட்டு. எம்.எல்.ஏ.க்களை கூவத்தூரில் அடைத்து பாதுகாப்பாக வைக்கவேண்டிய நிலைக்கு அக்கட்சித் தள்ளப்பட்டது.

ஜெயலலிதாவின் இறப்பின் காரணமாகத்தான் இது நடந்தது என்றாலும், கலைஞரின் உள்ளுணர்வு அதைக் கணித்திருந்தது. இன்றும் இரண்டு அணிகளாக அ.தி.மு.க. பிரிந்தே நிற்கிறது. இன்றளவும் என்னால் விடைகாண முடியாத புதிராகவே கலைஞரின் கணிப்பு இருக்கிறது.

1995ஆம் ஆண்டில் இருந்தே கலைஞரின் பொதுக்கூட்டங்களையும் நேர்காணல்களையும் தொடர்ந்து செய்தி சேகரிப்பவனாகப் பின்பற்றி வந்திருக்கிறேன். எத்தனையோ முக்கியமான அரசியல் மாற்றங்களை, திருப்பங்களை வெளிப்படுத்திய கூட்டங்களாக நேர்காணல்களாக அவை அமைந்திருக்கின்றன. அவர் ஏற்பாடு செய்த கூட்டங்களில் எத்தனையோ அகில இந்தியத் தலைவர்கள் பங்கெடுத்து இந்திய அரசியல் போக்கைத் தீர்மானித்திருக்கிறார்கள். ஒரு பார்வையாளனாக உற்று நோக்குபவனாகவே நான் பார்த்திருக்கிறேன்.

1996ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் அ.திமு.க.வுக்கு எதிரான மிகப்பெரிய அலை வீசியது. அந்த நேரத்தில் தி.மு.க. தனித்து நின்றிருந்தால் கூட வெற்றி பெற்றிருக்கும். ஆனால் கலைஞர் புதிதாக மூப்பனார் தலைமையில் உருவான தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியை கூட்டணியில் சேர்த்துக் கொண்டு, தாராளமாக


NDTV
Polimer

இடங்களை ஒதுக்கீடு செய்து, நடிகர் ரஜினிகாந்த்தின் ஆதரவையும் கொண்டு சட்டப்பேரவைத் தேர்தலிலும் மக்களவைத் தேர்தலிலும் வெற்றியை ஈட்டினார். அதுதான் அவருடைய மிகப்பெரிய இராஜ தந்திரம் என்று நான் கருதுகிறேன். அ.தி.மு.க.வுக்கு எதிரான கூட்டணியின் தலைமைப் பொறுப்பை தி.மு.க.வுக்கு அவர் பெற்றுத் தந்ததுதான் மிக முக்கியமான செயலாக நான் கருதுகிறேன். அதன் மூலம் தமிழகத்தின் அரசியல் களத்தில் இரண்டு முக்கிய திராவிடக் கட்சிகளுக்குமான இடத்தை அவர் உறுதி செய்தார். அதுவே இன்றும் தொடர்கிறது. தமிழ் மாநில காங்கிரஸ் குறித்து மற்றவர்கள் செய்த கணிப்பெல்லாம் பொய்யாகிப்போனது என்பதே உண்மை.

1996ஆம் ஆண்டில் இருந்து 2001 வரை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்புகள், சட்டப்பேரவை விவாதங்கள். நேர்காணல்கள் எத்தனை எத்தனை?

பெரும் தோல்வியைச் சந்தித்திருந்த ஜெயலலிதா, அதில் இருந்து மீள்வதற்கான பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தார். அக்காலக்கட்டத்தில் தலைமைச் செயலகத்தில் வாரத்துக்கு குறைந்தது இரண்டு முறையாவது நேர்காணல் நடைபெறும் மிகவும் பரபரப்பாக இருக்கும். திடீரென முதல்வர் அலுவலகத்தில் இருந்து அழைப்பு வரும். அப்போதெல்லாம், மாலைப் பத்திரிகைகளின் நேரத்தைக் கவனத்தில் வைத்துக் கொண்டே கலைஞர் நேர்காணல் அளிப்பார். அன்றைய தினம் மாலைப் பத்திரிகைகளில் முதற்பக்கச் செய்தியாக அவை இடம் பெறும்.

ஒருமுறை மக்களவைத் தேர்தல் கூட்டணி குறித்து கேள்வி எழுப்பினேன்.

"அந்தக் கூட்டணியில் (அ.தி.மு.க.) எல்லோரும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் கூட்டணியில் அப்பரபரப்பு இல்லையே" என்றேன்.

"எங்கள் கூட்டணியில் எல்லாமே சமைத்து ஹாட்பாக்கில் வைக்கப்பட்டுள்ளது. காய்கறிகளைத் தேடியும் பலசரக்குகளைத் தேடியும் அலைய வேண்டியதில்லை" என்று விடையளித்து எல்லோரையும் சிரிப்பில் ஆழ்த்தினார்.

ஒரு முறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு (சி.பி.ஐ.) நாகப்பட்டினம் தொகுதியை ஒதுக்குவதில் தி.மு.க.வுக்கும் அக்கட்சிக்கும் உடன்பாடு ஏற்படவில்லை. தி.மு.க.வும் அத்தொகுதியில் போட்டியிட முடிவு செய்திருந்தது. அன்று நடைபெற்ற நேர்காணலில் நான் ஒரு கேள்வி எழுப்பினேன்.

நாகப்பட்டினத்தை சி.பி.ஐ.க்கு ஒதுக்குவதில் சிக்கல் இருக்கிறதா?"

கூட்டணித் தலைவர் என்ற முறையில் அது ஒரு தர்மசங்டகமான கேள்வியாகத்தான் அது இருந்திருக்க வேண்டும். ஆனால், கலைஞர் நச்சென சொன்ன பதில் இதுதான்: "நாகப்பட்டினத்துக்குப் பக்கத்தில்தான் சிக்கல் இருக்கிறது.

நாகப்பட்டினத்துக்கு அடுத்த ஊர் சிக்கல். அதை எப்படி அரசியலுக்கு சமயோசிதமாகப் பயன்படுத்தினார். ஆங்கிலத்தில் அதை மொழிபெயர்ப்பது அத்தனை

எளிதல்ல. ஆனால் தமிழில் அது ஆகச் சிறந்த பதில். அதுபோல இன்னொரு கேள்வியும் எழுப்பினேன்.

"பா.ஜ.க. தலைவர் இல. கணேசன் தி.மு.க. வுடன் சிந்தாந்த போர் நடத்த இருப்பதாக அறிவித்திருக்கிறாரே?"

"தமிழ்நாட்டில் பி.ஜே.பி. ஒரு போர் (bore)" என்று சற்றும் யோசிக்காமல் வார்த்தையால் விளையாடினார்.

சட்டப்பேரவையிலும் வார்த்தைகளில் விளையாடுவார். திடீரென சங்கப்பாட்டில் இருந்து ஒரு மேற்கோள் வரும். அதுவரை கேள்விப்பட்டிராத பழந்தமிழ் வார்த்தை வந்து விழும். பல நாட்கள் கேட்டிராத ஒரு பழமொழி கேட்கும். வெற்று அறிவிப்புகள் பயனற்றவை என்பதை, "சீனி சர்க்கரைச் சித்தப்பா காகிதத்தில் எழுதி நக்கப்பா" என்று அழகாகச் சொல்வார்.

வேலூரில் தெரு விளக்குகள் எரியவில்லை என்று புகார் செய்த சி.ஞானசேகரனிடம், "டியூப் லைட்டுகள் சற்று தாமதமாகத்தான் எரியும்" என்று சிரிக்க வைத்தார்.

ஜல்லிக்கட்டுக்காக வாதாடிய காங்கிரஸ் உறுப்பினர் அமரமூர்த்திக்கு அவர் தெரிவித்த பதில் இன்றும் நினைவில் இருக்கிறது. "உறுப்பினர் ஒன்றை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மாட்டை அடக்குவதைப் பார்க்கும் பெண், அடேயப்பா மாட்டையே இப்பாடுபடுத்துகிறானே, நம்மை எப்பாடுபடுத்துவானோ என்று நினைக்க வழிவகை செய்து விடக்கூடாது,"என்றார்.

2006இல் இருந்து 2011 வரையான ஆட்சிக் காலத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியது. தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த கட்சிகளும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. அந்த நேரத்தில் கல்கத்தாவில் இருந்து வெளியாகும் 'தி டெலிகிராப்' பத்திரிகையில் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென்னின் நேர்காணல் வெளியாகியிருந்தது. அதில் அவர் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு ஆதரவான கருத்தைத் தெரிவித்திருந்தார்.நான் அப்பேட்டியைத் தமிழில் மொழிபெயர்த்து, கலைஞரின் நண்பரான பத்திரிகையாளர் சின்னக்குத்தூசியிடம் கொடுத்தேன். அவர் அதை கலைஞரிடம் கொடுத்திருக்கிறார். காலையில் முரசொலியைப் பார்த்த எனக்கு இன்ப அதிர்ச்சி. என் மொழிபெயர்ப்பை உடன்பிறப்புக்கு கடிதமாக மாற்றி வெளியிட்டு, "உடன் பிறப்பே, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராக கருத்துக்கள் வெளியாகியுள்ள நிலையில், நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென்னின் நேர்காணலை அப்படியே தருகிறேன்" என்று எழுதியிருந்தார்.

எந்தப் பக்கம் இருந்து செய்தி வந்தாலும் அதைப் படித்து, அதில் தி.மு.க.வின் நிலைபாட்டுக்கு ஆதரவான கருத்துக்களை சேகரித்து, முரசொலியில் பதிவு செய்திடுவார். செய்திக்குப் பஞ்சம் ஏற்பட்ட பல நேரங்களில் முரசொலியில் அவருடைய கடிதத்தையோ. கேள்வி பதில்களையோ செய்தியாக மாற்றியிருக்கிறேன்.

ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை பெரிய செய்திகள் எதுவும் இல்லாமல் இருந்த நிலையில், கலைஞரிடம் இருந்து எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஒரு செய்தி பேக்ஸ் வந்தது. அதில், சென்னை இராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள தோட்டக்கலை நிறுவனத்திடம் இருந்து தி.மு.க. அரசு மீட்டெடுத்த நிலத்தை மீண்டும் அந்நிறுவனத்துக்கே திரும்ப வழங்கப்பட்டிருந்த செய்தியே அது. அதை 'தி இந்து' முதல் பக்கத்தில் செய்தியாக வெளியிட்டது.

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவரை எப்போதும் அணுகி இரண்டு மூன்று வினாக்களை எழுப்பி. செய்தியுடன் திரும்பி வரலாம். அவரைச் சந்திக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றதில்லை.

அவருடைய மகன் மு.க.அழகிரி கைது செய்யப்பட்டபோது கூட, பத்திரிகையாளர்களைப் பார்த்ததும் நின்று பதில் சொல்லிவிட்டே சென்றார்.

ஜெயலலிதாவுக்கு எதிரான தீர்ப்புகள் வந்தபோதும், சொத்துக் குவிப்பு வழக்கில் உயர்நீதிமன்றம் ஆதரவான தீர்ப்பு வழங்கியபோதும் அவர் விருப்பு வெறுப்பின்றி கருத்துக்களைத் தெரிவித்தார். சில நேரம் எரிச்சலூட்டும் கேள்விகள் வரும்போது கோபப்படுவார். சட்டென அது மாறி அடுத்துக் கேள்விக்கான பதில் நட்புணர்வுடன் வெளிப்படும்.

ஒரு முறை அமைச்சராக இருந்த பரிதி இளம்வழுதி. பராசக்தி திரைப்படத்தின் பாடல்களை டிஜிட்டல் ஒலிக்கு மாற்றி அந்தத் தொகுப்பை வெளியிட்டார். அக்கூட்டத்தில் முன் வரிசையில் சற்றுத் தள்ளி கலைஞர் அமர்ந்திருந்தார்.

"தலைவரே சென்ட்ருக்கு வாங்க" என்றார் பரிதி. "வேண்டாம்பா. நான் ஸ்டேட்டிலேயே இருந்துக்கிறேன்" என்றார்.

அவர் மாநில அரசியலில் இருந்து கொண்டே மத்திய அரசியலில் மையப் புள்ளியாக இருந்தார். கூட்டணியை உருவாக்குவதில் அவருக்கு நிகர் அவர் தான். தற்போது நாட்டில் நிலவும் அரசியல் சூழலில் அவரின் இடம் நிரப்பப்படாமலேயே இருக்கிறது.

கேரளத்தின் முதல்வராக இருந்த இ.எம்.எஸ். நம்பூதிரிபாட்டைப் பற்றி சொல்லும் போது, வேடிக்கையாக ஒரு கதை சொல்வார்கள். படிப்பதற்கு எதுவும் இல்லையென்றால் டெலிபோன் டைரக்டரியை அவர் படித்துக் கொண்டிருப்பாராம்.

கலைஞருக்கும் அது பொருந்தும். அவர் சலியாத படிப்பாளி. படித்ததை எழுதிக் குவித்தவர். அவர் எழுதியதைத் தொகுத்தால் இலட்சக்கணக்கான பக்கங்களுக்கு மேல் மிகும். "இங்கிலாந்தின் பிரதமராக இருந்த சர்ச்சில் கூட அவ்வளவு எழுதவில்லை," என்று மறைந்த தமிழறிஞர் அவ்வை நடராஜன் ஒரு கூட்டத்தில் பேசினார்.

நன்றி : முரசொலி



பத்திரிகையாளர்களின் புதிய முயற்சிகளுக்கு துணையாக செய்தி மக்கள் தொடர்புத்துறை

பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம்

1989இல் கழக ஆட்சியில் ரூ.400ஆக இருந்த பத்திரிகையாளர் ஓய்வூதியம் 1996ஆம் ஆண்டில் ரூ.1,000 ஆகவும், 1999ஆம் ஆண்டில் ரூ.1,500 ஆகவும், 2,000ஆம் ஆண்டில் ரூ.2,000 ஆகவும், உயர்த்தி வழங்க ஆணையிட்டு தற்போது 76 பத்திரிகையாளர்கள் மாதம் ரூ.2,000 வீதம் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்கள் இறந்துவிட்டால் அவர்களின் துணைவியாருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.500 வாழ்நாள் முழுவதும் வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, தற்போது 5 பத்திரிகையாளர் குடும்பத்தினர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள். துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர்கள் குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ் நிதி வழங்குவதற்கு முதன் முதலாக இந்த ஆட்சியிலே 1997ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.25 ஆயிரம் வீதம் உதவி நிதி வழங்கப்பட்டது. 1999இல்

இத்தொகை ரூ.40 ஆயிரமாகவும், 01.04.2000 முதல் ரூ.50 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இதுவரை 15 பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

செய்தியாளர்களுக்கு குடியிருப்புக்கள் – வீட்டு மனைகள்

1989ஆம் ஆண்டு சென்னையில் உள்ள கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் நிலம் 136 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பிற்காக வழங்கப்பட்டு, மேலும் ரூ.20 இலட்சம் நல்கையாக அறிவிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. 1997ஆம் ஆண்டு மதுரை தல்லாகுளம் பகுதியில் 61 பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்புக்களுக்காக 3.7 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. திருச்சியில் 52 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழரசு

1970இல் கழக ஆட்சியில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு அரசின் திட்டங்களை அனைவரும் உணரும் வண்ணம் எழுத்து ஓவியமாக மாதம் இருமுறை தமிழிலும் மாதம் ஒருமுறை ஆங்கிலத்திலும் "தமிழரசு" ஏடு வெளிவந்து கொண்டிருக்கிறது. 1997 முதல் "அரசு செய்தி" என்ற புதியவகை சுவரொட்டி கிழமைதோறும் அரசின் திட்டங்களையும், பயன்களையும் விளக்கும் கருத்துக் காட்சிகளோடு கூடிய உரைவிளக்கம் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கின்றது.

கால்நடைப் பாதுகாப்பு சிகிச்சை முகாம், கன்றுகள் பராமரிப்பு முறைகள், சுகம் தீவனம், கோழிப்பண்ணை பராமரிப்பு, ஆடுகளின் நீலநாக்கு நோய் ஆகியவை குறித்தும் துண்டுப் பிரசுரங்கள், தமிழரசு அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

வீட்டுக் காய்கறித் தோட்டம், நமக்கு நாமே, சமூக நலத்திட்டங்கள் போன்ற சிறப்பு வெளியீடுகள் தமிழரசு அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இலக்கிய மலர், கோட்டம் முதல் குமரி வரை ஆகிய சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன. 1998ஆம் ஆண்டில் தமிழரசு அச்சகத்தில் ரூ.36,84,702 செலவில் புதிய பலவண்ண அச்சு இயந்திரம் வாங்கப்பட்டு, தமிழரசு, அரசு செய்தி மற்றும் சிறப்பு வெளியீடுகள் மிக வேகமாக அச்சிடப்பட்டு வருகின்றன. தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகத்திற்கு அனுப்புகை பணிகளுக்காக இரண்டு கணினிகள் ரூ.3.41 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

உடன்பிறப்பே

மக்களாட்சியின் மாண்புகளைக் காத்து, மக்களுக்காக நடைபெற்று வரும் இந்த மக்கள் அரசின் ஒளிவு மறைவற்ற நேர்மையான நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் ஒவ்வொருவரும் முழுவதுமாகத் தெரிந்து, தெளிந்து கொள்வதற்கெனப் பல்வேறு வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த முயற்சிகளுக்குத் துணையாக செய்தி மக்கள் தொடர்புத்துறையும் தன் கடமையினைச் செய்து வருகின்றது.

*— முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்*
09.12.2020 அன்று முரசொலியில் எழுதிய கடிதத்திலிருந்து....



சிறந்த நூல் எழுதியவருக்கு ரூ.20 ஆயிரமும், பதிப்பகத்திற்கு ரூ.5 ஆயிரமும் உயர்த்தி வழங்கிட ஆணை

"வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற வேண்டிய ஒரு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த விழாவிற்கு யார் யாரை அழைப்பது, யார் யாருக்கு விருது வழங்குவது என்பதையெல்லாம் முடிவு செய்தவர், முதலமைச்சர் என்று இனமானப் பேராசிரியர் குறிப்பிட்டார். அதைவிட இந்த விழாவை எங்கே நடத்துவது என்ற வினா எழுந்தபோது, அதற்கு விடையாகக் கிடைத்ததுதான் வள்ளுவர் கோட்டத்திலே நடத்தலாம் என்பது, நம்முடைய அடிகளார் பேசும்போது, வள்ளுவர் கோட்டத்திற்கும் எனக்கும் உள்ள தொடர்புகளையெல்லாம் எடுத்துரைத்தார். இந்த வள்ளுவர் கோட்டத்தின் அடிக்கல் நாட்டியதிலிருந்து, ஒவ்வொரு அங்குலமாக வள்ளுவர் கோட்டத்தின் சுவர்களும், கட்டடமும் வளர்ந்த நேரத்தில் எல்லாம் இங்கே ஒரு குடிசை போட்டுக் கொண்டு அதிலே அமர்ந்து பணிகளை விரைவாக நடத்துவதற்கு வேகப்படுத்திக் கொண்டிருந்தவன் நான். ஆனால், அவரே இங்கே குறிப்பிட்டதைப் போல பெற்ற மகவு வளர்ந்து, மணவிழா நேரத்திலே, அதைக் காண முடியாத ஒரு

தாய் விழாவைக் காண முடியாமல், தவித்த தவிப்பை அவர் இங்கே எடுத்துரைத்தார். கோட்டம் இங்கே திறக்கப்பட்டபோது, நாடு எந்த நிலையிலே இருந்தது என்பதும், நாமெல்லாம் எந்த நிலையிலே இருந்தோம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அவற்றையெல்லாம் நான் இங்கே விழாவின் அருமை கருதியும், அரசியல் நாகரிகத்திலே கொண்டுள்ள அக்கறையின் காரணமாக சொல்ல விரும்பவில்லை.

அய்யன் திருவள்ளுவர்

அடிகளார் இங்கே கூறியதின் காரணமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். இருபதாண்டு காலம், 133 அடி உயர வள்ளுவர் சிலையை அமைப்பதற்காகத் திட்டமிட்டு, அது நிறைவேற முடியாமல், பல தடைகள், பல தயக்கங்கள், குறுக்கிட்ட தாமதங்கள் இவைகளையெல்லாம் கடந்து குமரிமுனையிலே மறைந்த நம்முடைய அய்யா மூப்பனார் போன்றவர்கள் எல்லாம் வருகை தந்து நடைபெற்ற அந்த விழாவில், நான் வள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து பேச முடியாதவனானேன். காரணம் அந்த அளவிற்கு உணர்ச்சிவயப்பட்டேன். அப்போதுதான் முதன் முதலாக அய்யன் வள்ளுவர் என்று சொன்னேன். அது இன்றளவும் எல்லோராலும் புழக்கத்திற்கு வந்த சொல்லாக ஆகி, யாராக இருந்தாலும் அய்யரே கூட, அய்யன் வள்ளுவர் என்று சொல்லுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதை அறிவீர்கள்.

புத்தகமாக - கட்டடமாக - ஓவியமாக படமாக அந்த வள்ளுவருடைய படத்தை இன்றைக்கு நாம் பயன்படுத்திக் கொண்டிருப்பதற்குக் காரணம், வள்ளுவருக்கு ஒரு புகழை உண்டாக்க வேண்டுமென்பதற்காக அல்ல, நாம் ஒழுங்காக வாழ வேண்டும், நம்முடைய சமுதாயம் செம்மையாக நடைபெற வேண்டும், வீரமாக, விவேகமாக அறநெறியோடு வாழ வேண்டும், ஒரு குடும்பம் என்றால் எப்படியிருக்க வேண்டும், வாழ்க்கை என்றால் எப்படி அமைய வேண்டும் என்ற இவைகளையெல்லாம் கற்றுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட, இன்றைக்கு நாம் அய்யன் வள்ளுவரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறோம் என்றால், என்ன அர்த்தம்? அதுதான் உண்மையேத் தவிர, வள்ளுவருக்கு நாம் கோட்டம் கட்டியதால் புகழ் வந்துவிடப் போவதில்லை. அவருக்குப் புகழைச் சேர்த்து நாம் நம்மைப் புதுப்பித்துக் கொள்கிறோம். அவருக்கு உருவத்தை உருவாக்கி, நாம் நம்மை உருவாக்கிக் கொள்கிறோம். அதற்காகத்தான் நம்முடைய தன்னலத்திற்காகத்தான் - தன்னலம் என்றால் வேறு எந்தவிதமான விபரீதப் பொருளும் இல்லை, நம்முடைய சமுதாயம் வாழ, இனம் வாழ, மக்கள் வாழ, வாழ்க்கையை வகைப்படுத்திக் கொள்ள - வாழ்க்கை என்றால் என்ன என்ற தத்துவத்தை உணர வள்ளுவரை நினைக்கிறோம். வள்ளுவருடைய அறிவுரையை மேற்கோள் காட்டுகிறோம். அதைத்தான் இங்கே நம்முடைய அடிகளார் அவர்கள் உணர்த்தினார்கள்.

நம்முடைய பேராசிரியர் உரையாற்றும்போது, வள்ளுவர் தொட்டு இந்த விருது யார் யார் பெயரால் அவர்கள் வழங்கப்படுகிறதோ அவர்களுடைய பெயர்களையெல்லாம் சுட்டி, ஒவ்வொருவருடைய பெருமைகளையும் – அந்த விருதுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வித்தகர்களுடைய ஆற்றலையும் அருந்திறனையும் இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். குறிப்பாக, நம்முடைய பொன்னம்பல அடிகளார் அவர்கள், இன்று நேற்றல்ல, நீண்ட காலமாக இந்த இயக்கத்தோடு பழகிய நண்பராக இருக்கின்ற ஒரு மடாலயத்தின் நண்பர் குன்றக்குடி அடிகளார் வாழ்ந்தபோது, ஒருமுறை நான் அந்த வட்டாரத்துக்குப் பேசச் சென்ற நேரத்தில், இயக்கத் தோழர்கள் எல்லாம் நான் காரிலே சாலையிலே செல்லும்போது, காரை மறித்து இதற்கு மேல் நீங்கள் போக வேண்டாம், ஏனென்றால், அங்கே குன்றக்குடி அடிகளாருடைய கூட்டம் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். ஏன் அது நடந்தால் என்ன, நான் போனால் என்ன என்று கேட்டபோது, அவர் நம்முடைய இயக்கத்தை மிகவும் தாக்கிப் பேசுகிறார் என்றார்கள். மறுநாள் நான் ஒரு அரசினர் விருந்தினர் மண்டபத்திலே தங்கியிருந்தேன். அடிகளார் பக்கத்து அறையிலே தங்கியிருந்தார். இருவரும் சந்தித்துக் கொண்டோம். யார் யாரைப் பார்க்க - முதலில் விரும்பினோம் என்றெல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை இருவருமே விரும்பினோம். யார் முதலிலே சொல்வது என்பதிலேதான் சற்றுத் தயங்கினோம். இருவரும் சந்தித்து ஒரு மணி நேரம் அந்த விருந்தினர் மாளிகையிலே பேசிக் கொண்டிருந்தோம். அதற்குப் பிறகு அவருக்கும் பெரியாருக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றியும், அவருக்கும் அண்ணாவிற்கும் உள்ள தொடர்புகளைப் பற்றியும் விவரித்தார். அது எங்கே போய் முடிந்தது என்றால், அவரையே மேலவையிலே ஒரு உறுப்பினராக உட்கார வைத்து அவரை நானே வாழ்த்துகின்ற ஒரு நிலைமை தி.மு.கழக ஆட்சியிலே ஏற்படுகிற அளவிற்கு முடிந்தது.

நான்காயிரம் ஆண்டுகாலப் பண்பாடு

அப்போது அவர் எழுதிய ஒரு வாழ்த்துக் கவிதை – நெஞ்சுக்கு நீதி- புத்தகத்திலே நான் வெளியிட்டுருக்கிறேன். இன்றைக்கும் படித்தால் பழைய நினைவுகள் என்னுடைய நெஞ்சில் பசுமையாக நிழலாடும். அப்படிப்பட்ட ஒரு உறவு ஆன்மீகத்திற்கும், அறிவியக்கத்திற்கும் இடையிலே ஏற்பட்ட ஒரு உறவு - அந்த உறவு இன்றளவும் நிலைத்து, இந்த இரண்டு தத்துவங்களும் சேர்ந்து நாட்டு மக்களை வாழ வைக்க முடியும் என்ற அளவிலே அமைந்திருக்கின்றது. நேற்று காலை வரையிலே அவர், அந்தத் துறவி ஒரு விஷயத்திற்காக என்னை என்ன பாடுபடுத்தினார் என்பது எனக்குத்தான் தெரியும். வேறொன்றுமில்லை. ஜல்லிக்கட்டு அனுமதிக்கப்படுமா, அனுமதிக்கப்படாவிட்டால் நம்முடைய பழந்தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம் இவைகள் அழிந்துவிட்டது என்ற குமுறல், இந்த வட்டாரத்து மக்களுக்கு அதிகமாகியிருக்கின்றது, அதைக்

கவனியுங்கள், நீங்களே டெல்லிக்குச் சென்றாவது, ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துங்கள் என்று அவர் கேட்டுக் கொண்டது இருக்கிறதே, அது அவருக்கு நம்முடைய பழைய கலாச்சாரங்களின்பால், நம்முடைய பண்பாட்டின்பால், நம்முடைய வீர வரலாற்றின்பால் எந்த அளவிற்கு பிடிப்பும் பற்றும் இருக்கிறது என்பதற்கு அடையாளம் ஆகும்.



ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுக் காலப் பண்பாடு அது. இரண்டு நாட்களுக்கு முன்பு இந்துப் பத்திரிகையில் இத்தகைய செய்திகளை, வரலாற்றிலிருந்து எடுத்து எழுதுகின்ற நண்பர் மகாதேவன் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையிலேயே இந்த ஜல்லிக்கட்டு என்பது ஏறு தழுவுதல் என்ற இந்த விளையாட்டு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களால், திராவிடர்களால் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்று என்று, அவர் குறிப்பிட்டிருக்கின்றார். அதை எடுத்துச் சொல்ல எதிர்த்தவர்களுக்கு மனம் இல்லை. ஆனால் ஆளுகின்றவர்களுக்கு அந்தச்செய்தி உடனடியாகக் கிடைத்தது, அதை எடுத்துச் சொன்னார்கள், சொல்ல வேண்டிய இடத்திலே சொன்னால், புரியவேண்டியவர்களுக்குப் புரிந்தால் நல்லது நடக்கும் என்பதற்கும் நேற்றைய தீர்ப்பு ஒரு நல்ல உதாரணம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும்.

எல்லோரையும் சமமாக மதித்த அம்பேத்கர்

அருமைத் தோழர் நல்லக்கண்ணு அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் நடத்திய புரட்சிகள், பொது உடைமைக் கட்சியிலேயிருந்து அவர் ஆற்றிய பணிகள், ஆற்றி வருகின்ற அந்தத் தியாகச் செயல்கள் - நேற்றைக்குக் கூட நம்முடைய பீட்டர்

அல்போன்ஸ் அவர்கள் என்னைச் சந்தித்து - மாரிமுத்து அவர்களுக்கு இந்த விருது வழங்கியதற்காக நன்றி தெரிவித்த நேரத்தில், நல்லக்கண்ணு அவர்களுக்கும் விருது வழங்குகிறீர்கள், மிகப் பொருத்தம் என்று சொன்னார். இப்படி சொன்னதை நல்லக்கண்ணு அவர்கள் கவனிப்பார் என்று நம்புகிறேன். ஏனென்றால், இந்தக் கவனத்தை ஊட்டுவதின் மூலம் காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலே ஒரு நல்லுறவு ஏற்படவேண்டும், எந்த அரசியல் லாபமும் கருதி அல்ல, எந்தக் கட்சியிலே யார் இருந்தாலும் அவர்கள் நல்லவைகளை மதிப்பார்கள், தியாகத்தைப் போற்றுவார்கள், அப்படி நாமும் போற்ற வேண்டும் என்ற பாடத்தைப் பெற வேண்டும் என்பதற்காக - எல்லோரும், நான் உட்பட அந்தப் பாடத்தைப் பெறவேண்டுமென்பதற்காக நான் அதைக் கவனித்தேன்.

அவர்கள் சொன்னார்கள், ஒரு வகுப்புக் கலவரம் - சமுதாயங்களுக்கிடையே சண்டை. இந்தப் பக்கத்திலும், அந்தப் பக்கத்திலும் சில பேர் மாண்டார்கள், மடிந்தார்கள், வீடுகள் எரிந்தன. அப்போது அந்தச் சாதி கலவரத்தை, வகுப்புக் கலவரத்தை அந்தத் தீயை அணைப்பதற்காக அந்தக் கொடுமையை நிறுத்துவதற்காக அந்தப் பகுதியிலே நான்கைந்து பேர், எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு அங்கே சுற்றுப் பயணம் செய்தார்கள். அப்படி சுற்றுப்பயணம் செய்த குழுவிலே நல்லக்கண்ணு அவர்களும் ஒருவராக இருந்தார். அப்படி சுற்றுப்பயணம் நடத்தியபோது, அவருடைய இல்லத்தில் ஒரு பெரிய இழவு - அந்த இழவு அவருடைய மாமனார் மறைந்து விட்டார் திடீரென என்ற செய்தியாகும். பரவாயில்லை, ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்கள் என்று சொல்லிவிட்டு, சாதித் தீயினால் அங்கே எரிந்து கொண்டிருந்த மக்களுடைய வீடுகளை அணைப்பதற்காக நல்லக்கண்ணு ஓடினாரே அல்லாமல், தன்னுடைய வீட்டிலே ஏற்பட்ட சோகத்திற்காக வீட்டிலே உள்ளவர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டுமே என்ற அக்கறையோடு நல்லக்கண்ணு அங்கே இருக்கவில்லை என்ற செய்தியை அவர் சொன்னபோது, நான் சொன்னேன் - அதுதான் நல்லக்கண்ணு என்று நான் பீட்டர் அவர்களிடத்திலே சொன்னேன்.

அப்படிப்பட்ட தியாக உள்ளம் படைத்த ஒருவருக்கு அம்பேத்கர் விருது கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு நண்பர் எழுதியிருக்கிறார் - அவர் வேறு கட்சியிலே சில நாட்கள் பழகிய தோஷம், பத்திரிகையிலே அவர் எழுதியிருக்கிறார். அதை நான் படித்தேன். அம்பேத்கர் விருது ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருக்கு அல்லவா தர வேண்டும், நல்லக்கண்ணு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரல்ல - அவர் நல்லவராக இருக்கலாம், ஆனால் அவருக்கு எப்படி கொடுக்கலாம் என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார். நான் இதிலே அம்பேத்கரை ஒரு சாதிக்குள்ளே புகுத்த விரும்பவில்லை, ஒரு சமூகத்திற்குள்ளே புகுத்த விரும்பவில்லை. அந்தச் சமூகத்திற்காக பாடுபடக்கூடியவர், அந்தச் சமூகத்தினுடைய விழிப்புணர்வுக்காக புரட்சிக் கொடி தூக்கியவர் அம்பேத்கர் என்பதிலே யாருக்கும் எள்ளளவு சந்தேகமும் இல்லை. அதே

நேரத்தில் எல்லோரையும் சமமாக மதித்தவர் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

எல்லோருக்கும் பொதுவானவர்

நாங்கள் விருது கொடுத்திருக்கின்ற பட்டியலைப் பார்த்தால்கூட, நாங்கள் யாரும் தலித்துகளை அல்லது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த யாருக்கும் விருது கிடையாது என்று அழித்துவிட்டு, நல்லக்கண்ணு அவர்களுக்கு மாத்திரம் விருது கொடுக்கவில்லை. நல்லக்கண்ணு அவர்களுக்கு அம்பேத்கர் விருது, அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கவிதைப்பித்தனுக்கு பெரியார் விருது - என்பதை இந்தப் பட்டியலிலே பார்த்தாலே நாங்கள் யாரையும் புறக்கணிக்கவில்லை, அலட்சியப் படுத்தவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

நல்லக்கண்ணு அவர்கள் ஆதிதிராவிட மக்களும், அல்லாத மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் ஒன்றாக இருக்க வேண்டும். எல்லோரும் ஒன்றுபட்டு சமுதாயப் பணியாற்ற வேண்டும், நாட்டு முன்னேற்றத்திற்காகப் போராட வேண்டும், உழைக்க வேண்டும் என்று கருதுகிற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே ஒருவர் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. எனவே தான் அவர் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் - எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்பட்டாலும் - சொல்லப்பட்டாலும் என்று தான் சொல்லுகிறேன், சேர்ந்தவர் என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால் அதை சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் ஒத்துக்கொள்வதில்லை. எப்படிச் சொல்லப்பட்டாலும் அவர் எல்லோருக்கும் பொதுவானவர், இன்னும் சொல்லப்போனால் ஒரு நண்பரால் என்ன குறை அந்தப் பத்திரிகையிலே எடுத்துச் சொல்லப்பட்டதோ, அந்தக் குறைக்கும் அவருக்கும் சம்மந்தம் உண்டா என்றால் இல்லை.

நான் எடுத்தவுடனே தஞ்சை மாவட்டம் என்று ஆரம்பித்தேன் அல்லவா அந்த மாவட்டத்திலேதான் விவசாயப் பிரச்சினை அதிகம். அந்த விவசாயப் பிரச்சினை தஞ்சை மாவட்டத்திலே பெருகி இருந்த காரணத்தினால்தான் சீனிவாசராவ் என்ற கம்யுனிஸ்ட் கட்சித் தோழர், அங்கே தேவைப்பட்டார். அவருடைய தலைமையிலே அங்கே விவசாயிகளின் போராட்டம் நடைபெற்றது. தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகள் என்று சொல்லப்படுகிற, அதிலும் குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் மீது எப்படிபட்ட தண்டணை- தாக்குதல்கள் நடைபெறும் என்பதை கண்ணால் கண்டவன் நான், காதால் கேட்டவன் மாத்திரமல்ல. ஏன் என்றால் நானும் தஞ்சை மாவட்டத்துக்காரன் என்ற முறையில் என் வீட்டருகிலே உள்ள வயல்களில், வரப்புகளில் அந்த விவசாயத் தொழிலாளர்கள் அடிபடுகின்ற பரிதாபக் காட்சிகளைக் கண்டு பதறியிருக்கிறேன், இரத்தக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது அந்தக் காட்சிகளையெல்லாம் கண்டு.

"சாணிப்பால்" என்று ஒரு தண்டனை. சாணிப்பாலை, ஆதிதிராவிடர் தோழர்கள் மீது ஊற்றி, விவசாய தொழிலாளர்கள் மீது ஊற்றி – அந்த சாணிப்பாலை கொதிக்கக் கொதிக்க ஊற்றி, அதன் மீது சவுக்கு கொண்டு அடிக்கின்ற காட்சிகள் எல்லாம் நடந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். நான் தி.மு.கழகத்தின் தலைவனாக இன்றைக்கு இருந்தாலும்- ஒரு கம்யுனிஸ்ட் கட்சி தொண்டனுடைய உள்ளத்தோடுதான் இருக்கின்றேன் என்றால் அந்த சாணிப்பால் அபிஷேகத்தையெல்லாம் பார்த்து, சாட்டையடி உற்சவத்தையெல்லாம் கண்டு, என்னுடைய உள்ளத்தை அங்கிருந்து இங்கே நிலைக்க வைத்தவன், அதற்காக உழைக்கத் தொடங்கியவன். அதனால்தான் நல்லக்கண்ணு அவர்களை நினைக்கும்போது, அவரைப்போன்ற – அவர்கள் மார்க்சிஸ்ட் கட்சித் தோழர்களாக இருந்தாலும் இந்திய கம்யுனிஸ்ட் கட்சித் தோழராக இருந்தாலும் - இவர்கள் எல்லாம் தியாகத்திற்கு சளைக்காதவர்கள் என்ற உண்மையை நான் உணர்ந்தவன். எங்களுடைய உறவுக்கும், ஒற்றுமைக்கும், அன்புக்கும், பண்புக்கும் – உங்களுக்கெல்லாம் காரணம் புரியுமென்று நம்புகிறேன். இவ்வளவு சொன்ன பிறகும் அதிலே உங்களுக்கு சந்தேகமே தேவையில்லை என்பதை நான் இங்கே விளக்க விரும்புகிறேன்.

பெரியார் விருதுபெற்ற கவிதைப்பித்தன் கூடாக, சுவையாக அழுத்தந்திருத்தமாக ஈட்டி போன்ற சொற்கள் கொண்டு கவிதையை பின்னுபவராக, தைப்பவராக இந்த இயக்கத்திற்கு வாய்த்தவர். எவ்வளவு கூடாக, எவ்வளவு வேகமாக அவர் கவிதை எழுதக்கூடியவர் என்பதை கவியரங்குகளிலே பலரும் கண்டிருக்கிறார்கள். அவர் பாடி முடித்த பிறகு, நானும் பேராசிரியரும் அவரைக் கூப்பிட்டு, இன்னும் கொஞ்சம் நிதானமாக பாடியிருக்கலாம் என்று நாங்கள் சொல்கின்ற அளவிற்கு அவ்வளவு வேகத்தை அவருடைய கவிதைகளிலே காட்டக் கூடியவர்.

சாரதா நம்பி ஆரூரன், அண்ணா விருது பெற்றிருக்கிறார். ஆனால் சில நேரங்களில் அண்ணா மேடைகளில் அவர் நீண்டநேரம் பேசுவார் என்று எதிர்பார்த்திருக்கும்போது சுருக்கமாகப் பேசி முடித்துவிடுவார். என்ன அண்ணா சீக்கிரம் பேசி முடித்து விட்டீர்கள் என்று கேட்டால், அய்யோ அதற்குள் முடித்து விட்டாரே என்று கேட்கின்ற அளவிற்கு பேச்சு இருந்தால்தான் அது பேச்சு என்பார் அண்ணா. அதைப்போல சாரதா நம்பி ஆரூரன், என்ன அதற்குள் பேச்சை முடித்து விட்டீர்கள் என்று கேட்பதுதான் என் பேச்சு நன்றாக இருந்தது என்பதற்கு அர்த்தம் என்பதுபோல பேசினார்.

ஏ.ஆர். மாரிமுத்து அவர்கள் பேராசிரியர் இங்கே குறிப்பிட்டாரே, நல்ல சட்டமன்ற உறுப்பினராக அவையிலே பணியாற்றியவர் என்று அப்படி பணியாற்றியது மாத்திரமல்ல, நானும் அவரும்- நான் எதிர்க்கட்சியாக இருந்து அவர் ஆளுங்கட்சியாக இருந்து

நூலாசிரியர் - பதிப்பகத்தாருக்கு கூடுதல் தொகை

திருவள்ளுவர் திருநாளன்று நடைபெற்ற அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் பங்கேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும், அந்நூலினை பதிப்பித்தவர்களுக்கு ரூ.2 ஆயிரத்திலிருந்து ரூ.5 ஆயிரமாகவும் உயர்த்தி இந்த ஆண்டு முதலே வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பினையொட்டி இதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 16.01.2008 அன்று, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள், அரசின் விருதுகள் வழங்கும் விழாவின்போது செய்யப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் மேலே படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட விதிமுறைகளின் இனம் 14இல் சிறந்த நூல் ஒவ்வொன்றுக்கும் இந்த ஆண்டு முதல், ரூ.10,000 வழங்கப்பெறும் என்பதை மாற்றி ரூ.20,000 வழங்கப்பெறும் எனவும், அந்நூல்களின் பதிப்பகத்தினருக்கு ஒவ்வொரு நூலுக்கும் பரிசுத் தொகையாக ரூ.2,000 வழங்கப்பெறும் என்பதனை மாற்றி ரூ.5,000 வழங்கப்படும் என ஆணையிடப்படுகிறது.

இந்த ஆணை 2006ஆம் ஆண்டிற்குத் தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூலாசிரியர்கள், பதிப்பகத்தாருக்கு வழங்கப்பெறும் பரிசுத் தொகை வழங்குதல் முதல் நடைமுறைக்கு வருகிறது என்றும் அரசாணையில் தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2006ஆம் ஆண்டு பரிசு பெற தெரிவு செய்யப்பட்ட 29 வகைப்பாடுகளுக்குரிய சிறந்த நூல்களுக்கும் நூலாசிரியர்களுக்கும், பரிசுத் தொகை வழங்கும் பொருட்டும் பரிசு பெறும் நூலாசிரியர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் சான்றிதழ் வழங்குதல் பயணப்படி இன்னபிற செலவினங்களுக்கு ரூ.3,60,000 ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாணையில் பரிசுத் தொகை நூலாசிரியர்களுக்கு ரூ.20,000 எனவும், பதிப்பகத்தாருக்கு ரூ.5,000 எனவும் உயர்வு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், 2006ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நூலாசிரியர்கள், பதிப்பகத்தாருக்கு பரிசு வழங்குவதற்காக ரூ.3,77,000 நூலாசிரியர்களுக்குப் பரிசுத் தொகை வகையில் கூடுதல் செலவினம் ரூ.2,90,000, பதிப்பகத்தாருக்கு பரிசுத்தொகை வகையில் கூடுதல் செலவினம் ரூ.87,000 மட்டும் அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குமேல் கூடுதல் செலவினமாக அரசு ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டன.

எங்களோடு சண்டை போட்டதும் - நாங்கள் ஆளுங்கட்சியாக ஆனபிறகு, அவர் எதிர்கட்சியிலே இருந்து எங்களைப் பார்த்து கேள்விகளை அடுக்கியதும் எனக்கு நினைவில்லாமலில்லை. எப்படி என்னை நினைத்துக் கொண்டீர்கள் என்று அவர் கேட்டார், அவருக்கு விருது வழங்கப்படும் என்று அறிவித்தவுடன். இவ்வளவிற்கும் பிறகு நான் எப்படி நினைக்காமல் இருக்க முடியும், அதுவும் பட்டுக்கோட்டை - பட்டுக்கோட்டை என்றால் எனக்கு எங்கள் தலைவர் பட்டுக்கோட்டை அழகிரி சாமியின் நினைவுதான் வரும். இப்போது பட்டுக்கோட்டை என்றால் – காங்கிரசுடன் சேர்த்து நினைத்தால் மாரிமுத்து அவர்களின் பெயரை விட்டுவிட்டு பட்டுக்கோட்டையை நாங்கள் நினைக்க முடியாது. அதனால் பட்டுக்கோட்டை மாரிமுத்து அவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டிருக்கின்றது.

அவர் மிகவும் மென்மையானவர். மெல்லிய மல்லிகைப்பூவின் இதழ் போன்ற உள்ளம் படைத்தவர். அவருக்கு சுடு சொல் வாயிலே வராது. மற்றவர்களை பார்த்து கோபமாக பேச மாரிமுத்து அவர்களுக்குத் தெரியாது. மாரிமுத்து காங்கிரஸ் இயக்கத்திலே – ஏன் பொது வாழ்க்கையிலே என்றைக்கும் மாறாத முத்தாக இருக்கின்ற காரணத்தினாலே தான், அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. சவுந்தரா கைலாசம் அவர்கள் வருவார்கள் என்று இருந்தார்கள். ஆனால் உடல் நலிவின் காரணமாக அவர்கள் வர முடியவில்லை.

எம்.எஸ். வெங்கடாசலம் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களுக்கு செல்லப்பிள்ளைகளிலே ஒருவராகத் தொடங்கி, அண்ணா அவர்களுக்கு ஆங்கில பத்திரிக்கை நடத்துவதற்கு பெரும் துணையாக இருந்து என்போன்றவர்களின் நூல்களையெல்லாம் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து, நாட்டிற்கு விளம்பரப்படுத்திய பிரச்சாரத்திற்கு பயன்படுத்திய அருமையான தோழர் அவர். அவருக்கு நாங்கள் இன்றைக்கு தந்திருக்கின்ற மரியாதை , காலம் தாழ்ந்து தரப்பட்ட மரியாதை என்றாலும் கூட, அது இந்த நேரத்தில் தேவைப்படுகின்ற மரியாதை என்ற முறையில் அந்த மரியாதையை வழங்கியிருக்கிறோம்.

முனைவர் பெரியாண்டவனைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவர் இன்றைக்கும்-எந்த இடத்திலே இருந்தாலும் தமிழை பெருமைப்படுத்த வேண்டும், வளர்க்க வேண்டும், தமிழுக்கு உரிய சிங்காதனம் என்றும் அழியாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்ற தீவிர எண்ணம் கொண்டவர்.

முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் அவர்களுடைய பெயரால் விருதுபெற்ற என் அருமை தம்பி, அன்புத் தம்பி கவிஞர் வேழவேந்தன் அவர்கள் இந்த இயக்கத்தின் பாரம்பரியமிக்க ஒரு குடும்பத்தின் வழிவந்தவர். இந்த சென்னை மாநகரில் மாவட்டத்தின் செயலாளராக இருந்த கண்ணபிரானை – அடிக்கொருதடவை அண்ணா அவர்கள்-

கண்ணபிரான், கண்ணபிரான் என்று அழைப்பார். அந்த கண்ணபிரான் வீட்டுப்பிள்ளை கவிஞர் வேழவேந்தன். அவர் அமைச்சராக இருந்து அரும்பணியாற்றினார். கவிஞராக இருந்து கழக கொள்கைகளை வளர்த்தார். கடல் கடந்து சென்று மலேசியா, சிங்கப்பூர், இலண்டன், அமெரிக்கா போன்ற இடங்களில் எல்லாம் தமிழ் வளர்க்கின்ற பணியினை – கழகத்தின் எண்ணங்களை வெளியிடுகின்ற பணியினை அவர் ஆற்றியிருக்கிறார். அவருக்கு இந்த விழாவிலே நாம் நம்முடைய மரியாதையைச் செலுத்தியிருக்கிறோம்.

இவ்வளவும் நடைபெற்ற இந்த விழாவில் ஒரு குறை எனக்குண்டு. நம்முடைய பேராசிரியர் அவர்கள் நிதியமைச்சர் என்ற காரணத்தினால், அவருக்கு பக்கத்திலே நான் அமர்ந்து அந்தக் குறையை அவரிடம் வெளிப்படுத்தி - அதை நிறைவாகச் செய்யவேண்டிய கடமையை உணர்ந்து செய்ய விரும்புகிறேன்.

ஒன்பது பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஒன்பது இலட்சம் ரூபாய் இன்றைக்கும் விருதுத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் புத்தகங்களை எழுதியவர்கள் 29 பேருக்குத் தலா பத்தாயிரம் ரூபாய் தான் வழங்கப்பட்டது. அந்த வகையில் 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் தரப்பட்டது. பத்தாயிரம் ரூபாய் என்பதை ஒரு அரசு கொடுக்கிறதே, முதலமைச்சர் கொடுக்கிறாரே என்ற அந்த மரியாதைக்காக அவர்கள் வந்து வாங்கியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அது பத்தாத பணம்தான் அவர்களுக்கு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, அடுத்த ஆண்டு முதல் அல்ல - இந்த ஆண்டே கூட இன்னொரு பத்தாயிரம் ரூபாய் வீதம் அவர்களுக்கு சேர்த்து வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை நூலாசிரியர்களுக்கு மாத்திரமல்லாமல், பதிப்பகங்களுக்கு தற்போது ஒரு புத்தகத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதையும் ஒரு புத்தகத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் வீதம் இந்த ஆண்டு முதலே வழங்கப்படும். இந்த வாரத்திற்குள்ளாக இந்தக் கூடுதல் தொகையும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, இந்த நல்ல செய்திகளோடு இந்த நல்ல விழா நிறைவு பெறுகிறது என்பதை எடுத்துச் சொல்லி விடைபெறுகிறேன்'.

— முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்
16.01.2008 அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற
விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை...



மறைந்த பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்கு நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைத் துறையினரின் நலன் கருதி, உரிய பரிசீலனைக்குப் பின்னர், பத்திரிகைத்துறையில்தொடர்ந்து, இருபது ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாக பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்கள் - இவர்களில் பணியிலிருக்கும்போது இயற்கை எய்தினால்,இயற்கை எய்துபவர்களுடைய குடும்பத்திற்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின் மூலம், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1997ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 25 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1997 முதல் 2001 வரை 16 பத்திரிகையாளர்களுக்கும், 2001 முதல் 2006 வரை 9 பத்திரிகையாளர்களுக்கும் மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 29.08.2006 அன்று பின்வரும் நான்கு மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு இந்நிதியுதவியினை வழங்கினார்கள்.

1. திரு. சாவி (எ) சா. விஸ்வநாதன் (ஆனந்தவிகடன், கல்கி, தினமணிக்கதிர், குங்குமம் மற்றும் சாவி, பருவ இதழ்கள், சென்னை)

முதுபெரும் தமிழ் எழுத்தாளரும், பிரபல பத்திரிகை ஆசிரியருமான சாவி என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. விஸ்வநாதன் அவர்கள் 09.02.2001ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவருடைய துணைவியார் திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்கள், இத்துறைக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வேண்டி 25.05.2006 அன்று விண்ணப்பித்திருந்தார். அவரது விண்ணப்பம், பரிசீலிக்கப்பட்டு, சிறப்பு நிகழ்வாகக் கருதி, திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ், ரூ.50,000 வழங்க ஆணையிடப்பட்டது. 29.08.2006 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.



2. திரு. தி. தேசிங்கு (வண்ணத்திரை வார இதழ், சென்னை)

06.11.2001 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. தி. தேசிங்கு அவர்களின் துணைவியார் திருமதி தே. ஆர்த்தி அவர்கள், 15.03.2002 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வேண்டி விண்ணப்பித்தார்.மனுதாரருக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.2,00,000 வழங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 18.07.2006 அன்று ஆணையிட்டார்கள். 29.08.2006 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருமதி தே.ஆர்த்தி அவர்களிடம் அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.



3. திரு. எம்.இன்பராஜ், (மாலை முரசு நாளிதழ், மதுரை)

28.08.2002 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. எம். இன்பராஜ், அவர்களின் துணைவியார் திருமதி இ. வேல்தங்கம் அவர்கள், 29.10.2002 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.2,00,000 வழங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 18.07.2006 அன்று ஆணையிட்டார்கள். 29.08.2006 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருமதிஇ.வேல்தங்கம் அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

4. திரு. எம்.சுப்புக்குட்டி (தினகரன் நாளிதழ், திருச்சி)

13.04.2001 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. எம். சுப்புக்குட்டி அவர்களின் துணைவியார் திருமதி சு. சுப்புலட்சுமி அவர்கள், 19.08.2001 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வேண்டி விண்ணப்பித்தார். மனுதாரருக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.50,000 வழங்க 23.07.2006 அன்று ஆணையிட்டார்கள். 29.8.2006 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருமதி சு.சுப்புலட்சுமி அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

மேலும், திருநெல்வேலி 'மக்கள் செய்தி' இதழில் செய்தியாளராக 26 ஆண்டுகள் பணியாற்றி 20.03.2001 அன்று இயற்கை எய்திய எஸ். மாரியப்பன் என்பவரின் துணைவியார் திருமதி எம். தனலெட்சுமி அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயும், சென்னை 'தினகரன்' இதழில் செய்தியாளராக 26 ஆண்டுகள் பணியாற்றி 13.12.2004 அன்று இயற்கை எய்திய பால்ராஜ் என்பவரின் மனைவி திருமதி பா. காஞ்சனமாலா அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயும், சேலம் 'தினத்தந்தி', 'மாலை மலர்' இதழ்களில் 23 ஆண்டுகள் செய்தியாளராக பணியாற்றி, 05.01.2007 அன்று இயற்கை எய்திய ஏ.ஜக்கையன் என்பவரின் மனைவி திருமதி ஜெ. அந்தோணியம்மாள் அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயும், வேலூர் 'மணிச்சுடர்' இதழில் 11 ஆண்டுகள் செய்தியாளராக பணியாற்றி 12.04.2004 அன்று இயற்கை ஏய்திய சையது அகமது என்பவரின் துணைவியார் திருமதி பி.பி.ஜான் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாயும் பத்திரிகையாளர் குடும்ப நல நிதி உதவியாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 18.05.2007 அன்று வழங்கினார்.



பத்திரிகையாளர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞரின் நலத்திட்டங்கள்

– முத்தமிழறிஞர்
டாக்டர் **கலைஞர்** அவர்கள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே ஒரு பத்திரிகையாளர்தான். 'இன்றைய செய்தி நாளைய வரலாறு, முரசொலி படியுங்கள்' என வெளியிடப்படும் விளம்பரச் செய்தி முரசொலி வரலாற்றையும் நமக்கு நினைவுபடுத்துகிறது. திருவாரூரில் கையெழுத்துப் பிரதியாக கலைஞர் அவர்கள் தொடங்கிய 'முரசொலி' இன்று சென்னையிலிருந்து வண்ணப்படங்களுடன் கண்ணைக் கவரத்தக்க வகையில் வெளிவந்து கொண்டுள்ளது. காண்போரின் கருத்தையும் ஈர்த்து ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டின் அரசியல், சமுதாய, பொருளாதார வரலாற்று நிகழ்வுகளை நாம் அறிந்துகொள்ள நமக்குத் துணைபுரிகிறது.

உலகப்போர்கள், புயல்வெள்ளம், சூறாவளி, ஆழிப்பேரலை, கொரோனா என எல்லாவற்றையும் கடந்து நிற்கும் மக்கள் வாழ்வுபோல் எண்ணற்ற இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் வெற்றிப் புன்னகையுடன் எதிர்கொண்டு தொடர்ந்து தமிழ்த் தொண்டில் முரசொலி ஈடுபட்டுள்ளதென்றால் அதனை உருவாக்கி, தேவையான, வலுவான அடித்தளங்களை அமைத்துக் கொடுத்து, அதனைக் காத்து நின்ற

பத்திரிகையாளர் கலைஞர் அவர்களின் ஆற்றல் வியந்து பாராட்டிப் போற்றத்தக்கதல்லவா! அந்த மூத்த பத்திரிகையாளர் ஆட்சிக்காலத்தில் நிகழ்த்திய அற்புதங்களின் ஒளிக்கீற்றுகள் தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்களையும் ஒளிரச் செய்துள்ளன. அது குறித்துச் சில -

விளம்பரத்துறையின் விடிவெள்ளி

உற்பத்தி செய்வோருக்கும். நுகர்வோருக்கும் இடையே பாலங்களாக விளம்பரங்கள் விளங்குகின்றன. அறிமுகம் செய்யப்படும் பொருள்களுக்கு மக்களின் ஆதரவினைப் பெற்றிட, பெற்ற நல்லாதரவினைப் போற்றி வளர்த்திட விளம்பரங்கள் சிறந்த கருவிகளாகின்றன.

தொழில் துறையில் மட்டுமல்ல அரசியலிலும் விளம்பரத்திற்குச் சிறப்பானதோர் இடமுண்டு, பன்னெடுங்காலத்திற்கு முன்னாலேயே, நாடு கடந்து அரசியலார் சென்று வேற்று நாட்டு வேந்தரின் அரசவைக் களத்தில் அமர்ந்து, தாய்நாட்டின் புகழைப் பரப்பியதோடு, புகுந்த நாட்டின் வளத்தையும் பிறந்த நாட்டில் விளக்கி நல்லுறவினை வளர்த்துள்ளனர். அத்தகைய மாண்புடையோர் நல்லெண்ணத் தூதுவர் என்று அழைக்கப்படுகின்றனர்.

விளம்பரத் துறையில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை நம்நாட்டு ஆட்சியாளரும் உணரும் காலம் ஒன்று வந்தது. ஹிட்லரின் ஆதிக்கக் கரங்கள் இரண்டாம் உலகப் போரின் போது மூட்டிய போர்க் கனலில் தரணி வாழ் மக்களெல்லாம் தவித்துக் கொண்டிருந்தகாலம் அது !

பண்டை நாளில், போரென்றால், வீட்டுக்கு ஒரு வீரர் தேவை என வீதியெல்லாம் முரசறைவர். அது, எதிரிகளைச் சாய்ப்பதற்கு வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும் என்பதால் மட்டுமல்ல: களம் புகும் மன்னவன் பின்னால் நாட்டு மக்கள் எல்லாருடைய நம்பிக்கையும் நல்லாதரவும் துணை நிற்றல் வேண்டும் என்னும் கருத்தில் எழுந்ததாகும்.

அதனை உணர்ந்த பிரிட்டிஷ் அரசு, இரண்டாம் உலகப்போரில் பங்கு பெற்ற பிரிட்டனின்பால் உள்ள நியாயத்தை, ஹிட்லரின் எதேச்சதிகாரம் தவிர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை இந்திய மக்களிடையே உணர்த்தி, அவர் தம் ஆதரவினைத் திரட்டுவதற்கு 1942ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16ஆம் நாள், போர்ப் பிரச்சார அதிகாரி ஒருவரை நியமித்தது. வட்டாரப் போர் ஆலோசனைக் குழுவின் செயலராக ஆங்கில அரசில் அன்று இருந்த திரு. ஹார்வி என்பார் அவ்வாறு அரசினரால் நியமிக்கப்பட்ட முதல் பிரச்சார அதிகாரியாவார்.

தமிழ்நாடு அரசின் விளம்பரத் துறையின் விடிவெள்ளி இந்த நியமனமேயாகும்.

1946ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் முடிவடைந்து ஹார்வி பதவி விலகியபோது விளம்பரத் துறைக்கு இனி அவசியம் இராது என்றே பலரும் நினைத்தனர். ஆனால்,

நாட்டின் நிர்மாணப் பணிகளைப் போர்க்காலப் பணிகளைப் போலவே தொடர வேண்டும் என்றும், மக்களுக்கும் அரசுக்கும் இடையே தொடர்புகூட்ட விளம்பரத் துறை ஒன்று இருந்தே தீரல் வேண்டும் என்றும் கருதிய அப்போதைய சென்னை மாகாணப் பிரதமர் ஆந்திரகேசரி பிரகாசம் அவர்கள், திரு. சி.வி.ஹனுமந்தராவ் அவர்களை விளம்பரத்துறைக்கு இயக்குநராக நியமித்தார். அந்நாளிலேயே அவர்க்கு அளிக்கப்பட்ட சம்பளம் (வீட்டு வாடகைப்படி முதலியன நீங்கலாக) ஆயிரத்துக்கும் மேலாகும். அத்துடன் மற்ற துறைத் தலைவர்களுக்கும் மேலாக விளம்பர அதிகாரி மதிக்கப்பட்டார்.

இராஜாஜி – காமராசர் காலங்களில்

ஆரம்பத்தில் விளம்பரத் துறை அமைச்சராகப் பதவி ஏற்றவர் மு.பக்தவச்சலம் அவர்கள், இராஜாஜி அவர்கள். முதலமைச்சராக இருந்தபோது ஆர்.பார்த்தசாரதி என்பவர் விளம்பரத்துறை இயக்குநர் ஆனார். சி.சுப்பிரமணியம் அவர்கள் அத்துறைக்கு அமைச்சரானார். இராஜாஜிக்குப் பிறகு காமராசர் அவர்கள் முதலமைச்சரானபோதும் விளம்பரத்துறை மென்மேலும் சிறப்பினை எய்தி வந்தது. நாளடைவில் அத்துறையின் அதிகார வரம்புகளும் அமைப்பும் விரிவடைந்து கொண்டே போயின.

மொழிவாரி மாநிலம் அமைந்தபின்

மொழிவாரி மாநிலம் 01.11.1956இல் அமைந்தவுடன், தமிழ்நாட்டின், தமிழ் மொழியின், தமிழ் இனத்தின் தனித்தன்மைகள் மிளிரும் வகையில் விளம்பரத் துறையின் செயல்கள் விளங்கின. அன்னைத் தமிழின்பால் அளவற்ற பற்றுக்கொண்ட விளம்பரத்துறை இயக்குநர் திரு. கே.திரவியம் அவர்கள் இத்துறைக்குத் தந்த ஊக்கம் இங்குப் பெருமையுடன் நினைவு கூரத்தக்கதாகும்.

1958இல் நியமனம் பெற்ற திரு. குழந்தைவேலு அவர்களின் குன்றாத பணிக்குப் பின்னர், 1968 முதல் திரு. டி.வி. வாசுதேவன் பொதுத்துறையின் துணைச் செயலாளராகவும், விளம்பரத் துறையின் இயக்குநராகவும் பணியாற்றினார்.

அண்ணா – கலைஞர் காலங்களில் (1967–1976)

1967இல் தமிழகத்தில், அறிஞர் அண்ணாவின் தலைமையின்கீழ் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது.

அந்தத் தகைமையாளரின் கீழ்த் தமிழ்நாடு தழைக்கப் போகும் செய்தியினைப் பாரெங்கும் முரசறையும் பேற்றினைப் பெற்றோமென்று விளம்பரத்துறை பெரு மகிழ்ச்சியடைந்திருந்தபோது பேரிடியாக அண்ணா அவர்கள் கொடிய நோய்க்குத் தாக்குண்டு காலமானார். ஆனால், அவர்தம் கனவுகளை நனவாக்கப் பாடுபட்ட கலைஞர் 10.02.1969 அன்று முதலமைச்சராகப் பதவி ஏற்ற பொழுது, விளம்பரத் துறை மீண்டும் புத்துணர்ச்சியும் புதுமிடுக்கும் பெற்றதோடு புது வடிவமும் கொண்டது.

நாட்டு மக்களின் வேட்கைகளை அரசுக்கு உணர்த்திடவும், நாட்டு மக்களின் நலனுக்காக அரசு ஆற்றிடும் காரியங்களை மக்களிடையே பரப்பி நல்லாதரவினைத் திரட்டிடவும், வல்லமை மிக்கதோர் கருவியான செய்தி, விளம்பரத்துறையின் பெருமையை உணர்ந்து கலைஞர், தாமே அதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1969ஆம் ஆண்டின் இறுதியில் டி.வி. வெங்கட்ராமன் விளம்பரத்துறையின் ஆர்வமிக்க இயக்குநராகப் பதவி ஏற்றார். பின்னர் இப்பதவிக்கு திரு. ஆர். நாகராசன் நியமிக்கப்பட்டார். அத்துடன், பத்து ஆண்டு காலமாக நியமனம் செய்யப்படாமலிருந்த துணை இயக்குநர் பதவிக்கு திரு. நாமதேவன் நியமிக்கப்பட்டார். மேலும், அரசின் சாதனைகளை நாடெங்கும் பரப்பிடப் பிரச்சார அலுவலராக கவிஞர் திரு. கருணானந்தம் நியமிக்கப்பட்டார்.

செய்தித் துறை இயக்குநர் கி. இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ்.

1989ஆம் ஆண்டில் கி. இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். அவர்கள் செய்தித் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவர் கல்லூரி மாணவப் பருவத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டக்குழுவின் பொறுப்பாளர்களில் ஒருவராக விளங்கியவர். அண்ணா, கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர். அவர் திராவிட இயக்க உணர்வுகளோடு செய்தித் துறையின் வளர்ச்சிக்கு மிகச் சிறப்பான பல பணிகளை நிறைவேற்றினார். அவர் பொறுப்பேற்றிருந்த காலத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவும், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட குழுக்கள் அமைக்கப்பட்டு அப்பெருமக்களின் புகழ் போற்றப்படும் பணிகள் சிறப்பாக நடைபெற்றன..

செய்தி நிலையங்கள்

கலைஞர் தலைமையின்கீழ் செய்தி விளம்பரத்துறை புதியதோர் வடிவம் பெற்று அரசின் ஆக்கப்பணிகளை விரைந்து விளம்பரப்படுத்தத் தொடங்கியது.

தலைநகர் சென்னையிலும், தஞ்சை மண்ணிலும், தமிழன்னை அரசிருந்த மதுரையிலும் அரசாங்கச் செய்தி நிலையங்கள் செயல்பட்டு வந்தன. அரசு சம்பந்தப்பட்ட எல்லாச் செய்திகளும் அரசு ஆணைகளும், புள்ளி விவரங்களும் அந்தச்செய்தி நிலையங்களில் எளிதில் கிடைத்தன. இந்த நிலையங்களில் சிறந்த புத்தகங்களை மக்கள் கட்டணமின்றிப் படித்துப் பயனுறத் தொடங்கினர்.

சுற்றுலா தகவல் நிலையங்கள்

பண்டைத் தமிழகத்தின் பெருமையைப் பாரோர் அறியச் செய்யவும், தமிழ்நாட்டின் இயற்கைக் காட்சிகளை வேற்று நாட்டாரும் கண்டு இன்புறத் தூண்டவும், மதுரை, திருச்சி, உதகை, குமரி ஆகிய இடங்களில் சுற்றுலா தகவல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. அவை, இன்றும் பயணிகளுக்குப் பேருதவி புரிந்து வருகின்றன.

பயண விடுதிகள்

பயணிகளுக்குச் சுற்றுலா செல்லும் இடத்தைப் பற்றித் தகவல்களைத் தருவதோடு, தங்கும் வசதி செய்து கொடுப்பதும் தேவையான பணியாகக் கருதப்பட்டதால் - மதுரையிலும், திருச்சியிலும், உவகையின் ஊற்றிடமாம் உதகையிலும், குமரியிலும், திருச்செந்தூரிலும் வனப்பும் வசதியுமிக்க கட்டடங்கள் எழும்பி, "கோடையிலே இளைப்பாறக் கிடைத்த குளிர் தருக்களாய்" விளங்கின.

இவற்றோடு விளம்பரத் துறையினால் கட்டப்பட்டுப் பின்னாளில் பொதுப்பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட, குற்றாலம், மாமல்லபுரம் போன்ற இடங்களில் உள்ள பயண விடுதிகளும், அங்குக் கிடைக்கும் அறுசுவை உணவும், வெளிநாட்டிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளின் வேட்கையைப் பெருமளவு தீர்த்துத் தாயகத்தின் பெருமையை உணர்த்தி வருகின்றன.

கலைஞர் கண்ட சுற்றுலா வளர்ச்சி வாரியம்

சுற்றுலா விளம்பரத்திற்கு மேலும் வேகமூட்ட விரும்பி, செய்தி விளம்பரத் துறையினின்றும் அதனைப் பிரித்து, 01.07.1971 அன்று "சுற்றுலா வளர்ச்சி வாரியம்" என்னும் ஓர் அமைப்பினை ஏற்படுத்தினார் கலைஞர்.

சுற்றுலா வளர்ச்சிக்காக சென்னை முதல் குமரி வரை பல நினைவுச் சின்னங்களை உருவாக்கினார். தங்கும் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலா வாகனங்கள் ஆகியவற்றையும் ஏற்படுத்தினார். வருவாயிலும் உயர்ந்து சுற்றுலாவில் தமிழ்நாடு இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது. பின்னர் அத்துறை சுற்றுலா - பண்பாட்டுத் துறை எனப் பரிணமித்தது.

அரசுப் பொருட்காட்சி

1971ஆம் ஆண்டில் முதலமைச்சர் கலைஞர் சென்னை தீவுத்திடலில் இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார். பின், அரசின் திட்டங்கள், சாதனைகள், நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் மாவட்டங்களின் தலைநகரங்களில் தமிழ்நாடு அரசால் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பொருட்காட்சிகள் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி, பொதுமக்கள் அரசின் பல்வேறு நலத்திட்டங்களை அறிந்து பயன்பெறும் வகையிலும் நடத்தப்படுகின்றன. 1996ஆம் ஆண்டு முதல் 2000 அக்டோபர் வரை, 15 பொருட்காட்சிகள் இத்துறையால் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் அரசுக்கு நிகர இலாபம் ரூ.2.78 கோடி கிடைத்தது.

தமிழரசு இதழ் வெளியீடு

முதலமைச்சர் கலைஞர் கண் சிகிச்சைக்காக 01.07.1970 அன்று அமெரிக்கா புறப்பட்டார். அதற்கு முந்தைய நாள் கலைவாணர் அரங்கத்தில் அவருக்கு நடத்தப்பட்ட வழியனுப்பு விழாவில் 'தமிழரசு' இதழ் முதன்முதலில் வெளியிடப்பட்டது. அதுமுதல், அரசின் திட்டங்களை அனைவரும் உணரும் வகையில் எழுத்தோவியமாக - கண்ணைக் கவரும் வண்ணங்களில் மாதம் இருமுறை தமிழிலும், மாதம் ஒருமுறை ஆங்கிலத்திலும் "தமிழரசு" ஏடு வெளிவந்தது.

01.01.1997 முதல், 'அரசு செய்தி' என்ற புதிய வகைச் சுவரொட்டி கிழமை தோறும் அரசின் திட்டங்களையும், பயன்களையும் விளக்கும் கருத்துக் காட்சிகளோடு கூடிய உரைவிளக்கம் தாங்கி வெளி வந்தது.

கால்நடைப் பாதுகாப்பு சிகிச்சை முகாம், கன்றுகள் பராமரிப்பு முறைகள், பசும் தீவனம், கோழிப்பண்ணை பராமரிப்பு, ஆடுகளின் நீலநாக்கு நோய் ஆகியவை குறித்தும் துண்டுப் பிரசுரங்கள், தமிழரசு அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டன.

வீட்டுக் காய்கறித் தோட்டம், நமக்கு நாமே, சமூக நலத்திட்டங்கள் போன்ற சிறப்பு வெளியீடுகள் தமிழரசு அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன. இலக்கிய மலர், குமரிமுனை அய்யன் திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவையொட்டி 'கோட்டம் முதல் குமரி வரை' ஆகிய சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன.

1998ஆம் ஆண்டில் தமிழரசு அச்சகத்தில் ரூ.36,84,702 செலவில் புதிய பலவண்ண அச்சு இயந்திரம் வாங்கப்பட்டு, தமிழரசு, அரசு செய்தி மற்றும் சிறப்பு வெளியீடுகள் மிக வேகமாக அச்சிடப்பட்டன. தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகத்திற்கு அனுப்புகைப் பணிகளுக்காக இரண்டு கணினிகள் ரூ.3.41 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன.

இணையம் மூலம் விளம்பரம்

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி, ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் ஆங்கிலம் மற்றும் தமிழில் கணினி இணையத்தில் இலவசமாக வெளியிடப்பட்டன. இதன்மூலம் உலகத்தில் எந்த மூலையில் உள்ள எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வசதி ஏற்படுத்தப்பட்டது.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998இன் கீழ் வெளியிடப்பட்ட ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 1998 அக்டோபர் மாதம் முதல், மாநில அளவிலும் மாவட்டங்களிலும், அமலுக்கு வந்தன. இதன் அடிப்படையில் மாவட்ட மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளிச்

செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன. இச்செய்திமலரில் ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பரங்களுடன், ஒப்பந்தப்புள்ளி மீது மேற்கொள்ளப்படும் முடிவுகளும் வெளியிடப்படுகின்றன.

நேயமிக்க நிதியுதவிகள் (1989–1991)

அய்யன் திருவள்ளுவர் உருவப்படத்தை வரைந்த ஓவியர் திரு. வேணுகோபால் சர்மா அவர்கள் நலிவுற்ற நிலையிலிருப்பதை அறிந்து, அவருக்கு ரூ.10,000 முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 24.05.1989 அன்று வழங்கினார் கலைஞர்.

ஏற்கெனவே கலைஞர், தம்முடைய குறளோவியம் நூல் வெளியீடு மூலம் கிடைத்த தொகையை வேணுகோபால் சர்மாவுக்கு அளித்துள்ளார்கள்.

ஓவியர் திரு. வேணுகோபால் சர்மா அவர்கள் இறந்த பின்னர், அவரது குடும்பத்தாரின் வேண்டுகோளையேற்று, அவர் வரைந்த ஓவியமான திருவள்ளுவர் உருவப்படத்தின் உரிமையைப் பெற்றுக் கொண்டு, அவரது குடும்பத்தாருக்கு அரசின் பரிவுத் தொகை ரூ.3 இலட்சத்தை, 1990 ஏப்ரலில் வழங்கினார் முதலமைச்சர் கலைஞர்.

பஞ்சாப் மாநிலத்தில், பாட்டியாலாவில் குருசேத்ரா பல்கலைக்கழக விடுதி வளாகத்தில் 1989 நவம்பர் 9 நள்ளிரவில் தீவிரவாதிகள் தாக்கியதனால், உயிரிழந்த மாணவர்களில் ஒருவரான திருச்சியைச் சேர்ந்த விசுவநாதன் குடும்பத்தாருக்கு ரூ.25 ஆயிரம் நிதியுதவியை கலைஞர் அரசு வழங்கியது.

சென்னை, வழக்கறிஞர்கள் சங்கக் கோரிக்கையை ஏற்று, வழக்கறிஞர் சங்க நூல் நிலையத்திற்குப் புத்தகங்கள் வாங்கிட ரூ.1 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது.

திண்டுக்கல்லில் 16.10.1990 அன்று ஒரு பட்டாசுக் கடையில் எதிர்பாராது ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக மரணம் எய்திய 20 நபர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் வீதம் ரூ. 2 இலட்சமும், பிற சேதங்களுக்காக ரூ.6 இலட்சமும் என மொத்தம் ரூ.8 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டது.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த எதுவை நத்தத்தைச் சேர்ந்த காட்டூர் கோட்டையில் நடைபெற்ற வெடி விபத்தில் உயிரிழந்த 3 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டது.

விழுப்புரத்தில் பட்டாசு வெடி தயாரிக்கும் குடிசை ஒன்றில் 14.10.1990 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் மரணம் எய்தியோர் குடும்பங்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா குறித்துச் சொற்பொழிவாற்றுவதற்குரிய ஓர் அறக்கட்டளையைப் புதுவைப் பல்கலைக்கழகத்தில் நிறுவிட ரூ.1 இலட்சம் மானியத் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கியது.

டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நூற்றாண்டு விழா அறக்கட்டளைப் பணிக்காக அரசின் சார்பில் ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டது.

கால்நடைகள் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்துக்கு நிதியுதவி

1989-1991 கலைஞர் ஆட்சிக் காலத்தில் கால்நடைகள் தாக்கி விவசாயிகள் மரணமடைந்தால், அவர்களது குடும்பத்துக்கு ரூ.10 ஆயிரம் உதவித்தொகை வழங்க ஆணையிடப்பட்டது.

1990 அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த பெருமழையால் சென்னையில் குடிசைகளை இழந்தவர்களுக்கு உதவி நிதியாக தலா 500 ரூபாயும், வெள்ள நீர் தேங்கிப் பாதிக்கப்பட்ட எல்லாக் குடிசைகளுக்கும் தலா 250 ரூபாயும் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டார். ரூ.2 கோடி வரை நிதியுதவி வழங்கப்பட்டது.

பெருமழையின் காரணமாக நீலகிரியில், "கெத்தே" என்னும் கிராமத்தில் அக்டோபர் 1990இல் ஏற்பட்ட நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.1.30 கோடி நிவாரண உதவி வழங்கப்பட்டது.

பத்திரிகையாளர் நலன்காக்கும் பணிகள் (1989–1991)

"தினமலர்" நாளேட்டில் தலைமை நிருபராகப் பணியாற்றி 1989இல் மறைந்த திரு. எம்.இராஜாராம் அவர்களின் குடும்பத்திற்கு ரூ.10,000, புகழ்பெற்ற பத்திரிகையாளர் மு. நமசிவாயம் 1989இல் மறைந்தபோது, அவரது குடும்பத்திற்கு ரூ.5,000 உதவித் தொகையும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டன.

செய்தியாளர்களுக்குக் குடியிருப்புகள் – வீட்டுமனைகள்

1989ஆம் ஆண்டு சென்னையில் திருவான்மியூரை ஒட்டியுள்ள கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கி 136 பத்திரிகையாளர்களுக்கு ரூ.1.50 இலட்சம் விலையுள்ள மனை ரூ.1.20 இலட்சத்திற்கு வழங்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் எஞ்சிய ரூ.30,000 அரசு மானியமாக அளிப்பதற்கு ரூ.20 இலட்சம் நல்கையாக வழங்கி ஆணையிடப்பட்டது.

1997ஆம் ஆண்டு மதுரை தல்லாகுளம் பகுதியில் 61 பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்புக்களுக்காக 3.7 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது.

திருச்சியில் 52 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு வசதி

2006-2011 ஆகிய ஆண்டுகளில், 22 மாவட்டங்களிலுள்ள 115 பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்புக்களை ஒதுக்கீடு செய்தும்; 12 பத்திரிகையாளர்களுக்குத்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடுகள் விற்பனைக்காக ஒதுக்கீடு செய்தும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் சிறப்பு ஒதுக்கீடு அடிப்படையில் அரசு வாடகை வீடு ஒதுக்கப்பட்டு வருகிறது. 2011 ஜனவரி வரை தமிழகம் முழுவதும் 315 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்பு ஒதுக்கப்பட்டது. சென்னையில் மட்டும் 115 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் வழங்கப்பட்டன.

2006 முதல் 2011 வரை 17 பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் விற்பனை செய்யப்பட்டன.

2006க்குப்பின் சலுகை விலையில் வீட்டு மனைகள்

திருச்சி மாவட்டத்தில் 57 பத்திரிகையாளர்களுக்கும்,
வேலூர் மாவட்டத்தில் 63 பத்திரிகையாளர்களுக்கும்,
திண்டுக்கல் மாவட்டத்தில் 43 பத்திரிகையாளர்களுக்கும்,
சேலம் மாவட்டத்தில் 34 பத்திரிகையாளர்களுக்கும்,
தஞ்சை மாவட்டத்தில் 40 பத்திரிகையாளர்களுக்கும்,
திருநெல்வேலி மாவட்டத்தில் 52 பத்திரிகையாளர்களுக்கும்

என மொத்தம் 658 பத்திரிகையாளர்களுக்குச் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டன.

பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி வழங்கும் திட்டத்தின்கீழ் 2006க்குப் பின் புகைப்படக்காரர்களுக்குச் சென்னை, வேலூர், சேலம், திண்டுக்கல், திருச்சி, நெல்லை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் 603 பேருக்குச் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டன.

2006–2011 கலைஞர் ஆட்சியில் பத்திரிகையாளர் நலன்
பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம்

01.03.1989 முதல் கலைஞர் ஆட்சியில் மாதம் 250 ரூபாயிலிருந்து ரூ.400ஆக உயர்த்தப்பட்ட பத்திரிகையாளர் ஓய்வூதியம் 01.06.1996இல் ரூ.1,000ஆகவும், 1999இல் ரூ.1,500 ஆகவும், 11.04.2000இல் ரூ.2,000 ஆகவும், உயர்த்தி வழங்கப்பட்டு 76 பத்திரிகையாளர்கள் மாதம் ரூ.2,000 வீதம் ஓய்வூதியம் பெற்றனர்.

இந்தப் பத்திரிகையாளர் ஓய்வூதியம் 3,000 ரூபாயிலிருந்து 01.09.2006 முதல் 4,000 ரூபாயாகவும், 16.07.2010 முதல் 5,000 ரூபாயாகவும் கலைஞர் அரசினால் மேலும் உயர்த்தப்பட்டது.

அ.தி.மு.க. அரசு 2001-2006இல் 13 பேருக்குத்தான் பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கியது.

ஆனால், 2006 முதல் 2011 வரை கலைஞர் அரசால் 36 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியது. பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுவதற்கு ஏதுவாக வருமான உச்சவரம்பு உயர்த்தப்பட்டதுடன் மேலும் சில விதிகள் 2010ஆம் ஆண்டில் தளர்த்தப்பட்டது.

பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளர்கள் இறந்துவிட்டால் அவர்களின் துணைவியாருக்கு 1989இல் கலைஞர் அவர்களால் குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.500 வாழ்நாள் முழுவதும் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, 25 பத்திரிகையாளர் குடும்பத்தினர் ஓய்வூதியம் பெற்றனர். அந்த ஓய்வூதியம் மாதம் 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக 10.09.2006இல் உயர்த்தப்பட்டது. 01.04.2010 முதல் 2,500 ரூபாயாக மேலும் உயர்த்தி வழங்கப்பட்டது.

பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம் 1996–2001 கலைஞர் ஆட்சியில்

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள். பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர்கள் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்கீழ் நிதி வழங்குவதற்கு முதன்முதலாக கலைஞர் ஆட்சியில் 20.03.1997 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.25 ஆயிரம் வீதம் உதவி நிதி வழங்க வகை செய்யப்பட்டது. இத்திட்டம், 05.03.1997 முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட, அதற்குச் சில வாரங்களுக்கு முன் மறைந்த பழம்பெரும் பத்திரிகையாளர் வேம்புசாமி அவர்களது குடும்பத்திற்கு, சிறப்பு நேர்வாக ரூ.25 ஆயிரம் உதவிநிதி வழங்கப்பட்டது. 1999இல் இத்தொகை ரூ.40 ஆயிரமாகவும், 01.04.2000 முதல் ரூ.50 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டது. 1997 முதல் 2001 வரை 16 பத்திரிகையாளர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

2006–2011 கலைஞர் ஆட்சியில்

இத்திட்டத்தில் 20 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.2 இலட்சம்; 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.1.50 இலட்சம்; 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.1 இலட்சம்; 5 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ரூ.50 ஆயிரம்; குடும்ப நல உதவிநிதித் திட்டத்தின்கீழ் வழங்க 01.09.2006இல் ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டது.

கலைஞர் அரசு 2006-2010 ஐந்து ஆண்டுகளில் 21 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.35.25 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் நிதி உதவி பெறுவதற்கான விதிகளும் தளர்த்தப்பட்டன.

பத்திரிகையாளர் குடும்ப நிதியுதவி பெற்றவர்கள்

ஆனந்த விகடன் கல்கி. தினமணிக் கதிர், குங்குமம், சாவி ஆகிய இதழ்களில் பணியாற்றி 09.02.2001 அன்று மறைந்த மூத்த பத்திரிகையாளர் சாவி எனும் சா.விசுவநாதன் அவர்களது துணைவியாருக்குச் சிறப்பு நிகழ்வாக ரூ.50,000 அனுமதித்து 03.08.2006 அன்றும்,

'வண்ணத் திரை' வார இதழில் பணியாற்றி 06.11.2001 அன்று மறைந்த திரு. தி.தேசிங்கு அவர்களின் துணைவியார் திருமதி தே. ஆர்த்தி அவர்களுக்கு ரூ.2 இலட்சம் அனுமதித்தும்,

மாலை முரசு மதுரை பதிப்பு நாளிதழில் பணியாற்றி மறைந்த பத்திரிகையாளர் எம். இன்பராஜ் அவர்களின் துணைவியார் திருமதி இ. வேல்தங்கம் அவர்களுக்கு ரூ.2 இலட்சம் அனுமதித்து 04.08.2006 அன்றும்,

மதுரை மணி மற்றும் குமரி முரசு நாளிதழில் பணியாற்றி மறைந்த பத்திரிகையாளர் எஸ்.தாமோதரன் அவர்களின் துணைவியார் திருமதி ஆர். புனிதா அவர்களுக்கு ரூ.2 இலட்சம் அனுமதித்து 04.08.2006 அன்றும் ஆணையிடப்பட்டன.

தினகரன் திருச்சி பதிப்பு நாளிதழில் பணியாற்றி 13.04.2009 அன்று மறைந்த எம். சுப்புக்குட்டி அவர்களின் துணைவியார் திருமதி சு.சுப்புலெட்சுமி அவர்களுக்கு ரூ.50,000 அனுமதித்து 07.08.2006 அன்றும் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ் ஆணை வெளியிடப்பட்டது.

சென்னை நக்கீரன் இதழ் முதன்மைச் செய்தியாளர் எம்.என். உதயகுமார் 14.01.2004இல் மறைந்தார். அவரது மனைவி திருமதி உ.வள்ளிக்கு ரூ.1 இலட்சம் குடும்ப நல நிதி அனுமதித்து 14.02.2007 அன்று ஆணையிடப்பட்டது.

மதுரை-மாலைமுரசு புகைப்படக்காரர் திரு. எ.கண்ணன். 20 ஆண்டு பணியாற்றி 02.06.2005 இல் மறைந்ததைத் தொடர்ந்து அவரது மனைவி முனீஸ்வரிக்கு ரூ.2 இலட்சம் குடும்ப நல நிதி அனுமதித்து 16.02.2007 அன்று ஆணையிடப்பட்டது.

மதுரை-மாலை முரசு மறைந்த பத்திரிகையாளர் பி. செல்வராஜ் அவர்களின் துணைவியார் திருமதி எஸ். செல்லம்மாள் அவர்களுக்கு ரூ.2 இலட்சம் அனுமதித்து 14.03.2007 அன்று ஆணையிடப்பட்டது.

சென்னை-"தினகரன்" இதழில் 26 ஆண்டுகள் பணிபுரிந்து 13.12.2006 அன்று மறைந்த பத்திரிகையாளர் து.பால்ராஜ் என்பவரின் துணைவியார் திருமதி காஞ்சனமாலா அவர்களுக்கு ரூ.2 இலட்சம்;

திருநெல்வேலி மக்கள் செய்தி இதழில் 26 ஆண்டுகள் பணிபுரிந்து 20.03.2001 அன்று மறைந்த பத்திரிகையாளர் எஸ். மாரியப்பன் அவர்களின் துணைவியார் திருமதி எம். தனலெட்சுமி அவர்களுக்கு ரூ.2 இலட்சம் குடும்ப நல நிதி;

வேலூர்- "மணிச்சுடர்" இதழில், 11 ஆண்டுகள் பணிபுரிந்து 12.04.2004 அன்று மறைந்த பத்திரிகையாளர் சையது அகமது அவர்களின் துணைவியார் திருமதி பிபி.ஜான் அவர்களுக்கு குடும்ப நல நிதி ரூ.1 இலட்சம்;

சேலம் - "மாலைமலர்", "தினத்தந்தி" இதழ்களில் 23 ஆண்டுகள் பணிபுரிந்து 05.01.2007 அன்று மறைந்த பத்திரிகையாளர் ஏ. ஜக்கையன் அவர்களின் துணைவியார் திருமதி ஜெ. அந்தோணியம்மாள் அவர்களுக்கு ரூ.2 இலட்சம்;

-என நான்கு குடும்பங்களுக்கும் மொத்தம் ரூ.7 இலட்சம் குடும்ப நல நிதியுதவி 18.05.2007 அன்று வழங்கப்பட்டது.

மதுரை தினகரன் அலுவலகத்தில் பணிபுரிந்து 09.05.2007 அன்று உயிரிழந்த கோபி, வினோத், முத்துராமலிங்கம் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

"மக்கள் குரல்" பத்திரிகையாளர் மறைந்த எம்.இராம மூர்த்தி அவர்களின் துணைவியார் திருமதி ஆர்.மீரா அவர்களுக்கு 2007 ஆகஸ்டு திங்களில் ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டது.

தினமணி நாளிதழில் கேலிச் சித்திரம் வரைபவராகப் பணிபுரிந்த உதயகுமார் என்பவரின் தாயார் திருமதி பி. சாரதா அவர்களுக்கு 2009 பிப்ரவரியில் ரூ.25,000 வழங்கப்பட்டது.

ஜனசக்தி, மாலைச் சுடர், விஜய் தொலைக்காட்சி, ராஜ் தொலைக்காட்சி ஆகியவற்றில் பணிபுரிந்த பி. கலைச்செல்வன் அவர்களின் துணைவியார் திருமதி க. பவானி அவர்களுக்கு 2009 டிசம்பரில் ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டது.

தினத்தந்தி நாளிதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய ஆர்.கங்காதரன் அவர்களின் துணைவியார் திருமதி க. ரோகிணி அவர்களுக்கு 2010 மார்ச் திங்களில் ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

தினமணி நாளிதழின் தலைமைச் செய்தியாளராகப் பணியாற்றிய திரு. வீர ஜீவ பிரபாகரன் அவர்களின் துணைவியார் திருமதி இரா. பரமேஸ்வரி அவர்களுக்கு ரூ.1.50 இலட்சம் 2010 ஏப்ரலில் வழங்கப்பட்டது.

தினமலர் நாளிதழின் உதவியாசிரியராகப் பணியாற்றிய திரு. சி.நாகேந்திரப் பிள்ளை அவர்களின் துணைவியார் திருமதி த. பகவதீஸ்வரி அவர்களுக்கு 2010 ஏப்ரலில் ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டது.

மராத்திய முரசு நாளிதழின் நிருபர் எஸ்.ஜெபராஜ் அவர்களின் துணைவியார் திருமதி சுசீலா அவர்களுக்கு 2010 ஏப்ரலில் ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டது.

டாக்டர் நமது எம்.ஜி.ஆர். நாளிதழின் கடலூர் மாவட்டச் செய்தியாளர் பி.இராஜசேகரன் அவர்களின் துணைவியார் திருமதி ஆர். சுமதி அவர்களுக்கு 2010 ஏப்ரலில் ரூ.1.50 இலட்சம் வழங்கப்பட்டது.

தி. முசல்மான் நாளிதழின் ஆசிரியர் சையது பகல்லா அவர்களின் துணைவியார் திருமதி சம்தானி பேகம் அவர்களுக்கு 2010 ஜூன் திங்களில் ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டது.

பத்திரிகையாளர் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி

தினபூமி நாளிதழ் புகைப்படக்காரர் திரு. ஜான் சுரேஷ்குமார் மருத்துவ செலவிற்கு ரூ.1.50 இலட்சம் நிதியுதவி வழங்க 28.03.2007 அன்று ஆணையிடப்பட்டு, தொகை 18.05.2007 அன்று வழங்கப்பட்டது.

மூத்த பத்திரிகையாளர் குமுதம் பால்யுவின் மருத்துவ உதவிக்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 நிதியுதவி வழங்கப்பட்டது.

பத்திரிகையாளர் நல நிதியம்

14.01.2008 அன்று வெளியிடப்பட்ட அரசாணை மூலம், புதிய திட்டமாக உருவாக்கப்பட்ட பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டது. இந்த வைப்பீட்டுத் தொகைக்கு மாதம் ஒன்றிற்கு வட்டியாக ரூ.83,333 கிடைக்கும். இந்த வட்டித் தொகையிலிருந்து, கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதி உதவியாக ஒருவருக்கு ரூ.50,000த்திற்கு மிகாமல் நிதி உதவி அளிக்கப்பட்டது.

பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வட்டி மூலம் தினகரன் நாளிதழில் புகைப்படப் பிடிப்பாளராகப் பணிபுரியும் திரு. க.சிவகுமார் அவர்களுக்கு இதய அறுவை சிகிச்சைக்காக ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

"உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத்திட்டத்தில்" ரூ.72,000க்குள் ஆண்டு வருமானம் பெறும் பத்திரிகையாளர்களும் சேர்ந்துகொள்ள அனுமதிக்கப்பட்டு 474 பத்திரிகையாளர்கள் சேர்ந்தனர்.



பத்திரிகையாளர் அறைக்கு இணையதள வசதி

தலைமைச் செயலகத்திலுள்ள பத்திரிகையாளர் அறையிலிருந்து ஒரே நேரத்தில் 20 பத்திரிகையாளர்கள் தங்கள் நிறுவனங்களுக்கு செய்திகளை / புகைப்படங்களை மின் அஞ்சல் அனுப்புவதற்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி செய்து தரப்பட்டுள்ளது. இவ்வசதியை பயன்படுத்துவதன் மூலம் செய்திகளும், புகைப்படங்களும் உரிய நேரத்திற்குள் விரைவாக நிறுவனங்களுக்குச் சென்றடைந்து பத்திரிகைகளில் வெளிவருவதற்கு வழிவகுக்கின்றது.

மடிக்கணினிகளுடன் புகைப்படப் பிரிவு பத்திரிகைகளுக்கு உடனுக்குடன் படங்கள்

புகைப்படப் பிரிவில் தொடக்க காலங்களில் எடுக்கப்பட்டு வந்த கருப்பு - வெள்ளை புகைப்படங்கள், இப்பிரிவிலேயே பிரதிகள் எடுக்கப்பட்டு, நாளிதழ்களுக்கும், காலமுறை இதழ்களுக்கும் இரு சக்கர ஊர்தி பணியாளர் மூலம் அனுப்பப்பட்டு வந்தது. மின் ஆளுமை அறிமுகத்திற்குப் பின்னர், தற்போது புதிய வகை டிஜிட்டல் கேமிராக்கள் மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவைகள் மின் அஞ்சல் மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 200 ஊடகங்களுக்குத் தலைமையிடத்திலிருந்து ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகிறது. அத்துடன் முக்கிய விழாக்கள் நடைபெறும்

இடத்திலிருந்தே எடுக்கப்பட்ட புகைப்படங்களை உடனுக்குடன் அனுப்பும் வகையில், இணையதள வசதியுடன் கூடிய 3 புதிய மடிக்கணினிகள் வாங்கப்பட்டு, நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திலிருந்தே புகைப்படங்கள் ஊடகங்களுக்கு அனுப்பப்படும் முறை ஆரம்பமானது.

நவீன பயன்பாட்டிற்கு ஏற்றவாறு, மின் ஆளுமையின் உதவியோடு, நிகழ்ச்சிகளில் எடுக்கப்படும் படங்கள் அனைத்தும் குறுந்தகட்டில் பதிவு செய்யப்பட்டு அவைகள் எதிர்காலப் பயன்பாட்டிற்கு ஏதுவாக, பாதுகாப்பாக வைக்கப்படும் நிலை உருவாகியது.

செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டை

செய்தியாளர்களுக்கு அரசு அமைத்துள்ள "பத்திரிகையாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஆண்டுதோறும் நாளிதழ்கள் / தொலைக்காட்சிகள் / செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டை (Accreditation Card) வழங்கப்பட்டு வருகிறது. 2010ஆம் ஆண்டில் சென்னையில் 597 பத்திரிகையாளர்களுக்கும், மற்ற மாவட்டங்களில் 89 பத்திரிகையாளர்களுக்கும் செய்தியாளர் அங்கீகார அட்டை வழங்கப்பட்டது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் 718 பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டைகள் (Identity Card) வழங்கப்பட்டன. 2011ஆம் ஆண்டில் மாவட்டத் தலைநகரங்களில் 1,369 பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை

அங்கீகார அட்டை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அடையாள அட்டை வழங்கப் பெற்ற பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்கு வசதியாக, அரசுப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும்போது இலவசமாகப் பயணிப்பதற்கு ஏதுவாக, ஓர் ஆண்டு காலத்திற்குச் செல்லத்தக்க வகையில் இலவசப் பேருந்துப் பயண அட்டை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு, சென்னையில் அங்கீகார அட்டை பெற்ற 300 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் 1,434 பத்திரிகையாளர்களுக்கும், ஆக மொத்தம் 1,734 இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டன. இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கும் வகையில் ஓராண்டுக்கு ஏறத்தாழ ரூ.55 இலட்சம் தொகையைப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு இத்துறை ஈடு செய்கிறது. இவ்வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 1999-2000 முதல் 2007-2008 முடிய, இலவசப் பயண அட்டை வழங்கிய செலவினம் ரூ.402.47 இலட்சத்தினை இத்துறை 2009-2010ஆம் நிதியாண்டில் ஈடுசெய்துள்ளது.

2009-2010ஆம் ஆண்டில் 1,325 பத்திரிகையாளர்களுக்கும், 2010- 2011இல் 1,669 பத்திரிகையாளர்களுக்கும் இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டது.

காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கும் அடையாள அட்டைகள்

காலமுறை இதழ்களுக்குச் செய்தியாளர் அட்டை வழங்க அதற்காக அமைக்கப்பட்டுள்ள செய்தியாளர் அட்டை பரிந்துரைக்குழுவின் பரிந்துரைக்கேற்ப ஒரு இதழுக்கு இரண்டு செய்தியாளர், ஒரு புகைப்படக்காரருக்குச் செய்தியாளர் அட்டை என 317 செய்தியாளர்கள் புகைப்படக்காரர்களுக்குச் செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டது.

சென்னை நிருபர்கள் சங்கத்திற்கு புதிய கட்டடம்

சென்னை நிருபர்கள் சங்கத்திற்கு ரூ. 39 இலட்சம் செலவில் ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டது. பின், தலைமைச் செயலக வளாகமாக மாற்றப்பட்டதால், சிந்தாதிரிப்பேட்டையில் இடம் ஒதுக்கீடு செய்து நிருபர்கள் சங்கம் கட்டடம் கட்டித் தரப்பட்டது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை (2006–2011)

தனிநபர் பெயர் மாற்ற அறிவிக்கை ரூ.415 கட்டணத்தில் ஆங்கிலத்தில் மட்டும் அரசிதழில் பிரசுரிக்கப்பட்டு வந்தது. தூய தமிழில் பெயர் மாற்றம் செய்து அரசிதழில் பிரசுரம் செய்ய ஆணையிடப்பட்டு டிசம்பர் 2006 முதல் கட்டணம் ரூ.115 வசூலிக்கப்பட்டது.

இத்துறையின் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த சொந்த அலுவலுக்கான ஈட்டாவிடுப்புச் சலுகை நவம்பர் 2006 முதல் வழங்கப்பட்டது.

05.12.2006இல் ஆணையிடப்பட்டு, அரசு அச்சகங்களில் புகுத்தப்பட்டு வரும் நவீன இயந்திரங்களை இயக்கும் வகையில் 443 பணியிடங்கள் அரசுக்குச் சரண் செய்யப்பட்டு; எவ்வித கூடுதல் செலவினமும் இன்றி 19 வகையான பதவிகளில் 333 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

08.12.2006 அன்று மதுரை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகம் புதியதாகச் செயல்பட 49 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

15.11.2006இல் ஆணையிடப்பட்டு, அனைத்து அச்சகங்களும் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டன.

பணி நியமனம்

கண்பார்வையற்ற 38 பேர் தகுதியின் அடிப்படையில், எழுது பொருள் அச்சுத் துறையில் புத்தகம் கட்டுநர்களாகவும், ஒருவர் தொலைபேசி இயக்குபவராகவும் 2007-2008ஆம் ஆண்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான தொகுதியில் நியமனம் செய்யப்பட்டனர்.

இத்துறையில் 17.06.2010 அன்று 60 புத்தகம் கட்டுநர்கள், வாயிற் மேற்பார்வையாளர் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் மூலமாகவும், 20 பேருக்குக் கருணை அடிப்படையிலும் நியமனம் வழங்கப்பட்டது.

22.10.2010இன்படி பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் 33 பேருக்குப் புத்தகம் கட்டுநர் பதவியில் பணி நியமனம் வழங்க ஆணையிடப்பட்டது.

இத்துறைக்கான வலைதளம்

அரசுத் துறைகளின் அறிவிப்புகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் நொடிப்பு விவரங்கள் குறித்து அறிவிப்புகள், பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றம் தொடர்பான அறிவிப்புகள் இடம்பெற்றுள்ள தமிழ்நாடு அரசு வாராந்திர அரசிதழ்கள், தமிழ்நாடு அரசுச் சிறப்பிதழ்கள் 20.11.2008 முதல் இத்துறைக்கு எனத் தொடங்கப்பட்டுள்ள வலைதளத்திலும் http://www/ tn.gov.in/stationery printing வெளியிடப்பட்டன.

பணியாளர் நலன்

அரசு அச்சகம் தொடங்கப்பட்டு 175 ஆண்டுகள் நிறைவு பெற்றதை நினைவுகூரும் வகையில் அரசு அச்சகங்களில் பணிபுரியும் ஒவ்வொரு பணியாளருக்கும் நினைவுப் பரிசாக ரூ.500 மதிப்புள்ள அஞ்சலக சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டது.

தொழிலாளர்கள், பணியாளர்கள் உடல்நலம் பேணும்பொருட்டு எழுதுபொருள் அச்சுத் துறையைச் சார்ந்த அனைத்து அச்சகங்களுக்கும் விளையாட்டுப் பொருட்கள் வாங்கிட ரூ.45,000 ஆண்டுதோறும் வழங்கப்பட்டதை ரூ.1,00,000 என உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அரசு அச்சகத் தொழிலாளர்களுக்கு இரவுப் படி ரூ.7 என்பதை இரு மடங்காக்கி ரூ.14 என வழங்கப்பட்டது.

அரசு அச்சக ஆண், பெண் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்று ஜோடி சீருடைகள் வழங்கப்பட்டதனை சீருடையின் நீளம் மற்றும் அகலத்தினை அதிகரித்து இரண்டாண்டுக்கு ஒரு முறை நான்கு ஜோடி சீருடைகள் வழங்கப்பட்டன. சீருடைக்கான தையல் கூலியும் உயர்த்தி வழங்கப்பட்டது.

திட்டங்கள்

அரசு மைய அச்சகத்தின் இரகசியப் பிரிவில் இரகசியம் பாதுகாக்கும் வகையில் சன்னல்கள் மற்றும் கதவுகள் மூடப்படுவதால் உள்ளே உருவாகும். வெப்பக்காற்றினை வெளியேற்ற வளிப் போக்கி விசிறிகள் ரூ.3 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன.

விருத்தாசலம் கிளை அச்சகத்தில் கணினி வழி திட்டமிட்டு இயக்கப்படும் நவீன அச்சு இயந்திரம் ரூ.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் நடவடிக்கை துவங்கப்பட்டது.

அரசு அச்சகங்களை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் அரசு மைய அச்சகம், சென்னை-79க்கு நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவிட ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டன.

2006-2007ஆம் ஆண்டில் ரூ.193.15 இலட்சம் செலவில் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களுக்கு, கணினி மற்றும் உபகரணங்கள், வெப் ஆப்செட் இயந்திரங்கள், காகிதம் வெட்டு இயந்திரம், தீயணைப்பான்கள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டன.

2007-2008ஆம் ஆண்டில் ரூ.79.60 இலட்சம் செலவில் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களுக்கு, கணினி மற்றும் உபகரணங்கள், ஆப்செட் அச்சு இயந்திரங்கள். ஒளிநகலி மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டன.

2008-2009ஆம் ஆண்டில் ரூ.80 இலட்சம் செலவில் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களுக்கு, கூண்டு உந்துகள், ஒளி நகலி, கணினி மற்றும் உபகரணங்கள், மின்னணு எடையிடும் இயந்திரம், மைக்ரோ பர்ரேட்டிங் மற்றும் ஸ்பைரல் பைண்டிங் இயந்திரம், ஜெனரேட்டர், காகிதம் வெட்டும் இயந்திரம், பர்பெக்ட் பைண்டிங் இயந்திரம் ஆகியவை கொள்முதல் செய்து நிறுவப்பட்டன.

2009-2010ஆம் ஆண்டில் ரூ.24.64 இலட்சம் செலவில் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களுக்கு, கூண்டு உந்து, கணினி மற்றும் உபகரணங்கள், ஒளி நகலி மற்றும் தீயணைப்பான்கள் ஆகியவை கொள்முதல் செய்து நிறுவப்பட்டன.

2010-2011ஆம் ஆண்டில் ரூ.95.65 இலட்சம் செலவில் இயக்ககம் மற்றும் அரசு மைய அச்சகம் உள்ளிட்ட கிளை அச்சகங்களுக்கு, கணினி மற்றும் உபகரணங்கள், அனைத்து அச்சகங்களுக்கும் வருகையைத் துல்லியமாகக் கணிக்க கைரேகைப் பதிவு செய்யக்கூடிய இயந்திரம், உறை வெட்டும் மற்றும் பசை ஒட்டும் இயந்திரம், ஒளி நகலி, அரசு மைய கலை அச்சகத்தின் பாதுகாப்புக்கான கண்காணிப்பு கேமிரா மற்றும் அரசு மைய அச்சகம், அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு எடை தூக்கும் இயந்திரம் ஆகியவற்றிற்கான அரசாணைகள் பெறப்பட்டு கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலேயே முதலாவதாக– மாநில மனித உரிமைகள் ஆணையம்

மனித உரிமைகள் மீறல் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் எளிதாகவும், விரைவாகவும் நிவாரணம் பெறும் பொருட்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் 17.04.1997 அன்று ஏற்படுத்தப்பட்டது.

சாதிக் கலவரங்களைத் தடுக்க அமைதிக்குழுக்கள்

சாதிக்கலவரங்கள் ஏற்படாவண்ணம் தடுக்கும் எண்ணத்தோடு 15.05.1997 அன்று அரசால் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் ஊராட்சி அளவிலும் அமைதிக் குழுக்களை அமைத்து சமுதாய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு அமைதிக் கூட்டங்களை நடத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.



சாதி / மதக் கலவரங்களில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு 01.01.1997 முதல் நிவாரணத் தொகை ரூ.2 இலட்சம் வீதம் வழங்க 22.05.1998 அன்று கலைஞர் அரசு ஆணை பிறப்பித்தது.

நீதியரசர் மோகன் தலைமையில் உயர்மட்டக்குழு

தமிழ்நாட்டில் குறிப்பாக தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களுக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறியவும், இதுபோன்ற வகுப்புக் கலவரங்கள் உருவாகாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிந்துரைக்கவும், தீண்டாமைச் சட்டம் செம்மையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்டறியவும், உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. எஸ்.மோகன் அவர்கள் தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது. அக்குழு அளித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளில் பெரும்பாலானவை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

இராஜாஜி மண்டபத்தில் அனைத்துக் கட்சி சமுதாயத் தலைவர்கள் கூட்டம்

சாதிக் கலவரங்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் அரசால் அனைத்துக் கட்சி, சமுதாய தலைவர்கள் கூட்டம் 14.05.1997 மற்றும் 05.06.1997 ஆகிய இரு தினங்களிலும் சென்னையில் இராஜாஜி மண்டபத்தில் கூட்டப்பட்டது.

சமத்துவ சமுதாய மறுமலர்ச்சியினை ஏற்படுத்த அரசாங்கத்தில் தனியாக "சமூக சீர்திருத்தத் துறை" என்ற ஒரு துறை உருவாக்கப்பட்டது.

கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்

கோவையில் முஸ்லீம்கள் மற்றும் இந்துக்கள் மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டு மதத் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்ட திரு. கோட்டை அமீர் அவர்களின் பெயரால் "கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்" என்ற பதக்கம் வழங்க 16.06.2000 அன்று அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 26.01.2001 அன்று குடியரசு தின விழாவில் முதன்முதலாக தஞ்சை மாவட்டம், சுல்தான் மைதீன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

கார்கில் இராணுவ வீரர் நிதி

கார்கில் போராட்டத்தின்போது மரணமடையும் தமிழ்நாட்டைச் சார்ந்த வீரர்களின் குடும்ப நலனுக்காக "கார்கில் இராணுவ வீரர் நிதி" என்ற நிதியை அரசு ஏற்படுத்தியது. இந்நிதியில் 18.10.2000 வரை பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக ரூபாய் ஐம்பத்தொன்பது கோடியே இரண்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து நூற்று அறுபத்து நான்கு மற்றும் ஒன்பது பைசா மட்டும் பெறப்பட்டுள்ளது.

இந்நிதியிலிருந்து ரூ.50 கோடி தேசிய பாதுகாப்பு நிதிக்கு பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் அளிக்கப்பட்டது. போராட்டத்தின்போது மரணமடைந்த இராணுவ வீரர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும், கருணைத் தொகை ரூ.5 இலட்சம், உயர் வருவாய் குடியிருப்பு, குடும்பத்தில் ஒருவருக்குக் கருணை அடிப்படையில் வேலை, உயிரிழந்த வீரரின் குழந்தைகளுக்குத் தொழில் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு என கார்கில் போராட்டத்தில் உயிரிழந்த 19 வீரர்களின் குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

ஒரிசா புயல் நிவாரண நிதி

கடும் புயலினால் பாதிக்கப்பட்ட ஒரிசா மக்களுக்கு உடனடியாக உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.3 கோடி மதிப்புள்ள வேட்டி, சேலைகள், ரூ.1 கோடி மதிப்புள்ள பால் பவுடர், ரூ.44 இலட்சம் மதிப்புள்ள உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள அவல், வெல்லம் ஆகியவைகள் தமிழ்நாடு அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டன.

முதலமைச்சர் நிவாரண நிதியுதவி

13.05.1996க்குப்பின் (19.10.2000 வரை) நான்கரை ஆண்டு காலத்தில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 30,173 பேருக்கு, நிவாரணத் தொகை ரூ.41.89 கோடி வழங்கப்பட்டது.

நன்றி: கலைஞர் செதுக்கிய தமிழகம்
என்னும் நூலிலிருந்து....



இன்டர்நெட்டில் கலைஞரின் இலக்கியப் பக்கம்

'இன்டர்நெட்' தொழில்நுட்பத்தைக் கொண்டு, தமிழில் அனைத்துலக ரீதியில் மின் அஞ்சலிலும் (e-mail), World Wide Web-லும் செய்திப் பரிமாற்றம் நிகழ்வதை, 1995 அக்டோபரில் சாத்தியமாக்கிய சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் இன்டர்நெட் ஆய்வு மேம்பாட்டு நிறுவனம், தற்போது முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் இலக்கியப் பக்கம் அரங்கேறுவதற்கு ஆதரவு கொடுக்கிறது.

சிங்கப்பூரின் மாண்புமிகு அதிபர் திரு. ஓங் தெங் சியோங்-ஆங்கில, சீன, மலாய், தமிழ்க் கவிதைகள் இன்டர்நெட்டில் 1995 அக்டோபரில் அரங்கேற்றி (http://www.irdu/nus.sg/poem) இன்டர்நெட் தொழில்நுட்பத்தைத் தமிழில் தொடங்கிவைத்தார். அதன் மூலம் இன்டர்நெட்டில் இடம்பெறும் முதல் இந்திய மொழி என்ற தகுதியைத் தமிழ் பெற்றது.

தொடர்ந்து, சங்க இலக்கியம், தமிழ்க் கணினி ஆய்வு தமிழ் கற்றல்-கற்பித்தல் தொடர்பான ஒரு பக்கத்தை 1996ஆம் ஆண்டு பிப்ரவரியில் இந்நிறுவனம் அறிமுகம் செய்தது. PC, Mac, Unix. ஆகிய மூன்று கணினிகளிலும் தமிழ்ச் செய்தி பரிமாற்றம் நிகழ்வதை முதன்முதலில் சாத்தியமாக்கிய சிங்கப்பூரின் இன்டர்நெட் ஆய்வு மேம்பாட்டு நிறுவனம் (Internet Re-search & Development Unit/National University of Singapore) ஒரு சிறந்த இலக்கியவாதியின் பக்கம் உருவாகத் துணை நிற்பதில் பெருமை கொள்கிறது.

அரசியல் கலப்பில்லாத இந்தப் பக்கத்தில் கலைஞர் மு. கருணாநிதியின் இலக்கியப் படைப்புகள் மட்டுமே இடம் பெறும். இந்தப் பக்கத்தை http://www.irdu.nus.sg/_kalaimk என்ற இன்டர்நெட் முகவரியில் காணலாம்.

கலைஞரின் வாழ்க்கை வரலாறு, இலக்கியம் சார்ந்த அவருடைய விமர்சனப் படைப்புகள், நான்கு வாரங்களுக்கு ஒரு முறை கலைஞர் எழுதும் புதிய படைப்பு, அவருடைய படைப்புகள் பற்றிய கருத்துரைகள் போன்ற பல்வேறு கூறுகள் இவ்விலக்கியப் பக்கத்தை அலங்கரிக்கும்.



தொடக்கமாக அவர் எழுதிய 'குறளோவிய'த்தின் முதல் அதிகாரம், சங்கத் தமிழின் முதல் அதிகாரம், குறளோவியத்திற்குக் கலைஞர் எழுதிய முன்னுரை ஆகியவை இடம்பெற்றுள்ளன. இனி ஒவ்வொரு வாரமும் இந்தப் பக்கத்தில் கலைஞரின் இலக்கிய விமர்சனப் படைப்புகள் இடம்பெறும்.

இன்டர்நெட்டில் தமிழ்த் தொழில்நுட்பத்தை 1995 அக்டோபரில் சாத்தியமாக்கிய திரு. நா.கோவிந்தசாமி, இப்பக்கத்தின் பொறுப்பாளராக உள்ளார். 'குமுதம்' வார இதழின் பொறுப்பாசிரியர்-எழுத்தாளர் மாலன்ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார்.



போலாரிஸ் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு. அருண்ஜெயின் 2000, ஏப்ரல் 20ஆம் தேதி எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் "30 ஆண்டுகள் நான் டெல்லியில் வாழ்ந்துவிட்டேன். தமிழ்நாட்டில் நிலவும் சூழ்நிலைகளும், பண்பாட்டு மதிப்புகளும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. அவற்றின் அடிப்படையில் என்னுடைய நிர்வாகக் குழுவுடன் சென்னையில் போலாரிஸ் நிறுவனத்தை அமைத்திட முடிவு செய்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்.

பிசினஸ் ஸ்டாண்டர்டு பத்திரிகை "10 மாநகரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதில் சென்னை நகரம் முதலிடத்தைப் பெற்றுள்ளது" என்று பாராட்டியுள்ளது.



பிப்ரவரி 5-11, 2000 நாளிட்ட "Economic and Political weekly" பத்திரிகையில் "Raising global competitiveness. Tamil Nadu's IT Industry" என்ற தலைப்பில் "தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பத் தொழில் சமீபகாலங்களில் மிக நேர்த்தியாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அதன் அண்டை மாநிலங்களைவிட வேகமாக முன்னேறி வருகிறது. இந்தியாவிலுள்ள மென்பொருள் வல்லுநர்களுள் மிக அதிக எண்ணிக்கையிலான வல்லுநர்கள் (Software Professionals) இன்று தமிழ்நாட்டில் உள்ளனர்.

மல்டிமீடியா மென்பொருள் வளர்ச்சியிலும் (Multimedia Software Applications) மிக முக்கியமான இடமாக சென்னை வளர்ந்து வருகிறது". என்று கூறப்பட்டுள்ளது.

"எகனாமிக் டைம்ஸ்" ஆங்கில நாளேடு 07.02.2000 இதழில், "சென்னை நகரம் தேவையான மனிதவளத்துடன், உரிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத்

திகழ்வதால், உலகின் மிகப்பெரிய மென் பொருள் நிறுவனங்களின் முக்கிய தளமாக விளங்கி வருகிறது" என்று குறிப்பிட்டுள்ளது.

கம்ப்யூட்டர் வார இதழான "தி டிக்யூ விக்" 06.03.2000 இதழில், "மத்திய நிதியமைச்சர் சின்கா தமது பட்ஜெட் உரையில் குறிப்பிடத் தவறிவிட்டாலும்கூட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறிநின்று சென்னையில் திகழ்ந்துவரும் அமைதியான புரட்சியைப் பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லாமலேயே, ஓசையில்லாமல் ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னை தான்" என்று செய்தி வெளியிட்டு தமிழ்நாடு அரசுக்கும், சென்னை மாநகருக்கும் பெருமை சேர்த்துள்ளது.

தினமணி 12.12.2000 நாளிதழில் வெளியிட்ட தலையங்கத்தில் "பழைய மாமல்லபுரம் சாலை தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலையாக உருவெடுக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை என எதிர்பார்க்கலாம். குறைந்த செலவில் மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட மனிதவளம் ஆகியவற்றை தமிழ்நாடு அளிக்கிறது.

"தகவல் தொழில்நுட்ப அறிவுத்திறனின் ஊற்றுக்கண்ணாகத் தமிழ்நாடு திகழ்கிறது" என விப்ரோ மென்பொருள் நிறுவனத்தின் தலைவர் பிரேம்ஜி வர்ணித்திருப்பது மிகவும் பொருத்தமே. ஆக, கணினி மென்பொருள் உற்பத்தித் தொழிலில் முதலீடு செய்வதற்கு ஏற்ற இடமாகத் தமிழ்நாடு கருதப்படுவதில் வியப்பில்லை" என்று பாராட்டியுள்ளது.

கலைஞர் 100
1924 - 2024

கலைஞர் நூற்றாண்டு
நிறைவு மலர்




பார்வையில்.....
மணி
தமிழக அரசின்
அரிசி வழங்கும் வி
2.6.89.
கலைஞர்
துணைநிதி மந்திரிசபை
பதவி ஏற்றது
சேர்ந்த
லவசப் பட்டப் படிப்பு
கம்மையார் நினைவு
பட்டப் படிப்புத் திட்டம்


சொன்னதைச் செய்வோம்.. செய்வதைச் சொல்வோம்!
தமிழ்ப் புத்தாண்டு நாளில் (14-4-89)
70 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்குமேல்
5 கிலோ அரிசி இலவசம்
ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம்
கருவுற்ற மகளிர் நிதி உதவித் திட்டம்


சொன்னதைச் செய்வோம்-
செய்வதைச் சொல்வோம்!
ஏழை - நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த
மகளிருக்கு இலவசப் பட்டப் படிப்பு
ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு
மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்

கலைஞர் 100
1924 - 2024

கலைஞர் நூற்றாண்டு
நிறைவு மலர்




THE INDIAN EXPRESS
MADRAS FRIDAY, JUNE 4, 1971
reatens
it on
issue
Massive US aid for evacuees
Bombay riot toll 23
Army alerted
New DMK Cabinet sworn in
Succession to Stridhana: High Court ruling
The Indian Ex
Third Front accepts Basu as leader, CPM to decide today
Fears of other parties keep BJP at bay: Cho
Micro-credit scheme for women
Chief Minister M Karunanidhi handing over loans to one of the beneficiaries of the micro-credit-cum-savings scheme for small-time traders at a function in Chennai today.


தமிழக முதல்வர்
கலைஞர் அவர்களின்
பொற்கால ஆட்சியில் கூட்டுறவுத் துறையின் புதிய முயற்சி
மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்
(மேம்பாட்டுடன் இணைந்தது)
தமிழக முதல்வர் கலைஞர்
இன்று (1.1.99) துவக்கி வைக்கிறார்.
மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்
360 கோடி ரூபாய் செலவில்
மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்

காலத்தை வெல்லும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகைப்படத் தொகுப்பு



திரு. பிரணாப் முகர்ஜி அவர்களுடன்



திரு. கே.ஆர்.நாராயணன் அவர்களுடன்



திரு. அப்துல்கலாம் அவர்களுடன்



திரு. சங்கர் தயாள் சர்மா அவர்களுடன்



திரு. ஹமீது அன்சாரி அவர்களுடன்



திருமதி இந்திராகாந்தி அவர்களுடன்



திரு. ராஜீவ்காந்தி அவர்களுடன்



திரு. சஞ்சீவ் ரெட்டி அவர்களுடன்



திரு. சந்திரசேகர் அவர்களுடன்



திரு. வாஜ்பாய் அவர்களுடன்



திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுடன்



திரு. வி.பி.சிங் அவர்களுடன்



திரு. கே.கே.ஷா அவர்களுடன்



திரு. மன்மோகன் சிங் அவர்களுடன்



திரு. நரேந்திர மோடி அவர்களுடன்



திரு. தேவகௌடா அவர்களுடன்



திரு. ஐ.கே.குஜ்ரால் அவர்களுடன்



திரு. நரசிம்மராவ் அவர்களுடன்



திருமதி சோனியாகாந்தி அவர்களுடன்



திரு. சர்தார் உஜ்ஜல் அவர்களுடன்



தந்தை பெரியார் அவர்களுடன்



பேரறிஞர் அண்ணா அவர்களுடன்



திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடன்



திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களுடன்



திரு. சென்னா ரெட்டி அவர்களுடன்



திரு. நிர்மல் போஸ் அவர்களுடன்



திரு. என்.டி.ராமராவ் அவர்களுடன்



திரு. ஹர்கிசன் சிங் சுர்ஜித் அவர்களுடன்



திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்களுடன்



திரு. பிரகாஷ்காரட் அவர்களுடன்



திரு. ஜோதிபாசு அவர்களுடன்



திரு. பல்பிர்சிங் அவர்களுடன்



திரு. தலாய் லாமா அவர்களுடன்



திரு. ராம் விலாஸ் பஸ்வான்
அவர்களுடன்



திரு. ஜே.ஹெச்.பட்டேல்
அவர்களுடன்



திரு. Y.B.சவான் அவர்களுடன்



டாக்டர் டேனியல் பாட்ரிக்
மொய்ன்ஹான் அவர்களுடன்



திரு.டத்தோ சாமிவேலு அவர்களுடன்



திரு. லீ கூன் யேவ் அவர்களுடன்



திரு. பிரபுல்லா குமார் மகந்தா அவர்களுடன்



திரு. தொண்டைமான் அவர்களுடன்



திரு. டனோ டஸ்லோவ் அவர்களுடன்



ராணி எலிசபெத் அவர்களுடன்



திரு. ராபர்ட் S.மெக்நமரா அவர்களுடன்



திரு. ரத்தன் டாடா அவர்களுடன்



நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடன்



பேராசிரியர் அன்பழகன் அவர்களுடன்



பண்பாட்டுப் பாசறை கலைஞர்



முத்தமிழ் அறிஞர் கலைஞர் கவிதைகள்

"திராவிடம் பேணும் தீப்பிழம்பு: மானுடம் பேசும் மயிலிறகு"

"Orator fit, poeta nascitur"

"ஒரு பேச்சாளன் உருவாக்கப்படுகிறான், கவிஞனோ பிறக்கிறான்"

ரோமானியர்கள், கவிஞனை 'வேட்ஸ்' (vates) என அழைத்தார்கள் - அந்த வார்த்தைக்கான வேர், 'Vaticinium, Vaticinari' எனும் வார்த்தைகளிலிருந்து எடுக்கப்பட்டது. அதற்கு, 'கடவுள் தன்மையுடையவன்' (diviner), 'காலக் கணிப்பாளன்' (foreseer) அல்லது 'இறைதூதர்' (prophet) என்ற பல அர்த்தங்களுண்டு.

கிரேக்கர்களே, கவியைக் 'கவிஞன்' (poet) என்கின்ற சொல்லால் முதன்முதலில் அழைத்தவர்கள். அது, கிரேக்க வார்த்தையான 'பொயஸின்' (poicin) எனும் வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது. ஆங்கிலத்தில் அதற்கு 'to make' எனப் பொருள். தமிழ்க் கவிதைப் பரப்பில், மிகக் காத்திரமானதொரு தடமாய்

"ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்!
நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே"



தமிழச்சி தங்கபாண்டியன்

என்ற அணிவகுப்புப் பாடலுடன் 1938இல் தனது 14 வயதில், தன் முதல் கவிதையை எழுதிய, நம் தலைமுறையின் மூத்த கவி, முத்தமிழ் அறிஞர் கலைஞரை, எப்பெயரில் அழைக்க - லத்தீன் மொழியின் 'vates' என்றா, கிரேக்க மொழியின் 'poicin' என்றா, அல்லது நம் மூத்த, ஆதித் தமிழ் மொழியின் 'புலவர்' பெருமகன் என்றா - எப்பெயரிட்டு அழைத்தாலும் 'ரோஜா ரோஜா' தான் என்பது மாதிரி - அடைமொழிக்குள் அடக்க முடியாத ஆழிப் பேரலை அவர் என்பதை - அவருடைய முதல் தொகுப்பின் தலைப்பான 'கவிதையல்ல' என்னும் தனித் தேர்வே தமிழ் உலகுக்கு அறிவித்தது.

"கலையின் பணி உலகத்தைப் பற்றி விவரித்துக் கூறுவதல்ல; மாறாக, உலகை விமர்சிப்பதும், கேள்விக்குள்ளாக்குவதும் மட்டுமே கலையின் பணியாக இருக்கமுடியும்" என்பதையே தன் இலக்கியப் பணிக்கான உந்துதலாகக் கொண்டவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர். இந்த இருபது-இருபத்தியோராம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்ப் போராளியாகவும், படைப்பாளியாகவும் திகழ்கின்ற அவரது கவிதைப் பரப்பை, உணர்வுபூர்வமாய் ஒன்றிச் சுவைத்தல் மட்டுமன்றி, அதன் ஆழ, அகலத்தினை, அது எப்படி அவர் காலத்திய சமூகத்தின் நிலையினை விமர்சிக்கின்ற வரலாற்று ஆவணமாகவும், "உணர்ச்சி, கற்பனை, வடிவம், பொருள்" எனும் நான்கின் அடிப்படையில் நெடிது வாழ்கின்ற இறவாப் படைப்பாகவும் இருக்கின்றது என்பதனையும் இந்தத் தலைமுறைக்கு எடுத்துச் சொல்வதும் இன்றியமையாதது.

கவிதை என்பது "பகுத்தறிவிற்குத் துணையாகக் கற்பனையை அழைத்துக் கொண்டு இன்பத்தையும், உண்மையையும் ஒருங்கிணைக்கும் ஒரு கலையாகும்" என்கிறார் டாக்டர். ஜான்சன். "வாழ்க்கை எனும் இறவா உண்மையின் நிலைத்து நிற்கும் படிமமே கவிதை" என்கிறார் ஷெல்லி.

> "பண்டு வந்த செழும் பொருளே!
> பார் அடர்ந்த இருட்கடலில் படிந்த மக்கள்
> கண்டு வந்த திருவிளக்கே
> களிப்பருளும் செந்தமிழே"

எனும் பாரதிதாசனின் வரிகளுக்கு ஏற்ப, இன்றுவரை தமிழர்தம் திருவிளக்காய்த் திகழ்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞரது கவிதை, தமிழ் மக்களுக்காக, தமிழ் மக்கள் குறித்து, உலகத் தரத்துடன் ஒளிர்பவை. எப்படி எனில்,

டாக்டர். ஜான்சன், ஷேக்ஸ்பியர் எனும் பெருங்கவிஞனுக்கான முன்னுரையில்,

"அடிஸன் கவிஞர்களுக்கான மொழியைப் பேசினான்; ஷேக்ஸ்பியரோ மக்களுக்கான மொழியைப் பேசினான் – அதனால் இறவாமலிருக்கின்றான்", என்று கூறியது போல்,

பெரியாரும், அறிஞர் அண்ணாவும் மீட்டெடுத்த இன, மான, மொழி உணர்வு அடையாளங்களைத் தக்கவைத்துக் கொள்வதுடன், சுயமரியாதையும், பகுத்தறிவும் சற்றும் கூர் மங்கிவிடாதிருக்க, நகைச்சுவை (Humour), புத்திசாலித்தனமான சொற்சிலம்பங்கள் (wit), உணர்வின் உச்சம் (height of emotion), – அனைத்தும் மிகச்சரியானதொரு கலவை கொண்ட புதிய கவி நடையை (வசன கவிதை) மக்களுக்கான மொழியில் தமிழுக்குத் தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். என்றும் நிலைத்திருக்கின்ற ஜீவிதக் கவிதைகள் பலவற்றை எழுதியிருக்கின்ற அவரது கவி ஆளுமையினை ஒரு பருந்துப் பார்வை பார்ப்பதென்பது "ஆல்ப்ஸ் மலையின் பனிச்சிகரங்களை கோடை காலத்தில் துய்ப்பதற்கொப்பானது". உருகாத பருண்மையினை உணருகையில், உருத்தெரியாமல் கரைவதுதானே கவிதை வாசிப்பின் தனிப் பேரின்பம்!





ஆங்கிலேயரின் பாராளுமன்ற வரலாற்றிலே மிகப் புகழ்பெற்றது – முதலாம் எலிசபெத் ராணியார், 'அர்மடா போர் வெற்றி' குறித்து 'டில்பரி' எனும் முகாமிலிருந்த தன்னுடைய படை வீரர்களுக்குப் புத்துணர்வு ஊட்டி ஆற்றிய உரையாகும். 'The House of Commons'ல், ராணியார் நிகழ்த்திய அந்த உரை குறித்து – வரலாற்றில், "I know I have the body of a weak and feeble woman, but I have the heart and stomach of a King, and a King of England too!" என்று பதியப்பட்டு, எளிமையும், உணர்ச்சியும் நிறைந்ததொரு அற்புதமானதொரு கவிதை உரையாக இன்றுவரை போற்றப்படுகிறது. அதற்கு நிகரானதொரு கவிதை வடிவினை, தன்னுடைய கவி அரங்கக் கவிதைகள் மூலம் முதன் முதலில் தமிழ்ப் பரப்பிலே அறிமுகப்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மட்டுமே.

இன்றைய தமிழர் இன்பம் துய்க்க, எளிய தமிழில், உணர்வுபூர்வமுடன் அவர் ஆக்கியிருக்கின்ற 'சங்கத் தமிழ்', 'தொல்காப்பியப் பூங்கா', 'வான்புகழ் கொண்ட வள்ளுவம்' முதலியன, அவரை ஒரு அற்புதமான கவி ஆசிரியப் பெருந்தகையாய், தமிழ் உலகிற்கு அடையாளம் காட்டியவை. புலவரே ஆசிரியராகவும் ஆகிவிடுகின்ற அந்தக் கணங்களின் ரஸவாத வித்தையை, கண்டு, கேட்டு, படித்து, உணரும் வாசகனின் ஐம்புலன்களும் பெரும் கிளர்ச்சி அடைகின்றன. முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மேற்சொன்ன படைப்புக்களைப் படிக்கும்பொழுது, இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற நவீனத்துவ விமர்சகர், ரொலாண் பார்த் நினைவிற்கு வருகின்றார். அவர் கூறுகின்றார், "ஏதோ ஒரு நூற்றாண்டில் ஓர் ஆசிரியனால் பயன்படுத்தப்பட்ட மொழியானது, தற்காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்லக்கூடும் என்று நாம் கருத முடியாது. ரெலினின் காதல் சார்ந்த உளவியல், மிலேயின் அரசியல் பார்வை, சாதேயின் பாலியல் இலக்கணம் ஆகியவை, இன்றைய வாசகனுக்கு, வாசிப்பு இன்பம் தருவதாக இல்லை. இந்தப் பிரதிகளில் ஒட்டிக்கொண்டு இருக்கும் ஆசிரியனின் பார்வை மற்றும் நோக்கத்தைப் பிய்த்து எடுத்துவிட்டு, அதில் மீதம் இருக்கும் கலாச்சார, அறிவு, இலக்கியம் ஆகியவற்றை நாம் துண்டாடிப் பார்க்கும்பொழுது, முழுப் பிரதியில் இல்லாத இன்பம், இந்தத் துண்டுகளில் கிடைக்கிறது". முத்தமிழ் அறிஞர் கலைஞரது கைவண்ணத்தில், மூலப்பிரதிகள் புதிய கோணத்தில் அலசப்பட்டு, தனி இன்பம் தருகின்ற தனித்துவ பிரதிகளாகின்றன.

தமிழர் தம் பண்பாட்டினை, திணைக் கோட்பாட்டினை, வீரத்தினை, காதலுணர்வை, அகம், புறம் எனப் பிரித்து, அவர்தம் சேர்ந்து வாழ்ந்திருந்த செழுமரபு,

கலாச்சாரம், அறிவு, இலக்கியம் ஆகியவற்றைப்பற்றி இன்றைய இளைய தலைமுறை, அவர்தம் எழுத்தோவியத்தின் மூலம் அறிந்துகொள்கின்ற மகத்தான பணியை, இந்நூற்றாண்டின் மிகச் சிறந்த கவிதை ஆவணமாய்த் தந்திருப்பவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மட்டுமே. முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய கவிதைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

- 'Elegy' எனச் சொல்லப்படுகின்ற அவலச் சுவை மிகுந்த கவிதைகள்;

திராவிடத் தளபதி கே.வி.கே. சாமி, கலைவாணர் என்.எஸ்.கே, தோழர் ஜீவா தொடங்கி, பேரறிஞர் அண்ணா வரை, அவர்களனைவரும் மறைந்தபொழுது எழுதப்பட்ட அற்புதமான கவிதைகளை உள்ளடக்கியது,

- சமூகத்தின் விளிம்புநிலை மாந்தர்கள் பற்றிய கவிதைகள்;
- மாற்றுக் கதாநாயகர்கள் (Alternate heroes) எனப்படுகின்ற இராவணன், இந்திரஜித், வாலி பற்றிய கவிதைகள்;
- பகுத்தறிவையும், மொழியுணர்வையும், சமூகக் கடமையையும் வலியுறுத்தும் கவிதைகள்;
- இரணியன், பாரதிதாசன், நேரு மற்றும் ஜனநாயகம் குறித்ததான பல்வேறு கவிதைகள்,
- பல்வேறு கவிஅரங்கங்களில் பலதரப்பட்ட தலைப்புகளில் வாசித்த கவிதைகள்.

இவை அனைத்தையும் ஏறத்தாழ உள்ளடக்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞரின் "கவிதை மழை" தொகுப்பினை தீவிர வாசிப்பிற்கு உட்படுத்திப் பார்த்தால், ஒரு கவிஞராக அவரது மிகப்பெரிய ஆளுமை – வார்த்தை நயம், ஒலி நயம், நடை நயம் (உவமை, உவமானம், படிமம்) இவை அனைத்தையும் தாண்டியதொரு அதி அற்புதமான கவிமனம் – ஊடுபாவாக அதன் உள்ளோடுவது புரிபடும்.

"If the poetry of the decade had any one dominant motive, it was an acute social consciousness, with a strong infusion of rebellious and divided, self-conscious" – என ஆங்கிலத்தில் சொல்வது போல், இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைப் பரப்பில் 'சமூக நீதி', 'சமூக மாற்றம்' என்கிற இரண்டு மந்திரச் சொற்களை, தன்னை வழி நடத்தும் கவிதைக்கான 'அ'கரமும், 'ஆ'காரமுமாகக் கொண்டவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

> "கவி வளத்தைப் பெற்றேனில்லை
> கவிதை பாடக் கற்றேனில்லை,
> தளையறுத்த வீரர் கதை பாடுவதால்
> தளையகற்றிப் பாடுகின்றேன் நானும் – அவர்
> தொடை தட்டும் என் பாட்டும்! – என் கவிதை
> யாப்பின்றிப் போனாலும் போகட்டும் – நம்
> நாடு, மொழி, மானம், உணர்வெல்லாம்
> காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை"

என்ற அற்புதமான முத்தமிழ் அறிஞர் கலைஞரது இக்கவிதை, 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த John Skeleton (ஜான் ஸ்க்கெல்ட்டன்) எனும் புகழ் பெற்ற கவிஞரின் 'Sprung Rhythm' என்றொரு ஓசை நயமிக்க தனி நடையினை நினைவுபடுத்துகிறது. ஸ்க்கெல்ட்டன், ஆங்கில இலக்கியத்தில், 'medieval poetry' எனச் சொல்லப்படுகின்ற காலகட்டத்தைச் சார்ந்தவராயினும், தன்னுடைய உணர்வினாலும், வெளிப்பாட்டினாலும், மறுமலர்ச்சி காலத் தடத்திலேதான் அறியப்பட்டவராக இருந்தார். கொடுக்கப்பட்ட மரபார்ந்த வடிவங்களுக்கு உள்ளாக, தனித்தன்மை வாய்ந்த ஒரு கவிதை நடையினைப் பரீட்சித்துப் பார்த்து, ஆங்கில இலக்கிய வரலாற்றில் 'ஸ்க்கெல்டானிக் புதுயுகம்' (Skeltonic Revival) என்ற ஒரு தனித் தடத்தினை உருவாக்கிய அவரைப் போலவே, முத்தமிழ் அறிஞரும், ஒரு புதிய கவி மனதைத் தன் காலத்திய கவிதைப் பரப்பில் ஒரு பெரும் பாய்ச்சலில் உட்புகுத்தி, பழமைக்கும், புதுமைக்குமான ஒரு மொழி நடைப் பாலத்தைச் செதுக்கியவர். தான் வாழுங்காலத்தின் சமூக, கலாச்சார, பண்பாட்டுக் கூறுகளை உள்வாங்கி, கூர்மையாக அவதானித்து, அதே சமயத்தில் மிகப் பெரிய கலகத்தினையும், கேள்விகளையும் எழுப்புகின்ற, ஒரு நவீன கலக மனதினை, கவிதைகளில் – அவை மரபார்ந்த அல்லது புதுக்கவிதை வடிவங்களிலாகட்டும் – ஒரு மெல்லிய அங்கதத்தோடு, தமிழ்ச் சூழலுக்கு முன்வைத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

Shakespeare-ன் Sonnets, 1609ல் பிரசுரிக்கப்பட்டன. அவற்றின் கரு, படிமங்கள், ஊடுபாவு முதலியன, காலங்கடந்தும் நிற்கின்ற சாத்தியத்தைத் தந்திருக்கின்றன. முத்தமிழ் அறிஞர் கலைஞரின் குறுங் கவிதைகள் பலவும் அப்படித்தான். அவரது இந்தப் படிமத்தைப் பார்ப்போம் –

"சூதறியாச் சோதரியைச் சூர்ப்பநகை ஆக்கிவிட்ட காதெரியும் செய்தி கேட்பின்" 'காதெரியும் செய்தி' என்கின்ற இப்படிமம் தரும் பிம்பம், அது எழுப்புகின்ற அதிர்வலை மிக நுட்பமானது.

நினைத்துப் பார்த்தல் அல்லது தத்துவார்த்தக் கவிதைகளுக்கான முதல் விதையை ஊன்றிய புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் சேப்மேன் (Chapman) என்பவர், கவிதை ஒரு படிப்பினை தருவது (didactic conception) என்பதனை வலியுறுத்தியவராக இருந்தாலும், மூலதனம் 'பகுத்தறிவே' (the key-stone is reason) என்பதை வலியுறுத்தியவர். அந்த மரபினை அடியொற்றி, ஆனால் அதற்கு முற்றிலும் புதிதான, அவைதீக அல்லது நாத்திக மரபினை முன்னிறுத்துகின்ற கவிதைகள் முத்தமிழ் அறிஞர் கலைஞருடையவை.

1600களில், ஆங்கிலக் கவிதைப் பரப்பிலே நான்கு தத்துவவாதிகள் (John Davies, Samuel Daniel George Chapman and Lord Brooke) ஒன்றிணைந்து, 'ஒரு கிருத்துவ மனிதம்' என்கிற சட்டகத்தினுள், தத்துவக் கவிதைகள் எழுதத் தொடங்கினார்கள்.

இங்கே, நம் தமிழ்க் கவிதைப் பரப்பில், 'திராவிட மானுடம்' எனும் சட்டகத்தை இருபதாம் நூற்றாண்டில், 1938ல், 'இயக்கத்தின் விழா வாழ்த்து' என்கிற தன் முதல் கவிதையுடன் ஆரம்பிக்கின்றார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

> "இந்நாட்டான் இங்கு பிறந்து வாழ்ந்தான்
> எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான்
> தமிழ்நாட்டான் தலை குனிந்தான்; இதோ
> நிமிர்ந்தான் - இனிக்
> கொழுத்துவிட்ட உமிகள்தாம் குள்ளநரிக் கூட்டத்தார்
> பழித்துவிட்டான் பகுத்தறிவால்
> பக்தி, மதம், கடவுளர் எல்லாம் பாழ்! பாழ்!"

என்று அறிவுபூர்வமான, உணர்வும் ஒத்திசைகின்ற, கேள்விகளின் மூலம் சமூக நடப்புகளை ஓர் அங்கதமுடன் முன்வைக்கின்ற, முத்தமிழ் அறிஞர் கலைஞரது 'கலகக் கவிதைகள்', தெளிவையும், எளிமையையும், அதேசமயம் மரபார்ந்த முறைகள் மீது அவருக்கிருந்த மொழி ஆளுமையினையும் ஒருங்கே புலப்படுத்துகின்ற ஓர் அபூர்வக் கலவையாகும்.

"Drink to me only with thine eyes"

'உனது கண்களால் மட்டுமே என்னைக் குடி' என்கிற புகழ்பெற்ற ஆங்கிலேய படிமத்திற்கு (image) இணையாக, அவரது

> **"கண்ணுக்குள் பாவைபோல் வருண்டிடும் உள்ளம்**
> **கைம் பெண்ணுக்கு இருப்பதையும் உணர்ந்திடுவாய்"**

எனும் படிமத்தைக் கூறலாம்.

டாக்டர் ஜான்சன், தன்னுடைய Life of Cowley (1779) எனும் புத்தகத்தில், கவிதையின் மிக முக்கியமான நடை உத்திகளில் (techniques) ஒன்றான 'conceit' குறித்து, "the violent yoking of unlike ideas and images" என்றிருந்தாலும், நவீன விமர்சகர்கள், அதனை "the fusion of thought and feeling" என்றே குறிப்பிடுகிறார்கள்.

'Conceit' என்கிற கவிதை உத்தி, ஜான் டன் (John Donne) (1572-1631) என்கிற புகழ்பெற்ற ஆங்கிலேயக் கவிஞரை நினைவூட்டும். ஜான் டன், சாப்மேனைப் போல தத்துவார்த்தக் கவிஞர் அல்ல என்றாலும், தத்துவத்தின் கூறுகளைத் தொடர்ந்து பயன்படுத்தியவர். அவர், rhetoric என்று சொல்லப்படுகின்ற உரைநடையினை வெறுத்து விலக்கவில்லை. மாறாக, ஒரு புதுவிதமான உரைநடை உத்தியைக் கவிதைகளில் கட்டமைத்தவர். அது, சாமானியமான பேச்சு வழக்கு, நாடகத்தன்மை, அங்கத யதார்த்தம் முதலியவற்றை உள்ளடக்கியது. முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய பல கவிதைகளில், இந்த உத்தி மிகச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

உதாரணத்திற்கு, இலங்கை வேந்தன் இறந்தபின் மண்டோதரியின் மரணத்தை,

> **"ஆளன் இறந்த பின்னர் இறப்பதற்கு**
> **மட்டுந்தான்**
> **நீள் இமையைத் திறந்திட்டாள்**
> **மண்டோதரி!"**

என எழுதுகிறார். இறப்பிலே கண்கள் மூடுவது என்பதன் முரணாக, இறப்பதற்காகக் கண் திறந்தாள் என்பது மிகப் புதுமையான நடை உத்தி.

> **"புலவரிடை பகை மூண்டால்**
> **புதுமையுண்டு தமிழுக்கு"**

என்று சொல்வதும்,

> **"வானக் கிழவன் இருமுதலே இடியென்னும்**
> **வாடிப் பிதுங்கும் அவன் கண்ணொளியே மின்னல்**
> **அவன் வடிக்கின்ற கோழை எச்சில்தான் மழை"**

என்பதுவும், 'நேர்மறை அழகியல்' எனும் புது உத்தி.

பன்முகத் தன்மை கொண்ட முத்தமிழ் அறிஞர்

கலைஞரது பல கவிதைகளில் – உச்சபட்ச ஒரு கவிமன உணர்வையும், ஒரு மிருதுத் தன்மையையும், வாதிடலையும், கவித்துவமான இசையையும், இவை அனைத்தையும் ஒருங்கிணைக்கின்ற

ஒரு நகைச்சுவை வகைமையினையும் நாம் பார்க்கலாம்.

எப்பொழுதும், காதல், காலத்தையும், மரணத்தையும் வெற்றிகொண்டே வந்திருக்கிறது என்பதை வலியுறுத்தியவை ஜான் டன் எனும் கவிஞனுடைய கவிதைகள். முத்தமிழ் அறிஞர் கலைஞரது சங்கப் பாடல்கள் குறித்த "சங்கத் தமிழ்" எனும் கவிதை விளக்கம் இதனை அடியொற்றியவையே. "What if this present were the worlds' last night?" – என்று அந்த கவிஞன் கேட்டது போலவே, முத்தமிழ் அறிஞர் கலைஞரது நற்றிணையின் (பாடல் 177) விளக்கமொன்றில், தோழி தலைவியிடம் இப்படிக்கேட்கிறாள் –

"ஒரு நாள் மட்டுமே இந்த உலகம் இருக்குமெனக்
கணக்கிட்டு, இன்பத்
திருநாள் முழுவதையும் நடத்தி முடித்துவிட்டீர்;
வாழ்க! வாழ்க!

சேப்மேன், ஜான் டன் ஆகியோரைத் தாண்டி, ஜார்ஜ் ஹெர்பட் (George Herbert) எனும் கவிஞருடைய நடை உத்தியும், உள்ளடக்கமும்கூட, முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய கவிதைகளில் தென்படுவதையும் காணலாம். ஹெர்பட்டை, "இசையின், மகிழ்ச்சியின் காதலன்" என்பார்கள் (is a lover of music and mirth). அவரது "காதலும் பயணியும்" என்கிற கவிதை மிகப் பிரசித்தி பெற்றது. அக்கவிதையில், இருவிதமான கற்பனைப் படிமங்களுண்டு. ஒருபுறம் 'காதல்' எனும் தோற்றம் அளவற்ற மோகமுடன் கெஞ்சிக் கொண்டிருக்கும். அதன் எதிர்ப்புறம், அதன் உபசரணைகளை மறுத்து, தவறுகளுக்குப் பயப்படுகின்ற 'பயணியின்' உருவம் அலைபாய்ந்து கொண்டிருக்கும். இறுதியில், அம்மனிதன் காதலில் சரணடைவதை, மிக எளிமையாக, ஆனால் உணர்வுபூர்வமாக, ஹெர்பட்,

"நான் பணிந்தேன், சரணடைந்தேன்" (So I did sit and surrender myself) என முடித்திருப்பார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய பகுத்தறிகின்ற, நாத்திக, அவைதீக மனதின் ஒரு குரலிலிருந்து வருகின்ற கவிதையில், ஆங்கிலக் கவிதை இலக்கியத்தின் மிக முக்கியக் கவிதைக்களமான "metaphysical poetry"ன் சில கூறுகளைப் பார்க்கும்பொழுது, அவரது மொழி ஆளுமையும், தொலைநோக்கும், நுட்பமும், புதுமைப்பசியும், அனுபவங்களை புதிய உத்திகளில் பதிய வைக்கின்ற தன்முனைப்பும் நம்மை பெரும் வியப்பிற்குள்ளாக்குகின்றன.

எத்தனையோ அற்புத வரிகளை எழுதிய என் தலைவரது அந்த எழுதுகோலில் இருப்பது வெறும் மை தானா? எனப் பலமுறை வியந்திருக்கிறேன். எனது தந்தை திரு.வே.தங்கபாண்டியன் மறைந்தபின், ஒரு நிகழ்ச்சியிலே கலந்துகொண்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் எழுதிய 'ஹைகூ' பாணி கவிதை இது :

"அரங்கம் நிறைந்திருக்கிறது
ஓர் இடம் காலி
நான் அழுகிறேன்"

படித்தபின்பு என் கண்ணீருக்குத் தெரிந்தது – அவரது பேனாவில் இருப்பது வெறும் 'மை' அல்ல – அது உணர்வு 'மை', தமிழர்களது உயிர் 'மை', அதுவே அவரது கவிதையின் வலி 'மை' என்று.

புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் பெர்னார்ட் ஷா, தன்னுடைய 'பிக்மாலியன்' எனும் பிரசித்தி பெற்ற நாடகத்தில், கதாநாயகியான ஒரு பூக்காரப் பெண்ணிற்கு ஆங்கில மொழியின் பெருமையினைப் பற்றிச் சொல்லும்போது,

"உன்னுடைய தாய்மொழியானது ஷேக்ஸ்பியருடைய உன்னத மொழி; மில்ட்டனுடைய கவித்துவ மொழி; பைபிளின் கடவுள் மொழி என்பதை நினைவில் வைத்துக்கொள்" என்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைப் பரப்பிலே, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் எழுத்தைப் படிக்கின்ற ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்ந்து சொல்லிக் கொள்ளலாம் – "என் தாய்மொழியானது சங்கப் புலவர்கள் பெற்றெடுத்த மொழி; வள்ளுவனும் இளங்கோவும் வார்த்தெடுத்த மொழி; பாரதியும், அவனுக்குத் தாசனும் புத்துயிரூட்டிய மொழி; முத்தமிழ் அறிஞர், என் தலைவர் கலைஞர், திராவிடச் சூடேற்றி, மானுட மயிலிறகு வீசிய தனித்தமிழ் மொழி" என்று.

(`இந்தியா டுடே' சிறப்பு வெளியீடான தலைவரது `காவியப் பயணம்'சிறப்பிதழில் வெளிவந்த கட்டுரையின் முழு வடிவம்)

அலைகடல் நடுவே அய்யனுக்கோர் சிலை

கலைஞர் கண்ட கனவு நனவான கதை

- அஜயன் பாலா பாஸ்கரன்

கலைஞர் அவர்களின் சாதனைகள் என்றால் அதன் பட்டியல் பல காத தூரம் நீளக்கூடியது... அந்த சாதனைப் பட்டியலில் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் இதயத்தில் என்றென்றும் உயர்ந்த இடத்தில் குன்றிலிட்ட விளக்காய் ஒளிரும் வண்ணம் ஓங்கி உயர்ந்து நிற்கும் ஒரு அடையாளம் என்றால் அது, முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடலோரம் வீற்றிருக்கும் திருவள்ளுவர் சிலை ஆகும்.

இன்று வானம் தொடும் உயரத்தில் உலகமே அதிசயிக்கும் அமெரிக்காவின் சுதந்திரதேவி சிலைக்கு நிகராக தமிழனின் மூத்த குடியாம் நம் அய்யன் திருவள்ளுவர் சிலை மேகங்களே இறங்கி முத்தமிட்டுச்செல்லும் எழில் கொஞ்சும் தோற்றத்தில் உயர்ந்திருக்கிற தென்றால் அதன் விதை கலைஞர் மனதில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே விழுந்த ஒன்று.

முன் கதைச் சுருக்கம்

அது 1970ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்குப்பின் கலைஞர் முதன் முறையாக முதல்வர் பதவியில் அமர்ந்த நேரம் அப்போதைய குடியரசுத்தலைவராக இருந்த திரு. வி.வி.கிரி அவர்கள் தலைமையில் கன்னியாகுமரியில் கரையிலிருந்து கண்ணுக்கெட்டிய தொலைவில் இருக்கும் பாறையில் விவேகானந்தர் நினைவு மண்டபம் நிறுவப்பட்டு அதன் திறப்புவிழா வைபவம் நடைபெற்றது.

அந்த விழாவுக்கு முதல்வராக இருந்த கலைஞர் அவர்களும் கலந்துகொள்கிறார்.

அப்போது அவர் மனதில் தமிழர்களின் நிலப்பரப்பில் உலகம் போற்றும் திருவள்ளுவர் சிலைதானே இங்கு இருக்கவேண்டும் என்ற எண்ணம் மனதில் தூண்டில் புழுவாய்

சிக்கிக்கொண்டது. அப்போதே அருகிலிருந்த இன்னொரு பாறையில் வான்புகழ் கண்ட வள்ளுவத்தை படைத்த அய்யன் திருவள்ளுவருக்கு வான்முட்டும் சிலை வைக்கும் எண்ணம் தோன்றியது.

அதுவும் திருவள்ளுவரின் 133 அதிகாரங்களைக் கொண்ட திருக்குறளை அது நினைபடுத்தும் வகையில் 133 அடி உயரத்தில் அது அமைக்கப்பெற வேண்டும் என முடிவெடுத்து கற்பனை செய்து பார்த்தார். அப்போதே அவர் இதயத்தில் பரவசம் குடிகொள்ளத் துவங்கியது. கையோடு பொதுப்பணித்துறையில் உள்ள அதிகாரிகளை அழைத்து அதற்கான ஆயத்த வேலைகளை செய்யும்படி கட்டளையுமிட்டார். உடனே அந்த இடத்தை பார்வையிட்ட பொதுப்பணித்துறை அதிகாரிகள் குறிப்பிட்ட பாறையில் பல வெடிப்புகள் இருப்பதைக் கண்டு திட்டத்தைக் கைவிடுமாறு கலைஞரிடம் கை விரித்தனர். ஆனால் கலைஞரோ அதிகாரிகளிடம் பிடிவாதமாக தொழில் நுட்பத்தை சரி செய்யுங்கள் சிலை வைத்தே ஆக வேண்டும் எனக் கூறிவிட்டார்.

அதிகாரிகளுக்கோ குழப்பம், விவேகானந்தர் பாறையோ 4 ஏக்கர் பரப்பு அதில் எதை வேண்டுமானலும் செய்யலாம். ஆனால் அய்யனுக்கான சிலை வைக்கச்சொன்ன அந்தப் பாறையோ வெறும் 22.000-ம் சதுர அடிகள் மட்டுமே கொண்டது. அதில் சிலைக்கான கட்டுமானப் பொருட்களை இறக்கிவைக்கக் கூட இம்மி இடமில்லாத நிலை. எனவே அதிகாரிகள் என்ன



செய்வது எனத் தெரியாமல் தடுமாறிக்கொண்டிருக்க, இச்சூழலில் நெருக்கடிநிலை காரணமாக அன்றைய கலைஞரின் ஆட்சி கலைக்கப்பட்டது அத்தோடு அவர் கண்ட கனவும் பாதியில் நின்றது.

1989-இல் கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக மீண்டும் முதல்வராக பொறுப்பேற்றிருந்த சமயம். அய்யன் திருவள்ளுவர் சிலைக்கான கனவும் முகிழத்துவங்கியது. தான் நினைத்ததை இப்போதாவது நிச்சயம் நிறைவேற்றி விடலாம் என நமபிக்கை கொண்டார்.

உடனே அப்போதைய மாமல்லபுர அரசு கட்டட மற்றும் சிற்ப கலைக்கல்லூரியின் முதல்வர் முனைவர் கணபதி ஸ்தபதி அவர்களை, தன்னுடைய செயலர் ராஜமாணிக்கம் மூலமாக தொடர்பு கொண்டார்.

அவரிடம் ஸ்தபதியாரே கன்னியாகுமரி கடலில் வள்ளுவருக்கு ஒரு சிலை வைக்க வேண்டும். நாடு இங்கே முடிகிறது என்று கூறுகிறார்கள் அல்லவா! இல்லை; இங்கே நம் குமரியில் இருந்துதான் தொடங்குகிறது என்று சொல்கிற மாதிரி சிலை அமைய வேண்டும். அதுவும் குமரியில் இருந்து வள்ளுவர் நேராக இமயத்தை பார்க்கிற மாதிரி அமைய வேண்டும் என்று கூறுகிறார்.. உடனே சட்டசபையில் இதற்கான தீர்மானம் ஒன்று உருவாக்கி 1990-91 -ல் நிதி நிலையில் சிலை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1990 செப்டம்பர் 6ஆம் நாள் சிலை அமைக்கும் பணியை கலைஞர் அவர்களே தொடங்கியும் வைத்தார்.

ஆனால் காலமப்போதும் அவருக்கு கை கொடுக்கவில்லை. துரோகத்தால் ஆட்சி கலைக்கப் பட்டது, கவிழ்க்கப்பட்டது. தொடர்ந்து அதிமுக ஆட்சியில் கலைஞரின் கனவாம் அய்யனுக்கான சிலை அப்படியே முடக்கப்பட்டு நின்றது.

உடைந்தது தடைகள், உயிர்த்தது அய்யன் சிலை

1996-இல் மீண்டும் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக பதவியேற்ற பின் அய்யன் சிலைக்கு மீண்டும் புத்துயிர் பெற்று பணிகள் துரிதமாக துவக்கப்பட்டது. கணபதி ஸ்தபதி அவர்கள் இப்போது மீண்டும் குமரிக்கு வந்து சிலைவைக்க தேர்வு செய்யப்பட்ட பாறையை பார்வையிட்டார். பாறையின் இன்டு இடுக்குகளை கூட ரசாயன கலவை கொண்டு கூட மூடிவிடலாம் ஆனால் அவ்வளவு உயர்த்துக்கு சிலை கடைக்கால் எதுவும் இல்லாமல் எப்படி நிற்க முடியும் என்ற கேள்வி ஸ்தபதி அவர்களை உறுத்தியது.

133 அடி உயரத்துக்கு ஒரு சிலை அதுவும் கடைக்கால் இல்லாமல் மொட்டை பாறை அதுவும் வெடிப்புகள் நிறைந்த சிலை பாறை .கணபதி ஸ்தபதி அவர்களுக்கு இந்த சவால் மிக்க பணிகள் தன் சிற்ப சாஸ்திர மேதமைக்கு பெரும் சவால் என்பதை மட்டும் உணர்ந்து கொண்டார் .

அப்போதுதான் அவருக்கு தமிழர்களின் பாரம்பரியம் கட்டிடக்கலைகளின் பால் கவனம் திரும்பியது. இன்றும் உலகமே வியந்து பார்க்கும் தமிழர் கட்டிடக்கலையின் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொன்ன தஞ்சை பெரிய கோயில் கண்முன் வந்து நின்றது. அதுவும் கடைக்கால் ஏதுவுமற்ற புவியீர்ப்பு விசையின் அடிப்படையில் மதினுட்பம், கலைநுட்பம், தொழில் நுட்பம் ஆகிய மூன்றும் கலந்து உருவாக்கம் பெற்றது போல திருவள்ளுவர் சிலையையும் அமைக்க முடியும் என கணபதி ஸ்தபதி அவர்கள் நம்பினார் .

இதை கலைஞரிடமும் சொல்லி உங்கள் கனவை நிறைவேற்றிக் காட்டுகிறேன் என நம்பிக்கை கொடுத்தார் . அதன்படி சிலை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டன தஞ்சை பெரிய கோயில் போலவே கம்பி செங்கல் சுன்னாம்பு எதுவும் இல்லாமல் முழுவதும் கருங்கற்களால் மட்டுமே சிலை எழுப்புவது என முடிவு செய்தார்.

அதன்படி தஞ்சை பெரிய கோயில் கட்டடத்தின் மிக முக்கிய அம்சமாக கருதப்படும் கோபுரத்தின் மொத்த பலத்தையும் தாங்கி நிற்கும் கருவறை கட்டடமும் அதன் மண்டபமும் போல சிலையின் பீடப்பகுதி உறுதியாகவும் சிலையின் மொத்த பலத்தையும் தாங்க கூடியதாக இருக்க வேண்டும் என முடிவு செய்து அதன் பீடப் பகுதியை பிரம்மாண்டமாக வைக்க முடிவு செய்தார்.

அதன்படி 95 அடி உயர சிலைக்கு 38 அடி உயரத்துக்கு பீடம் அமைக்க முடி செய்தார் இதன் அடிப்படையில் ஒரு மொத்த சிலையையும்

மூன்று பாகமாக பிரித்தார். பீடத்தின் 38 அடி உயரமானது திருக்குறளின் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களையும், பீடத்தின் மேல் நிற்கும் 95 அடி உயரச் சிலையானது திருக்குறளின் பொருள் மற்றும் இன்பத்துப்பாலின் 95 அதிகாரங்களையும் குறிப்பதாக இருக்கும் வகையில் வடிவமைத்தார் .

முதலாவதாக 38 அடி உயரம் கொண்ட பீடத்தை 150 டன் எடை கொண்ட கருங்கற்களால் அமைக்க தீர்மானித்துக் கொண்டார். அது போல அதன் மேலிருக்கும் 98 அடி உயரம் எடை கொண்ட உருவச் சிலையை 700 ஒம் டன் எடை கொண்ட கற்களால் வடிவமைப்பது என முடிவு செய்து அதற்கான கருங்கற்களை தேடி எடுக்கும் பணிகளில் துரிதமாய் இறங்கினார்.

சிலை அமைக்க கற்களை எடுத்து செல்ல கொச்சியிலிருந்து 'பாண்டூன்' என்ற படகு ஒன்று வாங்கப்பட்டது. மொத்தம் 3,681 கற்கள் பயன்படுத்தி ஆதாரப் பீடம் அமைக்கப்பட்டது. முகம் 10 அடி உயரம், 40 அடி உயரத்தில் கழுத்து இடுப்பு பகுதிகள், 40 அடி உயரத்தில் இடுப்பு முதல் கால்பாதம் வரையும், கொண்டை பகுதி 5 அடியிலும் அமைக்கப்பட்டு திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தை எட்டியது. மொத்தம் 6.14 கோடி செலவில் பணியாளர்கள், சிற்பிகள், உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் என 150க்கும் மேற்பட்டவர்கள் நாளொன்றிற்கு 16 மணி நேரம் உழைப்பில் உருவானது.

சிலையின் இடுப்பு வளைவு சற்று சவாலாக இருந்தாலும் நவீன அறிவியல் துணையோடு வாஸ்து சாஸ்திரப்படி இதனை தாமரை மாதிரி உருவாக்கி அதன் எடை மையத்தை அளந்து அதன் பின்னர் கட்டப்பட்டது.

கன்னியாகுமாரி, அம்பாசமுத்திரம் மற்றும் சோழிங்க நல்லூர் என மூன்று சிலைக் கூடங்களில் பணிகள் நடைபெற்றன. அம்பாசமுத்திரத்திலிருந்து 5000 டன் எடை கொண்ட கற்களும், சோழிங்க நல்லூரிலிருந்து 2000 டன் தரமான கருங்கற்களும் வந்தன. 13 அடி நீளமும் 15 டன் எடையும் கொண்ட பெரிய கற்கள் மட்டும் 3,681 ஆகும் மற்றவை மூன்றிலிருந்து எட்டு டன் எடை கொண்டவை. காது, மூக்கு, கண், வாய், நெற்றி பகுதிகளுக்கான கற்கள் கையால் செதுக்கப்பட்ட ஒரே கற்களாகும்.

பனைமரமும், சவுக்கு மரமும், இரும்புக் கம்பிகளும், சாரங்கட்டப் பயன்பட்டது. மொத்தம் 18,000 சவுக்கு மரங்கள் இரண்டு சரக்குந்து கொள்ளளவு கொண்ட கயிற்றால் முழு சாரமும் கட்டப்பட்டது. சிலையினுள் 130 அடி உயரம் வரை வெற்றிடம் உள்ளது. இந்த வெற்றிடம் சிலையின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தும் நுட்பமுடையது. கல்லால் ஆன உத்திரங்களும், கட்டாயங்களும் பரவப்பட்டு சிலை எப்பக்கத்திலும் சாய்ந்து விடாது நேரே நிற்குமாறு உறுதி செய்யப்பட்டுள்ளது.

மண்டபத்தின் உட்புறச் சுவற்றில் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்து ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் அவற்றுக்கு நிகராக ஆங்கில மொழி பெயர்ப்பிலும் பொறிக்கப்பட்டுள்ளன.


இப்படியாக ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இரவு பகலாக உழைத்து உருவாக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை 2000ம் ஆண்டில் ஜனவரி 10ம் தேதியன்று உலகமே வியக்கும் வகையில் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது

நிலைமை இப்படியிருக்க இன்றும் பல விஷமிகள் இந்த சிலை முன்னால் முதல்வர் திரு. எம் ஜி; இராமச்சந்திரன் ஆட்சிக்காலத்தில் துவங்கப்பட்டதாக கட்டுக்கதைகள் வருவதும் அதை உண்மையென்று சிலர் பொய் பரப்புரை செய்வதும் காலக்கேடு.

இன்றும் பல்லாயிரக்கணகான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரியில் வீற்றிருக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையை பார்த்து அதன்பின் தமிழர் பெருமையை வியந்து போற்றி வருகின்றன

இந்த சிலை கலைஞரின் மகத்தான சாதனைகளில் ஒன்று. இதன் பெருமையால் காலம் உள்ளவரை தமிழும், தமிழர் புகழும், உயர்ந்து நிற்கும்.

எப்படி ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் தஞ்சை பெரிய கோயில் தமிழர் பெருமையை இன்றும் பறை சாற்றுகிறதோ அது போல அய்யன் திருவள்ளுவர் சிலையும் உலகமுள்ள அளவும் தமிழர் புகழை வான்புகழுக்கு பறை அறிவிக்கும் என்பது உறுதி



இந்து சமய அறநிலையத் துறைக்கு கலைஞர் செய்த சாதனைகள்

ஒரு கால் பூசை நடைபெறும் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்/பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல்

ஒரு கால பூசை நடைபெறும் நிதிவசதியற்ற அமையப்பெற்ற கிராமப்புறங்களில் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர் மற்றும் பூசாரிகளுக்கு திருக்கோயிலுக்குச் சிரமமின்றி சென்று குறித்த நேரத்தில் பூசைகள் செய்ய ஏதுவாக 10,000 மிதிவண்டிகள் இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் புதிதாக நூல்நிலையங்கள் அமைத்தல்

நிதிவசதியும், இடவசதியும் உள்ள 114 முக்கியத் திருக்கோயில்களில், பக்தர்களின் பயன்பாட்டிற்காக புதியதாக நூல் நிலையம் துவங்கும்படி உத்தரவிடப்பட்டு, அவை துவங்கப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டில் உள்ளன. அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்.

தகுதியும் திறமையும் பெற்ற அனைத்து இந்துக்களும் சாதிவேறுபாடின்றி திருக்கோயில்களில் அர்ச்சகராகலாம் என 2.1.2007 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அதனையடுத்து, பழனி, திருச்செந்தூர், மதுரை, திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும், சென்னை, திருவரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகியன இலவசமாக அளிக்கப்படுவதுடன் மாணவர் ஒருவருக்கு மாதம் 1க்கு ரூ. 500/- ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 34 மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 76 மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 76 மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 55 மாணவர்கள் உட்பட மொத்தம் 207 மாணவர்கள் ஓராண்டு கால "இளநிலை அர்ச்சகர் சான்றிதழ்" இலவச பயிற்சியை முடித்து சான்றிதழ் வழங்கப்பட்டது.



கிராமக் கோயில் பூசாரிகள் நலவாரியம்

கிராமக்கோயில் பூசாரிகள் நலனுக்கென ஒரு நலவாரியம் 23.1.2007 அன்று அமைக்கப்பட்டு இதுவரை 38,946 பூசாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 700 பூசாரிகளுக்கு ரூ. 16.07 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் அர்ச்சனைக்கு ஊக்கம்

"தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்பதை மாற்றி 'தமிழில் அர்ச்சனை செய்யப்படும்' என்று அறிவித்து தமிழ் அர்ச்சனை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இத்துறையால் தமிழில் அர்ச்சனை நூல்களும் வெயியிடப்பட்டன.

சிதம்பரம் திருக்கோயிலில் திருமுறைகள் ஓதுதல்

நீண்ட காலத்திற்கு பின்பு, சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் (நடராசர்) திருக்கோயில் திருச்சிற்றம்பல மேடையில் தமிழ் தேவார திருமுறைகள் ஓதுவதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டு பக்தர்களால் தேவார திருமுறைகள் ஓதுவதற்கு வழிவகை செய்யப்பட்டன.

சிதம்பரம் திருக்கோயிலில் செயல் அலுவலர் நியமனம்

உலகப் புகழ் வாய்ந்த சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் (நடராசர்) திருக்கோயில் நலன் மற்றும் பொதுநலன் கருதி இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தின் சட்டப்பிரிவு 45(1)ன் கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டதை எதிர்த்து பொது தீட்சிதர்களால் தொடரப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு செயல் அலுவலர் நியமனம் உறுதி செய்யப்பட்டு செயல் அலுவலர் 2.2.2009 அன்று பொறுப்பேற்றுள்ளார். இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலனை கருத்திற்கொண்டு உயர் கோபுர மின் விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் இதர வசதிகள் ரூ. 34.45 இலட்சம் இவ்வரசால் நிதி உதவியாக வழங்கப்பட்டு பக்தர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. திருக்கோயிலில் உண்டியல் காணிக்கை, பக்தர்கள் நன்கொடை மற்றும் பிரசாத விற்பனை ஆகியவற்றை முறைப்படுத்தியதன் மூலம் திருக்கோயில் வருவாயாக 2.2.2009 முதல் ஓராண்டிற்கு ரூ. 26 இலட்சம் வரை கிடைத்துள்ளது.

பரிவட்ட மரியாதையை நிறுத்தி சமதர்மம் காப்போம்

'ஆண்டவன் முன் அனைவரும் சமம்' என்ற கோட்பாட்டினை உறுதி செய்யும் வகையில், திருக்கோயில்களில் கடைபிடிக்கப்பட்டு வந்த, முக்கிய பிரமுகர்களுக்கு பரிவட்ட மரியாதை செய்யும் வழக்கம் நிறுத்தப்பட்டது. திருக்கோயில்களை நிர்வகிக்க ஏற்படுத்தப்படும் அறங்காவலர் குழுவில் மகளிர் ஒருவரையும், ஆதிதிராவிடர் ஒருவரையும் அறங்காவலராக நியமிப்பது சட்டமாக்கப்பட்டது.

திருப்பணிகள்

தமிழகம் முழுவதும் 4020 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்வதற்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு மானியத் தொகை ரூ.75 இலட்சத்திலிருந்து ரூ. 3 கோடியாக உயர்த்தப்பட்டது.

திருக்கோயில்களில் திருப்பணி உள்பட பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கு ரூ. 387 கோடி மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் சிதிலமடைந்து, பழமையும் வரலாற்று சிறப்பு மிக்க 48 திருக்கோயில்களை திருப்பணி செய்து பாதுகாக்க, வரலாற்றுப் பெருமை மிக்க பழமை வாய்ந்த சின்னங்களைச் சீரமைக்கும் திட்டத்தின்கீழ், 12-வது நிதி ஆணைய நல்கையிலிருந்து ரூ. 9.87 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தேவார திருமுறைகளிலும் திவ்விய பிரபந்தங்களிலும் பாடிப்பரவப்பட்ட, நீண்டகாலமாக திருப்பணிகள் மேற்கொள்ளப்படாத 30 புராதன திருக்கோயில்களை ரூ. 3.29 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டு, திருப்பணிகள் செய்யப்பட்டன. நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருப்பணி. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதிவசதியற்ற திருக்கோயில்களில் திருப்பணிகளுக்கு நிதிமாற்றம் மூலம் திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ. 15.62 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்கள் திருப்பணி. ஆதிதிராவிடர்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள 4000 திருக்கோயில்கள் புதுப்பிக்கப்படுவதற்க ரூ. 10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பொது நல நிதி

இந்து சமய அறநிலைய நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் நிதி உதவி மற்றும் தனிநபர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் ஆகியவற்றைக் கொண்டு சட்டப்பிரிவு 97-ன்படி பொது நல நிதி என்ற நிதியமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நலிவடைந்த திருக்கோயில்களின் பழுதுபார்ப்பு மற்றும் திருப்பணி வேலைகளுக்கு இந்த நிதியிலிருந்து நிதியுதவி செய்யப்படுகிறது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 366 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.10.53 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்து, ஒரு நிரந்தர ஏற்பாடாக கிராமப்புற திருக்கோயில் திருப்பணி திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின் 35 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.1.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஆலய மேம்பாட்டு நிதி

நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடி திரட்டி நிரந்தர முதலீடு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தற்போது இத்தொகை ரூ. 8 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 22 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ. 1.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

'திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி' என்பது செல்வந்தர்கள் மற்றும் பொதுமக்கள் அளித்த நன்கொடைகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட நிதியாகும். இத்திட்டத்திலிருந்து வரலாற்றுச் சிறப்பு மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த புராதனத் திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து 11 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ. 53 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு காஞ்சிபுரம் நகரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வதீர்த்த குளத்தினை சீரமைத்திட ரூ.43.90 இலட்சம் மற்றும் அருள்மிகு அஷ்டபுஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரங்கசாமி குளத்தினை சீரமைத்திட ரூ. 22.50 இலட்சம் ஆக கூடுதல் ரூ. 66.40 இலட்சம் அரசு நிதி வழங்கப்பட்டன.

மூலிகை ஓவியங்களை பாதுகாத்தல்

இவ்வரசு பொறுப்பேற்ற பின் தமிழகத் திருக்கோயில்களில் உள்ள பராம்பரியமிக்க பழமையான மூலிகை ஓவியங்களை பாதுகாக்க மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் முதன்மை குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய தங்க ரதங்கள்

திருக்கோயில்களில் புதியதாக தங்கரதத் திருப்பணி மேற்கொள்ள இவ்வரசு ஊக்கம் அளித்ததனைத் தொடர்ந்து, 14 திருக்கோயில்களில் புதியதாக தங்க ரதத் திருப்பணி நிறைவடைந்து தங்கரத உலா நடைபெற்று வருகிறது. மேலும் 15 திருக்கோயில்களில் புதியதாகத் தங்கரதம் செய்யும் திருப்பணி நடைபெற்றுள்ளன.

புதிய வெள்ளி ரதங்கள்

திருக்கோயில்களில் புதியதாக வெள்ளிரத திருப்பணி மேற்கொள்ள இவ்வரசு ஊக்கம் அளித்ததனைத் தொடர்ந்து, 3 திருக்கோயில்களில் புதியதாக வெள்ளி ரத திருப்பணி நிறைவடைந்து வெள்ளி ரத உலா நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.

மரத்தேர் திருப்பணி

இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் மொத்தமுள்ள மரத்தேர்கள் 960 ஆகும். 16 திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருத்தேர்கள்,

சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.83.85 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டன. இவற்றுடன் சேர்ந்து 735 தேர்கள் நல்ல நிலையில் உள்ளன. பழுதடைந்துள்ள 225 தேர்களை நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி ஆதாரம் ஏற்படுத்தி, ரூ. 10.84 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளதற்கேற்ப திருத்தேர் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. திருவாரூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில், 100 ஆண்டுகளுக்கு முன்பாக செய்யப்பட்டு பழுதடைந்திருந்த அம்பாள் தேருக்குப் பதிலாக, ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்யப்பட்டு 04.05.2008 அன்று தேரோட்டம் நடத்தப்பட்டது.

திருமண மண்டபங்கள்

ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் சார்பில் புதிய நவீன திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 13.04.2007 அன்று திறக்கப்பட்டது.

ரூ.61.30 இலட்சம் மதிப்பீட்டில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் புதிய நவீன திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 22.10.2009 அன்று திறக்கப்பட்டது.

ஸ்தபதிகள்

திருக்கோயில்களில் சாத்திரங்களிலும், நடைபெறும் திருப்பணிகள் சிற்ப ஆகமங்களிலும் குறிப்பிட்டுள்ளபடி நடைபெறுவதை உறுதி செய்ய, துறையின் மூலம் 184 ஸ்தபதிகள் முறைப்படி ஸ்தபதிகளாக அங்கீகாரம் வழங்கப்பட்டு திருக்கோயில் திருப்பணி தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஸ்ரீபெரும்புதூர், அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பாஷ்யக்கார சுவாமி திருக்கோயிலுக்கு ரூ2.08 கோடி மதிப்பீட்டில் தங்க விமானம் அமைக்கப்பட்டு 30.04.200760 குடமுழுக்கு நடைபெற்றது.

திருக்கோயில்களால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த பசுமடங்கள்

திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளை பராமரிக்க அனைத்து வசதிகளும் நிறைந்த, ஒருங்கிணைந்த கோசாலைகள் பழனி, திருச்செந்தூர், இராமேசுவரம், திருச்சி ஆகிய நான்கு இடங்களில் அமைக்கப்பட்டன. திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மூலம் 189 கால்நடைகளையும், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மூலம் 278 கால்நடைகளையும், அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலிலிருந்து 176 கால்நடைகளையும், ஸ்ரீவாஞ்சியம், அருள்மிகு வாஞ்சிநாத சுவாமி திருக்கோயில், திருவாரூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் மற்றும் திருக்கண்ணபுரம், அருள்மிகு சௌரிராஜப் பெருமாள் ஆகிய திருக்கோயில்கள் மூலம் 16 கால்நடைகளையும், மகளிர் சுயநிதி உதவி குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்/பூசாரிகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டன.

துறை நிருவாகம் – செம்மைப்படுத்துதல்

• இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாகத்தை செம்மைப்படுத்தவும், மாவட்டந்தோறும் மக்கள் பணி செய்ய ஓர் அலுவலகம் என்ற நிலையை உருவாக்கிடவும், கரூர், திண்டுக்கல், திருவாரூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஐந்து வருவாய் மாவட்டங்களில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகம் புதிதாக ஏற்படுத்த ஆணையிடப்பட்டு, அவை 15.04.2008 முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.

திருக்கோயில்களின் திருப்பணிகளைக் கண்காணித்திடவும், மதிப்பீடுகளை கூர்ந்தாய்வு செய்திடவும் ஒரு உதவி பொறியாளர் (சிவில்), உதவி பொறியாளர் (மின்சாரம்), ஒரு முதுநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் ஒரு வரைதொழில் அலுவலர் ஆகிய நான்கு பணியிடங்கள் தலைமையிடத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

திருக்கோயில்களின் திருப்பணிகளைக் கண்காணித்திடவும், மதிப்பீடுகளை கூர்ந்தாய்வு செய்திடவும் திருச்சி, சேலம், மதுரை ஆகிய இணை ஆணையர் அலுவலகத்திற்கு ஒரு உதவி செயற்பொறியாளர் பணியிடம், திருவள்ளூர்,

திருவாரூர், கரூர், அரியலூர், நாமக்கல் ஆகிய உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு முறையே ஐந்து உதவி பொறியாளர் (சிவில்) பணியிடங்கள், திருச்சி, சேலம், மதுரை ஆகிய இணை ஆணையர் மண்டலங்களில் முறையே மூன்று உதவி பொறியாளர் (மின்சாரம்) பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை, திருச்சி, மதுரை மற்றும் சேலம் ஆகிய இணை ஆணையர் கோட்டங்களில் நடைபெறும் திருப்பணிகளுக்கான வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு தயார் செய்வதற்கு ஏதவாக நான்கு முதுநிலை வரைவுஅலுவலர்கள் மற்றும் நான்கு வரைவு அலுவலர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திருக்கோயில் நிலம் – மனை வாடகை சீரமைத்தல்

திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் குடியிருப்பவர்களுக்கான வாடகை விகிதம் பாதியாகக் குறைத்து வாடகை நிர்ணயம் சீரமைக்கப்பட்டது. திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம், மனை ஆகியவற்றில் குடியிருப்போர், வணிகம் செய்வோர் ஆகிய அனைத்து தரப்பினரும் செலுத்த வேண்டிய மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையான வாடகை உயர்வை 33.3 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாக குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது.'

திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் நீண்ட காலமாக கூட்டாக ஆக்கிரமித்து குடியிருப்போர்களை, திருக்கோயிலுக்கு நன்மை பயக்கும் வகையில் வாடகைதார்களாக அங்கீகரிக்க அரசாணை வெளியிடப்பட்டு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டத்தில், இதுவரை 3,570 பேரின் ஆக்கிரமிப்புகள் வரன்முறை செய்யப்பட்டு, அவர்களுக்கு வாடகை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு மின்சாரம், குடிநீர், சாலைபோக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை, சென்னையைச் சுற்றியுள்ள நிலங்களில் விலை உயர்வை கருத்தில் கொண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடங்களை பாதுகாக்கும் நோக்கோடும். திருக்கோயில் வருவாயை பெருக்கிடவும், திருக்கோயிலுக்குச் சொந்தமான ஏழு இடங்களில், வாகன பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நீதிமன்ற கட்டணம்

திருக்கோயில்களின் சொத்துக்களை மீட்க தாக்கல் செய்யப்படும் விளம்புகை வழக்குகளில் நீதிமன்ற கட்டணத்தை உயர்ந்தபட்சமாக ரூ.100/- என நிர்ணயித்து 09.04.2010 அன்று அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

புரவலர் விருது மற்றும் தங்க நிற அட்டை வழங்கும் திட்டம்

திருக்கோயில்களில், திருப்பணி மேற்கொள்வதற்கான நிதி ஆதாரத்தினை திரட்டிட 'புரவலர் விருது மற்றும் தங்க நிற அட்டை' வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.5 இலட்சம் நன்கொடை வழங்குபவர்களுக்கு 'திருக்கோயில் புரவலர்' என்ற சான்றிதழும், 'தங்க நிற அட்டையும்' வழங்குவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி ரூ. 5 இலட்சம் நன்கொடை வழங்குபவருக்கு அல்லது நன்கொடை அளிக்கும் நிறுவனத்திற்கு, 'திருக்கோயில் புரவலர்' என்று பொறிக்கட்டபட்ட 'தங்க நிற அட்டை' வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இவர்கள் குடும்பத்தினருக்கு அல்லது நிறுவனத்திற்கு 5 நபர்களுக்கு மிகாமல், அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் 20 வருடங்களுக்கு தரிசனம் செய்ய சிறப்பு நுழைவு அனுமதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 42 புரவலர்களுக்கு தங்க நிற அட்டை வழங்கப்பட்டுள்ளதன் மூலம் ரூ.2:10 கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது.

திருக்கோயில்களால் நடத்தப்படும் மூன்று கல்லூரிகளுக்கு நிதி உதவியளித்தல் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதிமாற்றத்தின் மூலம் ரூ.5 கோடி அளவில் மைய நிதி உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.15 இலட்சம் வீதம் ரூ.45 இலட்சம் இந்து சமய அறநிலையத்துறையால் நடத்தப்படும் பராசக்தி மகளிர்

கல்லூரி, குற்றாலம், தேவி குமாரி மகளிர் கல்லூரி, குழித்துறை, பூம்புகார் கல்லூரி, மேலையூர் ஆகிய மூன்று கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கட்டடங்கள், ஆய்வகம், நூலகம், கணினி, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளைச் செய்திட நிதி உதவி வழங்க ஆணையிடப்பட்டது. இந்த மைய நிதி வட்டித் தொகையிலிருந்து மேலையூர், பூம்புகார் கல்லூரியில் புதிதாக ஆய்வாகம் கட்டுவதற்காக ரூ.13.00 இலட்சமும், குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில் தார் சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 13.00 இலட்சமும் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் மூலம் நடத்தப்படும் பள்ளிகளுக்கு நிதி உதவி

நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதிமாற்றத்தின் மூலம் ரூ. 5கோடி அளவில் மைய நிதி உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, ஆண்டுதோறும், இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 36 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களது நலனைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான அடிப்படை வசதிகள், ஆய்வகங்கள், நூலகங்கள் மற்றும் கணினி வசதிகள் செய்திட நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டது. இந்த மைய நிதி வட்டித் தொகையிலிருந்து திருவெண்காடு, எஸ். எஸ். டி. மேல்நிலைப்பள்ளி ஆய்வுக் கூடம் மற்றும் குடிநீர் வசதி ஆகிய மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.9 இலட்சமும், திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பண்பொழில், அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூட பணிக்கு ரூ.9 இலட்சமும், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துபேட்டை, அருள்மிகு பெரியநாயகி அம்மன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வு கூட பணிக்கு ரூ.9 இலட்சமும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வரும் கருணை இல்ல மாணவ, மாணவிகளுக்கு தகுதியின் அடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறையால் நிர்வகிக்கப்படும் கலைக்கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள் ஆகியவற்றில் அவர்களுக்கு கல்வி கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

திருக்கோயில்கள் பாதுகாப்பு

திருக்கோயில்களுக்கு களவு எச்சரிக்கை மணிகள் பொருத்திட நிதி வசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து ரூ.5 கோடி நிதி பெற்று ஒரு மைய நிதி உருவாக்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இம்மைய நிதியிலிருந்து பெறப்பட்ட வட்டித் தொகையில் 22 திருக்கோயில்களுக்கு ரூ. 3,43,793/- வழங்கப்பட்டுள்ளது.

போதிய பாதுகாப்பு வசதியற்ற திருக்கோயில்களின் உலோகத் திருமேனிகளை பாதுகாத்திட 15 இடங்களில் "உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் கட்டப்பட்டு உள்ளன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்ற வகையில் திருவொற்றியூர், திருத்தணி, விருதுநகர், விழுப்புரம் மற்றும் தர்மபுரி ஆகிய ஐந்து இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டுவதற்காக ரூ.1.75 கோடி வழங்கப்பட்டது.

திருக்கோயில் பணியாளர்கள் நலத்திட்டம்

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, 01.01.2006 முதல் ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 750/- வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 01.01.2010 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.750 என வழங்கப்பட்ட ஓய்வூதியம் 01.01.2010 முதல் 800/- ஆக உயர்த்தப்பட்டும், 01.01.2010 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.800/- வீதம் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பளத்துடன் 50% அகவிலைப்படி சேர்க்கப்பட்டு ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு, பணிக்காலத்தில் இறக்கும் பணியாளர்களது குடும்பத்தார்களுக்கு உதவும் விதமாக அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப நலநிதித் தொகை ரூ.75,000/- என்பதனை 20.10.2008 முதல் ரூ.1 இலட்சமாக

உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. மேலும், 334 பணியாளர்களது குடும்பத்தாருக்கு குடும்பநல நிதியாக ரூ.2.53 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டு வருவாய் ரூ. ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருவாய் வரப்பெறும் திருக்கோயில்களில் பணியாற்றி பணி ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு, சிறப்பு சேம நலநிதித் திட்டத்தின் கீழ் பணிக்கொடையாக ரூ.1,000/- என வழங்கப்பட்டு வந்ததனை ரூ.5,000/- என உயர்த்தி வழங்கப்பட்டது.

ஆண்டு வருவாய் ரூ.40,000/-க்கு குறைவான வருவாய் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் ரூ.400/-க்கு கீழ் மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவைத் தொகை வழங்க பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடியை வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைப்பு நிதி முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையில் இருந்து இந்தப் பணியாளர்களின் சம்பள நிலுவைத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 20.10.2008 முதல் ரூ.1 இலட்சத்திற்குக் குறைவான ஆண்டு வருவாய் உள்ள திருக்கோயில்கள் பயன்பெறும் வகையிலும், அங்கு பணிபுரியும் ரூ.750/-க்கு கீழ் சம்பளம் பெறும் பணியாளர்கள் பயன்பெறும் வகையிலும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இதுவரை 2,588 திருக்கோயில்களில் பணிபுரியும் 3,673 பயனாளிகளுக்கு சம்பள நிலுவைத் தொகையான ரூ. 1.098 கோடி வழங்கப்பட்டது.

திருக்கோயில் பணியாளரின் மகன் / மகளுக்கு மடிக்கணினி வழங்குதல்

மேல்நிலைப் பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு அவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில், முதல் 100 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க உத்தரவிடப்பட்டு வழங்கப்பட்டது.

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பு பயிலும் திருக்கோயில் பணியாளரின் மகன் அல்லது மகளுக்கு முதலாம் ஆண்டு கல்வி கட்டணத்தில் 25 சதவிகித தொகை நிதியுதவியாக வழங்க உத்தரவிடப்பட்டு வழங்கப்பட்டது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்குதல். திருக்கோயில் பணியாளர்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் காணும் வகையில் முக்கிய திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான சீருடைகள் வழங்கவும், அடையாள அட்டைகள் வழங்கவும் உத்தரவிடப்பட்டு, முக்கிய திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு கணினி பயிற்சி அளித்தல்

திருக்கோயில் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அடிப்படை கணினிப் பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டு, முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்குக் கணினி பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

திருக்கோயில்களில் யோகாசன பயிற்சி வகுப்புகள்

அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்கள் உட்பட மொத்தம் 485 திருக்கோயில்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நேரத்தில் சிறுவர்களுக்கு ஆன்மிக நெறி, நீதி மற்றும் ஒழுக்கத்தை கற்பிக்கும் ஆன்மிக வகுப்புகள் சான்றோர்களால் நடத்தப்பட்டன. மேலும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலையில் ஆன்மிக வகுப்புகள் நடத்தப்பட்டது.

திருக்கோயில்களில் தமிழ்ப் புத்தாண்டு விழா

தமிழ்ப் புத்தாண்டு தினமாக தை மாதம் முதல்நாளை அறிவித்ததனையடுத்து இத்துறை ஆளுகையின் கீழுள்ள முக்கிய திருக்கோயில்களில் தமிழ்ப் புத்தாண்டு சிறப்பாக கொண்டாடவும் அந்நாளில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு திருக்குறளில் கட்டுரை எழுதுதல், குறள் ஒப்புவித்தல், பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க ஆணையிடப்பட்டு, அதன்படி இந்த ஆண்டு தை மாதம் முதல் தேதியன்று தமிழ்ப் புத்தாண்டு விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மாண்புக்கெல்லாம் மாண்பான மாண்பமைந்த முதல்வா!





– கவிஞர் வாலி

நான்
காதலாகி
கசிந்து கண்ணீர் மல்கி
கைகூப்பித் தொழும்; தமிழ்க்
கடவுளென கண்முன் எழும்
மாண்புக்கெல்லாம் மாண்பான
மாண்பமைந்த முதல்வா!
அற்றை நாளில்-ஓர்
ஆண்மகவு வேண்டுமென்று
பெற்றோர் நோன்பிருந்து
பெற்றெடுத்த புதல்வா!
நூற்கடல் முத்துவேலர்-ஒரு
நொடிக்கு நொடி நேசித்த
பாற்கடல் அஞ்சுகத்தன்னை
பயந்தநல் அமுதமே!
மடமையில் உறங்கும்-இந்த
மண்விழிக்க வேண்டி-ஒரு
கற்பரசி மடிக்குளத்தில்
கண்விழித்த குமுதமே!
சிறு
மகவு அனையதொரு
மனம் படைத்தோய்!உன்
தகவு அடங்குமோ-என்
தமிழுக்குள்?பசிபிக்
சமுத்திரம் அடங்குமோ-சின்ன
சிமிழுக்குள்?
என்னிடத்தில்
ஏது-உன்
சீர்த்தியைச்சுட்ட-ஒரு
சொற்குறி?
உன்
விஷயத்தில்
தலைவா!நானொரு
தற்குறி!
கறுப்பு சிவப்பு
கரைகொண்ட வேட்டியை
உடுத்தி நடக்கும்
உதயசூரியனே!
முரசொலியில் நீ வரையும்
மடல்படித்து-உன்னுள்
இடம்பிடிக்கும் உடன்பிறப்புக்களின்
இதயசூரியனே!
ஞான
ஞாயிறே!

உனக்குஉண்டு சுத்தமனம்;
உனக்குஉண்டு ஒத்தமனம்;
உனக்குஉண்டு யுத்தமனம்;
உனக்குஇல்லை அத்தமனம்!
பேசரிய பீடுடைய
பெருந்தகையே!
கூலிங்கிளாஸ் அணிந்த
குறுந்தொகையே!
அணுவளவும் குறையாது-உன்
ஆரோக்கியம்!முன்னம்
அரசாண்டவர்களில்-
உன்னைவிட
ஆர் யோக்கியம்?
சிலர்
வாழ்ந்த வாழ்வை-அவர்களது
வண்டவாளம் சொல்லும்;உன்
தியாகவாழ்வை-கல்லக்குடி
தண்டவாளம் சொல்லும்!
நிச்சயம்-நீ
நூறாண்டு வாழ்வாய்!
ஆம்!
அது...
தீர்க்கசுமங்கலியாம்
தயாளுஅம்மாளின்
தாலிபாக்கியம்;அதுவே இந்த
வாலி பாக்கியம்!
ஊராளும்
உத்தமனே!
உன்பெயர் சொல்லி-தன்
உச்சந்தலையில்-தினம்
பூசாத்திமகிழும்-பெண்ணரசி
ராசாத்தி துணைவா-இரு
நங்கையர் திலகங்களுக்கும்-நீ
நெடுங்காலம் துணைவா!
சிம்மாசனத்திலும்;தமிழ்ச்
சனத்தின் மனத்திலும்...
கொலுவமர்ந்து-செங்

கோலோச்சும் தலைவா!
உனக்கும் சோம்பலுக்கும்
ஓராயிரம் கல் தொலைவா?
வேலையில் மூழ்கிவிட்டால்-
உன்
விழிகள் தூங்கா;
நாட்டவர்நலத்தை-உன்
நினைப்புகள் நீங்கா;உன்
கோட்டை மேசையில்
கோப்புகள் தேங்கா;உன்னால்
ஆனதய்யா-தமிழ் பூமி
அமைதிப்பூங்கா!
நீ
'ஏ.எம்' முதல்
'பி.எம்' வரை
சலிக்காது உழைக்கும்
'சி.எம்'.
நீ தேசுமிகு-தமிழ்த்
தேயம்-தனைக்காக்கச்
சிலிர்த்து நிற்கும்
சீயம்!
முத்தமிழ் வித்தகமே!கால்கள்
முளைத்து நடக்கும் முப்பால்
புத்தகமே!
நீ
நாடாளுகின்றாய்
நான்காம் தடவை
உன்னை இனி
வெல்லுமோ புடவை!
நிச்சயம்
நாளைய தேர்தல்-இந்த
நான்கை ஆக்கும் ஐந்தா!நீயே
தான்
அடுத்த முதல்வன்
அஞ்சுகம் மைந்தா
தலைமுறை
தலைமுறையாய்த்
தலைவனாயிருந்தும்
தலைகனக்காத விந்தையே-
மாநகரத்
தந்தையின் தந்தையே
உன்னால் தான் உண்டானது
உழவர் சந்தையே;இனி
உழவர் பெருமக்கள்-
உடுக்கமாட்டார் கந்தையே!
சதா
சர்வகாலமும்
மக்கள் பக்கம் தான்
மன்னா!உன் சிந்தையே
என்ன செய்யும்?
ஏது செய்யும்?
வசவாளர்கள் உன்மேல்
வீசுகின்ற நிந்தையே!
சிலர்
வாய்புளிக்கச் சொல்லுவார்
'வந்தபின் பார்ப்போம்' என்று;
வள்ளலே!நீ தான் சொன்னாய்
'வருமுன் காப்போம்' என்று!
சாதிக்கும் சாதிக்கும்
சண்டைகள் வராமல்
சாதிக்கும்-நீ கட்டிய
சமத்துவபுரங்கள்;அவை
வன்பகை தீர மன்பதைக்கு-நீ
வழங்கிய வரங்கள்
இனி
இங்கு
கூன்பிறையும் கோதண்டமும்
கைகுலுக்கும்;
சிலுவையும் அவற்றை
சினேகிக்கும்!
ஏசுதேவனும்,
வாசுதேவனும் கூடுவர்;இது
காறும்
'டூ' விட்டிருந்தவர்
டூயட் பாடுவர்!
நாடாளும்
நல்லவனே
நீ
சாதித்திருக்கிறாய்
சமயப்பொதுமறை;
இது சாதரணமானதல்ல
இமயப்பொறை!
அன்பின் மேன்மை
அறிந்தவன் நீ;
'அன்பின் வழியது
உயிர்நிலை!' என
அய்யன் வள்ளுவன்-
செப்பிய ஞானம்-
செறிந்தவன் நீ!
மாண்புமிகு மாறனின்
மற்றொரு தாயே! உன்
அன்பினாலன்றோ தீர்ந்தது
அன்னவன் நோயே.
'அக்கா மகன்' என்ற
அளவிலா
அன்பு காட்டினாய்?நீயே
பெற்ற
பக்காமகன் என்று அல்லவோ
பாசம் ஊட்டினாய்!
அந்நாளில்-உன்னை
அனேகம் பேர் அழைப்பர்-
உன்
முழுப்பெயர் சொல்லாமல்-
'மு.க.,மு.க' என்று.
பிறகு தான் எனக்குப்
புரிந்தது-நீ
முத்தமிழர் மூச்சுவாங்கும்
மூக்காயிருக்கிறாய் என்று!
இனிய தலைவனே!நீ
இன விடுதலைக்காக...
உண்ணாவிரதம் நோற்காமல்
அண்ணாவிரதம் நோற்றவன்;
அண்ணாவின் நாமத்தை-உன்
உண்ணாவில் ஏற்றவன்!
அதனால் தான்
அய்யா!நீ...
அண்ணனுக்குப் பின்
அண்ணனானாய்..அந்த
மன்னனுக்குப்பின்
மன்னனானாய்!
உன்னைப் பற்றி..நான்
ஓர்ந்ததைச் சொல்வேன்...
நீ
தாடியில்லாத பெரியார்;
பொடியில்லாத அண்ணா..
அவ்
இருவரும் உன்வடிவில்
இருக்கின்றார் ஒன்னா!
நீ
வாலறிவன்;உன்னில் நான்
காலறிவன்
எனினும் என்
எழுத்துக்களை ஏற்று
'நன்று!நன்று'
எனக்களித்தாய்;இன்று
நல்விருதும்
எனக்களித்தாய்!
பெரியவனே!நீயெனைப்
பெரும்புகழ் என்னும்...
தொட்டிலில் போட்டுத்
தாலாட்டும் தாயானாய்;நான்
வாழ்நாளெல்லாம்
நன்றியோடு
வாலாட்டும் நாயானேன்



பகுத்தறிவு, சீர்திருத்தச் செம்மல் கலைஞர்



“இளமைப் பலி”

அண்ணா அவர்களின் திராவிடநாடு இதழில்
கலைஞர் எழுதி வெளிவந்த முதல் கட்டுரை


முத்தமிழறிஞர் கலைஞர், பேரறிஞர் அண்ணா அவர்களைச் சந்திப்பதற்கு முன்பாக, அண்ணா அவர்களின், திராவிட நாடு இதழுக்கு “இளமைப் பலி”எனும் கட்டுரை ஒன்றை எழுதி அனுப்பினார். திராவிடநாடு இதழில், 26.4.1942 அன்று வெளியானது அக்கட்டுரை.

இளமைப் பலி கட்டுரை மூலம்,“மனைவி இறந்தால் மறுதாரம் மணம் புரியும் நீ மங்கையரின் மறுமணத்தை வெறுப்பது நன்றா?” என்று ஆண்களை நோக்கி சமத்துவக் கேள்வி கேட்கிறார், சமூகநீதி நாயகர் கலைஞர்.

பெண் விடுதலை, கைம்மை மறுமணம், ஜாதி மறுப்பு, பகுத்தறிவு, புராண எதிர்ப்பு இத்தனை செய்திகளையும் ஒரே ஒரு கட்டுரையில் எழுத முடியுமா? அதுவும் 500–க்கும் குறைவான சொற்களைக் கொண்ட ஒரு சிறிய கட்டுரையில்? முடியும் என்றால் அதற்கான விடைதான் கலைஞர். அச்சில் வெளிவந்த, கலைஞரின் முதல் படைப்பாக வெளியானது இக்கட்டுரை. கட்டுரையை எழுதியபோது கலைஞரின் வயது 18.

16 வயதே நிரம்பிய சிறுமிக்கு ஒரு முதியவனை மணம் முடிக்கிறார்கள். அவள் காதலித்த இளைஞனை ஜாதியின் காரணத்தால் மணம் முடிக்க மறுக்கிறார்கள். அந்தோ பரிதாபம் ! அம்முதியவர் ஆண்டொன்று தாண்டவில்லை. முதுமையால் மடிகிறார். அந்தக் கைம்பெண்ணின் கவலையை எழுத்தோவியமாக வடிக்கிறார் கலைஞர். அவளுக்கு மறுமணம் செய்வதல்லவா நியாயம் என்கிறார். கைம்பெண்ணின் துயரத்தைக் கலைஞரின் வார்த்தைகளிலேயே காணலாம்.

“கடவுளின் பேரால் மனிதரை ஏமாற்றி வாழும் கூட்டத்தினரின் வைதீக போதனையால் அவள் நல்லுடை அணியாவண்ணம் தடுத்து, விதவை என்ற பட்டத்தை விரும்பிக் கொடுத்தது. துயரக் கணையைத் தொடுத்தது. என்னென்றியம்புவது பெற்றோரின் மடமையை? யாதென்றுரைப்பது கைம்மைக் கொடுமையை? மறுமணந்தான் உண்டா மங்கை நல்லாள் இன்பமுற?”



“மனைவி இறந்தால் மறுதாரம் மணம் புரியும் நீ மங்கையரின் மறுமணத்தை வெறுப்பது நன்றா?” என்று ஆண்களை நோக்கிச் சமத்துவக் கேள்வி கேட்கிறார் சமூகநீதி நாயகர் கலைஞர்.

‘இளமைப் பலி’ கட்டுரை வெளியான பின்பு, கட்டுரையை எழுதியவருக்கு 40, 45 வயது இருக்கலாம் என எண்ணி இருந்த அண்ணா அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு, கலைஞருக்குக் கிடைத்தது.“இனி, கட்டுரைகள் எழுதாதே” என்கிறார் அண்ணா, கலைஞரிடம். இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு அரசியலுக்கு வர வேண்டும் என்பது அண்ணாவின் அக்கறை. அவர்களது அரசியல் வேட்கையினால், படிப்பு பாழாகி விடக் கூடாதே என்பது அவர்தம் உள்ளக் கிடக்கை.

கலைஞரின் வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கான அரசியல் பாடம். அவரது எழுத்து இளைய தலைமுறைக்கான அரசியல் வழிகாட்டி!



உதயநிதி ஸ்டாலின்

திரு. உதயநிதி ஸ்டாலின், நூற்றாண்டு விழா சிறப்பு மலரின் நாயகரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அருமைப் பேரன்; இன்றைய மாண்புமிகு முதலமைச்சர், திராவிட மாடல் ஆட்சியின் வித்தகர் திரு. மு. க. ஸ்டாலின், அவர்களின் அன்புத் திருமகன். இவர் ஒரு முன்னணி தமிழ்த் திரைப்பட நடிகர், தயாரிப்பாளராக விளங்கியவர்; தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகத் திகழ்கிறார். இன்றைய இளைஞர்களை ஈர்க்கும் காந்தமென விளங்குகிறார்.



சுயாட்சியின் சுடரொளி

திரு. **உதயநிதி ஸ்டாலின்**
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

தமிழ்நாட்டு அரசியல் சூழல் சார்ந்து பல காரணங்களால், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு கூறப்படுகிறார். அவற்றில் உயர் வினையாகக் குறிப்பிட வேண்டிய ஒன்று மாநில சுயாட்சிக்காக ஓங்கி ஒலித்த அவரது குரல்.

இந்திய அளவில் வேறு எந்த மாநிலத்திலும் எழாத அளவுக்கு உரிமை சார்ந்த முழக்கம் தமிழ்நாட்டில் இருந்து எழுந்துள்ளது. சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்திய ஜனநாயக அமைப்பில், மாநில உரிமை சார்ந்து அதிகமாகப் பேசிய இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பது, அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாதது. இந்தப் பின்னணியில் இருந்து நோக்கினால், மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தை வென்ற முதல் கட்சியாகவும் தி.மு.கழகம் உள்ளது. தி.மு.க ஆட்சி அமைத்த முதல் 2 ஆண்டுகளில் பேரறிஞர் அண்ணா மாநில உரிமைகள் சார்ந்து தொடர்ச்சியாக வலியுறுத்துகிறார்.

மாநில உரிமைகள் பேசும் கட்சிகளுக்கு எதிராக, அந்தக் கட்சிகளைத் தடை செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தில் கொண்டுவரப்பட்ட பிரிவினைவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக பேரறிஞர் அண்ணா பேசும்போதுகூட, "திராவிட நாட்டுக்கான எங்கள் கோரிக்கைகள் அப்படியே உள்ளன" என்று முழங்கி இருப்பார்.

அதன் தொடர்ச்சியாக, முத்தமிழறிஞர் கலைஞர் மாநில சுயாட்சிக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தவராக இருக்கிறார். மத்தியில் கூட்டு அரசாங்கம், மாநிலத்தில் ஆளும் கட்சிக்கு, சுயமாக முடிவெடுக்கும் அதிகாரம். இந்தக் கோட்பாடுதான் இந்திய ஜனநாயகத்தை வலுவாக்கும் என்று அழுத்தமாக, பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர் வலியுறுத்தியவராகவும் இருந்தவர் கலைஞர்.

1969ஆம் ஆண்டில் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், அடுத்த சில மாதங்களில், மாநிலங்களுக்கான அதிகார வரம்புகள் குறித்துத் தெளிவாக வரையறுக்க வேண்டும் எனக் குழு அமைக்கிறார்.

ஒன்றிய அரசுக்கு எவையெல்லாம் அதிகாரம்? மாநில அரசுக்கு எவையெல்லாம் அதிகாரம்? என ஜனநாயகத்தின் மிக முக்கிய ஆதாரத்தின் மீது, கலைஞரின் கவனம் குவிந்துள்ளது. அதுதான் புகழ்பெற்ற ராஜமன்னார் குழு அறிக்கையாகவும், மாநில சுயாட்சித் தீர்மானமாகவும் நிலை பெற்றுள்ளது.

மாநில உரிமைகள் குறித்து இன்றளவும் விவாதங்கள் எழும் நிலையில், ராஜமன்னார் குழுவின் அறிக்கை மேற்கோள் காட்டப்படுவதைத் தவிர்க்க முடியாது.

1974ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி குறித்து, கலைஞர் கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியாவே திரும்பிப் பார்த்தது. சுமார், ஒரு வார காலம் அனல் பறக்க நடந்த விவாதங்கள், இந்திய ஜனநாயகத்துக்குப் பாடமாக இன்றளவும் உள்ளன.

மாநில சுயாட்சி குறித்து கலைஞர் எந்த அளவுக்குத் தீவிரமாக இருந்தார் எனில், அவர் இப்படிச் சொல்வதில் இருந்து புரிந்து கொள்ளலாம். ‘‘மாநில சுயாட்சி கேட்பதற்காக தி.மு.க. அரசாங்கம் கலைக்கப்படுமானால், என் வாழ்க்கைச் சரித்திரத்தில் அதைவிட வேறொரு புனிதமான சம்பவம் இருக்க முடியாது’’ என அப்போது மயிலை மாங்கொல்லையில் நடந்த பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மாநில உரிமையை நிலைநாட்டுவதில், அவர் காட்டிய வேகத்துக்கு ஓர் உதாரணமாகச் சுதந்திர நாளில் கொடியேற்றும் உரிமையைக் குறிப்பிடலாம்.

சுதந்திரத் தினத்தன்று மாநிலத் தலைநகரில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட முதலமைச்சர் கொடி ஏற்றாமல், ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட, மாநிலத்துக்குத் தொடர்பே இல்லாத ஆளுநர் கொடியேற்றுவது ஜனநாயக ரீதியாக நன்றாகவா இருக்கும்? எனக் கேள்வி எழுப்பினார்.

இதையொட்டி, முரசொலியில், மாநிலத் தலைநகரங்களில் மாநில முதலமைச்சர்கள் ஏன் கொடியேற்ற வேண்டும்? என மிக நீண்ட கடிதம் ஒன்றையே தீட்டி உள்ளார் கலைஞர்.

கலைஞரின் உரிமை முழக்கத்துக்குப் பின்னரே தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களுக்கும் அந்த உரிமை கிடைத்தது என்பது வரலாறு.

ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது மட்டுமல்ல, தி.மு.கழகத்தின் அடிப்படைக் கொள்கை வெளிப்பாடாகவே பல இடங்களில் மாநில சுயாட்சிக்கான முழக்கத்தை எழுப்பியவர் கலைஞர்.

ஒவ்வொரு சட்டமன்ற – நாடாளுமன்றத் தேர்தலின் போதும் அவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கைகள் அனைத்திலும் மாநில சுயாட்சிக்கு ஏற்ப அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று அழுத்தமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒன்றிய அரசுக்கான அதிகார வரம்புகள் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும், இந்திய அளவில் தெளிவாக இருந்த ஒரே தலைவராகக் கலைஞரைப் பார்க்கலாம்.

மாநிலங்களின் வளர்ச்சி, சிந்தனைப் போக்கு ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசுதான் முழு உரிமை கொண்டது என்பதற்கு, அவர் நடத்திக் காட்டிய சட்டப் போராட்டங்கள், அரசியலமைப்புப் போராட்டங்கள்தான் ஒட்டுமொத்த அளவில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக் காரணிகளாக இருப்பதைக் கவனிக்கலாம்.

சுயமாக இயங்கக்கூடிய மாநில அரசு, ஒரு சுயமரியாதை உள்ள அரசு, ஒன்றியத்தைச் சார்ந்திராத அரசு, ஒற்றுமையே வலிமை என்பதை உணர்ந்த அரசு இப்படி, கலைஞர் தம் வாழ்நாளில் கொண்டிருந்த மகத்தான கொள்கைகளில் ஒன்று மாநில சுயாட்சி.

இந்த வரலாறுகளினூடே, கலைஞருக்குப் பின்னர் அதே வேகத்துடனும் அதே ஆற்றலுடனும் மாநில உரிமைகளைப் பேசுபவராக இருக்கிறார் மாண்புமிகு நமது முதலமைச்சர். கழக ஆட்சி அமைந்த இந்த இரண்டு ஆண்டுகளில், ஒன்றிய அரசு ஏற்கெனவே பறித்த மாநில உரிமைகளை மீட்கவும், மாநில உரிமைகளை விட்டுத்தராமல் இருக்கவும் மாண்புமிகு நமது முதலமைச்சர் உறுதியாக முன் நிற்கிறார்.

உதாரணமாக, நீட் தேர்வு விலக்கு விவகாரத்தில் மாண்புமிகு நமது முதலமைச்சர் முன்னெடுக்கும் சட்டப் போராட்டம் மாநில சுயாட்சிப் போராட்டத்தின் நீட்சியாகவே உள்ளது.

நீட் தேர்வு மாநில நலனுக்கு எதிராக உள்ளது என்பதை வலியுறுத்தினாலும், அதற்கு வலுவான காரணங்களை முன்வைப்பதற்காக நீதியரசர் A.K. ராஜன் தலைமையில் ஒரு கமிட்டியை அமைத்தார். அந்தக்கமிட்டி அளித்த அறிக்கையை மொழிபெயர்த்து, மாநில உரிமைகளைப் பேசும் மற்ற மாநிலங்களுக்கும் கொண்டு சேர்த்தார், மாண்புமிகு நமது முதலமைச்சர்.

வரிவிதிப்பு, வரிப் பங்கீடுகள், நிதி ஒதுக்கீடுகள் ஆகியவற்றில் மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதி, குறிப்பாக, தமிழ்நாட்டுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்துத் தொடர்ச்சியாக ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பவராக மாண்புமிகு நமது முதலமைச்சர் செயல்படுகிறார்.

மாநில சட்டமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றி அளிக்கும் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், ஆளுநர் மாநில மக்களுக்குச் செய்யும் துரோகம் குறித்து உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி உள்ளார், மாண்புமிகு நமது முதலமைச்சர்.

இப்படித் தொடர்ச்சியாக மாநில சுயாட்சி அதிகாரத்தினை உயர்த்திப் பிடித்து, உரிமைக்குரல் எழுப்பி வருகிறது, நம் திராவிட மாடல் அரசு.

இந்தியாவை ஆளும் ஒன்றிய அரசு, மாநில உரிமைகளைக் காலில் போட்டு மிதித்துவரும் இந்நாளில், அதற்கு எதிராக மாநில சுயாட்சியின் மகத்தான குரலாகக் கலைஞரின் குரல் என்றும் ஒலிக்கும்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், நம் திராவிட மாடல் அரசை வழிநடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மாநில சுயாட்சி உரிமை முழக்கங்களே, அதற்குச் சான்று.

❋ ❋ ❋



கனிமொழி கருணாநிதி

கனிமொழி கருணாநிதி முத்தமிழறிஞரின் வீரத்திருமகள். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகத் திகழ்ந்தவர். 2019 ஆம் ஆண்டு தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் வென்று தற்போது 17–வது மக்களவையின் உறுப்பினர். நாடாளுமன்றக் கழகக் குழுவின் துணைத் தலைவர். நாடாளுமன்றம் வாயிலாக புதுடெல்லியில் பல்வேறு கட்சித் தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். தமிழ்நாட்டு மக்களிடம் பொதுவாக அமைதியானவர், ஆற்றல் மிகுந்தவர் எனும் நன்மதிப்பையும் பெற்றுள்ளார். இவர் கருவறை வாசனை, அகத்திணை, பார்வைகள், கருக்கும் மருதாணி போன்ற 4 கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்; பாம்பே ஜெயஸ்ரீயுடன் இணைந்து சிலப்பதிகாரம் எனும் இசைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.



சமரசமில்லாப் பகுத்தறிவாளர் கலைஞர்

திருமதி **கனிமொழி கருணாநிதி**
மக்களவை உறுப்பினர்

தலைவர் கலைஞர் அவர்கள் தன் இறுதி மூச்சுவரை பகுத்தறிவாளராக, தான் கொண்ட கொள்கையிலிருந்து சிறிதும் பிறழாமல் வாழ்ந்து காட்டியவர். ஆனால் அந்த பயணம் மிக எளிதாக அமைந்துவிடவில்லை. அவர் 6ஆம் வகுப்பு படிக்கும் போதே 'சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தைத்' தொடங்கிச் சாதிப் பாகுபாடுகளுக்கு எதிராகவும், மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் கூட்டங்கள் நடத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள். தமது 18 வயதிலேயே கையெழுத்துப் பிரசுரமாக 'முரசொலியை' தொடங்கியவர். பின்னாளில் முரசொலியை அச்சிட முயன்றபோது அதிலிருந்த கடவுள் மறுப்புக் கொள்கைகளால் பலரும் முரசொலியை அச்சிட மறுத்தபோது பல போராட்டங்களுக்குப் பிறகே அச்சிட முடிந்திருக்கிறது.

1945ஆம் ஆண்டு பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை மையப்படுத்தி 'சாந்தா அல்லது பழனியப்பன்' என்ற நாடகத்தை எழுதி அதில் அவரே நடித்தும் உள்ளார். அதன் தொடர்ச்சியாக பாண்டிச்சேரியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டின் போது, அவர்களுக்கு எதிரான கருத்துடையவர்கள் மாநாடு தொடங்கியவுடன் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். தலைவர் கலைஞர் அவர்கள் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டு அவர் இறந்துவிட்டதாக நினைத்து வீதியோரத்தில் வீசப்பட்டதும், பிறகு காப்பாற்றப்பட்டவுடன் பெரியாரே அவருக்கு மருந்திட்டதும் ஒரு மறக்க முடியாத வரலாறு.

தலைவர் கலைஞர் அவர்கள் தமது பகுத்தறிவுக் கொள்கைகளைத் தமது எழுத்துக்கள், நாடகங்கள், திரை வசனங்கள், மேடைப் பேச்சுகள் உள்ளிட்ட எல்லாத் தளங்களிலும் மக்களிடம் கொண்டு சேர்த்தவர். தமது முதலமைச்சர் பொறுப்பைத் தாம் கொண்ட பகுத்தறிவுக் கொள்கைகளில் எந்த சமரசமும் இன்றித் திறம்பட நிறைவேற்றியவர்.

அவர் என்றும் அவரது நம்பிக்கையைப் பிறர் புண்படும் வகையில் திணித்ததில்லை. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மற்றும் கிருபானந்த வாரியார் உடனான அவரது நட்பு, கொள்கைகள், நம்பிக்கைகள் கடந்து தமிழாலும், மக்கள் தொண்டின் மீது கொண்ட விருப்பாலும் அமைந்தது. பல ஆண்டுகள் தடைபட்டிருந்த திருவாரூர் ஆழித் தேரோட்டம் 1970ஆம் ஆண்டு அவரது ஆட்சிக் காலத்தில்தான் மீண்டும் நடைபெறத் தொடங்கியது. அவரது ஆட்சிக் காலத்தில்தான் மிக அதிகமாக ஆயிரக்கணக்கான கோயில்களுக்குத் திருக்குடமுழுக்குகள் நடைபெற்றன. அவர் தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் எனச் சட்டம் இயற்றியவர்.

தமது இறுதி நாட்களில் உடல் நலமின்றி, பேச இயலாத தருணத்தில் கூட தமது நெற்றியில் இடப்பட்ட கோயில் திருநீற்றை நொடியும் தாமதிக்காமல் அழித்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவரது பகுத்தறிவுப் பாதையில் எந்தச் சமரசமுமின்றித் தொடர்ந்து பயணிப்பதே நாம் அவருக்குச் செலுத்தும் மிகச் சிறந்த நன்றியாக இருக்கும்!



கி.சந்துரு

கிருஷ்ணசாமி சந்துரு

9.3.1951 தேதியன்று தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்தில் உள்ள திருவரங்கத்தில் பிறந்தவர்.

சந்துருவின் பள்ளிப்படிப்பு, கல்லூரிப் படிப்பு சென்னை மாநகரத்தில் தொடர்ந்தது. கல்லூரி மாணவராக இருந்த அவர், இடதுசாரி இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு, அதனது மாணவர் அமைப்பின் செயலாளராகப் பணியாற்றினார்.

பட்டப்படிப்புமுடிந்தபின் அவ்வியக்கத்தில்முழுநேர ஊழியராக 2 ஆண்டுகள் பணியாற்றிய அவர், 1976–ஆம் ஆண்டு சட்டப்படிப்பை முடித்து வக்கீல் உரிமம் பெற்றுச் சென்னை உயர்நீதிமன்றத்தில் பணியாற்றத் தொடங்கினார்.

அக்காலகட்டத்தில் மனித உரிமை, கருத்துரிமை வழக்குகள் பலவற்றை நடத்தி அனுபவம் பெற்ற அவர், 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு பார்கவுன்சில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

1997–ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் அவரை சீனியர் வக்கீலாக நியமித்து கௌரவப்படுத்தியது.

2006–ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர், 2013– ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

தமது நீதிபதி பணிக்காலத்தில் 96,000 வழக்குகளுக்குத் தீர்ப்பளித்துள்ளார்.

1993– ஆம் ஆண்டு முதல் சட்ட உலகிலுள்ள பல பிரச்சினைகளைப் பற்றிக் கட்டுரைத் தொடர்களைப் பல தமிழ் இதழ்களில் எழுத ஆரம்பித்த அவரது கட்டுரைகள் 7 தொகுப்பு நூல்களாகத் தமிழிலும், 6 நூல்கள் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன.

''சட்டத்தால் யுத்தம் செய்'' என்ற பாலின வழக்குகள் பற்றிய அவரது நூல் இதுவரை ஐந்து இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

''அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்'' என்ற சமயம், சாதிகள் குறித்த அவரது தீர்ப்புகள் பற்றிய நூல் ஆங்கிலத்திலும், மலையாளத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1993–ம் வருடம் அவர் நடத்திய வழக்கின் பின்புலத்தைக் கொண்டு ''ஜெய்பீம்'' என்ற திரைப்படம் வெளிவந்துள்ளது.

தமிழ்நாடு அரசின் ''அம்பேத்கர் விருது'' பெற்றுள்ள இவர், தற்சமயம் பல சமுதாயப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

பகுத்தறிவு இமயம் - கலைஞர்

நீதியரசர் **கி.சந்துரு**
மேனாள் நீதிபதி
சென்னை உயர்நீதிமன்றம்

பகுத்தறிவு பகலவன் என்று அழைக்கப்படும் பெரியாரின் மிகப்பெரிய ஒளிக்கீற்றாக உருவானவர் கலைஞர். அரசுக் கட்டிலில் ஏறவேண்டுமா என்ற கேள்வி எழுந்தபோது நிச்சயமாக அரசில் பங்கு வகிப்பதனால் பகுத்தறிவு எண்ணங்களைப் பரவலாக மக்களிடம் எடுத்துச் செல்லமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் கலைஞர். அவரது நூற்றாண்டில் அவரை நினைவு கூரும் விதமாகப் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு முதல்வர் அறிவித்துச் செயல்படுத்திக் காட்டி வருகிறார். அதன் ஒரு பகுதியாகத்தான் மதுரையில் கலைஞர் நினைவு நூலகம் மாபெரும் நினைவுச் சின்னமாக எழும்பிப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த நூலகத்திற்கு என்னுடைய நூல்களை நன்கொடையாக வழங்கி கலைஞர் நினைவிற்கு என் பங்கையும் செலுத்தியதைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசு கொண்டாடும் வகையில் 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில், ''பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர்'' என்ற குழுவில் என்னையும் உறுப்பினராக மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அறிவித்ததற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் குழுவின் சார்பாக விழா மலருக்குக் கட்டுரை ஒன்றைத் தருமாறு குழுவின் தலைவர் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கேட்டுக் கொண்டதன் விளைவாகவே இக்கட்டுரை.

பள்ளிப் பருவத்தில் பொதுக்கூட்டங்களில் கலைஞர் ஆற்றும் உரையைக் கேட்ட பின்னர் நடுநிசியில் வீடு திரும்பி வாங்கிக் கட்டிக் கொண்ட நிகழ்வுகள் இன்னும் நெஞ்சின் நிழலில் ஆடுகின்றன. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அவரது பேச்சுக்களில் கவரப்பட்டு அரசியல் பக்கத்தில் ஈர்க்கப்பட்டதில் நானும் ஒருவன். 1967–1968 ஆம் வருடம் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று ஆட்சிக்கட்டிலில் ஏறிய பின்னர் அவர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார். அப்பொழுது சென்னை அரசினர் கல்லூரியில் புகுமுக வகுப்பில் பயின்று கொண்டிருந்தேன். அச்சமயம் இந்தித் திணிப்பை எதிர்த்துக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தினர். சென்னை சென்ட்ரலிலிருந்து டெல்லிக்குச் செல்லும் கிராண்ட் டிரங்க் விரைவு வண்டியை நிறுத்தி ரயில் மறியல் போராட்டம் நடந்தது. மாணவர்களை அமைதிப்படுத்தும் வகையில் ரயில் நிலையத்திற்கு வந்த கலைஞர் அங்கிருந்த நடைமேடையில் மாணவர்களிடம் உரையாற்றினார். அப்பொழுதுதான் முதன்முறையாக அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. அவரது உரைக்குப் பின் மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

நான் உறுப்பினராக இருக்கும் குழுவில் பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் – கலைஞர் என்பதைப் பற்றி கருத்துகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. பகுத்தறிவு என்றவுடன்



எல்லோரும் அவரை மதவிரோதியாகவும் கடவுள் மறுப்புக் கொள்கை கொண்டவர் என்றும் கூறுவார்கள். ஆனால் பகுத்தறிவு என்றால் என்ன என்பதை உரிய முறையில் புரிந்துகொண்டு அதைத் தன்னாலானவரை செயல்பாட்டில் நடத்திக் காட்டியவர் கலைஞர்.

திருவாரூர் தேர் ஓடவில்லை என்று 23 ஆண்டுகளாகத் தேர் விழா நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அடிக்கடி நின்றுவிடும் அந்தத் தேரின் பலத்தை அதன் மரச்சக்கரங்களால் எடுத்துச் செல்ல முடியவில்லை என்பதுதான் கோளாறு. ஆனால், அதை தொழில்நுட்ப அறிஞர்களுடன் விவாதித்து திருச்சி பெல் நிறுவனத்தின் மூலம் அதற்குப் புதிய சக்கரங்கள் பூட்டி இன்றுவரை ஆண்டாண்டுகளாகத் தேரோட்டத் திருவிழா நிற்காமல் ஓடவைத்தவர் கலைஞர் என்பது இன்றைய தலைமுறைக்குத் தெரியாது. திருவாரூர் தேர் கலாச்சாரத்தின் சின்னம் என்ற முறையில் அந்தத் தேரின் மாதிரியைத் தான் வடிவமைத்த வள்ளுவர் கோட்டத்திலே கற்களால் அமைத்துப் பல்லாயிரம் மக்கள் பார்த்து மகிழச் செய்தவர். கடவுள் வழிபாடு வேறு, கலாச்சாரப் பெருமை வேறு என்பதை உறுதிப் படுத்தியவர். இன்றைக்கு அவரது வழியில் ஆட்சியை வழிநடத்தும் அவரது தனயன் தமிழ்நாடு முதல்வர் அதே வள்ளுவர் கோட்டத்தை அதே திருவாரூரில் ஏற்படுத்தி இன்னும் ஒருபடி முன்னுக்குச் சென்றிருக்கிறார்.

திருவரங்கத்தில் பெரியார் சிலை வைக்க வேண்டுமென்று திராவிடக் கழகம் முயன்றபோது அன்றைய நகராட்சித் தலைவர் வெங்கட்ரமண தீட்சிதர் தலைமையில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, அம்மா மண்டபம் சாலையில் 144 சதுர அடி நிலம் ஒதுக்கப்பட்டது. அதற்கான அரசாணையை நிறைவேற்றியவர் கலைஞர் (அரசாணை எண்.162 தேதி. 24.1.1973)

நிலம் ஒதுக்கிய பிறகும் அங்குச் சிலை எழுப்பப்படவில்லை. ஏறத்தாழ 33 ஆண்டுகள் கழித்து மீண்டும் கலைஞர் ஆட்சி 2006 இல் வந்த பிறகுதான் சிலை திறப்பு நடத்தப்பட்டது. அந்தச் சிலையை அகற்ற வேண்டும் என்று போடப்பட்ட வழக்குக்குத் தடை உத்தரவு தரமறுத்து என்னையும் உள்ளடக்கியிருந்த இரு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டது (6.12.2006). அதை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கும் இரு நீதிபதிகள் அமர்வில் தள்ளுபடி செய்யப்பட்டது.

1976ஆம் வருடம் சென்னை சிறைச்சாலையில் நெருக்கடி நிலைமையில் நடத்தப்பட்ட கொடுமைகளை விசாரிப்பதற்கு நீதிபதி இஸ்மாயில் கமிஷன் அமைக்கப்பட்டது. அதில் 3 கட்சிகள் சார்பாக புகார் மனுக்கள் அளிக்கப்பட்டன. நான் பாதிக்கப்பட்ட கைதிகளில் ஒரு பிரிவினருக்காக கமிஷன் முன்னர் ஆஜரானேன். கமிஷனின் முன்னால் இருந்த பாதிக்கப்பட்ட 3 தரப்பினரிடமும் ஒருமித்த கருத்து பல காரணங்களினால் ஏற்படவில்லை. இதனால் ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்தைக் கூறவும், அதனால் விசாரணையின் விளைவு பாதிக்கும் சூழல் ஏற்பட்டது. இப்பிரச்சினையைக் கேள்விப்பட்ட கலைஞர் 3 தரப்பினரையும் ஒருமுகப்படுத்தியதில் வெற்றியும்

கண்டார். அதன் விளைவுதான் கமிஷனின் அறிக்கை. சிறைக்கொடுமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியதுடன் அன்றைய தமிழ்நாடு அரசிற்கு கடும் கண்டனத்தையும் தெரிவித்தது.

இஸ்மாயில் கமிஷன் சிறை அதிகாரிகளின் மீது துறைசார்ந்த நடவடிக்கையெடுக்க உத்தரவிட்ட பிறகும் காலம் தாழ்த்தப்பட்டதுடன் சில சிறை அதிகாரிகளின் சமூகப் பின்னணிகளைக் கணக்கில் கொண்டு அதனால் சாதிய அடிப்படையில் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. அப்பொழுது கமிஷனின் பரிந்துரைகளை நிறைவேற்ற சட்டமன்றத்தில் ஆணித்தரமாகப் பேசுவதற்குப் பலர் தயங்கினர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையில் கலைஞர் அவர்கள் இஸ்மாயில் கமிஷன் அறிக்கை பற்றிப் பேசிய உரை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. அந்த உரையில் தவறு செய்த அதிகாரிகளை அவர்கள் மதம் மற்றும் சாதி அடிப்படையில் பார்த்து விட்டுக்கொடுப்பது தவறென்று அவர் வாதிட்டது இன்னும் காதில் ஒலிக்கிறது.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் தமிழ்நாட்டின் புதிய தலைமைச் செயலகமும் சட்டமன்ற வளாகமும் நிறுவினார் கலைஞர். அரசினர் தோட்டத்தின் ஒரு மூலையில் இஷ்டலிங்கேசுவரர் கோயில் ஒன்று இருந்தது. அது புதிதாக உருவாக்கப்பட்ட ஆலயமேயொழிய வரலாற்றுச் சிறப்பு ஏதும் கிடையாது. இருப்பினும் கட்டட வரைபடத்திற்குக் குறுக்கே இருக்கும் அந்தக் கோயிலை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு உத்தரவிட்டவர் கலைஞர். அவர் நினைத்திருந்தால் அந்தக் கோயிலை அந்தத் தோட்ட வளாகத்திலிருந்து அகற்றியிருக்க முடியும். இடம் மாற்ற உத்தரவிட்ட அவரது முடிவை சென்னை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் பதிவு செய்திருப்பது எவ்வளவு பேருக்குத் தெரியும்? (30.04.2009)

மதநம்பிக்கை வேறு, மக்களின் வாழ்வுரிமை வேறு. ஆனால் காலனி ஆட்சியின்போது மக்களுடைய பொதுவாழ்வு சம்பந்தப்பட்ட திருமணம், சொத்தில் வாரிசுரிமை இவையெல்லாம் பற்றிச் சட்டங்களைத் தொகுக்கும்போது, அதில் மதநம்பிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட்டன. இதனால் கூட்டுக் குடும்பச் சொத்தில் பெண்களுக்குப் பங்கில்லை என்ற வாதம் அங்கீகாரம் செய்யப்பட்டது. 1956–ம் வருடம் கொண்டுவரப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டத்திலும் இதே கருத்துதான் தொடரப்பட்டது. ஒரு மதத்தின் அடிப்படையான நம்பிக்கைகள் எவை என்பதும் அதற்கு ஊறு விளைவிக்காமல் மதம் சார்ந்த சட்டங்களில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளைக் கொண்டு வரலாம் என்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 25வது பிரிவில் கூறப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கூட்டுக் குடும்ப சொத்தில் பெண்களுக்கும் உரிமை உண்டு என்று சட்டத்தைத் திருத்தி முதன்முறையாகத் தமிழகத்திலுள்ள பெண்களுக்குத் தங்களுடைய கூட்டுக் குடும்பச் சொத்தில் பங்கு கிடைக்கும்படி சட்டத்தைத் திருத்தியவர் கலைஞர்.

நான் உயர்நீதிமன்ற நீதிபதியாக மதுரை அமர்வில் பணியாற்றிய பொழுது ஒரு முக்கிய வழக்கில் தீர்ப்பளித்தேன். இந்து மதத்தில் பெண்கள் பூசாரியாக இருக்கலாமா என்ற கேள்விக்கு

மதத்தில் தடையில்லை. வேதங்களில் தடையில்லை என்றும் கூறி "பின்னையக்காள்" என்ற அந்தப் பெண்மணி கோயில் பூசாரியாகத் தொடரும்படி உத்தரவிட்டேன். அந்த உத்தரவு ஊடகங்களில் வெளியானபோது முதலமைச்சராக இருந்த கலைஞர் சட்டமன்றத்தில் அந்தத் தீர்ப்பை வரவேற்றுப் பதிவு செய்ததோடு, என்னைப் பாராட்டியும் பேசினார். மாணவர் பருவத்திலிருந்தே சமூகநீதிக்காகச் செயல்படுபவன் என்று அவர் கூறியது என்னை ஆச்சரியப்பட வைத்தது. அவரது அரசிற்கு எதிராக நான் அளித்த தீர்ப்புகளை மனதில் வைத்துக் கொள்ளாமல் அவர் இப்படி வெளிப்படையாகப் பாராட்டியது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது.

இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள இந்து சமயக் கோயில்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில கோயில்கள் மட்டுமே பல்லாயிரக்கணக்கான சொத்துக்களுக்கு அதிபதியாகவும் கோடிக்கணக்கில் ஆண்டு வருமானம் உள்ள கோயில்களாகவும் உள்ளன. ஆனால் உண்மையில் தினமும் ஒரு விளக்கு கூட ஏற்றுவதற்கு நிதி வசதியற்ற கோயில்கள்தான் அதிகம். அப்படிப்பட்ட கோயில்களில் தினசரி ஒளிவிளக்கு ஏற்றுவதற்கு வசதியாக ஒவ்வொரு கோயிலுக்கும் தொகை வங்கியில் செலுத்தப்பட்டு அதில் பெறப்படும் வட்டியின் மூலம் தினமும் விளக்கெரிய வைத்தவர் கலைஞர். அதுமட்டுமின்றிப் பணக்காரக் கோயில்கள் தங்களது வருமானத்தை மக்கள் சேவையில் செலவழிக்கும் வண்ணம் கண்ணொளி முகாம்களும், அன்னதானமும் வழங்க ஏற்பாடு செய்தவர் அவர்.

அவர் ஆளுங்கட்சியாக முதலமைச்சர் பதவியில் இருந்தபோது மட்டும் இப்படிப்பட்ட அநீதிகளைக் களைய முற்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவராகக் கலைஞர் இருந்தபோது திருச்செந்தூரில் நடைபெற்ற ஒரு சம்பவத்திற்கு நீதி கேட்டு, நெடும் பயணம் கிளம்பினார் கலைஞர். அதன் பிறகு, அரசு நீதிபதி பால் தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்தது. ஆணையம், அறநிலையத்துறை அதிகாரி இறந்ததில் மர்மம் இருப்பதாகக் கூறியது. அந்த அறிக்கை வெளியிடப்படாமல் காலம் தாழ்த்தப்பட்டது. பொதுநலன் கருதி அந்த அறிக்கையைக் கண்டுபிடித்து பொதுவெளியில் அம்பலப்படுத்திய கலைஞர் மீதே வழக்கு தொடரப்பட்டது. கடைசியில் அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் இப்படி அறநிலையத் துறையில் நடைபெறும் ஊழல்களை வெளியிட கலைஞர் தயங்கியதில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

நான் நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் சமூகம், சாதி, சமயம் பற்றி அளித்த தீர்ப்புகளை ஒன்று திரட்டி "அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்" என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டேன். அந்தப் புத்தகத்தின் நகலைப் பெற்ற கலைஞர் அதை முழுதுமாகப் படித்ததோடு, அந்தப் புத்தகத்தைப் பற்றிய ஒரு மதிப்புரையை எழுதி 2.7.2014ஆம் தேதியன்று முரசொலியின் முதல் பக்கத்தில் வெளியிட்டது அதிசயத்திலும் அதிசயம். கட்சியுடைய செய்திப் பத்திரிகையில் ஒரு புத்தகத்திற்கான மதிப்புரையை முதல் பக்கத்திலேயே எட்டு காலச் செய்தியாக்கி அதற்கு, "**நீதிபதி சந்துருவின் நெறிதவறாத வழிகள்**" என்று தலைப்பிட்டு வெளியிட்டது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமென்று நான் நினைக்கிறேன். 91 வயதிலும் அந்தப் புத்தகத்தை முழுதுமாகப் படித்துவிட்டு, அந்த

மதிப்புரையை நான் படித்தபோது அடைந்த மகிழ்ச்சியை நீயும் அடையவேண்டுமல்லவா என்று முரசொலி வாசகர்களை ஊக்கப்படுத்தினார்.

தமிழ்நாட்டில் சத்துணவுக் கூடங்களில் சமையலர் பதவிகளிலும் இடஒதுக்கீடு வேண்டுமென்று நான் அளித்த தீர்ப்பைப் பற்றி அவர் குறிப்பிட்டு அவரது மதிப்புரையில் இவ்வாறு கூறியிருந்தார்:

> "தீர்ப்பு கூறிய சந்துரு அவர்கள் சத்துணவு மையங்களில் உள்ள பதவிகள் நிரப்பப்படும்போது, கட்டாயமாக இட ஒதுக்கீடு சுழற்சி முறையைப் பின்பற்ற வேண்டும் என்று உத்தரவிட்டார். இதைப் பற்றி இந்நூலில் தனது தீர்ப்புகளை விவரித்துள்ள சந்துரு, என்னைப் பற்றியும் அதிலே எழுதும்போது, "அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி உடனே இத்தீர்ப்பை அமுல்படுத்தி 06–07–2010 அன்று அரசாணை எண். 142, சமூக நலத்துறை சார்பாக வெளியிட்டார். அவ்வுத்தரவின் மூலம் கிட்டத்தட்ட 25 ஆயிரம் தலித் பெண்களுக்கு இட ஒதுக்கீடு மூலம் சத்துணவு பணிகளில் வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது" என்றும் மனம் திறந்து குறிப்பிட்டிருக்கிறார்."

அந்த மதிப்புரையை எழுதியதற்கான காரணத்தை அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

> "மேலும், நீதிபதி சந்துரு அவர்கள் வழங்கிய பல தீர்ப்புகளை, குறிப்பாக தலித் மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளிலே அவர் அளித்த தீர்ப்புகளை உள்ளடக்கி இந்த நூல் அமைந்திருப்பதை நான் முழுவதும் படித்ததோடு, அந்தக் கருத்துகள் உனக்கும் தெரிய வேண்டுமென்பதற்காகவே இந்தக் கடிதத்தில் இவற்றைக் குறிப்பிட்டுள்ளேனே தவிர வேறு எந்த உள்நோக்கமும் அல்ல. இத்தகைய தீர்ப்புகளை வழங்கிய நீதிபதி சந்துரு அவர்கள் தி.மு.கழக அரசையும், ஏன் என்னையும்கூட விமர்சனம் செய்தவர் என்றுகூடச் சொல்வார்கள். இருந்தபோதிலும் இந்த நூலில் அவர் எழுதிய தீர்ப்புகளைப் பாராட்டுகின்ற வகையில்தான் இதனை எழுதினேன்."

அன்புள்ள,
மு.க

இப்படி அவரது ஆட்சியில் நடைபெற்ற பல சம்பவங்களை நினைவுகூர முடியும். மாற்றுக் கருத்து இருப்பவர்களையும் மனம் கோணாமல் வைத்துக் கொள்ளவும் தேவையென்றால் வாயார வாழ்த்தவும் அவரால் மட்டுமே முடியும்!

❋ ❋ ❋

‘பிரம்ம ரிஷி!’



- முரசொலி செல்வம்

‘எழுத்துப் பணியில் கலைஞரின் சிறப்பு - என்பது தரப்பட்டுள்ள தலைப்பு! கலைஞரின் எழுத்தெடுத்துக் கூறுவதென்றால், இமயமலைக்குப் பொன்னாடை போர்த்திடும் முயற்சிதான் அது!

தமிழில் மட்டுமின்றிப் பிற மொழிகளிலும் எத்தனையோ சாதனைகளைப் படைத்த எழுத்தாளர்கள் உள்ளனர்! பிரமிக்கத்தக்க வகையில் நாவல் எழுதிய எழுத்தாளர்கள், கவிதை வடித்த கவிஞர்கள், நாடகம் படைத்த நாடகாசிரியர்கள் என இருந்திருக்கிறார்கள்! ஆனால், அத்தனை அரங்கிலும் ஜொலித்த வைரம் கலைஞரின் எழுத்துகள்!

எழுத்தில் அவரது பேனாவின் நர்த்தனம் தொடாத எல்லையே இல்லை என்றே கூறலாம்.

நாடகம், தொடர்கதை, சிறுகதை, கவிதை, அரசியல் கட்டுரைகள், கடிதங்கள், கேள்வி–பதில், வரலாற்றுப் புதினங்கள், திரைக்கதை, வசனம், திரை இசைப் பாடல்கள், உரை ஓவியங்கள், – என எழுத்தில் எத்தனை பரிமாணங்கள் உள்ளதோ அத்தனையிலும் புகுந்து அரசோச்சியவர் கலைஞர்!

ஒருமுறை பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், கலைஞரின் எழுத்து ஓவியங்கள் குறித்து குறிப்பிட்டுப் பேசுகையில்,

> **“கோல்ட் ஸ்மித்” என்ற ஆங்கிலப் பேரறிஞரைப் பற்றி ஜான்சன் என்ற திறனாய்வாளன் எழுதும்போது, ‘அவன் தொடாத துறையே இல்லை, தொட்டதைப் பொன்னாக்காமல் விட்டதும் இல்லை’ – என்று எழுதினான். அதைப் போலத் தமிழ்நாட்டில் ஒருவரைச் சொல்ல வேண்டுமானால், அது கலைஞர் கருணாநிதிதான்!’** – என்று கூறினார்!

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிட்ட ஆலிவர் கோல்ட் ஸ்மித்தின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பை நோக்கி ஆராய்ந்தால், அவர்கூட, எழுத்தாளர் கலைஞரின் உயரத்தில் பாதியைக்கூட எட்டியவராக இல்லை! கலைஞரின் எழுத்து ஆளுமையை வரிவரியாக அவரது எழுத்தோவியங்களை ஆழ்ந்து சிந்தித்துப் படித்தால் அதனை உணரமுடியும். தனக்கு ஏற்பட்ட அநீதிக்கு நீதி தேடிப் புறப்பட்டவனை வருணிக்கும் கலைஞர்,

> **“கடலின் கொந்தளிப்பு உள்ளத்தில்;**
> **காலைக் கதிரவனின் நிறம் கண்களிலே;**
> **சேவலின் மிடுக்கு நடையிலே!”**

– என்று விவரிக்கிறார்;

உள்ளம் கொதிப்படைந்த நிலையில், அதனால் கண் சிவக்க பீடு நடைபோட்டுப் புறப்பட்ட ஒருவனை உவமானம் மூலம் படம் பிடிக்கும் அவரது எழுத்தழகுக்கு ஈடுண்டோ?



உச்சம் தொட்ட உவமானங்கள் அவர் எழுத்தில் எண்ணிலடங்கா.

“புவிப்பெண்ணால் கழுத்தினிலே
புரளுகின்ற முத்துவடம் தென்னாடு
குவிக்கின்ற கரம்போல இலங்கைத் தீவு ”

இதுபோன்று அவர் எழுத்துகளுக்கிடையே தெறித்திடும் உவமைகள் ஏராளம்; ஏராளம்!

“புறநானூற்றுப் பெருமையை மூட வந்த புழுதிக் காற்றே; கலிங்கத்துப் பரணியை மறைக்கவந்த காரிருளே” என வீரம் கொப்பளிக்கும் வசனங்களை மட்டும் அவர் எழுத்து வடித்திடவில்லை;

“வளையல் ஏந்த வேண்டிய கரங்களிலே வாள் ” “என் வாள் களத்திலேதான் விளையாடும், கனிகளைக் காயப்படுத்தாது” என, கனிவு பொங்கும் வசனங்களும் அவர் எழுத்திலே துள்ளி விளையாடியுள்ளன!

கலைஞரது எழுத்தால் ஈர்க்கப்பட்டு எழுத்தாளரான பல எழுத்துப் பிரபலங்கள்

அவரது வசனங்களைத் தெளிவாக உச்சரித்துக் காட்டி நடிப்புலகில் மிளிர்ந்த நட்சத்திரங்கள் எனப் பெரும் பட்டியலே உண்டு!

கலைஞரது எழுத்திலே அடுக்குகள் அணிவகுக்கும்; அதிலே அழகு கொஞ்சும். உதாரணமாக,

“வான் பொய்யா நாடு,
மான் துள்ளும் காடு,
தேன் பொழியும் வீடு
எங்கள் சோழ மண்டலம்”

–எனக் காந்த அடுக்குகளால் வருணிக்கும்போது நம்மை அறியாமலேயே சோழ மண்டலத்திற்குள் புகுந்து வெளிவருகிறோம்!

அவர் எழுத்துகளால் பிரபலமான திரைப்படக் கதாநாயகர்கள் மட்டுமல்ல; எதிர்மறை (வில்லன்) பாத்திரம் ஏற்றவர்களையும் அவரது எழுத்து, கதாநாயகனை மிஞ்சிய உச்சத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது!

‘மந்திரி குமாரி’ திரைப்படத்தில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக மிளிர்ந்தாலும், அந்தப் படம் வெளிவந்த நேரத்தில் பேசப்பட்டு பொதுமக்களிடையே பிரபலமான பாத்திரம்; அரசகுருவின் மகனாகவும், கொள்ளைக் காரனாகவும் நடித்த எஸ்.ஏ. நடராசனின் பார்த்திபன் பாத்திரம்தான்! ஒரு கதாநாயகனைவிட வில்லன் உச்சரித்த வசனத்தில் இருந்த வலிமை அவரை உயர்த்தி நின்றது!

"முல்லை ! குளிச்சியான பெயர் சூடத் தெரியாதவன் கையில் இருந்த சொகுசு முல்லை! ரசிக்கத் தெரியாதவன் கையில் கிடந்த இன்ப முல்லை! அனுபவிக்கத் தெரியாத அசடனிடம் கிடைத்த அழகு முல்லை!"

–என்ற வசனம் பேசித் தொடங்கும் அந்த பார்த்திபன் பாத்திரம், கொள்ளையடிப்பது கலை தந்தையே' எனத் தனது செயலுக்குத் தந்தையிடம் விளக்கமளிக்கும் போதும், தனக்கு எதிராகக் குற்றம்சாட்டிப் பேசும் கதாநாயகப் பாத்திரத்தை நோக்கி, **"அரண்மனை நாயே, அடக்கடா வாயை!"** எனக் கோபம் கொப்பளிக்கக் குமுறும்போதும், 'வில்லன்' பாத்திரம் உச்சரிக்கும் வசனத்தின் வலிவு கண்டு, பாத்திரத்தை மறந்து ஒவ்வொரு வசனத்துக்கும் திரை அரங்கிலே கையொலி எழும்பும்; அந்தப் பாத்திரம் உதிர்த்த வசன வரிகள், வில்லனை, பிரபல கதாநாயகனுக்கு மேல் உயர்த்தியது என்றால், கலைஞரின் எழுத்தின் வலிமை அங்கே கொடிகட்டிப் பறந்ததுதான் காரணம்!

கலைஞரது எழுத்துக்கு இப்படிப் பல்வேறு சிறப்புகள், உண்டு! அதிலே ஆழம் உண்டு, ஆளுமை உண்டு, வீரம் உண்டு, விவேகம் உண்டு, தணல் உண்டு; புனலும் உண்டு! தன்மான உணர்வைத் தட்டி எழுப்பிடும். தமிழ்காக்க, தமிழ் இனமானம் காத்திட, குமுறும் எரிமலையாய்க் கொந்தளிக்கும்.

"பல்லாயிரக்கணக்கில் விரிந்து பரந்த இலக்கிய எழுத்தோவியங்களில் எதனைத் தொடுவது எதனை விடுவது' என்று, கலைஞர் கலைக் களஞ்சியம் வெளியிட முனைந்து தொகுப்புகளை நோக்கிய தமிழறிஞர் அவ்வை நடராசன், முன்னாள் துணைவேந்தர் அனந்த கிருஷ்ணன், பேராசிரியர் மோகன் முதலானோர் மலைத்துப் போய் நின்றதாக, அவ்வை நடராசன் குறிப்பிடுகிறார்."

"தொகுப்பின் எஞ்சும், விரிப்பிற் பெருகும்" என்ற தொடரின் பொருள் அன்றுதான் புரிந்தது" என வியந்து நிற்கிறார் அவ்வை நடராசன்.

கலைஞரின் எழுத்து குறித்து அவரது ஆசான் பேரறிஞர் அண்ணா கூறுகிறார்:

> **"என் தம்பி கருணாநிதியின் தமிழ் ஆளுந்திறன், பாத்திரங்களைப் படைக்கும் உயர்தனி ஆற்றல்; ஊரும் உலகமும் அறிந்தது; அறிந்து மகிழ்ந்தது; மகிழ்ந்து பாராட்டியது! எழுத்தோவியத்தில் ஒரு ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர் என்பதால் கருணாநிதி யாரையும் விஞ்சுகின்ற அளவில் வெற்றி கண்டுள்ளார்."**

ஆம்! வசிஷ்டர் வாயாலேயே பிரம்ம ரிஷி எனப் பாராட்டப்பட்டவர்.

மேலும் எழுத என்ன இருக்கிறது?

❋ ❋ ❋

மாற்றுத்திறனாளிகள் நலனில் டாக்டர் கலைஞர்



இரா. நல்லகண்ணு

முத்தமிழறிஞர் கலைஞர் என்னை விட இரண்டு வயது மூத்தவர். கலைஞரின் நூறாவது வயதில் அவரோடு இருக்க முடியவில்லையே என்று ஏங்குகிறேன்.

இப்போது என்னால் படிக்க மட்டும் முடிகிறது; எழுத முடியவில்லை. நினைவாற்றல் சற்று குறைகிறது. சக தோழரின் உதவியோடு தான் எழுத வேண்டி இருக்கிறது.

கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு மலரில் அவரைப் பற்றி எழுத வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட நீர்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள், 'மாற்றுத்திறனாளிகள் நலனில் கலைஞர்' என்ற தலைப்பில் நீங்கள் எழுத வேண்டும் என்று அன்புடன் கூறினார்.

என்னால் முடிந்த அளவுக்கு இந்தக் கட்டுரையின் மூலம் பதிவு செய்திருக்கிறேன்.

சமுதாயத்தைப் பற்றிய புரிதல் என்பதுதான் பெரும்பாலும் சிந்தனையிலும், செயலிலும் வெளிப்படும்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் கூட ஒருவர் மீது ஒருவர் நல்ல புரிதல் உண்டு. அரசியல் ரீதியில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் கண்ணியமான அணுகுமுறைக்கு இதுவே காரணமாக இருந்தது. இன்றைய அரசியலுக்கும் இது தான் மிகவும் தேவை.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடலாம். தி.மு.க பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து ஆட்சியில் இருந்தபோது,

"இது கொள்கை ரீதியில் எப்படிச் சாத்தியம்? பா.ஜ.க அணியிலிருந்து தி.மு.க வெளிவர வேண்டும்!" என்று வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் நான் சொல்லி வந்தேன்!

ஒவ்வொரு முறையும் நான் சொல்லுவதை கலைஞர் கூர்ந்து கவனித்திருக்கிறார்! பா.ஜ.க அணியிலிருந்து தி.மு.க வெளியே வந்ததும் கலைஞர் முதலில் விட்ட அறிக்கையை என்னால் இன்றும் மறக்க முடியாது!

அதில், "நல்லகண்ணு இன்று இரவு நிம்மதியாகத் தூங்குவார்" என்று கலைஞர் சொல்லியிருந்தார். இதுதான் அரசியல் புரிதல்.

இந்த அரசியல் புரிதலும் கொள்கை நிலைப்பாடும் எவ்வளவு முக்கியம் என்பதை இதிலிருந்தே கலைஞர் உணர்த்தி இருக்கிறார்.

கலைஞரைப் பொறுத்தவரையில், தமது சிறுவயதில் இருந்தே சமுதாயத்தைப் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டார். சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை, அதனால் ஏற்படும் துன்ப துயரங்களை, சமுதாயச் சூழலில் இருந்தும் அனுபவரீதியாகவும் கலைஞர் மிகச்சரியாகப் புரிந்து உள்வாங்கி இருந்தார்.

சமுதாயத்தில் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுபவர்களைக் காட்டிலும் உடல் ரீதியாக, உள்ளம் ரீதியாக அதிகம் பாதிக்கப்படுபவர்கள் யார்? என்பது குறித்து கலைஞர் சிந்தித்திருக்கிறார்.

உடலில் ஊனம் இருப்பவர்களுக்கு மனதிலும் ஊனம் இருக்கும் என்ற எண்ணத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று அவர் நினைத்தார்.

உடல் அளவில் ஊனமுற்றவர்களாக இருக்கலாம். அவர்களின் உள்ளம் ஊனமுற்றிருக்கக் கூடாது. இதற்காகவும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையிலும் நல்ல தமிழ்ச் சொல்லில் 'மாற்றுத்திறனாளிகள்' என்று பெயர் சூட்டி அறிமுகப்படுத்தினார். அதனைச் செயல்படுத்தியும் காட்டினார்.

இதனை, கலைஞர் என்று அறிவித்தாரோ அன்றே, மாற்றுத்திறனாளிகள் மனதில் இருந்த ஊனம் மறையத் தொடங்கி விட்டது. நம்பிக்கை மலர் பூக்கத் தொடங்கி விட்டது!

அரசாங்கத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு எனத் தனி அரசுத் துறையை உருவாக்கினார். அதுமட்டுமல்ல மாற்றுத்திறனாளிகளுக்கு என நலவாரியம் தொடங்கினார்.

- **மாற்றுத்திறனாளிகளின் கல்விக் கட்டணம் ரத்து.**
- **மாற்றுத்திறனாளிகளுக்குத் திருமண நிதியுதவி.**
- **மாற்றுத்திறனாளிகள் அரசுப் பேருந்தில் தனது துணையுடன் பயணம் செய்ய சலுகை.**
- **மாற்றுத்திறனாளிகள் பயணம் செய்வதற்காக, இலவசமாக 3 சக்கர வாகனம்.**
- **வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், சமத்துவபுரம் போன்றவற்றில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3% வீடுகள் ஒதுக்கீடு.**

இவை மட்டுமல்ல. மாற்றுத்திறனாளிகள் நலவாரிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன.

மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று, 100–க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளைத் தமது இல்லத்திற்கு அழைத்து உணவு கொடுத்து நலத்திட்ட உதவிகளும் அளித்து வந்தார் கலைஞர்.

திரைத்துறையில் தான் எழுதிச் சம்பாதித்த வருமானத்தில் 15 இலட்சம் ரூபாய் மாற்றுத்திறனாளிகள் துறைக்கு, கலைஞர் வழங்கினார்,

அரசு சார்பில், நலவாரியம் சார்பில் வழங்கினால் மட்டும் போதாது. தமது பங்கும் இருக்க வேண்டும் என்று நினைத்தவர் கலைஞர்.

ஆசிரியர் பயிற்சி முடித்த மாற்றுத்திறனாளிகள் தங்களுக்குப் பணி வழங்கக் கோரி 29.05.2010 அன்று சென்னையில் உண்ணாவிரதம் இருந்தபோது, உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களை ஓடிச் சென்று கலைஞர் பார்த்தார். அத்தோடு விதிகளைத் தளர்த்தி கருணை அடிப்படையில் 90 பேரைப் பணி நியமனம் செய்தார்.

மாற்றுத்திறனாளிகள் ஒரு வகையில் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், அரவாணிகள் இன்னொரு வகையில் பாதிக்கப்படுகின்றனர். இதனை நன்கு புரிந்திருந்தவர் கலைஞர்.

அரவாணிகள் என்பதும் மனித உடலில் ஏற்படும் ஒரு வகை மாற்றம்தான் என்பது உணரப்பட வேண்டும். கேலி செய்வதற்கோ, கிண்டல் செய்வதற்கோ இதில் கடுகளவும் வாய்ப்பில்லை.

சமுதாயத்தில் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக அரவாணிகள் இருக்கிறார்கள். என்பதை உணர்ந்த டாக்டர் கலைஞர், அரவாணிகளை நல்ல தமிழில் 'திருநங்கைகள்' என மதிப்புடன் அழைக்குமாறு மாற்றி அமைத்தார்.

2008இல் திருநங்கைகளுக்கு என நலவாரியம் அமைத்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் திருநங்கைகள் தொடர்பாக லட்சுமி நாராயணன் என்பவர் தொடர்ந்த வழக்கில், நீதிபதிகள் K.S. ராதாகிருஷ்ணன், K.A. சிகரி ஆகியோர் தீர்ப்பு வழங்கினர். அதில்,

- **மாற்றுத்திறனாளிகளைப் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகக் கருத வேண்டும்.**
- **கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் போதிய வாய்ப்பு வழங்க வேண்டும்.**
- **திருநங்கைகளை மூன்றாம் பாலினத்தவராகக் கருத வேண்டும்.**
- **அவர்களுக்கென்று சமூக மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.**
- **திருநங்கைகளுக்கு எனத் தனி கழிவறைகள், மருத்துவ வசதிகள் உருவாக்க வேண்டும்.**

என ஒன்றிய அரசுக்கு உத்தரவு பிறப்பித்தனர்.

இதனைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில், தி.மு.க சார்பாக மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா மூலம் தனிநபர் மசோதா கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் கலைஞர் மறைந்து விட்டதாக நினைக்க வேண்டியதில்லை. அவர் என்றென்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

வாழ்க கலைஞர் புகழ்!

❋ ❋ ❋

கவிப்பேரரசு வைரமுத்து



தேனி மாவட்டம், பெரியகுளம் அருகில் உள்ள வடுகபட்டியில் இராமசாமி – அங்கம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்றார். 1980இல் வைரமுத்து ஒரு புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். சிறந்த பாடலாசிரியருக்கான இந்திய அரசின் விருதை 7 முறை பெற்றுள்ளார். நிழல்கள் (1980) எனும் திரைப்படத்தில் **"பொன்மாலைப் பொழுது"** எனும் பாடலை முதன்முதலில் எழுதிய இவர், கவிப்பேரரசு எனப் புகழப்படுகிறார். 1990 ஆம் ஆண்டு **கலைமாமணி விருது** பெற்றார், 2003 ஆம் ஆண்டு; **கள்ளிக்காட்டு இதிகாசம்** என்ற நூலுக்காக **சாகித்ய அகாடமி விருது** பெற்றார், 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான **பத்ம பூஷண்** விருதினைப் பெற்றார். திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினராக கவிப்பேரரசு வைரமுத்து திகழ்கிறார்.



முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கினார் – 30.12.2006

தீப்பிடிக்கும் சொற்கள்

கவிப்பேரரசு வைரமுத்து

திராவிட இயக்கத்திற்கு வித்து விதைத்தவர்கள் பலராயினும் விளைவித்தவர்கள் பெரியார், அண்ணா, கலைஞர் என்ற மூன்று பேராளுமைகளே. இந்த மூவரும் இல்லாவிடில் திராவிட இயக்கத்திற்கு நீட்சி இருந்திருக்காது; நீண்டதோர் ஆட்சி இருந்திருக்காது.

கருத்துக்களை மக்களிடம் முன்னெடுத்துச் செல்வதற்கு கலைஞர் பிறந்த காலத்தில் மூன்றே மூன்று ஊடகங்கள் மட்டுமே வாகனங்களாயின. ஒன்று மேடை; இன்னொன்று பத்திரிகை; அடுத்தொன்று திரைப்படம்.

பெரியார் முதலிரண்டு ஊடகங்களை வெற்றிகொண்டார். கலை, சினிமா என்ற மூன்றாம் ஊடகத்தை முற்றிலும் வெறுத்தார். பெரியார் வெறுத்த மூன்றாம் ஊடகத்தை அண்ணாவும் கலைஞரும் மிகக் கவனமாகக் கைப்பற்றினார்கள். அதில் அந்த இருவருக்கும் பொருளும் புகழும் கிடைத்தன. அதைவிட யாருக்குச் சென்று சேர வேண்டுமோ அந்தக் கடைக்கோடி மக்களுக்கும் இயக்கத்தின் நோக்கம் சென்று சேர்ந்தது.

'நல்லதம்பி, வேலைக்காரி, ஓர் இரவு' போன்ற குறிப்பிட்ட படங்களுக்கு மட்டும்தான் அண்ணா தன் பங்களிப்பை ஆற்றினார். ஆனால், கலைஞரோ தன் அரசியல் வாழ்வின் இணை கோடாக கலை வாழ்வையும் கைவிடாமல் காப்பாற்றி வந்தார்.

அண்ணாவின் கலை எழுத்து ஆழமானது. கலைஞரின் கலை எழுத்து அழகானது. வசந்தத்தின் குளுமை, வாலிபத்தின் ஒய்யாரம், சந்தத்தின் சங்கீதம், உவமைகளின் ஊர்வலம், கிண்டலின் கித்தாப்பு, நகைச்சுவையின் மத்தாப்பு, கழுத்தில் கத்தி வைக்கும் கருத்து, காதுவழி பதிந்துபோகும் எழுத்து. இதனால் இளைஞர் கூட்டம் தேனுக்குள் கால்புதைந்த வண்டாய்ச் சிக்கிப் போனது.

முதற்படத்திற்கு வசனம் தீட்டும்பொழுது அவரது வயது 23. பயமறியாத வயது; தமிழின் நயமறிந்த மனது. திராவிடர் கழகம் அவர் கைகளில் ஒரு தீப்பிடித்த பேனாவைத் திணிக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏறுமுகம் அந்தத் தீயின் மீது நெய்மழை பெய்கிறது.

எரிகிறது; பற்றி எரிகிறது. மடமை எரிகிறது; மூட நம்பிக்கை எரிகிறது; வருணாசிரமம் எரிகிறது; சூழ்ச்சி எரிகிறது; ஆட்சி எரிகிறது; யுகக் குப்பை எரிகிறது; ஒடுக்கப்பட்டவர்கள் மீது ஆண்டாண்டுகாலம் செலுத்தப்பட்ட ஆதிக்கம் எரிகிறது; இடதுசாரிச் சிந்தனைகளால் அநியாயத்தின் அடிப்படை எரிகிறது; வற்றிக் கிடந்த வாழைத்தண்டு மனங்களிலும் இலட்சியம் எரிகிறது. எரியாதவை எழுதிய காகிதமும் திரையிடப்பட்ட திரையும் மட்டும்தான்.

அவர் எழுதிய சரித்திரப் படங்களிலும் சமூகமே பேசப்பட்டது. 1950இல் அவர் வசனம் எழுதிய 'மருதநாட்டு இளவரசி'யில் பலிபீடத்தின் முன்னே கடைசி வசனம் பேசுகிறார் காண்டீபனாகிய எம்.ஜி. இராமச்சந்திரன்.

"கடைசி நேரத்திலாவது என் இதயத்துடிப்பு ஆவேசமாகத் துடித்து ஓயட்டும். என் கண்களில் ஒருமுறை கனல்வீசி அணைந்து போகட்டும். என் இரத்தம் சூடேறிக் கொதித்தும் பிறகு ஜில்லிட்டும் போகட்டும். நீதியின் நிலைக்களமாய் நேர்மையின் உலைக்களமாய் வாழ்ந்த வண்டமிழ் வளநாடே!



நீ சூதர்களின் உறைவிடமாய், சூழ்ச்சியின் இருப்பிடமாய் ஆனது ஏன்? இந்த மண்ணிலேதான் பிறந்தேன். இந்த மண்ணிலேதான் மழலைபேசித் தவழ்ந்து விளையாடினேன். இந்த மண்ணிலேதான் சவமாகச் சாயப்போகிறேன்.

வந்தாரை வாழ வைக்கும் இந்த மண்ணில் சொந்த நாட்டுக்காரன் அநியாயமாகச் சாவதா? குற்றமற்றவன் சாவதா?'' – இறந்த காலத்தில் பேசப்பட்ட இந்த வசனம் நிகழ்காலத்தின் நெற்றி சுட்டது.

''சிங்கத் திருநாடே! நீ சிலந்திக் கூடாக மாறியது எப்போது? வந்தாரை வாழ வைக்கும் வளமிகு தமிழகமே! நீ சொந்த நாட்டானையே சுரண்டுவது எத்தனை நாட்களாக? வீரப் பெண்களின் ஏடுகளை எழுதி எழுதி ஏற்றம் பெற்ற என்னருமைப் பொன்னாடே! நீ வீதிகளிலே விபச்சாரிகளைத் திரியவிட்டு உன் விழிகளை மூடிக்கொண்டது ஏன்? வானத்தை முட்டும் மாளிகைகள், மானத்தை இழந்த மனிதர்கள், உயர்ந்த கோபுரங்கள், தாழ்ந்த உள்ளங்கள். ஏ தமிழ்நாடே, இதுதானா உன் பெருமை? தகுதி? யோக்கியதை?'' – என்று பராசக்தியில் அறிமுகமான கணேசனின் காந்தக் குரலில் அக்கால அரசியல் நிர்வாணமாய் நிறுத்தப்பட்டுத் தோலுரிக்கப்பட்டது.

முன்னோடிகளின் உரையாடலுக்கும் கலைஞரின் உரையாடலுக்கும் என்ன வேறுபாடு? ஏனையோர் எழுத்துக்களெல்லாம் பாத்திரங்களோடு உரையாடுகின்றன. கலைஞரின் எழுத்துகளோ பாத்திரங்களைத் தாண்டி சமூகத்தோடு உரையாடுகின்றன. ஏனையோர் உரையாடலோ திரையோடு தேய்ந்தழிகிறது. கலைஞரின் உரையாடலோ திரையைக் கிழித்தெறிந்து தெருவுக்கு வந்து விழுகிறது. பாடல்களையே இசைத்தட்டுகளாய்க் கேட்ட தமிழர்கள், வசனத்தை இசைத் தட்டுகளில் கேட்கும் புதிய கலாசாரத்தைத் தொடங்கிவைத்தவர் கலைஞர்.

அவர் மேடையின் உரையாடலும் திரையின் கலையாடலும் ஒன்றுக்கொன்று உறவு கொண்டிருந்ததால், கலைவேறு கட்சிவேறு என்றாகாதபடி இரண்டையும் ஒன்றென்று கொண்டான் கழகத்தின் இளந்தொண்டன்.

அதுவரை நம்பிக்கிடந்த பொய்ப் புனிதங்களையும் போலி நம்பிக்கைகளையும் திராவிட இயக்கத்தின் கலைத் தமிழ் குத்திக் கிழித்துக் கூறுபோட்ட பொழுது கபாலத்தில் இடிவிழுந்ததுபோல் கலங்கியது பழைமை லோகம்.

'அந்த ஆசிரமத்திலே காதினிலே குண்டலம் ஆட, கனத்த சரீரம் பாட, காய்ச்சிய பால் தொண்டையிலே ஓட, கண்கள் கதியற்றுக் கன்னியரை நாட, கடவுள் அருளுக்கு வழிகாட்டப்பட்டதாம் – என்று வேலைக்காரியில் போலிகளை அண்ணா அம்பலப்படுத்தியது அழகு தமிழில்.'

கலைஞர் எழுதியதோ ஆவேசத் தமிழில். மந்திரித்து மண்டைவலி தீராதென்று நரம்பிலே ஊசி செலுத்தும் நவீன மருத்துவனைப் போல் வெட்டொன்று துண்டு ரெண்டென்று பட்டுத் தெறித்தது கலைஞர் வசனம்.

''கோவிலிலே குழப்பம் விளைவித்தேன் கோவில் கூடாது என்பதற்காக அல்ல; கோவில் கொடியவர்களின் கூடாரமாய் இருக்கக் கூடாது என்பதற்காக.பூசாரியைத் தாக்கினேன். அவன் பக்தன் என்பதற்காக அல்ல; பக்தி பகல் வேஷமாகிவிட்டதைக் கண்டிப்பதற்காக'' – என்று தீப்பிடித்த வார்த்தைகளும் ''அம்பாள் எந்தக் காலத்திலடா பேசினாள்? அறிவுகெட்டவனே'' என்ற

அமில வாக்கியமும், ''இட்லி சுட்டு விற்பதுதானே தமிழ்நாட்டிலே தாலி அறுந்தவர்களுக்கெல்லாம் தாசில் உத்தியோகம்'' – என்ற கண்ணீர் கொப்பளிக்கும் சொல்லாடல்களும் நீதிமொழிகள் பேசப்பட்ட தமிழ்நாட்டில் வீதிமொழிகளாய்ப் பேசப்பட்டன, படத்திற்கு எழுதிய வசனம் பழமொழியாயிற்று.

முறைசார்ந்த பெருங்கல்வியோ, ஆங்கிலப் பேரறிவோ இல்லாத கலைஞர், திரைத்தமிழை உலக மொழியின் உயரத்திற்கு அழைத்துச் சென்றது எப்படி என்பதே என் திகைப்புக்குத் தீனிபோடுகிறது.

1950 இல் தமது 26ஆம் வயதில், 'மந்திரிகுமாரி'யில் அவர் எழுதிய ஒரு காதல் உரையாடலை மேற்கோள் காட்டுகிறேன்.

''ஜீவரேகா: நேற்றிரவு நீங்கள் வராததால் என்னால் பௌர்ணமியின் அழகையே ரசிக்க முடியவில்லை.

வீரமோகன்: எதற்கெடுத்தாலும் நிலவுதான். ஏன் அமாவாசை அழகாயில்லை?

ஜீவரேகா: நீங்கள் இருட்டைக் கூட ரசிப்பீர்களா? (இங்கே வினைப்படுகிறது – கலைஞரின் கவிதைக் குறும்பு)

வீரமோகன்: ஆம். சித்திரத்தை அழகுபடுத்தும் நிழல்கோடு போல, உன் கண்ணின் கடைக்கூட்டில், கனி இதழின் ஓரத்தில், கன்னத்துச் சரிவுகளில் ஒளிந்து கொண்டிருக்கும் இருளை நான் ரசிக்கிறேன் ஜீவா''

கவிதைகளைப் புறமுதுகிடச் செய்யும் வசனம் இது.

கலைஞரின் திட்டமிடாத ஒரு தீர்க்க சிந்தனையை நான் பெரிதும் போற்றுகிறேன். 1950களில் தமிழ்நாட்டில் மக்கள் தொகை 3.1 கோடிதான். அதில் கற்றவர்களின் விகிதாசாரம் 20.8 விழுக்காடுதான்.

பாரதிமொழியில், 'பாமரராய், விலங்குகளாய்க் கிடந்தவர்கள்' கலைஞர் மொழியில், 'பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய்' இருந்த காலம் அது. இந்தக் கூட்டத்திற்கு இலக்கணத்தின் அருந்தமிழும் இலக்கியத்தின் பெரும்பொருளும் புரியுமா என்று கருதாமல், புரிவார்கள் அல்லது புரிந்து கொள்ளட்டும் என்று கலைஞர் எடுத்த இலக்கிய முடிவு அற்புதமானது.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற பெருநோக்கில் தாம் பெற்ற தமிழறிவை சமூகத்தோடு பகிர்ந்துகொண்டது அவரது புலமையின் பொதுவுடைமையாகும்.

''எகிப்தியப் பேரழகி கிளியோபாட்ரா தமிழ்நாட்டு முத்துக்களைச் சாராயத்தில் போட்டுக் குடித்தாளாம்'' – இது பராசக்தி.

''மிருக ஜாதியில் புலி மானைக் கொல்லுகிறது. மனித ஜாதியில் மான் புலியைக் கொல்லுகிறது'' – இது மருதநாட்டு இளவரசி.

''வேலின் கூர்மையைச் சோதித்த விரல்கள் வஞ்சகியின் விரலை அல்லவா ரசித்துக் கொண்டிருக்கிறது'' – இது மனோகரா.

''மனச்சாட்சி உறங்கும்போது மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது.'' – இது பூம்புகார்.

''அவள் அழகை வர்ணிக்க ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேசன் கூடக் கம்பனிடம் ஒன்றிரண்டு கடன் வாங்க வேண்டும்'' –இது புதுமைப்பித்தன்.

“முஸ்லீம் பாதுஷா அக்பர் ஒரு ராஜபுத்திர ஜோதிபாயை மணந்து கொள்ளலாமாம். அந்த ஜோதிபாயின் மகன் ஒரு நடன சுந்தரியைக் காதலிக்கக் கூடாதாம்.” – இது இல்லற ஜோதியில் அனார்கலி.

“கசாப்புக் கடைக்குப் பெயர் கருணை மகால்; இதற்குப் பெயர் அகதி முகாம்” – இது பராசக்தி.

இப்படிக் கொட்டகைக்குள் கலைஞர் கொட்டிய கோமேதகங்கள் பலப்பல.

தமிழ் இலக்கியத்தை வீதிக்குக் கொண்டு வந்தது திராவிட இயக்கம். அப்படிக் கொண்டு வந்த முதல் மனிதர் பேச்சால், எழுத்தால், திரையுலகில் அண்ணா. இதைத் தொடர்ந்து முழுமை செய்தவர் கலைஞர்.

“புறநானூற்றை மறைக்க வந்த புழுதிக் காற்றே புறமுதுகிட்டு ஓடும்! கலிங்கத்துப் பரணியை மறைக்க வந்த காரிருளே கால்பிடறியில் இடிபட ஓடும்” என்று ‘மனோகரா’வில் தமிழின் ஆதி இலக்கியங்களை அவர் அடையாளங்காட்டிய போது பாமரனும் கூட அந்தத் தொல் இலக்கியங்களைத் தொட்டுப் பார்த்தான்.

இப்படியெல்லாம் தமிழின் இனமொழி மாட்சிக்கும் நீட்சிக்கும் கலைஞரின் இளையதமிழ் இயங்கியிருக்கிறது.

தமிழ், இனமொழி அடையாளங்களை மீட்டெடுத்ததில் அவருடைய பங்கு அளப்பரியது. சிலப்பதிகாரத்தை அவர் நவீனப்படுத்திய பிறகுதான் தமிழனுக்கென்று ஒரு மகாகாவியம் உண்டு என்பதைத் தமிழினம் உணர்ந்தது. தமிழினத்திற்கு வெளியேயும் அது உணரப்பட்டது. சங்க இலக்கியத்தை எளிமை செய்தல், பழைய மரபுகளை மீட்டெடுத்தல் என அவரது தேர் ராஜபாட்டையில் நகர்ந்தது.

தொல்காப்பியத்திற்கு உரையாக, ‘தொல்காப்பியப் பூங்கா’ எனக் கவிதை வடிவில் அவர் எழுதியதையும் நான் பெரிதும் வியக்கிறேன். ஏனென்றால் தொல்காப்பியம் என்பது புலவர்களால் கூடத் தொடமுடியாத உயரத்தில் இருப்பது. இலக்கணம் போல் ஓர் இலக்கியம் என்று சொல்ல வேண்டும் தொல்காப்பியத்தை. இலக்கியம்போல் ஓர் இலக்கணம் என்று சொல்ல வேண்டும் திருக்குறளை. இந்த இரண்டுக்கும் அவர் எழுதிய உரைகள் பொதுமக்கள் மத்தியில் அவைகளைக் கொண்டு சென்றன.

இப்படிப் பழைய இலக்கியங்கள் மட்டும் அல்ல, படைப்பிலக்கியத்திலும் அவர் முத்திரை பதித்திருக்கிறார். ‘தென்பாண்டிச் சிங்கம்’, ‘ரோமாபுரிப் பாண்டியன்’, ‘பாயும் புலி பண்டாரக வன்னியன்’, ‘பொன்னர் சங்கர்’ போன்ற உரைநடைக் காவியங்கள் அவரது படைப்பாற்றலைக் காலமெல்லாம் பறைசாற்றும்.

இன்று தமிழ் வாசிக்கவும் எழுதவும் இடர்ப்படுகிற இளைய தலைமுறைக்கு ஒரு சொல். அருள்கூர்ந்து கலைஞரின் திரைத்தமிழைக் கூட்டம் கூடி வாய்விட்டு வாசியுங்கள்; நாவும் நாடும் திருந்தும்.

❋ ❋ ❋



பேராசிரியர்
சுப. வீரபாண்டியன்

சுப. வீரபாண்டியன் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காரைக்குடியில் இராம. சுப்பையா – விசாலாட்சி ஆகியோரின் இளைய மகனாக, 1952ஆம் ஆண்டு பிறந்தவர். புகழ்பெற்ற தமிழ்த் திரைப்பட இயக்குநரான சுப. முத்துராமன் இவர்தம் அண்ணன் ஆவார். **'சுபவீ'** என்று சுருக்கமாய் அழைக்கப்படும் சுப. வீரபாண்டியன் சிறு வயது தொடங்கி, திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர். சாதி ஒழிப்பு, ஆதிக்க எதிர்ப்பு, தாய்மொழிப் பற்று, பெண் விடுதலை, பகுத்தறிவு முதலான கருத்துகளைப் பரப்பி வருபவர். பெரியார், அம்பேத்கர் பற்றாளர். இறைமறுப்பாளர். ஈழ விடுதலை ஆதரவாளர். கடந்த கால் நூற்றாண்டிற்கும் கூடுதலாகப் பொதுவாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். சென்னைக் கல்லூரியொன்றில் 21 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டுத் தம் 45–ஆம் வயதில் விருப்ப ஓய்வு பெற்றவர். 2007–ஆம் ஆண்டு, **"திராவிட இயக்கத் தமிழர் பேரவை"** என்னும் இயக்கத்தை நிறுவியவர். இன்றுவரை அவ்வமைப்பின் நிறுவனத் தலைவர், **'கருஞ்சட்டைத் தமிழர்'** என்னும் மாதமிருமுறை வெளிவரும் இதழின் ஆசிரியர். இலக்கிய ஆர்வலர். அரசியல், வரலாறு, இலக்கியம் எனப் பல்வேறு துறைகளில் 54 நூல்களை எழுதியுள்ளார். கல்லூரிப் பேராசிரியராக இருந்தபொழுதே சுட்டி, விடுதலை, உண்மை, தென்மொழி உள்ளிட்ட பல இதழ்களில் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதியவர்.

தமிழ்ச் சமூகத்தைச் சீர்திருத்திய கலைஞரின் பகுத்தறிவு

பேராசிரியர் **சுப. வீரபாண்டியன்**
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

தலைவர் கலைஞர் தொடக்க நாட்களில் எழுதிய நாவலான "வெள்ளிக்கிழமை" யில் இப்படி ஓர் உரையாடல் இடம்பெற்றுள்ளது – **"பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பார்கள்" "ஏன் கிடைக்காது ? செவ்வாய்க்கிழமை இரவு தூங்கி, வியாழக்கிழமை காலையில் எழுகிறவர்களைத் தவிர மற்ற எல்லோருக்கும் புதன் கிடைக்கும்"** –இப்படி மிக எளிமையாய் எல்லோருக்கும் புரியும் வகையில் பகுத்தறிவுக் கருத்துக்களை அன்றே சொல்லத் தொடங்கிய கலைஞர், தன் இறுதி நாள் வரையில் எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் அதனை விடாமல் பற்றி நின்றார்.

பகுத்தறிவு என்றாலே கடவுள் மறுப்பு மட்டும்தான் என்று பலர் கருதுகின்றனர். கடவுள் மறுப்பு என்பது அதன் ஒரு பகுதியே தவிர, அது மட்டுமே பகுத்தறிவு என்றாகி விடாது! அறிவியல் பார்வையை வளர்த்துக் கொள்வது தான் பகுத்தறிவின் தொடக்கம். அறிவியல் அறிவு என்பது எல்லோருக்கும் வந்து விடாது! அதற்கு அறிவியல் கல்வி தேவை! ஆனால்! அறிவியல் பார்வை என்பது எல்லோருக்கும் வரலாம், வர வேண்டும்!

எந்த ஒன்றையும், சொன்னவர்கள் யார் என்பதை வைத்து நம்பாமல், சொல்லப்பட்டது என்ன என்பதை ஆராய்ந்து பார்த்துப் பின் நம்புவதுதான் அறிவியல் பார்வை. அதன் ஒரு பகுதிதான் பகுத்தறிவு! அந்தப் பகுத்தறிவுப் பார்வையைச் சமூகத்தில் வளர்ப்பதற்குத் தலைவர் கலைஞர் அவர்கள், தம் இலக்கியம், பேச்சு, திரைப்படம் என அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டார்.

அவருடைய சிறுகதைகள், கவிதை, கட்டுரை, திரைப்பட உரையாடல், அரசியல் பொதுக்கூட்டம் என எல்லாவற்றிலும் பகுத்தறிவுச் சிந்தனைகள் படர்ந்து இருப்பதை நாம் பார்க்க முடியும்!

அவருடைய அணில் குஞ்சு, குப்பைத்தொட்டி முதலான சிறுகதைகள் முழுக்கப் முழுக்கப் பகுத்தறிவுச் சிந்தனை கொண்டவை. எந்த ஒன்றையும் கதைகளின் மூலம் சொல்லும்போது அது மிக எளிதாக வெகுமக்களைச் சென்றடையும்.

மக்கள் திரண்டு இருக்கும் கவியரங்குகளிலும், கலைஞரின் கவிதை எப்போதும் பகுத்தறிவு பேசும் ! எந்த ஓர் இடத்திலும் தம் பகுத்தறிவுச் சிந்தனையை விதைத்திட கலைஞர் மறந்ததே இல்லை. மறக்க முடியுமா அவர் எழுத்துக்களை! ஆம்,

மறக்க முடியுமா என்னும் திரைப்படத்தில் வரும் ஒரு பாட்டில் கூட, "ஆறுதல் சொல்ல யாருமே இல்லை ஆலயம் எதிலும் ஆண்டவன் இல்லை" – என்று அவர் எழுதியிருப்பார்!

எழுத்திலும் பேச்சிலும் மட்டுமின்றித் தம் வாழ்விலும் பகுத்தறிவு நெறியைப் பின்பற்றியவர் தலைவர் கலைஞர். அவர் சிறுவனாக இருந்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கலைஞரே எழுதியிருக்கிறார் –



ஒரு முறை அவர் மதுரையை அடுத்த தண்டலை என்னும் கிராமத்திற்குச் சென்றிருந்தபோது அங்கிருந்த அவர் உறவினர்கள் பேய், பிசாசுகளை பற்றிப் பேசியிருக்கிறார்கள்; பேசி அச்சுறுத்தி இருக்கிறார்கள். பேயாவது பிசாசாவது என்று கலைஞர் சொன்னவுடன், அவர்கள் ஒரு பந்தயம் கட்டி இருக்கிறார்கள். அந்தப் பந்தயம் இதுதான்.

"நீ தைரியமான ஆம்பளையா இருந்தா நடு ராத்திரியில வடுகபட்டி கம்மாயில இருக்கும் வண்ணான் வெள்ளாவிப் பானைக்குச் சுண்ணாம்புக் கோடு போட்டு விடு, பார்ப்போம். அங்கதான் துருசுப் பேய் இருக்கு. 100 ரூபாய் பந்தயம்" பந்தயத்தை ஏற்றுக் கொண்ட கலைஞர் நடு இரவு தனியாகப் போய் அதைச் செய்துவிட்டு வந்த பிறகு, "மாப்பிள்ளை; நீ தைரியசாலி தாண்டா, என்று பாராட்டி நூறு ரூபாயும் கொடுத்த கதையைத் தலைவர் எழுதியிருக்கிறார். பேயும் இல்லை ஒரு பிசாசும் இல்ல என்று அவர் அதனை முடிப்பார்!"

திரைப்படங்களில் அவர் எழுதியுள்ள பகுத்தறிவுக் கருத்துக்கள் பலவற்றை எல்லோரும் அறிவோம். அதனால் தணிக்கை குழுவில் சிக்கல்கள் பல ஏற்பட்ட போதும், அவர் பின்வாங்கியதில்லை. தமிழ்ச் சமூகத்தைச் சீர்திருத்த, பகுத்தறிவு மிகப்பெரிய தேவை என்பதைத் தலைவர் கலைஞர் உணர்ந்து இருந்தார். அதனால்தான் அவர் எழுத்தில், பேச்சில், வாழ்வில் எங்கும் பரவி இருக்கிறது பகுத்தறிவுச் சிந்தனைகள்!

❋ ❋ ❋



நக்கீரன் கோபால்



நக்கீரன் கோபால் 1959–ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டையில் பிறந்தார். 1988, ஏப்ரல் –20ல் 'நக்கீரன்' இதழ் ஆரம்பித்து, பின்னாளில் வாரமிருமுறை இதழாகக் கொண்டுவருகிறார். இது தவிர பல்வேறு வார, மாத இதழ்கள் நடத்திவருகிறார்.

'ஆட்டோ சங்கர்' தொடருக்காக உச்ச நீதிமன்றம் வரை சென்று, ஒரு லேண்ட்மார்க் தீர்ப்பு பெற்றுள்ளார். இந்தியாவில் உள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களையும் பாதுகாக்கும் முக்கிய தீர்ப்பு இது.

வீரப்பனுடனான நேர்காணல்களில் பிரபலமானார். கன்னட நடிகர் ராஜ்குமார் மற்றும் கர்நாடக வனத் துறையினரை வீரப்பன் கடத்தியபோது, இரு மாநில அரசுகளின் அதிகாரப்பூர்வ தூதுவராகச் சென்று, பணயக் கைதிகளை மீட்டு இரு மாநிலத்திலும் அமைதி உருவாகக் காரணமானவர்.

2010ல் சமூக நீதிக்கான தமிழ்நாடு அரசின், 'தந்தை பெரியார்' விருது இவருக்கு வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

இப்போதும் இருக்கிறார் கலைஞர்!

நக்கீரன் கோபால்

அஞ்சாமை ஈகை அறிவுக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு – என்பது வள்ளுவர் வாக்கு.

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் ஒரு தலைவனுக்கு உரிய பண்புகள் என்பது இதன்பொருள். இந்தப் பண்புகளுக்கு எல்லா வகையிலும் இலக்கியமாக வாழ்ந்தவர், நம் முத்தமிழறிஞர் ஆவார். அப்படிப்பட்ட, வரலாற்று நாயகரான முத்தமிழறிஞர் அண்ணன் கலைஞர் அவர்களின் காலத்தில் வாழ்ந்ததே வாழ்வின் பெரும்பேறு என்கிறபோது, அவரின் அன்பைப் பெறுகிற வாய்ப்பையும், அவரோடு நெருங்கிப் பழகுகிற வாய்ப்பையும், வீரப்பன் விவகாரத்தில் அவர் இட்ட பணிகளைச் சிறப்பாகச் செய்து முடிக்கிற வாய்ப்பையும் நான் பெற்றதை, என்னவென்று சொல்வது? இது காலம் எனக்குக் கொடுத்த பெருங்கொடை என்பதைத் தவிர!

விபரம் தெரிந்த நாள்முதல், தந்தைப் பெரியார், அறிஞர் அண்ணாவைப் போல் நான் அறிந்த தலைவர், நம் கலைஞர். ஒரு காலத்தில் மாணவனாய், இளைஞனாய் தூர தூரங்களில் வியப்போடு, நான் கவனித்து வந்த அந்த மாபெரும் தலைவருடன், பிற்காலத்தில் இந்த அளவிற்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெறுவேன் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

அந்த மாபெரும் தலைவர், என்னை ஒரு சக பத்திரிகையாளனாக மதித்து, நட்பு பாராட்டியதும், அதையொட்டி நிகழ்ந்த அனுபவங்களும், என் நாளைய தலைமுறைகளுக்கும் கிடைத்த பெருமிதங்களாகும். அந்த மாபெரும் தலைவரைப் பற்றியும் அவரோடு எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றியும் பல மேடைகளிலும், பல கட்டுரைகளிலும் நான் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அதேபோல், அவரது கடைசி நாட்களையும், அந்த நாட்களிலும் அவர் நடத்திய போராட்டங்களையும், அருகில் இருந்து காணும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கிறது.

அந்த நெகிழ்வான நினைவுகளை, இந்த மலரில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கலைஞர் நோயுற்று, தனது இறுதி அத்தியாயத்தை எழுதத்தொடங்கிய நேரம்.

2018 ஜூலை 27ஆம் தேதி இரவு கலைஞரின் கோபாலபுரம் இல்லத்திற்கு, நக்கீரன் பொறுப்பாசிரியர் தம்பி லெனினோடு சென்றேன். 'கலைஞரின் உடல் நிலையில் முன்னேற்றம் தெரிகிறது என்றார்கள்'. எல்லோர் முகத்திலும் நிம்மதி தெரிந்தது. அங்கிருந்த அண்ணன் ஸ்டாலினும், தனது சித்தரஞ்சன்சாலை இல்லத்துக்குப் புறப்பட்டார்.

நாங்கள் அங்கிருந்து கிளம்ப எத்தனித்தபோது, கலைஞரின் மூத்த மருமகன் முரசொலி செல்வம், அருகே இருக்கும் தங்கள் வீட்டிற்கு எங்களை அழைத்தார். அங்கு சென்று பேசிக் கொண்டிருந்தோம். அப்போது முரசொலி செல்வம், "தலைவரின் சின்னக்காவான எங்கம்மா சண்முக சுந்தரத்தம்மாள், தொண்ணுத்தொம்பதே முக்கால் வயசுவரை இருந்தாங்க. அவங்க கடைசி ரெண்டு வருசம் இப்படித்தான் படுத்த படுக்கையாக இருந்தாங்க" ஆசுவாசமாய்ச் சொன்னவர் "தலைவரைப் பொறுத்தவரை அதிகாலை 4 மணிவாக்கிலே செய்தித் தாள்களைப் படிக்க ஆரம்பிச்சிடுவார். நாம் ஆளுங்கட்சியாக இருந்தால், எதிர்க்கட்சிகளின் செய்தித் தாள்களைத்தான் முதலில் படிப்பார். பிறகுதான் 'முரசொலி' எல்லாம். எந்த அமைச்சரைப் பற்றியாவது தவறாக எழுதப்பட்டிருந்தால் உடனே சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு 5 மணிவாக்கில்

போன் போட்டு, ''பேப்பரைப் பார்த்தீங்களா? பார்த்துட்டுப் பேசுங்க''ன்னு சொல்வார். அதேபோல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தால் முதலில் முரசொலியைத்தான் கையில் எடுப்பார்'' என்றார் புன்னகையோடு.

பின்னர், அடுத்தொரு நிகழ்ச்சியை விவரித்தார்... ''ஒருமுறை, முதல்வர் பொறுப்பிலே தலைவர் இருந்தப்ப, காவல்துறை அதிகாரிகளுக்கான புரமோசன் லிஸ்ட் வெளியாச்சு. அதில், இருந்த ஒருவரின் பெயரைப் பார்த்து திகைச்சுப் போனேன். உடனே தலைவரிடம் போய், ''அந்த அதிகாரி, நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, நம்மிடம் மிக மோசமாக நடந்து கிட்டவராச்சே அவருக்கும் புரமோசனா?'' என்றேன். தலைவரோ, ''ஏன்? அப்படி இருந்தா, அவருக்கு நாம புரமோசன் கொடுக்கக் கூடாதா? அவர் திறமையான அதிகாரி தானே'' என்று கொஞ்சம் காரமான குரலில் சொன்னார். பின் கொஞ்சம் தணிந்த குரலில், 'நாம் அப்படிப்பட்ட அதிகாரிகளை எல்லாம் பழிவாங்கினால், அவங்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லாமப் போயிடும்' என்று என்னைச் சமாதானப்படுத்தினார். இதுதான் தலைவர்'' என்று கலைஞரின் இயல்பைச் சொல்லி நெகிழ்ந்தார்.

அங்கிருந்து கிளம்பிய நான், வீட்டிற்குப் போனபோது மணி 12. அடுத்த கால்மணி நேரத்தில் டி.வி.யில் 'ஸ்டாலின் கோபாலபுரம் விரைந்தார்' என்ற ஸ்கோரல் செய்தி ஓடியதைப் பார்த்துத் திடுக்கிட்டேன். ஏனென்றால், அந்தச் சமயத்தில் ஸ்ட்ரெஸ் காரணமாகச் சிவந்து போகும் தம் கண்களுக்கு ஸ்டாலின், இரவு படுக்கும் முன் சொட்டுமருந்து போட்டுக்கொண்டிருந்தார். அதனால் சொட்டுமருந்து போட்டபின் அவரைக் கோபாலபுரம் வரவேண்டாம் என்று, அவரிடம் முரசொலி செல்வம் சொல்லியிருந்தார். இதை 25ஆம் தேதி நானே பார்த்தேன். செல்வம் சொன்னதையும் மீறி, ஸ்டாலின் கோபாலபுரம் விரைகிறார் என்றால்...? மனம்பதைக்க லெனினுக்கும் தகவல் கொடுத்துவிட்டு மறுபடியும் கோபாலபுரம் வந்தேன். வாசலில் கூட்டமான கூட்டம். ஐயாயிரம் பேருக்கு மேல் திரண்டிருந்தார்கள். அங்கே கலைஞர் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்டாலின், அழகிரி, மு.க.தமிழரசு, செல்வி, கனிமொழி, உதயநிதி, தயாநிதி அழகிரி எல்லோரும் வந்திருந்தார்கள். அதேபோல் தி.மு.க. பிரமுகர்களான துரைமுருகன், டி.ஆர்.பாலு, தயாநிதி, பொன்முடி, நேரு, எ.வ.வேலு, ஆ.ராசா, கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன், எஸ்.எஸ்.பி, அன்பில் மகேஷ், ஜெ. அன்பழகன், சேகர்பாபு, மா.சு. என எல்லோரும் மிகுந்த பதட்டமும் பரிதவிப்புமாக இருந்தனர். சிலர் அழுதனர். இதைப் பார்த்ததும் கலைஞருக்கு ஏதோ ஆகிவிட்டது என்று நினைத்தேன். மனம் பதறியது. எல்லோரின் பார்வையும் கலைஞர் இல்ல மாடிப்படிக்கட்டுகளிலேயே இருந்தது. மாடியிலிருந்து பேயறைந்த முகத்தோடு இறங்கிய ஸ்டாலின் மருமகன் சபரீசன், ச்சே... என்று! உதடு பிதுக்கினார். அதைப் பார்த்ததும் மனம் மேலும் கலங்கியது. அடுத்து, 'ஆம்புலன்ஸைக் கூப்பிடுங்க... என்றபடியே டாக்டர் எழிலன் பரபரப்பாகப் படியிறங்கி வந்தார். 'சரி, எல்லாம் முடிந்துவிட்டது. மோசம் போய்விட்டோம். முறைப்படி மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அதிகாரப்பூர்வ அறிவிப்பு செய்யப்போகிறார்கள் போலிருக்கிறது' என்று நினைத்தேன். அடுத்த கொஞ்ச நேரத்தில், அவ்வளவு கூட்டத்தையும் லாவகமாக விலக்கிக்கொண்டு, ஆம்புலன்ஸ் வாசலில் வந்து நின்றது. 5 முறை தமிழ்நாட்டை ஆண்டவர் கலைஞர். எனினும், அவரது வீட்டு மாடிப்படி மிகவும் குறுகலானது. ஒருவர் ஏறும்போது இன்னொருவர் எதிரே இறங்கி வந்தால், இருவரில் ஒருவர் சுவரோடு சாய்ந்து நின்றுதான். மற்றவருக்கு வழிதர முடியும். அப்படிப்பட்ட குறுகிய பாதை அது. அந்தப் படிக்கட்டுகளின் வழியாக எப்படி கலைஞரைக் கீழே கொண்டு வருவது என்று ஸ்ட்ரெச்சரை வைத்து டிரையல் பார்த்தனர். ஸ்ட்ரெச்சரில் தலைப்பக்கம் ஒருவரும் கால்பக்கம் ஒருவரும் மட்டுமே பிடிக்க முடியும். நடுவில் அதைத் தாங்கிப்பிடிக்க வேண்டும் என்றால், அந்தப்

படிக்கட்டில் இடமில்லை. செக்யூரிட்டி 4 பேர் மேலே வாங்க என்று அழைக்கப்பட, 4 பேர் சென்றனர். இப்படி 1¼ மணி நேரப் போராட்டத்திற்குப்பின், வாழை இலைக்கட்டைக்கொண்டு வருவதுபோல், கலைஞரின் கால்களைக்கட்டி... ஒரு பொட்டலம்போல் கீழே கொண்டுவந்தனர்.

அப்போது கலைஞரின் முகத்தில் அசைவு தெரிவதைப் பார்த்தேன். அப்போதுதான் உயிரே வந்தது. கலைஞரின் அடையாளங்களான அவரது கண்ணாடியும் மஞ்சள் துண்டும் இல்லாததைப் பார்த்த நான், கண்ணாடி எங்கே? துண்டு எங்கே? என்று குரல் கொடுத்தேன். உடனே, நித்யா, ஓடிவந்து கலைஞருக்குக் கண்ணாடியை அணிவித்து, மஞ்சள் துண்டையும் அணிவித்தார். ஆம்புலன்சில் கலைஞர் ஒருவழியாக ஏற்றப்பட்டார். அவ்வளவு கூட்டத்திற்கு மத்தியிலும் ஆம்புலன்ஸை 5 நிமிடத்தில் காவேரியில் கொண்டுபோய் நிறுத்திய அந்த டிரைவரைப் பாராட்ட வேண்டும்.

இதில் என்ன ஆச்சரியம் என்றால், கோபாலபுரத்தில் திரண்டிருந்த அத்தனை கூட்டமும், ஆம்புலன்ஸ் வேகத்திலேயே மருத்துவமனை வாசலுக்கு வந்திருந்தது. ‘‘எழுந்துவா தலைவா’’ என்ற கோஷத்துக்கு மத்தியில், கலைஞர் மருத்துவமனைக்குள் கொண்டு செல்லப்பட்டார். ‘‘எழுந்துவா கோஷம்’’அடங்கவே இல்லை. மணி ஒன்றரை, இரண்டரை என்று ஆகிக்கொண்டே இருந்தது. மூன்றரை மணிக்கு மருத்துவர்களிடமிருந்து நல்ல தகவல்கிடைத்தது. கோபாலபுரத்தில் இருந்து கொண்டுவரப்பட்டபோது வெறும் 30 ஆகக் குறைந்திருந்த கலைஞரின் பல்ஸ் ரேட், இப்போது 120–150 என நார்மலுக்கு வந்துவிட்டது என்று வியப்பாகச் சொன்னார்கள்.

இதைத் தொடர்ந்து, ஆ.ராசா வெளியே ஊடகத்தினரிடம் போய்‘‘தலைவர் நல்லா இருக்கார்’’ என்று புன்னகையோடு சொன்னார். ஆனாலும் அதை நம்பாமல், ‘‘உண்மையைச் சொல்லுங்கள்’’ என்றனர்.

அந்த சமயம், தம்பி தந்தி டி.வி. கருப்பசாமி, என்னிடம் ‘‘நிலைமை என்னண்ணே’’ என்றார்.

நானோ, ‘‘கலைஞரின் பல்ஸ் ரேட் நார்மலாகிவிட்டது. இது மெடிக்கல் மிராக்கில்’ என்றேன். இந்தத் தகவல் நம்பிக்கையுடன் நாலாபுறமும் சிறகடித்தது. அன்றிலிருந்து ஏற்ற இறக்கமாகவே மருத்துவ அறிக்கைகள் வந்துகொண்டிருந்தன. இருந்தும் மருத்துவமனையின் எதிரில் கூடியிருந்த தொண்டர்களின் ‘‘எழுந்து வா தலைவா!’’ கோஷம் ஒருநாளும் ஓயவில்லை.

இந்த நிலையில் கலைஞரின் உடல்நிலையில் பின்னடைவு என்றும் உள்உறுப்புகள் செயல் இழப்பதாகவும் 7ஆம் தேதி காவேரி அதிர்ச்சி அறிவிப்பை வெளியிட்டது. மதியம் 2 மணியளவில் காவேரிக்குக் கவலையோடு சென்றேன். 27ஆம் தேதி கோபாலபுரத்தில் நிலவிய அதே பதட்டமும் துயரமும் இறுக்கமும் அங்கே நிலவியது.

மருத்துவமனையின் ஒரு அறையில் ஸ்டாலினும் வைகோவும் இருந்தனர். இன்னொரு அறையில் என்னோடு துரைமுருகன், டி.ஆர்.பாலு, தயாநிதி, நேரு, பொன்முடி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே, திருத்தணி எம்.எல்.ஏ.ராஜேந்திரன்ஆகியோர் துயரம் கப்பிய முகத்தோடு இருந்தனர்.

அப்போது, டி.ஆர்.பாலு, நாங்கள் எல்லாம் இருந்தும் தலைவரின் பிள்ளைகளைக் கெஞ்ச வச்சிட்டோமே?’’ எனப் புலம்பினார்.

‘‘என்ன ஆச்சுண்ணே?’’ என்றேன்.

டி.ஆர்.பாலுவோ, ‘‘தலைவர், கடைசிக் காலத்தில் அண்ணா நினைவிடத்தில் தமக்கு இடம் அமையனுன்னு விரும்பினார்.’’ அதனாலதான்...

'நீ இருக்குமிடந் தேடி நான் வரும் வரையில்,
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா..
நான் வரும்போது கையோடு கொணர்ந்து–அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா'ன்னு கவிதை பாடினார்.

அதனாலதான் அண்ணா நினைவிடத்தில் அவருக்கு இடம்கேட்டு CM–க்குக் கடிதம் கொடுக்கக் கௌம்புனோம். ஆனால், தளபதி, 'நானும் CM–யைப் பார்க்க வர்றேன்'னார். நான், நீங்க வரவேண்டாம்னு சொன்னேன். அதுக்குத் தளபதி, ''நான் வந்து கேட்கலையேன்னு, அதை ஒரு சாக்காக்கி அவங்க மறுத்துடக் கூடாது. அதனால், தலைவரின் பிள்ளைகளான நாங்க எல்லோருமே வர்றோம். இந்த விசயத்தில் நான் தன்மானம் பார்க்க விரும்பலை. தலைவருக்காக எதையும் விட்டுக்கொடுப்பேன்''னு சொன்னார். அதன்படி, தலைவரின் பிள்ளைகளான ஸ்டாலின், அழகிரி, தமிழரசு, கனிமொழின்னு எல்லோரையும் அழைச்சிக்கிட்டுப் போய் CM–யைப் பார்த்தோம். தலைவரின் பிள்ளைகள் நாலுபேரும் முதல்வரின் கைகளைப் பிடிச்சிக்கிட்டு தலைவருக்கு அண்ணா நினைவிடத்தில் இடம் ஒதுக்குங்க'ன்னு கெஞ்சினாங்க. அப்பவும் பார்ப்போம்னுதான் சொன்னார் முதல்வர்'' என்று சொல்ல, அப்போது ஐ.பெரியசாமி இடைமறித்து''... அப்ப தலைமைச் செயலாளர், உங்களுக்கு அண்ணா யுனிவர்சிட்டிக்கு எதிர்ல 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்குன்னு சொல்லி, அதற்கான பேப்பர்களை எடுத்துப்போட்டாங்க. அதைக் கனிமொழி அப்படியே கையால் தள்ளிவிட்டு, எங்களுக்கு அண்ணா நினைவிடத்தில் தான் இடம்வேணும்'னு சொன்னார்''என்றார். நிமிடத்திற்கு நிமிடம் அங்கே அழுகையும் துயரமும் இருந்தது. அந்த நிலையிலும் ஸ்டாலின், பொறுப்போடு பொறுமை காத்ததைக் கவனித்தேன்.

சுப்புலட்சுமி ஜெகதீசன், தமிழச்சி தங்கபாண்டியன், பூங்கோதை அருணா ஆகியோரோடு சேர்ந்து அழுதுகொண்டிருந்த செல்வி உள்ளிட்ட கலைஞர் குடும்பத்துப் பெண்கள், 5 மணியளவில்''ஓ'' வெனக் கதறியபடியே கோபாலபுரத்துக்குக் கிளம்பினார்கள், அந்தத் துயர நொடி நெருங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. பெண்களை எல்லாம் கோபாலபுரம் போகச் சொல்லிட்டாங்க என்றார் சுப்புலட்சுமி ஜெகதீசன். தொண்டர்களோ, வாசலில் இருந்தபடியே உணர்ச்சிப் பெருக்கோடு ''எழுந்து வா தலைவா.'' என முன்னிலும் வேகமாகக் குரல் எழுப்பிக்கொண்டிருந்த நிலையில், 6.20–க்கு டாக்டர் எழிலனோடு வெளியே வந்த காவேரி மருத்துவமனையின் உரிமையாளரான டாக்டர் அரவிந்தன், கலைஞர் மறைந்த செய்தியை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். எல்லோரின் இதயமும் ஒரு நிமிடம் நின்று துடித்தது.

அப்போது மருத்துவமனையே கதறியது. வழக்கறிஞர் வில்சன் வந்தார். கலைஞருக்கு மெரினாவில் இடம் கேட்டு, மீண்டும் ஒரு கடிதம் தயார் செய்யப்பட்டு, முதல்வருக்கு அனுப்பப்பட்டது. இதற்கிடையே கலைஞரின் உடலுக்கு எம்பார்மிங் செய்யும் வேலைகள் உள்ளே நடந்தன. ஸ்டாலின், வைகோ, கலைஞரின் பாதுகாவலர்கள் பாண்டியன், கணேசப்பிள்ளை, வினோத், கலைஞரின் PRO மருதநாயகம், வழக்கறிஞர் வில்சன் போன்றோர் ICU வாசலிலேயே காத்திருந்தோம். 9 மணியளவில் எங்களை எல்லாம் கலைஞரைப் பார்க்க உள்ளே அழைத்தார்கள். கலைஞர் மெழுகுச் சிலைபோல் படுக்க வைக்கப்பட்டிருந்தார். கண்கலங்கக் கைகூப்பினேன்.

அப்போதும் கூட கலைஞர் இல்லை என்று மனம் நம்ப மறுத்தது. அந்த நேரத்திலும் அதே உணர்வோடு 'எழுந்து வா தலைவா' என்ற தொண்டர்களின் நம்பிக்கை மிகும் கண்ணீர் முழக்கம் ஒலித்துக் கொண்டிருந்தது. பெரும் கண்ணீர்ப் பிரளயத்தை உருவாக்கிவிட்டுப் போயிருக்கிறார் கலைஞர்.

உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு **–என்பார் அய்யன் திருவள்ளுவர்.**

இப்போது கலைஞர், மரணம் என்ற உறக்கத்தில் இருக்கிறார். அவர் பிறப்பு என்கிற விழிப்பை அடைவார். அவரை உணர்ந்து நேசிக்கும் இதயங்களில் நுழைந்து அவர், புதுப்பிறப்பெடுப்பார் என்று எனக்குள் நான் சொல்லிக்கொண்டேன்.

வரலாற்று நாயகரான கலைஞர், தமது மரணத்திற்குப்பின், தான் உயிருக்கு உயிராய் நேசித்த அண்ணாவின் அருகிலே, நீள்உறக்கம் கொள்ளவேண்டும் என்று விரும்பினார்.

அதன் விளைவு சட்ட ரீதியாக நீதிமன்றத்தின் மூலம், முத்தமிழறிஞர் கலைஞர் ஆசைப்பட்டது போலவே, அவர் ஓய்வெடுக்க விரும்பிய அறிஞர் அண்ணாவிற்கு அருகிலேயே அவருக்கு இடம் கிடைத்தது. இதைப் போராடிப் பெற்ற சாதுர்யத்திலேயே அடுத்த கலைஞர் தான்தான் என்று நிரூபித்தார் அண்ணன் ஸ்டாலின்.

இதைவிட அந்த நேரத்தில் தமிழர்களுக்குப் பெரிய வெற்றி ஏதுமில்லை மழையடித்துக்கொண்டே வெயில் வீசும் வானத்தைப்போல், அப்போது அனைவரும் கண்ணீர் வழிந்த விழிகளோடு சிரித்தார்கள். தலைவரின் கனவை தளபதி நிறைவேற்றிவிட்டாரே என்கிற பூரிப்பு, அந்தத் துக்க நேரத்திலும் மேலெழுந்து நின்றது. அன்றே தளபதி அண்ணன் ஸ்டாலின், ஒரு சாகச வீரரைப்போல் தமிழர்களின் நெஞ்சில் இதன்மூலம் நிமிர்ந்து நின்றார்.

'கலைஞர் இல்லை என்றால் தமிழகமே சூனியமாகி விடும்' என்று நினைத்தவர்களின் வாயில் அதன்பின் மண் விழுந்தது. கலைஞர் இல்லாத தமிழ்நாட்டின், கலைஞரின் இன்னொரு வடிவமாகவே தளபதி ஸ்டாலின் உருவெடுத்தார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் கண்ட கனவுகளை எல்லாம் செயல் வடிவமாக மாற்றத் தொடங்கினார் தளபதி. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகவேண்டும் என்கிற திராவிட சித்தாந்தத்தை முதல்வரான தளபதி செயல்வடிவம் ஆக்கியது போலவே, எண்ணற்ற திட்டங்களை மகளிர் மேம்பாட்டுக்காகவும், இளைஞரின் நலனுக்காகவும் ஏழை பாழைகளின் உயர்வுக்காகவும் அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். ஒட்டு மொத்த தமிழ்ச் சமூகத்தின் மேன்மைக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டு தமது ஆட்சித் தேரை, திராவிடத்தின் சாதனை வீதிகளில் அவர் கம்பீரமாகச் செலுத்திக்கொண்டு இருக்கிறார்.

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் **–என்பார் அய்யன் திருவள்ளுவர்.**

இதன் பொருள், தந்தை தம் மக்களுக்குச் செய்ய வேண்டிய நல்லுதவி அவர்களை அறிஞர்கள் அவையில் புகழுடன் விளங்குமாறு ஆக்குவது என்பதாகும். இதற்கு ஏற்ப, நம் முதல்வர் தளபதியைத் தனக்குப் பதிலாகப் புகழோடு மக்கள்முன் நிறுத்திவிட்டுச் சென்றிருக்கிறார் கலைஞர்.

இன்று தமிழ்நாடு மட்டுமல்லாது: ஒட்டுமொத்த இந்தியாவும் அவரை எதிர்பார்ப்போடு வாழ்த்துகிறது!. அவரது சாதனைகளைப் போற்றுகிறது!. முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில் தமிழர்கள் அனைவரும், மீண்டும் திராவிடம் எழுச்சி பெறுவதில் மகிழ்ச்சியுற்று, புதிய உத்வேகத்தோடு நடைபோட்டு வருகிறார்கள். இதைவிட மகிழ்ச்சிப் பெருக்கு நமக்கு ஏது? கலைஞர் மறையவில்லை;! இப்போதும் முதல்வர் ஸ்டாலின் வடிவில் இருக்கிறார்!

❋ ❋ ❋

இரா. சிவகுமார்




'திரையுலக மார்க்கண்டேயன்' எனப் போற்றப்படும் நடிகர் சிவகுமார் புகழ்பெற்ற தமிழ்த் திரைப்பட கலைஞர். கோவை மாவட்டம் காசிகவுண்டன்புதூரில் பிறந்தவர். ஒரு தேர்ந்த ஓவியர். கம்ப ராமாயணம், மகாபாரதம், திருக்குறள் 100 என சொற்பொழிவுகள் நிகழ்த்திப் புகழ்பெற்ற இலக்கிய ஆர்வலர்.

1965ல் இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர் அவர்களுடன் காக்கும் கரங்கள் படத்தின் மூலம் திரையுலகிற்கு அறிமுகமானவர். ரோசாப்பூ ரவிக்கைக்காரி (1979), வண்டிச்சக்கரம் (1980) ஆகிய படங்களுக்குச் சிறந்த நடிகருக்கான பிலிம்பேர் விருதை (தெற்கு) வென்றவர். வாழ்நாள் சாதனையாளர் விருது – (2007)ஆம் ஆண்டில் பெற்றவர். தமிழ்நாடு மாநில திரைப்பட விருதுகளை அவன் அவள் அது (1980) மற்றும் அக்னி சாட்சி (1982) ஆகிய திரைப்படங்களுக்குப் பெற்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பராசக்தி திரைப்பட வசனத்தை மேடையில் கலைஞர் முன்னிலையிலேயே பேசி, கலைஞர் அவர்களையும் அவையோரையும் கவர்ந்து, பாராட்டுகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கலைஞரைக் கவர்ந்த ஓவியம்

இரா. சிவகுமார்
நடிகர், ஓவியர் மற்றும் சொற்பொழிவாளர்



1988 நவம்பர் 14ஆம் தேதி, அருணாசலம் ஸ்டுடியோவுல மனித ஜாதி ஷூட்டிங்ல இருந்தேன். கலைமணிதான் புரொட்யூஸ் பண்ணி டைரக்ட் பண்ணிகிட்டிருந்தாரு. நாலு மணி வாக்குல ஒரு போன் வந்தது. கனிமொழி பேசினாங்க. 'சார், அப்பா உங்க வீட்டுக்கு இன்னிக்கு வர்றேன்னிருக்காங்க'ன்னாங்க. எனக்கு 'ஷாக்'. 'ஏம்மா நீயும், அம்மாவும்தானே பெயிண்டிங்ஸ் பார்க்க வர்றேன்னீங்க?' உண்மையிலேயே அப்பா வர்றாரா?'ன்னு கேட்டேன். ஆமான்னாங்க. எனக்கு இன்ப அதிர்ச்சியாயிருந்தது.

ஷூட்டிங்கை உடனே ஸ்டாப் பண்ணீட்டு 5 மணிக்கு கிளம்பி கோடம்பாக்கம் ஹை – ரோட்டுல வர்றேன். பாண்டி பஜார் வந்துருச்சு. ஒரு மாலை வாங்கிட்டேன். வீட்டுக்குப் போன 10 நிமிஷத்துல கனிமொழி, ராஜாத்தி அம்மா, கலைஞர் கார்ல வந்தாங்க.

அவருக்கு மாலை போட்டேன். 'என்னய்யா மாலை?'ன்னு கேட்டாரு. 'மூணு தடவை முதலமைச்சரா இருந்தவர் நீங்க. வீட்டுக்கு வர்ற உங்களுக்கு இதைக் கூடசெய்யலைன்னா எப்படி?'ன்னு சொன்னேன். உள்ளே கூட்டிட்டுப் போனேன். ஒன்றரை மணி நேரம் பொறுமையா என் பெயிண்டிங்ஸ் பார்த்தாரு!'ன்னா எப்படியிருக்கும்?

கலைஞர் முகம் அறிமுகமாகும் முன் அவர் எழுத்துக்கள் என் நேசிப்புக்கு உள்ளாயின. **பராசக்தி, மனோகரா, அனார்கலி, சேரன் செங்குட்டுவன் வசனங்கள் 10, 12 வயதில் முதலில் மனப்பாடமாகி விட்டன.**

அதன் பிறகுதான் தி.மு.க.வில் அவரும் ஒரு தலைவர் என்பதை அறிந்து கொண்டேன். பள்ளிப் பாடங்களை விட அவரது அடுக்கு மொழி, உணர்வுப்பூர்வமான வசனங்களும், பின்னாளில் அவர் எழுதிய, "சங்கத்தமிழ்","குறளோவியம்" –போன்ற நூல்களும் தமிழை நேசிக்கக் காரணமாயின.

சிவகுமார் 100 பூக்களை மூச்சு விடாமல் சொல்லி அசத்துவார் என்கிறீர்களே, அந்த 100 பூக்களின் பெயர்களைச் சங்கத்தமிழ் – நூலின் முதல் பாடலில் – கபிலப் புலவன் குறிப்பிட்டதைத்தான் மனப்பாடம் செய்தேன்.

ஓவியக்கல்லூரியில் படித்த காலங்களில், மெரினா கடற்கரையில் தி.மு.க. கூட்டங்கள் அடிக்கடி நடக்கும். 6.30 மணிக்கு மாலையில் தொடங்கினால் கடைசியில் கலைஞர் அடுத்து அண்ணா பேசும்போது 10 மணி ஆகிவிடும். பலநாள் இரவு சாப்பாடு சாப்பிட முடியாமல் ஒரு வாழைப்பழமும், ஆரஞ்சு சோடாவும் சாப்பிட்டுப் பசியாற்றிய சம்பவங்கள் பல உண்டு!



சிவகுமார் வரைந்த ஓவியம்

கொல்லர் உலையில் இரும்பை வைத்துப் படிப்படியா சூடேற்றி, செக்கச்செவேல் என்று இரும்பு ஆன பிறகு வெளியே எடுத்துச் சம்மட்டியில அடிப்பது போல, கலைஞர் உரை கொஞ்சம், கொஞ்சமாகச் சூடேறி உச்சத்தைத் தொடும்போது கூட்டம் உணர்ச்சிப் பெருக்கால் தங்களை மறந்து கைதட்டும் கணங்களை நான் பலமுறை பார்த்தவன்!.

நடிகனாகி 1973இல் மே மாதம் 29ஆம் தேதி 'அரங்கேற்றம்' படத்தின் 100ஆவது நாள் விழாவில், ஏவி.எம். ராஜேஷ்வரி திருமண மண்டபத்தில், முதலமைச்சராக இருந்த கலைஞரிடம் கேடயம் பரிசு பெற்றேன்!

அதன் பிறகு 15 ஆண்டுகளில் அவரைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படவில்லை. 1988இல் சிவச்சந்திரன் இயக்கிய, 'என்னுயிர் கண்ணம்மா' படத்தின் 50ஆவது நாள் விழா பிரசாத் ஸ்டுடியோவில் நடைபெற்றது. கலைஞர் இருக்கும் மேடையில் நான் முதன்முதலில் பேசியது அன்றுதான்.

பாசப்பறவைகள், பாடாத தேனீக்கள் – இரண்டும் பூம்புகார் புரொடக்சன்ஸ் என்ற கலைஞரின் குடும்பத் தயாரிப்பு.

1988– மார்ச் 31ஆம் தேதி 'பாசப்பறவைகள்' ரீ–ரிகார்டிங் செய்வதற்கு முன்பு முழுப்படத்தையும் பார்க்க, சென்னை மியூசிக் அகாடமி எதிரில் உள்ள சுப்ரகீத் என்ற ப்ரிவ்யூ தியேட்டருக்கு கலைஞர் வந்தார். முதன் முறையாக எனது துணைவியாரை அவருக்கு அறிமுகப்படுத்தினேன்.

படம் பார்த்து முடித்த பின், என்னுடைய 'டொயோட்டா' காரில் அவரை அமர்த்தி, நானே காரை ஓட்டிச் சென்று அவரது கோபாலபுரம் வீட்டில் இறக்கிவிட்டு வந்தேன்.

1988 மே மாதம் 25ஆம் தேதி காரைக்குடியில் 'இசைஞானி' என்ற பட்டம் இளையராஜாவுக்கு கலைஞர் வழங்கும் நிகழ்ச்சி மகாத்மா காந்தி மைதானத்தில் நடைபெற்றது. பழ. கருப்பையா ஏற்பாடு செய்திருந்தார்.



அரங்கேற்றம் 100–வது நாள் விழாவில்...

தமிழண்ணல், வைகோ, தென்னரசு, விஜயகாந்த், எஸ்.பி. முத்துராமன், ஏ.எஸ்.பிரகாசம், ஜி.கே.வெங்கடேஷ் ஆகியோருடன் நானும் வாழ்த்திப் பேசினேன்.

1988–ஜூன் 17ஆம் தேதி திருவொற்றியூர் எம்.எஸ்.எம். தியேட்டரில் 'பாசப்பறவைகள்' 50ஆவது நாள் விழா பெருங்கூட்டம் நடைபெற்றது. 'சேரன் செங்குட்டுவன்' – என்ற ஓரங்க நாடக வசனம் கலைஞர் எழுத, 'ராஜா ராணி' படத்தில் சிவாஜி ஒரே டேக்கில், சுமார் 5 நிமிட நீளமுள்ள அந்த வசனத்தைப் பேசி நடித்தது இன்று வரை ஒரு ரெக்கார்டு.

அந்த முழு வசனத்தையும் ரசிகர்கள் கூட்டத்தில் கலைஞர் முன் பேசிக்காட்டினேன். ஆனால், அவரோ, 1952இல் 'பராசக்தி' படம் வெளியான சமயம் தி.மு.க. பிரச்சார நாடகத்தில் புறநானூற்றுத் தாயின் பெருமையைச் சொல்லும் நீளமான வசனத்தை – அக்காலத்தில் சிவாஜி நாடகத்தில் பேசியதை – ஒரு வார்த்தை பிசகாமல் பேசி என்னை மிஞ்சி கைதட்டல் பெற்றார். 36 வருடங்களுக்கு முன்பு எழுதிய வசனத்தை அரசியலில் எத்தனையோ நிகழ்வுகள் ஏற்ற, இறக்கங்களைப் பார்த்தவர் இன்று பேசியது பிரமிப்பாக இருந்தது.

அதே 1988, ஜூலை 17ஆம் தேதி 'சினிமா எக்ஸ்பிரஸ்' இதழின் சிறப்பாசிரியராக நான் கலைஞரை பேட்டி எடுத்தேன்.

- **கடவுள் நம்பிக்கை சிறு வயதில் உங்களுக்கு நிச்சயம் இருந்திருக்கும். காரணம் உங்கள் தந்தையார் பக்தி மான்.**
- **சிறு வயதில் நீங்கள் கும்பிட்ட சாமி பெயர் என்ன? எத்தனை ஆண்டு கும்பிட்டீர்கள்?**
- **பகுத்தறிவுச் சிந்தனை எந்த வயதில் முளை விட்டது?**



கலைஞருடன் பேட்டி.

- **இது ஆன்மிக பூமி. வள்ளுவர், திருமூலர், நாவுக்கரசர், சம்பந்தர் என அத்தனை பெரியோர்களும் இறைவன் இருப்பைப் பற்றிப் பாடியுள்ளார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாத்திகவாதிகள் பெரியார் போல் இருந்திருக்கிறார்களா ?**
- **எஸ்.எஸ்.எல்.சி தேர்வு நீங்கள் ஏன் எழுதாமல் விட்டீர்கள்? ஒழுங்காகக் கல்லூரி சென்று தமிழ் படித்திருந்தால் யாரைப் போல உருவாகி இருப்பீர்கள் என்று கேட்டபோது 'ஐ.ஏ.எஸ். திரவியம் போல உருவாகியிருப்பேன்!' என்றார்.**
- **12 வயதில் – ஊமைப் படமாக மகாபாரதம் – அர்ஜுனன் கதையை முதன் முதல் தியேட்டரில் பார்த்ததாகச் சொன்னார்.**
- **12 வயதில் செல்வசந்திரா என்ற நாவல் கையெழுத்துப் பிரதியாக எழுதியதாகவும் இன்றும் அது பத்திரமாக உள்ளதாகவும் சொன்னார்.**
- **எம்.ஆர்.ராதா நாடகத்தை நாகப்பட்டினத்தில் பார்த்தபோது நாமும் இப்படி நாடகம் எழுத வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டுப் பின்னாளில் 'தூக்கு மேடை' எழுதி ராதாவுக்குக் கொடுத்ததாகச் சொன்னார்.**

1988 நவம்பர் 14ஆம் தேதி எங்கள் இல்லத்திற்கு கலைஞரும், ராஜாத்தி அம்மாவும், கனிமொழியும் வந்தார்கள். அப்போதுதான் எனது ஓவியங்களை 1½ மணி நேரம் பொறுமையாக அமர்ந்து பார்த்தார். மாமல்லபுரம் புலிக்குகை ஓவியத்தைப் பார்த்ததும் 'காஞ்சித்தலைவன்' படத்திற்கு எம்.ஜி.சக்ரபாணியுடன் நான் இங்கு சென்றுதான் வசனம் எழுதினேன் என்றார்.

'இவ்வளவு பெரிய ஓவியனாக, இத்தனை ஓவியங்கள் தீட்டியிருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இதற்குப் பிறகு ஏனப்பா நடிக்க வந்தாய்?' என்று கேட்டார்.



வீட்டில் எனது ஓவியங்களைப் பார்க்கிறார்

'நீங்களெல்லாம் என் வீட்டுக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான். நான் வெறும் ஓவியனென்றால் நீங்கள் வருவீர்களா?' என்றேன்.

1989இல் அக்டோபர் 25ஆம் தேதி என் தாயார் மறைந்த போது

26ஆம் தேதி அதிகாலை 5 மணிக்கு வந்து மரியாதை செய்து சென்றார்.



என் குடும்பத்தாருடன் கலைஞர்.



நேருக்கு நேர் ப்ரிவ்யூ

1997இல் சூர்யாவின் முதல் படம், 'நேருக்கு நேர்'– 'நீங்கள் பார்த்து ஆசி கூற வேண்டும்!' என்றேன். 4 ஃபிரேம்ஸ் தியேட்டருக்குத் துணைவியாருடன் வந்து பார்த்து, 'தந்தை எட்டடி பாய்ந்தால் பிள்ளை பதினாறு அடி பாய்ச்சல்!' என்று வாழ்த்தி எழுதிக் கொடுத்தார்.

2007 பிப்ரவரி 21இல் 'பருத்தி வீரன்' படம் பார்த்து விட்டு வாயடைத்துப் போய் வீடு சென்றார்.



சூர்யா – ஜோதிகா திருமணம்.

'தம்பி 1942லிருந்து எனக்குத் திரையுலகுடன் தொடர்பு உண்டு. 'பருத்தி வீரன்' படத்தில் ஒரு காட்சிகூட இப்படித்தான் வரும் என்று ஊகிக்க முடியவில்லை. எப்படிப்பா இப்படியெல்லாம் இன்றைய இளைஞர்கள் யோசிக்கிறார்கள்?

2006இல் செப்டம்பர் 11ஆம் தேதி சூர்யா–ஜோதிகா திருமணம் அடையாறு பார்க்கில் நடைபெற்றது. நேரில் வந்து மாங்கல்யம் தொட்டு ஆசி கூறினார்.

2007இல் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பெரியார் ஓவியம் தீட்டினேன். எனது ஓவியங்களைப் பார்த்த சகோதரர் வைகோ, 'பெரியார் படம் வரையாமல் உங்கள் ஓவியக்கலை முழுமை அடையாது' என்றார்.

பெரியாரை வரைந்து கலைஞரிடம் காட்டியபோது மௌனமாகப் புன்னகைத்தார். 'அது சரி, என்னை எப்போது வரையப் போகிறாய்?' என்று கேட்டார். நான் பேசாமல் இருந்தேன்.

'நீங்கள் கருப்புக் கண்ணாடி அணிந்துள்ளீர்கள். ஓவியத்திற்கு அழகே கண்கள்தான். உங்களுக்கு அழகான காந்தக் கண்கள். அப்படி ஒரு படம் வேண்டும். தலையில் முடியுடன் இருந்தால் இன்னும் நல்லது !' என்றேன்.

அவர் 1969இல் முதல்வராக 45 வயதில் பதவி ஏற்றபோது அலுவலகங்களில் வைக்க எடுத்த புகைப்படத்தின் பிரதி கிடைத்தது. நடு வகிடு, அலை, அலையாகச் சுருள்முடி. ராஜபல்லின் கீழ் பகுதி சற்றே உள்வாங்கி இருக்கும். எப்போதும் சிரித்த களையான முகம். இரண்டு கண்களுக்கும் இடையே உள்ள இடைவெளி சற்று அதிகம் இருக்கும்.



கடைசி சந்திப்பு

அதை வரைந்து கொடுத்தபோது அவரது பார்வையில் நன்றியும் நெகிழ்ச்சியும் தெரிந்தது.

2009 நவம்பர் 15ஆம் தேதி திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர் முக்தா சீனிவாசனின் 80ஆவது பிறந்த நாள் விழா கலைஞர் தலைமையில் நடைபெற்றது. 1949இல் 'மந்திரிகுமாரி' படத்திற்கு வசனம் எழுத சேலம் சென்ற காலம் தொட்டு முக்தாவுக்கும் இவருக்கும் உள்ள நட்பை விளக்கிப் பேசினேன்.

2017 செப்டம்பர் 13ஆம் தேதி கடைசியாக அவரைக் கோபாலபுரம் வீட்டில் சந்தித்தேன். 90 சதவிகிதம் நினைவுகள் மறந்த நிலை. 'மனோகரா' – தர்பார் சீனில் சிவாஜி பேசும் உணர்ச்சி மிக்க கலைஞர் வசனத்தை நான் பேசி வீடியோவில் பதிவு செய்து, கலைஞர் வீட்டு டி.வி திரையில் போட்டு வால்யூமைக் கூட்டி அவரைக் கேட்கச் செய்தேன்.

'புருஷோத்தமரே! புரட்டுக்காரியின் உருட்டும் விழியிலே உலகத்தைக் காண்பவரே என்று ஆரம்பித்து, பாவி பார் பத்தினியை இழந்த படுபாவி பார்! நீயும் உன் பஞ்சணை ராணியும் படும் பாட்டை பார்!' என்று உரக்கக் கத்தி – வாளை சிவாஜி உருவும் வசனம் கேட்டபோது சிலையாக இருந்த அவர் முகத்தில் வலது கண்ணின் ஓரம் ஒரு நீர்த்திவலை உருண்டு கன்னத்தில் சரிந்தது. பாதம் தொட்டு வணங்கி விடைபெற்றேன்.

தரிசிப்போம்...

❋ ❋ ❋



மரத்தை நாம் வளர்த்தால்.. மரம் நம்மை வளர்க்கும் என்ற கலைஞர்
3.6.2007 – 84வது பிறந்த நாளில் மரக்கன்று நட்ட காட்சி

கலைஞர் ஆட்சியின் நிருவாகச் சீர்திருத்தங்கள்



முனைவர் **வீரப்பன்**
மேனாள் சிறப்புத் தலைமைப் பொறியாளர்
பொதுப்பணித்துறை

1. அறிமுக உரை:

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினைத் தமிழ்நாடு அரசு கொண்டாடுவது மிகவும் பெருமைப்படத்தக்கது. இவ்வகையில் அமைக்கப்பட்ட 12 குழுக்களில் பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர் என்ற குழுவின் கீழ் **'கலைஞர் ஆட்சியின் நிருவாகச் சீர்திருத்தங்கள்'** எனும் தலைப்பில் இக்குறுங்கட்டுரையினை எழுதக் கிடைத்த வாய்ப்பிற்காக மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர். **திரு. துரைமுருகன்** அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்தத் தலைப்பின் கீழ் முத்தமிழறிஞர் அவர்கள் அவர்தம் ஆட்சிக்காலங்களில் தமிழ்நாடு நிருவாகச் சீர்த்திருத்த ஆணையங்கள் மற்றும் சீர்திருத்தக் குழுக்கள் அளித்த பரிந்துரைகளின் பேரில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் மற்றும் 1969 முதல் 2011 வரை தமிழ்நாடு அரசுத் துறைகளிலும் செய்த நிருவாக மேம்பாடுகள்; இவை தவிர தமிழ்ச் சமுதாய கீழ்த்தட்டு மக்கள் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்திய புதுமைமிகு சீர்திருத்தங்களையும் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளேன். இவையனைத்தும் கலைஞர் அவர்களுக்குச் சமத்துவ சமுதாயம் அமைப்பதில் அவருக்கிருந்த அணையா ஆர்வத்தையும் பகுத்தறிவுக் கொள்கையில் இருந்த ஈடுபாட்டையும் வெளிப்படுத்துபவனாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. தமிழ்ச் சமுதாய விடிவெள்ளிகளாம் பெரியார் மற்றும் அண்ணா அவர்களின் நெடுங்கால நெஞ்சக்கனவுகளை நிறைவேற்றும் வகையிலும் அமைந்துள்ளன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விழைகிறேன்.

2. தமிழ்நாடு நிருவாகச் சீர்திருத்த ஆணையங்கள் சீர்திருத்தக் குழுக்கள் அமைத்தமை:

1973ஆம் ஆண்டில் – தமிழ்நாடு அரசின் பெருகிய வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நியமனம் செய்யப்பட்ட கூடுதல் அரசு ஊழியர்களுக்குரிய நிருவாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள திரு.T.A. **வர்கீஸ்** ICS (மேனாள் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர்) அவர்களின் தலைமையின் கீழ் **தமிழ்நாடு நிருவாகச் சீர்திருத்த ஆணையம்** அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் பல சீர்திருத்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அன்று தலைமைச் செயலகத்திலிருந்த பொதுத்துறை (Public Department) பிரிக்கப்பட்டு **அரசுப் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை** (Personnel and Administrative Reforms Department) எனும் புதிய துறை 06–11–1976இல் உருவாக்கப்பட்டது. இத்துறை தொடர்ந்து பல நிருவாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டது.

தொடர்ந்து மார்ச் 2007ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்ற மேனாள் **நீதிபதி A.K.இராஜன்** அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு நிருவாகச் சீர்திருத்த ஆணையம் இரண்டாண்டுகளுக்கு மேல் ஆராய்ந்து நூற்றுக்கு மேற்பட்ட நிருவாகச் சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்தது; அதன் வழி பல்வேறு நிருவாக மேம்பாடுகள் செயற்படுத்தப்பட்டன.

மேலும் 1997–2000ஆம் ஆண்டுகளில் தமிழகப் பொதுப்பணித் துறையில் பொறியியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள Er. C.A. **சீனிவாசன்** (மேனாள் தலைமைப் பொறியாளர்) தலைமையிலும், Dr. **வா.செ. குழந்தைசுவாமி** தலைமையிலும் பொறியியல் சீர்திருத்தப் பரிந்துரைகளைப் பெற்றது. அதனடிப்படையில்தான் உலக வங்கியின் தொடர் வற்புறுத்தலின் பேரில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை – பொதுப்பணித்துறை (கட்டடங்கள்) மற்றும் நீர்வளத் துறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

எங்களின் நீண்டகால நெடிய கோரிக்கையினை ஏற்றுப் பொதுப்பணித்துறை, தலைமைச் செயலகத்தில் பொறியியல் தொழில்நுட்பக் கருத்துரை வழங்கிடத் தலைமைப் பொறியாளர் தகுதி நிலையில் அரசு சிறப்புச் செயலாளர் பதவி (1990ஆம் ஆண்டில்) உருவாக்கப்பட்டு இன்றளவும் அந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது. அப்பதவியில் பொறி. சுகுமாரன் (நெடுஞ்சாலைத்துறை), பொறி. நீலகண்டன் மற்றும் பொறி. ஆ. தீனதயாளன் போன்ற தலைமைப் பொறியாளர்கள் மிகச் சிறந்த அரசுச் சிறப்புச் செயலாளர்களாகப் பணியாற்றியதைப் பெருமிதத்துடன் நினைவு கூர்கிறோம்.

3. கலைஞர் ஆட்சியில் செயற்படுத்திய வரலாற்றுச் சிறப்புடைய பல நிருவாகச் சீர்திருத்தங்கள்

கலைஞர் அவர்கள் **பெரியார், அண்ணா** எனும் பெருமைமிகு ஆளுமைகளால் வளர்த்தெடுக்கப்பட்ட பெரும் சமூகப் போராளி. அவர்தம் பகுத்தறிவு, சமுதாயச் சீர்திருத்தங்களை அன்றைய திரைப்படங்களின் வழியாக (பராசக்தி, மனோகரா, திரும்பிப்பார் போன்றவை) சமுதாய ஏற்றத்தாழ்வுகளைப் போக்கிட எண்ணற்ற கருத்துரைகளைக் கலைஞர் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்ற 1969 முதல் தொடங்கி 2011 வரை குறிப்பிடத்தக்க ஏன் இந்திய மாநிலங்களிலேயே முதல்முறையாகப் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளைச் செயல்படுத்தினார்கள். அவற்றுள் தலையாயவை அவர்தம் நினைவைப் போற்றும் வகையில் கீழே பட்டியலிடப்படுகின்றன.



முதன் முறை முதலமைச்சர் (1969–1971)

- பிற்படுத்தப்பட்டோர்க்கு அரசுப் பதவிகளில் தனிஒதுக்கீடு வழங்கிட சட்டநாதன் ஆணையம் (1969)
- மாதந்தோறும் மாவட்ட ஆட்சியர்கள் பொதுமக்களின் குறைகளை நேரில் கேட்டுக் களைந்திட மனுநீதித் திட்டம்
- தமிழ்நாடு நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் 30 ஏக்கர் உரிமையினை 15 ஏக்கர்களாகக் குறைத்தமை (1976)
- குடிசைவாழ் மக்களுக்கு நிலையான கான்கிரீட்டிலான குடியிருப்புகளைக் கட்டித்தர தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தியமை (1970)

இரண்டாம் முறை முதலமைச்சர் (1971–1976)

- பிற்படுத்தப்பட்டோர் தனி ஒதுக்கீடு 25 சதவிகிதத்தை 31 சதவிகிதமாகவும் தாழ்த்தப்பட்டோர் – பழங்குடியினர் ஒதுக்கீடு 16 சதவிகிதத்தை 18 சதவிகிதமாகவும் உயர்த்தியமை (1971)
- பிற்படுத்தப்பட்டோருக்காகத் தனி அமைச்சரகம்.
- தமிழ்நாட்டுக் காவல்துறையில் மகளிர் பணிபுரியும் வாய்ப்பளித்தமை

மூன்றாம் முறை முதலமைச்சர் (1989 – 1991)

- 1984இல் குடும்பச் சொத்துக்களில் பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்று சட்டம் கண்டமை
- இந்தியாவிலேயே முதன்முறையாக அரசுப்பணிகளில் மகளிர்க்கு 30 சதவிகித ஒதுக்கீடு வழங்கியமை.
- 1990இல் 12.40 இலட்சம் உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கியமை.

நான்காம் முறை முதலமைச்சர் (1996 – 2001)

- பள்ளி மாணவர்களுக்குப் பேருந்துகளில் இலவசப் பயணம், கல்லூரி மாணவர்களின் பேருந்து பயணத்திற்கு 50 சதவிகித நிதி உதவியளித்தல் (1997)
- உழவர்கள் தம் விளைபொருட்களை நேரிடையாக விற்றிட உழவர் சந்தைகள் அமைத்திட்டமை
- மக்களிடையே சாதி சமத்துவத்தை ஏற்படுத்திட 145 சமத்துவபுரங்கள் ஏற்படுத்தியமை
- உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 சதவிகித தனிஒதுக்கீடு அளித்தமை.

ஐந்தாம் முறை முதலமைச்சர் (2006 – 2011)

- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கென 35 சிறப்பு நல வாரியங்களை அமைத்தமை (2006)
- கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – வருமுன் காப்போம் திட்டம் (2009)
- மாவட்ட ஆட்சியர் வளாகங்கள், அலுவலகக் கட்டடங்கள் கட்டியமை (2010)

4. சிறப்பானவை; முத்தானவை;

தமிழ்நாட்டின் பாசன மேலாண்மையினை மேம்படுத்திட 35க்கும் மேற்பட்ட நீர்த்தேக்கங்களை அமைத்தமை.

அவற்றுள் மோர்தானா நீர்த்தேக்கம், செண்பகத் தோப்பு, கெலவரப்பள்ளி, சூளகிரி–சின்னாறு, தொப்பையாறு, குண்டேரிப் பள்ளம், சித்தமல்லி, பொன்னையாறு, பாலாறு–பொருந்தலாறு, குடகனாறு, மருதாநதி, பிளவக்கல், சோத்துப்பாறை, கருப்பாநதி, குண்டாறு, நம்பியாறு, பொய்கையாறு முக்கியமானவை.

எங்களின் பொறியாளர் சங்கக் கோரிக்கைகளான பட்டம் பெற்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு அரசிதழ் தகுதி அளித்தமை (1971) மற்றும் சிறந்த பொறியாளர்களுக்கு ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா விருது வழங்கிப் பாராட்டியமை (1990) முதலியவற்றை நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறோம். இச்செயற்பாடுகளில் அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களின் பங்கு பெரிது; பெரிதும் பாராட்டத் தக்கது.

5. நிறைவுரை;

இப்பெருமகனாரைப் போல நிருவாகம் மற்றும் சமுதாயச் சீர்திருத்தங்களை தமிழ்ச் சமுதாய அக்கறையோடு முன்னெடுத்துச் செயல்படுத்தியோர் வேறு யாருமிலர் என உறுதியாகத் தெரிவிக்கலாம்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியைத் **தமிழகத்தின் பொற்காலம்** என்றால் மிகையாகாது.

நீடுழி வாழ்க முத்தமிழறிஞர் கலைஞர் தம் புகழ்! ❋



கலைஞர் அவர்கள் 1.8.2008 அன்று வேலூர் மாநகராட்சியைத் தொடங்கிவைத்து மாநகர மேயருக்குரிய செங்கோலை வழங்கினார்கள்.

எங்கும் கலைஞர்...
எதிலும் கலைஞர்...

பழநிபாரதி
தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர்

“வீடுவரை உறவு
வீதிவரை மனைவி
காடுவரை பிள்ளை
கடைசி வரை கலைஞர்”

கோவையில் 2010 ஆம் ஆண்டு, உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், கவிஞர் வாலியின் தலைமையில் நிகழ்ந்த கவியரங்கில் நான் பாடிய வரிகள் இவை.

உச்சரிக்கும்போதே மூச்சுக்குள் ஒரு சக்தி பிறப்பதை உணரவைக்கிற பெயர் கலைஞருடையது. அவர் இல்லை என்பதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. 'நெஞ்சுக்கு நீதி' 7ஆவது பாகத்தை எங்கோ இருந்து எழுதிக்கொண்டிருக்கிறார் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

கலைஞரின் பிறப்பு என்பது ஒரு நிகழ்வல்ல; அது ஒரு சகாப்தம்; சம்பவம் அல்ல சரித்திரம்.

“ கலைஞர் நமக்குக் கிடைத்தற்கரிய வாய்ப்பு” என்று சொன்னார் தந்தைப் பெரியார்.

“கலைஞர் ஒரு கடினமான உழைப்பாளி. அவர் மூலமாக நானும் நாடும் நிறைய எதிர்பார்க்கிறோம்” என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா.

கலைஞர் என்னும் அந்த விளக்கை, பெரியார் ஏற்றினார்; எண்ணெயை அண்ணா ஊற்றினார். அந்த விளக்குதான் “ஓடி வருகிறான் உதயசூரியன்” என்று நம்மையெல்லாம் போற்றிப் பாடவைத்தது.

“ஈரோடு பேன் நிறைந்த தலைக்கு
ஈரோட்டுச் சீப்பொன்று இல்லாவிட்டால்
மொட்டையாய்ப் போயிருக்கும் தமிழ்நாடு இந்நேரம்”

–என்று கலைஞரின் கவிதை ஒன்று உண்டு. அவருக்குப் பின்னால் தலைவர் கலைஞர் இல்லையென்றால் தலையே இல்லாத முண்டமாய்த்தான் போயிருக்கும் தமிழ்நாடு இந்நேரம்.

சமத்துவத்தால், சமூக நீதியால், கல்வியால், கட்டுமானங்களால், அறிவார்ந்த உயரத்தில் கலைஞர் ஏற்றிவைத்த தமிழ்நாடு தான் இன்றைக்கு இருக்கிற இந்தத் தமிழ்நாடு.

எதிர்மறையான சிந்தனைக்களுக்கிடையில் எது ஒன்றையும் நேர்மையாகச் சிந்திக்கிறவர் கலைஞர்.

அவரது இளம்பருவத்தில் ஒரு சம்பவம்

திருவாரூர்ப் பக்கத்தில் கிராமத்தில் ஒரு கூட்டம். அங்கிருந்த இளைஞர் ஒருவர்தான் அந்தக் கூட்டத்தை நடத்தித் தரும்படி கலைஞரை அழைத்திருக்கிறார். ஏதோ சாதிப் பிரச்சினையால் அந்தக்



1998ஆம் ஆண்டுக்குரிய கலைத்துறை வித்தகர்களுக்கு வழங்கப்படும் 'கண்ணதாசன் விருது'க்குத் தேர்வு பெற்ற கவிஞர் பழனிபாரதி 12.11.1999 அன்று, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்ற காட்சி.

கூட்டத்திற்கு யாரும் போகக் கூடாது என்று கிராமமே கூடி அப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறது. கலைஞரும் அவர் நண்பர் தென்னனும் போகிறார்கள்.

கூட்டம் நடக்கப்போகும் இடத்தில் ஒரு விளக்குகூட இல்லை; கலைஞர், ஊருக்குள்ளிருந்து இரண்டு சட்டிகளைக் கொண்டு வரச்சொல்லி, எண்ணெய் ஊற்றித் துணியைப் போட்டு எரிய வைக்கிறார். ஒலிபெருக்கி இல்லை; ஆனாலும் பேசத் தொடங்குகிறார். கலைஞர் பேசப் பேசக் கூட்டம் சேருகிறது. சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லி, பற்ற வைக்க வேண்டிய பகுத்தறிவுக் கருத்துக்களைப் பற்றவைத்துவிட்டுப் புறப்படுகிறார் கலைஞர்.

அதே மாதிரி இன்னொரு சம்பவம்

ஒரு சமயம் கலைஞரிடம் பத்திரிகையாளர் ஒருவர், "ஏன் அரசியலுக்கு வந்தோம் என்று எப்போதாவது சிந்தித்தது உண்டா?" என்று கேட்கிறார். அதற்கு கலைஞர் தன் பால்யகாலத்தில் நடந்த ஒரு நிகழ்வொன்றையே பதிலாகச் சொல்கிறார்.

சிறுவயதில் கலைஞரும் அவருடைய நண்பர் தென்னனும் கமலாலயக் குளத்துக்குக் குளிக்கப் போகிறார்கள். அந்தக் குளத்துக்கு நடுவில் ஒரு சிறிய கோயில். விளையாட்டாக இருவரும் அந்தக் கோயில் வரை நீந்திப் போகலாம் என்று நீந்துகிறார்கள். கரையிலிருந்து பார்க்கும்போது பக்கத்தில் தெரிந்த கோயில், நீந்தத் தொடங்கியதும் அது தொலைவாக

இருப்பது புரிகிறது. பாதிதூரம் வரை நீந்தி வந்துவிட்டார்கள். மூச்சிரைக்கிறது. கை, கால் சோர்ந்துவிடுகிறது. நண்பர் கேட்கிறார்: ‘‘கரைக்குத் திரும்பப் போய்விடுவோமா?’’ என்று.

கலைஞர், ‘‘கரைக்குப் போவதும் கோயிலுக்குப் போவதும் ஒரே தூரம் தான்; கொஞ்சம் தெம்பா நீந்திப்போனா கோயிலுக்குப் போயிடலாம். அங்கே போய் இளைப்பாறலாம்’’ என்கிறார். இருவரும் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறார்கள். அப்போது நண்பர் சொல்கிறார், ‘‘சரியாய்த் தான் சொன்னே’’ என்று.

‘‘சாதிச்ச சந்தோஷம் இருக்கே அது எப்பவும் இரண்டு மடங்கு தெம்பு தரும். அது குளம்; இது களம். அவ்வளவுதான் வித்தியாசம்’’ என்கிறார் கலைஞர்.

‘‘வெற்றி வேண்டுமா போட்டுப் பாரடா எதிர்நீச்சல்’’ என்பதுதான் எப்போதும் கலைஞரின் வாழ்க்கையாக இருந்திருக்கிறது. பாதைகள் இல்லையே என்று அவர் பயணத்தை ஒருபோதும் நிறுத்தியதில்லை. கல்லிலும் முள்ளிலும் நடந்தார் நடந்தார். நடந்து நடந்து, தனது சுவடுகளாலேயே தனக்குப் பின்னால் வருகிறவர்களுக்குப் பாதையமைத்துக் கொடுத்தவர் கலைஞர்.

எழுத்தாளர்களுக்கெல்லாம் பேனா பிடிக்கும். பேனாவுக்குப் பிடித்த ஒரு எழுத்தாளர் என்றால் அது கலைஞராகத்தான் இருக்கும்.

இந்த உலகத்தை ஆள்வதற்குச் செங்கோல் தேவையில்லை; ஒரு பேனா போதும் என்று நிரூபித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அவருடைய பேனா முள்ளில் ரோஜாக்கள் பூத்திருக்கின்றன; இரத்தமும் கசிந்திருக்கிறது. இன்பத்திலும் துன்பத்திலும் அவர் இறுகப்பற்றி இருந்தது பேனாவைத்தான்.

புல்லாங்குழல் வாசிக்கிற கலைஞன், துப்பாக்கி சுடக் கற்றுக் கொள்வதையும், துப்பாக்கி ஏந்துகிற போராளி ஆறுதலாகப் புல்லாங்குழல் வாசித்து மனம் லயிப்பதையும் காலம்தான் தீர்மானிக்கிறது.

கலைஞரின் கையில் பேனா, அணிகலனாகவும் இருந்தது; ஆயுதமாகவும் இருந்தது. அணிகலனாக அது இலக்கியம் பேசியது; ஆயுதமாக அது இயக்கத்தைக் கட்டி எழுப்பியது.

எதை எழுதுகிறபோதும் அவருக்கு முன்னால் தமிழும் தமிழினமும் முன்னால் வந்து நிற்கும். ஒரு கவியரங்கத்தில் கடல் பற்றிப் பாடுகிறார்;

‘‘கடலென்றால் வைணவர்க்குத் திருமால்
பள்ளிகொண்ட நினைவே தோன்றும்
உடலெங்கும் நீறுபூசும் சைவர்க்குச்
சிவன் நஞ்சுண்ட கதைதான் தோன்றும்
படைகொண்டு அழிக்கவொண்ணா பூம்புகாரை கடல்
தடையின்றி அழித்துவிட்ட வரலாறே நமக்குத் தோன்றும்’’

– என்று கவிஞராக இருந்து எழுதிய கலைஞர், நாட்டின் முதல்வராகிறபோது கடல்கொண்ட பூம்புகாரை மெய்நிகராக் கரையில் கட்டி எழுப்புகிறார்.

ஓடினாள் ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள் என்று பெண்ணின் துயரத்தை எழுதிய அந்தப் பேனாதான் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்குச் சொத்துரிமை உண்டென்றும், உள்ளாட்சித் தேர்தலில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியும் அவற்றைச் சட்டங்களாக்கிக் கையெழுத்திட்டது.

'நாம்' என்கிற படத்திலே கலைஞர் எழுதிய ஒரு வசனம்

தொழிலாளியைப் பார்த்து ஜமீன்தார் கேட்பார்,

"என்னடா ஆச்சரியக்குறி போடுகிறாய்?"

தொழிலாளி சொல்வார்;

"ஆச்சரியக்குறிதான் ஜமீன்தார் அவர்களே!
கொஞ்சம் வளைந்தால் அதுவே கேள்விக்குறியாகிவிடும்,
ஞாபகம் இருக்கட்டும்! அரிவாளுக்கும் கேள்விக்குறிக்கும்
அதிக வித்தியாசமில்லை"

இதை எழுதிய கலைஞரின் பேனாதான் உழைப்பாளர் தினத்தை ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவித்து அதைச் சட்டமாக்கிக் கையெழுத்துப் போட்டது.

"ஒவ்வொரு நெல்மணியையும் மூடியிருக்கும் தோல் உழவனின் சதையாலும், உள்ளே இருக்கிற அரிசி அவனது எலும்பாலும் ஆனது என்பதை உணர்ந்தால்தான் இந்த நெல்லை விளைவிப்பதற்கு வடிக்கிற வியர்வை எவ்வளவு விலைமதிப்பற்றது என்பதை உணர முடியும்" என்று எழுதிய கலைஞரின் பேனாதான் அதிகாரம் கைக்கு வருகிறபோது உழவர்களுக்கு இலவச மின்சாரத்தை வழங்க ஆணையிட்டு கையொப்பமிட்டது.

இந்தச் சமூகத்தை, தான் எழுதிய நன்னூல்களால் மீட்டெடுத்த இந்த நூற்றாண்டின் மாபெரும் சிந்தனையாளர் கலைஞர்.

விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை என்பார் நம்மாழ்வார். காலத்தின் மடியில் கலைஞர் உறங்குகிறார்; அவரது சிந்தனைகள் விழித்திருக்கின்றன.

அவர் இல்லை என்றாலும் அவர் பெயரில்லாமல் இங்கு எதுவும் இல்லை.

கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள், அணைகள், கருணை இல்லங்கள், சமத்துவபுரங்கள்,சாலைகள்,மேம்பாலங்கள்,பூங்காக்கள்,நெடுஞ்சாலைகள்,சிலைகள் ஒவ்வொன்றும் இங்கே கலைஞரின் பெயரைத்தான் மௌனமாக உச்சரித்துக் கொண்டேயிருக்கின்றன.

சாதியால் மதத்தால் மக்களைப் பிளவுபடுத்தி, வெறுப்பரசியல் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் இந்நாளில் கலைஞரே நமது காப்பு.

நள்ளிரவிலும் நட்சத்திரங்களுக்கு நடுவில் நமக்காக விழித்திருக்கின்றன அவரது கண்கள்.

ஓய்வதில்லை கடல்! ஓய்வதில்லை காற்று! ஓய்வதில்லை கலைஞர்!

❋ ❋ ❋

மகளிர் நலனில் கலைஞர்

திருமதி **இரா. ஓவியா**
"புதிய குரல்" அமைப்பின் நிறுவனர்



பெண்கள் சமுதாயத்தின் வெற்றிப் பாதையை அமைத்தவர் கலைஞர்!

ஈரோட்டுப் பூகம்பத்தில் உதித்த சூரியன்.....

இந்தத் தமிழ் மண்ணில் ஈராயிரம் ஆண்டுகளாகப் பாராட்டிப் போற்றப்பட்டு வந்த பழமைலோகம் ஈரோட்டில் தோன்றிய பூகம்பம் ஒன்றில் இடிந்து சரியத் தொடங்கியது பத்தொன்பதாம் நூற்றாண்டில். அந்த இடியோசை அன்றைய தமிழ் இளைஞர்களின் காதில் விழத் தொடங்கியதும் தமிழ்ச் சமுதாயத்தின் நீண்ட இருள் உறக்கம் கலையலாயிற்று. அதில் விழித்துக் கொண்ட இளைஞர்களில் உருவான தலைவர்கள்தான் பிற்காலத்தில் இன்றுவரை தமிழ்ச் சமுதாயத்தின் நூற்றாண்டு விடியல் வரலாற்றின் நாயகர்களானார்கள். பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சாரத்தைத் தமிழர்களிடம் கொண்டு சேர்க்க இளைஞனாகப் பரிணமிக்கும் முன்பே எழுத்தாளராக பத்திரிகையாளராகப் பரிணமித்தார் முத்தமிழறிஞர் முத்துவேல் கருணாநிதி. அந்தப் பேனா அவரை ஆட்சிக் கட்டிலுக்கு அழைத்துச் சென்றது. பெரியாரின் சீடராக பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டவரிடம் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை ஒப்படைத்தது. தமிழக மக்கள் அவரைத் தங்கள் முதல்வராக ஐந்து முறை கடமையாற்ற அழைத்துப் பொறுப்பளித்தனர்.

கட்சி வேறாயினும் கொள்கை முழக்கத்தின் முகங்களில் கூட சில பல திருத்தங்களைச் செய்து கொண்டாலும் தங்கள் அடிப்படைக் கொள்கை இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களாக இருக்கிற சூத்திர பஞ்சம மக்களுக்கானது; அதையும் தாண்டி பெண் மக்கட்கானது என்கின்ற பெரியாரின் கொள்கை ஆணையைத் தங்கள் சிந்தனை சிம்மாசனத்திலிருந்து ஒருபோதும் இறக்கவில்லை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள்.

ஓட்டுரிமை தொடங்கி...சுயமரியாதைத் திருமணச் சட்டம் வரை

உலகத்திலேயே முன்னோடி நடவடிக்கையாய் 1921–லேயே பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்த நீதிக்கட்சியின் தொடர்ச்சியாக பேரறிஞர் அண்ணா பெரியாரின் சுயமரியாதைத் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம் தந்து திராவிட ஆட்சியில் பெண்களின் உரிமை சகாப்தத்திற்கு அடிக்கல் நாட்டினார். பெண்களின் உரிமைக்கு எழுதித் தரப்பட்ட மிகப் பெரிய சாசனம் சுயமரியாதைத் திருமணச் சட்டமாகும். 1967இல் பேரறிஞர் அண்ணா பதவியேற்றதும் பிறப்பித்த முதல் 3 சட்டங்களில் ஒன்று இச்சட்டமாகும்.

ஏழைப் பெண்களின் மகளிர் மன்றங்கள்

மகளிர் மன்றம் என்றாலே, "வானிட்டி பேக்" ஒன்றை நவநாகரீகமாகச் சுழற்றிக் கொண்டு வரும் மேல்தட்டுப் பெண்களுக்கான பொழுதுபோக்கு மன்றம் என ஊடகங்கள் வரைந்த சித்திரத்தை அகற்றி அரசின் உதவிகளைத் தங்கள் குடும்பத்தார் தயவின்றிப் பெண்கள் தாமே நேரிடையாக அணுகுவதற்கான உதவி மையங்கள் என்று மாற்றி தனது ஆட்சியில் மகளிர் மன்றங்கள் உருவாக வித்திட்டது கலைஞர் ஆட்சி. வீட்டின் மூலையில் ஒரு சமையலறையில் அதற்குப் பின்னாலிருந்த கொல்லைப் புறத்தில், மாட்டுத் தொழுவத்தில், கிணற்றடியில் எனக் கட்டுண்டிருந்த பெண்களை

வீட்டின் முன்வாசல்களைத் தாண்டி அரசு அலுவலகங்களுக்குத் தங்கள் உரிமைக்கான உதவிகளைக் கோரி வரவைத்தது கலைஞர் ஆட்சி!

பெண்கள் வாசித்தார்கள்

கிராமங்கள் உட்பட அனைத்து ஊர்களிலும் பொது நூலகங்கள் அமைத்தார் கலைஞர். "கல்கண்டு", "குமுதம்", "ஆனந்த விகடன்" போன்ற அனைத்து இதழ்களையும் பெண்கள் வாசிக்கத் தொடங்கினார்கள். இந்த வாசித்தல், தங்கள் பெண் பிள்ளைகளைக் கற்றவர்களாக வளர்க்க வேண்டும் என்கின்ற மனஉறுதியை அந்தப் பெண்களிடம் ஏற்படுத்தின. இன்று இந்தியாவிலேயே தனித்து வளர்ந்து இருக்கும் பெண்கல்விக்கு இந்த மாற்றங்கள்தான் உரமிட்டன.

தாலியா.... கல்வியா....

தாலிக்குத் தங்கம் என்று அறிவித்தபோது தாலியில்லாச் சுயமரியாதைத் திருமணத்திற்கு வித்திட்ட இயக்கம் இந்தப் பெயரில் ஒரு திட்டத்தைத் தர வேண்டுமா என்கின்ற கேள்விக்குப் பதில் சொன்ன கலைஞர், எட்டாவது வரை படிக்க வைத்த பெண்ணுக்குத்தான் தருகிறேன் அதற்காகவாவது படிக்க வைப்பார்கள் என்றார். அடிமைப்படுத்திய கண்ணிகளையே விடுதலைப் பாதையின் படிக்கட்டுகளாய்ப் போட்டார். **இன்று முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதன் இலக்கினை எட்டி வளர்ந்திருக்கும் அந்தத் திட்டத்தை முழுமையான கல்வி உதவித் திட்டமாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித்திட்டம் என புதுமைப் பெண் திட்டமாக மாற்றி பெண்கள் சமுதாயத்தின் உயர்கல்விக்கான உதவித் தொகையாக மாற்றியமைத்திருக்கிறார்.**

பெருகின சாதி மறுப்புத் திருமணங்கள்

சுயமரியாதை இயக்கத்தின் வாயிலாகக் கலப்புத் திருமணங்கள், அதாவது சாதி மறுப்பு தாலி மறுப்புத் திருமணங்கள், சடங்கு மறுப்புத் திருமணங்கள், புரோகித மறுப்பு அதாவது பார்ப்பனரல்லாத திருமணங்கள் ஆக நடைபெற்றதை நாடறியும். ஆனால், அதில் பலரும் அறியாத உண்மை அப்படி நடைபெற்ற பெரும்பாலான திருமணங்கள் விதவை அல்லது மறுமணத் திருமணங்கள் என்பது! அந்தத் தம்பதியரே கூட அதனை அறிவித்ததில்லை.

விதவைத் திருமணம் செய்துகொள்ள சுயமரியாதை இயக்க இளைஞர்களை வெளிப்படையான அறிவிப்பின் மூலம் மாநாடுகள் நடத்தியும் அழைத்தவர் பெரியார். அந்தப் பாதையில் விதவைத் திருமணங்களுக்கான சிறப்பு உதவித் திட்டங்கள் டாக்டர் தருமாம்பாள் அம்மையார் பெயரிலும் ஏழை விதவைத் தாய்மார்களின் மகள் திருமண உதவித் திட்டம் அன்னை ஈவெரா மணியம்மையார் பெயரிலும் அறிவித்து நடத்தப்பட்டன. ஆதரவற்ற பெண்களின் திருமணங்களுக்கு அன்னை தெரசா பெயரில் உதவித் திட்டங்களும் அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன. இவ்வாறாக, பெண்களுக்குச் சமுதாயத்தில் நிலவிய கொடுமையான வாழ்க்கைச் சூழல்களை மாற்றிட அரசு எந்திரம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

தடை செய்யப்பட்டது ஈவ் டீசிங்

பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளில் குறிப்பிடத்தக்கது அவர்களைச் சீண்டி கேலி செய்து அடக்குவதாகும். ஈவ் டீசிங் என்கின்ற பெயரில் இக்கொடுமை மிக அதிகமாக உலாவியது; சரிகா

என்ற மாணவியின் உயிரையே குடித்தது. உடனே கலைஞர் அரசு தமிழ்நாடு ஈவ் டீசிங் தடை அவசரச் சட்டம், 1998 (Tamil Nadu Prohibition of Eve Teasing Ordinance, 1998) என்கின்ற சட்டத்தைக் கொண்டு வந்து அந்தத் தீயபழக்கத்தின் கொடூரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது.

ஆசிரியராக, பெண் காவலராக பெண்கள்

தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் பணியை பெண்களுக்கே முழுமையாக ஒதுக்கிட வேண்டுமெனத் தந்தைப் பெரியார் அவர்கள் 1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் தீர்மானம் வடித்தார். 1996–1997ஆம் ஆண்டுகளில் அந்தத் தீர்மானங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்துச் செயல்படுத்தினார் கலைஞர். அதேபோல, பெண்களைக் காவல் துறையில் நியமனம் செய்திட வேண்டும் என தந்தைப் பெரியார் 22.04.1934 அன்று தம்முடைய "புரட்சி" என்ற ஏட்டில் எழுதி வலியுறுத்தினார். அந்த அடிப்படையில் 1973இல் காவல் துறையில் பெண்களை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தியது கலைஞர் அரசுதான். அப்போது காவல் துறையில் பெண்கள் பணிபுரிய முடியுமா என்பது குறித்து சமுதாயம் பெரும் சந்தேகத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தது. இன்று அந்த நிலை மாறியதற்கு அன்று கலைஞர் அரசு எடுத்த அந்தப் புரட்சிகரமான முடிவே காரணம்.

தொழில் முனைவோர்களாகவும் ஆய்வறிஞர்களாகவும்

பூ விற்கும் மகளிர், காய்கறி விற்கும் மகளிர் உள்பட பல்வேறு சிறு வணிகங்களில் ஈடுபட்ட ஏழை மகளிருக்கு மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம், மகளிர் நடத்தும் நியாய விலைக் கடைகள், மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டு, மீனவ மகளிர் மீன் விற்பனைக்கு உதவி என்று தொழில் வாரியாகப் பெண்கள் கலைஞர் அரசின் ஆதரவைப் பெற்றனர். அது மட்டுமா...கலைஞர் ஆட்சியில், அரசின் தொழில் மனைகள் ஒதுக்கீட்டில் பெண்கள் 10 விழுக்காடு மனைகளை ஒதுக்கிட வகை செய்து பெண்களைத் தொழில் முனைவோராக்கிடவும் ஊக்கம் தரப்பட்டது. இப்படி எளிய நிலைப் பெண்களுக்கு மட்டுமல்ல; கற்றுத் தேர்ந்த மகளிருக்கு, மகளிருக்கான முதல் உயிரியியல் தொழில் நுட்பப் பூங்கா சென்னையில் அமைக்கப்பட்டது. பெண்களின் கூட்டுறவு நாட்டிற்குத் தேவை என்கின்ற அடிப்படையில் 1990 களிலிருந்தே மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெண்களின் சுய உதவிக்குழுக்கள் கிராமப் புறப் பெண்களின் பொருளாதாரத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய மாண்புமிகு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும் கலைஞர் காலத்திலிருந்தே இத்திட்டம் வெற்றியடைய சிறப்பான பங்களிப்பைச் செலுத்தியுள்ளார்.

அரசியல் அதிகாரம்

கல்வி, வேலைவாய்ப்பு என்பதைத் தாண்டி பெண்களைச் சமுதாயத்தில் ஆண்களுக்கிணையாக வளர்த்தெடுக்கும் ஆற்றல் அரசியல் அதிகாரத்திற்கே உண்டு. அந்த வகையில் உள்ளாட்சித் துறையில்தான் இந்தியாவில் பெண்கள் தங்கள் முதல் பங்கைப் பெற்றிருக்கிறார்கள். இதிலும் முன்நின்றது கலைஞர் அரசுதான். 1996இல் தி.மு.க. ஆட்சியில்தான் முதன் முதலாக உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

பொருளாதாரம் பெண்கள் வசப்பட....

தனிச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் இந்தச் சமுதாய அமைப்பில் பெண்களுக்கு எந்த உரிமை இருந்தாலென்ன, சொத்துரிமை இன்றி அவை அனைத்தும் வீணல்லவா..! இதனை 1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டிலேயே தீர்மானமாகக் கொண்டு வந்தவர் தந்தை பெரியார். 1989இல் பெண்களுக்குப் பரம்பரைச் சொத்தில் சம உரிமை அளித்திடும் சொத்துரிமைச் சட்டம் வழங்கிச் சரித்திரம் படைத்தார் கலைஞர்! இந்த மகளிர் சொத்துரிமை 2005ஆம் ஆண்டில் தான் இந்திய அளவில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. எல்லா வகையிலும் தமிழகம் ஏன் முன்னோடி மாநிலமாக இருக்கிறது என்றால் இந்தக் காரணங்களால்தான்! 2006இல் தி.மு.க ஆட்சியில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச தரிசு நிலங்கள் வழங்குவதென முடிவு செய்தபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அந்த நிலங்களை அந்தந்தக் குடும்பத்தின் பெண்கள் பெயரிலேயே வழங்கியது பெண்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படையான சமூக நீதியாகும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் வெற்றி

இந்தியா முழுமைக்கும் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதனை வெற்றித் திட்டமாக்கியதில் முதன்மை மாநிலம் தமிழ்நாடுதான். இதற்கான காரணம் இந்தியா முழுவதும் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் குடும்பத்தின் வறுமையொழிப்புத் திட்டமாகப் பார்க்கப்பட்டபோது தமிழ்நாட்டின் தலைவர் பெரியார் தொடர்ச்சியான மகப்பேறு என்கின்ற சுமையிலிருந்து பெண்கள் விடுதலை பெறுவதற்கான வழியாகவே கர்ப்பத்தடை முறைகளை ஆதரித்துப் பேசி வந்தார். கிட்டத்தட்ட 1930 களிலிருந்து பெரியாரால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரச்சாரத்தின் விளைவாகவே தமிழகத்தில் அத்திட்டம் பெரும் வெற்றி பெற்றது. இதற்காக அன்றைய ஒன்றிய அமைச்சர் சந்திரசேகர் அவர்கள் 1973ஆம் ஆண்டில் பெரியாரை நேரில் வந்து சந்தித்துத் தம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். தமிழகத்தின் இந்தத் தனிச் சிறப்பும் பெரியாரின் பங்களிப்பும் மனித வளர்ச்சி அறிக்கை 2001இல் தனித்துக் குறிப்பிடப்பட்டது. இந்த வெற்றியில் முக்கியப் பங்கு தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளையே சாரும். தமிழ்நாட்டுப் பெண்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் பெருவாரியாகக் குடும்ப கட்டுப்பாடு செய்து கொண்டதும் ஓர் அடிப்படைக் காரணியாகும்.

இன்று தமிழ்நாட்டிலிருந்து பெண்கள் விண்வெளி ஆய்விலும், இன்னும் பல்வேறு துறைகளிலும் தங்கள் தனிமுத்திரைகளைப் பதித்து வருகிறார்கள் என்றால், அவர்கள் கடந்து வந்திருக்கும் பாதையின் படிக்கட்டுகளாக தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைகளும் செயல்திட்டங்களும்தான் காரணங்களாக அமைந்திருக்கின்றன என்பதை வரலாறு இன்று எடுத்துச் சொல்கிறது; பிற மாநிலங்களுக்கும், ஏன் இந்திய அரசுக்கே கூட முன்னோடியாக வழிகாட்டிக் கொண்டிருக்கிறது என்றால் அது முற்றிலும் உண்மையாகும்.

வாழ்க தந்தைப் பெரியார்!
வாழ்க பேரறிஞர் அண்ணா!
வாழ்க முத்தமிழறிஞர் கலைஞர்!

❋ ❋ ❋

கலைஞர் ஆட்சியில் சீர்திருத்தங்கள் - ஒரு பார்வை



புலவர் **முத்து வாவாசி**
மலர் ஆசிரியர்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இளம்சிறுபருவம் முதலே பகுத்தறிவு சீர்திருத்தச் சிந்தனைகளுடன் வளர்ந்தவர். அவருடைய வாழ்க்கை முழுவதிலும் அச்சிந்தனைகளே அவரை ஆட்சி செய்தன.

முதலமைச்சராகத் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பேற்ற 5 காலகட்டங்கள் முழுவதிலும் தமிழ்நாட்டு மக்கள் வாழ்வைச் சீர்திருத்தி மேம்படுத்திடும் நோக்கில் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு நாளும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தினார்.

இன்றைய தலைமுறையினர்க்கு, கலைஞர் பிறந்து வளர்ந்த அந்தக் காலச் சூழ்நிலை தெரியாது.

அக்காலத்தில் மின்சாரம் இல்லை, சாலை வசதிகள் இல்லை. பேருந்து மோட்டார்கள் இல்லை; சாதிப் பாகுபாடுகள் அதிகம்; தீண்டாமைக் கொடுமைகள் அதிகம்; தொட்டால் தோஷம், நிழல் பட்டால் தீட்டு என்பதே நடைமுறையாய் இருந்தது. மகளிர் படிக்க வாய்ப்பில்லை, பள்ளிகளும் இல்லை, வசதியில்லாத குடும்பங்கள்; அக்கால வழக்கப்படி பெண் குழந்தைகளுக்கு 9, 10 வயதிற்குள் திருமணம் நடக்கும்; மாப்பிள்ளையோ பெரும்பாலும் வயதானவராய் இருப்பார், அவர் இறந்தால் அவள் விதவை; மறுமணமும் கூடாது என்பது சமூகக் கட்டுப்பாடு; மருத்துவ வசதிகள் இல்லை; மகப்பேறுகள் அவரவர் வீட்டில்தான் நிகழும்; இதில் சாவுகள் சகஜம்; நிலத்தில் மட்டுமல்ல; மக்கள் மனங்களிலும் அறியாமை இருளோ ஆதிக்கம்.

அத்தகைய காலகட்டத்தில் பெரியார் அண்ணா ஊட்டிய பகுத்தறிவு, சுயமரியாதை உணர்வுகளின் தாக்கம்; வாழ்ந்த சூழல்களால் இயற்கையாகவே எழுந்த பகுத்தறிவுடன் கலைஞர் வளர்ந்தார் பெரியாரையும் அண்ணாவையும் கண்டார். "**இளமைப் பலி**" முதல் எழுத்தோவியம், அண்ணா அவர்களுக்குக் கலைஞரை அடையாளப்படுத்தியது.

'தீட்டாயிடுத்து' பெரியாரைக் கவர்கிறது; எழுத்தில் ஆர்வம் எழ, படைப்பில் வேட்கை தூண்ட நாடகங்கள் – திரைப்படப் புரட்சிகள், பத்திரிகைப் பணிகள், வரலாற்று நாவல்கள், சமூகப் புதினங்கள், இலக்கியங்கள், முரசொலி கடிதங்கள் – அனைத்தாலும் சீர்திருத்தப் பிரச்சாரம் செய்தார்.

கலைஞர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றார். பெரியார், அண்ணா வழியில் புரட்சிகரமான சீர்திருத்தச் சட்டங்கள் உருவாக்கினார். அவை சமுதாயத்தில் எழுச்சியை மாற்றத்தை ஏற்படுத்தின.

இன்று பார்க்கிறோம்!

ஆண் பெண் எல்லோரும் சமம் அவர்கள் படிக்க – பள்ளிகள் கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள்!



சமூக நீதிக்கான இடஒதுக்கீடுகளால் ஆண்–பெண் எல்லோரும் படிக்கிறார்கள் வேலைவாய்ப்புகள் குவிந்துள்ளன.

பெண்கள் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள், நீதிபதிகள், பல்வேறு நிலைகளில் அரசு நிருவாகிகள், காவல்துறை அதிகாரிகள், வண்டி வாகன ஓட்டுநர்கள் எங்கும் பார்க்கிறோம்.

எங்கும் நவீன சாலைகள், பாலங்கள், போக்குவரத்து வசதிகள், விமானப் போக்குவரத்துகள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் எல்லாம் எழுந்து நவீனத்தின் சின்னங்களாய் திகழ்கின்றன.

அன்று குடிசைகள் – இன்று மாட மாளிகைகள்!

அன்று கேழ்வரகு கஞ்சி – இன்று அரிசி, தானியங்கள் பல்வகை உணவுகள்

அன்றைய வறுமை – இன்று இல்லை

இவை எல்லாம் ஏறத்தாழ 75 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

இவை எப்படி நிகழ்ந்தன ?

பெரியார் கொள்கைகள்?, அண்ணாவின் கொள்கைகள்? ஆட்சி அதிகாரங்களின் மூலம் கலைஞர் செய்த சீர்திருத்தங்கள்;

இவை தாம் காரணம்!

சீர்திருத்தங்கள் எண்ணற்றவை! எனினும் இங்கே காணலாம் சில!

வேளாண்மைத் துறை

- பாசன நிலப்பரப்பு, 1967க்கு முன் 152 இலட்சம் ஏக்கர் 1974இல் 192 இலட்சம் ஏக்கர் என உயர்த்தியவர் கலைஞர்
- 1970இல் 15 ஏக்கர் நில உச்சவரம்புச் சட்டம் தந்து 88,146 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றி 38,504 நிலமற்ற உழவர்களுக்குத் தந்தவர் கலைஞர்.
- வேளாண்மை வளர்ச்சியின் தாயகமாக 1972இல் வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்டவர் கலைஞர்.
- உழுவோரும் நுகர்வோரும் பயன்பெற 1999 நவம்பர் முதல் ஓராண்டில் 100 உழவர் சந்தைகள் திறந்தது கலைஞர் ஆட்சி.
- 2006இல் 22 இலட்சத்து 41 ஆயிரம் விவசாயிகள் பயன்பெற ரூ.7,000/– கோடி கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்தவர் கலைஞர்.
- கடன்களைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு 2009இல் வட்டியில்லாப் பயிர்க்கடன் திட்டம் தந்தவர் கலைஞர்.



ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டம்

- ஆதிதிராவிட விவசாயிகள் தாட்கோ மூலம் பெற்ற கடன்கள் ரூ.5.25 கோடி இரத்து செய்தவர் கலைஞர்.
- 2010இல், சென்னை கதீட்ரல் சாலையில் தனியாரிடமிருந்த நிலத்தை மீட்டு "செம்மொழிப் பூங்கா" திறந்தவர் கலைஞர்.

மக்கள் நல்வாழ்வுத்துறைச் சாதனைகள்

- 1967–1970இல் 186; 1989–1990இல் 156 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தியவர் கலைஞர்.
- 1967–1970க்குள் அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் முதன்முதலில் குருதி வங்கியை ஏற்படுத்தியவர் கலைஞர்
- சென்னை எழும்பூரில் 1969இல் குழந்தைகள் மருத்துவமனையை உருவாக்கியவர் கலைஞர்.
- சித்த மருத்துவத்தை மேம்படுத்திட சென்னை அரும்பாக்கத்தில் 1970இல் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையை ஏற்படுத்தியவர் கலைஞர்.
- 1971இல் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லம் அமைத்தவர் கலைஞர்.
- 1972இல் கண்ணொளி வழங்கும் திட்டம் தந்தவர் கலைஞர்.
- 1989இல் சென்னையில் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் அமைத்தவர் கலைஞர்.



பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல்

- கிராமப்புற அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு 2 ஆண்டுகள் பணி நீட்டிப்பும் உயர்படிப்புக்கு 10 மதிப்பெண்கள் வரை கூடுதலாக வழங்கவும் ஆணைகள் இட்டவர் கலைஞர்.
- 1996இல் அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி எனக் கொள்கை–வகுத்து இன்று அனைத்து மாவட்டங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைந்திட வழிவகுத்தவர் கலைஞர்.
- 2006இல் கருவுற்ற மகளிர்க்கு ரூ.6,000/– தரும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி திட்டம் தந்தது கலைஞர் ஆட்சி.
- 108 அவசர ஆம்புலன்ஸ் திட்டம் 2008இல் தந்தது கலைஞர் ஆட்சி.
- மகத்தான வரவேற்பைப் பெற்ற கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை 2009இல் தொடங்கியது தி.மு.க.ஆட்சி.
- 2007இல் இளம்சிறார், 2008இல் பள்ளிச் சிறார் இருதய சிகிச்சைத் திட்டம் தந்தது தி.மு.க. ஆட்சி.
- ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று என 385 ஒன்றியங்களிலும் ஊர்தியுடன் நடமாடும் மருத்துவக்குழுக்கள் திட்டம் 2008இல் தொடங்கியவர் கலைஞர்.
- இந்தியாவிலேயே முதன்முதலாக உடல் உறுப்பு தானப் பிரிவை 2008ஆம் ஆண்டிலேயே உருவாக்கியது கலைஞர் ஆட்சி.

- 0–1 வயதுவரையான பச்சிளங் குழந்தைகளின் உயிர் காக்கும் அவசர காலச் சிகிச்சைத் திட்டம் 2009இல் உருவாக்கியது கலைஞர் ஆட்சி!
- இலவச அமரர் ஊர்தி சேவைத்திட்டம் 2010–2011இல் தொடங்கியது கலைஞர் ஆட்சி!

பள்ளிக்கல்வித் துறைச் சாதனைகள்

- 1968இல் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணம் பெறும் திட்டம் கண்டது தி.மு.க. ஆட்சி.
- பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் பாடப்புத்தகங்கள் தயாரித்து அச்சிட்டு வழங்கிட 1971இல் தமிழ்நாடு பாடநூல் கழகம் நிறுவியது கலைஞர் ஆட்சி.
- பணியில் இருக்கும் ஆசிரியர்கள் இறந்துவிட்டால் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் நியமனம் வழங்கிட 1972இல் ஆணையிட்டது கலைஞர் ஆட்சி.
- 1974இல் ஆசிரியர் – அரசு ஊழியர் பணிக்காலத்தில் இறந்தால் குடும்பத்திற்கு ரூ.10 ஆயிரம் குடும்ப நல நிதி; இன்று ரூ.5 இலட்சம் வழங்கும் திட்டம் தந்தது கலைஞர் ஆட்சி.
- உடற்கல்விப் பாடத்தைப் பள்ளிகளில் 1975இல் கட்டாயம் என ஆணையிட்டு பள்ளிக்கல்வி வரலாற்றில் புரட்சி செய்தது கலைஞர் ஆட்சி.
- 1975இல் இந்தியாவில் முதல் மாநிலமாக 30 கல்வி மாவட்டங்களில் இயங்கும் அறிவியல் ஆய்வுக் கூடத் திட்டத்தைச் செயல்படுத்தியது கலைஞர் ஆட்சி.



பொது நூலகங்களுக்கு வாங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 1,000 ஆக உயர்த்தியது கலைஞர் ஆட்சி

- ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் ஆதிதிராவிட சமுதாய மாணவர்கள் இட ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப ஆசிரியர் பதவிகள் பெற்றிட வசதியாக முழுவதும் ஆதிதிராவிட மாணவர்களைக் கொண்ட தனிப்பிரிவு 1997–1998இல் தொடங்கச்செய்தது கலைஞர் ஆட்சி.
- இந்தியாவிலேயே முதல்முறையாக அரசுப் பள்ளிகளில் கணினிப் பாடத்தை 1999இல் அறிமுகம் செய்தது கலைஞர் ஆட்சி.
- 13.05.2006இல் பள்ளிக் கல்வித் துறைக்குத் தனி அமைச்சர் பதவியை உருவாக்கியது கலைஞர் ஆட்சி.
- பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை தமிழ் மொழிப்பாடம் கட்டாயம் என 2006இல் சட்டம் கண்டது கலைஞர் ஆட்சி.
- பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த ஜூலைத் திங்கள் 15ஆம் நாளை ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாள் எனக் கொண்டாட 2006இல் சட்டம் இயற்றியது கலைஞர் ஆட்சி..
- 2010இல் சத்துணவுத் திட்டத்தில் வாரம் 5 முட்டைகள் வழங்க ஆணையிட்டது கலைஞர் ஆட்சி. முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் தந்தவர் கலைஞர்.

பொது நூலகங்கள் துறை

- பொது நூலகங்களுக்கு வாங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 600 என்பதை 1,000 ஆக 2010இல் உயர்த்தியது கலைஞர் ஆட்சி.



உத்தமர் காந்தியடிகள் பிறந்தநாளை முன்னிட்டு
குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில்
மளிகைப் பொருட்கள் வழங்கினார் கலைஞர் – 02.10.2008

- ரூ.171 கோடியில் உலகத்தரத்தில் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம் நிறுவியது கலைஞர் ஆட்சி.

கல்லூரிக்கல்வித் துறைச் சாதனைகள்

- 1967–1975 8 ஆண்டுகளில் கல்லூரியில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கையை 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சமாக மாற்றியது கலைஞர் ஆட்சி.
- 1971இல் கோவை வேளாண் பல்கலைக்கழகம், 1975இல் அண்ணா பொறியியல் பல்கலைக்கழகம், 1989இல் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், 1989இல் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், 1997இல் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், 2000இல் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் எனத் துறைதோறும் தனித்தனிப் பல்கலைக்கழகங்கள் கண்டவர் கலைஞர்.
- பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறையை 1997இல் அறிமுகம் செய்தவர் கலைஞர்.
- உயர்கல்வித் துறைக்குத் தனி அமைச்சர் பதவி 13.05.2006இல் தோற்றம்.
- 1989இல் ஈ.வெ.ரா நாகம்மையார் மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம் தந்து அதனை 2009இல் பட்ட மேற்படிப்பு வரை நீட்டித்தது கலைஞர் ஆட்சி.
- 2007இல் தொழில் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வை இரத்து செய்தவர் கலைஞர்.
- இந்தியாவிலேயே முதல்முறையாக 2010–2011ஆம் கல்வியாண்டு முதல் பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களிலிருந்து ஒற்றைச்சாளர முறையில் கலந்தாய்வு மூலம் தொழில்நுட்பப் படிப்புகளில் சேரும் முதல் தலைமுறை மாணவர்கள் அனைவருக்கும் கல்விக் கட்டணத்தை இரத்து செய்தது கலைஞர்.

அறநிலையத்துறை

- 1968இல் கும்பகோணம் மகாமகம் கலைஞர் ஏற்பாட்டில் பொதுப்பணித்துறை மூலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ரூ.6 இலட்சம் செலவில் கும்பகோணத்தைச் சுற்றி ஒரு சுற்றுச் சாலை ஏற்படுத்தப்படுத்தியவர் கலைஞர்.
- 25 ஆண்டுகள் ஓடாத திருவாரூர்த் தேர்த்திருவிழாவை 1970 ஏப்ரலில் சிறப்பாக நடத்தியது கலைஞர் ஆட்சி.
- 19 ஆண்டு கலைஞர் ஆட்சியில் 12,150 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டன.
- 1970இல் அறநிலையத்துறைக்குத் தனி அமைச்சகம் கண்டவர் கலைஞர்.
- 1970இல் அறங்காவலர் குழுவில் ஆதிதிராவிடர்களில் ஒருவர் கட்டாயம் நியமனம் செய்யப்பட்டார்.

- தகுதி படைத்த அனைத்துச் சாதியாரும் அர்ச்சகர் ஆகலாம் என 1974இல் சட்டம் இயற்றப்பட்டது.
- 1975இல் ஆதரவற்ற குழந்தைகளுக்காகத் திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன.
- திருக்கோவில்களின் உண்டியல் பராமரிப்புக்கு 1975இல் தனிச்சட்டம் வகுத்தவர் கலைஞர்.
- 1997இல் திருக்கோயில் அறங்காவலர் குழுவில் மகளிர் ஒருவர் ஆதிதிராவிடர் ஒருவர் கட்டாயம் நியமனம் செய்ய சட்டம்.
- 1997இல் தமிழில் அர்ச்சனைக்கு தமிழ் போற்றி நூல்கள் வெளியீடு.
- 2010இல் 10,000 கிராமத் திருக்கோவில் பூசாரிகளுக்கு ரூ.277.68 இலட்சம் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

தமிழ் வளர்ச்சிப் பணிகள்

- 1967இல் பேருந்துகளில் திருவள்ளுவர் படம், திருக்குறள் வைத்தவர் கலைஞர்.
- 1968இல் பேரறிஞர் அண்ணா அவர்களால் நமது மாநிலத்திற்கு தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்டது.



மின்சார வாரியத்தின் பொன்விழா ஆண்டு விழாவில், ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தர பணியாளர்களாக நியமனம் செய்திடும் பணி ஆணைகளை வழங்கினார் – 11.09.2007

- 1968இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கண்ணகி சிலை, போப், வீரமாமுனிவர் கால்டுவெல் முதலில் 10 தமிழ்ச் சான்றோர் சிலைகள் நிறுவப்பட்டது தி.மு.க. ஆட்சியில்!
- 1970இல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவியவர் கலைஞர்.
- 1972இல் தஞ்சையில் மாமன்னர் இராசராசன் சிலை நிறுவியவர் கலைஞர்.
- 1973இல் பூம்புகார், சிலம்பதிகாரச் சிற்பக் கலைக்கூடம் உருவாக்கியவர் கலைஞர்.
- 1974இல் சுதந்திர நாளில் முதலமைச்சர்கள் மாநிலங்களில் தேசியக் கொடி ஏற்றும் உரிமை பெற்றுத் தந்தவர் கலைஞர்.
- 1974இல் வள்ளுவர் கோட்டம் கண்டவர் கலைஞர்.
- 1989இல் பாரதிதாசன், கல்கி, திரு.வி.க. மறைமலையடிகள் உள்ளிட்ட 140க்கு மேற்பட்ட தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியவர் கலைஞர்.
- 2000 முதல் நாளில் குமரிமுனையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை நிறுவியவர் கலைஞர்.
- 2005இல் தமிழுக்குச் 'செம்மொழி' எனும் பெருமையை மத்திய அரசு மூலம் ஏற்கச் செய்தவர் கலைஞர்.
- 2008இல் சிதம்பரம் திருக்கோவிலில் தேவாரம் இசைத்திட ஓதுவார் ஆறுமுக சாமிக்கு மாத ஓய்வூதியம் ரூ.3,000 வழங்கியவர் கலைஞர்.
- தர்மபுரியில் ஔவைக்கு நெல்லிக்கனி தரும் அதியமான் சிலைகளுடன் 2009இல் கோட்டம் நிறுவியவர் கலைஞர்.
- தமிழ் வளர்ச்சி இயக்ககம் உருவாக்கியவர் கலைஞர்.
- 2010இல் எழும்பூரில் தமிழ் வளர்ச்சி வளாகம் கட்டியவர் கலைஞர்.
- ஆந்திர மாநிலம் குப்பம் ஊரில் திராவிடப் பல்கலைக்கழகம் அமைக்க ரூ.50 இலட்சம் நிதியுதவி.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னையில் அமைத்தவர் கலைஞர்.
- 2010இல் தமிழறிஞர்களுக்குக் குடியரசுத் தலைவர் விருதுகள் வழங்கச் செய்தவர் கலைஞர்.
- 2010இல் கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தியவர் கலைஞர்.
- 2010இல் தமிழில் சிறந்த மென்பொருள் தயாரிப்போருக்குக் கணியன் பூங்குன்றனார் விருது வழங்க வகை செய்தவர் கலைஞர்.



பெரியார் நினைவு சமத்துவபுரம்

கலைஞர் கால மின் திட்டங்கள்

- 1975 அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி தந்ததில் தமிழகமே முதலிடம் என்ற பெருமையை ஏற்படுத்தியவர் கலைஞர்.
- இன்று 22 இலட்சம் பம்ப்–செட்கள் மூலம் பயனடைய 1990இல் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தவர் கலைஞர்.
- 1998இல் இண்டர்நெட் மூலம் மின்தடை புகார் செய்யும் திட்டம் அறிமுகம் செய்தவர் கலைஞர்.
- 2006–2011 முதல் மின்வாரியத்தின் 21,000 ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்தவர் கலைஞர்

கலைஞர் காலத் தொழில் வளர்ச்சி

- 1971இல் அரசு மற்றும் தனியார் இணைந்த கூட்டுத்துறை தொழில் வளர்ச்சியை நாட்டிலேயே முதன் முதல் அறிமுகம் செய்தவர் கலைஞர்.
- தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமான சிப்காட் தொழில் நிறுவனத்தை 1971இல் உருவாக்கி தமிழகத்தின் பல பகுதிகளில் பிரம்மாண்டமான பல தொழிற்சாலைகள் நிறுவி தொழில் வளம் பெருக்கியவர் கலைஞர்.

- தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு அடிப்படையாக எல்காட் பிரிவு 1975இல் ஏற்படுத்தியவர் கலைஞர்.
- 1996இல் முதலீட்டாளர் விரும்பும் ஒளிவு மறைவற்ற புதிய தொழிற் கொள்கைகளை உருவாக்கினார் கலைஞர்.
- 1998இல் ஒற்றைச் சாளர முறை மூலம் தொழில் தொடங்கத் தேவையான 8 அனுமதிகளை ஒரே இடத்தில் வழங்க வகை செய்தார் கலைஞர்.
- 1999இல் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் என சாதனை படைத்தவர் கலைஞர்
- 2006இல் தேர்தல் அறிக்கைபடி ரூ.3,688 கோடியில் 1 கோடியே 63 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஏழை மக்களுக்கு வழங்கப்பட்ட மகத்தான சாதனை நிகழ்த்தியவர் கலைஞர்.

நகர்ப்புர வளர்ச்சி

- 1996இல் தலா ரூ.20 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கீட்டில் ஊராட்சிகள் மேம்பட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கண்டவர் கலைஞர்.
- 1999இல் ஆசியாவிலேயே மிகப்பெரிய கோயம்பேடு பேருந்து நிலையத்தை உருவாக்கியவர் கலைஞர்.
- 2006இல் தலா ரூ.50 இலட்சம் சிறப்பு நிதியுடன் அனைத்துப் பேரூராட்சிகள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கண்டவர் கலைஞர்.
- 2008இல் நகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடைகளை உருவாக்கியவர் கலைஞர்.

கிராமப்புர ஊராட்சிகள்

- 1969இல் ஊராட்சி மன்றத் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க ஆணையிட்டவர் கலைஞர்.
- 1989இல் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தியவர் கலைஞர்.
- 1996இல் கிராமங்களில் உடற்பயிற்சி மையங்கள் அமைத்தவர் கலைஞர்.
- 1998இல் கிராமப்புறச் சாலைகளில் முதன்முதலில் சிமெண்ட் சாலைகளை அமைத்தது கலைஞர் அரசு.
- 2009இல், கிராம ஊராட்சிகளில் இருந்த "பல உறுப்பினர் வார்டுகளை" ஒரு வார்டுக்கு ஒரு உறுப்பினர் என மாற்றியவர் கலைஞர்.
- 2010இல் குடிசைகள் இல்லாக் கிராமங்கள்; குடிசைப் பகுதிகள் இல்லா நகரங்கள் படைக்க "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" தந்தவர் கலைஞர்.

குடிநீர் வடிகால் வாரியம்

- 1971இல், இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வாரியத்தை அமைத்தவர் கலைஞர்.
- ஆசியாவிலேயே மிகப்பெரிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை ரூ.51 கோடி செலவில் இராமநாதபுரம் மாவட்டம், நரிப்பையூரில் நிறைவேற்றியவர் கலைஞர்.
- 2008இல் சென்னையில் மீஞ்சூர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்.
- 2009இல் கிழக்குக் கடற்கரைச்சாலை நெம்மேலியில் ரூ.1,000 கோடி செலவில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் கண்டவர் கலைஞர்.

கைத்தறித் தொழில்கள்

- 1989இல் கோவையில் நட்டத்தில் இயங்கிய 18 நூற்பாலைகளை ஆட்சிக்கு வந்தபின் தந்த திட்டங்களால் இலாபத்தில் இயங்கச் செய்தவர் கலைஞர்.
- 1997இல் 60 வயது கடந்த நெசவாளர் மாதம்தோறும் ரூ.150 ஓய்வூதியம் வழங்கியவர் கலைஞர். தற்போது அத்தொகை ரூ.1,200/– என உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



கலைஞர் அவர்கள் நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக நிலம் வழங்கினார் – 28.09.2007

- 1998இல் கைத்தறித் துணி விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 சதவிகித தள்ளுபடி தந்து விற்பனையை அதிகப்படுத்தியவர் கலைஞர்.
- 2000இல் கதர் பருத்தி ரகங்களுக்கு ஆண்டு முழுவதும் 30 சதவிகித தள்ளுபடி வழங்க ஆணையிட்டவர் கலைஞர்.
- 2006இல் சிட்டா நூல் விற்பனை வரியை இரத்து செய்தவர் கலைஞர்.
- 2006இல் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு 36 நலவாரியங்கள் அமைத்தவர் கலைஞர்.

போக்குவரத்துத் துறை

- 1968 முதல் அரசுப் பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியவர் கலைஞர்.
- 1997இல் மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைத்தவர் கலைஞர்.
- 1998இல் குக்கிராமங்களுக்கும் செல்ல மினி பஸ் திட்டம் தந்தவர் கலைஞர்.
- 1998இல் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் தந்தவர் கலைஞர்.
- 2006இல் தொழிலாளர் ஊதிய ஒப்பந்தம் 5 ஆண்டுகள் என்பதை 3 ஆண்டுகளாகக் குறைத்தவர் கலைஞர்.
- 2009இல் சென்னை மாநகருக்கு மெட்ரோ இரயில் திட்டம் கொண்டுவந்தது கலைஞர் ஆட்சி.

பொதுப்பணித்துறை

- 1967இல் விவசாயம் செழிக்க 40 அணைகள் கலைஞர் ஆட்சியில் கட்டப்பட்டுள்ளன.
- 1973இல் பூம்புகார் சிற்பக் கலைக்கூடம், 1974இல் வள்ளுவர் கோட்டம், முதலியவற்றுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் பலவற்றைப் பிரம்மாண்டமாகக் கட்டியவர் கலைஞர்.
- 1974இல் முக்கொம்பில் காவிரியின் குறுக்கே ஓர் கதவணை கட்டியவர் கலைஞர்.
- 1968 முதல் கருநாடகத்துடன் நீண்ட பேச்சுவார்த்தைகள் நடத்தியும் தீராததால் காவிரி நடுவர் மன்றம் 1990இல் அமைந்திடக் காரணமானவர் கலைஞர்.
- 1998இல் காவிரி பகுதிகள் வரலாற்றில் முதல்முறையாக மகத்தான தூர்வாரும் பணியை நடத்தி முடித்தவர் கலைஞர்.
- 2009இல் மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தை ரூ.189 கோடியிலும், தாமிரபரணி கருமேனியாறு நம்பியாறு இணைப்புத் திட்டத்தை ரூ.369 கோடியிலும் தொடங்கியவர் கலைஞர்.
- 2010இல் புகழ்பெற்ற அண்ணா நினைவு நூற்றாண்டு நூலகம் ரூ.177 கோடியில் கட்டியவர் கலைஞர்.

நெடுஞ்சாலைத்துறை

- 1971இல், தீவுகள் போல் கிடந்த ஆயிரக்கணக்கான கிராமங்கள் முக்கிய சாலைகளுடன் இணைக்கப்பட இணைப்புச்சாலை திட்டம் தந்தவர் கலைஞர்.
- 1973இல் தார்ச்சாலைகள் அமைக்கும் போது சாக்கு துணிகளைக் காலில் கட்டியபடி வேலை செய்யும் தொழிலாளர்களைக் கண்டு வருந்தி அவர்களுக்கு காலணிகளை–ஷூ வழங்க ஆணையிட்டவர் கலைஞர்.

  1973 சென்னை அண்ணா மேம்பாலம் போலத் தமிழ்நாடு முழுவதிலும் பாலங்கள் அமைத்தவர் கலைஞர்.
- 1989இல் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தை உருவாக்கியவர் கலைஞர்.

வருவாய்த்துறை

- 1969இல் மனுநீதித் திட்டம் தந்தவர் கலைஞர்.
- 1970 நிலஉச்சவரம்புச் சட்டம் தந்தவர் கலைஞர்.
- 1971 குடியிருப்பு அனுபோகதாரர்கள் உரிமைச் சட்டம் தந்தவர் கலைஞர்.
- ஏழைகளுக்கு கலைஞரின் 19 ஆண்டு கால ஆட்சியில் மொத்தம் 27 இலட்சத்து 58,200 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.



குடிநீர் தொட்டியை திறந்து வைக்கிறார்



பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கினார்



பிளஸ் 2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் ஆயிரம் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகள் வழங்கினார்

- 1997இல் முதியோர் ஓய்வூதியத் திட்டப்படி 18 வயதுக்குமேல் மகன் இருந்தாலும் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படும் என ஆணையிட்டவர் கலைஞர்.
- 2006இல் 2 ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1 இலட்சத்து 74 ஆயிரத்து 26 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 2 இலட்சத்து 13,000 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கியவர் கலைஞர்.

வணிக வரித்துறை

- 1974இல் பலமுனை விற்பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியவர் கலைஞர்.
- 1996 – 2001 ஐந்து ஆண்டுகளில் 1 ரூபாய் கூட வரி விதிக்காமல் நிர்வாக சீர்திருத்தம் மூலம் வருவாயைப் பெருக்கி மொத்தம் ரூ.2,700 கோடி அளவுக்கு வரிச்சலுகைகள் தந்தவர் கலைஞர்.

காவல் துறை

- 1969, 1989, 2009 – மூன்று முறை போலீஸ் ஆணையங்கள் அமைத்து, இந்தியாவில் முதன்முறையாக காவல் துறையை நவீனப்படுத்தி; காவல் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கியவர் கலைஞர்.
- 1971இல் குடிசை மாற்று வாரியம் தொடங்கி சென்னை மாநகரில் குடிசைகளை அகற்றி இலட்சக்கணக்கானவர்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித்தந்தவர் கலைஞர்.
- 1972இல் நரிக்குறவர்கள் நாடோடிகளாக அலைந்ததைத் தடுத்து அவர்களை ஓரிடத்தில் கூடிவாழச் செய்திட திருச்சி துவாக்குடிக்கு அருகில் அவர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டித் தந்தது கலைஞர் ஆட்சி.
- 1973இல் காவல்துறையில் பெண் காவலர்களை முதன் முதல் நியமித்தவர் கலைஞர்.
- 1989இல் சந்தேக கேஸ் போடும் முறையை இரத்து செய்தவர் கலைஞர்.
- 1989இல் ஒரு காவல் கோட்டத்திற்கு 1 ஜீப் வீதம் 108 காவல் கோட்டங்களுக்கும் 1989இல் ஜீப்கள் வழங்கியவர் கலைஞர்.
- 1972 முதல் கோரிக்கை வைத்து 2000இல் ஒன்றிய அரசின் அனுமதி பெற்று சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையை மதுரைக்கு அருகில் உலகனேரியில் கட்டடம் கட்டிக் கொண்டுவந்தவர் கலைஞர்.
- 2006இல் உதவி ஆய்வாளர் பதவி உயர்வுக்கு இருந்த தேர்வு முறையை இரத்து செய்து பணிமூப்பின் படி பதவி உயர்வு வழங்க ஆணையிட்டவர் கலைஞர்.
- 2006இல் தலைமைக் காவலர் ஒருவர் உதவி ஆய்வாளர் பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 53 என்று இருந்ததை இரத்து செய்தவர் கலைஞர்.
- 2006இல் உதவி ஆய்வாளர் ஒருவர் ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 55 என்று இருந்ததை இரத்து செய்தவர் கலைஞர்.

- 2008இல் 25 ஆண்டுகள் மொத்த பணிக்காலத்தில் தலைமைக் காவலர்களாக 10 ஆண்டுகள் பணிமுடித்தவர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக உதவி ஆய்வாளர் ஊதியத்தில் நியமிக்க ஆணையிட்டவர் கலைஞர்.
- 2008இல் காவல் உயர் பயிற்சியகம் – வண்டலூர் அருகில் ஊனமாஞ்சேரியில் அமைக்கப்பட்டு திறந்தவர் கலைஞர்.
- 2008இல், காவலர் குடியிருப்புகள் 550 ச.அடி என்பதை கூடுதல் படுக்கை அறையுடன் 650 சதுர அடியாகக் கட்ட ஆணையிட்டவர் கலைஞர்.

ஆதிதிராவிடர் நலம்

- 1969இல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தனித்தனித்துறைகளை உருவாக்கியவர் கலைஞர்.
- 1969 சட்டநாதன் கமிஷன் அமைத்து, அதன் பரிந்துரைப்படி 1971இல் இடஒதுக்கீடுகளை ஆதிதிராவிடருக்கு 16 சதவிகிதம் என்பது 18 சதவிகிதமாக உயர்த்தியவர் கலைஞர்.
- பிற்படுத்தப்பட்டோர்க்கு 25 சதவிகிதம் என்பது 31 சதவிகிதமாக உயர்த்தி பொது ஒதுக்கீடு 51 சதவிகிதம் 1971இல் நிர்ணயித்தவர் கலைஞர்.
- 1971இல், சென்னை அண்ணா நகரில் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இளைஞர் நலனுக்கு உணவு, உறைவிட வசதிகளுடன் இந்தியக் குடிமைப் பணி தேர்வுகளுக்கு பயிற்சி மையத்தை ஏற்படுத்தியவர் கலைஞர்.
- ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகம் 1974இல் உருவாக்கியவர் கலைஞர்.
- எம்.ஜி.ஆர். 1980இல் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை 31 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தினார்.
- பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீடு 50 சதவிகிதம் என்பதை மிகப் பிற்படுத்தப்பட்டோர்க்கு 20 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவிகிதம் என 1989இல் கலைஞர் ஆணையிட்டு மிகப் பிற்படுத்தப்பட்டோர் உயர வழி வகுத்தவர் கலைஞர்.
- 1989இல் ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளைக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து இலவச காங்கிரீட் வீடுகளாக கட்டித் தந்தவர் கலைஞர்.
- 1989இல் ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) ஏற்படுத்தியவர் கலைஞர்.
- 1990இல் பழங்குடியினருக்கு 1 சதவிகிதம் தனி ஒதுக்கீடு செய்து; 18 சதவிகிதம் முழுவதும் ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமே என வழங்க ஆணையிட்டவர் கலைஞர்.
- இந்த 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு தொடர்ந்து இன்றும் நீடித்து வருகிறது.

- 1997இல் இந்தியாவில் எங்கும் இல்லாப் புதுமையாக பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்கும் திட்டத்தை அறிவித்து; தமிழகமெங்கும் 240 சமத்துவபுரங்களை தந்தை பெரியார் அவர்களின் சிலையுடன் அமைத்தவர் கலைஞர்.
- 2009இல் ஆதிதிராவிடர்க்கான 18 சதவிகிதம் இடஒதுக்கீட்டில் அருந்ததியர்க்கு 3 சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கி நடைமுறைப்படுத்தியவர் கலைஞர்.

சமூக நலம்

- 1971 தொழுநோய் இரவலர் மறுவாழ்வுத் திட்டம் தந்தவர் கலைஞர்.
- 1972 கண்ணொளி வழங்கும் திட்டம் தந்தவர் கலைஞர்.
- 1973 கைரிக்சா ஒழிப்புத் திட்டம் தந்து இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கியவர் கலைஞர்.
- 1974 மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வு திட்டம் தந்தவர் கலைஞர்.
- 1975 ஆலயங்களில் ஆதரவற்ற சிறுவர் சிறுமிகளுக்காக கருணை இல்லங்கள் திட்டம் கண்டவர் கலைஞர்.
- 1975 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம் உருவாக்கியவர் கலைஞர்.
- 1975 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரத் திட்டம் கண்டவர் கலைஞர்.
- 1989 பெண்களுக்குச் சம சொத்துரிமை வழங்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலில் உருவாக்கிவர் கலைஞர்.
- 1989 ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு ஏழை மகளிர் இலவச பட்டப்படிப்புத் திட்டம் தந்து, 2007இல் முதுநிலைப் பட்டப் படிப்பு வரை நீட்டித்தவர் கலைஞர்.
- 1989 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம் உருவாக்கியவர் கலைஞர்.
- 1989 பங்காரு அம்மையார் நினைவு மகளிர் குழுக்கள் திட்டம் ஏற்படுத்தியவர் கலைஞர்.
- 1989இல் சத்துணவுப் பணியாளர்களாகத் தற்காலிகமாகப் பணிபுரிந்து வந்த 2.02 இலட்சம் மகளிரை நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர்களாக உயர்த்தியவர் கலைஞர்.
- 1990 அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு சட்டம் கண்டவர் கலைஞர்.
- 1990 தொடக்கப்பள்ளிகளில் பெண்களே ஆசிரியர்கள் எனத் திட்டம் வகுத்தவர் கலைஞர்.
- 10ஆம் வகுப்புப் படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/– நிதியுதவி வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் தந்தவர் கலைஞர்.
- ரூ.25,000/– நிதியுதவி தரும் அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் தந்தவர் கலைஞர்.

- 1996 தொழில் மனை ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கும் திட்டம் தந்தவர் கலைஞர்.
- 1996 உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் திட்டத்தை 1996இல் நிறைவேற்றியவர் கலைஞர்.
- 1997இல் மாற்றுத்திறனாளிகளை மணந்து கொள்ளும் மற்றவர்களுக்கு நிதியுதவி ரூ.25,000/– வழங்கும் திட்டம் கண்டவர் கலைஞர்.
- 1998இல் பணியாற்றும் காலத்தில் இறக்கும் சத்துணவு சமையலர், உதவியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் நியமனம் வழங்க வகை செய்தவர் கலைஞர்.
- சத்துணவுப் பணியாளர்களுக்குச் சிறப்பு சேம நல நிதித் திட்டம் கண்டவர் கலைஞர்.
- 1998இல் அரவாணிகள் என்பதை, திருநங்கையர் எனப் பெயர் மாற்றி, திருநங்கையர் நலவாரியம் தொடங்கியவர் கலைஞர்.
- 1999இல் பூ, காய்கறிகள் விற்பனைக்கு உதவிட மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தை ஏற்படுத்தியவர் கலைஞர்.
- 2006இல் குடும்ப வன்முறையிலிருந்து காக்கும் பெண்கள் பாதுகாப்புச் சட்டம் 2005இன் படி அத்தகைய பெண்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலர்களைத் தற்காலிகப் பாதுகாப்பு அலுவலர்களாக நியமனம் செய்தது கலைஞர் ஆட்சி.
- 2008இல் திருநங்கையர்களில் 65 வயதை எட்டியோருக்கு மாத ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தந்தவர் கலைஞர்.
- 2008இல் 50 வயது கடந்தும் திருமணமாகாத ஏழை மகளிருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் கண்டவர் கலைஞர்.

அரசு ஊழியர் – ஆசிரியர் நலன்

- 1972இல் அரசு ஊழியர்களுக்கான ரகசிய குறிப்பேட்டு முறையை அறிமுகம் செய்தவர் கலைஞர்.
- கலைஞர் 19 ஆண்டு கால முதலமைச்சர் பொறுப்பில் நான்கு முறை ஊதியக் குழுக்களை நியமித்து அரசு ஊழியர் ஆசிரியர்களின் பொருளாதாரத்தை உயர்த்தியவர் கலைஞர்.
- 01–06–1988 முதல் ஆசிரியர், அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கியவர் கலைஞர்.

இவைபோல் ஆயிரக்கணக்கான ஆணைகளைப் பிறப்பித்து தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலம் என உயர்த்தியவர் கலைஞர்.

❋ ❋ ❋



நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆளுமைப் பண்புகள்

தலைவர் கலைஞர் இந்திய அளவிலே முதன் முதலாகப் பல அரிய சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

அவற்றில் சில 1969 முதல் -2011 வரை

1. விடுதலை நாளில் கோட்டையில் தேசியக் கொடியை மாநில ஆளுநர் ஏற்றி வைக்கும் வழக்கத்தை மாற்றி, மாநில முதல்வர்களுக்கு அவ்வுரிமையைப் பெற்றுத் தந்தார்.
2. குடிசை மாற்று வாரியம் அமைத்துக் குடிசைவாசிகளுக்காக அடுக்கு மாடி வீடுகள் அமைத்து அவர்களைக் குடியேற்றினார்.
3. தாழ்த்தப்பட்டோருக்கும் மீனவர்களுக்கும் இலவச அடுக்குமாடி வீடுகளைக் கட்டித் தந்தார்.
4. இந்தியாவிலேயே முதன்முதலாகப் போலீஸ் கமிஷன் அமைத்துக் காவல்துறையினரின் சீருடை, பணி, ஊதியம் ஆகியவற்றைச் சீர்திருத்தி அமைத்தார்.
5. பணியாற்றும் பொழுது இறக்க நேரிடும் அரசு ஊழியரின் குடும்பத்தினருக்கு ரூ. 10,000 (தற்போது ரூ. 5 இலட்சம்) உதவித் தொகை வழங்கும் முறையை ஏற்படுத்தித் தந்தார்.
6. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வரதராசன் அவர்களை உயர்நீதிமன்ற நீதிபதியாக்கினார். பின்னர் அவர் உச்சநீதிமன்ற நீதியரசரும் ஆனார். உச்சநீதி மன்றத்தில் நீதியரசரான முதல் தாழ்த்தப்பட்டவர் அவரே.
7. தனியார் பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கிச் சேர, சோழ, பாண்டியன், பல்லவன், திருவள்ளுவர் ஆகியோர் பெயர்களால் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கினார்.
8. மாணவர்களுக்கு +2 வரை இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கினார்.
9. பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி முகாம் தொடங்கினார்.
10. மனிதனை வைத்து, மனிதன் இழுக்கும் கை ரிக்சாவை ஒழித்து, அவர்களுக்கு இலவசமாகச் சைக்கிள் ரிக்சா வழங்கினார்.

11. ஏழையர்க்குக் கண்ணொளி வழங்கும் திட்டம் செயல்படுத்தினார்.

12. தொழுநோய் மற்றும் இரவலர்க்கு மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தார்.

13. ஆதரவற்ற குழந்தைகளைக் காத்திடக் கருணை இல்லம் அமைத்தார்.

14. தமிழ்நாட்டில் மே முதல் நாளைத் தொழிலாளர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவித்தார்.

15. தமிழறிஞர்களின் பிள்ளைகளுக்குப் பொறியியல், மருத்துவப் படிப்புகளில் 5 சதவீத தனி இடஒதுக்கீடு வழங்கினார்.

16. கல்வித்துறையில் இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வுகளை (Compound System) நடைமுறைப்படுத்தினார்.

17. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார். மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையாகத் தமிழ்நாடு மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கினார்.

18. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம் கொண்டு வந்தார்.

19. மாநகராட்சி மேயருக்கு நேரடித் தேர்தல் முறையைக் கொண்டு வந்தார்.

20. மாநிலச் சுயாட்சி குறித்து ஆராய்ந்திட இராஜமன்னார் குழு அமைத்தார்.

21. மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்காக 20சதவீத இட ஒதுக்கீடு அளித்தார்.

22. கிழக்கு ஆசியாவிலேயே முதன்முதலாகக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ஏற்படுத்தினார்.

23. தியாகி வ.உ.சிதம்பரனார் சிறையில் மெய்நோக இழுத்த செக்கினைத் தேடிக் கண்டுபிடிக்கச் செய்து அதை நினைவுச் சின்னமாக்கினார்.

24. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படுவது போல் மொழிப்போர் தியாகிகளுக்கும் ஓய்வூதியம் வழங்கினார்.

25. விடுதலைப் போராட்ட வீரர் இறந்துவிட்டால், அவருக்கு அரசு மரியாதை செலுத்த வேண்டும் என ஆணையிட்டார்.

26. ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் உட்பட்ட ஒரு சிற்றூரைத் தேர்ந்தெடுத்து, அதில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தினார்.

27. சாதி, சமயப் பூசல்களை மறந்து தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாய் வாழ்ந்திட நாடெங்கும் சமத்துவபுரம் திறந்து அவற்றிற்குப் 'பெரியார் நினைவு சமத்துவபுரம்' எனப் பெயரிட்டார்.

28. நாட்டு மக்களிடையே கூட்டுறவு, தற்சார்பு உணர்வுகளை வளர்த்திட நமக்கு நாமே திட்டம் கொண்டு வந்தார்.

29. தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றி அதனைத் தில்லிக்கு அனுப்பினார்.

30. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலங்காக்கத் தனித்துறை (அமைச்சகம்) ஏற்படுத்தினார்.

31. சமூகச் சீர்திருத்தத்திற்காகத் தனி அமைச்சகம் ஏற்படுத்தினார்.

32. இடைத்தரகர்களின் தலையீடு இன்றி உற்பத்தியாளரும், நுகர்வோரும் நேரடித் தொடர்பு கொள்ளும் வகையில் உழவர் சந்தைகள் தொடங்கினார்.

33. கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்கு, பொறியியல் மற்றும் மருத்துவப் படிப்புகளில் 5 சதவீத தனி இட ஒதுக்கீடு வழங்கினார்.

34. பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களிலிருந்து வரும் 100 மாணவ, மாணவியர்களுக்கு இலவசத் தொழிற்கல்வி வழங்கினார்.

35. மெட்ராஸ் என்ற பெயரை, சென்னை என மாற்றினார். அரசினர் தோட்டம் ஓமந்தூரார் அரசினர் தோட்டம் எனப் பெயர் மாற்றம் பெறச் செய்தார்.

36. உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு மகளிருக்கு இட ஒதுக்கீடு தந்தார்.

37. அரசு அலுவலர்கள், அரசின் நிறுவனங்கள், ஊராட்சி மன்றங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றில், பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு செய்தார்.

38. நகரங்களைக் குக்கிராமங்களுடன் இணைத்திட சிற்றுந்து (மினி பஸ்) திட்டம் கொண்டு வந்தார்.

39. தில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில்(1969) 'வங்கிகளை நாட்டுடைமை' ஆக்கிட யோசனை கூறினார். இதன் அடிப்படையில்தான் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 14 தனியார் வங்கிகளை நாட்டுடைமை ஆக்கினார்.

40. பன்னாட்டு மூலதனத்தை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வர இந்தியாவிலேயே முதன்முதலாக டைடல் பூங்கா என்னும் கணினி மென்பொருள் பூங்காவினை அமைத்தார்.

41. அரசு ஊழியர்களைப் பழிவாங்குவதற்கே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வந்த இரகசியக் குறிப்பேடு முறையை ஒழித்தார்.

42. தமிழ்நாட்டின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்காக மாநிலத் திட்டக்குழுவை அமைத்தார்.

43. எட்டாம் வகுப்பு வரை படித்த, ஏழை இளம் பெண்களுக்கு அரசின் சார்பில் ரூ.5000/- அதன் பின் ரூ.10,000/- அதன்பின் ரூ.15,000/-எனத் திருமண நிதி உதவித் திட்டம் வகுத்தார்.

44. ஏழை எளியோருக்கான பன்முனை மருத்துவப் பரிசோதனைத் திட்டமான 'வருமுன் காப்போம்' திட்டத்தை அறிவித்தார்.

45. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி அலுவலகம் கட்ட ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்தார்.

46. தமிழகத்தை இந்தியாவின் டெட்டிராய்ட் ஆக மாற்ற கார் உற்பத்தித் தொழிற்கூடங்கள் தொடங்க அனுமதித்தார்.

47. உலகத்தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்.

48. தமிழ்விசைப் பலகையைத் தரப்படுத்துவதற்காகத் தமிழ் இணைய மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்.

49. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்தார்.

50. தமிழர்களின் 150 ஆண்டு கனவான சேது சமுத்திரத் திட்டம் நடைமுறைக்கு வரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

51. மத்திய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவிப்பதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்தார்.

52. தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையத்தைச் சென்னைக்கு கொண்டு வந்தார்.

53. கடல்சார் பல்கலைக்கழகம் அமைக்கச் செய்தார்.

54. தந்தை பெரியார் நெஞ்சில் உள்ள முள்ளை அகற்றும் அரும்பணியாகத் தகுதியுள்ள அனைத்துச்சாதியினரும் திருக்கோயில்களில் அர்ச்சகராக உத்தரவு பிறப்பித்தார்.

55. எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும் என ஆணையிட்டார்.

56. கண்ணகிக்குச் சிலை நிறுவினார்.

57. நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் தந்தார்.

58. பனைத் தொழிலாளர் நலனுக்குத் தனி வாரியம் அமைத்தார்.

59. தொகுப்பூதிய ஆசிரியர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கினார்.

60. நுழைவுத் தேர்வு ரத்துக்கு நிபுணர் குழு அமைத்தார்.

61. மருத்துவம், பொறியியல் பயிலும் மாணாக்கர்களின் கல்விக் கட்டணத்தைக் குறைத்தார்.

62. பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்க மானியம் வழங்கினார்.

63. சென்னையில் மெட்ரோ இரயில் திட்டம் கொண்டு வந்தார்.

64. அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வந்தார்.

65. சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்தினார்.

66. அரசு ஊழியர்களுக்கு எதிரான டெஸ்மா சட்டத்தை விலக்கினார்.

67. அரசுப் பணியில் சேர வயது வரம்பை நீட்டித்தார்.

68. இளைஞர் சுயஉதவிக் குழுக்களைக் கிராமம் தோறும் அமைத்தார்.

69. சட்டமன்ற மேலவை மீண்டும் கொண்டு வர முயற்சி எடுத்தார்.

70. தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவ-மாணவியரும் ஏற்றத்தாழ்வின்றி ஒரே பாடத்திட்டத்தில் கல்வி பயின்றிட சமச்சீர் பாடத்திட்டத்தைக் கொண்டு வந்தார்.

71. இருபது, இருபத்தொன்றாம் நூற்றாண்டு தமிழக வரலாறோ தமிழிலக்கிய வரலாறோ தன்னை விட்டு எழுத முடியாத அளவிற்குப் புகழால் உயர்ந்தவர் மு.கருணாநிதி அவர்கள்.

72. இந்திய மருத்துவமனை ஒன்று சென்னை அரும்பாக்கத்தில் "அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை" என்ற பெயரில் 100 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 17.09.1970-ல் தொடங்கி வைக்கப்பட்டது.

73. கிராமப்பகுதி மக்களுக்கு எளிதில் மருத்துவ வசதிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக 166 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டன.

74. பல இலட்சம் மாணவ மாணவியர் பயனடையும் வகையில் பாட நூல்கள் அனைத்தையும் மலிவு விலையில் அச்சிட்டு வழங்குவதற்காக தமிழ்நாடு பாடநூல் கழகத்தை 1971இல் ஏற்படுத்தியவர் கலைஞர்.

75. ஏழை எளியோர் பயன்பெறும் வகையில் இடைநிலை ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையிலேயே நியமன ஆணைகளை வழங்கி ஓர் புதிய வரலாற்றை உருவாக்கினார்.

76. இந்தியாவிலேயே முதன் முதலாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கணினிப் பாடத்தை அறிமுகப்படுத்தியவர் கலைஞர்.

77. தமிழ்மொழிக் கல்வி 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை கட்டாயம் என 31.05.2006 அன்று சட்டம் இயற்றப்பட்டது.

78. முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளினை, ''கல்வி வளர்ச்சி நாள்'' எனக் கொண்டாட வகை செய்யும் சட்டத்தை 02.09.2006 அன்று நிறைவேற்றினார்.

79. அரசு கலைக் கல்லூரிகளில் கணினி வசதிகளுடன் கூடிய நூலகங்கள் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்.

80. முதல் முறையாக, திருக்கோயில் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அடிப்படைக் கணினிப் பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டு, 180 முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்குக் கணினிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

81. 'இராஜராஜன் ஆட்சிக் காலம்; இன்பத் தமிழ் வளர்ச்சிக்கு, இனநலப் பயிற்சிக்கு, இன உணர்வு எழுச்சிக்கு, பண்பாட்டு முதிர்ச்சிக்கு, பழம்பெருமைப் புகழ்ச்சிக்கு, சமத்துவ சமுதாய மலர்ச்சிக்கு, உழவர் தம் மகிழ்ச்சிக்கு வழிகோலி விழிதிறந்த ஆட்சி' – எனக் கலைஞர் எழுதிய கவிதை வரிகள் இங்கு நினைவு கூறத்தக்கவை.

கலைஞரின்
மாண்பை உயர்த்திய மாணிக்க முத்திரை

குமரி முனையில் வள்ளுவர் சிலை 1975ல் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அமைச்சரவையில் முடிவெடுத்து அறிவித்தது. 1979ல் முதலமைச்சர் திரு.எம்.ஜி.ஆர். தலைமையில் பிரதமர் திரு.மொரார்ஜிதேசாய் அடிக்கல் நாட்டினார். பின்னர் 10 ஆண்டுகளுக்குப் பிறகு 1989ல் முதலமைச்சர் கலைஞர் வள்ளுவர் சிலைக்கான பணிகளைத் தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார். பின்னர் 7 ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞர் முதல்வரானதும் வள்ளுவர் சிலைவடிக்கும் பணி மீண்டும் தொடக்கம். நிறைவாக 31.12.1999 – 01.01.2000 ஆகிய நாட்களில் வானுயர வள்ளுவர் சிலை திறப்பு விழா; முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி 01.01.2000 அன்று சிலையைத் திறந்து வைத்தார்.




தமிழ்நாடு அரசு

கலைஞர் கால அரசுக் கட்டடங்கள்

குறளகம் கட்டடம், சென்னை. 1968



குறளகம் கட்டடம் 1968-ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பிரதான கட்டடம் ஆகும். இது, சென்னை பாரிமுனையில் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் இங்கு இயங்கிவருகிறது. இக்கட்டடம் 44,640 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது.

எழிலகம் கட்டடம், சேப்பாக்கம், சென்னை. 1968



எழிலகம் (Ezhilagam) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஐந்தடுக்குக் கட்டடமாகும். இது சென்னை சேப்பாக்கப் பகுதியில் சென்னை பல்கலைக்கழகத்திற்கு எதிரில், காமராசர் சாலையில் அமைந்துள்ளது. இதில் நில நிருவாகம், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகம், மாநிலத் திட்ட ஆணையம், பொது விநியோகம் மற்றும் நுகர்வோர்ப் பாதுகாப்பு, வணிக வரி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையோர் நல வாரியம், வருவாய் நிருவாக ஆணையரகம் போன்ற முக்கிய அரசுத் துறை அலுவலகங்கள் அமைந்துள்ளன.

நாமக்கல் கவிஞர் மாளிகை



நாமக்கல் கவிஞர் மாளிகையானது 11 அடுக்கு மாடிகள் கொண்டு தலைமைச் செயலக வளாகத்தில் அமைந்துள்ளது. இக்கட்டடமானது 1975-ஆம் ஆண்டு கட்டப்பட்டு நாமக்கல் கவிஞர் என்று புகழப்படும் வெங்கட ராமலிங்கம் பிள்ளையின் நினைவாக ''நாமக்கல் கவிஞர் மாளிகை'' என்று பெயரிடப்பட்டது.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி



மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், 1990 செப்டம்பர் 7ஆம் நாள் திருநெல்வேலி நகரில் கொக்கிரக்குளம் பகுதியில் உருவானது. இப்பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்ப் பேராசிரியரான மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவர் ''நீராரும் கடலுடுத்த'' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகத்தில் கலை, மொழி, அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய 24 துறைகள் உள்ளன.

பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.
1997



சேலத்தில் அமைந்துள்ள பெரியார் பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. பல்கலைக் கழகத்திற்குச் சமூகச் சீர்த்திருத்தச் சிங்கம் தந்தை பெரியாரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் அறிவை வளர்ப்பதைப் பல்கலைக்கழகம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் 27 துறைகள் மற்றும் 113 இணை கல்லூரிகள் உள்ளன.

இராஜீவ்காந்தி அரசுப்
பொது மருத்துவமனை கட்டடம்.
2005



இராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனை கட்டடம் 07.03.2001 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது. 3,629 படுக்கைகளுடன் கூடிய மாநில அரசு நடத்தும் ஆசியாவின் மிகப்பெரிய மருத்துவமனை. இந்தப் புதிய கட்டடத்தில் கீழ்தரைத்தளம், தரைத்தளம் மற்றும் ஆறு அடுக்குகள் உள்ளது. இதன் தரைப்பரப்பு 65,000 சதுர மீட்டர் கொண்டது.

சென்னை வர்த்தக மையம்.
(CHENNAI TRADE CENTRE)
2001



சென்னை நந்தம்பாக்கத்தில் பரங்கிமலை – பூந்தமல்லி சாலையில் அமைந்துள்ள சென்னை வர்த்தக மையம் ஒரு நிரந்தரப் பொருட்காட்சிக் கூடம் ஆகும். இங்கு ஆண்டு முழுவதும் அவ்வப்போது வணிகச்சந்தைகள், பொருட்காட்சிகள் நடந்து வருகிறது. இந்த வர்த்தக மையம் 2000 ஆம் ஆண்டு திரு.சி.ஆர். நாராயணன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு அன்றைய மத்திய தொழில் துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை அமர்வு கிளை
2004



மதுரை உயர்நீதிமன்றக் கிளை 13.04.2000 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இது 24.07.2004 முதல் இயங்கத் தொடங்கியது. 22,929 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவு கொண்ட இந்தக் கட்டடம் நான்கு அடுக்கு மாடிகளைக் கொண்டது. இந்தக் கட்டடம் உயர்நீதிமன்றத்தின் அனைத்து அலுவலகங்கள் மற்றும் துறைகளை உள்ளடக்கியது.

தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி



தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி – மதிப்புமிக்க விருந்தினர் இல்லத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு உயர்நீதிமன்ற நீதிபதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் அலுவல் காரணமாக புதுதில்லி செல்லும் பொழுது, இங்கு தங்குவார்கள். பொதுப்பணித்துறையால் தமிழ்நாடு இல்லத்தின் கட்டடங்கள் அவ்வப்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை



சென்னை மாவட்ட மக்களுக்கு அரசின் அனைத்துச் சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், பல்வேறு அரசுத்துறை சார்ந்த அலுவலகங்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம், 122,710 சதுர அடி பரப்பளவில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் 11.06.1998 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
2000



தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் 30.08.1998 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு ரூ. 594.00 இலட்சம் மதிப்பீட்டில் 2000-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு, 12.02.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடமானது மாண்புமிகு கலைஞர் அவர்களின் மேலான ஆலோசனையின்பேரில் பொதுப்பணித்துறைக் கட்டடக் கலைஞர்களால் வரைபடம் தயாரிக்கப்பட்டு, சிறப்பான கலை நுட்பத்துடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
2000



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டடமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் 10.02.1999 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.614.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டடப்பணிகள் துவங்கப்பட்டு, 12.05.2000 அன்று கட்டி முடிக்கப்பட்டு, 24.06.2000 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கட்டடமானது மாண்புமிகு கலைஞர் அவர்களின் மேலான ஆலோசனையின்பேரில் பொதுப்பணித்துறைக் கட்டடக் கலைஞர்களால் வரைபடம் தயாரிக்கப்பட்டு, சிறப்பான கலை நுட்பத்துடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
2007



கிருஷ்ணகிரி மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் 6.7.2005ல் தொடங்கப்பட்டு 05.03.2007-இல் பணி முடிக்கப்பட்டு 26.02.2008 ல் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம்
1990



வேலூர் மாவட்ட மக்களுக்கு அரசின் அனைத்துச் சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பல்வேறு அரசுத்துறை சார்ந்த அலுவலகங்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம், சுமார் 10.351 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் ரூ.4.34 கோடி மதிப்பீட்டில் சத்துவாச்சாரியில் கட்டப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களால் 01.07.1990 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
2010



அனைத்துத் துறைகளிலும் சீரிய வளர்ச்சி பெறும் வகையிலும் மாவட்ட மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் உடனடியாகச் சென்று சேரும் வகையிலும் ஒருங்கிணைந்த பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக "அரியலூர் மாவட்டம்" 23.11.2007 அன்று முதல் செயல்பட்டுவருகிறது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் ரூ.1288.00 இலட்சத்தில் கட்டப்பட்டு 01.02.2011 அன்று தற்போதைய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
2011



சேலம் மாவட்டம், சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பிற துறை அலுவலகங்களுடன் கூடிய அடுக்கு மாடி கட்டடம் ரூ.37.62 கோடி மதிப்பீட்டில் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் 14.09.2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

பல்வேறு அரசு அலுவலகங்கள் ஒரே கட்டடத்தில் இயங்கும் வகையில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ள இம்மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடமானது, டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் 20.08.2010 அன்று மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது.

நீதிமன்றக் கட்டடம், நாமக்கல்
2010



நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பெருந்திட்ட வளாகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற அலுவலகக் கட்டடமானது மாண்புமிகு நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்களால் 15.03.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ-1056.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டடப் பணிகள் துவங்கப்பட்டு 2011-ஆம் ஆண்டில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 23.1.2011 அன்று மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர்கள் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம், பெரம்பலூர்
2009



பெரம்பலூர் மாவட்ட மக்களுக்கு நீதித்துறையின் அனைத்துச் சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும் என்று ரூ.875.00 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்களது ஆட்சிக் காலத்தில் 07.02.2009 அன்று மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்துவைக்கப்பட்டது.

விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை (2011)





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 07.03.2010 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற விழாவில், அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை மற்றும் புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். உடன், அன்றைய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.வி.கே. சுப்புராஜ், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு. இரா. பழனிசாமி ஆகியோர் உள்ளனர்.

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
2010



தருமபுரி மாவட்டம், தருமபுரியில் செயல்பட்டு வந்த மாவட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி கட்டடம் கட்டும் பணிக்கு முதற்கட்டமாக அரசு ஆணை எண்.127/மருத்துவத் துறை, நாள்: 15.04.2008ன் மூலம் ரூ. 5514.62 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதில் நிர்வாகக் கட்டடம், டீன் குடியிருப்பு, விரிவுரையாளர் அறை, கலையரங்கம், நூலகம், மாணவியர் மற்றும் மாணவர் விடுதி கட்டடம், செவிலியர் விடுதி, வங்கி மற்றும் அலுவலகம், ஆர்எம்ஓ குடியிருப்பு ஆகியவைகள் கட்டும் பணி 02.01.2009-இல் துவங்கப்பட்டு 19.01.2010-இல் பணி முழுவதும் முடிக்கப்பட்டது.



27 வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடம், கே.வி.குப்பம், வேலூர் மாவட்டம். திறக்கப்பட்ட ஆண்டு: 2008-2009



25 வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடம், செஞ்சி,
வேலூர் மாவட்டம். திறக்கப்பட்ட ஆண்டு: 2008-2009



24 வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடம், கே.வி.குப்பம்,
வேலூர் மாவட்டம். திறக்கப்பட்ட ஆண்டு: 2008-2009



அரசு விருந்தினர் மாளிகை
கட்டடம், தேனி
திறக்கப்பட்ட ஆண்டு:
2000

ஒருங்கிணைந்த நீதிமன்ற
வளாகக் கட்டடம்,
இராணிப்பேட்டை
திறக்கப்பட்ட ஆண்டு:
2010-2011





வட்டார போக்குவரத்து
அலுவலகக் கட்டடம்,
இராணிப்பேட்டை
திறக்கப்பட்ட ஆண்டு :
2009-2010

கலைஞர் எழுப்பிய நினைவகங்கள்





ரூ.24.9 கோடி மதிப்பீட்டில்
பேரறிஞர் அண்ணா நினைவிடம் புனரமைப்பு

கலைஞர் ஆட்சியில் தமிழ்வளர்ச்சிப் பணிகள்


- 1967 இல் அரசுப் பேருந்துகளில் திருக்குறள் பலகை வைத்தவர் கலைஞர்.
- 1968 இல் பேரறிஞர் அண்ணா அவர்களால் நமது மாநிலத்திற்கு தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்டது.
- 1968 இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கண்ணகி சிலை, போப், வீரமாமுனிவர், கால்டுவெல் முதலான 10 தமிழ்ச் சான்றோர் சிலைகள் நிறுவப்பட்டது.
- 1970 இல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவியவர் கலைஞர்.
- 1972 இல் தஞ்சையில் மாமன்னர் இராசராசன் சிலை நிறுவியவர் கலைஞர்.
- 1973 இல் பூம்புகார், சிலப்பதிகாரச் சிற்பக் கலைக்கூடம் உருவாக்கியவர் கலைஞர்.
- 1974 இல் சுதந்திர நாளில் முதலமைச்சர்கள் மாநிலங்களில் தேசியக்கொடி ஏற்றும் உரிமை பெற்றுத்தந்தவர் கலைஞர்.
- 1974 இல் வள்ளுவர் கோட்டம் கண்டவர் கலைஞர்.
- 1989 இல் பாரதிதாசன், கல்கி, திரு.வி.க, மறைமலையடிகள் உள்ளிட்ட 140க்கும் மேற்பட்ட தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியவர் கலைஞர்.
- 2000 முதல் நாளில் குமரி முனையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை நிறுவியவர் கலைஞர்.
- 2005 இல் தமிழுக்கு 'செம்மொழி' எனும் பெருமையை ஒன்றிய அரசு மூலம் ஏற்கச் செய்தவர் கலைஞர்.
- 2008 இல் சிதம்பரம் திருக்கோவிலில் தேவாரம் இசைத்திட ஓதுவார் ஆறுமுகசாமிக்கு மாத ஓய்வூதியம் ரூ.3,000 வழங்கியவர் கலைஞர்.
- தருமபுரியில் ஔவைக்கு நெல்லிக்கனி தரும் அதியமான் சிலைகளுடன் 2009 இல் கோட்டம் நிறுவியவர் கலைஞர்.
- தமிழ் வளர்ச்சி இயக்ககம் உருவாக்கியவர் கலைஞர்.
- 2010 இல் எழும்பூரில் தமிழ் வளர்ச்சி வளாகம் கட்டியவர் கலைஞர்.
- ஆந்திர மாநிலம் குப்பம் ஊரில் திராவிடப் பல்கலைகழகம் அமைக்க ரூ.50 இலட்சம் நிதியுதவி அளித்தவர் கலைஞர்.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னையில் அமைத்தவர் கலைஞர்.
- 2010 இல் தமிழறிஞர்களுக்குக் குடியரசுத் தலைவர் விருதுகள் வழங்கச் செய்தவர் கலைஞர்.
- 2010 இல் கோவையில் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தியவர் கலைஞர்.
- 2010 இல் தமிழில் சிறந்த மென்பொருள் தயாரிப்போருக்குக் கணியன் பூங்குன்றனார் விருது வழங்க வகை செய்தவர் கலைஞர்.



தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம்
இடம்: தில்லையாடி,
மயிலாடுதுறை, 13.08.1971



மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம்
இடம்: சர்தார் வல்லப்பாய் பட்டேல் சாலை,
கிண்டி, 05.05.1975



பெருந்தலைவர் காமராசர் பிறந்த இல்லம்
இடம்: விருதுநகர், 15.01.1975



பெருந்தலைவர் காமராசர் நினைவகம்
இடம்: சர்தார் வல்லப்பாய் பட்டேல் சாலை,
கிண்டி, 14.12.1976



மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம்
இடம்: தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி, 1978



தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம்
இடம்: திருமங்கலம், மதுரை, 27.12.1998




பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம்
இடம்: நாகர்கோவில்,
கன்னியாகுமரி, 19.04.1998



மாவீரன் பூலித்தேவன் நினைவு மாளிகை
இடம்: திருநெல்வேலி, 28.12.1998



பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம்
இடம்: சர்தார் வல்லப்பாய் பட்டேல் சாலை,
கிண்டி, 13.03.1998



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
மணிமண்டபம்
இடம்: பட்டுக்கோட்டை,
தஞ்சாவூர், 13.12.1999



தியாகிகள் மணிமண்டபம்.
இடம்: சர்தார் வல்லப்பாய் பட்டேல் சாலை,
கிண்டி, 17.07.1999



பகுத்தறிவு கவிராயர் உடுமலை
நாராயணகவி மணிமண்டபம்.
இடம்: உடுமலைப்பேட்டை,
திருப்பூர், 23.02.2001



நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்
பிள்ளை நினைவு இல்லம்
இடம்: நாமக்கல், 21.01.2000



தவத்திரு குன்றக்குடி அடிகளார்
மணிமண்டபம்
இடம்: குன்றக்குடி, சிவகங்கை,
12.03.2001



பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம்
இடம்: கன்னியாகுமரி, 02.10.2000



தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம்
இடம்: சங்ககிரி, சேலம், 01.03.2006



இரட்டை மலை சீனிவாசன் மணிமண்டபம்
இடம்: சர்தார் வல்லப்பாய் பட்டேல் சாலை,
கிண்டி, 07.07.2009



தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம்
இடம்: பாப்பாரப்பட்டி, தருமபுரி, 18.07.2011



வள்ளல் அதியமான் கோட்டம்
இடம்: அதியமான் கோட்டை,
தருமபுரி, 28.02.2009



பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம்
இடம்: விளாச்சேரி, மதுரை, 31.10.2007



அமுதகவி உமறுப்புலவர் மணிமண்டபம்
இடம்: எட்டயபுரம், தூத்துக்குடி, 29.10.2007



தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்
நினைவு இல்லம்
இடம்: உத்தமதானபுரம்,
திருவாரூர், 27.04.2008



மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்
மணிமண்டபம்
இடம்: சாத்தமங்கலம்,
மதுரை, 30.10.2007



தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம்
இடம்: திருத்துறைப்பூண்டி,
திருவாரூர், 14.11.2009

கலைஞர் வடித்த சிலைகள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள்



தமிழ் மூதாட்டி ஔவையார் சிலை
இடம்: காமராசர் சாலை, சென்னை, 02.01.1968



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிலை
இடம்: காமராசர் சாலை, சென்னை, 02.01.1968



விடுதலை கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் சிலை
இடம்: காமராசர் சாலை, சென்னை, 02.01.1968



ஜி.யு.போப் சிலை.
இடம்: காமராசர் சாலை, சென்னை, 02.01.1968



தமிழர் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி சிலை

இடம்: காமராசர் சாலை, சென்னை, 02.01.1968



உலகப்பொதுமறை தந்த திருவள்ளுவர் சிலை
இடம்: காமராசர் சாலை, சென்னை, 02.01.1968



வீரமா முனிவர் திருவுருவச் சிலை.
இடம்: காமராசர் சாலை, சென்னை, 02.01.1968



கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் சிலை.
இடம்: சென்னை, 14.01.1969.



பாரதப் பெருந்தலைவர் கு. காமராசர் சிலை
இடம்: காமராசர் சாலை, சென்னை, 03.10.1976



இந்திய குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண்
இடம்: காமராசர் சாலை, சென்னை, 25.01.2001



சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண்

இடம்: வேலூர், 20.12.1998

கலைஞர் உருவாக்கிய நெடுஞ்சாலைகள் மற்றும் மேம்பாலங்கள்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அண்ணா மேம்பாலம், சென்னை 1973ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் ஆட்சியில் நெடுஞ்சாலைத்துறை

1998 மார்ச் 26-ம் நாள் தமிழக வரலாற்றில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் முதன் முறையாக நெடுஞ்சாலைத் துறைக்கென தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டது.

கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் தமிழகத்தில் அதிகப்படியான சாலைகளும், பாலங்களும் அமைக்கப்பட்டன.

1967 ஆம் ஆண்டு தமிழகத்தில் முதன் முறையாக, பொதுப்பணித் துறை அமைச்சராகப் பதவி ஏற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு, தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் வரை பொதுப்பணித் துறையின் கீழ் பல சாலைக் கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தினார்.

1. இன்றளவும் நினைவில் உள்ள திட்டங்கள்

வ.எண்	ஆண்டு	திட்டவிவரங்கள்
1	1972	1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டம் கழக அரசினால் அறிமுகம் செய்யப்பட்டது.
2	1990	1,000-க்கும் மேல் மக்கள் தொகைக் கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது.
3	1996	1996-ம் ஆண்டுக்கு பிறகு, 517 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதிகளைப் பெற்றன.
4		இணைப்புச் சாலை வசதி இல்லாத 1,000 பேருக்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற சாதனை படைக்கப்பட்டது.
5	1999-2000	ஆண்டுகளில் முதற்கட்டமாக 500-க்கு மேல் 1000-க்குள் மக்கள் தொகை கொண்ட 340 கிராமங்களுக்கு ரூ.123.70 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன. 2000 - 2001-ம் ஆண்டுகளில் ரூ.90.75 கோடி செலவில் 140 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன.
6	2000	1841.33கி.மீ. நீள சாலைப் பணிகள் இயந்திரம் மூலம் தார்ச்சாலைகளைப் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் ரூ.200 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன.
7		பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரத் திட்டத்தின்கீழ், திருப்பூர் நகர் மற்றும் அதன் சுற்றுப்புறச் சாலை மேம்பாட்டுப் பணிகளில் 57.80 கி.மீ. சாலைப் பணிகளும், ஓர் உயர்மட்டப் பாலமும் ரூ.15.60 கோடியில் முடிக்கப்பட்டன.
8	1996-2001	கலைஞர் முதலமைச்சராக இருந்த ஆட்சிக் காலத்தில், 1999 முதல் 2001 வரையிலான இரண்டே ஆண்டுகளில் தமிழகமெங்கும் 106 பாலங்கள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து அவ்வாறே கட்டி முடிக்கப்பட்டது என்பது, எவரும் எண்ணிக் கூட பார்க்க இயலாத வரலாற்றுச் சிறப்புமிக்க பெருஞ் சாதனையாகும்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால்
நேப்பியர் பாலம் (விரிவாக்கம்), 1999 திறந்து வைக்கப்பட்டது



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கத்திபாரா
பாலம், சென்னை, 2008 திறந்து வைக்கப்பட்டது



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஆலந்தூர்
ஆபிரகாம் மேம்பாலம், 2009 திறந்து வைக்கப்பட்டது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 11.12.2009 அன்று சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்ற விழாவில் ஆலந்தூர் சாலை மேம்பாலத்தினை (ஆலந்தூர் ஆபிரகாம் மேம்பாலம்) திறந்து வைத்தார். உடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சென்னை மாநகராட்சி மேயர். திரு. மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி ஆகியோர் உள்ளனர்.

2. நிறுவிய கட்டமைப்புகள்

2.1 முக்கியமான சாலை வசதிகள்

- ரூ.49.85 கோடி செலவில் இரண்டு பெரிய பாலங்கள் உட்பட 18.80 கி.மீ. நீள தாம்பரம் – மதுரவாயல் – சென்னை புறவழிச்சாலைப் பணிகள் அமைக்கப்பட்டன.
- 24.70 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 3 மேம்பாலப் பணிகளும் அடங்கிய மதுரை சுற்றுச்சாலை அமைக்கும் பணி ரூ.47.35 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டது.
- ரூ.110 கோடி செலவில் 28.40 கி.மீ. நீளக் கோவை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு, போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது.
- கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 210 கி.மீ. நீள சாலை ரூ.17.19 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டது.

2.2 முக்கியமான பாலங்கள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பவளவண்ணன் வாகனச் சுரங்கப்பாதை, 2009 திறந்து வைக்கப்பட்டது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 11.12.2009 அன்று சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்ற விழாவில், ஜோன்ஸ் சாலை (பவளவண்ணன் வாகனச் சுரங்கப்பாதை) திறந்து வைத்தார். உடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி ஆகியோர் உள்ளனர்.

1969-1977 வரை கட்டிய பாலங்கள்

வ.எண்	ஆண்டு	பாலங்கள் விவரங்கள்
1	1969	தஞ்சை - திருச்சி மாவட்டங்களை இணைத்துக் கொள்ளிடம் ஆற்றில் திருமானூர் அருகில் ஒரு பெரிய பாலம்.
2		குளித்தலை - முசிறிக்கு இடையில் காவிரிப் பாலம்.
3	1970	திருநெல்வேலி சந்திப்புக்கு அருகில் - திருவள்ளுவர் பெயரால் ஒரு ஈரடுக்கு மேம்பாலம்.
4	1971	கோவையில் ஒரு மூன்றடுக்கு மேம்பாலம்.
5	1972	ஈரோடு - சத்தி சாலையில் ஒரு பாலம்.
6	1973	ஒகேனேக்கல் சாலையில் சின்னாறு நதியில் பாலம்.
7		பொள்ளாச்சி - தாராபுரம் சாலையில் பாலம்.
8		தேவிப்பட்டிணம் - திருப்பாலக்குடி சாலையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பாலம்.
9		இராமநாதபுரம் மாவட்டத்தில் பொய்யேரி செல்லும் சாலையில் திருமணி ஆற்றில் பாலம்.
10		கல்லார் சிமெண்ட் பள்ளி சாலையில் அரசனூர் ஆற்றில் பாலம்.
11		உடுமலைப்பேட்டை - குமாரலிங்கம் சாலையில் அமராவதி ஆற்றில் பாலம்.

1989-1990-ம் ஆண்டு - வரை கட்டிய முக்கியமான பாலங்கள்

வ.எண்	பாலங்களின் விவரங்கள்
1	சென்னை விம்கோ நகர் - எண்ணூர் இரயில் நிலையங்களுக்கிடையில் ஒரு இரயில்வே மேம்பாலம்.
2	மாயவரம் சாரங்கபாணி மேம்பாலம்.
3	திருவாரூர் மேம்பாலம்.
4	கும்பகோணம் இரயில்வே மேம்பாலம்.
5	நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை முத்துப்பேட்டை சாலையில் ஒரு மேம்பாலம்.
6	கோவையில், கிராஸ்கட் சாலையில் மேம்பாலம்.
7	திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆற்காடு - விழுப்புரம் சாலையில் ஒரு மேம்பாலம்.

8	கோவை - சத்தியமங்கலம் காமராஜ் நகர் சாலையில் ஒரு பாலம்.
9	கோவை - சிறுவாணி சாலையில் பாலம்.
10	கிழக்குக் கடற்கரைச் சாலையில் வயலூர் அருகில் பாலாற்றில் 61 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம்.
11	ஊட்டி அருகில் கன்னிக்கோடு - கூடலூர் சாலையில் பாலம்.
12	நெல்லை மாவட்டத்தில் கோதை ஆற்றில் அம்பாசமுத்திரம் - பாப்பாக்குடி இடையில் ஒரு பாலம்.
13	மயிலாடுதுறை - முத்துப்பேட்டை சாலையில் பழைய பாலம் ஒன்று புதுப்பித்து அமைக்கப்பட்டது.
14	மதுரை - தூத்துக்குடி சாலையில் விருதுநகருக்கு அருகில் உள்ள பாலம் புதுப்பிக்கப்பட்டது.
15	விருதுநகர் மாவட்டத்தில் - அர்ச்சுனா ஆற்றில் சிவகாசி - விருதுநகர் சாலையில் ஒரு உயர்மட்ட பாலம். விழுப்புரம் - கும்பகோணம் சாலையில் கடலூர் அருகில் பாலம்.
16	கோவை - திண்டுக்கல் சாலையில் கோவைக்கு அருகே பாலம்.திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அருகில் ஒரு பாலம்.
17	மதுரை - தென்காசி சாலையில் பாலம்.
18	ஆம்பூருக்கு அருகில் பாலாற்றில் ஒரு பாலம்.
19	விருதுநகருக்கு அருகில் அர்ச்சுனா ஆற்றில் குறுக்கே மேலும் ஒரு பாலம்.
20	பழனி - தாராபுரம் மேற்கு சாலையில் - மானூர் அருகில் சண்முகாநதி குறுக்கே ஒரு பாலம் என ஏராளமான பாலங்களும் சாலைகளும் கட்டப்பட்டன.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஜி.கே.மூப்பனார் மேம்பாலம், 2009 திறந்து வைக்கப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 11.12.2009 அன்று சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்ற விழாவில், டர்ன்புல்ஸ் சாலை – செனடாப் சாலைச் சந்திப்பு மேம்பாலத்தை (ஜி.கே.மூப்பனார் மேம்பாலம்) திறந்து வைத்தார். உடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சென்னை மாநகராட்சி மேயர். திரு. மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி துணை மேயர். திருமதி ஆர். சத்தியபாமா, தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, சென்னை மாநரகாட்சி ஆணையர் திரு. ராஜேஷ் லக்கானி, சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (பணிகள்) திரு. ஆசிஸ் சாட்டர்ஜி, மன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந.இராமலிங்கம், மன்ற எதிர்கட்சித் தலைவர் திரு. சைதை ப.ரவி, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) திரு.எஸ்.சுரேஷ்குமார், 8வது மண்டல குழுத் தலைவர் திரு. கே.ஏழுமலை, 9வது மண்டல குழுத் தலைவர் திரு. க தனசேகரன், மன்ற உறுப்பினர்கள் திரு.த. சத்தியமூர்த்தி, செல்வி எம்.காஞ்சனா, திருமதி எஸ்.லதா செல்வகுமார் ஆகியோர் உள்ளனர்.



1996-2001 வரை கட்டிய முக்கியமான பாலங்கள்

வ.எண்	ஆண்டு	பாலங்களின் விவரங்கள்
1	1997	மதுரை மாவட்டத்தில் மதுரை அண்ணா நகர் 80 அடி சாலையையும், காமராஜர் சாலையையும் இணைத்து வைகை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 30.04.1997 அன்று கட்டி முடிக்கப்பட்டது.
2		மதுரை மாவட்டம் மேலூர்-பூவந்தி திருப்புவனம் சாலையில் தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் 31.10.1997 அன்று கட்டிமுடிக்கப்பட்டது.
3	1998	சென்னை - கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில், சென்னையிலிருந்து 7வது கிலோமீட்டரில் 3 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.03.1998 அன்று முடிவடைந்தன.
4	1999	திருவள்ளூர் மாவட்டத்தில் பெரியபாளையம் அருகில் ஆரணி ஆற்றின் குறுக்கே 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 2.1.1999 அன்று முடிவடைந்தன.
5		திருவொற்றியூர் - பொன்னேரி சாலையில் நாப்பாளையம் அருகில் 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 02.01.1999 அன்று முடிவடைந்தன.
6		மதுரா கோட்ஸ் அருகில் புதிய ஜெயில் சாலையில் ஆறு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம் 13.11.1999 அன்று கட்டிமுடிக்கப்பட்டது.
7		சென்னையில் ராயபுரத்தில் இரண்டு இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக 17 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட மிகப்பெரிய மேம்பாலத்தின் பணிகள் 15.11.1999 அன்று முடிவடைந்தன.
8		திருச்சி மாவட்டத்தில் 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் தில்லைநகர் சாலையையும், கரூர் புறவழிச்சாலையினையும் இணைக்கும் இணைப்புச் சாலையும், அதில் அமைந்துள்ள பாலத்தின் கட்டுமானப் பணிகளும் 31.12.1999 அன்று முடிவடைந்தன.
9	1999	திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி நகரில் மதுரை - கன்னியாகுமரி புறவழிச்சாலையுடன் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 8 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப் பாலத்தின் கட்டுமானப் பணிகள் 31.12.1999 அன்று முடிவடைந்தன.
10		கோவை மாவட்டத்தில், கோவை நகராட்சி சாலையை மேம்பாடு செய்து, நொய்யல் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 28.5.1999 அன்று முடிவடைந்தன.
11		கோவை பெரிய கடைவீதியில் அமைந்துள்ள கீழ்வழிப் பாதை 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுப் பணிகள் 15.11.1999 அன்று முடிவடைந்தன.

12	2000	மதுரை வைகை ஆற்றின் குறுக்கே ஏற்கனவே இருந்த கல்பாலம் தாம்போகிக்கு பதிலாக 8 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப் பாலம் 23.2.2000 அன்று கட்டிமுடிக்கப்பட்டது.
13		மதுரை சுற்றுச்சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே 4 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப்பாலம் 25.05.2000 அன்று கட்டிமுடிக்கப்பட்டது.
14		மதுரை சுற்றுச்சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே 8 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும், 6 கோடி ரூபாய் செலவில் மற்றொரு மேம்பாலமும் 15.09.2000 அன்று கட்டிமுடிக்கப்பட்டன.
15		மதுரை - தென்காசி சாலையில் 1 கோடியே 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் 30.07.2000 அன்று கட்டிமுடிக்கப்பட்டது.
16		திருவாரூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை - முத்துப்பேட்டை சாலையில் திருவாரூரில் 5 கோடி ரூபாய் செலவில் சாலைகீழ் பாலம் அமைக்கும் பணிகள் 31.08.2000 அன்று முடிவடைந்தன.
17		கடலூர் மாவட்டத்தில் கொத்தாச்சாரி - குண்டியமல்லூர் சாலையில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.07.2000 அன்று முடிவடைந்தன.
18		முருகர்குடி - கிள்ளிமங்கலம் சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே 7 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.05.2000 அன்று முடிவடைந்தன.
19		தண்டலம் - பேரம்பாக்கம் சாலையில் 2 கோடியே 33 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.05.2000 அன்று முடிவடைந்தன.
20		இராமநாதபுரம் மாவட்டத்தில் அபிராமம் - முதுகுளத்தூர் சாலையில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 31.10.2000 அன்று முடிக்கப்பட்டன.
21		சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி - மறவமங்கலம் சாலையில், 1 கோடியே 29 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.03.2000 அன்று முடிவடைந்தன.
22		திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசியிலிருந்து கொடநல்லூர் சேதாரக்குப்பம் சாலை வழியாக ஓசூர் செல்லும் சாலையில் 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 30.04.2000 அன்று முடிவடைந்தன.
23	2000	இளையான்குடி - மறவமங்கலம் சாலையில், 1 கோடியே 11 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மற்றொரு பாலத்தின் பணிகள் 30.08.2000 அன்று முடிவடைந்தன. அதே இளையான்குடி - மறவமங்கலம் சாலையில் 2 கோடியே 22 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஓர் உயர் மட்டப் பாலத்தின் பணிகள் 30.09.2000 அன்று முடிவடைந்தன.

24	2000	புதுப்பாளையம் சாலையில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 30.09.2000 அன்று முடிவடைந்தன. போளூர் ஜமுனாமத்தூர் ஆலங்காயம் சாலையில் 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.05.2000 அன்று முடிவடைந்தன.
25	2000	கிண்டி இரயில் நிலையத்தின் அருகில் 5 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேம்பாலத்தின் பணிகள் 30.04.2000 அன்று முடிவடைந்தன.
26	2000	கிருஷ்ணாபுரம் - பூலாம்பாடி சாலையில் 1 கோடியே 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.07.2000 அன்று முடிவடைந்தன.
27	2000	திருச்சி - நாமக்கல் சாலையில் 2 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட ஒரு பாலத்தின் பணிகளும், அதே சாலையில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட ஒரு பாலத்தின் பணிகளும் 31.10.2000 அன்று முடிவடைந்தன.
28	2000	பெரம்பலூர் மாவட்டத்தில் ஆலாத்துக்கரை - கோலக்காநத்தம் சாலையில் 1 கோடியே 17 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.10.2000 அன்று முடிவடைந்தன.
29	2000	விழுப்புரம் மாவட்டத்தில் வேட்டைக்காடு - கயத்தாறு சாலையில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 30.09.2000 அன்று முடிவடைந்தன. விழுப்புரம் - சென்னை சாலையில் கீழ்பெரும்பாக்கத்தில் இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கீழ்பாலத்தின் பணிகள் 31.03.2000 அன்று முடிவடைந்தன.
30	2000	விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி - கழுகு மலைச் சாலையில் 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.08.2000 அன்று முடிவடைந்தன.
31	2000	காஞ்சிபுரம் மாவட்டத்தில் பழவந்தாங்கல் இரயில் நிலையத்தின் அருகில் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இரயில்வே கீழ் பாலத்தின் பணிகள் 02.06.1997 அன்று நிறைவேறின. மதுராந்தகம் - வெண்ணாங்குப்பட்டு சாலையிலிருந்து தச்சூர் செல்லும் சாலையில் 1 கோடியே 10 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.08.2000 அன்று முடிவடைந்தன.
32	2000	தருமபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டினம் - காக்கன்கரை சாலையில் 5 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் ஹட்கோ உதவித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்தன.

33	2000	வேலூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் செலவில் அம்முண்டி பூட்டுதாக்குச் சாலையில் ஒரு புதிய பாலத்தின் கட்டுமானப் பணிகளும், பூட்டுதாக்கு தாம்போகி சாலையில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகளும் 31.05.2000 அன்று முடிவடைந்தன.
34		புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை ஏம்பல் சாலையில் 1 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.05.2000 அன்று முடிவடைந்தன.
35		கரூர் மாவட்டத்தில் பள்ளப்பட்டு - மண்மாரி சாலையில் 1 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.05.2000 அன்று முடிவடைந்தன.
36		சேலம் மாவட்டத்தில் சேலம் புறவழிச் சாலையில் 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 30.04.2000 அன்று முடிவடைந்தன.
37		கொன்னன் செட்டி - ராஜபட்டினம் சாலையில் 1 கோடியே 35 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.03.2000 அன்று முடிவடைந்தன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் மார்த்தாண்டம் சாலை மேம்பாலம் திறந்து வைக்கப்பட்டது



நாகப்பட்டினம் - அக்கரைப்பாலம் ஆற்று முகத்துவாரப் பாலம்



ஆல்பர்ட் விக்டர் பாலம், மதுரை



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்தபோது



பொதுப்பணித் துறை அமைச்சராக அடையாறு எல்பின்ஸ்டன் பாலத்தின் கீழே படகில் சென்று ஆய்வு செய்த கலைஞர்





மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் 08.01.2009 அன்று சென்னை துறைமுகம் - மதுரவாயல் 19 கி.மீ நீள உயர்மட்ட மேம்பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் மாண்புமிகு மத்திய கப்பல், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு, மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ. ராசா, மாண்புமிகு மத்திய புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை இணை அமைச்சர் திரு. ஜி.கே. வாசன், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.கே.வி. தங்கபாலு ஆகியோர் உள்ளனர்.

- **சென்னையில் உருவாக்கிய முக்கியமான பாலங்கள்**

1. 1973 – சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள அண்ணா மேம்பாலம்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக 1969ல் பொறுப்பேற்றபின் திட்டமிடப்பட்டு வடிவமைத்து நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்பட்ட மிகப்பெரிய மேம்பாலம் அண்ணா மேம்பாலம் ஆகும்.

சென்னை மாநகரில் அப்போதைய ஜெமினி ஸ்டூடியோ அமைந்திருந்த சாலைகள் சந்தித்துக்கொள்ளும் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் நிலவி வந்தது. அப்பகுதியில் சீரான சாலை போக்குவரத்தை உறுதிப்படுத்தும் வகையில் இந்த மேம்பாலம் கட்டப்பட்டு, நாட்டின் சிறந்த மேம்பாலங்களில் ஒன்றாக இன்று வரை உள்ளது.

இது ஆசியாவின் முதல் GRADE SEPARATOR மற்றும் இந்தியாவின் மூன்றாவது FLYOVER ஆகும். அந்நாளில் 66 இலட்சம் ரூபாய் செலவில் 21 மாதங்களில் கட்டப்பட்ட இந்த மேம்பாலம் 01.07.1973 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

• தேசிய நெடுஞ்சாலைகளில் பாலங்கள்

1946-ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்த தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1,637 கிலோமீட்டர். 1991-ஆம் ஆண்டில் 2002 கி.மீ. 1996-ஆம் ஆண்டிலும் 2002 கிலோ மீட்டர் மட்டுமே. ஆனால், கலைஞர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, 2000-மாவது ஆண்டில் மொத்த தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3,864 கிலோமீட்டர்களாக அதிகரித்தது.

தேசிய நெடுஞ்சாலைகளில் அமைத்த இன்றியமையாத பாலங்கள்:

வ.எண்	ஆண்டு	திட்டவிவரங்கள்
1	1969	திண்டிவனம் அருகே சங்கராபரணி ஆற்றில் 220 மீட்டர் நீளத்திற்குப் பெரிய பாலம்.
2	1971	மதுரை - திண்டுக்கல் புறவழிச் சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம்.
3		மதுரை ஆண்டாள்புரம் அருகே முத்துராமலிங்கத் தேவர் மேம்பாலம்.
4		மதுரை கல்லூரி அருகே மேயர் முத்து மேம்பாலம்.
5	1972	காரனோடை அருகில் குசத்தலை ஆற்றில் 400 மீட்டர் பாலம்.
6		தருமபுரி - திருப்பத்தூர் சாலையில் தென்பெண்ணை ஆற்றில் இருமாத்தூர் அருகே பாலம்.
7		திருச்சிக் கரையாற்றில் 113 மீட்டர் பாலம்.
8		மதுரை - அருப்புக்கோட்டை சாலையில் பாலம்.
9	1973	சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள அண்ணா மேம்பாலம்.
10	1974	கும்மிடிப்பூண்டி அருகே ஆரணியாற்றில் 123 மீட்டர் பாலம் மற்றும் சென்னை ஆர்.கே.மடம் சாலையில் பாலம்.
11	1974	உளுந்தூர்பேட்டை அருகில் கடிலம் ஆற்றில் 321 மீட்டர் பாலம்.
12		சென்னை அடையாற்றில் திரு.வி.க. பாலம்.
13		திருப்பூர் நகரில் பாலம்.
14		திண்டுக்கல் அருகில், சென்னை திருச்சி திண்டுக்கல் - தேசிய நெடுஞ்சாலையில் சாதனையாற்றின் குறுக்கே 72 மீட்டர் நீளத்திற்குப் பாலம்.
15		திண்டுக்கல் வட்டாணம் சாலையில் பாலம்.
16		விருதுநகர் அருகே கவுசிக ஆற்றின் குறுக்கே 101 மீட்டர் நீளத்திற்குப் பாலம்.
17		இராமேஸ்வரத்தில் ஆசியாவிலேயே பெரிய பாம்பன் பாலம் (பணி துவக்கம்).

18	1975	மணப்பாறை அருகே - சித்தனாதன் ஆற்றின் குறுக்கே 132 மீட்டர் பாலம்.
19		திருச்சி சமயபுரம் அருகே - உப்பாற்றில் 105 மீட்டர் பாலம்.
20		மார்த்தாண்டம் பனிச்சம்மோடு சாலையில் குழித்துறை ஆற்றில் பாலம்.
21	1989	மாமண்டூர் அருகில் தாக்குபேட்டையில் என்.எச்.45 தேசிய நெடுஞ்சாலையில் 90 மீட்டர் பாலம்.
22		அதே மாமண்டூர் அருகில் கிள்ளியாற்றில் 175 மீட்டர் பாலம்.
23		செங்கல்பட்டு அருகில் பாலாற்றின் குறுக்கே 686 மீட்டர்பாலம்.

4. கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட நிருவாக சீர்திருத்தங்கள்

- 1977-ம் ஆண்டுக்குப் பின் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்படாததால் நெடுஞ்சாலைகள் சரிவரப் பராமரிக்கப்படவில்லை. இக்குறையைப் போக்கிட 1998-1999-ல் 10,000 சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
- 2010 ஆம் ஆண்டு துறை மறுசீரமைப்பு: TNRSP ஆல் நிறுவன மேம்பாட்டு ஆய்வின் (IDS) அடிப்படையில் முதன்மை இயக்குனர் பதவி உருவாக்கப்பட்டது.
- 2010 ஆம் ஆண்டு துறையின் நிருவாக சீரமைப்பின்படி மூன்று அடுக்கு தரக் கட்டுப்பாட்டு அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்துறையின் 25வது ஆண்டு (1972) வெள்ளி விழாவின் போது முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தார். 50வது ஆண்டு பொன்விழா (1996) போதும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்து சிறப்பித்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுப் பொன்விழா நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூணை 05.08.1997 அன்று திறந்து வைத்தார்கள்



நெடுஞ்சாலைத்துறையின் 25வது ஆண்டு (1972) வெள்ளி விழாவின் போது முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தார். 50வது ஆண்டு பொன் விழாவின் (1996) போதும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்து சிறப்பித்தார்.

கலைஞர் காலத் தொழிற்புரட்சி


தமிழகத்தில் ஒரு கணினிப் புரட்சி - டைடல் பூங்கா, சென்னை (2000)

கலைஞர் ஆட்சிக் காலம் தொழில் வளர்ச்சியின் பொற்காலம்

● 535 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்கள் கலைஞர் அரசின் காலத்தில்தான் நிறைவேற்றப்பட்டன.

● தமிழகத்தில் 1975 அளவில் மொத்தம் இருந்த கிராமங்கள், சிற்றூர்கள் - 62,487. 31.3.1967 வரை மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள் சிற்றூர்கள்- 20,250 - 1.12.75 வரை 1967 லிருந்து 1975 வரை எட்டாண்டுகளில் மட்டும் மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள் - 41,087; 31.12.75 இல் மொத்தம் மின்வசதி அளிக்கப்பட்டவை - 61,337

● புதிய துணை மின் திட்டங்கள் மின் விநியோகத்தைச் சீராகவும் செம்மையாகவும் வழங்கிட உதவும் வகையில் ஆண்டுக்கு 60 துணை மின் நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட வேண்டும் என்று

முடிவு செய்து 1996-2001 ஐந்து ஆண்டுகளில் 233 துணை மின் நிலையங்கள் 3245 எம்.வி.ஏ திறனில் ரூபாய் 1720 கோடி செலவில் கலைஞர் அரசினால் நிறுவப்பட்டன.

- இன்று சேலத்தில் இரும்பு ஆலை அமைந்துள்ளது என்றால் அது கலைஞர் அவர்களின் வாதாடிப் போராடி உரிமைகளைப் பெறும் திறனுக்குக் கிடைத்த பரிசாகும்.

- சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் கம்பெனி

- தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)

முதலமைச்சர் கலைஞர் மிகுந்த தொலைநோக்கு உணர்வுடன் 1971, சனவரித் திங்களில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமான பொது நிறுவனமாக 6 கோடி ரூபாய் மூலதனத்துடன் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) என்பதை உருவாக்கினார். இந்நிறுவனம், தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் தொடங்கப்படவும், முன்னேறுவதற்கும், விரிவடைவதற்கும் தமிழகத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளை விரைந்து தொழில்மய மாக்குவதற்குமான முக்கிய குறிக்கோளுக்காகத் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் ஒருங்கமைந்த முன்னேற்றத் திட்டத்துடன் பணிகளைத் தொடங்கியது. 1971 முதல் 1976 வரை இந்நிறுவனம் செய்யாறு, ஓசூர் முதலிய இடங்களில் பிரம்மாண்டமானத் தொழில் வளாகங்களை, பெரும்பாலும் பின்தங்கிய பகுதிகளில் உருவாக்கி, ஏறத்தாழ 46 ஆயிரம் பேருக்குமேல் நேரடி வேலை வாய்ப்புகளை நல்கியது.

சிப்காட் மின்னணுதொழில் வளாகம், கடலூர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 28.09.1989 அன்று கடலூர் சிப்காட் 2-வது பகுதியில் அமைக்கப்பட இருக்கும் மின் அணு தொழில் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

சிப்காட் மின்னணுதொழில் வளாகம், ஓசூர்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 25.09.1990 அன்று ஓசூர் சிப்காட் 2-வது பகுதியில், மின் அணு தொழில் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ரெனால்ட் - நிசான் மோட்டார் வாகன தொழிற்சாலை 2010 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது



- தமிழ்நாடு உப்பு நிறுவனம்
- தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்
- தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம்
- இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்கா விரிவாக்கம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் ஏற்கனவே ஏறத்தாழ 1,850 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கிவரும் இருங்காட்டுக்கோட்டை தொற்பூங்கா, அரசு 3.11.2006இல் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியின்படி, இதனருகில் உள்ள பிள்ளைப்பாக்கம், இரும்பேடு, வெங்காடு, நாவலூர் கிராமங்களில் அடங்கிய ஏறத்தாழ 1,139 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

- **சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்**

அந்நிய நேரடி முதலீட்டோடு ஏற்றுமதியையும் ஊக்குவித்து அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேலும் பெருக்கிட சிப்காட் நிறுவனம் அதன் தொழில் வளாகங்களில் குறிப்பிட்ட துறை சார்ந்த ஏழு சிறப்புப் பொருளாதார மண்டலங்களையும் உருவாக்கியது.

1) 570.91 ஏக்கர் பரப்பில் திருப்பெரும்புதூரில் உயர் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம்.

2) 347.66 ஏக்கர் பரப்பில் ஒரகடத்தில் உயர் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம்.

3) 263.19 ஏக்கர் பரப்பில் பெருந்துறையில் பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம்.

4) 255 ஏக்கர் பரப்பில் கங்கைகொண்டானில் போக்குவரத்து பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம்.

5) 153.68 ஏக்கர் பரப்பில் இருங்காட்டுக்கோட்டையில் காலணி மற்றும் தோல் பொருட்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம்.

6) 260 ஏக்கர் பரப்பில் இராணிப்பேட்டையில் பொறியியல் துறைக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம்.

7) 379.96 ஏக்கர் பரப்பில் பர்கூரில் கிரானைட் தொற்சாலைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம்.

2011 பிப்ரவரி வரை, இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஏறத்தாழ 956.86 ஏக்கர் நிலம் 49 நிறுவனங்களுக்கு ஏறத்தாழ ரூ.17,000 கோடி முதலீட்டில் தொழில் தொடங்க ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றின் வாயிலாக கலைஞர் அரசு 1.77 இலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக வழி வகுத்தது.

சிப்காட் நிறுவனத்தின் சிறப்பான பணிகளைப் பாராட்டும் வகையில் அதன் திருப்பெரும்புதூரில் உயர் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு 2008ஆம் ஆண்டிற்கான ‘‘சிறந்த வளர்ச்சியாளர் விருது’’ வழங்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஹுண்டாய் மோட்டார் வாகன தொழிற்சாலை பாகம்-2 2008ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது



1969 முதல் 1976 வரை கலைஞர் அரசு உருவாக்கிய புதிய தொழில்கள்

1) தூத்துக்குடியில் உரம் தயாரிக்கும் ஸ்பிக் தொழிற்சாலை.

2) "சோடா ஆஷ்" அமோனியம் குளோரைடு தயாரிக்கும் தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் பிராசஸ் லிமிடெட் தொழிற்சாலை.

3) கரைக்குடியில் சோடியம் ஹைட்ரோசல்பேட் தயாரிக்கும் தமிழ்நாடு கெமிக்கல்ஸ் பிராசஸ் லிமிடெட் தொழிற்சாலை.

4) இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் குரோமியம் சல்பேட், சோடியம் டெக்ரோமேட், சோடியம் சல்பேட் ஆகிய பொருட்களைத் தயாரிக்கும் தமிழ்நாடு குரோமேட் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

5) மதுரை மாவட்டம், நரசிங்கம்பட்டியில் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும் பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

6) இராமநாதபுரம் மாவட்டம், மணலூரில் அலுமினிய புளோரைடு தயாரிக்கும் தமிழ்நாடு புளோரின் அண்டு அலைட் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

7) பல்லாவரத்தில் மருந்துகள் தயாரிக்கும் தமிழ்நாடு தாதா பார்மசூடிக்கல்ஸ் தொழிற்சாலை.

8) அடையாறில் டெலிவிஷன் பெட்டிகள் தயாரிக்கும் டைனாவிஷன் லிமிடெட் தொழிற்சாலை.

9) கோவளம் பகுதியில் தொழில் உப்பு தயாரிக்கும் மாத்திக் கிறிஸ்டல் சால்ட் தொழிற்சாலை.

10) ஓசூருக்கு அருகில் ஆசியா புகையிலை நிறுவனம்.

11) மண்டலம் பகுதியில் கடல் சார்ந்த பெரும் இழுபடகு கட்டும் தொழிற்சாலை.

12) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரீஸ் லிமிடெட் தொழிற்சாலை.

13) ஓசூருக்கு அருகில் ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

14) அரக்கோணத்தில் வார்ப்படம் கொல்லுலை தொழிற்சாலை.

15) சென்னையில் இண்டார் காண்டினென்டல் லெதர் லிமிடெட் தொழிற்சாலை.

16) காரைக்குடியில் தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரி தொழிற்சாலை.

17) அடையாறு இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ் வளாகத்தில் தொழிற்சாலை.

18) அதே வளாகத்தில் படச்சுருள் தயாரிக்கும் ஸ்டைரோ பிலிம்ஸ் லிமிடெட்.

19) ஓசூருக்கு அருகில் தமிழ்நாடு இண்டர்நேஷனல் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஃபோர்டு மோட்டார் வாகன விரிவாக்கத் தொழிற்சாலை 2010 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது



20) சோழவரம் ஒன்றியம் தச்சூரில் சதர்ன் போராக்ஸ் லிமிடெட்.

21) சேலத்தில் இரும்பு ஆலை.

22) ஆலங்குளத்தில் சிமெண்ட் ஆலை.

23) இராமநாதபுரத்தில் டயர் உற்பத்தித் தொழிற்சாலை.

– எனப் பல்வேறு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன, அன்றைய கலைஞர் அரசு தமிழகத்தில் புதிய தொழில்கள் தொடங்குவதை ஊக்கப்படுத்துவதற்காக தொழில் முனைவோர் கடன் வசதிகளைத் தாராளமாகப் பெறவும் அவர்களுக்கு வரிவிலக்கு அளித்தல், விற்பனை வரி வசூலைத் தள்ளி வைத்தல், மின் கட்டணச் சலுகை அளித்தல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கியதன் காரணமாக இத்தகைய தொழிற்சாலைகள் எல்லாம் தமிழகத்தில் தோன்றின.

ஆஸ்திரேலிய நாட்டுச் சட்டமன்ற உறுப்பினரின் பாராட்டு

1975 ஆம் ஆண்டில் மேற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து திரு.வில்லியம் வித்தர்ஸ் என்னும் சட்டமன்ற உறுப்பினர் அப்பொழுது தமிழகத்திற்கு வந்து கலைஞர் அவர்கள் தமிழகத் தொழில் வளர்ச்சிக்கு அளித்துவரும் ஊக்கம், அதன் காரணமாகப் பெருகி வரும் தொழில்கள் ஆகியவற்றைக் கண்டு வியந்து தம் நாடு திரும்பிய பின் ஆஸ்திரேலிய சட்டமன்றத்தில் உரையாற்றியபொழுது,

‘‘தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்கான பல கவர்ச்சிகரமான கருத்துகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கிடப் பெருமுயற்சி செய்வதோடு பல்வேறு சலுகைகளையும் அளிக்கிறது. அச்சலுகைகளில் தமிழ்நாட்டில் தொடங்கப்படும் எந்தவொரு வெளிநாட்டுத் தொழிற்சாலைக்கும் இரண்டாண்டு காலத்திற்கு வரி கிடையாது என்பதும், புதிய தொழிற்சாலைகளின் வளர்ச்சிக் காலத்தில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படும் என்பதும் அடங்கியுள்ளன.

இவற்றைச்சிறந்தபணிகள்என்றுநான்கருதுகின்றேன்.நாம்நமதுமேற்குஆஸ்திரேலியாவினுடைய தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடும் பொழுது அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்‘‘

- சென்னை ‘‘இந்தியாவின் டெட்ராய்டு‘‘ என்று சொல்லக்கூடிய அளவிற்குப் பிரம்மாண்டமான கார்த் தொழிற்சாலைகளும், வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் தொடங்கப்பட்டது.
- முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில், தமிழக அரசுக்கும், ஹாங்காங்கில் உள்ள காலணிகள் தயாரிக்கும் குரோத் லங்க நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- முதலமைச்சர் கலைஞர் அவர்களை 29.09.2006 ஜப்பான் வணிகம் மற்றும் தொழில் கழகத்தின் தலைவர் நோபு யமாகுச்சி, தமிழகத் தொழில் வளர்ச்சி தொடர்பாகச் சந்தித்துப் பேசினார்.

- ‘‘வாகன உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு, வாகன உற்பத்தியில் சிறந்து விளங்கும் உலகின் முதன்மையான 10 மையங்களில் ஒன்றாக விளங்குகிறது. இது கலைஞர் அறிவித்த ஒருங்கிணைந்த மிகப்பெரிய வாகனத் திட்டக் கொள்கையின் (Ultra Mega Integrated Automobile Projects Policy) விளைவாகவே சாத்தியமாயிற்று.
- பொறியியல் வல்லாரும் மருத்துவ நிபுணர்களும் கல்வியாளர்களும்தான் ஒரு நாட்டின் உண்மையான செல்வங்கள்! – பேரறிஞர் அண்ணா.
- சிப்காட் நிறுவனம், 1971 முதல் 2010 வரை 19 தொழில் வளாகங்கள் மற்றும் பூங்காக்களை தமிழகத்தின் 12 மாவட்டங்களில் உருவாக்கி பராமரித்து வருகிறது. அவற்றில் ஏறத்தாழ 17 ஆயிரத்து 769 ஏக்கர் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் 2,001 தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு, ஏறத்தாழ 4 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன.
- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

  தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 2006-2011 ஐந்தாண்டுகளில் பல்வகைத் தொழில்களின் வளர்ச்சிக்காக 2010 அக்டோபர் முடிய 7 ஆயிரத்து 707 தொழில் நிறுவனங்களுக்கு 2 ஆயிரத்து 49 கோடியே 50 இலட்ச ரூபாய் கடனுதவி வழங்கி ஏறத்தாழ 70 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியது.
- அமெரிக்காவைச் சேர்ந்த கேடர்பில்லர் இந்தியா நிறுவனத்தின் புதிய விரிவாக்கத் திட்டங்கள் கனரகப் பொறியியல் இயந்திரங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை.
- டொஷியா ஜே.எஸ்.டபிள்யூ டர்பைன் மற்றும் ஜெனரேட்டர் பிரைவேட் லிமிடெட்.
- அமெரிக்க நாட்டின் ஃபோர்டு கார் தொழிற்சாலை.
- கலைஞர் அவர்களால், திறக்கப்பட்ட தொழிற்சாலைகளின் விவரம்

  1. மோட்டோரோலா தொழிற்சாலை 27.04.2008 அன்றும்,
  2. அப்போலோ ரேடியல் டயர்ஸ் தொழிற்சாலை 10.02.2011
  3. சாம்சங் இந்தியா 13.11.2008 அன்றும்,
  4. சான்மினா (எஸ்.சி.ஐ.) கார்ப்பரேஷன் 2007 டிசம்பரிலும்
  5. ஹூண்டாய் மோட்டார் தொழிற்சாலையின் இரண்டாம் பிரிவு 02.02.2008 அன்றும்,
  6. டெல் கம்ப்யூட்டர்ஸ் 22.04.2008 அன்றும்,
  7. குரோத்லிங் தொழிற்சாலை 16.07.2008 அன்றும்,

8. நோக்கியா சீமென்ஸ் தொழிற்சாலை நிறுவனம் 16.10.2008 அன்றும்,
9. ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத் தொழிற்சாலை 24.01.2010 அன்றும்,
10. போர்டு விரிவாக்கத் தொழிற்சாலை 05.02.2010 அன்றும்,
11. நிசான் இந்தியா கார் தொழிற்சாலை 17.03.2010 அன்றும்,
12. ஏ.டி.சி. டயர்ஸ் தொழிற்சாலை என மொத்தம் 12 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன.

- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC).
- 2006 – 2011 கலைஞர் ஆட்சி, தொழில் மயமாக்கலின் பொற்காலம்.
- கலைஞர் புகழ்பாடும் தகவல் தொழில்நுட்பம்.
- முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தகவல் தொழிநுட்பம் குறித்துத் தனிக்கவனம் செலுத்தி, அதனை வளர்த்து தமிழகத்திற்கு வளம் பெருக்கும் நோக்கில் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் தகவல் தொழில் நுட்பவியல் துறை என, தனியே ஒரு துறையை, ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையின் கீழ் 05.10.1998 அன்று உருவாக்கினார்.
- முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் 28.04.2007 அன்று கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் பகுதிகளில் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் இரண்டு வளர் நகரங்கள் உருவாக்குதல் தொடர்பாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கும், ஐக்கிய அரபு எமிரேட்டை சேர்ந்த ராஸ் அல் காய்மா நிறுவனத்திற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- முதலமைச்சர் கலைஞர் 08.04.2008 அன்று தரமணியில், இந்திய மென்பொருள் தொழில்நுட்பவியல் பூங்காவின் புதிய கட்டடம் மற்றும் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.
- சென்னை மாநகராட்சி இணையதளம் மேம்படுத்தப்பட்டு பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள், சொத்து வரியை இணையதளத்தின் மூலம் செலுத்துவதற்கான வசதி போன்றவைகள் பொதுமக்கள் பயனடையும் வகையில் அமைக்கப்பட்டன.
- 2010 ஜூன் மாதம் 23 முதல் 27 வரை கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டோடு இணைந்து 9வது தமிழ் இணைய மாநாடு நடைபெற்றது.
- தமிழ்நாட்டில் முதன்முறையாக திருமுல்லைவாயில், வாழவந்தான் கோட்டை, கப்பலூர், கருப்பூர், திருமுடிவாக்கம் ஆகிய இடங்களில் 5 மகளீர் தொழிற் பூங்காக்கள் 375,44 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பெற்று, 1,194 தொழில் மனைகள் மகளீர் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் 4,950 பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர்.

அப்போலோ டயர்ஸ் நிறுவனத்திடம் புரிந்துணர்வு ஒப்பந்தம்





தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் 07.08.2006 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழக அரசு மற்றும் அப்போலோ டயர்ஸ் நிறுவனத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் 18.08.2006 அன்று சென்னைக்கு அருகேயுள்ள திருப்பெரும்புதூரில் ரூ.1,000 கோடி முதலீட்டில் செமிகண்டக்டர்ஸ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவுவதற்காக டெஸ்சால்வ் (TESSOLVE) என்ற அமெரிக்க நிறுவனத்துடன் தமிழக அரசு சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

டெல் இந்தியா





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் 05.12.2006 அன்று டெல் இந்தியா உற்பத்தித் திட்டத்தின் ''ஆலை மாதிரி மற்றும் டெல் மைல்கல்லை'' வெளியிட்டு சென்னையில் உரை நிகழ்த்தினார்.

கலைஞர் ஆட்சியில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் 07.06.2006 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழக அரசு மற்றும் மோட்டோரோலா நிறுவனத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இல்லத்தில் தென் ஆஸ்திரேலியாவின் மாண்புமிகு பிரதமருடனான சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடம் புரிந்துணர்வு ஒப்பந்தம்





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் 10.11.2006 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழக அரசு மற்றும் சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

கலைஞர் கால முக்கிய நிகழ்வுகள்

குடிசைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்க முத்தமிழறிஞர் கலைஞரின் முயற்சி



குடிசைகளே இல்லாத செங்கோல்
விரைவில் நனவாகும் கனவு!



கூரைக் குடிசைகளை
மாடி வீடுகளாக்க
குடிசைமாற்று வாரியம்

இந்தியாவிலேயே முதன்முதலாக குடிசைமாற்று வாரியம் அமைத்த போது வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் அவர்களுடன்.





தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் மூலம் செங்கையில் நுங்கம்பாக்கம் நார் அரசினர் கோட்டத்தில் 2.39 கோடி ரூபாய் செலவில் அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டத்தில் கீழ் கட்டப்பட்டுள்ள 20 இருப்பு வசதி கொண்ட வீடுகளை முதல்வர் கலைஞர் அவர்கள் இன்று (31.1.2000) திறந்து வைத்தார்கள். உடன் வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. ஆ. பரிமளம் உள்ளார்.



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 11.01.1997 அன்று சேலத்தில் புதிய வழித்தடங்களுக்காக பேருந்துகளை தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 12.01.1987 அன்று கோவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வெள்ளி விழா நிகழ்ச்சியில் பல்வேறு கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி சேரன், ஜீவா மற்றும் மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகங்களின் 40 புதிய பேருந்துகளை தொடக்கி வைத்து வெள்ளி விழா பேருரையாற்றினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.07.2010 அன்று திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர், காட்டுப்பள்ளியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், நீரேற்றும் நிலையங்கள், குடிநீர்க் குழாய் கட்டமைப்பு வசதிகளைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, அன்றைய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி. சாமி, சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.கே.எஸ். இளங்கோவன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.க. அஷோக் வர்தன் ஷெட்டி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சிவ்தாஸ் மீனா, சென்னை வாட்டர் டிசாலிநேசன் நிறுவனத்தின் இயக்குநர் திரு. எஸ்.இராமச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.



கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், மீஞ்சூர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.07.2010 அன்று திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர், காட்டுப்பள்ளியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம், நீரேற்றும் நிலையங்கள், குடிநீர்க் குழாய் கட்டமைப்பு வசதிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, அன்றைய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி, சென்னை மாநகர மேயர் திரு. மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.கே.எஸ்.இளங்கோவன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. க.அஷோக் வர்தன் ஷெட்டி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சிவ்தாஸ் மீனா, சென்னை வாட்டர் டிசாலிநேசன் நிறுவனத்தின் இயக்குநர் திரு. எஸ்.இராமச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 20.09.1989 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்கள். மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

கலைஞர் மாளிகை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22.07.2010 அன்று சென்னை, இராணி மேரிக் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள "கலைஞர் மாளிகையைத்" திறந்து வைத்தார். உடன் அன்றைய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன், மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திரு. க.கணேசன், கல்லூரி கல்வி இயக்ககத்தின் இயக்குநர் திரு. சு.ஜெயபாஸ்கரன் சார்லஸ், இராணி மேரிக் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திருமதி. கி.அம்புஜம், இராணி மேரிக் கல்லூரி முன்னாள் முதல்வர் திருமதி. யூஜீனி பின்டோ, கல்லூரி பேரவைத் தலைவி செல்வி ரா.ராஜேஸ்வரி ஆகியோர் உள்ளனர்.



23.06.2010, தமிழ்நாடு அரசு சார்பில் கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தொடக்க விழா நிகழ்ச்சியில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி பிரதிபா தேவிசிங் பாட்டீல் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நினைவுப் பரிசினை வழங்கினார்கள்.







தமிழ்நாடு சட்டப்பேரவையில் 12.05.2007 அன்று நடைபெற்ற 'சட்டப்பேரவையில் கலைஞர் - பொன்விழா' நிகழ்ச்சியில் பாராளுமன்ற சபாநாயகர் மாண்புமிகு சோம்நாத் சட்டர்ஜி அவர்கள் பங்கேற்று முதல்வர் அவர்களை வாழ்த்தி பேருரையாற்றி, பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசினை வழங்கினார்கள். உடன் தமிழ்நாடு சட்டப்பேரவைத்தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன் அவர்கள் உள்ளார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.08.2010 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒருவர் வீதம் 31 பயனாளிகளுக்கு ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் பணி ஆணைகளை வழங்கி, திட்டத்தை தொடங்கி வைத்தார்.

❖❖❖



நிறுவனங்களின் நாயகர் கலைஞர்





முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட முன்னோடி நிறுவனங்கள்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO)

செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்

நிறுவனங்களின் நாயகர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால், தமிழ்நாடு மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் நோக்கில், இந்தியாவிலேயே முதல் முறையாக 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ) உருவாக்கப்பட்டது.

மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள குறு, சிறு தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில் மனைகளை உள்ளடக்கிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவது தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பிரத்தியேக பணி ஆகும். தொழிற்பேட்டையின் விற்பனை பரப்பில் 30% இடமானது குறுந்தொழில் நிறுவனங்களுக்காக வகைப்பாடு செய்யப்படுகிறது. மேலும் ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோர்களுக்கு 30%, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு 10%, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் திருநங்கைகளுக்கு 20% மற்றும் நீட்ஸ் (NEEDS) திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிருக்கான பிரத்யேக 5 தொழிற்பேட்டைகள் 1,324 தொழில்மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் கத்திபாரா சந்திப்பு அருகே தரைதளம் மற்றும் முதல் தளத்தில் இயங்கி வந்த சிட்கோ நிறுவன தலைமை அலுவலகம், கத்திபாரா மேம்பாலம் அமைப்பதற்கு நில எடுப்பு செய்தபின், 2008ஆம்

ஆண்டு அப்போதைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் தற்போது இயங்கிவரும் சிட்கோ நிறுவன தலைமை அலுவலகமானது அடித்தளம், தரைதளம் மற்றும் 9 தளங்களுடன் ரூ.55.00 கோடி திட்ட மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டது.

சமத்துவம் மூலம் சமூக நீதி அடைய பாடுபட்ட விழா நாயகர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் இந்தியாவிற்கே முன் உதாரணமாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு சிட்கோ நிறுவனமானது பின் வரும் திட்டங்கள் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகிறது.

1. திட்டங்கள்

பொது உற்பத்திக்கான கட்டமைப்பு:

❖ 9 திட்டங்களுக்கு ரூ.36.98 கோடி திட்ட மதிப்பில் ரூ.20.42 கோடி மாநில அரசின் மானியத்தில் 4 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும், 5 திட்டங்கள் செயலாக்கத்திலும் உள்ளது.

தனியார் தொழிற்பேட்டைகள்:

❖ கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொசிமா (CO-SIEMA) மூலம் சொலவம்பாளையத்தில் 42.42 ஏக்கரில் ரூ.18.13 கோடி திட்ட மதிப்பிலும், கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையத்தில் 316.04 ஏக்கர் பரப்பில் ரூ.24.61 கோடி திட்ட மதிப்பிலும், கடலூர் மாவட்டம் மருதாடு கிராமத்தில் 11.57 ஏக்கரில் ரூ.4.40 கோடி திட்ட மதிப்பிலும் புதிய தனியார் தொழிற்பேட்டைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அடுக்குமாடிதொழில் வளாகம்:

❖ கிண்டி தொழிற்பேட்டையில் ரூ.94.67 கோடி மதிப்பில் 1,96,235 சதுர அடி பரப்பில் 152 தொழிற்கூட அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகமும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.63.95 கோடி மதிப்பில் 1,31,427 சதுர அடி பரப்பில் 112 தொழிற்கூட அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகமும், சேலம் மாவட்டத்திலுள்ள







கொலுசு உற்பத்தியாளர்களுக்கு சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியில் 1.20 ஏக்கரில் ரூ.24.55 கோடி திட்ட மதிப்பில் 100 அலகுகளை கொண்ட தொழில் வளாகமும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் கிண்டி, ஓசூர் மற்றும் மதுரை (கே.புதூர்) ஆகிய தொழிற்பேட்டைகளில் ரூ.223.88 கோடி திட்ட மதிப்பீட்டில் அடுக்குமாடி தொழில் வளாகங்கள் அமைக்க விரிவான திட்ட அறிக்கை அரசு ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலணையில் உள்ளது.







புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்:

❖ மூன்று மாவட்டங்களில் 264.33 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.153.22 கோடி மதிப்பில் புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் முடிவுற்று, மேற்கொண்டு ஏழு மாவட்டங்களில் 335.39 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.172.30 கோடி மதிப்பில் புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. மின் ஆளுமை

தமிழ்நாடு சிட்கோவின் ஒதுக்கீட்டாளர்கள் எளிய வழியில் திட்டங்கள் மற்றும் பணிகளை தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில், தனது வலைதள சேவையை (www.tansidco.tn.gov.in) வடிவமைத்து, இணைய வழி விண்ணப்பிக்கும் சேவையினை, தமிழ்நாடு ஒற்றைச் சாளர இணைய வசதியுடன் ஒன்றிணைத்து வழங்கி வருகிறது.

3. புதிய முயற்சிகள்

பெருங்குழுமங்கள்:

❖ தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் பெருங்குழுமம், துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம் அமைக்கப்பட்டு வருகிறது.

3.2 பணியாளர்கள் விடுதி:

❖ இயங்கி வரும் தொழிற்பேட்டைகளில் தொழிலாளர்களுக்கு தரமான மற்றும் குறைந்த



வாடகையில் தங்குமிட வசதியினை அமைத்துத் தருவதில் முதற்கட்டமாக அம்பத்தூர் மற்றும் குறிச்சி தொழிற்பேட்டையில் பணியாளர் தங்கும் விடுதி கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது

தொழிற்பேட்டை தொழில்மனைகளின் மனைமதிப்பு குறைத்தல்:

- தமிழ்நாடு சிட்கோ நிர்வகித்து வரும் 133 தொழிற்பேட்டைகளின் திருத்திய மனை மதிப்பீட்டு கொள்கை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையால் அரசாணை வெளியிடப்பட்டு மனைமதிப்பானது 5% முதல் 75% வரை குறைக்கப்பட்டுள்ளது.

இயங்கிவரும் தொழிற்பேட்டைகளில் ஒருமுறை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல்:

- தமிழ்நாடு சிட்கோ தனது நிதியினைப் பயன்படுத்தி மேம்பாட்டு பணிகள் அவசியம் தேவைப்படும் 53 தொழிற்பேட்டைகளில் ரூ.12.38 கோடி மதிப்பில் ஒரு முறை மேம்படுத்தும் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

குறுந்தொழில் குழும மேம்பாட்டு திட்டம்:

- திருநெல்வேலி மாவட்டத்தில் பாத்திரங்கள் செய்யும் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நரிகுறவர் செய்யும் செயற்கை நகைகள் குழுமம், கடலூர் மாவட்டத்தில் முந்திரி பதப்படுத்தும் குழுமம் மற்றும் மதுரை மாவட்டத்தில் பொம்மை செய்யும் குழுமம் உள்ளிட்ட 20 குறு நிறுவன குழுமங்கள் இந்தாண்டு பயன்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டு அதற்கென அரசாணை எண். 34, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையால் 26.05.2022ல் அறிக்கை வெளியிடப்பட்டது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை

சுய வேலைவாய்ப்பு திட்டங்கள்

❖ தமிழக அரசின் சிறப்புத் திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாடு (NEEDS) திட்டத்தின் கீழ், முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் உற்பத்தி அல்லது சேவை சார்ந்த தொழில் துவங்க, 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் 5 கோடி ரூபாய் வரையிலான திட்டங்களுக்கு, 25 விழுக்காடு மானியமும் அதிகபட்சமாக ரூ.75 இலட்சம் வரையிலும் மற்றும் பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கூடுதலாக 10 விழுக்காடு மானியமும் மேலும் 3 சதவிகிதம் பின்முனை வட்டி மானியமும் அளிக்கப்படுகிறது.

❖ அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் (AABCS) கீழ், பட்டியலினம் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்த தொழில் முனைவோர்கள் உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில் துவங்க, திட்ட மதிப்பீட்டில் 35 விழுக்காடு மானியமும் அதிகபட்சமாக ரூ.150 இலட்சமும் 6 சதவிகிதம் பின்முனை வட்டி மானியமும் அளிக்கப்படுகிறது.

❖ படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் வியாபாரம் சார்ந்த தொழில்களுக்கு ரூ.15.00 இலட்சம் வரையிலான திட்ட மதிப்பீட்டில் தொழில் துவங்கிட அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் மானியத்துடன் கூடிய வங்கிகடன் பெற பரிந்துரை செய்யப்படுகிறது.

❖ பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.50 இலட்சம் வரையிலும், சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.20 இலட்சம் வரையிலும் உள்ள திட்டங்களுக்கு அதிகபட்சம் 35 சதவிகிதம் வரை மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்கப்படுகிறது.

❖ உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள குறு நிறுவனங்களுக்கு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு ஒன்றிய அரசின் பிரதமரின் குறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தும் திட்டத்தின் கீழ், அதிகபட்சமாக ரூ.1.00 கோடி வரையிலான திட்ட மதிப்பீட்டில் தொழில் துவங்கிட 35 சதவிகிதம் மானியம் அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்கப்படுகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை-2021

மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கீழ்கண்ட மானியங்கள் வழங்கப்படுகின்றன.

1.முதலீட்டு மானியம்:

❖ தொழில் முனைவோர்கள் தமது சொந்த முதலீட்டின் மூலமோ அல்லது வங்கிக்கடன் பெற்றோ துவங்கும் நிறுவனங்களில், நிறுவப்படும் இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.150.00 இலட்சம் வரை முதலீட்டு மானியமாகவும், பெண்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் திருநங்கைகள் ஆகியோரால் துவங்கப்படும் நிறுவனங்களுக்கு 5 சதவிகிதம் கூடுதல் முதலீட்டு மானியம் அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் வரை வழங்கப்படும்.

2.ஊதியப்பட்டியல் மானியம்:

❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 20 ஊழியர்களுக்கு மேல் பணியமர்த்தப்பட்டிருப்பின் ஊழியர்களின் வருங்கால வைப்புநிதிக்கு நிறுவனத்தின் பங்களிப்புக்கு ஈடான தொகை ஆண்டொன்றுக்கு ஒரு ஊழியருக்கு அதிகபட்சமாக ரூ.24,000 வரை மூன்று ஆண்டுகளுக்கு ஊதியப்பட்டியல் மானியமாக வழங்கப்படும்.

3. குறைந்தழுத்த மின் மானியம்:

❖ குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு, உற்பத்தி துவங்கிய நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மின்சார கட்டணத்தில் 20 சதவிகிதம் குறைந்தழுத்த மின்மானியமாக வழங்கப்பட்டு வருகின்றது.

4. பின்முனை வட்டி மானியம்:

❖ குறு மற்றும் சிறு உற்பத்தி நிறுவனங்கள், தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதலுக்கு பெறப்பட்ட கடன்களுக்கான வட்டியில் 5 விழுக்காடும் மற்றும் கடன் உத்தரவாத நிதி ஆதாரத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்கான வட்டியில் 5 விழுக்காடும் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

5. ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம்:

❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கை மேற்கொண்ட செலவில் 75 விழுக்காடு அதிகபட்சம் ரூ.1.00 இலட்சம் வரையும், ஆற்றல் சேமிப்பிற்காக பெறப்படும் தொழில்நுட்பம், மற்றும் நிறுவப்படும் எந்திரங்களுக்கான மதிப்பில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.10.00 இலட்சம் வரையும் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

6. தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானியத்திட்டம்:

❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தங்கள் பொருள்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ்களை பெறுவதற்கு நிறுவனங்கள் செலுத்திய கட்டணத்தில் 100 விழுக்காடு, தேசிய தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் வரையிலும் மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.10.00 இலட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB)

சென்னை மாநகரில் ஓலை கூரைகள் வேயப்பட்ட மண்சுவர்களாலான சுமார் 100 முதல் 200 சதுர அடிகள் பரப்பளவில் மிகவும் நெருக்கமாக அமைக்கப்பட்ட குடிசை வீடுகளில் ஒரு வீட்டில் ஒன்றிற்கும் மேற்பட்ட குடும்பங்கள், தீ விபத்து, வெள்ளம், மழை போன்ற இயற்கையின் பேரிடர்களுக்குட்பட்டு மிகுந்த துயரங்களுடன் வாழ்ந்து வந்தனர். இவர்களின் துயரினை போக்க எவ்வித நடவடிக்கைகளும் நெடுங்காலமாக ஏதும் மேற்கொள்ளப்படாத நிலையில், இத்துயரினை கண்ணுற்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் உரிய திட்டமிடுதல் மற்றும் உறுதியான நடவடிக்கைகளால் இக்குடும்பங்களுக்கு வீட்டுவசதி அளித்து நல்ல வாழ்க்கை நிலையினை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் நாட்டில் முதன்முதலாகவும் இதர மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற உயரிய குறிக்கோளுடனும் செப்டம்பர் மாதம் 15ம் நாள் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது.

பின்னர் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971-ல் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் உரிய பிரிவுகளின் கீழ் குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள் நில உரிமைதாரர்கள் மற்றும் இதர பிரிவினரால் அகற்றப்படுவது முற்றிலுமாக தடுக்கப்பட்டது. இச்சட்டத்தின் வாயிலாக குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீட்டுவசதி மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகளை அமைக்க சட்டபூர்வமான அடித்தளம் அமைக்கப்பட்டது.

இவ்வாரியம் தொடங்கப்பட்ட பின்னர் குடிசைப்பகுதிகளில் சேறும் சகதிகளுக்கும் இடையே மின்சார வசதிகளின்றி, தீவிபத்து, மழை வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பல்நோக்கு அறை, உறங்கும் அறை, சமையலறை மற்றும் குளியலறை கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் சாலைகள், குடிநீர் வழங்கல் மற்றும் இதர வசதிகளுடன் திட்டப்பகுதிகள் அமைக்கப்பட்டு அவர்கள் வாழும் இடங்களிலேயே குடியமர்த்தப்பட்டு இக்குடிசைப்பகுதிகள் கோபுரங்களாக உயர்த்தப்பட்டன.

கடந்த 1971 ஆம் ஆண்டு சென்னை மாநகரில் சுமார் 30 சதவிகிதமாக இருந்த நகர குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களின் மக்கள்தொகை, தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பில் 16.58 சதவிகிதமாக குறைய 1971 ஆம் ஆண்டில் அடித்தளமிடப்பட்டது தான் காரணம் என்பதில் ஐயமில்லை. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் மு.கருணாநிதி







அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பணியாற்றிய காலத்தில் 55,671 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, ஏழை குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு விற்பனை பத்திரங்கள் 1996-1997 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் வசிப்பவர்கள் அவர்கள் விரும்பினால் அக்குடியிருப்புகள் எளிய முறையில் சொந்தமாக்கப்படும் என்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் தி ரு . மு . க ரு ண ா நி தி அ வ ர் க ள ா ல் அறிவிக்கப்பட்டது.

குடிசைப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்தினை தடுத்தல்

❖ நகரங்களின் குடிசைப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்களை தடுக்க தீப்பிடிக்காத வீடுகள் பெருமளவில் கட்டப்பட்டன.

திட்டப்பகுதிகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்துதல்

❖ அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப்பகுதிகளின் தோற்றப் பொலிவினை மேம்படுத்தவும், அப்பகுதிவாழ் மக்களின் வாழ்க்கையினை எ ளி த ா க் க வ ும் , இ க் கு டி யி ரு ப் பு த் திட்டப்பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாரிய திட்டப்பணிகளின் செயலாக்கம்

❖ தற்போது இவ்வாரியத்தின் திட்டப்பணிகள் அனைத்து மாநகரங்கள், நகரங்கள் மற்றும் பேரூராட்சிகளில் தற்பொழுது செயல்படுத்தப்படுகிறது.

1970 முதல் 2023 வரையிலான சாதனைகள்

❖ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 4.86 இலட்சத்திற்கும் அதிகமான அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் (மறுகட்டுமானம் உட்பட) சென்னை மற்றும் பிற நகரங்களில் கட்டப்பட்டுள்ளன. மேலும், சென்னை பெருநகர் வளாச்சித் திட்டம் (MUDP) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNUDP) 1.31 இலட்சம் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.



செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள்

❖ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீரகற்று மேம்பாடுகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகள் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்கள் வாழ்விடங்களில் கட்டப்பட்டு இவ்வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



❖ நீர் வழிகளின் கரைகள், சாலையின் ஓரங்கள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் இடங்களில் ஏழ்மை நிலையில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு சமுதாய மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த நகர மேம்பாட்டில் அடுக்குமாடி குடியிருப்புகள் மாற்றிடங்களில் வழங்கப்படுகின்றன.



❖ சிதிலமடைந்த அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகள் மற்றும் அதன் அருகில் குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள்,

மறுகட்டுமானத் திட்டங்களின் கீழ் கட்டப்படும் புதிய குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுகின்றனர். மேற்கூறப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் அடிப்படை மற்றும் சமூக வசதிகளுடன் ஒவ்வொன்றும் ரூ.15.00 இலட்சம் முதல் ரூ.17.00 இலட்சம் செலவில் கட்டப்படுகின்றன.

- நகர ஏழை குடும்பங்களின் விருப்பத்திற்கிணங்க, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்டங்களின் கீழ் உறைவிடத்திற்கான நிதியுதவி மற்றும் நில உரிமத்துடன் ''உள்ளது உள்ளபடி'' நிலையில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டன. தற்போது இம்மேம்படுத்தப்பட்ட மனைகளில் வாழும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றன.

- அடுக்குமாடிக் குடியிருப்புகளை பராமரிக்க குடியிருப்போர் நலச்சங்கங்களை உருவாக்க பயனாளிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

- நகர்ப்புர ஏழைகள், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் பொருளாதார நிலையில் தன்னிறைவு பெற, தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வேலை வாய்ப்பினை உறுதி செய்ய வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது நடைபெறும் திட்டங்கள்

அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

- இத்திட்டப்பணிகளின் ஒரு பகுதியாக, 1,45,153 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.17,236.26 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, அவற்றுள் 48,729 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன.
- 78,268 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன
- 18,156 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகள் 2023-24ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளன.
- இத்திட்டப்பணிகளுக்காக இதுவரை ரூ.9,257.13 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பயனாளிகள் தாமாக தனி வீடுகள் கட்டுதல்

- இத்திட்டத்தின் ஒருபகுதியாக, 4,10,518 தனி வீடுகள் ரூ.12,608.37 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

- அவற்றுள் 2,97,290 வீடுகள் முடிவுற்றுள்ளன.
- 98,745 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- 14,483 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.
- இத்திட்டப் பணிகளுக்காக ரூ.6,927.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நகர ஏழை மக்களுக்கான வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 2,745 அடுக்குமாடி குடியிருப்புகள் தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ரூ.419.35 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சென்னை மாநகரின் நீர்வழிகளை மறுசீரமைத்தல் நதிகளின் கரைகளில் வாழும் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள். அடையாறு மற்றும் கூவம் ஆற்றின் கரைகளில் வாழும் குடும்பங்கள், நீர்வளத் துறையால் கணக்கெடுக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற துறைகளின் ஒருங்கிணைப்புடன் சென்னை நகர நீர்வழிகள் மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, நீர்வளத் துறையின் கோரிக்கையின் அடிப்படையில் 18,099 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளன.

அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதிகளில் புனரமைப்பு பணிகள்

பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பொலிவினை மேம்படுத்த புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வ.எண்.	திட்டப்பகுதிகள்	குடியிருப்புகள்	திட்ட மதிப்பீடு (கோடியில்)	செலவினம் (கோடியில்)
1	பகுதி-1 -65	26,483	ரூ. 68.72	ரூ. 20.06
2	பகுதி-2 -14	4,756	ரூ. 13.85	பணிகள் தொடங்கப்பட உள்ளன.

நோக்கம்

2030ஆம் ஆண்டிற்கு முன்னர் "குடிசைப்பகுதிகளற்ற தமிழ்நாடு" என்ற நிலையினை அடைந்து "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற நோக்கினை அடைய, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)



இந்தியாவின் வளம் பொருந்திய மாநிலமாக திகழ்கிறது தமிழ்நாடு. கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், உட்கட்டமைப்பு, தகவல் தொடர்பு, தொழில்புரட்சி என பல தளங்களில் முத்திரைப் பதித்து இந்தியாவின் முன்னேற்றத்திலும் உலக அளவில் நிமிர்ந்து நிற்கவும் வேராக திகழ்கிறது தமிழ்நாடு.

தமிழ்நாட்டின் இந்த தன்னிகரில்லா வளர்ச்சிக்கு சிற்பியாக திகழ்ந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அறிஞர் அண்ணாவை தொடர்ந்து தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர், எல்லோரும் எல்லாமும் பெற எளியவர்கள் ஏற்றம் காண கல்வி மற்றும் ஏராளமான தொழில் வாய்ப்புகளை உருவாக்கினார்.

தொழில் வளர்ச்சியின் மூலமே மாநிலத்தின் வளர்ச்சியை கட்டமைக்க முடியும் என்பதை உணர்ந்த, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், மாநிலங்களின் மணிமகுடமாக தொலைநோக்குப்பார்வையுடன் தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சி திட்டங்களை வடிவமைத்து, இதன் முத்தாய்ப்பாக 1971ஆம் ஆண்டு சிப்காட் நிறுவனத்தை தொடங்கிவைத்தார்.

கிராமங்களில் வாழும் அடித்தட்டு மக்கள் உயர அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெற ஏதுவாக மாவட்டங்கள் தோறும் சிப்காட் வளாகங்கள் உருவாக பாதை அமைத்து தந்தார் டாக்டர் கலைஞர். அவர் தம் முன்னெடுப்பின் படி, சிப்காட் வளாகங்கள், 1973-ல் ராணிப்பேட்டை, 1974-ல் ஓசூர், 1989-ல் கடலூர், 1997-ல் திருப்பெரும்புதூர், 1997-ல் ஒரகடம், 1998-ல் இருங்காட்டுக்கோட்டை, 1998-ல் சிறுசேரி, 2008-ல் பிள்ளைப்பாக்கம், 2007-ல் செய்யாறு விரிவாக்கம், 2008-ல் தேர்வாய்க்கண்டிகை, 2010-ல் திண்டிவனம் என்று கலைஞர் தொடங்கி வைத்த சகாப்தம் இன்று மாபெரும் வளர்ச்சி அடைந்து, இன்று சிப்காட் 16 மாவட்டங்களில் 28 தொழில் வளாகங்கள், 6 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் என 38,538 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக வளர்ந்து நிற்கிறது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர் இட்ட சிப்காட் எனும் இந்த சிறுவிதை இன்று சுமார் 3,142 தொழில் நிறுவனங்களின் நம்பிக்கையை வென்று ரூ. 1.62 லட்சம் கோடிக்கும் மேல் முதலீடுகளை ஈர்த்து சுமார் 7.5 லட்சத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை வழங்கி ஆலமரமாக வளர்ந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல இந்தியாவிற்கே பெருமித அடையாளமாக திகழ்கிறது.

ஏற்றுமதியும் இறக்குமதியும் சரிவிகிதத்தில் நிகழும் பொருளாதாரமே நாட்டின் வளர்ச்சிக்கான பாதை என்பதை கணித்து உலகின் முன்னனி நிறுவனங்களான ஹுண்டாய், கேட்டர் பில்லர்,

















செயிண்ட் கோபின் போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்கமளித்த கலைஞர் அவர்கள் ஸ்பிக், அசோக் லேலாண்ட், டைட்டான் போன்ற இந்திய நிறுவனங்கள் உலகளாவிய அளவில் ஏற்றுமதி செய்ய அதற்கான உற்பத்தி வசதி வாய்ப்புகளையும் சிப்காட் வளாகங்கள் மூலம் உருவாக்கினார்.

தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சியை கணித்து, சர்வதேசத்தரத்துடன் கலைஞர் அவர்கள் உருவாக்கிய சிறுசேரி சிப்காட் தகவல் தொழில்நுட்ப பூங்கா இன்று பல அயல்நாட்டு நிறுவனங்களின் முதலீட்டுகளை ஈர்த்து லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

கலைஞர் அவர்களின் இந்த ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தமிழ்நாட்டின் முகங்களை சர்வதேச அரங்கில் தனித்துவமுடன் முன்னிறுத்தியுள்ளது. அவர்தம் வழியில் தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கலைஞரின் கனவுகளை மேலும் மேலும் மெருகேற்றி தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சியை, கட்டமைத்து வருகிறார். அவர்தம் சீரிய முயற்சியால் ஆட்சிப்பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் இந்திய தொழில்நுட்ப வளாகங்களில் தர வரிசையில் சிப்காட் முன்னணி வகிக்கிறது.

- ❖ தொழில் முதலீட்டாளர்களுக்கு இலகுவான வாய்ப்புகளை வழங்குவதில் முன்னிலை.

- தொழில்வளாகங்கள் வரிசையில் அதிக நிலப்பரப்பு வாய்ப்புகள் கொண்டுள்ளதில் முன்னிலை.
- பாதுகாப்பு மற்றும் சுற்றுசூழல் மேம்பாட்டில் முன்னிலை.
- உட்கட்டமைப்பு மற்றும் தொழிற்சாலைகள் கட்டமைப்பில் முன்னிலை.
- எளிய மனிதர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு முன் நிற்பதில் முன்னிலை.
- அதிக நாடுகளில் இருந்து அபரிதமான முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் முன்னிலை என சிப்காட் தனது பயணத்தில் பல மைல்கற்களை உருவாக்கி வருகிறது.







சமூக நீதி என்பது எல்லோருக்கும் எல்லாமும் சமமாக பெறுவதின் மூலமே மெய்ப்படும். கலைஞர் அவர்கள் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கிய சிப்காட் எனும் விதை தொழில்புரட்சியின் மூலம் இந்த சமூக நீதியை இந்தியாவின் அடையாளமாக தமிழ்நாட்டை முன்னிறுத்தியுள்ளது. அவர்தம் நூற்றாண்டில் அவர் ஏற்றிய விளக்கு மேலும் சுடரொளியாக எதிர்கால இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டி மேலும் மேலும் பிரகாசிக்கும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (TTDC)



தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 30.06.1971 அன்று தொடங்கி வைத்தார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடக்கத்தில் 5 சுற்றுலா விடுதிகள் மற்றும் 2 சுற்றுலா பேருந்துகளுடன் செயல்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விதையாக நட்டு வைத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இன்று ஆலமரமாக தழைத்து வளர்ந்து அன்னிய செலாவணி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் சுற்றுலாத்துறையில், ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவகங்கள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு குறைந்த செலவில் பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. தொடக்கத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாலாஜா சாலையில் புதிய கட்டடம் கட்டி 22.02.2001 அன்று திறந்து வைத்தார்கள்.

ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் அமுதகம் உணவகங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரில் 51 தங்கும் விடுதிகளை கொண்டுள்ளது.

அதில் மாமல்லபுரம், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, பிச்சாவரம், திருக்கடையூர், தஞ்சாவூர், உளுந்தூர்பேட்டை, திருச்சி, ஏற்காடு, கிருஷ்ணகிரி, ஒகேனக்கல், ஓசூர், கோயம்புத்தூர், குன்னூர், உதகமண்டலம் 1, உதகமண்டலம் 2, கொடைக்கானல், மதுரை –1, மதுரை – 2, ராமேஸ்வரம், திருச்செந்தூர், குற்றாலம்–1, குற்றாலம்– 2, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் 26 ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளை தானே இயக்கி வருகின்றது.





இதன் மூலமாக 188 குளிர்சாதன வசதி அற்ற, 492 குளிர்சாதன வசதி கொண்ட, மலைப்பகுதிகளில் 172 என மொத்தம் 852 அறைகளுடன் தங்கும் வசதி சேவையை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கி வருகின்றது. இந்த தங்கும் விடுதிகளில் 2 படுக்கைகள், 3 படுக்கைகள், 8 படுக்கைகள் வசதி கொண்ட அறைகள் (குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும்) உள்ளன. இந்த தங்கும் விடுதிகளுடன் இணைந்து செயல்பட்டு வரும் அமுதகம் என்ற பெயரிலான உணவகங்கள் மூலமாக விருந்தோம்பல் சேவையையும் சுற்றுலா பயணிகளுக்கு வழங்கி வருகின்றது.



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டண சலுகைகள் அளிக்கப்படுகின்றது. மேலும், திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மொத்தமாக அனைத்து அறைகளையும் பதிவு செய்பவர்களுக்கும்,

தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் தங்குபவர்கள், வெவ்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து 3 நாட்களாக தங்குபவர்களுக்கு பல வகையான கட்டண சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மூன்று ஆண்டுகளுக்கு பயன்படுத்தக்கூடிய ரூ.1,000/- மதிப்புள்ள தங்க அட்டை, 10 ஆண்டுகளுக்கு பயன்படுத்தக் கூடிய ரூ.5,000/- மதிப்புள்ள பிளாட்டினம் அட்டை ஆகியவை 2008 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தங்குவதற்கு 20 சதவீத கட்டண சலுகை அளிக்கப்படுகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் தங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கு உதவியாக தனது வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அனைத்து ஓட்டல்களில் ஒரு பின்னூட்ட செயல்முறை (feedback mechanism) அமைப்பை நிறுவியுள்ளது.

ஆலயம் தங்கும் விடுதிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இந்து சமய அறநிலையத்துறையுடன் இணைந்து காஞ்சிபுரம், திருவண்ணாமலை, ராமேஸ்வரம் ஆகிய இடங்களில் ஆலயம் என்ற பெயரிலான தங்கும் விடுதிகள் மூலமாக 317 அறைகளுடன் தங்கும் வசதி சேவையையும், இந்த தங்கும் விடுதிகளுடன் இணைந்து செயல்பட்டு வரும் அமுதகம் என்ற பெயரிலான உணவகங்கள் மூலமாக விருந்தோம்பல் சேவையையும் ஆன்மீக சுற்றுலா பயணிகளுக்கு வழங்கி வருகின்றது. ஆலயம் தங்கும் விடுதிகளில் 2 படுக்கைகள், 3 படுக்கைகள், 8 படுக்கைகள் வசதி கொண்ட அறைகள் உள்ளன.









புதுதில்லி, திருத்தணி, தீவுத்திடல் திறந்தவெளி திரையரங்கம், வண்டலூர் உயிரியல் பூங்கா, தேனாம்பேட்டை மருத்துவ சேவைகள் இயக்குநரகம் மற்றும் முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா ஆகிய படகு குழாம் வளாகங்கள் ஆகிய இடங்களில் அமுதகம் உணவகங்கள் சுற்றுலா பயணிகளுக்கு விருந்தோம்பல் சேவையை வழங்கி வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் பணிபுரியும் பணியாளர்களின் தொழில்நுட்ப அறிவு, செயல் மற்றும் மேலாண்மை திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

படகு குழாம்கள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் (பருவ காலங்களில் மட்டும்) மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் இயக்கி வருகிறது. படகு குழாம்களில் மிதிப்படகு, குழந்தைகளுக்கான மிதிப்படகு, ஓரிருக்கை படகு (Kayak), வாழைப்பழ வடிவிலான படகு, கேனோ படகு (Canoe Boat), துடுப்பு படகு, நீர்மிதிவண்டி (Water Cycle), அன்னப்பறவை வடிவிலான நவீன மிதிப்படகு, இயந்திர படகு, விசைப்படகு, மற்றும் அதிவேக ஜெட் ஸ்கி வாட்டர் ஸ்கூட்டர் (Jet Ski) என மொத்தம் 567 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

குயிக் பைட்ஸ் சிற்றுண்டியகங்கள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாத்தலங்களில், சுற்றுலா பயணிகளின் சிற்றுண்டி தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, குயிக் பைட்ஸ் என்ற சிற்றுண்டியகங்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம், வாலாங்குளம் ஏரி ஆகிய படகு குழாம்கள் மற்றும் கோவளம் நீலக்கொடி கடற்கரை, உதகை தாவரவியல் பூங்கா உள்ளிட்ட இடங்களில் இயக்கி வருகின்றது.







சுற்றுலா பேருந்துகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஒகேனக்கல், மைசூர்-பெங்களூர், குற்றாலம், நவக்கிரக கோவில்கள் தொகுப்பு மற்றும் மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா பயண திட்டங்களும், சென்னை-மாமல்லபுரம், காஞ்சிபுரம் - மாமல்லபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, ஸ்ரீபுரம் தங்க கோவில், புதுச்சேரி என ஒரு நாள் சுற்றுலா பயண திட்டங்களும். எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவா-மந்த்ராலயம் சுற்றுலா பயண திட்டங்களும், 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்திய சுற்றுலா பயண திட்டங்களும், யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டு சின்னங்களை பார்வையிடும் சுற்றுலா பயண திட்டம் என பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொதுமக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் கார்த்திகை மாதத்தில் அருள்மிகு முருகன் திருக்கோவில்கள் ஒரு நாள் சுற்றுலா, புரட்டாசி மாதத்தில் அருள்மிகு பெருமாள் திருக்கோவில்கள் ஒரு நாள் சுற்றுலா, ஆடி மாதத்தில் அருள்மிகு அம்மன் திருக்கோவில்கள் ஒரு நாள் சுற்றுலா, 2 நாட்கள் வேளாங்கண்ணி சுற்றுலா உள்ளிட்ட சிறப்பு சுற்றுலா பயணத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒரு நாளுக்கு மேற்பட்ட சுற்றுலா பயண திட்டங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இயங்கி வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தங்குவதற்கான அறை வசதி, உணவு வழங்குதல் ஆகியவற்றுடன் பயண திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலா பயண திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர்சாதன வசதியுடன் கூடிய வால்வோ சொகுசு பேருந்துகள், உயர்தர சொகுசு பேருந்துகள், சாதாரண சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிறிய ரக சொகுசு பேருந்துகள் என மொத்தம் 14 சொகுசு பேருந்துகளை கொண்டுள்ளது. இந்த பேருந்துகளை பராமரிப்பதற்காக சொந்தமாக வாகன பணிமனையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிருவகித்து வருகின்றது.

சுற்றுலா உதவி மையம்

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல்வேறு சுற்றுலாக்கள் குறித்த தகவல்கள், முன்பதிவு ஆகியவற்றை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கவும் மற்றும் சுற்றுலாவின்போது ஏற்படும் குறைகளை களையவும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் (24×7) செயல்படும் சுற்றுலா உதவி மையம் (Tourism Help Desk) மற்றும் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது. TTDC ஆன்லைன் என்ற இணையதள பக்கத்தின் மூலம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் அறைகளை பதிவு செய்யும் வசதியும், சுற்றுலா பயணம் மேற்கொள்ள இருக்கை முன்பதிவு செய்யும் வசதியும் செய்யப்பட்டு, சுற்றுலா பயணிகளால் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் தங்கும் விடுதிகளில் அறைகளை பதிவு செய்யும் சேவையில் முன்னணி நிறுவனங்களான Makemytrip, Goibibo, Booking.com, etc., மூலமாக ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் அறைகளை பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டு, இந்தியா மட்டுமல்லாது உலகமெங்கும் உள்ள



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (25.12.2009) சுற்றுலாத்துறையின் மூலம் மாமல்லபுரத்தில் நடைபெற்ற விழாவில் செம்மொழி சிற்பப் பூங்காவினை திறந்து வைத்தார்கள். உடன் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதியத்துறை அமைச்சர் திரு. எஸ்.ஜெகத்ரட்சகன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.நா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை செயலாளர் திரு.வெ.இறையன்பு, இயக்குநர் திரு. ஆ.சி.மோகன்தாஸ் ஆகியோர் உள்ளனர்.

சுற்றுலா பயணிகளால் குறைந்த செலவில் சிறப்பான அறைகளை தேர்வு செய்யும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சி பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுத்திடல் பொருட்காட்சி மைதானத்தில் 1974 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை 70 நாட்களுக்கு நடத்தி வருகிறது. மேலும், சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சி, வெளிநாடுகள் மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கைவினை கலைஞர்கள், நெசவாளர்கள் பங்கு பெறும் சென்னை திருவிழா, தீபாவளி பட்டாசு சந்தை உள்பட பல்வேறு தனியார் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு, பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் அதிக அளவில் வருகை தரும் இடமாக திகழ்கிறது.

யூடியூப், முகநூல், எக்ஸ், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதள பக்கங்களின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து வெளிநாடுகளில் உள்ள சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (25.12.2009) சுற்றுலாத்துறையின் மூலம் மாமல்லபுரத்தில் நடைபெற்ற விழாவில் செம்மொழி சிற்பப் பூங்காவினை திறந்து வைத்தார்கள். உடன் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என்.சுரேஷ்ராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை செயலாளர் திரு.வெ.இறையன்பு, இயக்குநர்

மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகாலில் ஒலி ஒளிக்காட்சி சுற்றுலா பயணிகளின் மனதை கவரும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்மொழியின் சிறப்பையும், தமிழர்களின் அறநெறி வாழ்வியல் சிறப்பையும் உலகமெங்கும் கொண்டு செல்லும் வகையில் கன்னியாகுமரியில் அமைக்கப்பட்ட 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் அவர்களின் சிலையின் பராமரிப்பு பணிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சராக 25.12.2009 அன்று மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை விடுதி வளாகத்தில் செம்மொழிச் சிற்ப பூங்காவினை திறந்து வைத்தார்கள். முத்தமிழறிஞர் அவர்கள் தோற்றுவித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகள் அவரது கனவான, தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி மாநிலமாக உருவாக்கி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் புயல் வேகத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அமுதகம் என்ற பெயர் சூட்டப்பட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களின் விருப்பமான உணவகங்களாக திகழ்கின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் இளைய தலைமுறையினரை கவரும் வகையில் புதிய படகு குழாம்கள், சாகச விளையாட்டு அமைப்புகளை உருவாக்கும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் முதல் முறையாக முட்டுக்காட்டில் 125 அடி நீளம், 25 அடி அகலத்தில் பிரம்மாண்டமான இரண்டு அடுக்கு மிதக்கும் உணவக கப்பல் (Floating Restaurant) இயக்கும் பணியினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் நிறுவனத்துடன் இணைந்து அரசு, தனியார் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் (PPP) செயல்படுத்த உள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள மரகதப் பூங்காவில் சுற்றுலா பயணிகளின் பொழுதுபோக்கிற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் நிறுவனத்துடன் இணைந்து அரசு, தனியார் பொது பங்களிப்பு திட்டத்தின் கீழ் (PPP) ஒளிரும் பூங்கா அமைத்து வருகின்றது.

கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை சுற்றுலாப் பயணிகள் இரவிலும் கண்டு மகிழும் வகையில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான லட்சியத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது சிறப்பான பங்களிப்பை அளிக்கும் பணிகளில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(மதுரை)லிட், சென்னை

தமிழக அரசு 1975ம்ஆண்டு டாக்டர் கலைஞர் முதல்வராக இருந்த போது சென்னையை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களை இணைக்கும் பொருட்டு தொலைதூர பயணத்திற்காக ஓர் போக்குவரத்துக் கழகம் நிறுவ முடிவு செய்து, வேறெந்த போக்குவரத்துக் கழகத்திலும் இல்லாதவாறு தொலைதூர இயக்கத்திற்காக பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு அங்கமாக 1975ம்ஆண்டு செப்டம்பர் 15ம் நாள் துவக்கப்பட்டது. பின்பு 1980ம்ஆண்டு ஜனவரி 16ம் நாள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமாக பதிவு செய்யப்பட்டு 276 பேருந்துகளுடன் தனி நிறுவனமாக செயல்படத் துவங்கியது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இரண்டாக பிரிக்கப்பட்டு வெளிமாநில இயக்கங்களுக்காக தனியாக புரட்சிதலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் 27.01.1994 அன்று ஆரம்பிக்கப்பட்டு பிறகு இதை ராஜீவ்காந்தி போக்குவரத்துக் கழகம் என 21 மே 1996 அன்று மாற்றம் செய்யப்பட்டது. 17.07.1997 முதல் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், 01.07.1997 அன்று அப்போதைய முதலைமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களால் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 1 எனவும் 30.07.1997 முதல் வெளி மாநில இயக்கங்களுக்காக உருவாக்கப் பெற்ற போக்குவரத்துக் கழகம் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 2 எனவும் மாற்றம் செய்யப்பட்டது. பின்பு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு பிரிவு II) அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு பிரிவு I) லிமிடெட் உடன் பிப்ரவரி 07,2002 முதல் இணைக்கப்பட்டு "அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) லிமிடெட்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் மொத்தம் 1072 பேருந்துகள் 22 பணிமனைகள் மூலம் இயக்கப்படுகின்றது. அவற்றில் அதிநவீன மிதவை பேருந்து, குளிர் சாதன பேருந்து, குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர் சாதனமில்லா படுக்கைவசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்துகள் அடங்கும். இக்கழகம் அனைத்து முக்கிய தலைநகரங்கள், வரலாற்று மற்றும் வணிக இடங்கள் போன்றவற்றை இணைக்கும் தொலைதூர விரைவு சேவைகளை தமிழ்நாடு முழுவதும் இயக்கி வருகிறது.







மேலும் ஆந்திரம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களான அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகம் 251 வழித்தடங்களை இயக்கி வருகிறது. அதில் அண்டை மாநிலங்களுக்கு 112 வழித்தடங்களும் தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 139 வழித்தடங்களும் இயக்கப்படுகின்றன

அம்பத்தூர் பணிமனை

டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் போக்குவரத்து, பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது, 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறைக்கு 10.04.1967 அன்று அம்பத்தூர் மற்றும் அதனைச் சுற்றி உள்ள மக்களின் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக அம்பத்தூர் பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

குரோம்பேட்டை தொழிற்கூடம்

டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் போக்குவரத்து, பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது, 1967ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறைக்கு 11.04.1967 அன்று பேருந்துகளுக்கு கூடு கட்டும் (Body Building) தொழிற்கூடம் குரோம்பேட்டையில் திறந்து வைக்கப்பட்டது.

பல்லவன் போக்குவரத்துக் கழகம்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 1972ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது 03.01.1972 அன்று தமிழ்நாடு போக்குவரத்துத் துறையை பல்லவன் போக்குவரத்துக் கழகம் என துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(மதுரை)லிட், மதுரை பொறியியல் துறை

தமிழ்நாடுஅரசு போக்குவரத்துக் கழகம்(மதுரை)லிட், மதுரை. 17.01.1972 அன்று மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மூலமாக தொடங்கி வைக்கப்பட்டது.

346 பேருந்துகளுடனும் 2,802 தொழிலாளர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு 134 வழித்தடங்களில் பேருந்து சேவையை தொடங்கியது. தற்போது போக்குவரத்துக் கழகம் வளர்ச்சியடைந்து சுமார் 2,299 பேருந்துகளுடன், 13,664 பணியாளர்களுடன், 1,307 வழித்தடங்களின் பேருந்து சேவையை சிறப்பாக செய்து வருகிறது.





தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(மதுரை)லிட், விழுப்புரம்

கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு வகித்த காலங்களில் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் ஊதிய ஒப்பந்தங்கள் மூலம் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்தை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

- 1972ஆம் ஆண்டு தனியார் வசமுள்ள பேருந்துகளை அரசுடைமை ஆக்கியது.
- 1975-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தந்தை பெரியார் போக்குரவத்துக் கழகம் 16.01.1975-ல் 172 பேருந்துகளை துவக்க நிலையாக கொண்டு செயல்படத் தொடங்கியது.
- புதியதாக திறக்கப்பட்ட பணிமனைகள் விபரம்

(1) திட்டக்குடி கிளை-10.04.1989

(2) கடலூர் -2 கிளை-07.12.1990

(3) கள்ளக்குறிச்சி-2 கிளை-06.03.1991

(4) சிதம்பரம் -2 கிளை-20.03.1991

(5) சங்கராபுரம் கிளை-23.08.2008

(6) வடலூர் கிளை-28.08.2008

(7) வேலூர் மண்டல கோயம்பேடு கிளை-26.11.2009

(8) காஞ்சிபுரம் மண்டல அலுவலகம்-23.02.2011

(9) உத்திரமேரூர் கிளை-27.02.2011

❖ மொழிப்போர் தியாகிகளுக்கு கட்டணமில்லாமல் பேருந்துகளில் பயணம் செய்யும் வகையில் 06..04.1990 முதல் இலவச பயண அட்டை வழங்கப்பட்டது.

தொழிலாளர் நலன் சார்ந்த திட்டங்கள்

❖ போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்/நடத்துநர்களுக்கு அந்தந்த போக்குவரத்துக் கழக செலவில் ஜனதா காப்பீட்டுத் தொகை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது,

❖ 2வது ஆய்வு பலன் பெற்ற ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு காக்கிச் சீருடைக்கு பதிலாக வெளிர் மற்றும் அடர் நீல சீருடை வழங்கப்பட்டு வருகிறது.

❖ வீட்டு வசதி திட்டத்தின் மூலம் நிலம் வழங்கும் பட்சத்தில் அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள் சமுதாயக் கூடங்களை அமைத்து திருமணம் மற்றும் இதர விழாக்களுக்கு வாடகைக்கு அனுமதிக்கப்படும், பணியாளர்களுக்கு சமுதாயக் கூடம் சிறப்பு சலுகைக் கட்டணம் வழங்கப்படும் என அறிவித்தது.

❖ போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு பென்சன் திட்டம் 01.09.1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது

❖ பணியாளர்கள் 01.09.1998 முதல் புதிய விடுப்புத் திட்டத்தின் கீழ் வரும்போது 31.08.1998 அன்று நிலுவையில் உள்ள மருத்துவ விடுப்பை தனிக் கணக்காக வைத்திருந்து அவர்கள் ஓய்வு பெறும் போது அப்போதுள்ள சம்பள விகிதத்தில் பணம் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

❖ 1998 ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்தத்தில் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விடுப்பு வசதிகள் அனைத்து தொழிலாளர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

❖ 01.10.2007 முதல் அகவிலைப்படி அனைத்திந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்.2945ஐ அடிப்படையாகக் கொண்டு அதன் பின் உயரும் புள்ளிகளை 2945-க்கு சதவிகிதமாக மாற்றி அடிப்படைச் சம்பளத்தில் அந்த சதவிகிதத் தொகை அகவிலைப்படியாக வழங்கப்பட்டது.

❖ 2007 ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்த முடிவிற்படி சர்வீஸ் வெயிட்டேஜ் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து சம்பளம் இல்லா விடுப்பு / பணிக்கு வராத நாட்கள் ஆகியவை நீக்கப்பட்டு பணிக்காலம் கணக்கிடப்பட்டு சர்விஸ் வெயிட்டேஜ் வழங்கப்பட்டது.

❖ பேருந்தை இயக்கும்பொழுது டயர் பழுதடைந்தால் சம்பந்தப்பட்ட ஓட்டுநரிடமிருந்து டயரின் சேதாரத் தொகையில் ஐந்து சதவிகதம் பிடித்தம் செய்யப்படும். ஸ்பிரிங் பட்டை சேதமடைந்தால் அதற்காக ஓட்டுநரிடமிருந்து சேதாரத் தொகை பிடித்தம் செய்வது நிறுத்தப்படும்.

❖ 2007 ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்த முடிவின்படி சேமப் பணியாளர்கள் (Reserve Crew) உட்பட அனைத்து பணியாளர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது.

- 2007 ஆம் ஆண்டு ஊதிய ஒப்பந்த முடிவின்படி பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களுக்கு அவர்களின் முழு பணிக்காலத்தையும் கணக்கில் கொண்டு பணிக்கொடை (Gratuity) அந்தந்த போக்குவரத்துக் கழகங்களால் வழங்கப்படும்.
- 06.02.2008 அன்று நடைபெற்ற 10வது ஊதிய ஒப்பந்தத்தில் விருப்ப ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு ஈட்டுத் தொகை ஒரு ஆண்டுக்கு ரூ.9000/-ல் இருந்து ரூ.12500/- ஆக அதிகபட்சம் ரூ.100000/- வரை உயர்த்தி வழங்கப்பட்டது.
- ஆண்டு ஊதிய உயர்வாக அவரவர் அடிப்படை ஊதியத்தில் (Pay + Grade Pay) ஆண்டொன்றுக்கு 3 சதவிதிதமாக 01.09.2010 முதல் வழங்கப்பட்டது.
- ஆய்வு பலன் இதுகாறும் 6+8+10 ஆண்டுகள் இடைவெளிக்கு ஒரு ஆய்வுபலன் வீதம் 5 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கி மூன்று ஆய்வு பலன்கள் வழங்கப்பட்டது. அதனை மாற்றி 6+7+7+7+5 ஆண்டுகள் இடைவெளியில் ஆய்வு பலன் வழங்கப்படும். முதல் மூன்று ஆய்விற்கு 5 சதவிகிதம் எனவும் அடுத்து இரண்டு ஆய்விற்கு 3 சதவிகிதம் உயர்வு எனவும் வழங்கி 5 ஆய்வு பலன் வழங்கப்படும்போது பணிக்கு சேர்ந்த நாள் முதல் ஆண்டுகள் கணக்கிடப்பட வேண்டும். குறிப்பாக 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை பணியமர்த்தப்பட்டவர்களுக்கு அவர்கள் நிரந்தரப்படுத்தப்பட்ட தேதியை கணக்கில் கொள்ளாமல் ஆண்டு கணக்கை ஆய்வு பலனுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.
- 208 இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கப்பட்டுள்ளது.
- அனைத்து தொழிலாளர்களுக்கும் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 1997 ஆம் ஆண்டு சுவர் கடிகாரம் வழங்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(மதுரை)லிட், சேலம்

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் 1972-ம் ஆண்டில் அண்ணா போக்குவரத்துக் கழகம் துவங்க ஆணை பிறப்பித்து, 11.01.1974 அன்று அண்ணா போக்குவரத்துக் கழக தலைமை அலுவலக வளாகம் துவக்கி வைக்கப்பட்டது.

(31.03.1973)	அன்றும் (31.03.1973)	இன்றும் (31.10.2023)
மொத்த பேருந்துகள்	62	2,045
மொத்த பணியாளர்கள்	300	11,247











திருவில்லிபுத்தூர் பணிமனை





விருதுநகர் கூடுதல் பராமரிப்பு கூடம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்



தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிறுவனம் பொது விநியோகத்திட்டத்திற்கு தேவையான இன்றியமையாப் பொருட்களை கொள்முதல் செய்து, சேமித்து, விநியோகிக்கும் உன்னத பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் ''தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்'' என்ற கோட்பாட்டில் நிறுவனங்கள் சட்டம், 1956 சட்டப்பிரிவு 25-ன் கீழ் (நிறுவனங்கள் சட்டம், 2013 சட்டப் பிரிவு 8) 01.04.2010 அன்று பதிவு செய்யப்பட்டு ''ஆதாயம் இல்லை இழப்பு இல்லை'' என்ற கோட்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது 11 இயக்குநர்கள் கொண்ட குழுமக்குழு தலைமையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. குழுமக்குழுவின் தலைவராக அரசு கூடுதல் தலைமை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்கள் செயலாற்றி வருகிறார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 8,009 நிரந்தர பணியாளர்களும், 6,825 பருவ கால பணியாளர்களும் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், அமுதம் நியாய விலைக் கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.

மேற்கண்ட பணியாளர்களுடன் 4,520 சுமைதூக்கும் தொழிலாளர்கள் மற்றும் 30,538 பருவ கால சுமைதூக்கும் தொழிலாளர்களும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள கிடங்குகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

நிறுவனத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கிய செயல்பாடுகள்:

- பரவலாக்கப்பட்ட கொள்முதல் முறையின் கீழ், இந்திய உணவுக் கழகத்தின் முகவராக தமிழ்நாடு விவசாயிகளிடமிருந்து நெல் மற்றும் கேழ்வரகு கொள்முதல் செய்தல்
- தரமான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் கொள்முதல் செய்து சேமித்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்தல் தமிழ்நாடு அரசால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படுகிற மக்கள் நலதிட்டங்களுக்கு உணவு மற்றும் இதர பொருட்களை கொள்முதல் சேமிப்பு மற்றும் விநியோகம் செய்தல்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 367 கிடங்குகள், 1,490 அமுதம் நியாயவிலை கடைகள், 21 நவீன அரிசி ஆலைகள், 82 அமுதம் பல்பொருள் அங்காடிகள், 3 பெட்ரோல் / டீசல் வழங்கும் நிலையங்கள், 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மற்றும் 4 சமையல் எரிவாயு விநியோகிக்கும் முனையங்கள் என பல்வேறு அலகுகள் இயங்கி வருகின்றன. மேலும், வருடந்தோறும் சுமார் 3,500 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்து வருகின்றது.







விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 01.10.2002 முதல் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ், இந்திய உணவுக்கழகத்தின் முகவராக விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்துவருகிறது. மேலும், கூட்டுறவுத் துறையின் மூலமும் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.







அனைத்து மண்டலங்களிலும் நேரடி கொள்முதல் நிலையங்கள் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் கோரிக்கையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியரிடமிருந்து உத்தரவு பெற்று திறக்கப்பட்டு வருகின்றது. மாநில அரசு 2021 ஆம் ஆண்டில், நேரடி கொள்முதல் நிலையங்கள் சீராக செயல்படுவதற்கு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடப்பட்டு கொள்முதல் நடைமுறை, சேமிப்பு மற்றும் நெல் இயக்கம் அனைத்து மண்டலங்களிலும் பின்பற்றி வரப்படுகிறது. நேரடி கொள்முதல் நிலையங்களின் ஒட்டுமொத்த செயல்பாட்டைக் கண்காணிக்க மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு அந்தந்த மாவட்டங்களில் பெறப்படும் விவசாயிகளின் கோரிக்கைகளை உடனுக்குடன் பரிசீலித்து நேரடி கொள்முதல் மையங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துகிறது.

கடந்த கே.எம்.எஸ். 2022-23 பருவத்தில் 44,22,328 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நேரடி கொள்முதல் நிலையங்களில், விவசாயிகள் காத்திருப்பு நேரத்தைக் குறைத்திடவும், ஒளிவுமறைவற்ற பரிவர்த்தனையை உறுதி செய்திடவும், பயோமெட்ரிக் அங்கீகாரத்துடன் கூடிய நெல் கொள்முதல் 01.06.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மின்னணு வசதிகள் கூடிய நேரடி கொள்முதல் நிலையங்கள்:

உழவர்கள் தங்களது நெல்லினை விரைவாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வதில் உள்ள சிரமங்களை நீக்கும் வகையில், பொது இணையதளம் (https://tncsc-ed-pc.in) தொடங்கப்பட்டு, விவசாயிகள் இந்த பொது இணையதளத்தில் தங்கள் விபரங்களை தெரிவித்து முன்பதிவு செய்து காலதாமதமின்றி விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. விற்பனைத் தொகை தொடர்புடைய விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலம் வரவு வைக்கப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு விரைவாகவும் எவ்வித சிரமமும் இன்றி சேவை வழங்கப்பட்டு வருகிறது.





உழவர் உதவி மையம்

உழவர்கள் நெல் கொள்முதல் நிலையங்கள் சார்ந்த குறைகளைத் தெரிவிக்க பிரத்யேக உழவர் உதவி மையம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தலைமை அலுவகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள உழவர்கள் தங்களது குறைகளை 1800 599 3540 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு உரிய தகவல்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.



நேரடி கொள்முதல் நிலையங்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிரந்தர நேரடி கொள்முதல் நிலையங்களை அமைத்து வருகிறது. நேரடி கொள்முதல் நிலையங்களுக்கான நிரந்தர கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 589 நேரடி கொள்முதல் நிலையங்கள் ஏற்கனவே சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் மொத்தம் ரூ.50.00 கோடி செலவில் தலா 250.000 மெ.டன் சேமிப்புத்திறன் கொண்ட 80 நேரடி







கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டு வருகிறது. மற்ற அரசுத் துறைகளின் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கி ரூ. 17.00 கோடி செலவில் 50 நிரந்தர நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் 100 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டு வருகிறது. நேரடி கொள்முதல் நிலையங்களில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட நெல் மணிகளின் ஈரப்பதத்தை பெறுவதற்கு உலர்த்தும் களங்கள் இன்றியமையாத உள்கட்டமைப்புகளில் ஒன்றாகும். இதுவரை 433 உலர்த்தும் களங்கள் கட்டப்பட்டுள்ளன.

அத்தியாவசிப் பொருட்கள் விநியோகம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசியை தவிர அத்தியாவசியப் பொருட்களான சர்க்கரை, கோதுமை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களை கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வண்ணம் நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கி வருகிறது.

மேலும், உணவுத் தொகுப்பில், சிறுதானியங்களையும் சேர்த்தும் உடல் நலத்தைக் காத்திட தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளிடம் கேழ்வரகு பயிரினை கொள்முதல் செய்து, தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்ட மக்களுக்கு 2022 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவருகிறது. முதல் கட்டமாக நீலகிரி மற்றும் தருமபுரியில் வசிக்கின்ற அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 2 கிலோ கேழ்வரகு அரிசிக்கு பதிலாக விநியோகிக்கப்படுகிறது.

சிறப்பு பொது விநியோகத் திட்டம்:

பொது மக்கள் அனைவருக்கும் சரிவிகித உணவளித்து, உடல் நலத்தைப் பேணிக்காத்திட, 2007 ஆம் ஆண்டு இந்திய நாட்டிற்கே முன்னோடியாக சிறப்பு பொது விநியோகத்திட்டம் டாக்டர்

கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் துவரம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாலின் எண்ணெய்க்கான கொள்முதல் விலை, விற்பனை விலைக்கான வித்தியாச செலவினத் தொகையை தமிழ்நாடு ஏற்று செயல்படுத்தி வருகிறது.

நவீன அரிசி ஆலைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு சொந்தமான 21 நவீன அரிசி ஆலைகளின் மாதாந்திர அரவைத் திறன் 52,500 மெ.டன் ஆகும். 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. நவீன அரிசி ஆலைகளில் தரமான அரிசியினை உற்பத்தி செய்வதற்கு கருப்பு அரிசி பிரிக்கும் இயந்திரம் (கலர் சார்ட்டெர் மிஷின்) அனைத்து நவீன அரிசி ஆலைகளில் நிறுவப்பட்டுள்ளது.

உள்கட்டமைப்பு மேம்படுத்துதல்

கிடங்குகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மொத்தம் 308 சேமிப்பு கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 14.37 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 269 கிடங்குகள் கழகத்திற்கு சொந்தமானதாகும். மீதமுள்ள 1.69 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 37 கிடங்குகள் வாடகை அடிப்படையில் தமிழ்நாடு சேமிப்பு நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பயன்படுத்தப்படுகிறது.

மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்பு மையம்

இயற்கை இடர்பாடுகளிலிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லை பாதுகாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்பு மையங்கள் உருவாக்க உத்தரவிட்டுள்ளார். அதன்படி, தமிழகத்தில் 10 மாவட்டங்களில் 18 இடங்களில் மொத்தம் 2,86,350 மெ.டன் கொள்ளளவு கொண்ட ரூ. 238.07 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியை பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன.

நியாய விலைக் கடைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 1,490 நியாய விலைக் கடைகள் பொது விநியோகத்திட்டத்தின்கீழ், உணவுப்பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் வண்ணம் செயல்பட்டு வருகின்றன.

அமுதம் பல்பொருள் அங்காடிகள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அத்தியாவசிய மற்றும் அன்றாட தேவையான நுகர்ப்பொருட்கள் குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் 82 அமுதம் பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் நெய்வேலி, திருப்பத்தூர்,பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் திருச்சி, ஆரணி, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் பொது மக்களுக்கு சேவை அளிக்கும் நோக்கில் சமையல் எரிவாயு விநியோக முகவராக செயல்பட்டு வருகிறது.

மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் பொது விநியோக திட்டத்தின் மூலமாக உரிய குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகித்து வருகிறது.

அம்மா உணவகத்திற்கு உணவுப்பொருட்கள் வழங்குதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் சென்னை மாவட்டத்தில் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமை விநியோகித்து வருகிறது.

இதர ஊக்க சேவைகள்

அரசு உப்பு விற்பனை:

பொது மக்களின் பயன்பாட்டிற்கு சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த அரசு தூள் உப்பு (RFF Salt) மற்றும் அயோடின் கலந்த கல் உப்பு (CIS Salt) ஆகிய இரண்டு விதமான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடைகளில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஊட்டித் தேயிலை மற்றும் டான் டீ:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளில் ஊட்டித் தேயிலைத் தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.22/- என்ற விலையிலும் மற்றும் டான்டீ தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்று ரூ.21/- என்ற விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு பல்வேறு பணிகளின் மூலம் தமிழ்நாட்டு விவசாய பெருமக்கள் மற்றும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் உணவளிக்கும் உன்னதப் பணியினை உயரிய நோக்குடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் டாக்டர் கலைஞர் அவர்களால் ஒரு விதையாக விதைக்கப்பட்டு இன்று அது ஒரு பரந்த ஆலமரம் போல் அனைத்து மாவட்ட மக்களுக்கும் விவசாயிகளுக்கும் சேவையாற்றி வருகிறது. இப்பணியினை வரும் காலங்களிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சிறப்புற செயலாற்றும்.

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO)



மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் அரசாணை எண். 100 (சமூக நலத்துறை) நாள். 14.02.1974ன்படி 15.02.1974 அன்று தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது.

இந்நிறுவனம் ஆரம்ப கால கட்டத்தில் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு, தனி குடியிருப்பு வீடுகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு பள்ளி, விடுதிகள் ஆகியவை இந்நிறுவனத்தால் கட்டி தரப்பட்டு வந்தது. இதனை தொடர்ந்து ஆதிதிராவிடர் மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட வேண்டி, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் பொருளாதார கடனுதவி திட்டங்கள், சுய



வேலை வாய்ப்பு பயிற்சி வழங்கும் திட்டங்கள் போன்றவை ஏற்படுத்தப்பட்டு தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டது.

இந்நிறுவனத்தின் மீது தனி அக்கறை எடுத்து கொண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பல்வேறு வகையான சிறப்பு திட்டங்களை நிறைவேற்றி நிதி ஒதுக்கீடு செய்து அம்மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வளர்ச்சிக்கான முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ அரும்பாடுபட்டவர் என்று பெயர் பெற்ற கலைஞரின் 100 வது ஆண்டுவிழாவில் அவர்களால் துவங்கப்பட்ட தாட்கோ நிறுவனத்தின் வெள்ளி விழாவும் கொண்டாடப்படுவது ஆதிதிராவிடர் மக்களின் இதயத்தில் கலைஞர் அவர்கள் என்றும் போற்றுதலுக்குரிய நீங்கா இடம் பெற்றுள்ளார் என்பது திண்ணம்.

1. கட்டுமானப் பிரிவு

❖ 2021-2022 ஆம் நிதியாண்டின் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 150 பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் 39 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 100 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் ஆய்வகக் கூடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் ரூ.21.13 கோடி மதிப்பீட்டிலும், ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டிலும், வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர்



விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.10.75 கோடி மதிப்பீட்டிலும், 31 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் கழிப்பறைகள் (Toilets) கட்டப்பட்டு வருகிறது.

- ❖ 2022-2023 ஆம் நிதியாண்டின் பழுதடைந்துள்ள 10 ஆதி திராவிடர் பள்ளி மாணாக்கர் விடுதிகளுக்கு ரூ.45.45 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடங்களும், வாடகைக் கட்டடங்கள் / பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வரும் 5 ஆதிதிராவிட மாணாக்கர் கல்லூரி விடுதிகளுக்கு ரூ.28.35 கோடி செலவில் புதிய விடுதிக் கட்டடங்களும், 83 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவரும் மேலும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு ரூ.5.70 கோடி செலவில் கழிவறை மற்றும் குளியலறைகள் கட்டப்பட்டு வருகிறது.
- ❖ 2023-2024 ஆம் நிதியாண்டின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் கல்லூரி விடுதிகளில் நவீன வசதிகளுடன் கூடிய கற்றல் கற்பித்தல் அறை ரூ.10.00 கோடி மதிப்பீட்டிலும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரியில் அம்மாணவர்கள் பயன்பெறும் வகையில் நான்கு புதிய விடுதிகள் நவீன வசதிகளுடன் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 4 ஆதி திராவிடர்



மாணாக்கர் விடுதிகளுக்கு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

2. தொழில் முனைவோர் திட்டம்.

❖இத்திட்டத்தின் வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மானியம் மற்றும் விளிம்புத்தொகையாக அவர்கள் புரிகின்ற தொழிலுக்கு ஏற்ப நலத்திட்ட உதவிகள் வழங்கபட்டு வருகிறது.



❖முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெற்ற விளிம்புத்தொகையினை அசல் மற்றும் வட்டியினை தள்ளுபடி செய்வதாக 7வது ஆண்டு சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி தாட்கோ கடன் பெற்ற 53524 பயனாளிகளுக்கு ரூ. 82.62 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

3. இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் :

❖ இத்திட்டத்தின் கீழ் இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த/விருப்பமான சுய தொழில் துவங்க மானியத்துடன் கடன் உதவி வழங்கப்படுகிறது.

4. இளைஞர்களுக்கான மருத்துவம் மற்றும் சுகாதாரம் சார்ந்த சிறப்பு சுய வேலை வாய்ப்புத் திட்டம்:

❖ இத்திட்டத்தின் கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS) இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம்/ஆய்வகம்/மருந்தகம் அமைப்பதற்கு மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் தகுதி பெற்றுள்ளவர்கள் சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம்/கண் கண்ணாடி கடை/ஆய்வகம்/மருந்தகம் அமைப்பதற்கு உதவிடும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.



5. நிலம் வாங்கும் திட்டம்

❖ விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதிதிராவிடர் மக்களை நில உரிமையாளர்களாக மாற்றி அவர்களின் சமூக நிலையினை உயர்த்திடும் வகையில் நிலம் வாங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு இத்திட்டத்தில் மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

6. நிலம் மேம்பாட்டு திட்டம்

❖ இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்கள் தங்களது நில வளத்தை மேம்படுத்திட ஆழ்துளை கிணறு, திறந்த வெளி கிணறு, மற்றும் பம்ப் செட் அமைப்பதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

7. மகளிருக்கான ஆட்டோ வழங்க சிறப்புத் திட்டம்

❖ பெண்களும் சமூகத்தில் உயர்ந்திட பொருளாதார கடன் திட்டத்தின் கீழ் 1000 மகளிர் ஆட்டோ வாங்குவதற்கு மானியத்துடன் கடன் உதவி வழங்க 1997-1998 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்டு தொடர்ந்து நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

8. மகளிருக்கான சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

❖ மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், மகளிர் முன்னேற்றத்திற்கான அடிப்படை வருவாய் ஈட்டும் தோட்டக்கலை, மலரியல், கைவினைப் பொருட்கள் சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டி கடைகள் அமைத்தல் மற்றும் சுற்றுலாச் சார்ந்த தொழில்கள் மேற்கொள்ளவும் 50 சதவீத மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்கப்படுகிறது .

9. விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு பெற மானியம் உதவித்திட்டம்

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் துரித மின் இணைப்பு பெறுவதற்காக 90

விழுக்காடு மானியம் மற்றும் 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்புடன் வைப்புத் தொகை முழுவதும் செலுத்தும் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

10. தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மூலம் நேரடி கடன்

❖ தாட்கோ நிறுவனத்தை வங்கியில் கடன் வழங்குவது போல் ஆதிதிராவிடர்களுக்கென தாட்கோ நிறுவனத்தை வங்கியாக 1996-ல் மாற்ற வேண்டும் என கலைஞர் அவர்கள் அறிவிப்பு விடுத்தார்கள். அதனை ஏற்று NSFDC மற்றும் NSTFDC நிறுவனத்திடம் இருந்து கடன் உதவி கிடைக்கபெற்று தாட்கோவில் செயல்படுத்தப்படுகிறது.

11. இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் தொடங்கப்பட்டன

❖ இந்திய தொழில் நுட்பக் கழகம் (IIT) மெட்ராஸ் மூலம் பட்டப்படிப்பு

❖ HCL நிறுவனத்தில் வேலை வாய்ப்புடன் கூடிய 4 வருட பட்டப்படிப்பு

❖ ஹோட்டல் மேலாண்மை மற்றும் தொழில் நுட்ப பட்டப்படிப்பு

❖ வங்கி போட்டி தேர்வுக்கான பயிற்சிகள்

❖ மருத்துவ குறீயிடு பயிற்சி

❖ ட்ரோன் இயக்க பயிற்சி

❖ விமான நிலைய வாடிக்கையாளர் சேவை பயிற்சி

❖ கணக்கு நிர்வாகப் பணி சம்பந்தப்பட்ட பயிற்சி

❖ ஒப்பனையில் பயிற்சி

❖ வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான பயிற்சி

❖ பொது நிழைவு பயிற்சி

மேற்கண்ட பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாக்க கூடிய இதர பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

12. தூய்மை பணியாளர் நல வாரியம்

❖ தூய்மை பணிபுரிவோர் மற்றும் அவர்களை சார்ந்தோரின் நலன் கருதி அவர்களுக்கு தனியாக தூய்மை பணிபுரிவோர் நலவாரியம் என்ற அமைப்பினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு 11.06.2007 அன்று துவங்கப்பட்டது. தூய்மை பணியாளர் நல வாரியம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டது.

- ❖ வாரியத்தின் மூலம் நல திட்ட உதவிகள்
- ❖ வீடு வழங்கும் திட்டம்
- ❖ மகாத்மா காந்தி கூட்டுறவு சங்கம்

13. வாரியத்தின் மூலம் நல திட்ட உதவிகள்

- ❖ தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் 87,327 நபர்கள் பெயர் பதிவு செய்து உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரியம் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் விவரம்.
- ❖ விபத்து காப்பீட்டுத்திட்டம்
- ❖ இயற்கை மரணம் உதவி
- ❖ கல்வி உதவித் தொகை
- ❖ திருமண உதவித் தொகை
- ❖ மகப்பேறு உதவித் தொகை
- ❖ முதியோர் ஓய்வூதியம்

14. வீடு வழங்கும் திட்டம்

- ❖ வீடு வழங்கும் திட்டத்தில் 2022 - 2023 ஆம் ஆண்டில் 23 மாவட்டங்களின் 446 தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 446 உறுப்பினர்களுக்கு ரூ.7,49,79,800/- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

15. மகாத்மா காந்தி கூட்டுறவு சங்கம்

- ❖ மகாத்மா காந்தி தொழிலாளர் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் சுகாதார அங்காடிகள் அமைக்க ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு தலா ரூ.7.5 இலட்சம் வீதம் 13 கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு மானிய தொகை ரூ.97.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 5897 உறுப்பினர்களின் நலத் திட்டங்களுக்கு ரூ.10,25,86,440/- தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

பெரியார் பல்கலைக்கழகம்



பெரியார் பல்கலைக்கழகம் கடந்த 17.09.1997-ஆம் நாள் அன்று, செம்மொழி நாயகரின் பகுத்தறிவு ஆசான், தமிழ்நாட்டின் தந்தை என்று எல்லோராலும் அழைக்கப்படும் பகுத்தறிவு பகலவன் பெரியாரின் பெயரில் சேலம், நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளை எல்லையாகக் கொண்டு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியில் இப்பகுதியை சார்ந்த இளைஞர்கள் பெருமளவில் ஈடுபட்டு தங்களது அறிவினை மேலும் வளர்த்துக்கொள்வதற்கு ஏதுவாக பெரியார் பல்கலைக்கழகம் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் பொற்கரங்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இப்பல்கலைக்கழகம் கடந்த 17.09.1997-இல் துவங்கப்பட்டபோது மூன்று (கணிதம், வணிகவியல் மற்றும் புவியமைப்பியல்) துறைகள் மட்டுமே இருந்தன. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசால் 12 துறைகள் மட்டும் அதற்குரிய 48 ஆசிரியப் பணியிடங்கள் தோற்றுவித்தும், நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்காக 38 பணியிடங்களும் தோற்றுவித்து தமிழ்நாடு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதன் பின்னர் பல்கலைக்கழக மானியக்குழுவின் அங்கீகாரம்பெற வேண்டி, தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறையின் முழு ஒத்துழைப்புடன் தமிழ்நாடு அரசின் ஆணையின்படியும், மாணாக்கர்களின் தேவைக்கு ஏற்றவாறு நிதிக்குழு மற்றும் ஆட்சிக்குழுவின் ஒப்புதலுடன் துறைகள் உருவாக்கப்பட்டு தற்போது பல்கலைக்கழக வளாகத்தில் 27 துறைகளின் வழியாக கல்வி மற்றும் ஆராய்ச்சி பணிகள் செவ்வனே செயல்பட்டு வருகின்றன.

இத்துறைகளில் காலமுறை ஊதியத்தில் 170 ஆசிரியப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசின் ஆணையின்படியும், பல்கலைக்கழக நிதிக்குழு மற்றும் ஆட்சிக்குழுவின் ஒப்புதலுடனும் உருவாக்கப்பட்டு, துறைகளில் சுமார் 2,500 மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி கல்வி மற்றும் ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 42 இணைவு பெற்ற கல்லூரிகளுடன் துவங்கப்பட்ட இப்பல்கலைக்கழகத்தில் தற்போது 118 இணைவு பெற்ற கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 10 கல்லூரிகள் தன்னாட்சி கல்லூரிகள் என்பதுடன், 37 கல்லூரிகள் முழுநேர மகளிர்கல்லூரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.





பல்கலைக்கழக இணைவுபெற்ற கல்லூரிகளின் வழியாக, ஒவ்வொரு கல்வியாண்டிலும் சுமார் 1,45,000 மாணாக்கர்கள் தங்களது இளநிலை மற்றும் முதுநிலை பட்ட மற்றும் மேற்படிப்புகளை படித்து வருகின்றனர். இம்மாணாக்கர்களுக்கு ஆறுமாதங்களுக்கு ஒருமுறை செயல்முறை மற்றும் கருத்தியல் தேர்வுகள் பருவத்தேர்வுகளாக பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு தேர்வு முடிவுகள் குறிப்பிட்ட காலத்தில் துள்ளியமாகவும் மாணாக்கர்களுக்கான சான்றிதழ்கள் உரிய காலக்கெடுவிற்குள் வழங்கப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது.



கல்லூரிகளுக்குத் தேவையான தேர்வுபணிகள் உள்ளிட்ட அனைத்து பணிகளையும், மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசின் ஆணையின்படியும், பல்கலைக்கழக நிதிக்குழு







மற்றும் ஆட்சிக்குழுவின் ஒப்புதலுடன் நிர்வாகத் தேவைக்கு ஏற்றவாறு, பிற பல்கலைக்கழகங்களில் உள்ளவாறு பல்வேறு நிர்வாகப் பணியிடங்கள் காலமுறை ஊதியத்தில் நிரப்புவதற்கு ஏதுவாக தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்களில் பணியாளர்கள் பணியாற்றிவருகின்றனர்.

கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள தருமபுரி மாவட்ட மாணாக்கர்களின் உயர்கல்வி கனவை நனவாக்கும் வகையில், பெரியார் பல்கலைக்கழக முதுநிலை விரிவாக்க மையம், தருமபுரியில் துவங்குவதற்கு தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டதன் அடிப்படையில், அம்மையத்தில் எட்டு துறைகளும், 22 ஆசிரியப் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு, பல்கலைக்கழக மானியக்குழுவின் வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு அரசின் ஆணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும், ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு, தரமான உயர்கல்வி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது. இம்மையத்தில் தற்போது 250 மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயின்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பெரியார் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியினை மேலும் விரிவாக்கம் செய்யும் வகையில், தமிழ்நாடு அரசின் அனுமதியுடன், சேலம் மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் ரூபாய் ஒரு கோடி பெரியார் நன்கொடையாக வழங்கப்பட்டு கலைஞர் ஆய்வு மையம் கடந்த 2009-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, அம்மையத்தின் வழியாக முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கு மாதந்தோறும் ஆராய்ச்சி உதவித்தொகை வழங்கப்பட்டு, அவர்கள் திறம்பட ஆராய்ச்சி மேற்கொள்ளுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், செம்மொழி நாயகரின் ஆட்சிக்காலத்தில், பிற கட்சிகளை சார்ந்த தலைவர்களின் பெயரையும் புகழையும் போற்றும் வகையில் பெரியார் பல்கலைக்கழகத்தில் இராஜாஜி இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை மற்றும் பெரியார் இருக்கை ஆகியன தோற்றுவிக்கப்பட்டு, அவ்விருக்கையின் வழியாக மாணாக்கர்களுக்கு வருடந்தோறும் பரிசுகள் வழங்கப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது.



தமிழ்நாடு அரசின் வரலாற்றில் செம்மொழி நாயகர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் ஆட்சிக்காலத்தில்தான் உயர்கல்வித் துறையின் வளர்ச்சிக்கும், மாணாக்கர்கள் அனைவரும் உயர்கல்வி கற்கவேண்டும் என்ற நோக்கில் மாநில பல்கலைக்கழகங்களும், கிராமங்கள் தோறும் இளைஞர்கள் உயர்கல்வி பயில்வதற்கு ஏதுவாக அரசு கல்லூரிகளும் துவங்குவதற்கு ஆணையிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், பல்கலைக்கழகங்கள் தங்களது சொந்த செலவில் உறுப்புக் கல்லூரிகள் துவங்கி நடத்திட வேண்டும் என்ற கலைஞரின் ஆட்சிக் காலத்தில் ஆணையிடப்பட்டு, பெரியார் பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்ட மேட்டூரில் தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக 2006-ஆம் ஆண்டில் உறுப்புக்கல்லூரி கலைஞரின் ஆட்சிக்காலத்தில் துவங்குவதற்கு ஆணையிடப்பட்டது.

இந்திய அளவில் தேசிய தரச்சான்று NAAC-A++ மற்றும் தேசிய ஆராய்ச்சி திறனாய்வில் (NIRF) முக்கிய மைல்கல்லை எட்டி, பல்வேறு கல்விசார் நிறுவனங்களின் பாராட்டுக்களையும், மதிப்புறு பரிசுகளையும் பெற்றுள்ள பெரியார் பல்கலைக்கழகம் மென்மேலும் கல்வி மற்றும் ஆராய்ச்சி பணிகளில் உத்வேகத்துடன் செயல்பட்டு வருகின்றது.

❖❖❖

கலைஞர்
100
1924 - 2024

கலைஞர் நூற்றாண்டு நிறைவு மலர் 2024

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,

இயக்குநர்,

செய்தி மக்கள் தொடர்பு மற்றும்

அலுவலால் அரசு துணைச் செயலாளர்,

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,

தலைமைச் செயலகம்,

சென்னை - 600 009.

அச்சிட்டோர்:

தமிழரசு அச்சகம்

எண்.5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை - 600 113.

தொலைபேசி : 044-22542224 / 22542221

மின்னஞ்சல்: ddpub.tamilarasu@tn.gov.in

இணையதளம்: www.tndipr.gov.in

தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு